343/82

V2,31 N73
31N73.42
61623

# Tamil Nadu Legislative Assembly Debates

EIGHTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

11*th*, 13*th* *and* 14*th* *August* 1973.

VOLUME XLII (Nos. 1 to 3).

TABLE OF CONTENTS.

*Saturday*, 11*th* *August* 1973.


| | PAGES |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu .. | i–vi |
| Principal Officers of the Tamil Nadu Legislative Assembly .. .. .. .. .. .. | vii |
| List of Members of the Tamil Nadu Legislative Assembly with their constituencies .. .. .. | ix-xvi |
| 1. Questions and Answers .. .. .. .. | 1–34 |
| 2. Calling Attention— | |
| (i) Delay in the execution of the Salem Steel Plant according to the time-table .. .. | 35 |
| (ii) Fire accident in Ennore Thermal Plant resulting in loss of property .. .. | 35–41 |
| 3. Motions— | |
| (i) Leave of absence to Thiru M. Palanisamy, M.L.A. .. .. .. .. | 41 |
| (ii) Taking up of Official business instead of Non-Official business on 13—8—1973 .. | 120–121 |
| 4. Presentation of Report— | |
| Fifth report of the Committee on Government Assurances .. .. .. .. .. | 42 |

PAGES

5. Government Motions—
- (i) Approval of the Final report on the recommendations of the Committee on Rules .. .. .. .. .. 42–68
- (ii) Appreciation of the services of Thiru C. D. Natarajan, retired Secretary to the Legislative Assembly Department .. 68–69
- (iii) Implementation of Wanchoo Committee's recommendations by the Centre to unearth black money and to clothe the State Governments also with adequate powers to implement the same .. .. 69–120

6. Papers laid on the Table .. .. .. .. 121

*Monday, 13th August* 1973.

1. Obituary reference—
Thiru Dayanand Balakrishna Bandodkar, Chief Minister of Goa, Daman and Diu .. .. 129

2. Questions and Answers .. .. .. .. 129–171

3. Adjournment Motion—
Missing of teen-aged children in Madurai and other places .. .. .. .. .. 171–174

4. Government Motions—
- (i) Suspension of Rule 41 (3) .. .. .. 174
- (ii) Draft amendments to Tamil Nadu Land Reforms (Disposal of Surplus Land) Rules, 1965 .. .. .. .. .. 257–273

5. Calling Attention—
- (i) Deaths due to out-break of cholera in Madras City during July 1973 .. .. .. 175–180
- (ii) Hardships caused to Handloom Weavers due to the rise in price of synthetic yarn and rayon yarn and the need to give relief measures .. .. .. .. 180, 181–186
- (iii) Indefinite postponement of elections to the Madras City Corporation .. .. 186–187



PAGES

5. Calling Attention—*cont.*
- (iv) Hardship caused to people residing in areas where Co-operative Societies are not in existence in view of the Government Order permitting the Co-operative Institutions only to stock and distribute sugar .. 188–194

6. Points of order—
- (i) Taking up of Adjournment Motions and Calling Attention Notices .. .. .. 181, 197
- (ii) Non-taking up of Recognised Private Schools (Regulation) Bill as reported by the Joint Select Committee .. .. .. 194–195
- (iii) Non-taking of action on the report of the Privileges Committee on the "Nathikam" case .. .. .. .. .. 195–197

7. Motion—
Leave of absence to Thiru M. C. A. Rathinasamy Thevar .. .. .. .. .. 197

8. Government Bills—
- (i) The Tamil Nadu Motor Vehicles Taxation (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 21 of 1973) ... ... ... ... 198–215
- (ii) The Tamil Nadu Private Electricity Supply Undertakings (Acquisition) Bill, 1973 (L.A. Bill 15 of 1973) as amended by the Joint Select Committee .. .. .. 216–245
- (iii) The Holdings (Stay of Execution Proceedings) (Tamil Nadu Amendment) Bill, 1973 (L.A. Bill No. 22 of 1973) .. .. 246–247

9. Government Resolution—
Adoption of Wild Life (Protection) Act, 1972 (Central Act 53 of 1972) .. .. .. 248–257

10. Papers laid on the Table .. .. .. 273–275

வெளியீடு—22—10—1973]
Issued—22—10—1973]

# தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்
# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு
## OFFICIAL REPORT

**சனிக்கிழமை 1973 ஆகஸ்ட் 11**
**Saturday 11th August 1973**

**தொகுதி XLII—எண் 1**
**Volume XLII—No. 1**

©
தமிழ் நாடு அரசு
1973
GOVERNMENT OF TAMIL NADU
1973

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9.

*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-9*

விலை 50 காசுகள்]
PRICE 50 PAISE]

PAGES

*Tuesday, 14th August* 1973.

1. Questions and Answers .. .. .. .. 281–315

2. Government Motion—
   Suspension of Rule 41 (3) .. .. .. .. 315–316

3. Calling Attention—
   (i) Sea erosion near Thengapattinam in Kanyakumari district causing damages to dwelling houses .. .. .. .. 316–317
   (ii) Coal shortage resulting in fall in cement production and the consequent throwing out of many persons from employment 317-319
   (iii) Closure of tanneries as a result of quota system to be introduced and the consequent large scale unemployment .. .. .. 319–323
   (iv) Stay of collection of water charges in Kangayam and Pongalur areas under Parambikulam–Aliyar Project .. .. 323–324

4. Announcement—
   Letters from Thiru C. D. Natarajan, retired Secretary to the Legislative Assembly Department .. .. .. .. .. .. 325

5. Presentation of Report—
   Ninth report of the Public Accounts Committee for 1969–70 .. .. .. .. .. 325

6. Non-Official Business—
   (i) Bill—
      The Tamil Nadu Dowry Prohibition Bill, 1973 .. .. .. .. .. 325
   (ii) Resolution—
      Condemnation of unconstitutional methods to bring into disrepute the Council of Ministers .. .. .. .. 325–387

7. Papers laid on the Table .. .. .. .. 387



## HOW TO USE THE INDEX.

The Index is arranged alphabetically. The main headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every main heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject-matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading " Bill(s) ".

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the main headings, i.e., " Committee(s) ", " Council(s) ", " Corporation(s) ", etc.

Various subjects like Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very main headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the main heading " Papers Laid on the Table ".

Rulings and Observations from the Chair are indexed under the main heading " Chair ".

A list of abbreviations used in the Index is given below :—

| | | |
|---|---|---|
| A.M.\|Ad. Motion | .. | Adjournment Motion. |
| Ann. | .. | Announcement. |
| B.O.H. | .. | Business of the House. |
| C.A. | .. | Calling Attention to a Matter of Urgent Public Importance. |
| C.A. St. | .. | Calling Attention Statement. |
| Consid. | .. | Consideration stage of a Bill This stage includes— (i) Motion to refer to Select\|Joint Select Committee. (ii) Amendment to refer to Select\|Joint Select Committee. (iii) Amendment to circulate. |

## தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

---

### தமிழ் நாடு ஆளுநர்.

மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா

---

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், திரைப்படத் தொழிற் பயிற்சி.

2. **மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (கல்வி—சுற்றுலாத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, சட்டமன்றம், சுற்றுலா, சுற்றுலா அபிவிருத்திக் கழகம்.

3. **மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுச் சுகாதாரம், மருத்துவம், தமிழ்நாடு கழிவு நீர்—குடிநீர் வாரியம், நகர்ப் புறத் திட்ட அமைப்பு.

4. **மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** (பின் தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பின் தங்கிய வகுப்பினர் நலன், செய்தி—விளம்பரம், பத்திரப் பதிவு, முன்னாள் இராணுவ வீரர்கள், சேரணி, இளைஞர் அணி, பூதான—கிராமதான இயக்கங்கள்.

5. **மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து:** (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அரிசன நலம், மகளிர்–சிறுவர் நலம், மீனளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, பயண அனுமதிச் சீட்டுகள்.

**6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (பொதுப்பணித் துறை** அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுப் பணிகள், சிறு பாசன சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறு பாசனம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

7. **மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, கனிப் பொருள்கள், சுரங்கங்கள், இரும்பு—உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும் பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள் சிறைச்சாலைகள்.

8. **மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், வணிக வரிகள், மதுவிலக்கு, கலால் வரிகள், முகம்மதியர் அறக் கட்டளைகள்.

9. **மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்:** (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வேளாண்மை, உணவு உற்பத்தி, வேளாண்மைப் பொறியியற் பிரிவு, கால்நடை வளர்ப்பு.

10. **மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள்.

11. **மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** (உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: உணவு, கூட்டுறவு, வேளாண்மை மறு நிதி உதவி.

12. **மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழிலாளர், வீட்டு வசதி-இட வசதிக் கட்டுப்பாடு, எடைகள்—அளவைகள் குறித்த சட்டம், புள்ளிவிவரம், குடிசை மாற்று வாரியம்.



13. **மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** (மின்சாரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா, திரைப்படச் சட்டம்.

14. **மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி, எழுதுபொருள்—அச்சுத்துறை, அரசு அச்சகம்.

15. **மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** (அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அறக் கட்டளைகள், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில் திட்டம், பால், பால் பெருக்குத் திட்டம், தமிழ்நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF GOVERNOR OF TAMIL NADU.

THIRU KODARDAS KALIDAS SHAH.

---

*Members of the Council of Ministers.*

1. THE HON. DR. M. KARUNANIDHI (Chief Minister) in-charge of Public, Finance, Planning, General Administration Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections and Film Technology.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Education and Tourism) in-charge of Education including Technical Education, Official Language, Legislature and Tourism and Tourist Development Corporation.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN (Minister for Health) in-charge of Public Health, Medicine, Tamil Nadu Drainage and Water Board and Town Planning.

4. THE HON. THIRU N. V. NATARAJAN (Minister for Backward Classes) in-charge of Backward Classes, Information and Publicity, Registration, Ex-Servicemen, Prosperity Brigade, Youth Service Corps, Bhoodan and Gramdan.

5. THE HON. THIRUMATHI SATHYAVANIMUTHU (Minister for Harijan Welfare) in-charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages, Approved Schools and Vigilance Services, Indians Overseas and Refugees and Evacuees, Newsprint Control and Passports.

6. THE HON. THIRU P. U. SHANMUGAM (Minister for Public Works) in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Ports.

7. THE HON. THIRU S. MADHAVAN (Minister for Industries) in-charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. **The Hon. Thiru S. J. SADIQ PASHA** : (Minister for Revenue), in-charge of Revenue, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Commercial Taxes, Prohibition and Excise Revenues and Waqfs

9. **The Hon. Thiru SI. PA. ADITANAR** : (Minister for Agriculture) in-charge of Agriculture, Food Production, Agricultural Engineering Wing and Animal Husbandry

10. **The Hon. Thiru A. P. DHARMALINGAM** : (Minister for Local Administration) in-charge of Municipal Administration, Community Development and Panchayats and Panchayat Unions.

11. **The Hon. Thiru MANNAI P. NARAYANASWAMY** : (Minister for Food and Co-operation), in-charge of Food, Co-operation and Agricultural Refinance.

12. **The Hon. Thiru K. RAJARAM** : (Minister for Labour in-charge of Labour, Housing and Accommodation Control, Legislation on Weights and Measures, Statistics and Slum Clearance Board.

13. **The Hon. Thiru O. P. RAMAN** : (Minister for Electricity)-in-charge of Electricity, Legislation on Money Lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests, Cinchona and Cinematograph Act.

14. **The Hon. Thiru S. RAMACHANDRAN** : (Minister for Transport) in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Tax, Stationery and Printing and Government Press.

15. **The Hon. Thiru M. KANNAPPAN** : (Minister for Religious Endowments) in-charge of Religious Endowments, Khadi and Village Industries and Rural Industries Project, Milk, Operation Flood Project and Tamil Nadu Dairy Development Corporation.

## தமிழ் நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

---

**பேரவைத் தலைவர் :**

மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன் பி.ஓ.எல்., எம்.

**பேரவைத் துணைத் தலைவர் :**

மாண்புமிகு திரு. பெ. சீனிவாசன், எம். ஏ., பி.எல்.

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்**

1. திரு. நா. வீராசாமி.
2. திரு. எஸ். முருகையன்.
3. திரு. பி. முத்துசாமி.
4. திரு. என். டென்னிஸ்.
5. திரு. க. உரோ. எட்மண்ட்.
6. திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி.

**சட்டப் பேரவைச் செயலாளர்.**

திரு. மா. சண்முகசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.

**துணைச் செயலாளர்.**

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

**உதவிச் செயலாளர்கள்.**

திரு. த. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி).
திரு. பெஞ்சமின் நெல்சன், பி.ஏ.
திரு. கே. பாலகுரு, பி.ஏ.
திரு. டி. ஜே. சைமன், பி.ஏ.

**விவாதப் பதிப்பாளர்.**

திரு. கே. சுந்தரராசன்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 1 அண்ணாமலை, திரு. சி.வி. எம். .. .. | காஞ்சிபுரம் |
| 2 அபுசாலி, திரு. எம். ஏ. .. .. .. | புவனகிரி. |
| 3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை .. .. | அரவக்குறிச்சி. |
| 4 அரங்கண்ணல், திரு. இராம. .. .. | எழும்பூர். |
| 5 அழகமுத்து, திரு. து. ப. .. .. (அரசாங்க தலைமைக் கொறடா). | உப்பிலியப்புரம். |
| 6 அழகர்சாமி, திரு. சோ. .. .. .. | கோவில்பட்டி. |
| 7 அழகுத் தேவர், திரு. எஸ். .. .. | சாத்தூர். |
| 8 அனந்தநாயகி, திருமதி த. ந. .. .. | மயிலாப்பூர். |
| 9 அன்பழகன், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | புரசைவாக்கம். |
| 10 அன்புச்செழியன், திரு. நீ. .. .. | பெரியகுளம். |
| 11 ஆண்டி அம்பலம், திரு. எம். .. .. | மேலூர் வடக்கு. |
| 12 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ. வ.) |
| 13 ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 14 ஆலடி அருணா, திரு. வி. .. .. | ஆலங்குளம். |
| 15 ஆல்டா எம். பௌலர், திருமதி .. | நியமன உறுப்பினர் |
| 16 ஆறுமுகம், திரு. அ. .. .. .. | எடப்பாடி. |
| 17 ஆறுமுகம், திரு. எஸ். .. .. | வீரபாண்டி. |
| 18 ஆறுமுகம், திரு. சி. .. .. .. | மதுராந்தகம். |
| 19 இரத்தினசபாபதி, திரு. மு. .. .. | விளாத்திக்குளம். |
| 20 இராசகோபால், திரு. க. மு. .. .. | உத்திரமேரூர். |
| 21 இராசகோபால், திரு. வீ. .. .. | வந்தவாசி. |
| 22 இராசமாணிக்கம், திரு. அ. .. .. | நாகப்பட்டினம். |
| 23 இராசமாணிக்கம், திரு. கு. .. .. | ஆடுதுறை. |
| 24 இராசரத்தினம், திரு. டி. .. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| 25 இராசாராம், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | சேலம்-2. |
| 26 இராசு, திரு. ஜே. எஸ். .. .. .. | பெரம்பலூர் (செ. வ ; |
| 27 இராதாகிருட்டிணன், திரு. எம். .. | தண்டராம்பட்டு. |
| 28 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. .. | பரங்கிமலை. |
| 29 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்). | பண்ருட்டி. |

(iv) Motion to consider as reported by Select| Joint Select Committee.

(v) Amendment to re-commit to Select| Joint Select Committee, etc.

| | |
|---|---|
| Consid. Cl. | .. Consideration of clauses of a Bill. |
| D.E.E. | .. Demands for Excess Expenditure. |
| Dis. S.D. or D.S.D | .. Discussion for Short Duration on an urgent matter of Administration. |
| D.S.G. | .. Demands for Supplementary Grants. |
| G.A. | .. Governor's Address. |
| G.D. | .. General Discussion. |
| H.A.H. Dis.\|H.H.D. | .. Half-hour Discussion. |
| Int. | .. Introduction stage of a Bill. |
| L.A. | .. Legislative Assembly. |
| L.C. | .. Legislative Council. |
| M. | .. Motion. |
| P.M. | .. Privilege Motion. |
| R\|Res | .. Resolution. |
| St. | .. Statement. |

## உள்ளடக்கம்


பக்கங்கள்

1. வினாக்கள்—விடைகள் .. .. .. .. 1-34

2. கவன ஈர்ப்பு—

(அ) சேலம் உருக்காலைத் திட்டத்தை கால அட்டவணைப்படி செயல்படுத்துவதில் ஏற்பட்ட தாமதத்தைக் குறித்து .. .. .. .. 35

(ஆ) எண்ணூர் அனல் மின் நிலையத்தில் 31—7—1973 அன்று ஏற்பட்ட தீ விபத்தும், அதனால் ஏற்பட்ட சேதம் குறித்தும் .. .. .. 35

3. தீர்மானங்கள்—

(அ) உறுப்பினர் திரு. எம். பழனிசாமி பேரவைக் கூட்டத்திற்கு வராமைக்கான அனுமதி அளித்தல் குறித்து .. .. .. .. 41

(ஆ) 13—8—1973 அன்று தனியார் அலுவல்களுக்குப் பதிலாக, அரசு அலுவல்களை எடுத்துக் கொள்வது குறித்து .. .. .. .. .. 120-121

4. அறிக்கை அளித்தல்—

அரசினர் உறுதிமொழிக் குழுவின் ஐந்தாவது அறிக்கை 42

5. அரசினர் தீர்மானங்கள்—

(அ) தமிழ்நாடு சட்டப்பேரவை நடைமுறை விதிகள் குழுவின் பரிந்துரைகளின் மீதான இறுதி அறிக்கைக்குப் பேரவையின் ஒப்புதல் குறித்து .. 42-68

(ஆ) ஓய்வுபெற்ற பேரவைச் செயலாளர் திரு. கா. து. நடராசன் அவர்களுக்கு பாராட்டு .. .. 68-69

(இ) கறுப்புப் பணத்தை வெளிக் கொண்டு வருவதற்கு வாஞ்சு குழுவினரது பரிந்துரைகளை மத்திய அரசு ஏற்று செயல்படுத்துவதும், மாநில அரசுகளும் அதனைச் செயல்படுத்தத் தேவையான அதிகாரங்களை மத்திய அரசு வழங்கவேண்டும் என்பதும் குறித்து .. .. .. .. .. 69-120

6. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. .. 121

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 30 இராமநாதன், திரு. சி. .. .. | அறந்தாங்கி. |
| 31 இராமலிங்கம், திரு. இரா. .. .. | தூத்துக்குடி. |
| 32 இராமலிங்கம், திரு. செ. .. .. | கடலாடி (செ.வ.). |
| 33 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு (செ.வ.). |
| 34 இராமன், திரு. மூ. .. .. .. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 35 இராஜாங்கம், திரு. என். .. .. | குறிஞ்சிப்பாடி (செ.வ.). |
| 36 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. .. .. | கன்னியாகுமரி. |
| 37 இளங்கோவன், திரு. கோ. .. .. | திருவையாறு. |
| 38 இளஞ்செழியன், திரு. வீ. சா. .. .. | விராலிமலை. |
| 39 எட்டியப்பன், திரு. பூ. .. .. .. | பேரணமல்லூர். |
| 40 எட்மண்ட், திரு. க. உரொ. .. .. | திருச்செந்தூர். |
| 41 கணபதி, திரு. என். .. .. .. | பாபநாசம். |
| 42 கணபதி, திரு. டி. .. .. .. | நாங்குனேரி. |
| 43 கணேசன், திரு. எல். .. .. | ஒரத்தநாடு |
| 44 கணேசன், திரு. சி. .. .. .. | குற்றாலம். |
| 45 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | இணைத்துக்கடவு. |
| 46 கண்ணன், திரு. எம். ஆர். .. .. | பேஸின் பிரிட்ஜ் |
| 47 கதிரவன், திரு. கா. மு. .. .. .. | தென்காசி. |
| 48 கந்தசாமி, திரு. கே. .. .. .. | உசிலம்பட்டி. |
| 49 கந்தசாமி, திரு. கே. பி. .. .. .. | சாத்தான்குளம் |
| 50 கந்தசாமி, திரு. எம். .. .. .. | குளித்தலை. |
| 51 கந்தப்பன், திரு. செ. .. .. .. | திருச்செங்கோடு. |
| 52 கரிவேங்கடம், திரு. மா. வெ. .. . | பாலக்கோடு. |
| 53 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்). | சைதாப்பேட்டை. |
| 54 கருணாநிதி, திரு. தாழை மு. .. .. | திருவாரூர் (செ.வ.) |
| 55 கருணாநாதன், திரு. சோ. .. .. | கூனூர். |
| 56 கருப்பையா, திரு. ஆ. .. .. .. | கங்கைகொண்டான் (செ.வ.) |
| 57 காசிராமன், திரு. நா. .. .. .. | கும்பகோணம். |
| 58 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி .. | முதுகளத்தூர். |
| 59 காமாட்சி, திரு. கு. .. .. .. | திருவரம்பூர். |
| 60 கார்த்திகேசன், திரு. வீ. .. .. .. | இராதாபுரம். |
| 61 காவேரிமணியம், திரு. சொ. .. .. | திருப்பரங்குன்றம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 62 காளிமுத்து, திரு. கா. .. .. .. | சிவகாசி. |
| 63 கிட்டப்பா, திரு. என். .. .. .. | மாயூரம். |
| 64 கிருட்டிணன், திரு. நா. .. .. .. | பேரணம்பட்டு (செ. வ.). |
| 65 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. .. .. | நெல்லிக்குப்பம். |
| 66 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. .. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 67 கிருஷ்ணன், திரு. கே. ஆர். .. .. | ஊத்தங்கரை. |
| 68 குப்பல் ராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். | மதுரை (கிழக்கு). |
| 69 குமாரசாமி, திரு. அ. சே. .. .. | திருக்கோயிலூர். |
| 70 குமாரசாமி, திரு. கே. என். .. .. | பல்லடம். |
| 71 குருசாமி, திரு. நா. வெ. .. .. | ஆண்டிப்பட்டி. |
| 72 கேசவலு, திரு. தே. .. .. .. | கள்ளக்குறிச்சி. |
| 73 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். .. | உதனப்பள்ளி. |
| 74 கோபால், திரு. எம். .. .. .. | குன்னத்தூர் (செ. வ.). |
| 75 கோபால், திரு. கே. பி. .. .. .. | கம்பம். |
| 76 கோவிந்தசாமி, திரு. வி. செ. .. .. | காவேரிப்பட்டினம். |
| 77 கோவிந்தராசன், திரு. ஆர். .. .. | கடலூர். |
| 78 கோவிந்தராசன் துரை, திரு. .. .. | கந்தர்வகோட்டை. |
| 79 *கோவிந்தன், புலவர் கா. (மாண்புமிகு பேரவைத் தலைவர்). | செய்யாறு. |
| 80 கோவை செழியன், திரு. .. .. | காஙகேயம். |
| 81 சகாதேவன், திரு. எஸ். .. .. | செஞ்சி. |
| 82 சங்குமுத்து தேவர், திரு. ச. .. .. | அம்பாசமுத்திரம். |
| 83 சதாசிவம், திரு. செ. .. .. .. | ஆண்டிமடம். |
| 84 சண்முகசுந்தரம், திரு. அ. ப. .. .. | பொள்ளாச்சி. |
| 85 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை. |
| 86 சண்முகம், திரு. பெரி. .. .. .. | திருவாடானை. |
| 87 சண்முகம், திரு. மு. .. .. .. | விழுப்புரம். |
| 88 சத்தியமூர்த்தி, திரு. மு. .. .. | புதுக்கோட்டை. |
| 89 சத்தியவாணிமுத்து, மாண்புமிகு திருமதி (அமைச்சர்) | பெரம்பூர் (செ.வ.). |
| 90 சத்தியேந்திரன், திரு. எம்.எஸ். கே. .. | இராமநாதபுரம். |
| 91 சம்பத், திரு. டி. வி. .. .. .. | செம்பனார் கோவில். |

* 3-8-1973-ம் நாளன்று மாண்புமிகு பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 157 நெடுஞ்செழியன், மாண்புமிகு டாக்டர் இரா. (அமைச்சர்). | திருவல்லிக்கேணி. |
| 158 நைனாமலை, திரு. இரா. | ராசிபுரம். |
| 159 பத்மநாபன், திரு. பொ. | திருநெல்வேலி. |
| 160 பத்மாவதி, திருமதி. எ. கோ. | முசையூர். |
| 161 பரந்தாமன், திரு. ஆ. | கடம்பத்தூர் |
| 162 பரமசிவம், திரு. எம். | தாரமங்கலம். |
| 163 பலராமன், திரு. என். எஸ். | அரக்கோணம். |
| 164 பழனிசாமி, திரு. நா. | பொங்கலூர். |
| 165 பழனிசாமி, திரு. என். கே. | பெருந்துறை. |
| 166 பழனிசாமி, திரு. மு. | வெள்ளக்கோயில். |
| 167 பழனிச்சாமி, புலவர் சி. | பழனி (செ.வ.) |
| 168 பழனியப்பன், டாக்டர் ச. மு. | கோபிசெட்டிபாளையம். |
| 169 பழனியம்மாள், திருமதி வி. ப. | தாராபுரம். |
| 170 பழனிவேலன், திரு. க. | வரகூர். |
| 171 பழனிவேலன், திரு. மு. | நாமக்கல். |
| 172 பழனிவேலு, திரு. பி. | ஆத்தூர் |
| 173 பழனிவேல் ராஜன், திரு. | தேனி. |
| 174 பன்னீர் செல்வம், திரு. எம். | ஆம்பூர் (செ. வ.) |
| 175 பாண்டுரங்கம், திரு. சி. | செங்கம் (செ. வ.) |
| 176 பாலகிருட்டிணன், திரு. கு. | மன்னார்குடி. |
| 177 பாலசுந்தரம், திரு. வை. | அச்சரபாக்கம் (செ.வ.). |
| 178 பாலையா, திரு. எ. | கொளச்சல். |
| 179 பெரியசாமி, திரு. கு. | கொடவாசல். |
| 180 பெரியசாமி, திரு. தி. ஒ. | அவினாசி. |
| 181 பெருமாள், திரு. செ. | காட்டுமன்னார்கோயில். |
| 182 பெருமாள், திரு. எ. ஆர். | காரியப்பட்டி. |
| 183 பொம்மன், திரு. கு. அ. | கூடலூர் (செ. வ.) |
| 184 பொன் சொக்கலிங்கம், திரு. பி. | சிதம்பரம். |
| 185 பொன்னப்ப நாடார், திரு. ஆர். | விளவங்கோடு. |
| 186 பொன்னுமலை, திரு. தி. | பனைமரத்துப்பட்டி. |
| 187 பொன்னுரங்கம், திரு. எ. எம். | சோளிங்கபுரம். |
| 188 மணலி கந்தசாமி, திரு. சி. | திருத்துறைப்பூண்டி. |
| 189 மணியன், திரு. பி. எஸ். | சோழவந்தான். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும் (1) | தொகுதி. (2) |
|---|---|
| 190 மதியழகன், திரு. கே.எ. | ஆயிரம் விளக்கு. |
| 191 மருதாசலம், திரு. என். | பேரூர் (செ. வ.). |
| 192 மலைக்கண்ணன், திரு. வீ. | இளையாங்குடி. |
| 193 மன்னியப்பன், திரு. சி. | கிருஷ்ணகிரி. |
| 194 மாணிக்கம், திரு. என். | பென்னகரம். |
| 195 மாணிக்கவாசகம், திரு. இரா. | தொண்டாமுத்தூர். |
| 196 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். (இராமநாதபுரம் மாவட்டம்) |
| 197 மாரிமுத்து, திரு. எ. ஆர். | பட்டுக்கோட்டை. |
| 198 மாரிமுத்து, திரு. மூ. | தலைவாசல் (செ.வ.) |
| 199 மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம். |
| 200 முகமது கோதர் முகைதீன், திரு. எஸ். | மேலப்பாளையம். |
| 201 முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந. | லால்குடி. |
| 202 முத்து, திரு. வ. | சங்கரி (செ. வ.) |
| 203 முத்துசாமி, திரு. ப. | வேடசந்தூர். |
| 204 முத்துச்செல்வன், திரு. பு. செ. | முசிறி. |
| 205 முத்துவேல், திரு. ந. | வானூர் (செ. வ.) |
| 206 முத்தையா, திரு. கே. மொக. | கடலூர். |
| 207 முத்தையா, திரு. எம். | ஒட்டப்பிடாரம் (செ. வ.) |
| 208 முருகையன், திரு. எஸ். | கலசப்பாக்கம். |
| 209 முனியாண்டி, திரு. ஆ. | நிலக்கோட்டை (செ. வ.) |
| 210 முனு ஆதி, திரு. மு. | திருப்போரூர். |
| 211 முனுசாமி, திரு. ரா. ரா. | மேல்மலையனூர். |
| 212 மொய்தீன், திரு. திருப்பூர் எ. எம். | துறைமுகம் (சென்னை நகரம்). |
| 213 மோசஸ், திரு. ம. | நாகர்கோயில். |
| 214 ரங்கநாதன், திரு. கே. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 215 ராமசாமி, திரு. இ. | வால்பாறை. |
| 216 ராமசாமி, திரு. ஜி. | திருப்பத்தூர் (வட ஆர்க்காடு மாவட்டம்). |
| 217 ராமராசன், திரு. வ. க. | பவானிசாகர் (செ. வ.) |
| 218 ராஜா, திரு. எ. எம். | பவானி. |
| 219 ராஜாராம், திரு. ஜி. | திண்டிவனம். |
| 220 ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ. | திருமங்கலம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
| --- | --- |
| 221 லத்தீப், திரு. எம். ஏ. | வாணியம்பாடி. |
| 222 வகாப், திரு. கே. எ. | ராணிப்பேட்டை. |
| 223 வடிவேலு, திரு. சீ. க. | தொட்டியம். |
| 224 வடிவேல், திரு. எஸ். | சீர்காழி (செ. வ.) |
| 225 விசுவநாதன், திரு. செ. கோ. | செங்கல்பட்டு. |
| 226 வீராசாமி, திரு. நா. | ஆற்காடு. |
| 227 வெங்கடசாமி, திரு. பி. | ஹோசூர். |
| 228 வெள்ளத்துரை, திரு. அ. | வாசுதேவநல்லூர். |
| 229 வேதாசலம், திரு. மு. | வண்ணாரப்பேட்டை (சென்னை நகரம்). |
| 230 வேலப்பன், திரு. சி. வே. | கபிலமலை. |
| 231 வேழவேந்தன், திரு. கா. | கும்மிடிபூண்டி. |
| 232 ஜேம்ஸ், திரு. ஜே. | திருவட்டார். |
| 233 ஜோதி வெங்கடாசலம், திருமதி | ஸ்ரீரங்கம் (செ. வ.) |
| 234 ஹாண்டே, டாக்டர், எச். வி. | பார்க் டவுன் (சென்னை நகரம்). |
| 235 வெற்றிடம் | கோயம்பத்தூர்—மேற்கு. |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன்—அமைச்சர்.
2 மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி—அமைச்சர்.
3 திரு. கோவிந்த சாமிநாதன்—தலைமை வழக்கறிஞர்.

# தமிழ்நாடு சட்டப் பேரவை.

---

சனிக்கிழமை, 1973 ஆகஸ்ட் 11.

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள் —விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 74, 75, 76 ஆகிய எண்கள் உள்ள கேள்விகள் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

### அரசுப் பணிகளில் அரிசனங்களுக்கு ஒதுக்கீடு.

* 77 வினா—**திரு. அ. தேவேந்திரன்:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசுப் பணிகளில் அரிசனங்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள பதினெட்டு சதவீதப் பணிகள் நிரப்பப்படுவது எவ்வாறு கண்காணிக்கப்பட்டு வருகிறது?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** ஒவ்வொரு துறையிலும் உள்ள பல்வேறு அரசுப் பணிகளில் அரிசனங்கள் ஏற்கெனவே எத்தனை பேர் உள்ளனர் என்பதையும், ஆண்டுதோறும் நியமனம் செய்யும்போது அரிசனங்களுக்கென ஒதுக்கப்படும் இடங்கள் ஒதுக்கீடு விதிப்படி (Rule of Reservation) நிரப்பப்படுகின்றனவா என்பதையும், ஆய்வு செய்யும் பொருட்டு, துறைத் தலைவர்களும், மற்றும் நியமன அதிகாரிகளும், நியமனங்கள் பற்றிய விவரங்களுடன் ஆண்டறிக்கைகள் அரசிற்கு சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கைகள் அரிசன நல உயர்நிலைக் குழுவின் செயலாளரால் ஆய்வு செய்யப்பட்டு, அக்குழுவின்முன் வைக்கப்படுகின்றன.

மேலும், 18 சதவிகிதம் ஒதுக்கீடுமிடங்கள் நிரப்புவது சம்பந்தமாக முறைப்பட்டி (Roster) அமைக்கப்பட்டு அது சரிவாக் கடைப்பிடிக்கப்

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 92 சாதிக் பாட்சா, மாண்புமிகு திரு. எஸ்.ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 93 சாரதி, திரு. மா. பா. .. .. .. | வேலூர். |
| 94 சிதம்பரம், திரு. சித. .. .. .. | காரைக்குடி. |
| 95 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. .. | சேரன்மகாதேவி |
| 96 சிவபெருமாள், திரு. கோ. .. .. | அரியலூர். |
| 97 சிறைமீட்டான், திரு. தொ. க. .. .. | பரமக்குடி. (செ.வ.) |
| 98 சீனிவாசன், மாண்புமிகு திரு. பெ. (துணைத் தலைவர்). | விருதுநகர். |
| 99 சீனிவாசன், திரு. தொ. ப. .. .. | போளூர். |
| 100 சின்னசாமி, திரு. அ. .. .. .. | செயங்கொண்டம் (செ.வ.) |
| 101 சின்னசாமி, திரு. ஆர். .. .. | தர்மபுரி. |
| 102 சின்னசாமி திரு. மு. .. .. .. | மொடக்குறிச்சி. |
| 103 சின்னசாமி, திரு. வ. .. .. .. | ஏற்காடு (ஆ. வா.) |
| 104 சின்னராசு, டாக்டர் ச. அ. .. . | ஹரூர் (செ. வ.) |
| 105 சின்னவெள்ளையன், திரு. சி. .. .. | சேந்தமங்கலம் (ஆ. வா.) |
| 106 சுந்தரம், திரு. ஒ. என். .. .. .. | திண்டுக்கல். |
| 107 சுப்பிரமணியம், திரு. எ. .. .. | சிங்காநல்லூர். |
| 108 சுப்பிரமணியம், திரு. எஸ். கே. .. | சத்தியமங்கலம். |
| 109 சுப்பிரமணியம், திரு. கே. எம். .. .. | தியாகராயநகர். |
| 110 சுப்பிரமணியன், திரு. மா. .. .. | ஈரோடு. |
| 111 சுப்பிரமணியன், திரு. வீ. .. .. | உளுந்தூர்பேட்டை. |
| 112 சுப்பு, திரு. க. .. .. .. .. | ராஜபாளையம். |
| 113 சுப்பையா, திரு. ஆ. கு. .. .. .. | கோட்டூர் (செ. வ.) |
| 114 சுப்பையா, திரு. கே. வி. .. .. | ஆலங்குடி. |
| 115 சுப்பையா, திரு. ச. .. .. .. | சங்கரன்கோயில் (செ. வ.) |
| 116 சுப்பையா, திரு. எ. ஆர். .. .. | கடயநல்லூர். |
| 117 சுருளிவேல், திரு. மு. .. .. .. | போதிநாயக்கனூர். |
| 118 சுரேந்திரன், திரு. எம். .. .. | மேட்டூர். |
| 119 சுவாமிதாஸ், திரு. எ. .. .. .. | பத்மநாபபுரம். |
| 120 செபமாலை, திரு. கோ. .. .. .. | மங்களூர் (செ. வ.) |
| 121 ஜெயராமன், திரு. கி. .. . .. | சேலம்-1. |
| 122 செல்லத்துரை, திரு. வீ. .. .. | ஓமலூர். (செ. வ.) |
| 123 செல்லையா, திரு. குழ. .. .. | பேராவூரணி. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி (2) |
|---|---|
| 124 செல்வராஜ், திரு. எம். .. .. .. | விருத்தாசலம். |
| 125 சேதுராமன், திரு. சி. .. .. .. | சிவகங்கை. |
| 126 சோலையா, திரு. த. .. .. .. | மானாமதுரை. |
| 127 சோமசுந்தரம், திரு. ந. .. .. .. | வலங்கைமான் (செ. வ.) |
| 128 சௌடி சுந்தரபாரதி, திரு. எஸ். .. | அருப்புக்கோட்டை. |
| 129 சௌந்தரபாண்டியன், திரு. பெ. .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 130 டென்னிஸ், திரு. என். .. .. | இள்ளியூர். |
| 131 தங்கமணி, திரு. கே. டி. கே. .. .. | மதுரை–மேற்கு. |
| 132 தர்மலிங்கம், மாண்புமிகு திரு. அ. பெ. (அமைச்சர்). | திருச்சிராப்பள்ளி-2. |
| 133 தருமலிங்கம், திரு. ந. .. .. .. | ரிஷிவந்தியம் (செ.வ.) |
| 134 தவமணித்தேவர், திரு. வி. .. .. | சேடப்பட்டி. |
| 135 திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி. .. | நாட்ராம்பள்ளி |
| 136 தியாகராசன், திரு. அ. .. .. .. | திருமயம். |
| 137 தியாகராசன், திரு. இ. எஸ். .. .. | திருத்தணி. |
| 138 திருப்பதி, திரு. கு. .. .. .. | மதுரை (சென்ட்ரல்) |
| 139 துரைசாமி திரு. எ. க. .. .. .. | குடியாத்தம். |
| 140 துரைசாமி, திரு. சு. .. .. .. | திருப்பூர். |
| 141 துரைமுருகன், திரு. .. .. .. | காட்பாடி. |
| 142 துரைராஜ், திரு. சு. ம. .. .. | திருவள்ளூர் (செ.வ.) |
| 143 தூயமணி, திரு. மே. சி. .. .. | மேட்டுப்பாளையம். |
| 144 தேவராசன், திரு. எம். .. .. | உதகமண்டலம். |
| 145 தேவேந்திரன், திரு. அ. .. .. | நன்னிலம் (செ. வ.) |
| 146 தோப்பூர் திருவேங்கடம், திரு. .. .. | கணியம்பாடி. |
| 147 நடராசன், திரு. ஈ. எம். .. .. | அந்தியூர். |
| 148 நடராசன், திரு. எஸ். .. .. .. | தஞ்சாவூர். |
| 149 நரசிம்மன், திரு. எ. சி. .. .. | ஆரணி |
| 150 நல்லசாமி, திரு. எஸ். .. .. .. | கரூர். |
| 151 நாகராஜன், திரு. க. .. .. .. | வடமதுரை. |
| 152 நாகலிங்கம், திரு. பா. .. .. .. | பொன்னேரி (செ.வ.) |
| 153 நாச்சிமுத்து, திரு. நா. .. .. .. | ஒட்டஞ்சத்திரம் |
| 154 நாச்சியப்பன், திரு. எ. எம். டி. .. | ஆத்தூர். |
| 155 நாச்சியப்பன், திரு. ந. .. .. .. | சங்கராபுரம். |
| 156 நாராயணசாமி, திரு. மா. வே. .. .. | திருவொற்றியூர். |

படுகின்றதா என்பதைப் பார்வையிட உயர்நிலைக்குழுவின் செயலாளரான சமூக நலத் துறையின் இணைச் செயலாளர் ஒவ்வொரு துறைத் தலைவர் அலுவலகங்கள், மாவட்ட அளவில் உள்ள பல்வேறு அலுவலகங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி அலுவலகங்கள், மற்றும் மின்சார வாரியம், தொழில் இணையகங்கள், முதலியவற்றின் சம்பந்தப்பட்ட கோப்புகளையும், முறைப்பட்டிகளையும் ஆய்வு செய்து, காணும் குறைகளை நீக்குவதற்குத் தக்க நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்.

**திரு. அ. தேவேந்திரன் :** தலைவர் அவர்களே, நேற்றைய தினம் இங்கே பேசுகிறபோதுகூட, சரியாக அது நிறைவேற்றப்படவில்லை என்ற குற்றச்சாட்டைப் பரவலாகப் பேசினார்கள். பாலில் தண்ணீர் கலந்தால் அதற்குத் தண்டனை தரப்படுகிறது. அதைப்போல், சரியாக நிறைவேற்றாத அதிகாரி மீது ஏதாவது நடவடிக்கை எடுக்க ஒரு சட்டத்தைப் போட்டு, இனி சரியாக நிறைவேற்றப்படுமா? அப்படிப்பட்ட உத்தேசம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** நேற்று பதிலளிக்கையில் மாண்புமிகு முதலமைச்சரவர்கள், "தகுதியான விண்ணப்பங்கள் வரவில்லை, எனவேதான் இடங்கள் பூர்த்தியாக்கப்படவில்லை", என்று சொன்னார்கள். தகுதியான விண்ணப்பங்கள் கிடைக்கவில்லை என்பதற்காக, என்னென்ன தகுதிகள் தேவையோ அந்தந்தத் தகுதிகள் இல்லை என்ற காரணத்திற்காகப் பல முறை விண்ணப்பங்கள் திருப்பி அனுப்பப்படுகின்றன. எனவேதான், அந்த இடங்கள் பூர்த்தி செய்யப்படவில்லை. அதற்காக எந்த அதிகாரி மீதும் நடவடிக்கை எடுக்க முடியவில்லை.

**திரு. வை. பாலசுந்தரம் :** இந்த 18 சதவிகிதம் அரசு கொடுக்கிறது. ஆனால், சில மாணவர்கள் திறமையுள்ளவர்களாக இருப்பதால் சில பரீட்சைகளில் அதிகமான மதிப்பெண்களைப் பெறுகிறார்கள். அப்படிப்பட்டவர்களை 'ஓபன் காம்பெடிஷன்'-ல் அங்கீகரித்துக்கொண்டு, இந்த 18 சதவிகிதம் பொது அடிப்படையில் அமல்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அரசுப் பணிகளில் அரிசனங்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள பதினெட்டு சதவீதப் பணிகள் குறித்துத்தான் மூலக் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. கல்லூரி மாணவர்களைப் பற்றி அல்ல.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** நேற்று பதில் சொன்ன நேரத்தில், அரசினுடைய சர்விசில் குறிப்பிட்ட சில சர்வீஸ் பற்றியெல்லாம்தான் சொன்னார்கள். அது மாத்திரமல்ல. மற்ற எல்லா சர்விசிலும் இம்மாதிரி 18 சதமானம் கொடுக்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறதே, அம்மாதிரியான



விஷயங்கள் ஏதாவது வந்து, செக்டிபை பண்ணுவதற்கு என்ன நடவடிக்கை எடுத்தது என்பதைக் குறித்து நான் அறிய விரும்புகிறேன். இப்படி குறிப்பிட்ட சில மாவட்டங்களில் கோளாறு இருக்கிறது. அதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். சென்ற ஆண்டு எந்த முறையில் இருந்தது, இந்த ஆண்டு எந்த அளவுக்கு இருக்கிறது என்று இந்தச் சபைக்கு அறிவிக்கப்படுமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அரசுப் பணிகளில் அவ்வப்போது ஏற்படுகிற காலி இடங்களைப் பூர்த்தி செய்யும்போது, அங்கே பணி புரிகிறவர்களுக்கு இருக்கிற சீனியாரிடி, அவர்களுக்கு இருக்கிற க்வாலிபிகேஷன் இவைகளையெல்லாம் அடிப்படையாக வைத்து, அந்த இடங்களைப் பூர்த்தி செய்ய முடிகிறது. அதற்குத் தகுதி அடிப்படை என்று பார்க்கும்போது, சில நேரங்களில் சீனியாரிடி முறையிலே வருவது கிடையாது, சிலருக்குத் தகுதிகள் இல்லாமல் இருந்து விடுகின்றன. எனவே, அவற்றைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. புதிதாக எழும் பணிகளைப் பொறுத்தவரையில், மொத்தமாக ஓரிடத்தில் 50 பணிகள், 100 பணிகள் என்று எழுவது கிடையாது. இரண்டு பணிகள், மூன்று பணிகள், அல்லது, 15, 20 என்ற அளவில்தான் புதிதாக நிரப்பப்பட வேண்டியிருக்கின்றன. 15 அல்லது 20 பேர் எடுக்க வேண்டியிருந்தால், இந்த 18 சதவீதப்படி ஒன்றிரண்டுதான் அரிசனங்களுக்கு வருகிறது. அப்படி வரும்போது அதன்படி இடங்களைப் பூர்த்தி செய்துவிடுகிறோம். எப்போதுமே மொத்தமாகப் புதிய பணிகளை உண்டாக்கும்போது, அதில் 18 சதவீதம் அரிசனங்களுக்காக ஒதுக்கப்பட்டு, அந்த இடங்கள் பூர்த்தி செய்யப்படுகின்றன. நேற்று, முதலமைச்சர் அவர்கள் பேசும்போது, க்ரூப்-1 சர்வீஸில் மொத்தமாக எடுக்க விரும்பினால், அதிலே அந்தக் கணக்கைப் பூர்த்தி செய்து விடுகிறோம் என்று சொன்னார்கள். சமீபத்தில்கூட அப்படி வந்தது. அதிலே ஒருவர்தான் டெபுடி கலெக்டராக எடுத்துக்கொள்ளப்பட்டு, அதிலே 18 சதவீதம் சரியாகிவிடுகிறது. புதிதாக எழுகிற பணிகள், அல்லது பதவி உயர்வு காரணமாக ஏற்படுகிற காலி இடங்கள், இவைகளில் இந்த விகிதப்படி பூர்த்தி செய்யப்படுகிறார்கள்.

**திரு. ஆ. பரந்தாமன் :** தமிழ்நாட்டிலுள்ள க்வாசி-கவர்ன்மென்ட் நிறுவனங்களிலும் இந்த 18 சதவீதக் கொள்கை கடைப்பிடிக்கப்படவில்லை. ஆகவே, அரசு எல்லா க்வாசி-கவர்ன்மென்ட் நிறுவனங்களுக்கும் அறிக்கை விட்டு, அந்த 18 சதவீதக் கொள்கையைக் கடைப்பிடிக்குமாறு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** நகராட்சி, மின்சார வாரியம் போன்ற நிறுவனங்களில் 18 சதவீத அடிப்படையில் இடங்களைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று அரசு கட்டளை பிறப்பித்திருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, அரிசனங்களுக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் 16 சதவிகிதத்தில் மதம் மாறிய அரிசனங்களும் சேர்க்கப்பட்டிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன். இல்லையென்றால், இனிமேலாவது தமிழ்நாடு அரசாங்கம் அதற்கு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இந்த அரிசனங்களைப் பொறுத்த வரையிலும் ரூல் ஆப் ரிசர்வேஷனை மத்திய அரசுதான் செய்ய வேண்டும் என்ற அந்த உத்தரவின் அடிப்படையில்தான், ஜாதியின் அடிப்படையில் இந்த ஒதுக்கீடுகள் செய்கின்றோம். ஜாதியின் அடிப்படையில் என்று மத்திய அரசு கூறும்போது, இந்த சமுதாயத்தில் தீண்டாமை அடிப்படையில் இருக்கிற இந்த இனங்களுக்குத்தான் ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று கூறுகிறார்கள். பின்தங்கிய மக்களுக்குக் கூட, மத்திய அரசின் உத்தரவுப்படியோ ஆணையின்படியோ அந்தப் பட்டியலை நாம் தயார் செய்வதில்லை. இதில் மாத்திரம் இப்படித்தான் செய்யவேண்டும் என்று அவர்கள் வரையறுத்துக் கூறுகிறார்கள். அப்படிக் கூறும்போது மதம் மாறிய கிறிஸ்தவ அரிசனங்களை இந்தப் பட்டியலில் நீங்கள் சேர்த்துக்கொள்ளக் கூடாது என்று கண்டிப்பாகச் சொல்லுகிறார்கள். எனவேதான், இந்த ரிசர்வேஷனில் மதம் மாறிய கிறிஸ்தவ அரிசனங்களை இந்தப் பட்டியலில் மாநில அரசு சேர்த்துக்கொள்ள முடியவில்லை என்று ஏற்கெனவே பலமுறை கூறியுள்ளேன். மாநில அரசு செய்கின்ற எல்லாத் திட்டங்களிலும் அவர்களுக்கு இடம் அளிக்கப்படுகிறது.

திரு. அ. தேவேந்திரன்: நம்முடைய அரசு 16 சதவிகிதத்தை 18 சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறது. எங்களுக்கிருக்கும் சந்தேகமெல்லாம், தகுதி இல்லை என்ற ஒரே காரணத்தைச் சொல்லி 18 சதவிகித இடங்களைப் பூர்த்தி செய்யவில்லையோ என்பதுதான். தகுதி இல்லை என்று மட்டும் சொல்லித் தப்பித்துக் கொள்ளாமல் இருப்பதற்கு வேறு ஏதாவது செய்ய அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அதற்கு ஒரு முறை வகுத்திருந்தார்கள். அதாவது, இந்த ஆண்டு பூர்த்தி செய்ய முடியவில்லையென்றால், தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவில்லையென்றால், ஓராண்டு பொறுத்திருந்து பார்க்கலாம், அடுத்த ஆண்டு வரையில் அந்த இடங்களை நிரப்பாமல் நிறுத்தி வைக்கலாம் என்ற ஒரு விதி இருந்தது. ஆனால், இப்பொழுது தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பின்தங்கிய மக்களுக்குமாகச் சேர்த்து, 18-ம் 31-ம் என்பதை மொத்தமாக 49 என்று வைத்து, அதில் இப்படிப்பட்டவர்களை நியமிப்பது, அதனால் அடுத்த ஆண்டு பின்தங்கிய மக்க



ளுக்கு இடங்களைப் பூர்த்தி செய்யப் போகும்போது இடங்கள் ஏற்படும் என்ற நோக்கத்தில் அது கைவிடப்பட்டிருக்கிறது. எனவே, எந்தக் காரணத்தைக் கொண்டும் இவைகளைப் பூர்த்தி செய்யாமலிருக்கக்கூடாது என்று அவ்வப்போது அறிக்கைகளை அரசுக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். தகுதியானவர்கள் கிடைக்கவில்லை என்பதுதான் முக்கியமான காரணம்.

திரு. வ. பாலசுந்தரம்: தலைவரவர்களே, நான் முதலிலே கேட்டது இந்த குரூப் ஒன் சர்வீஸில் அதிகமாக மதிப்பெண்கள் பெறுகின்றவர்கள் ஓப்பன் காம்பெட்டிஷனில் வருகிறார்களா என்பது. ரிட்டன் டெஸ்ட், இண்டர்வியூ முதலியவைகளில் பலர் அதிகமான மதிப்பெண்கள் பெற்றுவிடுகிறார்கள். அவர்களையும் இந்த ரிசர்வ் செய்திருக்கும் இடத்திற்குத் தேர்ந்தெடுத்தால் மதிப்பெண்கள் குறைவாக எடுத்தவர்களுக்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடும். ஆகவே, மதிப்பெண்கள் அதிகமாகப் பெற்றவர்களை ஓப்பன் காம்பட்டிஷனில் சேர்த்துக்கொள்வார்களா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: குரூப் ஒன் சர்வீஸுக்கு அநேகமாக குறைந்த இடங்களே ஏற்படுகின்றன. அதிலே கட்டாயம் 18 சதவிகிதம் என்று வந்து விடுகிறது. அதுகூட சர்வீஸ் கமிஷன் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறது. 18 சதவிகிதம் கட்டாயம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று அரசு அவர்களுக்கு உத்தரவு பிறப்பித்திருக்கிறது. அந்த அடிப்படையிலே தேர்ந்தெடுக்கிறார்கள்.

## கும்முடிப்பூண்டி, பொன்னேரி, பென்னலூர்ப்பேட்டை துணை வட்ட அரிசனங்களுக்குக் கடன்கள்

* 78 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972-73-ல் கும்முடிப்பூண்டி, பென்னலூர்ப்பேட்டை துணை வட்டங்களிலுள்ள அரிசன மக்களிடமிருந்து வட்டியில்லாக் கடன் கோரி பெறப்பட்ட விண்ணப்பங்கள் எத்தனை?

(இ) அவைகளுள் ஏற்பளிக்கப்பட்ட கடன் விண்ணப்பங்களின் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) 21.

(இ) 19 விண்ணப்பங்கள் ஏற்பளிக்கப்பட்டன. 17 விண்ணப்பங்கள் 1972-73-ம் ஆண்டிலும் 2 விண்ணப்பங்கள் 1973-74-ம் ஆண்டிலும் ஏற்பளிக்கப்

பட்டன. இன்னொரு விண்ணப்பம் 23—3—1973 அன்று வரப்பெற்றதனால் 1973-74-ம் ஆண்டுக்கான விண்ணப்பங்களுடன் பரிசீலனையில் உள்ளது. மீதி யுள்ள ஒரு விண்ணப்பம் தகுதியில்லை என்பதால் ஏற்பளிக்கப்படவில்லை.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவரவர்களே, இந்த மேற்கண்ட இரு ஆணை வட்டங்களிலும் விண்ணப்பிக்கின்ற அரிசனங்கள் எல்லோருக்கும் அந்த ஆண்டிலேயே கடன் தொகை அளிப்பதற்கு அதிகமான நிதி ஒதுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

***மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :*** விண்ணப்பிக்கின்ற எல்லோ ருக்குமே கடன் கொடுத்துவிட்டால், கொடுத்த கடன் திரும்பி வராது. ஆகவே, கடன் கொடுக்கின்ற பணத்தைத் திருப்பிச் செலுத்தும் தகுதி அவர் களுக்கு இருக்கிறதா என்பதைப் பரிசீலனை செய்து பார்த்துத்தான் கொடுக்கப்படும். தகுதியுடையவர்களுக்குக் கடன் கொடுப்பதற்காக ஆண்டு தோறும் தொகையை அதிகமாக ஒதுக்கி வருகிறோம்.

**திரு. கு. அ. பொம்மன் :** தலைவரவர்களே, இதுகாறும் வட்டி இல்லாமல் கடன் கொடுக்கப்பட்டது. இப்போது வங்கிகள் மூலமாகக் கடன் கொடுக்கும் போது 11 சதவிகிதம் வட்டி கொடுக்க வேண்டியிருக்கிறது. அந்த வட்டி யைக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

***மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :*** நான் இப்போது பதில் சொல்லிக்கொண்டு வருவது அரிசன நலத் துறை மூலமாகக் கொடுக்கப் படுகின்ற நிதி உதவியைப் பற்றியது. வங்கிகள் மூலமாகக் கொடுக்கப்படுவது வேறு. வங்கிகள் மூலம், ஆங்காங்கு இருக்கின்ற வங்கிகளின் விதிமுறைகளின் படி கடன் கொடுக்கிறார்கள். ஆனால் அரிசன நலத் துறை மூலமாகக் கொடுப்பது வேறு.

**திரு. கு. அ. பொம்மன் :** தலைவரவர்களே, வட்டி இல்லாத கடன் என்று சொல்லியிருக்கும்போது, வங்கிகள் மூலமாகக் கொடுக்கும்போது ஏன் வட்டி வாங்கவேண்டும்? ஏற்கெனவே டி. டபிள்யு. ஓ. மூலம் கொடுத்ததை இப்போது வங்கிகள் மூலம் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

***மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :*** அரிசன நலத்துறையில் ஆண்டு தோறும் 10 லட்சம், 11 லட்சம் ரூபாய் வட்டியில்லாமல் தருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் வேழவேந்தன் அவர்கள் கேட்டதைப்போல நிறைய பேருக்கு உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. ஆகவே, சிலருக்கு வங்கிகள் மூலம் கடன் கொடுக்க உதவி செய்கிறோம்.



வங்கிகள் மூலம் கொடுக்கும்போது, அவர்கள் எதற்காகக் கேட்கிறார்கள், எந்த மாதிரியான தொழில் தொடங்குவதற்குக் கேட்கிறார்கள், ஏற்கெனவே அந்தத் தொழிலில் அனுபவம் அவர்களுக்கு இருக்கிறதா, கொடுக்கின்ற கடனை ஒழுங்காகத் திருப்பிச் செலுத்தும் தகுதி இருக்கிறதா என்று பரிசீலனை செய்து பார்த்து, குறைந்த வட்டிக்குக் கடன் கொடுக்கிறார்கள். அப்படி இருந்தாலும் சில நேரங்களில் தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கும்போது அவர்கள் அந்தத் தொழிலைத் தொடங்காமலேயே இருந்துவிடுகிறார்கள். ஆகவே, 4, 5 பேர் களுக்குச் சேர்த்துக் கொடுக்கலாமா என்ற ஒரு யோசனையும் இருக்கிறது. இந்த முறையிலே சிறு சிறு தொழில்கள் தொடங்க, வங்கிகள் மூலம் கடன் பெற அரசு உதவி செய்கிறது. ஆனால் எந்த வங்கியிலும் வட்டியில்லாமல் கடன் கொடுக்கமாட்டார்கள்.

### *Service Centres for fishing boats*

* 79 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to open service centres for fishing boats; and

(*b*) if so, the details thereof?

***மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து (அ) & (இ):*** தென் ஆர்க்காடு மாவட்டம், கடலூரில் சரக்குப் பாதையுடன் கூடிய தற்போதுள்ள பணி நிலையத்தில், மீன்பிடி விசைப் படகுகளுக்கு எல்லா வகையான பழுதுபார்க்கும் பணிகளை மேற்கொள்ளத் தேவையான யந்திரங்களுடன் அடிப்படைப் பணிக் கலறி வசதிகள் ஏற்படுத்துவதன் மூலம் அந்தப் பணி நிலையத்தை 'ஏ' வகை பணி நிலையமாக மாற்றுவதற்கும், தஞ்சாவூர் மாவட்டம், மல்லிப் பட்டினத்தில், படகுகளுக்கான சிறு செப்பனிடு பணிகளை மேற்கொள்வதற் கான வசதிகளுடன் கூடிய 'பி' வகை பணி நிலையம் ஒன்றைப் புதிதாகத் தொடங்குவதற்குமான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

**திரு. என். டென்னிஸ் :** தலைவரவர்களே, இத்தகையப் பணிமனை ஒன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :*** இப்போது அமைக்கப்பட்டிருக் கின்ற ஏழு பணிமனைகளில் ஒன்று கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குளச்சலில் இருக்கிறது.

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்ற பணி மனையைப்போல அங்கு மீனவர்களுக்குப் பயிற்சி அளிக்கின்ற நிலையம் இருக்கின்றதா? அப்படிப் பயிற்சி அளிக்கப்பட்டிருந்தால், அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** பயிற்சி நிலையம் இருக்கிறதா என்று திட்டவட்டமாகத் தெரியவில்லை. பணிமனையைப் பற்றியதுதான் கேள்வி. ஆகவே, அதற்குத் தனிக் கேள்வி போடவும்.

## *Rural Engineering Survey*

* 80 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal to launch a scheme of "Rural Engineering Surveys" which envisage collection of data of Agricultural Statistics; and

(*b*) if so, the details of the same?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) ஆம்.

(இ) விவர அறிக்கை@ பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. என். கே. பழனிசாமி :** சார், மொத்தம் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது? இந்த வருஷம் எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இராமநாதபுரம் மாவட்டத்திற்கு இந்தத் திட்டத்திற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**Now it is called the Drought Prone Area Programme. Originally it was named as Special Rural Works Programme.**

இப்போது தர்மபுரி மாவட்டமும், இராமநாதபுரம் மாவட்டமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. என். கே. பழனிசாமி:** சார், இப்போது கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய திட்டம் ஒரு 'சீசனல் ஆக்டிவிட்டிஸ்' திட்டமாக இருக்கிறது. புரொடக்ஷன் பேசிசில் (Production oriented) இல்லை. அதனால் இந்தத் திட்டம் பிரயோஜனமாக இல்லை. ஆகவே, உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட திட்டமாக மாற்றி, ஆழ்குழாய்க் கிணறுகள், பாசன வசதி போன்ற திட்டங்களாக மாற்றிச் செயல்படுவதற்கு மத்திய அரசுக்கு இந்த அரசு சிபாரிசு செய்யுமா?

@ 122-124-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இது உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட திட்டம்தான். முதலில் புள்ளி விவரங்களை சேகரித்துக்கொண்டிருக்கிறார்கள். அதன் பிறகு மற்ற திட்டங்கள் உருவாகும்.

THIRU B. VENKATASWAMY : Sir, may I know from the Hon. Minister the allotment made for Dharmapuri district under the Drought Prone Area Programme and also whether there is any proposal to increase the amount?

THE HON. THIRU P. U. SHANMUGAM : The Scheme is launched by the Central Government. We are executing the Scheme. We have no funds to expand it or enlarge it.

**திரு. வ. எம். இராஜா :** தலைவரவர்களே, இந்தத் திட்டத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தையும் தர்மபுரி மாவட்டத்தையும் சேர்த்திருப்பதாகச் சொன்னீர்கள். கோவை மாவட்டத்தில் பல்லடம், தாராபுரம் பகுதிகள் மிகவும் வறட்சியான பகுதிகளாக இருக்கின்றன. கோவை மாவட்டத்திலுள்ள இந்த இரண்டு தாலுகாக்களையும் இந்தத் திட்டத்தின்கீழ் சேர்த்துக்கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இது நான் சேர்த்துக்கொள்ளும் திட்டம் அல்ல. மத்திய அரசுதான் சேர்த்துக்கொள்ள வேண்டும். ஏற்கெனவே இராமநாதபுரம் மாவட்டத்தை முதலில் சேர்த்திருந்தார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்த்துக்கொண்டு, இரண்டாவதாக தர்மபுரி மாவட்டத்தையும் சேர்த்து மற்ற மாவட்டத்தை விட்டுவிட்டார்கள். இந்தத் திட்டத்திற்கு சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டோம். இரண்டு கோடி ரூபாய் தமிழ்நாடு 1 கோடி ரூபாய் செலவு ஆகும். ஆகவே, இரண்டு மாவட்டங்களையும் சேர்த்துக்கொள்ள அரசு தருவதாக இருந்தால் இரண்டு மாவட்டங்களையும் சேர்த்துக்கொள்ள லாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அரசு அதைப்பற்றி இன்னும் முடிவு செய்யவில்லை.

**திரு. சு. துரைசாமி :** தலைவரவர்களே, நம்முடைய தமிழக அரசு பல்லடம், அவிநாசி, தாராபுரம் ஆகிய வட்டங்களையும் இதில் சேர்த்துக் கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இது மத்திய அரசின் திட்டம். தமிழக அரசிடம் அப்படி ஒரு திட்டம் இல்லை.

## திருச்சிராப்பள்ளி—ஈரோடு இருப்புப்பாதையின் குறுக்கே மேம்பாலம்

* 81 வினா—திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி—ஈரோடு இருப்புப்பாதையில் லாலாப்பேட்டை அருகில் இருப்புப்பாதையின் குறுக்கே மேம்பாலம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆம். பரிசீலனையிலுள்ளது.

## கோயம்புத்தூர் பேருந்து நிலையத்திற்கருகில் மேம்பால வேலை

* 82 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் நகரில் பேருந்து நிலையத்திற்கருகில் மேம்பாலம் (Level Crossing) கட்டும் வேலை எப்போது முடிவுறும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : 1973-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் முடிவுறும்

திரு. சு. துரைசாமி : இந்தத் திட்டத்தை ஆரம்பித்த நேரத்தில் எப்போது முடிக்கப்படும் என்று குறிப்பிருக்கிறதா ? அந்தத் திட்டத்திற்கு ஆகக்கூடிய மொத்தச் செலவு என்ன ? இப்போது நடைமுறையில் அந்தத் திட்டத்திற்கு எவ்வளவு செலவாகியிருக்கிறது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஏற்கெனவே 1973 டிசம்பருக்குள் முடிக்கவேண்டும் என்று நிர்மானிக்கப்பட்டிருக்கிறது. 1973 டிசம்பருக்குள் அந்த வேலை முடிந்துவிடும் என்றே எதிர்பார்க்கிறேன். இந்தத் திட்டத்திற்காகப் போடப்பட்ட மொத்த எஸ்டிமேட் 40 லட்சம். டெண்டர் அனுமதிக்கப்பட்டது 35 லட்சத்து 20 ஆயிரத்து 300 ரூபாய். இதுவரை என்னிடம் உள்ள புள்ளிவிவரப்படி 19.32 லட்சம் செலவாகியிருக்கிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்தத் திட்டம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது ? ஆரம்பத்தில் போட்ட எஸ்டிமேட் எவ்வளவு ? இப்போது திருத்தப்பட்ட மதிப்பீடு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : முன்பு 40 லட்சம் எஸ்டிமேட் போடப்பட்டது. The estimated cost is roughly estimated at Rs. 44 lakhs.



திரு. கே. டி. கே. தங்கமணி : கோவை மேம்பாலத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்ததே, அதனால் ஏற்பட்ட நஷ்டத்திற்கு எவ்வளவு தொகை வசூலிக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதைக் கட்டிக் கொடுப்பது கண்ட்ராக்டரின் பொறுப்புதான், அவர்கள்தான் அதைச் செய்து கொடுக்க வேண்டும்.

## *Broadening of Kuzhithurai bridge*

* 83 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the State Government have recommended the broadening of the Kuzhithurai bridge on the National Highways in Kanyakumari district?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆம்.

திரு. என். டென்னிஸ் : எப்போது நடைமுறையில் வரும் ? இதற்குச் செலவு என்ன ஆகும் என்பதனை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அநேகமாக ஐந்தாவது திட்டத்தில் சேர்க்கப்படும் என்று நம்புகிறேன்.

## *Formation of tank at Vanisalampatti*

* 84 Q.—THIRU R. R. MUNUSAMI : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to construct a tank at Vanisalampatti village in Omalur taluk in Salem district; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (ஆ) வாணிசலம்பட்டியின் அருகில் ரூ. 3,06,700 மதிப்பீட்டில் ஒரு குளம் அமைக்கும் திட்டம் நவம்பர் 1972-ல் அரசால் ஒப்புதலளிக்கப்பட்டது. இத்திட்டத்தினால் 134.40 ஏக்கர் பயன் பெறும். மேலும் 104.59 டன் கூடுதல் அளவு உற்பத்தி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ரா. ரா. முனுசாமி : ஓமலூர் வட்டத்தில் வாணிசலம்பட்டியில் அமைக்க இருக்கும் குளம் எப்போது முடிவு அடையும் என்று அறிவிக்க முடியுமா?

## திருச்சிராப்பள்ளி—ஈரோடு இருப்புப்பாதையின் குறுக்கே மேம்பாலம்

* 81 வினா—திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி—ஈரோடு இருப்புப்பாதையில் லாலாப்பேட்டை அருகில் இருப்புப்பாதையின் குறுக்கே மேம்பாலம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆம். பரிசிலனையிலுள்ளது.

## கோயம்புத்தூர் பேருந்து நிலையத்திற்கருகில் மேம்பால வேலை

* 82 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் நகரில் பேருந்து நிலையத்திற்கருகில் மேம்பாலம் (Level Crossing) கட்டும் வேலை எப்போது முடிவுறும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: 1973-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் முடிவுறும்

திரு. சு. துரைசாமி: இந்தத் திட்டத்தை ஆரம்பித்த நோக்கில் எப்போது முடிக்கப்படும் என்று குறிப்பிருக்கிறதா? அந்தத் திட்டத்திற்கு ஆகக்கூடிய மொத்தச் செலவு என்ன? இப்போது நடைமுறையில் அந்தத் திட்டத்திற்கு எவ்வளவு செலவாகியிருக்கிறது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஏற்கெனவே 1973 டிசம்பருக்குள் முடிக்கவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 1973 டிசம்பருக்குள் அந்த வேலை முடிந்துவிடும் என்றே எதிர்பார்க்கிறேன். இந்தத் திட்டத்திற்காகப் போடப்பட்ட மொத்த எஸ்டிமேட் 40 லட்சம். டெண்டர் அனுமதிக்கப்பட்டது 35 லட்சத்து 20 ஆயிரத்து 300 ரூபாய். இதுவரை என்னிடம் உள்ள புள்ளிவிவரப்படி 19.32 லட்சம் செலவாகியிருக்கிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: இந்தத் திட்டம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது? ஆரம்பத்தில் போட்ட எஸ்டிமேட் எவ்வளவு? இப்போது திருத்தப்பட்ட மதிப்பீடு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: முன்பு 40 லட்சம் எஸ்டிமேட் போடப்பட்டது. The estimated cost is roughly estimated at Rs. 44 lakhs.



திரு. கே. டி. கே. தங்கமணி: கோவை மேம்பாலத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்ததே, அதனால் ஏற்பட்ட நஷ்டத்திற்கு எவ்வளவு தொகை வசூலிக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அதைக் கட்டிக் கொடுப்பது கண்ட்ராக்டரின் பொறுப்புதான், அவர்கள்தான் அதைச் செய்து கொடுக்க வேண்டும்.

## Broadening of Kuzhithurai bridge

* 83 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the State Government have recommended the broadening of the Kuzhithurai bridge on the National Highways in Kanyakumari district?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆம்.

திரு. என். டென்னிஸ்: எப்போது நடைமுறையில் வரும்? இதற்குச் செலவு என்ன ஆகும் என்பதனை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அநேகமாக ஐந்தாவது திட்டத்தில் சேர்க்கப்படும் என்று நம்புகிறேன்.

## Formation of tank at Vanisalampatti

* 84 Q.—THIRU R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to construct a tank at Vanisalampatti village in Omalur taluk in Salem district; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (ஆ) வாணிசலம்பட்டியின் அருகில் ரூ. 3,06,700 மதிப்பீட்டில் ஒரு குளம் அமைக்கும் திட்டம் நவம்பர் 1972-ல் அரசால் ஒப்புதலளிக்கப்பட்டது. இத்திட்டத்தினால் 134.40 ஏக்கர் பயன் பெறும். மேலும் 104.59 டன் கூடுதல் அளவு உற்பத்தி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ரா. ரா. முனுசாமி: ஓமலூர் வட்டத்தில் வாணிசலம்பட்டியில் அமைக்க இருக்கும் குளம் எப்போது முடிவு அடையும் என்று அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: 6—2—1973-ல்தான் ஒப்புதல் அளிக்கப்பட்டது. சீக்கிரத்தில் முடிவு அடையும் என்று நம்புகிறேன். அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

### மணல்மேட்டிலுள்ள கூட்டுறவு நூற்பாலை.

* 85 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் தாலுக்கா, மணல்மேட்டில் உள்ள கூட்டுறவு நூற்பாலையில் தற்போது வேலை செய்வோர் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) அதன் உற்பத்தித் திறன் எவ்வளவு?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) 364.

(ஆ) இந்த ஆலையில் தற்போது நிறுவியுள்ள கதிர்கள் 13,824. இவை முழு அளவில் சாதாரண நிலையில் இயங்கினால் மாதம் 30,213.37 கிலோகிராம் (201 பேல்கள்) நூல் உற்பத்தியை அளிக்கும்.

### *Incentives for plastic industries*

* 86 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any incentives are given to the plastic industries in this State; and

(b) if so, the details thereof for the calendar year 1972?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (ஆ): பி.வி.சி. பிசின்கள், இடைப்பட்ட பொருட்கள் ஆகியவற்றைத் தயாரிக்கப் பயன்படுத்துவதற்காக பி.வி.சி. தயாரிப்பாளர்களால் கொள்முதல் செய்யப்படும் வெறியம் கலந்த மதுவிற்குக் காலன் அளவைக் கட்டணங்களைச் செலுத்துவதனின்றும் அரசு விலக்களித்துள்ளது.

திரு. என். டென்னிஸ்: வீட்டில் வைத்து வேலை செய்யும் தன்மை வாய்ந்த பெண்களுக்கு ஊக்கம் அளிக்க ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ப்ளாஸ்டிக் இண்டஸ்ட்ரிக்கு என்ன உதவி அளிக்கப்படுகிறது என்பது கேள்வி. அதற்கு வரிச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது.



திரு கோவை செழியன்: தமிழ்நாட்டில் அமைக்கப்படுகிற ப்ளாஸ்டிக் தொழிற்சாலை, பாலிதின் தொழிற்சாலைகளுக்கு எல்லாம் கட்டடங்கள் அமைக்கப்பட்டு தற்போது பின்னும்தான் முழு உரிமை (licences) பெறுகிறார்கள். இந்த பாலிதின் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய ஃபார்ம்யுலேஷன் ஒரு வாரத்திற்குப் போதுமானதாக இல்லை. அதை அதிகப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஃபார்ம்யுலேஷன் உற்பத்தி செய்வது வட மாநிலங்களில்தான். அதற்காக இப்படி ஒரு இடர்ப்பாடு ஏற்பட்டு வருவதை மத்திய அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவோம்.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, since this question covers plastic industries, may I know from the Hon. Minister for Industries whether financial assistance is given to small cottage industries which use plastic wires, sheets, etc., for making chairs and other articles, as these industries are rapidly replacing village industries?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்த விவரங்கள் என்னிடத்தில் இல்லை. ஆனால் சிறு தொழில் நிர்வாகத்தில் இப்படிப்பட்ட மனுக்கள் வந்தால் பரிசீலிக்கலாம்.

திரு. ஏ. எம். இராஜா: இப்போதிருக்கிற ப்ளாஸ்டிக் 70 சென்டிகிரேட் உஷ்ணத்தைத்தான் தாங்குகிறது. 250 டிகிரி வரை தாங்கக்கூடிய டப்ளான் தொழிற்சாலையை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தனிக் கேள்வி போடவேண்டும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்களுக்கு ப்ளாஸ்டிக் தொழிலுக்கான லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்த விவரம் இல்லை. தூத்துக்குடியில் இப்பொழுது தொழிற்சாலை ஒன்று புதியதாகத் துவங்கப்பட்டிருக்கிறது என்பது ஞாபகம்.

### *Caustic Soda Plant*

* 87 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to set up a Caustic Soda Factory in the State in (i) Private and (ii) Public Sector; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ): பொதுத் துறையில் காஸ்டிக் சோடாத் தொழிற்சாலை நிறுவும் செயற்குறிப்பு எதும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இல்லை.

தனியார் துறைத் தொழில் அதிபர்கள் ஐவர் காஸ்டிக் சோடா தொழிற்சாலை நிறுவ இசைவுக் கடிதங்கள் தரக் கோரி மத்திய அரசுக்கு மனுச் செய்துள்ளார்கள். அவர்களில் ஒருவருக்கு இசைவுக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, the Hon. Minister is always saying that it is always good to encourage joint sector. Have they thought about the joint sector for this industry also?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்போது நம்மிடத்தில் ஒருவருக்கு இசைவுக் கடிதம்—லெட்டர் ஆப் இன்டென்ட் கொடுத்திருக்கிறார்கள். அங்கே ஜாயின்ட் செக்டாரில் துவங்கலாம் என்று சொல்கிறார்கள். அது பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. எ. வகாப்: இந்தமாதிரி காஸ்டிக் சோடாத் தொழிற்சாலை ஒன்று ராணிப்பேட்டையில் ஆரம்பிக்க வேண்டுமென்று மனுப் போட்டிருக்கிறார்களா? போட்டிருந்தால் அதற்கு இன்னமும் லெட்டர் ஆப் இன்டென்ட் கொடுக்கப்படவில்லை என்பதை மாநில அரசு அறியுமா? உடனடியாக அந்தப் பகுதி தொழிலதிபர்களின் கோரிக்கையை நிறைவேற்ற மத்திய அரசுக்கு மாநில அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அப்படி முன்வந்தால் நாம் சிபார்சு செய்யலாம்.

திரு. ஏ. க. துரைசாமி: காஸ்டிக் சோடாப் பற்றாக்குறை காரணமாக இன்றைக்கு ஐந்து மடங்கு, பத்து மடங்கு அதிகப் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, அரசாங்கமே சொந்தமாக காஸ்டிக் சோடா தயாரிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்போதுதான் இங்கே செய்ய அனுமதி கிடைத்திருக்கிறது.

திரு. ஆ. பரந்தாமன்: தமிழகத்தில் இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை ஆரம்பிக்க இசைவு கொடுப்பதற்கே பல சிரமங்கள், காலதாமதமாகிறது. ஆகவே சென்டிரல்-ஸ்டேட் இணைந்த செக்ரடேரியட் மாநிலத்தில் ஏற்படுத்த



வேண்டுமென்று மத்திய அமைச்சர் கூறியிருக்கிறாரே, அதைப்பற்றி ஏதாவது தகவல் நமது அரசுக்கு வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

### *New buildings for Munsiff Court at Tiruttani*

*88 Q.—THIRU A. PARANDHAMAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to house the District Munsiff's Court, Tiruttani in new buildings; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) திருத்தணி மாவட்ட முன்சீப் நீதிமன்றமும், திருத்தணி சப்-மாஜிஸ்திரேட் நீதிமன்றமும் தற்போது தனியார் கட்டிடமொன்றில் உள்ளன. இந்த நீதிமன்றங்களை அரசுக் கட்டிடமொன்றில் அமைக்கும் நோக்கத்துடன் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடம் ஒன்றைக் கட்டும் எண்ணம் ஆலோசனைக்கெடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இதற்குத் தேவைப்படும் நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு செங்கற்பட்டு மாவட்ட வருவாய் அதிகாரி செயற்குறிப்பைப் பணிந்தனுப்பியுள்ளார். இச் செயற்குறிப்பை அரசு பரிசீலனை செய்து வருகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: இப்படி எந்த எந்த இடங்களில் முன்சீப் கோர்ட்டுகள் வாடகைக் கட்டிடங்களில் இருக்கின்றனவோ அங்கெல்லாம் அரசாங்கம் சொந்தக் கட்டிடம் கட்ட ஒரு குழுவை அமைத்து ஆராய்ந்து பார்த்து நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அரசாங்க அலுவலகங்கள் நிறைய வாடகைக் கட்டிடத்தில் இருக்கின்றன. எல்லாவற்றையும் ஒரேயடியாக சொந்தக் கட்டிடங்களுக்குக் கொண்டுவர முடியாது.

திரு. இ. எஸ். தியாகராசன்: திருத்தணியில் முன்சிப் கோர்ட் கட்டிடம் கட்டும்போதே நீதிபதிகளுக்கும் க்வார்டர்ஸ் கட்டித்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தமிழ்நாடு முழுவதும் மாவட்ட அளவில் உள்ள நீதிபதிகளுக்கு வீடு கட்டுகிற திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அங்கு நிறைவேற்றப்படாமல் இருந்தால் நிறைவேற்றப்படும்.

திரு. அ. தேவேந்திரன்: தமிழ்நாடு முழுவதிலும் உள்ள நீதிமன்றங்களை பரவலாக டிசென்டிரலைஸ் செய்வதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டதே, அது எந்த நிலையில் இருக்கிறது?

மு.ப. 9-30 மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்தக் குழு பெரிய அறிக்கையைக் கொடுத்திருக்கிறது. அது பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், சமீபத்திலே ஒரு நீதிபதி பஸ்ஸிலே போய்க்கொண்டிருந்தபோது, அங்கு அவரால் தண்டிக்கப்பட்ட குற்றவாளியின் சொந்தக்காரர் பஸ்ஸிலேயே அந்த நீதிபதியை அடித்து விட்டார். ஆகவே, நீதிபதிகளுக்கு, டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட், சப்மாஜிஸ்டிரேட், இவர்களுக்கெல்லாம், வாகன வசதியும், வீட்டு வசதியும் உடனடியாகச் செய்து கொடுக்க அரசு ஏதாவது திட்டம் வகுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: வீட்டு வசதி, இந்தியாவிலேயே, தமிழ்நாட்டிலேதான் எல்லா மாவட்டங்களிலேயும் உள்ள நீதிபதிகளுக்குக் கொடுக்கப்படுகிறது. வாகன வசதி கொடுக்க முடியாது என்பது அங்கத்தினருக்கே தெரியும். காரணம், ஏராளமான செலவு அரசுக்கு ஏற்படும்.

## ஜெயங்கொண்ட சோழபுரத்திற்கு முன்சீப் நீதிமன்றம்

* 89 வினா—திரு. செ. சதாசிவம்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், ஜெயங்கொண்டசோழபுரத்தில் டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட் ஒன்று அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ): நீதிமன்றங்களின் விசாரணை அதிகார வரம்பு குறித்த குழுவின் அறிக்கையைப் பரிசீலனை செய்த பின்னர், ஜெயங்கொண்டசோழபுரத்தில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் ஒன்றை அமைப்பது குறித்து முடிவெடுக்கப்படும்.

திரு. செ. சதாசிவம்: பேரவைத் தலைவரவர்களே, ஜெயங்கொண்டத்திலே டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டுக்கான கட்டிடம் பார்த்து அமர்த்தினார்கள். மேலும், அரியலூரிலே தற்சமயம் அடிஷனல் டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட் ஒன்றை ஏற்படுத்தி, வக்கீல்கள் அமரும் அந்த இடத்திலே விசாரணை நடத்திக்



கொண்டிருக்கிறார்கள். பொதுமக்கள் நீண்ட தூரம் வரவேண்டியிருக்கிறது. ஆகவே, உடனடியாக ஜெயங்கொண்டத்திலே டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

## *Collection of Land Revenue and loans in Tiruttani taluk*

* 90 Q.—THIRU A. PARANDHAMAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether instructions have been given to the District Collector of Chingleput to postpone the collection of land revenue and loans in Tiruttani taluk consequent on the failure of monsoon rains; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) பல பகுதிகளில் வறட்சி நிலை நிலவுவது குறித்து முறையீடுகள் வந்ததன் பேரில் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள விவசாயிகளுக்கு நிவாரணமளிப்பது குறித்து அரசு ஆலோசித்தது. வருவாய் வாரியத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் செங்கற்பட்டு மாவட்டத்தில் திருத்தணி வட்டத்தில் ஜூலை 1972 முதல் டிசம்பர் 1972 வரை நில வரி மற்றும் அரசாங்கக் கடன்கள் வசூலிப்பதை நிறுத்தி வைக்கப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட ஆணையை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அனுப்பியதற்கு நன்றி. ஆனால், இப்பொழுது இந்த ஆண்டிற்குத் தேவையான வரி நிலுவையையும் கடன் பாக்கியையும் பயிர் வசூல் செய்துவிட்டு, பழைய பாக்கி இருந்தால் அதை வேண்டுமானால் தள்ளிப் போடப்படும் என்னும்படியான உத்தரவை அரசு இட்டிருக்கிறது என்று கருதுகிறேன். ஆனால், அங்கே வருவாய்த் துறை அதிகாரிகள் மிகக் கடுமையான வகையிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அதைத் தவிர்க்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அரசாங்கம், ஏற்கெனவே பிறப்பித்திருக்கிற உத்தரவு, '1382-ஆம் பசலி ஆண்டில் செலுத்த வேண்டிய கடன் தவணை நிலுவைத் தொகையைச் சேர்த்து ஓராண்டுத் தவணை நிலுவைத்

தொகையை அதற்கான வட்டியுடன் வசூலிக்கவேண்டும். ஆண்டுத் தவணைத் தொகை நிலுவை ஐந்து தவணைகளுக்கு மேலிருந்தால், நிலுவைத் தொகை முழுவதையும், ஒவ்வொரு பசலி ஆண்டிலும் செலுத்த வேண்டிய தவணை நிலுவைத் தொகையைச் சேர்த்து 1382-ம் பசலி ஆண்டிலிருந்து தொடங்கி ஐந்து சம ஆண்டுத் தவணைகளில் வசூலிக்க வேண்டும். இவ்வாறு செலுத்த கடனாளிகள் தவறும்போது கடன் நிலுவைகளைச் சுருக்க வகையில் வசூலிக்க ஆணை பிறப்பிக்க வேண்டும். இதுதான் அரசாங்கத்தினால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு. இதை மீறி யாராவது நடந்துகொள்வார்களானால், மாண்புமிகு உறுப்பினர்கள், அதைத் தெரிவித்தால், நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறும் போது, பழைய பாக்கிகள் பூராவும் அடுத்த ஆண்டிலிருந்து தவணைகளாக வசூலிக்கப்படுமென்று சொன்னார்கள். இப்பொழுதுள்ள பாக்கியைச் செலுத்திவிட்டு, அடுத்த ஆண்டிலிருந்து பழைய பாக்கியையும் சேர்த்துக் கட்டுவது விவசாயிகளுக்குக் கஷ்டமாக இருக்கும்—இப்பொழுது கஷ்டமாக இருப்பதால், பஞ்சம் ஏற்பட்டு, வசூல் செய்யாமலிருக்கின்ற தவணைகளை, கடைசி தவணையிலிருந்து வசூலிக்கப்படும் என்ற முறையை மாற்றி அமைத்து, இலகுவாக விவசாயிகள் கட்டக்கூடிய ஏற்பாடுகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அரசாங்கம் வசூலிக்க வேண்டிய கடனைப் பொறுத்து. ஏற்கெனவே உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக் கிறது. ஏற்கெனவே கொடுக்கவேண்டிய கடன் தவணையை நீடிப்பது, ஆண்டுத் தொகையோடு சேர்த்து 5 ஆண்டுகள் பாக்கி இருந்தால், நடப் பாண்டுத் தவணையையும் பழைய பாக்கியிலே ஒரு தவணையையும், 1+1 என்ற அடிப்படையிலே வசூலிப்பதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. கடன் தவணையைப் பூராவும் ஒத்திவைப்பது, 5 ஆண்டுக்குப் பிறகு வசூலிப்பது சாத்தியமல்ல.

**திரு. க. மு. இராசகோபால் :** தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட் டத்தில் போன ஆண்டு கடுமையான பஞ்சம் நிலவியது—மழை அதிகமாக இல்லை. ஆனால், திருத்தணி வட்டத்திற்கு மட்டிலும் மாவட்ட ஆட்சித் தலைவர் சிபாரிசு செய்தாரே, என்னுடைய தொகுதி பெரும் வறட்சிப் பகுதி. அதை ஒதுக்கியதற்குக் காரணம் ஏதாவது அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாவட்ட ஆட்சித் தலைவர் சிபாரிசு அல்ல. போர்டு ஆப் ரெவினியுதான் சிபாரிசு செய்திருக்கிறது. ரெவினியூ போர்டு மெம்பர்கள் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து அவர்கள் கொடுத்த அறிக்கையின்பேரில் தான் இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டது.

## *Bridge works in Ambasamudram area*

* 91 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state the stage at which the construction of the bridges across Gatana river and Vowal Odai in Ambasamudram in Tirunelveli district stands?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** இவ்விரு பால வேலைகளுக்கும் 1971-ம் ஆண்டு அரசு ஒப்புதல் அளித்தது. இவ்வேலைகளின் திருத்திய மதிப்பீடுகள் அரசு ஒப்புதலுக்காகத் தலைமைப் பொறியர் தயாரித்துக் கொண்டிருப்பதால் இன்னும் இவ்வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

## சிவகெங்கைசெட்டி ஊரணி

* 92 வினா—திரு. அ. தேவேந்திரன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகெங்கையில் உள்ள செட்டி ஊரணி கரையை உயர்த்தி ஆழப் படுத்தும் திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. அ. தேவேந்திரன் :** தலைவர் அவர்களே, 16, 17 ஆண்டுகளுக்கு முன்பு அங்கே தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டு 21 மைல் சுற்றளவிலே இருந்தாலும் மக்கள் செட்டி ஊரணிக் கரையிலேயிருந்து குடிநீர் எடுத்துக்கொண்டு போனார் கள். அந்தப் பகுதிக்கு மிக முக்கியமானது இந்த ஊரணி. எனவே மறுபடியும் பரிசீலித்து, அந்த செட்டி ஊரணிக் கரையை ஆழப்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவர் அவர்களே, சிவகங்கை நகராட்சிக்குச் சொந்தமான செட்டி ஊரணிக் கரை ஏறத்தாழ 115 ஏக்கர் பரப்பளவில் உள்ளது. அதில் தண்ணீர் தேங்கி இருக்கும் பகுதியின் அளவு

6.4 லட்சமாகும். வறட்சி நிவாரணம் ஏற்பட்டபொழுது ரூ. 1,50,000 செலவில் ஊரணித் தண்ணீரைக் கொண்டு நகராட்சிக்கு நீர் வழங்கும் திட்டம் துவங்கப்பட்டது. அதில் 8 குடிநீர்க் கேணிகள் பயன்படுகின்றன. வறட்சி நிவாரணப் பணிகள் மூலமாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலமாகத் தண்ணீர் வழங்கும் திட்டம் ரூ. 1 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(திரு. ஆ. பார்த்தமன் கேள்வி கேட்க எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிவகங்கை செட்டி ஊரணியைப் பற்றி மட்டும்தான் கேள்வி கேட்கவேண்டும்.

**திரு. ஆ. பார்த்தமன்:** தமிழ்நாட்டிலேயிருக்கிற சிறிய ஊர்கள் 'மைனர் இரிகேஷன்' ஸ்கீமின்கீழ் வருகின்றன. அவற்றை அங்கங்கே இருக்கிற ஊராட்சிகள்தான் பராமரிக்க வேண்டியிருக்கிறது. நிதிநிலை போதிய இல்லாமையால், ஊராட்சிகளால் அவற்றைப் பராமரிக்க முடியவில்லை. அவற்றையெல்லாம் பொதுப்பணித் துறையிலே இணைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** அதுபற்றி பரிசீலிக்கப்படும்.

## *House sites for landless in rural areas*

*93. Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the Central Government have given financial assistance to the State Government under the scheme for provision of house-sites for the rural landless; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) ஆம்.

(இ) தஞ்சாவூர் மாவட்டத்தில் நிலமற்ற கிராமத் தொழிலாளர்களுக்கு கீழே விவரித்துள்ளபடி வீட்டு மனைகள் வழங்கும் திட்டத்திற்காக இந்திய அரசு ரூ. 75.51 லட்சம் மானியம் அனுமதித்துள்ளது.

| | |
|---|---|
| (1) 548 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தும் செலவு. | ரூ. 25,07,000 |
| (2) மனைக்கு ரூ. 150 ஆக 33,692 மனைகளை மேம்படுத்தும் செலவு. | ரூ. 50,44,000 |
| | ரூ. 75,51,000 |



THIRU N. DENNIS: May I know whether the amount would be distributed by constituting a non-party Committee?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, அது தேவையில்லை என்று தோன்றுகிறது. ஏற்கெனவே அரசு அதிகாரிகள் அதைச் சரியாகவும், முறையாகவும், நல்ல முறையிலேயும் செய்து கொண்டிருக்கிறார்கள்.

**திரு. எஸ். வடிவேல்:** அவைத் தலைவர் அவர்களே, கொடுக்கப்படும் இந்த மத்திய அரசு, மாநில அரசுகளுடைய பணத்தை, மத்திய அரசு மட்டும் கொடுக்கிறதா, அல்லது மாநில அரசும் கொடுக்கிறதா? அப்படிக் கொடுக்கப்படும் மனைகளுக்கு எவ்வளவு கொடுக்கப்படுகிறது? ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் வீட்டு மனை 10 சென்டுக்குக் குறைந்து கொடுத்தால் வீடு கட்ட முடியாத நிலைமை இருக்கிறது. அதைப்பற்றி அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, வீடு கட்டுவதற்கு 100 சென்டுகள் கொடுத்தால்கூடத் தாங்கும். அதுவல்ல பிரச்சினை. இப்பொழுது நிலமே இல்லாதவர்களுக்கு நிலம் தருவது எப்படி என்பதுதான் பிரச்சினை. இதிலே ஒரு ஏக்கருக்கு ரூ. 5,000 வரையில் கையகப்படுத்து வதற்காக மத்திய அரசு ஒதுக்கியிருக்கிறார்கள். நிலத்தைப் பொறுத்த வரையில் இப்பொழுது 4 சென்ட்தான் கொடுக்கலாம் என்று மத்திய அரசு கூட என்றிருக்கிறது. ரூ. 10,000 வரையில் கட்டுகிற வீடுகளுக்கு 2½ சென்ட் கொடுக்கப்படுகிறது வீடு கட்டப்படுகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா:** தலைவர் அவர்களே, சொந்தமாக மனை இல்லாதவர்களுக்கு, அரிசனங்களாக இருந்தாலும், அரிசனங்கள் இல்லாதவர்களாக இருந்தாலும், மனைகள் கொடுக்கப்படுகின்றன. அந்த மனை 2 சென்ட் அளவு தான் இருக்கவேண்டுமென்று மத்திய சர்க்கார் கடுமையாகச் சொல்வதாகச் சொல்கிறார்கள். கிராமப்புறங்களிலே உள்ளவர்களுக்கு இந்த 2 சென்ட் போதாது. வீடு கட்டுவதற்கு, ஆடுமாடுகள் வைத்துக்கொள்ள இந்த 2 சென்ட் நிலம் போதாது என்பதால் மத்திய அரசு 2 சென்ட்தான் கொடுக்க வேண்டு

மென்று சொன்னால், 5 சென்ட்களாவது கொடுக்க, மீதியை மாநில அரசு கொடுக்க ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். மொத்தமுள்ள பங்கை மத்திய அரசு கொடுக்கவிட்டால், மாநில அரசாங்கம் கொடுக்க முயற்சி எடுக்குமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, நாங்கள் ஏற்கெனவே மத்திய அரசுக்கு 2 சென்ட் ஆக இருப்பதை 4 சென்ட் ஆக உயர்த்தித் தர வேண்டுமென்று எழுதியிருக்கிறோம். அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. 4 சென்ட் கொடுப்பதற்கு மத்திய அரசு ஒத்துக்கொள்ள வில்லை. அதிலே பெரும் பணப் பிரச்சினை இருக்கிறது. தஞ்சை போன்ற மாவட்டங்களிலே நிலம் கிடைக்காத பிரச்சினையும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** மத்திய சர்க்காருக்கு, 4 சென்ட் விதம் கொடுக்க வேண்டுமென்று எழுதியிருப்பதாகச் சொன்னார்கள் 2 சென்ட் கொடுத்ததற்குப் பிறகு 4 சென்ட் ஆக மாற்றிக் கொடுப்பது சிரமம். எனவே இப்பொழுதே 4 சென்ட் ஆகக் கொடுக்கக்கூடிய அடிப்படையிலே இந்த அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மத்திய சர்க்கார் பொதுப்பணி வீட்டு வசதித் துறை இணைச் செயலாளர் அவர்களை நாங்கள் இங்கே வரவழைத்து அவர்களுக்குத் தஞ்சை மாவட்டத்தையெல்லாம் சுற்றிக் காட்டியிருக்கிறோம். 3—2—1973-ம் தேதியன்று மத்திய சர்க்காருக்கு இதுகுறித்து ஒரு பெரிய கடிதத்தை எழுதியிருக்கிறோம். இப்பொழுது கொடுக்கப்படுகிற 150 ரூபாய் போதாது என்றும் மேம்பாட்டுச் செலவுகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டு மென்றும் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இதற்கான முயற்சிகள் வேகமாக எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் பணம் 75 லட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். குறிப்பிட்ட நபருக்கு குறிப்பிட்ட பணம்தான் அலாட் பண்ணப்படுகிறது, இடம் அலாட் பண்ணுவதில்லை என்று எனக்குத் தகவல் வந்திருக்கிறது. . பணத்திலே எவ்வளவு கொடுக்க முடியுமோ அதிலே இடம் வாங்கியதுபோக மீதம்தான் கொடுக்க முடியும் என்ற அடிப்படையிலேதான் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதாக அறிகிறேன். அந்த அடிப்படையிலே நடத்தப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** 150 ரூபாய் வரையிலும் தருகிறார்கள். அதற்கு மேலே தரவேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொண்டு இருக்கிறோம். அதைத்தான் கடிதத்திலே இந்தியப் பேரரசுக்கு எழுதி அதிகமாகத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். நிலத்தைக் கையகப்படுத்து வதற்குத் தொகை சரியாக வரவில்லை, 100 சதவீதம் மானியமும் அளிக்கப் படவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

**திரு. வை. பாலசுந்தரம்:** தலைவர் அவர்களே, ஏழைகளுக்கு நிலம் வழங்க சில தனியார் நிலங்களைக் கையகப்படுத்தும்பொழுது அவர்களுக்குத் தர வேண்டிய காம்பன்சேஷன் தருவதிலே தாமதம் ஏற்படுவதால் சிலர் கோர்ட் டுக்குச் செல்கிறார்கள். அப்படித் தாமதம் இல்லாமல் விரைவாக நிலத்தைப் பெற்று ஏழைகளுக்கு நிலங்களைக் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** சில இடங்களிலே தனியார்கள் நிலத்தை விட மறுக்கிற காரணத்தினாலே அவர்களை கோர்ட்டுக்குப் போக வேண்டிய சூழ்நிலைக்கு ஆளாகிறார்கள். அரசு வேகமாகச் செயல்படுகிறது. நானே பல மாவட்டங்களுக்குச் சென்று இந்த வேலையைத் துவக்கி வைத்திருக் கிறேன். வேலைகள் நடைபெறுகின்றன.

THIRU B. VENKATASWAMY: Sir, may I know from the Hon. Minister whether any detailed survey has been made about the landless poor in the land and whether the amount allotted by the Centre would be sufficient to them for constructing houses?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, இது வருவாய்த் துறை சம்பந்தப்பட்ட விவகாரம். இருந்தாலும் சொல்கிறேன். நிலமற்ற ஏழைகளுக்குத் தமிழக அரசே நிலத்தை வழங்கிக் கொண்டிருக்கிறது. இது வேறு திட்டத்தின்கீழ் வருகிறது.

THIRU B. VENKATASWAMY: Sir, I am referring to house-sites.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** வீட்டு மனைகளைத் தமிழக அரசே வழங்கிக்கொண்டிருக்கிறது. வருவாய்த் துறை மூலமாகத் தந்துகொண்டி ருக்கிறது. அதற்கான புள்ளி விவரங்கள் என்னிடத்திலே இல்லை என்று சொன்னாலும் தனிப்பட்ட கேள்வியின் மூலம் வருவாய்த் துறை அமைச்சரிட மிருந்து புள்ளிவிவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். வீடற்றவர்களுக்கு வீட்டு மனைகளைத் தமிழக அரசு தந்துகொண்டிருக்கிறது. இதற்கும் மத்திய அரசிற்கும் தொடர்பு இல்லை.

**திரு. கே. எ. வகாப் :** மனையற்ற ஏழைகளுக்கு மத்திய அரசு உதவி தருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த உதவி தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும் பயன்படுத்தப்படுவதாகச் சொன்னார்கள். மற்ற மாவட்டங்களிலும் ரெவின்யூ டிபார்ட்மென்ட் மூலமாக சர்வே எல்லாம் எடுக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். ஆகவே மற்ற மாவட்டங்களுக்கும் அந்தப் பணத்தை ஒதுக்க ஆவன செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தஞ்சை மாவட்டத்திற்குத் தனியான திட்டம் என்று இல்லை. தமிழ்நாடு முழுவதற்குமான திட்டமாகத்தான் இது இருக்கிறது. குடியிருப்புச் சட்டம் என்ற சட்டத்தை இந்த மாமன்றம் நிறைவேற்றியிருப்பதை உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். அந்த முறையிலே செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, திருச்சி, தர்மபுரி, ஏர்க்காடு துணை வட்டம் நீங்கலாக சேலம் மாவட்டம், இராஜபாளையம் துணை வட்டம் நீங்கலாக இராமநாதபுரம் மாவட்டம் ஆகிய 7 மாவட்டங்களுக்கு இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தஞ்சை மாவட்டத்திலே இந்தத் திட்டத்தின் அடிப்படையிலே எத்தனை ஏழைகள் பயன் அடைவார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தஞ்சை மாவட்டத்திலே இதுவரையிலே 1 லட்சத்து 14 ஆயிரத்து 895 பேர்களுக்கு வீட்டுமனைச் செலவை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று எழுதியிருக்கிறோம். ஆகவே அத்தனை பேர்களும் பயன்பெறுவார்கள்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, may I know the amount of grant made by the Centre for the house-sites for the rural landless for last year, that is 1972–73? Apart from that while granting house-sites, do they make any differentiation as between Harijans, backward classes, forward classes, etc., or whether it is only for the rural landless poor who are house-less also?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, குறிப்பாக இந்தத் திட்டம் முதலிலே ஆதித் திராவிட மக்கள் அதிகமாக உள்ள மாவட்டங்களிலே விஸ்தரிக்கப்பட்டு, பிறகு படிப்படியாக மற்ற மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டுமென்ற எண்ணம் இருந்துகொண்டிருக்கிறது. அந்த எண்ணத்தின் அடிப்படையிலே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அநேகமாக இந்த



7 மாவட்டங்களிலும் முடியக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. மற்ற மாவட்டங்களிலேயும் ஆதித் திராவிட மக்கள, அரிசன மக்கள் ஏழைகள் ஆகியவர்களுக்கு வீட்டுமனைகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, இந்த மத்திய சர்க்காருடைய திட்டத்தின்படி எத்தனை விவசாயிகளுக்கு இடம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது? அவர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கக்கூடிய முறையிலே ஏற்கெனவே கேரளத்திலே இருக்கிறமாதிரி அங்கே அப்படிப்பட்ட திட்டம் இருந்ததாக அறிவீர்கள், தமிழக அமைச்சர்களும் சென்று பார்த்தார்கள், அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கக்கூடிய திட்டம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தஞ்சாவூர் மாவட்டத்திற்கு புள்ளி விவரம் இருக்கிறது. 548 ஏக்கர் கையகப்படுத்துவதற்கு 25,07,000 ரூபாய் செலவாகியிருக்கிறது. ஒரு மனைக்கு 150 ரூபாய் விதம் மேம்பாட்டிற்காகக் கொடுத்தது 50,44,000 ரூபாய். ஆக மொத்தம் 75,51,000 ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தலைவர் அவர்களே, இந்த வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் கிராமத்திலே இருக்கின்ற நிலமில்லாத ஏழைகளுக்கு மட்டும் தான் உதவிகள் செய்யப்படுகின்றன. அதேபோல் முனிசிபல் நகரங்களில் உள்ள நிலம் இல்லாத ஏழைகளுக்கும் திட்டம் கொண்டுவந்து நிறைவேற்ற அரசு யோசிக்குமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் இது கிராமங்களுக்குத்தான் நிலமற்ற ஏழைகளுக்கு உதவிகள் செய்யப்படுகின்ற திட்டமாக இருக்கிறது. முனிசிபல் நகரங்களுக்கு இது தற்போது விஸ்தரிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது செங்கற்பட்டு மாவட்டத்திற்கு இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அங்கு எந்தப் பகுதிகளில் இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** செங்கற்பட்டு மாவட்டம் முழுவதற்கும் தான்.

## Flats for Film Directors

* 94 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the Tamil Nadu Housing Board has undertaken the construction of Housing flats for Film Directors at Kodambakkam in Madras City; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நடுத்தர வருமான தொகுதியினர்க்கான வீட்டு வசதி திட்டத்தின்கீழ் ரூபாய் 24.50 லட்சம் செலவில் சென்னை நகரில் கோடம்பாக்கத்தில் 68 இணைந்த வீடுகள் கட்டி தவணை முறையில் அளிக்கும் கருத்துருவுக்கு ஒப்புதல் அளித்திருக்கிறது. இந்த இணைந்த வீடுகள் தென்னிந்திய திரைப்பட இயக்குநர்கள் சங்கத்தின் உறுப்பினர்களில் வீட்டிற்கும் மனைக்குமான மொத்த மதிப்பில் கால்வாசித் தொகையை முன்பணமாகச் செலுத்த முன்வருபவர்களுக்குத் தரப்படும். ஒதுக்கீடு பெற்றவர்கள் மீதித் தொகையை வட்டியோடு 15 அல்லது 20 ஆண்டுகளில் செலுத்த வேண்டும். இதற்கான மாதத் தவணைகள் முறையே ரூ. 331, ரூ. 299 அளவில் இருக்குமென கணக்கிடப்பட்டுள்ளது.

THIRU N. DENNIS : Sir, they are all able to put up houses of their own and therefore the Government could concentrate more on providing houses for the less fortunate people.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, திரைப்பட இயக்குநர்கள் அநேகமாக லெஸ் பார்ச்சுனேட் என்ற வகையிலேதான் வருகிறார்கள்.

**திரு. கோவை செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திரைப்பட இயக்குநர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். பொதுவாக கேள்வி கேட்டவரும் பதில் சொல்கிறவரும் சினிமாக்காரர்களின் தேவைபற்றி இன்னும் கொஞ்சம் தெரிந்து கொண்டால் தேவலை. சினிமா டைரக்டர்களும் நடிகர், நடிகைகளும் இவ்வாறு செய்யப்படுகிற திட்டத்தின்கீழ் வருவதில்லை. ஏதோ ஒரு சில ஏழை டைரக்டர்களுக்கு வேண்டுமானால் பயன்தரலாம். லைட் பாய்ஸ், டெக்னிஷியன்ஸ், சவுண்ட் எஞ்சினியர்ஸ் போன்றவர்களுக்கு இப்படிப்பட்ட வசதிகள் செய்து கொடுத்தால் நலமாக இருக்கும். மேலும், பல ஆயிரக்கணக்கான,





கோடிக்கணக்கான ரூபாய்களைப் போட்டுவிட்டு, அம்போ என்ற நிலையில் இருக்கும் என்னைப்போன்ற புரொட்யூசர்களுக்கு அவைகளைக் கொடுத்தால் வசதியாக இருக்கும். தமிழ்நாட்டில ஒரு 'ஹாலிவுட்டை' உண்டாக்கினால் சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறேன். அதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, திரைப்பட உற்பத்தியாளர்களுடைய மனக்குறையைக் கேட்டார்கள். அவர்கள் படம் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு லைட் பாய்ஸ் போன்றவர்களின் தயவு தேவை என்று கருதுகிறேன். லைட் பாய்ஸ் மற்றும் அங்குள்ள எல்லோருக்கும் வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கருதினாலும், இயக்குநர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் என்னைச் சந்தித்துக் கேட்டார்கள். கோடம்பாக்கத்திலேயே, காலஞ்சென்ற நடிகர்களின் நிலங்களையும் வாங்கி அந்த இடத்திலே வீடு கட்டித் தாருங்கள் என்று கோரினார்கள். அது அவர்களுடைய தொழிலுக்கும் பக்கமாக இருப்பதால் அந்த மனைகள் வாங்கப்பட்டு வீடுகள் கட்டப்படுகின்றன. அவர்களிலே எல்லா இயக்குநர்களும், பலர் கருதிக்கொண்டு இருப்பதைப்போல பல படங்களைத் தயாரிப்பவர்கள் இல்லை. அவ்வப்போது சான்ஸ் கிடைக்கும்பொழுது மட்டும் தயாரிப்பவர்கள். அவர்கள் அதிக வருவாய் உடையவர்கள் அல்லர்.

உற்பத்தியாளர்களைப்பற்றிச் சொன்னார்கள். கோரட்டூரில் 81,000 ரூபாய்க்கு, 71,000 ரூபாய்க்கு பல திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. திரு. செழியன் அவர்கள் முன்பே விரும்பியிருக்க வேண்டும். காலங்கடந்து விரும்பியிருக்கிறார்கள். அடுத்த திட்டத்தில், அவர்கள் விரும்பினால் உற்பத்தியாளர்களுக்கும், இலட்சக்கணக்கான விலை மதிப்புள்ள வீட்டு மனைகளை அதற்கான மொத்தத் தொகையையும் கொடுத்தால்—மொத்தத் தொகையையும் கொடுக்க வேண்டும்—வீடுகளைக் கட்டித் தரத் தயாராக இருக்கிறது.

### சென்னை—தாமரைப்பாக்கம் பேருந்து வழித்தடம்

* 95 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் வட்டம், தாமரைப்பாக்கம் இணைப்புச் சாலைக்கு, சென்னை உயர்நீதிமன்றத்திலிருந்து புதிய பேருந்துகள் விடும் திட்டத்தினை விரைந்து நிறைவேற்ற எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

(இ) இது எப்போது நிறைவேற்றப்படும் ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) & (இ) : தாமரைப்பாக்கம் இணைப்புச் சாலைக்கு நாள் ஒன்றுக்கு 10 வழித் தடங்களில் 15 பேருந்துகள் 68 நடைகள் செல்கின்ற காரணத்தால், பேருந்துகளின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கு எவ்வித நியாயமுமில்லை.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவரவர்களே, 68 நடைகள் தாமரைப் பாக்கத்திற்கு இந்தப் பேருந்துகள் சென்றாலும், அங்கு நெரிசல் அதிகமாக இருப்பதால் தாமரைப்பாக்கம் கூட்டுச் சாலைக்கு என்று தனிப் பேருந்துகளை சென்னையிலேயிருந்து விடுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளும் அளவில் பேருந்து வசதிகள் இல்லை.

### தங்கசாலை—போந்தவாக்கம் பேருந்து வழித்தடம்

* 96 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை தங்கசாலைக்கும் போந்தவாக்கத்திற்குமிடையே ஈகுவார் பாளையம் வழியாகச் சென்று கொண்டிருந்த தனியார் பேருந்து நிறுத்தப்பட் டுள்ளதால் இவ்வழித் தடத்தில் பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்து விடும் செயற்குறிப்பு உண்டா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** 1—6—1973 முதல் சென்னையி லிருந்து (பேசின் பிரிட்ஜிலிருந்து) கும்மிடிபூண்டி, ஈகுவார்பாளையம் வழி யாகப் போந்தவாக்கத்திற்குப் புதிய வழித்தடத்தில் பேருந்து விடப்பட் டுள்ளது.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவரவர்களே, இந்தப் பேருந்தை 1-6-1973 முதல் விட்டதற்கு நன்றி சொல்லும் நேரத்தில், அதில் நெரிசல் அதிகமாக இருப்பதால் வேறொரு பேருந்தையும் அதற்கு இணையாக விடுவதற்கு அரசு முன்வருமா ?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, there is no such proposal at present.



### திருவாவடுதுறை ஆதீனத்தின் கீழுள்ள நிலங்கள்

* 97 வினா—**திரு. ச. சங்குமுத்து தேவர் :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தாலுகா, கோடாரங்குளம் இனாம் கிராமத்தில், திருவாவடுதுறை ஆதீனம் மேற்பார்வையில் உள்ள மொத்த நஞ்சை, புஞ்சை நிலங்கள் எவ்வளவு ?

(இ) ஆதீனகர்த்தர், பயிரிடும் விவசாயிகளுக்கு அடையோலை போட்டுக் கொடுத்தது எத்தனை ஏக்கர் ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** (அ) நஞ்சை நிலங்கள் மொத்தம் 256 ஏக்கர் 33 சென்டு.

புஞ்சை நிலங்கள் மொத்தம் 274 ஏக்கர் 99 சென்டு.

புஞ்சை நிலங்

(இ) எல்லா நஞ்சை நிலங்களையும், சாகுபடிக்கு ஏற்ற களையும் தமிழ்நாடு பொறுப்பாவணங்கள் (வேளாண்மை நிலங்களின் நிர்வா கத்தை ஒழுங்குபடுத்தும்) சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்ட எண் 57/61) குத்தகைப் பத்திரங்கள் மூலம் சாகுபடிதாரர்களுக்கு விடப்பட்டுள்ளன.

### திருப்புடைமருதூர் கோயில் நிதி

* 98 வினா—**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், திருப்புடைமருதூர் கிராமத்திலுள்ள கோயில் நிதியிலிருந்து அங்கு ஒரு வைத்தியசாலை ஆரம்பிக்கும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், விவரம் யாது ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** தலைவரவர்களே, இந்தக் கிராமத்தில் கிட்டத்தட்ட ஐந்து மைல் சுற்று வட்டாரத்தில் எந்த வைத்திய வசதியும் இல்லை. அங்குள்ள மக்கள் பெரும்பாலும் விவசாயத்தைச் செய்பவர்கள். எனவே, அந்தக் கோயிலின் நிதியிலிருந்து வைத்தியசாலை அமைப்பதற்கு அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, அங்கு சித்த வைத்திய மருத்துவ மனையை ஏற்படுத்த அந்தக் கோயிலின் நிதிநிலையைப்

பற்றி மதுரை துணை ஆணையரிடமிருந்து விவரம் கேட்கப்பட்டுள்ளது. கோயிலின் நிதி போதுமானதாக இருந்தால் எதிர்காலத்திலே அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

### நூல்களை வெளியிட உதவி

* 74 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

எழுத்தாளர்களின் நூல்களை அரசே தனி அமைப்பின் மூலம் ஆராய்ந்து தரமான நூல்களை அச்சிடுவதற்கும் விற்பனை செய்வதற்கும் தனித் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** எழுத்தாளர்கள் தங்கள் நூல்களை வெளியிடுவதற்குத் தமிழ் வளர்ச்சி இயக்குநர், அரசின் சார்பில், நிதியுதவி அளிக்கும் திட்டம் ஒன்று செயல்பட்டு வருகிறது.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவரவர்களே, எழுத்தாளர்களே நிறைந்திருக்கும் இந்த அமைச்சரவையின் காலத்திலாவது Southern Language Book Trust போன்ற அமைப்பை உருவாக்கி நல்ல கட்டுரை நூல்களை, கவிதை நூல்களை எழுதும் எழுத்தாளர்களின் எழுத்துக்களையெல்லாம் சேகரித்து, அரசே அவற்றை வெளியிட, தனி நிறுவனத்தை ஏற்படுத்த முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அப்படிப் பட்ட யோசனை இப்பொழுது இல்லை.

**திரு. கோவை செழியன் :** பேரவைத் தலைவரவர்களே, தரமான எழுத்தைப் பற்றியும், தரமான புத்தகங்களைப்பற்றியும் கேள்வி கேட்டார்கள். ஆனால், இன்றைக்குக் குடும்பப் பத்திரிகை என்று சொல்லக்கூடிய பல பத்திரிகைகளில் ஆபாசமான படங்களையும், ஆபாசமான கதைகளையும் எழுதுகின்றார்கள். நான் செக்ஸைப்பற்றிச் சொல்லவில்லை. கம்பனும், வள்ளுவனும் சொல்லாத செக்ஸைப்பற்றி இவர்கள் சொல்லப் போவதில்லை. ஆனால், ஒழுக்கக்கேடான பல நூல்களை எழுதுகிறார்கள். அவைகளையும் தடை செய்யுமா என்று கேட்டுக்கொண்டு, தலைவரவர்களே, உங்கள் மூலம் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் சில புத்தகங்களைப் படித்திருக்க மாட்டார்கள். சில புத்தகங்கள் பிரச்சினைகளைப் பார்த்துப் போடாமல், *

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி நேரத்தில் கேள்வியைப் போடுங்கள், மற்ற விவரங்களைப் பேசக்கூடாது.

**திரு. கோவை செழியன் :** இப்படி அசிங்கமான புத்தகங்களைப் போடுகிறார்கள். அவர்களை நடுரோட்டில் வைத்துச் சுட்டால் என்ன என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, ஆபாசமான புத்தகங்களை அவ்வப்பொழுது காவல் துறையினர் பறிமுதல் செய்து வருகிறார்கள். அப்படிப்பட்ட புத்தகங்களை வெளியிடுபவர்கள்மீது நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். ஆனால் கேள்வியில் கேட்டிருப்பது, தரமான நூல்களை எழுதுபவர்களுக்கு உதவி அளிக்கப்படுமா என்ற கருத்தைக் கேட்டிருக்கிறார்கள். இதற்கான திட்டம் அரசாங்கத்தின் நடைமுறையில் இருந்து வருகிறது.

### *Scout Movement*

* 75 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state the steps taken to expand the Scout Movement in this State?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாநிலத்திலுள்ள எல்லா இடைநிலை மற்றும் ஆரம்பப் பள்ளிகளில் சாரணத் திட்டத்தினை அமுல் செய்ய சம்பந்தப்பட்ட ஆய்வு அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இது குறித்து முன்னேற்றத்தினையும் அவ்வப்போது தெரியப்படுத்த அவர்கள் வேண்டப்பட்டுள்ளனர். தவிர, சென்னையிலுள்ள மாநில பாரத சாரணர், மற்றும் சாரணியர் இயக்க (Bharat Scouts and guides) தலைமையிடத்தின் தொடர்போடு சாரண ஆசிரியர்கள் மற்றும் சாரணியர் தலைவிகளுக்குத் தக்க பயிற்சி அளிக்குமாறும் வேண்டப்பட்டுள்ளனர். இத் திட்டம் நன்கு செயல்பட தங்களது ஒத்துழைப்பைத் தருமாறு ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களும் வேண்டப்பட்டுள்ளனர்.

**THIRU N. DENNIS :** May I know, Sir, whether the Government would take steps to make it compulsory?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இது கட்டாயப்படுத்தும் தன்மையில் இல்லை. ஆனால் எல்லா உயர்நிலைப்பள்ளிகளிலும், நடுநிலைப் பள்ளிகளிலும் சாரணர், சாரணியர் இயக்கத்தை அமைக்க வேண்டுமென்ற முயற்சியை மேற்கொண்டு வருகிறது. அதற்கான திட்டம் பள்ளிக் கல்வி இயக்குநரிடம் கேட்கப்பட்டுள்ளது. இதற்கு ஒதுக்கும் பணம் குறைவாகத்தான் இருக்கிறது. அந்தத் திட்டம் வந்ததற்குப் பிறகு நிதி உதவியையும் செய்து எல்லாப் பள்ளிகளிலும் இந்த சாரணர் சாரணியர் இயக்கம் இருக்க வேண்டுமென்ற கொள்கையை அரசு கொண்டிருக்கிறது. அதற்கான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது.

## *New building for school at Ashok Nagar*

* 76 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether any new building has been constructed for the Corporation School at Ashok Nagar during 1972–73; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) புதியதாகக் கட்டப்பட்ட இக்கட்டிடம் ஏற்கெனவே இவ்விடத்தில் உள்ள மூன்று வகுப்பறைகளைக் கொண்ட பள்ளிக்கான இணைப்பாகும். புதிதாகக் கட்டப்பட்டுள்ள இக் கட்டிடத்தில் நான்கு வகுப்பறைகளும், தலைமை ஆசிரியரின் அறையும், நீராடி கழிப்பிடமும் உள்ளன. இக்கட்டிடத்தின் மொத்தத் தரைப் பரப்பு 2,562 சதுர அடிகளாகும்.

THIRU N. DENNIS: May I know the basis adopted for giving priority to put up new School buildings?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அந்தந்த மாவட்டத்திலேயுள்ள தலைமைக் கல்வியதிகாரிகள் அந்தந்தப் பள்ளிகளின் தன்மைகளையெல்லாம் ஆராய்ந்து கூறுகிறார்கள். சில ஊர்களில் ஈட்டு மான்யம் பெற்று தொகையாக வழங்குகிறார்கள். ஆகவே, மாவட்ட தலைமைக் கல்வி அதிகாரிகள் ஆராய்ந்து எங்கெங்கு தேவைப்படுகிறது, எந்தெந்த இடத்திலே நிதி உதவி பெற முடியாமல் இருக்கிறது என்று கண்டறிந்து அதற்குத் தகுந்த மானியம் அளிக்கப்படுகிறது, அதற்கேற்ற கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.



THIRU K. M. SUBRAMANIAM: Since there are many plots reserved for educational institutions in Ashok Nagar and Kalaignar Nagar and also since many are not occupied, will the Hon. the Minister for Education think of leasing them out to anybody or any authority who comes forward to start educational institutions in that area?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்புகள் இல்லை. ஆனால் எந்தெந்த இடங்களில் எதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று கண்டறிந்து, மாநகராட்சி பள்ளி வைக்கவா அல்லது பள்ளிக்கூடங்களுக்கா என்று கண்டறிந்து மாநகராட்சியோ அல்லது அரசோ பள்ளி வைக்கவில்லை என்று ஏற்பட்டால், பள்ளிக்கூடத்திற்கு என்று போதிய இடம் ஒதுக்கப்பட்டிருந்தால், அதை வாடகைக்கு விடலாமா என்று யோசிக்கலாம். அம்மாதிரி மாநகராட்சிப் பள்ளியோ, அரசாங்கப் பள்ளியோ வருகிறதா என்று பார்க்க வேண்டும். அவை இரண்டும் வரவில்லை என்றால் தனியார் பள்ளிக்கூடம் வைக்க விண்ணப்பிப்பார்களேயானால் அதைப்பற்றி யோசித்து, ஆராய்ந்து முடிவு செய்யலாம்.

**திரு. நா. காசிராமன் :** இந்தக் கட்டடம் எத்தனை ரூபாய்க்கு யாருக்குக் காண்டிராக்ட் கொடுக்கப்பட்டது? மு.ப. 10-00

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இந்தக் கட்டடத்திற்கு ஆன மொத்தச் செலவு 64,727 ரூபாய். காண்டிராக்டர்கள் பற்றிய விவரங்கள் இல்லை. தனிக் கேள்வி போட்டால், பதில் சொல்ல முடியும்.

**திரு. வை. பாலசுந்தரம் :** பெரும்பாலான மாநகராட்சிப் பள்ளிகள் வாடகைக் கட்டடத்தில் நடத்தப்படுகின்றன. கொடுக்கப்பட்ட வாடகைப் பணத்தைப் பார்த்தால் பள்ளிக்கான கட்டடத்தையே வாங்கி விடலாம் போலிருக்கிறது. ஆகவே, மாநகராட்சிகளுக்கு சொந்தமாகக் கட்டடம் கட்டித் தரும் நிலையை அரசு உருவாக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இப்போதே மாநகராட்சி மன்றங்கள் எங்கெங்கு கட்டடம் கட்ட வேண்டுமென்று கேட்டிருக்கிறதோ, அங்கெல்லாம் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அது தவிர, சில குறிப்பிட்ட இடங்களை வாங்குவதைத் தவிர, வேறு வழி இல்லை என்று தெரிகிறபோது, அந்தக் கட்டடத்தைக் கையகப்படுத்துவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாநகராட்சி மன்றம் எந்தெந்தக் கட்டடங்களைக் கையகப்படுத்த வேண்டுமென்று கோருகிறார்களோ, அதற்கு உதவி செய்கிற முறையில் அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**திரு. எஸ். வடிவேல் :** புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு ஒரு மாதத்தில் விழுந்து விடுகின்றன. பொன்னேரியில் லட்சக் கணக்கில் செலவழிக்கப் பட்ட பள்ளிக் கட்டடம் விழுந்து விட்டது. அந்தக் கட்டடத்தைக் கட்டிய காண்டிராக்டர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் கூறுவது பற்றித் தகவல் இல்லை. காண்டிராக்டர்களுக்குச் சிலபல நிபந்த னைகள் போடப்படுகின்றன. அப்படி நிபந்தனைகள் இருந்தால், அரசு நடவ டிக்கை எடுக்க முயற்சி செய்யும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** மாநகராட்சி மன்றத்தில் கையகப்படுத்த வேண்டுமென்று ஒரு காலத்தில் தீர்மானம் போட்டு எடுத்துக் கொள்ளப்பட்ட கட்டடங்களைக் கூட பின்னால் வேண்டாமென்று சொல்லக்கூடிய அளவுக்கு சூழ்நிலைகள் இருக்கும்போது அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை அரசு துருவிப் பார்த்து நியாயம் வழங்க வழிவகை செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாநகராட்சி மன்றம் என்ன விண்ணப்பத்தை அளிக்கிறதோ, அதை நிறைவேற்ற வேண்டியவா களாக இருக்கிறோம். முதலில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லி விட்டுப் பின்னால் வேண்டாமென்று சொல்லுகிறார்கள். ஏன் பிறகு எடுக்க வேண்டாமென்று சொல்லுகிறீர்கள் என்று நானே கேட்டு வற்புறுத்தி இரண் டொரு கட்டடங்களை எடுத்துத்தான் தீரவேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி அனுப்பச் சொல்லியிருக்கிறேன். அந்த வகையில் தேவையை அனுசரித்து கல்வி இலாகா அதிகாரியையும், மாநகராட்சி ஆணையரையும் கருத்துத் தெரிவிக்க கோரி, அந்த வகையில் கட்டடங்களைக் கையகப்படுத்த வேண்டுமென்று அரசாங்கம் மாநகராட்சிக்கு வற்புறுத்திச் சொல்லி வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கோவை செழியன் அவர்கள் தம் துணை வினாவில் மகளிர் இருவர் பெயரைக் குறிப்பிட்டார். அப்பெயர்கள் இந்த அவை நிகழ்ச்சிக் குறிப்பில் இருந்து நீக்கப்படுகின்றன.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட் டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]



## (2) கவன ஈர்ப்பு.

### (அ) சேலம் உருக்காலைத் திட்டத்தை கால அட்டவணைப்படி செயல்படுத்துவதில் ஏற்பட்ட தாமதத்தைக் குறித்து

THIRU N. DENNIS : Sir, I call the attention of the Hon. Minister for Industries to a matter of urgent public importance, namely, the delay in the execution of the Salem Steel Plant according to the time table.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்த அறிவிப்பு சேலம் உருக்காலைத் திட்டத்தை கால அட்டவணைப்படி செயல்படுத்துவதில் ஏற்பட்ட தாமதத்தைக் குறித்தாகும். மாண்புமிகு உறுப்பினர் ஒருவேளை 1973-ம் வருடம் ஜூலை திங்களில் முதல் தேதி பைனான்சியல் எக்ஸ்பிரசில் (Financial Express) மத்திய அரசு திட்டத்தில் செய்யப்போகும் தீவிர வெட்டினால் சேலம் உருக் காலைத் திட்டம் நிறுத்தப்படலாம் என்று வெளியிடப்பட்ட செய்தியை மனதில் கொண்டுள்ளார் போலும். இந்தச் செய்தியைப் பார்த்தவுடன் தமிழக முதல்வர் இந்தியப் பிரதமருக்குப் பத்திரிகை செய்தியை ஈர்ப்பு செய்து தந்தி கொடுத்துள்ளார். அதில் ஏற்கெனவே எடுத்த முடிவின்படி சேலம் உருக்காலைக்கான திட்ட ஒதுக்கீடுகளில் வெட்டேதும் இல்லாமல் திட்டத்தை விரைவில் செயல்படுத்த வேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளார். மத்திய அரசிடமிருந்து பதில் ஏதும் வரவில்லை. இந்த அரசிடம் உள்ள தகவலின் படி சேலம் உருக்காலை நிறுவனத்தினால் திட்டத்தைச் செயல்படுத்த எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன என தெரிகின்றது.

THIRU N. DENNIS : Sir, may I know whether the acquisition proceedings have been completed?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஏற்கனவே இந்த மன்றத்தில் சொல்லப் பட்டது போல் 10,000 ஏக்கராவுக்குமேல் நோட்டிபை செய்திருக்கிறோம். அதற்கு எவ்வளவு பணம் வேண்டுமோ, அதைத் தந்து உடனடியாக எடுத்துக் கொடுக்க வேண்டுமென்று சொன்னாலும் உடனடியாக எடுத்துக் கொடுக்கிறார்கள். இப்போது எவ்வளவு தேவையோ, அவ்வளவும் எடுத்துக் கொடுத்து விட்டோம்.

### (ஆ) எண்ணூர் அனல் மின்நிலையத்தில் 31—7—1973 அன்று ஏற்பட்ட தீ விபத்தும் அதனால் ஏற்பட்ட சேதம் குறித்தும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் கே. டி. கே. தங்கமணி, என். டென்னிஸ், ஏ. சுப்பிரமணியம், எம். சுரேந்திரன், டாக்டர் ஹாண்டே ஆகியோர் மின்சாரத் துறை அமைச்சரின் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத்

தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். யாராவது ஒருவர் அதைப் படித்துவிட்டால் போதும்.

THIRU K. T. K. THANGAMANI : Sir, under rule 41 of the Assembly Rules, I call the attention of the Hon. Minister for Electricity to a matter of urgent public importance, namely. the outbreak of fire in the Ennore Thermal Plant including burning of a transformer on 31st July 1973 resulting in loss of property worth more than Rs. 50 lakhs.

*மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :* தலைவர் அவர்களே, எண்ணூர் அனல் மின் நிலையத்தில் இருக்கும் நான்காவது (110 மெகாவாட்) பிரிவின் வோல்டேஜ் திறனை உயர்த்துவதற்காக நிறுவப்பட்டுள்ள 12 MVA 11 K.V. 230 KV திறனுடைய மூன்று ஒற்றை நிலை மின் அழுத்த மாற்றிகளில் (Single phase transformers) ஒன்றில் குறைபாடு ஏற்பட்டுள்ளதாக 18—7—1973 அன்று கண்டு பிடிக்கப் பட்டது. மின் அழுத்த மாற்றியில் 230 கிலோ வாட் புஷிங்கில் (இருசு சுழல்வதற்கான உலோகக் கட்டையில்) இந்தக் குறைபாடு ஏற்பட்டிருந்தது. இந்தக் குறைபாடு நீக்கப்பட்டது. பின்னர் பொதுவாகச் சோதனை செய்தும், மின் அழுத்த மாற்றியில் எண்ணெயிட்டும், வரையறுத்த சோதனைகளைச் செய்தும் இறுதியில் மின் அழுத்த மாற்றி 31—7—1973 அன்று 1 மணிக்கு மீண்டும் செயல்பட்டது. இது எவ்வாறு செயல்படுகிறது என்பது பற்றி ஒரு மணி நேரத்திற்கு ஒரு தடவை கவனிக்கப்பட்டு வந்தது. பிற்பகல் சுமார் 12-15 மணி அளவில், அதே மின் அழுத்த மாற்றியில் தீ விபத்து ஏற் பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. அச்சமயத்தில் காற்று வீசியதன் காரண மாக, மத்தியில் உள்ள பிரிவின் இரு பக்கங்களிலும் உள்ள பிற பிரிவுகளுக்குத் தீ பரவியது. தீயணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அனல் மின் நிலையத்தைச் சேர்ந்த பணியாளர்கள், தொழிலாளர்கள், தீயணைப்புப் படையினர் ஆகியோரது உதவியுடனும், இந்த நிலையத்திற்குப் பக்கத்திலுள்ள தொழிற்சாலைகளில் இருப்போரின் உதவியுடனும் பிற்பகல் சுமார் 2.30 மணி அளவில் தீ அணைக்கப்பட்டது. இதில் பணியாளர்கள் எவரும் இறக்கவில்லை. எவருக்கும் காயமேதும் ஏற்படவில்லை. மூன்று பிரிவுகள் அனைத்தும் பெரிதும் எரிந்து போயின. இது வெளிப்படையாகவே தெரிந்தது. இதனால் ஏற்பட்ட சேதம் ரூ. 30 லட்சமென மதிப்பிடப்படுகிறது. தீ விபத்து பற்றிய புலனாய்விற்கும் எரிந்து போன மின் அழுத்த மாற்றிகளுக்குப் பதிலாக புதிய மாற்றிகளை நிறுவ ஏற்பாடு செய்வதிலும் உதவி செய்ய வல்லுநர்களை உடனடியாக அவ்விடத்திற்கு விரைந்து அனுப்பி வைக்குமாறு,



மின் அழுத்த மாற்றிகளை வழங்குபவர்களாகிய போபால், திருவாளர்கள் பார்த் ஹெவி எலெக்ட்ரிக்கல்ஸ் நிறுவனத்திற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் உட னடியாகத் தகவல் அனுப்பியுள்ளது. இம்மாநிலத்தில் தற்போதுள்ள மின் சக்தி நிலைமை இத் தீ விபத்தினால் பாதிக்கப்படவில்லை.

வருங்காலத்தில் இத்தகைய விபத்துக்களைத் தவிர்க்க இயன்ற நடவடிக்கை கள் அனைத்தும் எடுக்கப்பட வேண்டியது அவசியமென்றும், அப்போதுதான் விரயத்தைத் தவிர்ப்பதோடு மின் உற்பத்தியைப் பெருக்க முடியும் என்றும் அரசு கருதியுள்ளது. அதன்படி, இத் தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணங்கள் குறித்து ஆய்வு செய்து அத்தகைய விபத்துக்கள் மீண்டும் நேரிடாமல் தடுப்பதற்கான தகுந்த நடவடிக்கைகள் பற்றி கருத்துத் தெரி விக்கக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. மின் நிலையத்தை இயக்குவது தொடர்பாக அவசியமெனக் கருதக்கூடிய முக்கியமான கூறுகள் பற்றியும் இக்குழு ஆய்வு செய்து, மின் நிலையம் சிறந்த முறையில் செயலாற்றவும், அடிக்கடி குறைபாடுகள் ஏற்படுவதைத் தவிர்க்கவும் பொருத்தமான பரிவுரை களைச் செய்யும். இக்குழுவில் பின்வரும் உறுப்பினர்கள் இருப்பர் :—

1. திரு. என். மகாலிங்கம், உறுப்பினர், திட்ட ஆணைக் குழு, சென்னை-1. —தலைவர்
2. தலைமைப் பொறியாளர் பதவித்தரத்தில் பம்பாய், திருவாளர்கள் டாட்டா ஆலோசகர்கள் நிறுவனத் தைச் சேர்ந்த பிரதிநிதி ஒருவர். —உறுப்பினர்
3. திரு. சி. வேங்கடராமன், கண்காணிப்பாளர். மின் உற்பத்தி, நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகம், நெய்வேலி. —உறுப்பினர்

குழுவின் ஆய்வு வரம்பு பின்வருமாறு :—

(i) எண்ணூர் அனல் மின் நிலையத்தில் 31—7—1973 அன்று ஏற்பட்ட தீ விபத்திற்கான காரணங்கள் பற்றி விசாரித்து அதுபற்றிய முடிவைத் தெரிவித்தல்.

(ii) இத் தீவிபத்தினால், அனல் மின் நிலையத்தில் உள்ள இயந்திரங் களுக்கும் தளவாடங்களுக்கும் எந்த அளவுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது என்பதை மதிப்பிடுதல்.

(iii) சேதமடைந்த பிரிவைக் கூடிய விரைவில் மீண்டும் செயல்பட வைப்பதற்கு அவசியமான வழிமுறைகள் பற்றிக் கருத்துத் தெரிவித்தல்.

(iv) இத்தகைய விபத்துக்கள் மீண்டும் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்குரிய நடவடிக்கைகள் பற்றிக் கருத்துத் தெரிவித்தல்.

(v) அனல் மின் நிலையத்திலுள்ள தீ அணைப்பு ஏற்பாட்டை மேம்படுத்த வேண்டியது அவசியமாயின் அவ்வாறு மேம்பாடுகள் செய்வது பற்றிக் கருத்துத் தெரிவித்தல்.

(vi) இவ்விபத்துக்கு இடை நிகழ்வான அல்லது தொடர்பான வேறு எதனையும் பற்றி ஆய்வு செய்து தகுந்த பரிவுரைகளைச் செய்தல்.

(vii) மின் நிலையத்தை இயக்குவது தொடர்பாக அவசியமெனக் கருதக்கூடிய முக்கியமான கூறுகள் பற்றி ஆய்வு செய்து மின் நிலையம் சிறந்த முறையில் செயல்படுவதற்கான பரிவுரைகளைச் செய்தல்.

(viii) அனல் மின் நிலையம் செயல்படுவது பற்றி மேற்பார்வை செய்யும் ஏற்பாட்டை வலுப்படுத்தும் பொருட்டு, தற்போதுள்ள நிர்வாக, நிறுவன அமைப்பில் குறைபாடுகள் எவையேனுமிருப்பின் அவை பற்றித் தெரிவித்தல்.

இக்குழு அமைக்கப்பட்ட நாளிலிருந்து இரு வாரங்களுக்குள் தனது அறிக்கையை அனுப்புமாறு குழு கேட்கப்பட்டுள்ளது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இந்த எண்ணூர் தெர்மல் நிலையம் 340 மெகாவாட் காப்பாசிடி. தெர்மல் ஸ்டேஷனை உருவாக்க வேண்டுமென்ற வகையில் முதல் இரண்டு 60—60 மெகாவாட்டாகவும், மூன்றாவது 110 மெகா வாட்டாக சென்ற ஆண்டும் கமிஷன் செய்யப்பட்டு விட்டதாகச் சொல்லப்பட்டது. இப்போது அமைச்சர் அவர்கள் தெரிவித்தது நான்காவது யூனிட். 110 மெகாவாட். இது கடந்த மார்ச் மாதத்திலேயே கமிஷன் செய்யப்படுவதாகச் சொல்லப்பட்டதே, அது கமிஷன் செய்யப்பட்டதா? அப்படிக் கமிஷன் செய்யப்பட்ட நேரத்திலேதான் இந்த விபத்து ஏற்பட்டதா? அப்படி விபத்து ஏற்படும்போது லோடு அதிகமாகப் போட்ட காரணத்தால்தான் ஏற்பட்டது என்று பத்திரிகைகளில் செய்தி வந்ததே. அப்படியானால் அதற்காகப் போடக்கூடிய ஒரு குழுவிலே இதுசம்பந்தமாகத் தெரிந்தவர்களைப் போடாமல் சம்பந்தம் இல்லாதவர்கள் போடப்பட்டதுதான் காரணமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் விளக்கத்தின் பேரில் கேள்விகள் போடலாமே தவிர, புதிய கருத்துக்களைச் சொல்லக் கூடாது.





THIRU K. T. K. THANGAMANI : There is no definite reply. We have got a report that the fourth unit of Ennore Thermal Scheme would be commissioned in March 1973. What we find is that the fourth 150 MW unit when it is just being commissioned, this fire has broken out. Now the Hon. Minister says there has been no loss of production. What I want to know is whether there has been production in this unit and if so whether there is loss. If it is said there has been no production, then there is no loss. But what we in this House were given to understand is that the fourth unit would be commissioned in March 1973. We want to know whether it has been commissioned and if so whether there had been loss and if so how much? The House must be informed about it. But what we find is that a Committee has been appointed to go into the question of loss. For any Committee that is appointed, we must, the House must, have confidence in that Committee. What is the basis of setting up this Committee?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் கொடுத்த அறிக்கையில் உள்ளதைப் பற்றி கேட்கலாமே தவிர குற்றச்சாட்டு கூற இடமில்லை.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** பேரவைத் தலைவர் அவர்களே, எழுப்பப்பட்டிருக்கிற பிரச்னை நான்காவது பிரிவில் செய்யப்படவில்லையா என்பது. டிஸ்ட்ரிப்யூட்டிங் ட்ரான்ஸ்பார்மேர்ஸ், அவை பெய்லூர் ஆனதன் விளைவாக நெருப்பு பற்றியதாகச் சொல்லப்படுகிறது. டெக்னீஷியன்ஸை முறைப்படி போட்டிருந்தார்களா இல்லையா என்பதுபற்றியெல்லாம் பழக்கமுள்ள நிபுணர்களைப் போட்டு, அவர்கள் தெளிவான அறிக்கை கொடுத்த பிறகுதான் கூற முடியும். பவர் ஹவுஸ் 1, 2, 3, 4-க்குக் குந்தகம் எதுவும் ஏற்படவில்லை. ஒரு பூர்வாங்க அறிக்கை தரவேண்டுமென்று மத்திய அரசின் நிறுவனமாகிய டாட்டா கன்ட்ஸல்டென்ட்ஸ், நெய்வேலி மின்சார நிலையத்தைச் சார்ந்த நிபுணர்கள்—இவர்களைச் சேர்த்து திட்டக் குழு உறுப்பினர் அவர்களைத் தலைவராகக் கொண்டு ஒரு குழு நியமித்திருக்கிறோம். முழு அறிக்கை வந்த பிறகுதான், அதிகாரிகள் மேல் தவறு இருந்தால் நடவடிக்கை எடுக்க சாத்தியக்கூறு இருக்கும்.

**திரு. என். டென்னிஸ்:** திடீரென்று ஏற்படக்கூடிய தீ விபத்தைத் தடுப்பதற்கு அங்கு ஏதாவது கருவிகள் அமைக்கப்பட்டிருக்கின்றனவா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** முழு விவரங்களும் குழு அறிக்கை வந்த பிறகுதான் தெரியும். அருகில் உள்ள தனியார்த் தொழிற்சாலைகளில் கூட தீ அணைப்பு இயந்திரங்கள் உள்ளன. தியணைப்புப் படையினர் வந்து வெளியில் பரவாமல் இருக்குமளவிற்கு அணைக்கப்பட்டிருக்கிறது.

DR. H. V. HANDE : In the answer given by the Hon. Minister we were given to understand that Rs. 30 lakhs worth is the loss suffered because of this fire. May I know whether the entire loss has been taken into consideration including loss of accessories and ancillaries? We find from the report that had appeared in the 'Indian Express' that loss of Rs. 90 lakhs has taken place. Have all the facts been taken into consideration? Has there been enough fire fighting equipment in the Ennore Thermal Scheme? I think in all major thermal stations like this there should be pucca, fool-proof fire fighting equipment has such an equipment been there in the Ennore Thermal Scheme? The Hon. Minister should enlighten us on these issues. Further, may I know whether the cause of this failure . . . . . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்விகள் போடுகிறபோது கேட்கிற கேள்விகளை அமைச்சர் அவர்கள் நினைவில் வைத்துக்கொண்டு பதில் சொல்லும்படி சுருக்கமாக இருக்கவேண்டும். இப்போதே நான்கு கேள்விகள் போட்டிருக்கிறீர்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** ஒரு கேள்வி, முப்பது லட்சமா அல்லது அதற்கு மேற்பட்டா? டிரான்ஸ்பார்மர் பக்கத்தில் தீ அணைக்கும் எக்விப்மென்ட்ஸ் இருந்ததா? தீ பக்கத்தில் பரவியிருக்கிறதா? வேறு ஏதாவது இயந்திரங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனவா? இதனால் உற்பத்தி பாதிக்கப்படவில்லை என்று சொன்னார் அமைச்சர். ஆனால் உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்களே, அதுபற்றியும் விளக்க முடியுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** முப்பது இலட்சம் என்பது தோராயமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. முப்பது லட்சமா அல்லது அதற்கு அதிகமா என்று கேட்டால் அந்த நிபுணர் குழு அறிக்கை வந்த பிறகுதான் தெரியும். டிரான்ஸ்பார்மர் தவிர வேறு இயந்திரக் கோளாறுகள் ஏற்பட்டிருக்கின்றனவா என்பதையும் குழு ஆராய ஒரு பாயின்ட்டாக கொடுத்திருக்



வேறு இயந்திரங்கள் பழுதுபட்டிருக்கின்றனவா என்பதையும்
கிறோம். ஆராய குழுவிற்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறோம். குழு அறிக்கை வந்த
பிறகுதான் முழு விவரங்களையும் சொல்ல இயலும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இந்தக் குழு அறிக்கை இந்தச் சபை முடிவதற்கு முன்னால் நமக்குக் கிடைக்குமா? அப்படியானால் சபைமுன் வைக்கப்படுமா? 15 நாட்கள் என்று சொன்னார்கள். அப்படியில்லாது போனாலும் அக்குழு அறிக்கை உறுப்பினர்களுக்காவது அனுப்பப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** பிறகு ஒரு முறை சட்டமன்றம் கூடும்போது குழு அறிக்கையின் சாரம்சத்தைக் கேட்க உறுப்பினர்களுக்கு உரிமை உண்டு. நானும் பதில் சொல்ல முடியும். இரு வாரங்களில் அனுப்பச் சொல்லியிருக்கிறோம்.

DR. H. V. HANDE : May I know whether the Government is going to wait till the report is submitted or whether the repair job would be immediately undertaken? May I know whether without waiting for the report of the Committee, the repairing job had already been undertaken? May I also know what is the expenditure that is going to be incurred for repairing this?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** போபால் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ் தான் செய்யவேண்டும். ஸ்பேர் ஒன்று இருக்கிறது. இரண்டு வேண்டும். வேறு மாநிலங்களில் இருந்து ஸ்பேர் எப்படியாவது வாங்கித் தருகிறோம் என்று அதற்கு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். விரைவில் கிடைக்கும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

## (3) தீர்மானங்கள்

### உறுப்பினர் திரு. எம். பழனிசாமி பேரவைக் கூட்டத்திற்கு வராமைக்கான அனுமதி அளித்தல் குறித்து

**திரு. து. ப. அழகமுத்து :** தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளில் 15-வது விதியின்கீழ் திரு. எம். பழனிசாமி எம்.எல்.ஏ. அவர்கள் 1—4—1973-ம் தேதியில் இருந்து ஆறு மாத காலத்திற்கு இப்பேரவைக்கு வராமல் இருக்க அனுமதி அளிக்கவேண்டுமென்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## (4) அறிக்கை அளித்தல்

### அரசினர் உறுதிமொழிக் குழுவின் ஐந்தாவது அறிக்கை

திரு. இ. எஸ். தியாகராசன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவை அரசினர் உறுதிமொழிக் குழுவின் ஐந்தாவது அறிக்கையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

## (5) அரசினர் தீர்மானங்கள்

### (அ) தமிழ்நாடு சட்டப் பேரவை நடைமுறை விதிக் குழுவின் பரிந்துரைகளின் மீதான இறுதி அறிக்கைக்குப் பேரவையின் ஒப்புதல் குறித்து

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, "10—8—1973-ம் நாளன்று அவை முன் வைக்கப்பட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை நடைமுறை விதிக் குழுவின் பரிந்துரைகளின் மீதான இறுதி அறிக்கைக்கு @ இப்பேரவை ஒப்புதல் அளிக்கிறது". என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

DR. H. V. HANDE: Sir, I wish to speak a few words on this resolution moved by the Hon. Leader of the House. I am afraid that the amendment of certain rules made by the Rules Committee have to be properly examined in this House. I request every Member of the House to give his very careful consideration to the major changes that have been brought about by the Rules Committee. Certain drastic changes which are not at all found in any of the Rules of other States have been brought about by these amendments made by the Rules Committee. For instance, let me say one thing. Take Article 179 (c) which states:—

A member holding office as Speaker or Deputy Speaker of an Assembly—

(c) may be removed from his office by a resolution of the Assembly passed by a majority of all the then Members of the Assembly.

There is again a proviso which states:

Provided that no resolution for the purpose of clause (c) shall be moved unless at least fourteen days' notice has been given of the intention to move the resolution:

@ 124-128-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



There is another proviso which reads:—

Provided further that whenever the Assembly is dissolved, the Speaker shall not vacate his office until immediately before the first meeting of the Assembly after the dissolution.

In other words it is very clearly laid down in the Constitution that fourteen days notice is required for a resolution for removal of Speaker.

Now let us see what has been done by the Rules Committee. Rule 16 of our Rules has been amended. It says that in case of contravention of the procedure laid down, the House may continue its sitting either with the Deputy Speaker or a Member of the panel of Chairman or any other member elected, *ad hoc* by the House, in the Chair. It is further said that immediately after a 'No Confidence' resolution against the Speaker has been given, it shall immediately find a place on the Agenda as a first item. It has also been said that if there is a 'No Confidence' motion against the Speaker and there is also a 'No Confidence' motion against the Ministry, the motion expressing 'No Confidence' against the Speaker shall have priority. But my submission is this. Supposing 14 days' notice is not there, that clause is not satisfied. Then what would happen? For the no-confidence motion against the Ministry, there is already sufficient notice and it should get priority. Supposing the Assembly meets on the 1st of a month, then on the same day a no-confidence motion against the Ministry can be brought. But supposing the no-confidence motion against the Speaker has been given four days earlier, that motion will have to wait for maturing for the expiry of the 14 days notice. So, according to the rule, a no-confidence motion against the Ministry cannot be brought. If it is a short session of seven days, we will not be able to bring the motion.

பதினைந்து நாட்கள் ஆனால்தான் கொண்டு வர முடியும். சில நேரங்களில் சட்ட மன்றம் ஏழு நாட்களில் கூட முடிந்து விடும். அதற்கு முன்னே அமைச்சரவை மீது 'நோ கான்பிடன்ஸ் மோஷன்' கொடுத்து விட்டால், அதை எடுத்துக் கொள்ள வாய்ப்பு இல்லாமல் போய்விடும். சட்டத்திற்கு விரோதமாக இந்தத் திருத்தம் இருக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, அமைச்சர் அவர்கள் இதைக் கொஞ்சம் யோசனை செய்து கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பதினான்கு நாட்களுக்கு முன்பாக "சபாநாயகர் மேல் நோ-கான்பிடன்ஸ் மோஷன் கொண்டு வரப்படுமானால்" அது சட்டத்திற்கு விரோதமாக இருக்கும். ஆகவே கொண்டுவர முடியாது. ஆகவே, இப்படிப்பட்ட சட்டத் திருத்தங்கள் கொண்டுவருகிறபோது நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ரூல் 53-ல் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால் . . . .

In Rule 53, it is said : "On receipt of a notice under rule 52, a motion for leave to move the resolution shall be entered in the list of business in the name of the member concerned on the day of the meeting immediately after the expiry of the fourteen days' notice as required under Article 179 of the Constration இப்படி சிக்கலான நிலைமை வந்தால் அந்தச் சிக்கலை எப்படித் தீர்ப்பது? இதிலேயே கூட போட்டிருக்கிறது திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும், திரு. எ. சுப்பிரமணியம் அவர்களும் கூறியிருக்கிறார்கள்.

'No-confidence Motion against the Ministry should get precedence'.

அவர்கள் இருவரும் சொல்லி இருக்கும் அபிப்பிராயம் நல்ல கருத்து. உதாரணத்திற்குச் சொல்கிறேன், சபாநாயகர் மீது நோ-கான்பிடன்ஸ் மோஷன் வருகிற நேரத்தில் அதை முதலில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதே நேரத்தில் சபாநாயகர் இந்தச் சபையை தேதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கிறேன் என்று சொல்வதற்குக் கூட உரிமையில்லையென்றால் என்ன அர்த்தம்?

After saying that the Speaker shall .............. adjourn the House to the next sitting in the same meeting or *sine die* :

Provided further that the House shall not be adjourned *sine die* or to a day beyond the next sitting except on a motion adopted by the House.

சபாநாயகரின் அடிப்படை உரிமை பறிக்கப்பட்டிருக்கிறது, உங்களைத் தனிப்பட்ட வகையில் சொல்லவில்லை. ஆபீஸ் ஆப் ஸ்பீக்கரைப் பற்றித்தான் சொல்கிறேன். சபாநாயகரைப்பற்றிப் பேசினால் அது உரிமைப் பிரச்னையாகும். நீங்கள் அதைப் பற்றிப் பேசக்கூடாது என்று சொல்வீர்கள். நான் அதற்கு மதிப்புக் கொடுக்கவேண்டும். நான் சொல்வது ஆபீஸ் ஆப் ஸ்பீக்கர். சபாநாயகர் தேதி குறிப்பிடப்படாமல் மீண்டும் சந்திப்போம் என்று சொல்வதற்குக்கூட உரிமையில்லை. அதற்குக் கூட



சபையின் முன்னால் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து இங்கே ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று போட்டிருக்கிறார்கள். நம்முடைய அகில இந்தியாவிலும் எந்தச் சட்டமன்றத்திலும் இந்த முறை இல்லை. பாராளுமன்றத்தில் கூட இந்த முறை இல்லை. அப்படிப்பட்ட ஒரு நிலைமை இங்கே புதிதாக உருவாக்கியிருக்கிறீர்கள். அது எந்தக் காரணத்திற்காக இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பது வேறு பிரச்னை. அதற்குள்ளே நான் போக வில்லை. அதைப் பேச ஆரம்பித்தால் வாய்ப்புக் கொடுக்க மாட்டீர்கள். ஆனால் நான் அதை புரியவைத்து சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன்.

ஒரு குறிப்பிட்ட காரணத்தை மனதில் வைத்துக்கொண்டு முக்கியமாக உள்ள ஒரு உரிமையை, சபாநாயகருக்கு உள்ள உரிமையைப் பறிப்பது நியாயமா? சபாநாயகர் போஸ்ட் என்பது ஒரு பொதுவான பதவி. அகில இந்திய சபாநாயகர்கள் மாநாட்டில் கூட அது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. திரு. சஞ்சீவி ரெட்டி அவர்கள் கூட அதை ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள். அதற்குப் பிறகு திரு. தில்லான் அவர்கள் கூட அதே கருத்தைக் கூறியிருக்கிறார்கள். சபாநாயகர் அவர்கள் மன்றத்திற்கு, எல்லோருக்கும் பொதுவாக உள்ளவர்கள். சபாநாயகர் சபையின் நடுநாயகமாக இருப்பவர்கள். அப்படிப்பட்ட சபாநாயகருக்கு உள்ள உரிமைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இதனுடைய விளைவு என்ன ஆகும் என்றால்,

I may be permitted to strike a note of warning. By implementing this rule, I am agraid the office of Speaker will lose its independent character.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே** : இது ஒரு முக்கியமான பிரச்னை. நான் 2-3 நிமிடங்களில் முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேசுங்கள், பேசவேண்டாம் என்று சொல்லவில்லை. சுருக்கமாகச் சொல்லுங்கள் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே** : எல்லோருக்கும் நல்லதற்காகத்தான் சொல்கிறேன். நாளைக்குக் கோர்ட்டுக்குப்போய் 'அல்ட்ரா வயர்ஸ்' என்று வந்தால் இந்தக் கருத்தை நாம் சொல்லாமல் விட்டு விட்டோமோ என்று நினைக்கக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். நமதுடைய திரு. சின்னசாமி

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1973 ஆகஸ்ட் 11

கூட ஒப்புக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். இந்தத் திருத்தத்தின் மூலம் ஆபீஸ் ஆப் தி ஸ்பீக்கர், லீடர் ஆப் தி ஹவுஸுக்கு பயப்படும் நிலை உருவாகிறது. நான் யாரைப்பற்றியும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. இதனால் ஸ்பீக்கருடைய இன்டிபென்டன்ட் கேரக்டர் பாதிக்கப்படுகிறது என்கிற கவலையால்தான் நான் இந்த நேரத்தில் இதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதே நேரத்தில் இன்னொன்றையும் சொல்கிறேன். இப்படி ஆபீஸ் ஆப் தி ஸ்பீக்கர், லீடர் ஆப் தி ஹவுஸுக்குக் கட்டுப்பட்டு இருப்பது என்றால் என்ன வரும்? லீடர் ஆப் தி ஹவுஸ், அல்லது சீப் மினிஸ்டர் யாராக இருந்தாலும் சரி, அவர்கள் சொல்வது தான் நியாயம் என்று ஆகிவிடும். அவர்கள் எடுக்கும் முடிவு தான் நியாயம் என்று ஆகிவிடும். காரணம், ஒரு பார்ட்டியில் முடிவு எடுக்கும் உரிமை அவர்களுக்குத்தான் இருக்கிறது. ஆகவே, மறைமுகமாக ஆபீஸ் ஆப் தி ஸ்பீக்கர், ஆபீஸ் ஆப் தி சீப் மினிஸ்டருக்கு பயப்படும் நிலை உருவாகியிருக்கிறது.

He will have to act to the wishes of the Chief Minister. The office of the Speaker will become a play-thing in the hands of the Chief Minister, in the hands of the ruling party and in the hands of the Leader of the House.

என்கிற அச்சத்தை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே இன்னும் பல ரூல்களை மாற்றியிருக்கிறார்கள். அதைப் பற்றி விரிவாகப் பேசலாம். உதாரணமாக 42 நாட்களுக்குள் ஒரு கேள்வி கேட்டால் பதில் வரவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அது பாராட்டத் தக்கது. அதைச் சந்தோஷமாக ஏற்றுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் இன்னொன்றையும் சொல்கிறேன். ஒத்தி வைப்புத் தீர்மானம் போடுகிற நேரத்தில், சபாநாயகர் சொல்கிறார்கள், இது ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் கீழ் வராது, கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொண்டு வாருங்கள் என்று. நாங்களும் ஏற்றுக்கொண்டு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுக்கிறோம். அதற்கும் ஒரு நாள் வரம்பு வைத்தால் நன்றாக இருக்கும். கால் அட்டென்ஷன் 8 நாட்களுக்குள் கொடுக்கலாம் என்று அதற்குள் சில நேரங்களில் சபை முடிந்து விடுகிறது. இப்போது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருப்பதால் அது நான்கு நாட்களாக விவாதம் நடைபெற்றது; இல்லையென்றால் 4-5 நாட்களில் முடிந்துவிடும். நாம் அட்ஜேர்ன் மென்ட் மோஷனுக்கு என்ன முக்கியத்துவம் கொடுக்கிறோமோ அந்த



1973 ஆகஸ்ட் 11] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

அளவுக்கு முக்கியத்துவம் காலிங் அட்டென்ஷனுக்கும் கொடுக்க வேண்டும். இப்படிக் கொடுப்பதன் காரணமாக ஆளும் கட்சியில் இருப்பவர்களும் சில பிரச்னைகள் குறித்து காலிங் அட்டென்ஷன் நோட்டீஸ் கொடுக்க முடியும். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அட்ஜேர்ன்மென்ட் மோஷன் கொடுக்க முடியாது. ஆகவே ஆளும் கட்சிக்காரர்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் காலிங் அட்டென்ஷனுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ரூலிங் பார்ட்டியைச் சேர்ந்தவர்களும் கொண்டுவரலாம். ஆளும் கட்சியினருக்கு இது ரொம்பவும் உபயோககரமாக இருக்கும். அவர்களும் காலிங் அட்டென்ஷன் நோட்டீஸ் கொடுக்க வேண்டுமென்று நினைக் மு.ப. 10-30
கிறார்கள். காலிங் அட்டென்ஷன் நோட்டீஸ் கொடுத்துவிட்டால் இத்தனை நாட்களுக்குள் பதில் வரவேண்டும் என்று வரம்பு கிடையாது. 42 நாட்களுக்குள் எப்படி ஸ்டார்டு குவெஸ்டின்ஸ்-க்கு பதில்கள் வரவேண்டுமென்று வரம்பு விதிக்கப்பட்டிருக்கிறதோ அதே மாதிரி கன்வென்ஷனாகவோ அல்லது சட்டத்தைத் திருத்துவதன் மூலமாகவோ காலிங் அட்டென்ஷன் நோட்டீஸ்களுக்கு உடனே நான்கு நாட்களுக்குள் பதில் வரவேண்டும் என்று வரம்பு விதிக்கவேண்டும். அட்ஜேர்ன்மெண்டு மோஷன் நோட்டீஸுக்கு என்ன பிரையாரிடி கொடுக்கப்படுகிறதோ, அதே பிரையாரிடி இதற்கும் கொடுக்க வேண்டும். அட்ஜேர்மெண்டு மோஷன் நோட்டீஸ் கொடுத்தால் எப்படி முதல் அமைச்சர் அவர்கள் உடனே கலெக்டரோடு டெலிபோனில் தொடர்பு கொண்டு எல்லா விஷயங்களையும் அவசரமாக சேகரிக்கிறார்களோ, இரண்டு நாட்களுக்குள் முழு விபரங்களையும் சேகரித்துத் தருகிறார்களோ அம்மாதிரி ஒரு நிலைமை ஏற்பட்டு காலிங் அட்டென்ஷன் நோட்டீஸ் கொடுத்தாலும் உடனடியாக நடவடிக்கை எடுப்பது நன்றாக இருக்கும். அதையும் இந்த நேரத்தில் இந்த சபையினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

ஒட்டுமொத்தமாக சபாநாயகரை நிழல் செய்யக்கூடிய முறைகள், சபாநாயகர் உள்ளே உட்கார்ந்திருக்கக்கூடிய நேரத்தில் டெப்யூடி ஸ்பீக்கர் அல்லது சேர்மன் சபையை நடத்தக்கூடிய வாய்ப்புகள்பற்றி ரூல்ஸில் உருவாக்கிய முறைகள் ஆகியவைகளை நான் மிக வன்மையாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஆட்சேபிக்கிறேன். இந்தச் சபை அவைகளை ஏற்றுக் கொள்ளக்கூடாது என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். எதிர்க்கட்சியினரைக் கொண்டு ஒரு குழுவைப் போட்டு இதைப் பரிசீலித்து பிறகு கொண்டு வரலாம் என்று நினைக்கிறேன். அல்ட்ரா வைரீஸ் ஆஃப் தி கான்ஸ்டிடியூஷன் என்று போய்விடக்கூடாது. மீண்டும்

இதை குழுவுக்கு அனுப்பி in the light of the discussion that has taken place in the House என்ற முறையிலே இதை விவாதித்து முடிவு செய்யவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இதற்காக வேண்டுமென்றாலும் ஒரு ஸ்பெஷல் கமிட்டி போடலாம். முதலமைச்சர், லீடர் ஆஃப் தி ஹவுஸ், சட்ட அமைச்சர் ஆகியோரை வைத்துக்கொண்டு புதியதாக சபாநாயகராக நீங்கள் வந்திருக்கிறீர்கள், இவர்கள் எல்லோரையும் சேர்த்து ஒரு குழுவைப் போட்டுப் பரிசீலனை செய்தால் நன்றாக இருக்கும். நிச்சயம் சொல்லுகிறேன். 14 நாட்கள் என்றால் நிச்சயம் அது அடிபட்டுப் போய்விடும். அல்ட்ரா வைரஸ் ஆஃப் தி கான்ஸ்டிட்யூஷனாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். டாக்டர் ஹாண்டே சொல்கிறாரே என்று என் பேரில் கோபம் இல்லாமல் நல்ல யோசனை என்ற நிலையில் அதை எடுத்துக்கொள்ள வேண்டும். நான் அப்ஜெக்டிவாக சொல்கிறேன். தயவு செய்து மற்ற உறுப்பினர்கள் எல்லோரும் இதை அப்ஜெக்டிவ் மனப்பான்மையுடன், ஏற்றுக் கொண்டு, இதை இப்பொழுது நிராகரித்து, ரூல்ஸ் கமிட்டிக்குத் திரும்பவும் பரிசீலனைக்கு அனுப்பவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இதை மிக வன்மையாக ஆட்சேபிக்கிறேன் என்று சொல்லி, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார், ரூல்ஸ் கமிட்டியின் ஒரு உறுப்பினர் என்ற முறையிலே நான் இப்பொழுது பேசுவதிலேயே சில சங்கடங்கள் இருக்கின்றன என்பதை உணர்கிறேன். ரூல்ஸ் கமிட்டியில் பல விஷயங்களைப் பற்றி விவாதம் நடந்து, ரூல்ஸ் கமிட்டி ரிப்போர்ட்டு இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. 7 தினங்களுக்குள் அதற்குத் திருத்தம் கொடுக்கவேண்டும் என்ற முறையிலே நான் திருத்தங்கள் கொடுத்திருந்தேன். அந்தத் திருத்தங்களை மீண்டும் ரூல்ஸ் கமிட்டி பரிசீலனை செய்து ஏற்றுக்கொள்ளாத நிலைமையில் இப்பொழுது இந்த ரிப்போர்ட்டு வந்திருக்கிறது.

இந்த ரிப்போர்ட்டில் வந்திருக்கக்கூடிய சில அம்சங்கள் எந்த நோக்கத்தில் வந்திருக்கிறது என்பதைப்பற்றியும், இதைப் புனர் பரிசீலனை செய்யவேண்டும் என்பதற்காகவும் நான் சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஏனென்றால் அந்தத் திருத்தங்களை நான் வலியுறுத்த முடியாது.

ஏற்கெனவே ஸ்பீக்கருடைய அதிகாரங்களைப் பற்றியும், மற்றும் பல விஷயங்களைப் பற்றியும் ரூல்ஸ் கமிட்டி பல நல்ல சிபார்சுகளைச் செய்திருக்கிறது. குறிப்பாக நாம் கேள்வி போட்டால் எத்தனை நாட்களுக்குள் பதில்





வரவேண்டும், போன்ற விஷயங்களில் மேலவை எப்படி சில கருத்துக்களை ரூல்ஸில் கொண்டுவந்திருக்கிறதோ அதே மாதிரி இந்த அவையிலும் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. There are many salutary provisions. ஆனால் ஆட்சேபனைக்குரியது. நம்முடைய விதி 16, விதிகள் 52, 53, 54 ஆகியவைகளுக்கான திருத்தங்கள் தான் ஆட்சேபனைக்குரியவை. நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். 242 விதியின்படி :

'The Speaker shall have power to regulate the conduct of business of the Assembly in all matters not provided for in the **Constitution or the rules.**' This is called residuary powers.

இதைக் கூட மாற்றவேண்டும் என்ற ஒரு கருத்து வந்தது. பிறகு அது அப்படியே இருக்கட்டும் என்று அப்படியே விடப்பட்டுவிட்டது. அப்படியிருக்கும்பொழுது, ஸ்பீக்கருக்கு இந்தப் பவரைக் கொடுத்துவிட்டு, சில இடங்களில் ஸ்பீக்கருடைய பவரை எடுத்துக்கொள்வது என்று வருவது முரண்பாடாக இருக்கிறது.

Dr. Hande has very ably pointed out about the Office of the Speaker and not about the person who is occupying the Office. The Office of the Speaker is a very high office more or less a judicial office.

அப்படி ஒரு ஜுடிஷியல் ஆபீஸரிடம் டிஸ்க்ரீஷன் இருக்கக்கூடாது என்ற அளவுக்குக் கொண்டு வருவது என்று சொன்னால் அது சரியாக இல்லை என்று நான் கருதுகிறேன். ஏற்கனவே நம்முடைய 16, 17 விதிகளைப் பார்த்தால்

'**The Speaker or person presiding shall have power to adjourn the Assembly from time to time within a session.**'

என்று போட்டு, விதி 17-ல் When the Assembly has been adjourned to a particular date, the Speaker may summon the Assembly for an earlier or later date.'

என்று போட்டு இந்த அதிகாரம் ஸ்பீக்கருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சில சமயங்களில் அதைத் தவறாகப் பயன்படுத்தலாம். நான் இல்லை என்று சொல்லவில்லை. அதை செக் பண்ணுவதற்கு என்ற முறையில் கொடுத்திருக்கக்கூடிய திருத்தங்கள்—அதை நான் முழுவதும் வாசிக்க விரும்பவில்லை—எப்படி வந்திருக்கின்றன என்றால், ஒவ்வொரு விஷயத்திலும் சபையினுடைய அங்கீகாரம் பெற்றுத் தான் ஸ்பீக்கர் செய்ய வேண்டும் என்ற அளவுக்கு வந்திருக்கிறது. இவை அட்ஜர்ன்மென்டு போன்ற

விஷயங்களில் கூட அந்த அளவுக்குப் போகிறது. தாங்கள் கொடுக்கின்ற ரூலிங் கூட சபையினுடைய அங்கீகாரம் பெற்றிருக்கவேண்டும் என்ற அளவுக்குக் கூட சென்றுவிடலாம்.

நேற்று கூட உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். பிரிவிலேஜ் ரூல்ஸில் எப்பொழுது பிரைமா பாசி கேஸ் இருக்கிறது என்று தங்களுக்குத் தோன்றினால், ஹவுஸில் மெஜாரிடி கிடைக்காது என்ற நிலைமையில் அதைத் தாங்களே ஸுவோ மோட்டோவாக பிரிவிலேஜ் கமிட்டியின் பரிசீலனைக்கு அனுப்பலாம். ஸ்பீக்கருக்கு அத்தகைய அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. இதே முறையில் தான் மற்ற சட்டமன்றங்களுடைய விதிகளும் இருக்கும் என்று நினைக்கிறேன். ஆகவே, அது போன்ற பவர்ஸை ஸ்பீக்கரிடமிருந்து எடுத்துவிடுவது சரியில்லை என்பது என்னுடைய கருத்து.

அதே மாதிரி விதிகள் 52, 53, 54 ஸ்பீக்கரை வெளியேற்றக்கூடிய விதிகள். மிக முக்கியமான பிரச்னை என்ற அளவில் திருத்தங்கள் கொண்டுவரப் பட்டிருக்கின்றன. பொதுவாக கேள்வி நேரத்திற்குப் பிறகு என்னென்ன விஷயங்கள் எழுப்பப்படலாம் என்று விதிகளிலே சொல்லப்பட்டிருக்கிறது. கால் அட்டென்ஷன் வரலாம், அட்ஜர்ன்மெண்டு மோஷன் நோட்டீஸ் வரலாம், பிரிவிலேஜ் மோஷன் வரலாம் அல்லது நோ கான்பிடன்ஸ் அல்லது சென்ஷர் மோஷன் வரலாம், மோஷன் ஃபார் தி ரிமூவல் ஆப் தி ஸ்பீக்கர் வரலாம். இப்படி 4, 5 விஷயங்கள் வரலாம். அப்படி வருகிறபொழுது எதற்கு பிரையாரிடி என்ற கேள்விக்கு இன்றைக்கும் பல சட்டமன்றங்களில் நிதானம் இல்லாத நிலை இருக்கிறது. அதைப்பற்றித் தாங்கள் தெளிவாக ரூலிங் கொடுக்கலாம். இங்கே சொல்லப்பட்டிருக்கிறது என்னவென்றால், எந்த விஷயமாக இருந்தாலும், அரசாங்கத்தின் பேரில் நோ கான்பிடன்ஸ் இருந்தாலும் சரி—நோ கான்பிடன்ஸ் மோஷனுக்கு அவகாசம் தேவை இல்லை, இதைப் பக்குவமாக அன்றைக்கே கொடுத்து அன்றைக்கே எடுக்கச் சொல்லலாம். ஆனால் ஸ்பீக்கர் ரிமூவல் சம்பந்தமாக கான்ஸ்டிடியூஷனில் ப்ரொவிஷன்ஸ் வைத்து 14 நாட்கள் நோட்டீஸ் இருக்க வேண்டும் என்ற நிலை இருக்கிறது. அதற்குப் பிறகு அதை என்று எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதற்குத் தேதி நிச்சயம் செய்வதற்கு சில ஏற்பாடுகள் இருக்கின்றன 14 நாட்கள் ஆனவுடனேயே ஸ்பீக்கர் ரிமூவல் மோஷன் எடுத்துக் கொள்ளப் படவேண்டும் என்பது போன்ற முறையில் ஒரு திருத்தம் வருவது சரிதான். ஏற்கெனவே, விதிகள். 52, 53, 54, 16, 17 இவைகளைப் பொறுத்தவரையிலே வேண்டிய பாதுகாப்பு இருக்கிறது. இவற்றிற்கு திருத்தங்கள் வேண்டியதில்லை. அந்தப் பகுதிகள் பொறுத்த வரையில் திருத்தங்கள் வேண்டியதில்லை.



ஆகவே, இந்த ரிப்போர்ட்டு பூராவையும் நிராகரிக்க வேண்டியதில்லை. இந்த இரண்டு பகுதிகளைப் பொறுத்தவரையில் திரும்பப் பரிசீலனை செய்ய வேண்டும். இப்பொழுது மோஷனை நிறைவேற்றிவிட்டால் மீண்டும் பரிசீலனை செய்து, மீண்டும் என்னென்ன திருத்தங்கள் கொண்டுவருவது என்ற நிலை ஏற்படுகிறது. நான் ஏற்கெனவே சொன்னேன். 242-வது விதியில் ஸ்பீக்கருக்கு பவர் இருக்கிறது which comes under residuary powers of the Speaker அதுதான் இருக்கவேண்டும். இந்தச் சபையைப் பொறுத்த வரையில் எந்தக் கட்சியினர் என்று பாராமல் எல்லோருக்கும் பாதுகாப்பு கொடுப்பது—பாதுகாப்பு என்றால் விதிகள் பாதுகாப்பு இல்லை—சட்டமன்ற உறுப்பினர்கள் பேசுவதற்குப் பாதுகாப்பு கொடுப்பதற்கு ஸ்பீக்கர் தவிர வேறு யாரும் இல்லை என்ற நிலைமை நீண்ட நெடு நாளாக இருந்து வருகிறது. ஆகவேதான் ஸ்பீக்கருக்கு ரெஸிடுவரி பவர் கொடுக்கப் பட்டிருக்கிறது.

Residuary powers are given to the Spetker. What has been given as residuary powers is sought to be taken away by amending the rules 16, 52, 53 and 54.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சபாநாயகர் அவர்களே, கனம் உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்ன கருத்துக்களை முழுக்க ஆதரித்து என்னுடைய கருத்துக்களையும் சொல்ல விரும்புகிறேன். இந்தத் திருத்தங்களுக்கெல்லாம் காரணம் என்ன என்பது இந்தச் சபைக்கு நன்றாகத் தெரியும். சென்ற முறை நீங்களாகக் கொண்டு வந்த சபாநாயகரை திடீரென்று வெளியே தள்ளும்பொழுது பல சட்டச் சிக்கல்களில் புகுந்து தவித்ததைப் பற்றி விளைவாகத்தான் இந்தத் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. தங்களுக்குச் சாதகமாக எப்படி எப்படியெல்லாம் அசெம்பிளி விதிகளை மாற்றவேண்டும் என்று கருதி இப்படி விதிகளையெல்லாம் மாற்ற முன்வந்திருக்கிறார்கள். இந்த விதிகள் மாற்றங்கள் மிகவும் கண்டிக்கத் தக்கவை. இந்த விதிகள் எங்கே கொண்டு போய்விடுமோ தெரியாது. இப்பொழுதே சபாநாயகராக இருப்பவரை ஆளுகின்ற கட்சி தங்களுக்கு இருக்கிற மிருக பலத்தை வைத்துக்கொண்டு எப்படியெல்லாம் ஆட்டிப்படைக்கிறது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மிருக பலம் என்றெல்லாம் சொல்ல வேண்டாம்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : It is only the translation of the word 'Brutal Majority' which is parliamentary.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஆங்கிலத்திலிருந்து அப்படித் தமிழில் சொல்லும்போது அது வேறு மாதிரியாக இருக்கும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** எப்படிச் சொல்வது என்று நீங்கள் சொல்லுங்கள். மிகப் பெரும்பான்மையான பயமுறுத்தக்கூடிய மெஜாரிடி, மிகப்பெரிய பலத்தை வைத்துக்கொண்டு யாரையும் ஆட்டிப்படைக்கலாம் என்ற அளவிலே இந்த விதிகளின் திருத்தங்கள் அமைந்திருக்கின்றன. அந்த முறையில் என்ன நடக்கும் என்று தெரியாது.

ஆளும் கட்சியைச் சேர்ந்த நண்பர் திரு. கந்தப்பன் அவர்கள் பேசக்கூடிய நேரத்தில், முதல் அமைச்சர்களெல்லாம் ஆபீஸ் பையன்கள் போல் நடத்தப் படுகிறார்கள் என்று அசோக் மேத்தா அவர்கள் கூறியதை எடுத்துச் சொன்னார். அதைப்போல சபாநாயகரை ஆபீஸ் பையனை மாற்றி ஆட்சியிலுள்ளவர்கள் ஆட்டிப் படைக்கின்ற சூழ்நிலை ஏற்படுமோ என்ற பயம் தோன்றுகிறது என்று தான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உங்களுக்கு இந்த சபையிலே அதிகமான பலம் இருக்கிறது. நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தால் உங்கள் எண்ணிக்கையை வைத்து எதையும் நடத்திக்கொள்ளலாம். அப்படி இருக்கும்போது சபாநாயகரைப் பார்த்துப் பயப்படவேண்டியதில்லை. சபாநாயகர் உங்களைப் பார்த்து பயப்பட்டுக்கொண்டிருக்கக்கூடாது. சபாநாயகர் 'சீட்'டிலே உட்கார்ந்தவுடன் அவர் ஒரு கட்சியைச் சேர்ந்தவராக இருக்கக்கூடாது. அப்படி இருந்தால் அதிலே நியாயம் இல்லை. எல்லாக் கட்சியினருக்கும் நியாயம் வழங்கக் கூடியவராக, நேர்மையாக நடந்துகொள்ளக்கூடியவராக சபாநாயகர் இருக்க வேண்டும். தான் ஒரு கட்சியைச் சேர்ந்தவர் என்ற எண்ணம், என்ற உணர்ச்சி சபாநாயகருக்கு ஏற்படக்கூடாது.

'Justice at least must be seem to be done, though not done.' ஆகவே, இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையைப் பார்ப்போமானால் ஏற்கெனவே சபாநாயகர் மிகவும் பலவீனப்பட்டுப் போயிருக்கிறார். ஆனால் அவர் வகிக்கின்ற பதவி மிகப் பலம் பொருந்தியது. ஒரு கட்சி ஆட்சியிலிருந்து, அந்தக் கட்சியைச் சேர்ந்த சபாநாயகர் எவ்வளவு இக்கட்டான நிலையில் உட்கார்ந்திருக்கிறார் என்பது இப்போது நன்றாகப் புரிகிறது. அவர்



மிகக் கஷ்டப்பட்டு வேலை செய்யவேண்டியிருக்கிறது. You must take the vote from the House. என்று சொல்லக்கூடிய அளவுக்கு இருக்குமானால் சபாநாயகர் சுயமரியாதையோடு, சுயாட்சித் தன்மையோடு இயங்கக்கூடிய நிலைமை இருக்குமா? இன்றைக்கு நீங்கள் எதையோ செய்துவிட்டுப் போகலாம். அதுவே நாளைக்கு ஒரு மரபாக ஆகிவிடும். ஒரு 'பிரிசிடேன்ட்' ஆக ஆகிவிடும். அப்படி ஆகிவிட்டால் எப்படி எல்லாம் சபாநாயகர் ஆட்டிப்படைக்கப்படுவார் என்பதையெல்லாம் நீங்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். சபாநாயகருடைய உரிமைகள் இப்படியெல்லாம் பறிக்கப்படும் போது, அவரால் எப்படி அந்தப் பொறுப்பை சரியாக நடத்த முடியும்? ஆளும் கட்சியினர் இதைச் சிந்திக்க வேண்டும். இப்போது நீங்கள் செய்யும் முடிவே பின்னால் ஒரு வழிகாட்டியாகிவிடும். அப்போது ஜனநாயகத்தைக் கொலை செய்வதற்கு நீங்கள் கொடுத்த நச்சுப்பொருள் இது என்ற நிலைக்கு நீங்கள் ஆளாவீர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, சபையை அப்போதைக்கப்போது ஒத்திப்போடக்கூடிய அதிகாரத்தை சபாநாயகருக்குக் கட்டாயம் கொடுக்க வேண்டும். இதிலே இருக்கின்ற சிக்கல்களை தீர்ப்பதற்கு எத்தனையோ வழிமுறைகள் இருக்கின்றன. பல சட்டசபைகளில் பல வழிமுறைகள் கையாளப்பட்டிருக்கின்றன. கவர்னருக்கே சில அதிகாரங்கள் இருக்கின்றன. சபாநாயகருடைய அதிகாரத்தை இப்படியே குறைத்துக்கொண்டு போனால் இது உங்களுடைய சர்வாதிகாரப்போக்கே ஒழிய ஜனநாயக நடவடிக்கை இல்லை என்று இதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

53, 54-வது விதிகளில் சபாநாயகருக்கே முழுக்க முழுக்க அதிகாரம் இருக்கவேண்டும். எப்போது வேண்டுமானாலும் சபாநாயகர் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருவோம்; சபாநாயகர் மீது நம்பிக்கை இல்லாமலிருந்தால் எப்போது வேண்டுமானாலும் தாக்கி எறிவோம் என்று சொல்வது சரியல்ல. ஏற்கெனவே அந்தப் பதவியை வகித்துக்கொண்டிருக்கிறவர்கள் ஆட்டம் கண்டுகொண்டிருக்கிறார்கள். அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்குப் பயப்படுகிறார்கள். எப்போது தாக்கி எறியப்படுவோமோ என்ற பயத்தின் காரணமாக அவர்கள் ஆட்டம் கண்டுகொண்டிருக்கிறார்கள். சமீப கால தமிழகத்தின் சட்டமன்ற நடவடிக்கைகள் அப்படிப் போய்க் கொண்டிருக்கின்றன. ஆகவே, இப்போது புதிதாகக் கொண்டுவந்திருக்கும் திருத்தங்களைப் பார்க்கும்போது அவர்களால் நிச்சயமாகத் தன்னிச்சையாகக் காரியங்களைச் செய்ய முடியாது. ஆகவே, இந்தத் திருத்தங்கள் பெரும்பான்மையினரின் சர்வாதிகாரப் போக்குக்கே மேலும் வழி வகுக்கும்.

[திரு. எம். ஏ. லத்தீப்] [1973 ஆகஸ்ட் 11

உறுப்பினர்களைப் பெற்றிருக்கின்ற—பெரும்பான்மைக் கட்சியினர் அல்லது மற்றவர்களால் சபைத் தலைவர் மீது நம்பிக்கை இல்லை என்று ஒரு தீர்மானத்தைக் கொடுத்திருக்கும்போது இந்தச் சபையை நடத்திச் செல்லக் கூடிய அதிகாரம் படைத்த, டிஸ்கிரிஷனரி பவர்ஸ் அண்டு ரெசிடுவரி பவர்ஸ் வைத்துக்கொண்டிருக்கக்கூடிய சபைத் தலைவர் நம்பிக்கை இழந்துவிட்டார் என்று சொல்லும்போது அது எப்படிப் பாரபட்சமாக நடப்பதாக இருக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். உண்மையிலே இந்தச் சபையை எப்படி நடத்துகிறார்கள் என்பதை இந்த அவை கண்டிருக்கிறது. நான் மற்றவர்கள் பேச்சுக்கு உள்நோக்கம் கற்பிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இதைச் சொல்லவில்லை இந்தச் சபை நிரந்தரமானது. 'ஆபீஸ் ஆப் தி ஸ்பீக்கர்' நிரந்தரமானது. இந்தச் சபையில் ஏற்றுக் கொண்டிருக்கிற மரபுகள் நிரந்தரமானவை. அரசியல் சட்டத்தின்படி இந்தச் சபையை நாம் நடத்திச் செல்ல வேண்டும். இந்த அவையிலே நிர்ணயிக்கின்ற விதிமுறைகளைக் கட்டிக் காக்க வேண்டும் என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். அதைத்தான் நாம் வற்புறுத்திச் சொல்லிவந்திருக்கிறோம். டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்ன கருத்தை நான் நிச்சயமாக ஏற்றுக் கொள்வேன்.

ஆனால் இதிலே இருக்கின்ற சிக்கல் என்ன என்பதை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். பெரும்பான்மை பலத்தைக் கொண்டிருக்கிற ஆளும் கட்சியினர் சபாநாயகருக்கு விரோதமாக ஒரு நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை முன்மொழிந்திருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அதே நேரத்தில் எதிர்க்கட்சியிலிருந்து அமைச்சரவை மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை முன்மொழிந்திருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். இந்த இரண்டு தீர்மானங்களும் அவை முன்னால் இருக்கின்றன என்று வைத்துக் கொள்வோம். இந்த நேரத்திலே சபாநாயகருக்கு விரோதமான நீக்கல் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்பட்டு, அது அவையில் நிராகரிக்கப்படுமானால், பெரும்பான்மை உறுப்பினர்களைக்கொண்ட அமைச்சரவை சபாநாயகருக்கு விரோதமாகக் கொண்டுவந்த தீர்மானம் நிராகரிக்கப்படுமானால் அதன் விளைவு என்ன என்பதைப் பார்க்கவேண்டும். அந்தத் தீர்மானம் நிராகரிக்கப்படுமானால் உடனடியாக இந்த அமைச்சரவைக்கு பெரும்பான்மை பலம் இல்லை; இந்தச் சபையின் நம்பிக்கை இல்லை என்றாகிவிடும் என்பது என்னுடைய வாதமாகும். ஆகையால் இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் எனது தாழ்மையான அபிப்பிராயம் என்னவென்றால்--சபாநாயகர் என்று சொல்லக் கூடியது உயர்ந்த ஸ்தானம். அதை யாரும் மறுக்க முடியாது.



1973 ஆகஸ்ட் 11] [Thiru M. A. Latheef]

The party which is in power has lost the confidence of the House and the motion against the Speaker which has been proposed by the Leader of the House or anybody representing the majority party in the House, if it is to be rejected by the House, then the logical consequence will be the resignation of the Ministry. Therefore, there is no danger whatsoever. That is the essence of the Constitution. After all, we are here to uphold the democratic traditions. Democracy is established and is translated into action only by means of majority opinion of this House.

In so far as the Government enjoy the majority in this House, it is the proper channel through which the opinion and the decision of the House should be channelised. The Speaker should have complete confidence and the greatest respect from the House and there is no doubt whatsoever about it. But other things being equal, the Speaker whose *bona fides* are not questionable, the Speaker whose impartiality has never been at question, is alone the Speaker visualised by the Constitution. The greatest respect that we are expected to give to the Speaker, is to the Speaker who has complete confidence in this House. But any Speaker whose *bona fides* have been questioned and any Speaker against whom a No Confidence Motion has been submitted before the House, ceases to be the Speaker. Under such circumstances, it is but proper and it is also in conformity with the established democratic principles that only the will of the people should prevail, through the medium of their elected representatives. Such a Speaker who does not enjoy the complete confidence and whose *bona fides* are at question, should not conduct the proceedings relating to the No Confidence Motion against the Ministry. If he is allowed to conduct it, that cannot be in confirmity with the democratic principles that we have accepted. When his *bona fide* itself is at question, how can he conduct the proceedings of the House with all residuary and discretionary powers and how can we accept such a decision by the Speaker who is alleged to have prejudice against one party or another and how can he be impartial and can act according to law and the rules framed thereunder? Therefore, it is but proper that this rule is accepted by this House and it is not to safeguard the interest of one party and it is not to safeguard the interest of one Government but it is o saleguard the interest of democracy and the long established

ஜனநாயகம் நசுக்கப்படும். என்றைக்குமே தமிழக சட்டமன்றம் மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருந்திருக்கிறது. இங்கே உள்ள சபாநாயகர் மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருந்திருக்கிறார். தமிழ்நாடு சட்டமன்ற சபாநாயகர் பாரபட்சமில்லாமல் நடந்துகொள்வார் என்ற எண்ணம் மற்ற சட்டசபைகளுக்கு இருந்து வந்திருக்கிறது. அந்தப் பெருமையைத் தேடித் தந்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய உரிமையைக் கட்டுப்படுத்தும் வகையிலே வந்திருக்கின்ற இந்தத் திருத்தங்களை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. எ. வகாப்: சார் பாயிண்ட் ஆஃப் ஆர்டர். அம்மையார் அவர்கள் பேசும்போது, அசோக் மேத்தா அவர்கள் யாரையோ பார்த்து ஆபீஸ் பையன்கள் என்று வெளியே சொன்னதைப் போல, இங்கே சட்டசபையினுடைய தலைவராக இருக்கின்ற சபாநாயகரை ஆபீஸ் பையனாக வைத்துக் கொள்ளத்தான் இன்றைய அரசு விரும்புகிறது என்று சொன்னார்கள். ஆகவே, சபாநாயகர் மீது இப்படிப்பட்ட ஒரு தவறான எண்ணத்தைக் கூறுவதால், 'ஆபீஸ் பையன்' என்று சொன்ன அந்த வார்த்தைகளை சபை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: இப்போது நான் சொன்னவுடன் அந்த வார்த்தைகளை எடுத்துவிட வேண்டுமென்கிறார்கள். நேற்று திரு. கந்தப்பன் அவர்கள் சொல்லும்போது ஆட்சேபிக்கவில்லையே. நேற்று அவர் 'ஆபீஸ் பையன்கள்' என்று சொன்ன வார்த்தைகளை வாபஸ் வாங்கிக்கொள்வதாக இருந்தால் நானும் வாபஸ் பெற்றுக்கொள்கிறேன். இல்லையென்றால் நான் சொன்ன வார்த்தைகளும் குறிப்பில் இருக்க வேண்டும்.

திரு. கே. எ. வகாப்: அவர்கள் சபாநாயகரைப்பற்றியோ அல்லது இந்த மன்றத்திலுள்ளவர்களைப்பற்றியோ சொல்லவில்லை. வெளியிலே 'ஆபீஸ் பையன்கள்' என்று சொன்னார்கள் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது .....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அம்மையார் அவர்கள் சபாநாயகர் ஆபீஸ் பையன் என்று சொல்லவில்லை. இந்த விதிகளைப்பற்றி அவர்கள் பேசும்போது அவர்களுடைய கருத்தைச் சொன்னார்கள்.



திரு. கே. எ. வகாப்: இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால் அவர்கள் குறிப்பிட்ட மாதிரி ஆகுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது அவர்களுடைய கருத்து. அவ்வளவுதான்.

திரு. எம். ஏ. லத்தீப்: மாண்புமிகு தலைவரவர்களே, இன்றைக்கு இங்கே மாண்புமிகு அவை முன்னவர் அவர்களால் முன்மொழியப்பட்டிருக்கின்ற தீர்மானத்தில், இரண்டு தீர்மானங்கள்—ஒன்று பேரவைத் தலைவர் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம், இன்னொன்று அமைச்சரவை மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம்—இந்த இரண்டு தீர்மானங்களும் ஒரே நேரத்தில் சபை முன் இருந்தால் எந்தத் தீர்மானத்தை நாம் முன்னே எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது பற்றியது. அப்படி வந்தால் சபாநாயகருக்கு எதிராக இருக்கின்ற

No confidence Motion against the Presiding Officers of the House should be taken first. It should have the priority over the No-Confidence Motion against the Ministry.

என்ற அளவிலே இன்றைக்கு இப்படிப்பட்ட பிரச்னைகள் சபை முன்னால் இருக்கின்றன.

எனக்கு மெத்த மகிழ்ச்சி என்னவென்றால் சபாநாயகர் பதவியைப் பற்றி பேசியவர்கள் எல்லாம் இன்றைக்குத்தான் பெருந்தன்மையாகப் பேசியிருக்கிறார்கள். சபாநாயகர் பதவி என்பது ஒரு நீதிபதி ஸ்தானத்திற்கு உயர்ந்த பதவி, பொறுப்பான பதவி, சமநோக்குடன் பார்க்கின்ற பதவி என்றெல்லாம் இன்றைக்குத்தான் எல்லா உறுப்பினர்களும் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக நான் மெத்த மகிழ்ச்சியடைகிறேன். சபாநாயகருக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னதைப்போல 'ரெசிடுவரி பவர்ஸ்' உண்டு என்னவென்றால்

'The circumstances which have not been visualised by the Consiitution and by the rules framed by the House should be met by the Speaker under the discretionary and residuary powers conferred upon him by the rules of the House.'

என்பதை அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். என்று சொல்கிறார்கள்.

That means in certain circumstances the Speaker is entitled to use his discretionary powers. என்று சொல்கிறார்கள்.

இந்த நிலைமையிலே ஒரு நம்பிக்கை இல்லாத் தீர்மானம் அமைச்சரவைக்கு விரோதமாக வந்திருக்கும்போது அதே அமைச்சரவை பெரும்பான்மை

traditions of this House and the long established legislative procedures. So, the will of the people is paramount than anything else. Therefore, when two motions are before the House, it is but proper that the motion against the Speaker is adopted first and then only the motion against the Government shall be considered as properly conducted by the Speaker and properly accepted by the House. Therefore, I not only support the motion before the House but also request the Chair to accept it. I also request the Members of the House to give their unqualified support to this motion. With these words, Sir, I support the motion moved by the Hon. the Leader of the House. Thank you, Sir.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, இப்போது திருத்தப்பட இருக்கிற ரூல் 16-ஐயும், ரூல் 242-ஐயும் பார்க்கும்போது ஏற்கெனவே சட்டமன்றத் தலைவர் அவர்களுக்கு 'அன்லிமிடெட் பவர்ஸ்' கொடுக்கப்பட்டிருக்கிறது. அது இந்தத் திருத்தங்களின் மூலம் கட்டுப்படுத்தப்படுகிறது என்று தான் சொல்ல வேண்டும். அதுமட்டுமல்ல, ஏற்கனவே கொடுக்கப்பட்ட அதிகாரம் எடுக்கப்படுகிறது என்று சொன்னால்கூட மிகையாகாது. இந்தத் திருத்தங்களைக் கொண்டுவருவதற்கான ஐழ்நிலையை நாம் எல்லோரும் அறிவோம். என்றாலும் விதி 16-ஐத் திருத்திவிட்டு விதி 53 ஐயும் திருத்த வேண்டிய நிலை பற்றித்தான் என் கருத்தினை நான் இங்கே கூற விரும்புகிறேன்.

விதி 53-ன்படி அரசின் மீது நம்பிக்கையில்லை என்ற தீர்மானமும், அவைத் தலைவரின் மீது நம்பிக்கை இல்லை என்ற தீர்மானமும் இருக்கும்போது அவைத் தலைவரின் மீது நம்பிக்கையில்லை என்ற தீர்மானத்தைத்தான் முதலில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற திருத்தம் இருக்கிறது. அவைத் தலைவரை நீக்குவதற்கு ஆளும் கட்சியாக இருக்கக்கூடியவர்களுக்குப் போதுமான அதிகாரம் இருக்கும்போது இந்த நேரத்தில் ஏற்கெனவே அவைத் தலைவருக்குக் கொடுக்கப்பட்டிருந்த அதிகாரத்தைக்கூட எடுத்துவிட வேண்டுமா என்பது யோசிக்கப்பட வேண்டும். ஆளுகிற கட்சி என்றைக்கு விரும்பவில்லையோ அன்றைக்கு அவைத்தலைவரின் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்து அவரை அகற்ற அதிகாரம் இருக்கிறது. அவைத் தலைவர் ஆளுகிற கட்சியின் நம்பிக்கையைப் பெற்றவராக இருந்தால்தான் வர முடியும். என்றாலும், அவைத் தலைவராக ஆன பிறகு அவர் சுதந்திரமாக எல்லாக் கட்சிகளுக்கும் இந்த அவையில் பாதுகாப்பு அளிக்கக்கூடியவராக இருந்து செயல்படவேண்டும் என்பதற்காகவே அவருக்குச் சில அதிகாரங்கள் கொடுக்கப்பட்



டிருக்கின்றன. அந்த அதிகாரங்களையும் கூட எடுத்துவிடுவது என்றால் எங்களுக்கு எல்லாம் என்றைக்கும் அவைத் தலைவரிடம் சந்தேகம் இருக்கக்கூடிய நிலையைத்தான் ஏற்படுத்தும் என்பதை முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவேதான் விதி 16-ஐத் திருத்துவதற்குத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

நான் அறிந்த மட்டில் மேய்ஸ் பார்லிமெண்டரி பிராக்டீசில் எந்த ஒரு அரசும் சட்டசபைத் தலைவருடைய அதிகாரத்தைக் குறைக்கக்கூடிய முறையில் எந்த விதியையும் இயற்றக்கூடாது என்று இருப்பதாக நினைக்கின்றேன். சட்ட அமைச்சர், அப்படி இல்லை என்று சொன்னால் நான் திருத்திக்கொள்ளத் தயாராய் இருக்கிறேன். அப்படி ஒரு கொள்கை இருக்கும் என்றால் இது போன்ற திருத்தம் செய்வது வரவேற்கத்தக்கது அல்ல. சட்டமன்றத் தலைவருக்கு ஏற்கெனவே உள்ளதுபோல அன்லிமிடெட் பவர்ஸ் இருக்கவேண்டும். இதுபோன்ற திருத்தம் செய்யப்படுமானால் ஆளும் கட்சிக்குப் பூரண மெஜாரிட்டி இருக்கிறபோது அசம்பாவிதம் நடக்காமல் இருக்கலாம். பெரும்பான்மை இல்லாத சூழ்நிலையில் 99, 100 என்பதாக கட்சிக்கு ஸ்தானங்கள் உள்ள நிலையில் இதுபோன்ற நிலை இருப்பது உசிதமாக இருக்குமா என்பதை சட்டசபைத் தலைவரே சிந்திக்க வேண்டும். இந்தச் சட்டமன்றம் தான் சுப்ரீம் என்பதை நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்றோம். அது எதற்காக மு.ப. 11-00
சுப்ரீம் என்று சொன்னால், வெளியிலிருக்கிற சக்திக்கும், சட்டமன்றத்திற்கு உள்ளே இருக்கிற சக்திக்கும் கம்பேர் செய்யும்போது சட்டமன்றம், தான் செய்கின்ற அத்தனைக்கும் சுப்ரீம் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ளுகின்றோம், அதை இந்தச் சட்டமன்றமும் ஏற்றுக்கொள்கின்றது. ஆனால் பெரும்பான்மை என்று நான் ஏற்கெனவே கூறியதுபோல், ஆளும் கட்சிக்கு 100, எதிர்க் கட்சிக்கு 99 என்று இருக்கும்போது அந்தப் பெரும்பான்மையான கருத்தை மட்டும் ஏற்று, சட்டமன்றத்தின் கருத்தை ஏற்று, தலைவர் நடத்திச் செல்லலாம் என்று சொன்னால், ஒருவேளை 16-வது விதியை நாம் ஏற்று நிறைவேற்றினால்கூட, அதை நடைமுறையில் நிறைவேற்றும்போது, சட்டமன்றத் தலைவரால் இயலுமா என்ற கேள்வியை நான் கேட்க விரும்புகிறேன். ஆகவே, நடைமுறையில் செயலாற்ற முடியாத நிலைமையை, விதியை நிறைவேற்றுவது நிச்சயமாகப் பயன் தராது என்ற எச்சரிக்கையும் விட விரும்புகிறேன்.

ஆக, சட்டமன்றத் தலைவராக இருக்கவேண்டுமென்றால் அன்றைக்கு ஒரு அதிகாரமும் கிடையாது. அனைத்து அதிகாரத்தையும் ஆளுகின்ற கட்சியிடமிருந்து பெற்றுத்தான் செயல்படவேண்டுமென்றால், சுதந்திரமாக, நியாயமாக,

[திரு. செ. மாதவன்] [1973 ஆகஸ்ட் 11

களுடைய எண்ணங்களுக்கு, அவர்களுடைய விருப்பத்திற்கு விரோதமாக, ஜனநாயகத்தைத் துச்சமென மதித்து, இந்த மன்றத்தினுடைய நடவடிக்கைகளை, ஒரு தனிப்பட்ட நபர், தம் விருப்பப்படி ஒத்திவைக்கலாம் என்று கருதுவது நியாயம்தானா, அது ஜனநாயகம்தானா, அரசியலமைப்புச் சட்டப்படி அந்த உரிமைகள் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றனவா என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நாம் இப்பொழுது போட்டிருப்பதெல்லாம் ஒரு சபை நடந்து கொண்டிருக்கிறபொழுது, நாளைக்கு ஒத்திவைக்க வேண்டுமென்றால்—இயற்கையாக—நாளை ஞாயிற்றுக்கிழமை, ஆகவே அடுத்த நாளைக்கு ஒத்திவைக்கவேண்டுமென்றால்—அதற்கு எந்தவிதமான தடையும் கிடையாது. ஆனால், அப்படிப்பட்ட சாதாரணமாக ஒத்திவைக்கின்ற நிலைமைகளை மாற்றி, 'சைன-டை' என்று, என்றைக்காவது, நாள் குறிப்பிடாது ஒத்திவைப்பது என்றால்—இதுவரைக்கும் அந்த அதிகாரம் சபைத் தலைவருக்குக் கொடுக்கப்பட்டது—இப்பொழுது இந்த மன்றத்திலே ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட அந்த அதிகாரம் மன்றத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுதான் வேறுபாடேயொழிய வேறு ஒன்றும் கிடையாது. இதற்குக் காரணம் நமக்கெல்லாம் தெரிந்ததுதான். இன்றைக்குக் கூடுவதாக நாம் நினைத்தால், தேதி வைத்தால், உடனடியாகப் பேரவைத் தலைவர் ஒரு மாதம் பொறுத்துப் பேரவை கூடும் என்று அறிவித்துப் பேரவையை ஒத்திவைக்கலாம், இப்பொழுதுள்ள முறைப்படி. நாம், அங்கத்தினர்கள், இவ்வளவு காசை மக்களுடைய வரிப் பணத்திலிருந்து செலவழித்து வந்ததற்குப் பிறகு அவையை ஒத்திவைக்கலாம் என்பது அசாதாரணமான நிலை என்பதைத் தவிர வேறு அல்ல. அதை ஏற்றுக்கொள்ள முடியாது. இதே கருத்துதான், சட்டமன்ற-பேரவைத் தலைவர்களுடைய மாநாட்டிலே சிபாரிசு செய்யப்பட்டு, மாதிரி விதிகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அந்த விதிகளிலே,

Provided further that the House shall not be adjourned sine die on a day in advance of the last sitting of the House fixed for the session except on a motion made by the Leader of the House and adopted by the House.

என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆக, அந்த ஒரு கருத்துக்காகத்தான் இந்தத் திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறோம். ஆக, இந்தத் திருத்தத்திலே எந்த விதமான உரிமையும் எடுக்கப்படவில்லை. இந்த மன்றத்தினுடைய அதிகாரத்தைப்பற்றி, 'சைன-டை' என்று ஒத்திவைக்கவேண்டுமென்ற



1973 ஆகஸ்ட் 11] [திரு. செ. மாதவன்]

அதிகாரம், மன்றத்திற்குத்தான் இருக்கிறது என்பதற்குத்தான் இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

அடுத்த திருத்தம். . . .

DR. H. V. HANDE : I want to say something which may be of help to the Hon. Minister.

அதிலே ஒரே ஒரு டவுட். 5-வது பக்கத்திலே போடப்பட்டிருக்கிறது.

Provided furher that the House shall not be adjourned *sine die* or to a day beyond the next sitting except on a motion adopted by the House.

அப்படிப் போட்டதற்குப் பிறகு,

In case of any announcement of adjournment of the House, in contravention of the above provisions, the House may continue its sitting either with the Deputy Speaker or a Member of the panel of Chairman or any other Member elected, *ad hoc* by the House in the Chair.

அந்த ரூல்ஸிலெல்லாம் திருத்தங்கள் வேண்டியிருக்கிறது. அதற்காகத்தான் சொல்கிறேன்.

'sine die or to a day beyond the next sitting '—this is what is said.

இந்த 'ரூல்சி' லே 'நெக்ஸ்ட் டே' இருந்தால்தான் அவர் சொல்ல முடியும். இரண்டு நாட்களுக்குப் பிறகு நாங்கள் கூடப் போகிறோம் என்று சொல்ல வேண்டி வேண்டுமென்றால், 'லீடர் ஆப் தி ஹவுஸ்' தான் நிர்ணயம் பண்ண வேண்டியிருக்கிறது. சனிக்கிழமை வருகிறது என்றால், திங்கட்கிழமை நாமாகவே கூடலாம். ஆனால், திங்கட்கிழமை, பண்டிகை நாளாகவோ, விடுமுறை நாளாகவோ வந்து, செவ்வாய்க்கிழமை மீண்டும் கூட வேண்டுமென்றால், 'நெக்ஸ்ட் டே' அதற்குக்கூட, அவருடைய அனுமதி வாங்கவேண்டிய நிலைமை இருக்கிறது. அல்லது பி.ஏ.சி. 5 நாட்களுக்குப் பிறகு மீட் பண்ண வேண்டுமென்றால் கூட, கவர்னர்ஸ் அட்ரஸ் வருகிறது, அதற்குப் பிறகு 10 நாட்களுக்குள் பட்ஜெட் வருகிறது என்றாலும்கூட, மீட் பண்ணுவதற்கு லீடர் ஆப் தி ஹவுஸ் எழுந்து சொல்ல வேண்டுமென்றால், சபையினுடைய மரபுக்கு நன்றாக இருக்குமா என்று சிந்திக்க வேண்டும். நீங்கள் அடுத்த பாயிண்டுக்குச் சென்றதால், அதற்கு முன்பாக இதைச் சொல்லவேண்டுமென்று நினைத்துச் சொன்னேன். இன்னொரு பிராப்ளம் என்னவென்றால் சபாநாயகர் ஒத்தி

வைத்துவிட்டுப் போகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். சைனி-டை என்று சொல்லி விட்டுப் போகிறார்கள் என்றால் அவர்கள் அப்படிச் சொல்லி விட்ட பிறகு இங்கே முன்னவர் அவர்கள் இன்னொரு தலைவரை உட்கார வைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள் என்றால் அப்பொழுது ப்ரிசைடிங் ஆபீஸர் ஆக யார் இருப்பார்கள்?

In case of any announcement of adjournment of the House, in contravention of the above provisions, the House may continue its sitting either with the Deputy Speaker or a Member of the panel of Chairman. . .

என்றால் அதற்கு ஒரு ப்ரிசைடிங் ஆபீசர் தேவை.

To say, so and so, shall conduct the proceedings.

என்று சொல்வதற்கு ஒரு ப்ரிசைடிங் ஆபீசர் தேவை. அவர் யார் ஆக இருப்பார் என்று தெரியவில்லை.

அது மட்டுமல்ல. அந்த ப்ரிசைடிங் ஆபீசர் இவர்கள் சொல்கிற கருத்தை ஏற்றுக்கொள்ளாமல் இருந்தால் என்ன நிலைமை என்பதைப் போன்ற காம்ப்ளிகேஷன்ஸ் எல்லாம் வருகின்றன. சைனி-டை அல்லது அதற்கடுத்த கூட்ட நாளுக்கு மேல் தள்ளிவைக்க வேண்டுமென்றால் முன்னவர் அதற்காக இங்கே தீர்மானம் கொண்டுவர வேண்டிய நிலைமை இருப்பதற்குப் பதிலாக பி.ஏ.சி.-யில் எப்படிச் சொல்லப்படுகிறதோ அதைப்போன்று கூட்டம் நடக்கலாம் என்ற முறையிலே விதிகளைப் போட்டால் நலமாக இருக்கும் என்று கருதுகிறேன். ஒவ்வொரு தடவையும் அதற்காக லீடர் ஆப் தி ஹவுஸ் கொண்டுவருவது அவ்வளவு நல்லதாக, பார்க்கும்பொழுதே இருக்காது. ஸ்பீக்கர்ஸ் கான்பரன்ஸில்கூட அப்படிச் சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** விதிகளை மாற்றியமைப்பதற்காக விதிக் குழுவின் கூட்டங்கள் கூட்டப்பட்டபொழுது உறுப்பினர்கள் எல்லோரும் வந்திருந்து தங்களுடைய இப்படிப்பட்ட கருத்துக்களையெல்லாம் சொல்லியிருந்தார்கள் என்றால் நன்றாக இருந்திருக்கும். அதற்காக அவர்கள் சொல்கிற கருத்துக்களை இப்பொழுது ஏற்றுக்கொள்வதிலே தவறு கிடையாது. இருந்தாலும் அவர்களுடைய வாதம் சரியானதல்ல என்பதைத் தான் நான் தெரிவித்துக்கொள்ளவேண்டியவனாக இருக்கிறேன். Beyond the next sitting என்று போட்டிருக்கிறோம். எது அடுத்த நாள், எந்த நாளில் கூடப் போகிறோம் என்பதை பி.ஏ.சி.-யில் முடிவு எடுக்கிறோம். ஒரு அடுத்த நாள் என்று குறிப்பிட்டுவிட்டு அதற்கு அடுத்த நாள் தள்ளிப் போடக்கூடிய நிலைமை வந்தால்தான் இப்படிப்பட்ட நிலைமை வரும்.



**டாக்டர் எச். வி. ஹாண்டே:** பி.ஏ.சி.-யில் நாம் முடிவு எடுத்து விடுகிறோம். அதற்குப் பிறகு

We are giving statutory powers to the Business Advisory Committee.

என்று ஆகிவிடுகிறது. பி.ஏ.சி. சொன்ன பிரகாரம் செய்யவில்லை என்றால் வேறு பிரகாரம் செய்யவேண்டுமென்றால் அதற்கு முன்னவர் அவர்கள் அனுமதி கேட்கவேண்டியிருக்கிறது.

Ultimately are we going to give statutory powers to the Business Advisory Committee? We are going to act as per the Business Advisory Committee. If so, is it not necessary to provide for that in the rules themselves? Thit is the clarification, I want.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அவர்களே சொல்லிவிட்டார்கள், முதலிலே பி.ஏ.சி. என்று விதிகளிலேயே போட்டுவிடுங்கள் என்று சொன்னார்கள். ஆனால், நான் இப்பொழுது விளக்கம் சொல்ல ஆரம்பித்ததற்குப் பிறகு வேறு ஒன்றைச் சொல்கிறார்கள். பி.ஏ.சி.-யிலே இயற்கையாகவே என்ன என்ன பிஸினஸ் என்று நாம் முடிவு செய்திருக்கிறோமோ அதுதான் நடக்கும். ஆனால், அதற்கு மேலே ஏதாவது வந்துவிட்டால் என்ன என்பதற்குத்தான் அவை முன்னவர் அவையைக் கேட்கலாம் என்று சொல்லியிருக்கிறோம். இந்த அவையை ஒரு நாள் கூட்டுகிறோம் என்றால் அது சபைத் தலைவரின் அல்லது ஆளுநரின் சம்மதத்தின் அடிப்படையிலே கூட்டப்படுகிறது. கூட்டியதற்குப் பிறகு பி.ஏ.சி. என்ன என்ன பிஸினஸ் எடுத்துக்கொள்ளப்படவேண்டுமென்று முடிவு எடுக்கிறது. அந்த முடிவுப்படிதான் ஒவ்வொரு பிஸினசும் வர வேண்டும். அந்த முடிவுப்படி நடைபெறாமல் ஒத்திவைக்கவேண்டுமானால் அதற்குத்தான் இந்த மன்றத்தினுடைய அனுமதி வேண்டுமென்று கொண்டு வந்து இருக்கிறோம்.

அடுத்ததாக, இரண்டு தீர்மானங்கள் வந்தால் அமைச்சரவைமீது நம்பிக்கையில்லாத் தீர்மானமும், பேரவைத் தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானமும் வந்தால் எதற்கு முதலிடம் கொடுக்கவேண்டுமென்பதுதான் பிரச்னை. இந்த மன்றத்திலே அனைவருடைய நம்பிக்கைக்கும் பாத்திரமானவர் அமர்ந்து நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்வது தான் ஜனநாயக முறைக்குப் பொருத்தமான வாதம் ஆகும். நான் அக்கேடமிக் ஆகச் சொல்கிறேன். மன்றத்திலே ஒரு நிலைமை, மன்றத்தினுடைய விருப்பத்திற்கு மாறாக, சட்ட விதிகளுக்கு மாறாக ஒரு சட்டப் பேரவைத் தலைவர் தீர்ப்புக் கொடுக்கிற காலம் வருமானால்—அப்படிப்பட்ட காலம் வராது—

அரசியல் சட்ட அமைப்பு விதிகளிலே கூறப்படாத ஒரு உரிமையை, அரசைக் கவிழ்ப்பதற்காக, ஒரு பேரவைத் தலைவருக்குக் கொடுக்கக்கூடிய—நாங்கள் ஆட்சியில் இருக்கிறோம் என்ற காரணத்திற்காக, ஏதோ ஒரு பேரவைத் தலைவருக்குக் கொடுத்தோம் என்ற காரணத்தினால்—கொடுக்கக் கூடிய நிலைமை வரும்.

இதிலே சிக்கல்கள் வரும் என்றெல்லாம் டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். இரண்டு தீர்மானங்கள் வரும்பொழுது—14 நாட்கள் கழித்து என்று அரசியல் அமைப்புச் சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிறது—14 நாட்கள் ஆகிவிட்டால், இடையிலே அமைச்சரவைமீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்தால் அது என்ன கதி என்பதுதான் அவர்களுடைய சந்தேகம். அப்படிப்பட்ட சந்தேகத்திற்கே, இந்த விதிகளைப் படித்துப் பார்த்தால், இடமில்லை என்பது தெரியும். நம்பிக்கையில்லாத் தீர்மானம் பேரவைத் தலைவர் மீது கொண்டுவரப்பட்டால் 14 நாட்களுக்கு அப்பால்தான் அதை இந்த சபைக்கே கொண்டுவர முடியும். ஆனால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் அமைச்சரவைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டால் எந்த நிமிடமும் எடுத்துக் கொள்ளலாம். அதுதான் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு ஆகும். பேரவைத் தலைவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்தால் அதற்கு 14 நாட்களுக்குப் பின்னாலே என்ன செய்ய வேண்டுமென்ற நிலையைப் புரிந்துகொண்டுதான் நாம் விதியிலே போட்டு இருக்கிறோம்.

On receipt of a notice under Rule 52, a motion for leave to move the resolution shall be entered in the list of business.

என்பதுதான் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அப்படி மோஷன் கொண்டு வரப்பட்டு 14 நாட்கள் ஆகிவிட்டால் அதை எடுத்துக் கொள்வதைத் தவிர வேறு எந்த டிஸ்கிரஷனரி பவரும் தலைவருக்குக் கிடையாது என்பதுதான். ஆட்டமேட்டிக்காக இந்தச் சபையின் அஜெண்டாவிலே அந்தத் தீர்மானம் அன்றைக்குக் கொண்டுவரப்பட்டுவிடும்.

In the name of the member concerned on the day of meeting immediately after the expiry of 14 days' notice as required under Article 179 of the Constitution. அதற்கடுத்து,

the motion shall be taken up for consideration immediately after the Question Hour.

என்று நாம் தெளிவாகப் போட்டிருப்பதால், அந்தக் கருத்தே, அந்த விதியே 14 நாட்கள் கழிந்தபிறகு கட்டாயம் அஜெண்டாவிலே அது சேர்க்கப்பட்டு விடும் என்பதைத்தான் குறிக்கிறது. அப்படி வந்த பி[illegible] வேறு எந்த



விஷயத்தையும் எடுத்துக்கொள்ளக் கூடாது. அதுதான் இது கொண்டுவரப் பட்டிருப்பதன் நோக்கமே. அந்த நோக்கத்தை அவர்கள் புரிந்துகொள் வார்களானால் அவர்களுக்குச் சந்தேகமே வராது. மீண்டும் இந்த விதிகளிலே ஏதாவது மாற்றவேண்டுமென்ற கருத்தை அவர்கள் சொன்னால் அதை மீண்டும் விதிக் குழுவிலே பரிசீலிப்பதிலே எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. ஆனால் இப்போதைக்கு இந்த விதிகள் சரியான முறையிலே தயாரிக்கப்பட்டு இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** இதிலே வரக்கூடிய சிக்கல் என்னவென்றால் ஒன்றாம் தேதியன்று சபாநாயகர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுத் திருக்கிறார்கள் என்றால், நாலாம் தேதி சபை கூடுகிறது என்றால், 2-ம் தேதி அல்லது 3-ம் தேதி அமைச்சரவைமீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுத் திருக்கிறார்கள் என்றால் என்ன நிலைமை ஆகும் என்பதைப் பார்க்க வேண்டும். சபாநாயகர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மான நோட்டீஸ் கொடுத்து 14 நாட்கள் முடியவில்லை என்றால் அந்த நேரத்திலே என்ன செய்வது? ஒன்றாம் தேதி சபாநாயகர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார்கள் என்றால், இரண்டாம் தேதி அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருகிறது என்றால், நாலாம் தேதி சட்டசபை கூடுகிறது என்றால் அமைச்சரவை மீது வருகின்ற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும். அன்றைக்கு நீங்கள் அது முடியாது என்று சொல்லலாம். . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** சொன்ன கருத்தையே சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் வாதம் சரி. இரண்டும் அப்படி வந்தால் நிச்சயம் அமைச்சரவைமீது வந்திருக்கின்ற நம்பிக்கையில்லாத் தீர்மானத் தைத்தான் எடுத்துக்கொள்ளவேண்டிய நிலை வரும். அதையெல்லாம் இன்னும் தெளிவாகப் போடவேண்டுமானால் விதிக் குழுவிலே வேண்டுமானால் அதைப் பரிசீலிக்கலாம். ஆகவே அவர்கள் திரும்பத் திரும்ப அதையே கூறிக்கொண்டு இருக்கவேண்டாம். வேண்டுமானால் விதிக்குழுவிலே பரிசீலிப் பதில் எனக்கு ஆட்சேபணையில்லை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** சார், அமைச்சர் ஏற்றுக்கொண்டதற் காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதிலே சில குழப்பங்கள் இருப்பதால், இந்த மன்றத்திலே சில சந்தேகங்களைக் கிளப்பியதால் நான் சொல்கிறேன். நீங்கள் மிக 'சேஃபாக' இருக்கிறீர்கள், டெம்பரரியாக கொஞ்ச நாட்களுக்கு இந்த மன்றத்திலே அப்படி இருக்கிறீர்கள், வெளியிலே

ஆளும் கட்சிக்கும் எதிர்க் கட்சிக்கும் நீதி வழங்குகின்ற ஒரு நபர், சுய மரியாதையுள்ள ஒரு நபர், சட்டமன்றத் தலைவராகச் செயலாற்ற வருவாரா? இல்லையென்று சொன்னால் அந்தத் தன்மையினால், தாம் குறைந்த முறையில் சட்டமன்றத் தலைவரைத் தேர்ந்தெடுக்கவேண்டியிருக்குமென்று நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இந்தச் சூழ்நிலையில் நிச்சயமாக இந்த விதி, 16-வது பிரிவு, சட்டமன்றத் தலைவருக்கு உரிய மரியாதையையும் அதிகாரங்களையும் கெடுக்கின்றதாக இருக்கிறது. ஏற்கெனவே இருக்கிற விதி 16 தான் உகந்ததாக இருக்கும் என்ற கருத்தினையும் நான் கூறிக்கொள்ள விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்ற விதிகளைத் திருத்துவதற்காக அரசியலமைப்புச் சட்டத்திலே கொடுத்திருக் கின்ற அதிகாரத்தின் அடிப்படையிலே விதி இயற்றுகின்ற குழு சில சிபாரிசு களைச் செய்திருக்கிறது. அதை ஏற்க வேண்டுமென்ற தீர்மானத்தின் மீது பல்வேறு கருத்துக்கள் இங்கே சொல்லப்பட்டன. பேரவைத் தலைவர் கட்சிக்கு அப்பாற்பட்டு இந்த மன்றத்தை நல்ல முறையிலே நடத்திச் செல்ல வேண்டிய அதிகாரங்களைப் பெற்றிருக்க வேண்டுமென்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஒரு கட்சியினாலே தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தாலும் இந்த மன்றத்திலுள்ள அத்தனை உறுப்பினர்களுக்கும் தலைவர் என்ற முறையிலே அவருடைய உரிமைகளைப் பாதுகாத்து, அரசியலமைப்பு சட்டப்படியும், சட்டமன்ற விதிகளின்படியும் பேரவையை நடத்திச் செல் கின்ற உரிமையும், அதிகாரமும் பேரவைத் தலைவருக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்பதிலும் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

ஆனால், அதற்கு அடுத்த கட்டமாக, பேரவைத் தலைவரும் இந்த மன்றமும் என்ற நிலை ஏற்படும்போது, இந்த மன்றத்தினுடைய உரிமையைவிட, பேர வைத் தலைவருக்கு உரிமை இருக்க வேண்டுமா என்ற பிரச்சினைதான் எழுப்பப் பட்டு, இப்படிப்பட்ட திருத்தங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு உரிமை களா, அல்லது தனி நபராகப் பேரவையில் அமர்ந்திருக்கிற பேரவைத் தலைவ ருக்கு உரிமைகளா என்ற கேள்வி வந்தால், ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள யாவரும் இந்த மன்ற உறுப்பினர்களுக்குத்தான் முதல் உரிமை கொடுப் பார்கள். அதுதான் ஜனநாயகம் என்பதை நாம் நினைவுகூர்ந்து பார்க்க வேண்டும்.





இந்த விதிகளை அரசாங்கம் கொண்டுவந்தவுடன், எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள் என்றைக்கும் எதிர்க்கட்சியிலேயே இருப்போம், எதிர்க்கட்சி யிலே உள்ளவர்கள் என்றைக்கும் இந்தப் பக்கம் வரமாட்டோம் என்று எண்ணிக்கொண்டு பேசுவது சரியல்ல என்று நான் நினைவுபடுத்த விரும்பு கிறேன்.

அது மட்டுமல்ல, இந்த மன்றத்திலேதான் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டு, அதற்காக இந்தத் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டனவோ என்று எதிர்க்கட்சிகள் கேட்பது சரியல்ல. நம்முடைய மன்றத்தில் ஒரு 'அசாதாரண மான நிலை'—அப்பொழுது அந்த வார்த்தைதான் உபயோகப்படுத்தப்பட்டது —இருந்தது. இதற்கு முன்னாலேயே இந்திய நாட்டிலே, பஞ்சாப் மாநிலத் திலே இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்பட்டவுடன் இந்திய நாட்டிலேயுள்ள எல்லா மாநிலப் பேரவைத் தலைவர்களுடைய சிந்தனையும் இதன்பால் செலுத்தப்பட்டது. அதேபோல், மக்கள் சபையினுடைய—பாராளுமன்ற— தலைவர் அவர்களும் இந்தப் பிரச்சினையில் தன்னுடைய அந்தக் கருத்துக்களை தெரிவித்தார்கள். ஆக, இந்த அரசாங்கம்தான் காரணம், இங்கே நடந்த நிகழ்ச்சிதான் இதற்குக் காரணம் என்பது பொருந்தாது என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த முடிவைக்கூட, நம்முடைய அரசே ஏதோ திட்டமிட்டு எடுத்ததாக யாராவது கருதுவார்களானால் அது தவறாகும். எல்லா மாநிலப் பேரவைத் தலைவர்களும், பாராளுமன்றத் தலைவருடைய தலைமையிலே கூடிப் பரிசீலித்து, அவர்களும் இப்படிப்பட்ட கருத்துக்களைச் சிபாரிசு செய்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் இப்படிப்பட்ட திருத்தங்கள் எல்லாம் கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

இங்கே எழுப்பப்பட்டவை இரண்டே இரண்டு பிரச்சினைகளாகும். முதல் பிரச்சினை இந்தச் சபையை ஒத்திவைக்கிற அதிகாரத்தைப்பற்றி. இந்தச் சபையை ஒத்தி வைப்பதற்கான முழு அதிகாரத்தையும் பேரவைத் தலைவ ருக்குக் கொடுத்திருக்கிறோம். அதிலே எந்தவிதமான வித்தியாசக் கருத்தும், கொடுக்கக் கூடாது என்பதாக, எதிர்க்கட்சித் தலைவர்கள் யாருக்கும் கிடையாது. ஆனால், அதே சமயத்திலே, பேரவைத் தலைவர், இந்த மன்றத்தி னுடைய விருப்பத்திற்கு எதிராகப் பேரவையை ஒத்திவைக்க முடியும் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள நினைப்போமானால், அது ஜனநாயகத்திற்கே பேராபத்தாகும். அப்படிப்பட்ட சூழ்நிலை 20 ஆண்டுகளாக ஏற்படாவில்லை. கடந்த ஓரிரண்டு ஆண்டுகளாகத்தான் இந்தியாவிலே பஞ்சாபிலும், நம்முடைய தமிழ்நாட்டிலும் ஏற்பட்டது. ஆக, அந்த நிலை ஏற்பட்டால், மன்ற உறுப்பினர்

இருப்பது வேறு விஷயம். ஆகவே, இதைப்பற்றி பத்து நாட்களுக்குப் பிறகு மீண்டும் கூடி முடிவு செய்யலாம். சில சந்தேகங்களைக் கிளப்பியிருக்கிறோம். எனவே, போடக்கூடிய ரூல்கள் பர்பெக்டாக இருக்கட்டுமே என்று சொன்னேனே தவிர, இதில் டிஃபீட், விக்டரி என்று ஒன்றுமில்லை. நீங்கள் ஜனநாயக முறையிலே எதிர்க்கட்சிகளின் கருத்தை ஏற்று குழுவிற்கு அனுப்பியமாதிரியும் இருக்கும். எனவே, யோசனை சொன்னவர்கள் எல்லோரையும் போட்டு நல்ல முடிவாக, சரியான முடிவாக வந்தால் நல்லதாக இருக்கும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இந்தக் கமிட்டியிலே டாக்டர் ஹாண்டே அவர்கள்கூட இருக்கிறார்கள். அவர்கள் ஒரு கூட்டத்திற்குக்கூட வரவில்லை என்று கருதுகின்றேன். அவர்கள் அதிலே கலந்துகொண்டு இந்த யோசனைகளை அதில் சொல்லியிருக்கலாம். இப்பொழுது மாண்புமிகு அமைச்சரவர்கள் எடுத்துக்காட்டியதைப்போல், எல்லோரும் சேர்ந்து நிறைவேற்றி விட்டு, அமைச்சரவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல் திருத்தங்கள் கொடுத்தால் அவைகளைப்பற்றி மறுபரிசீலனை செய்யலாம், பரிசீலித்து இணைத்துக் கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :—

"10—8—1973-ம் நாளன்று அவைமுன் வைக்கப்பட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை நடைமுறை விதிக் குழுவின் பரிந்துரைகளின் மீதான இறுதி அறிக்கைக்கு இப்பேரவை ஒப்புதல் அளிக்கிறது".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

### (ஆ) ஓய்வு பெற்ற பேரவைச் செயலாளர் திரு. கா. து. நடராசன் அவர்களுக்குப் பாராட்டு.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் :

"தமிழ்நாடு சட்டப் பேரவையின் செயலாளராகப் பணியாற்றி 14—5—1973-ம் நாள் முற்பகலில் ஓய்வுபெற்ற திரு. கா. து. நடராசன், எம்.ஏ., பி.எல். அவர்கள் நமது சட்டமன்றத்தில 1956-ம் ஆண்டு முதல் 1973-ம் ஆண்டு வரையில் ஆற்றியுள்ள நீண்டகால தகைசால் பணியையும், உடனடியாக ஆலோசனையளிப்பதில் அவருக்கிருந்த திறமை, சட்டமன்ற விதிகள், மரபு ஆகியவற்றில் அவர் கொண்டிருந்த அறிவாற்றல்,





தங்கள் கடமைகளைச் செய்வதில் சட்டமன்றத்திற்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அவர் புரிந்துள்ள உதவி ஆகியவற்றையும் புகழ்ந்து இப்பேரவை அளிக்கும் பாராட்டுதல்களை அவருக்குத் தெரிவிக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறது".

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஓய்வுபெற்ற திரு. கா. து. நடராசன் அவர்கள் 1964-ம் ஆண்டு முதல் இங்கே பணிபுரிந்து வந்திருக்கிறார்கள். 1962-ம் ஆண்டு முதல் 1967-ம் ஆண்டு வரையிலும் எதிர்க்கட்சியிலே உறுப்பினராக இருந்தபொழுதும், இப்பொழுது இந்தப் பேரவையிலே தலைவராக இருந்து பணிபுரிகின்ற இந்த ஒரு நிலையிலேயும் நான் அவர்களுடைய பணியினை நன்கு அறிந்திருக்கின்றேன். பேரவைத் தலைவர் சட்டக் கல்வி பயிலாத நிலையிலும் இந்த அவையை நடத்துவதற்கு எவ்வளவு பெருந்துணையாக அவர்கள் இருந்தார்கள் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். பேரவைத் தலைவர்களின் மாநாடு நடைபெறும் இடங்களுக்கு அவர்களோடு சென்றபொழுது அங்கே இந்திய நாட்டின் பல்வேறு மாநிலங்களிலேயிருந்து வந்த செயலாளர்களும், பேரவைத் தலைவர்களும் அவர்களிடத்தில் எவ்வளவு மரியாதை காட்டினார்கள் என்பதையும், நாடாளுமன்றத் தலைவரவர்களும், அந்தத் துறையின் செயலாளர் அவர்களும் எவ்வளவு தூரம் அவர்களை மதித்தார்கள் என்பதையும் நான் அறிந்திருக்கிறேன். அவர்களுக்கு இந்த மன்றம் அளிக்கின்ற பாராட்டோடு நானும் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தீர்மானத்தைப் பேரவை ஒருமனதாக ஏற்றுக்கொள்கிறது என்று கருதுகிறேன்.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

### (இ) கறுப்புப் பணத்தை வெளிக் கொண்டுவருவதற்கு வாஞ்சு குழுவினரது பரிந்துரைகளை மத்திய அரசு ஏற்று செயல்படுத்தலும், மாநில அரசுகளும் அதனைச் செயல்படுத்தத் தேவையான அதிகாரங்களை மத்திய அரசு வழங்க வேண்டும் என்பதும் குறித்து.

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்—

"நாட்டின் பொருளாதாரச் சீரழிவிற்கும், விலை ஏற்றத்திற்கும், வாழ்க்கைச் செலவுப் பெருக்கத்திற்கும் முக்கியமான காரணம் கறுப்புப் பணப் புழக்கம் என்பதை எடுத்துக்காட்டி, அந்தக் கறுப்புப் பணத்தை

வெளியில் கொண்டு வருவதற்கு வாஞ்சு (Wanchoo) குழுவினர் கூறியிருக்கும் பரிந்துரைகளை மத்திய அரசு ஏற்றுச் செயற்படுத்த வேண்டுமென்றும், அவ்வாறு செயற்படுத்தும் நடவடிக்கைகளை மாநில அரசுகளும் எடுப்பதற்குத் தேவையான அதிகாரங்களை மாநில அரசுகளுக்கு வழங்க வேண்டுமென்றும் மத்திய அரசை இந்த மன்றம் கேட்டுக்கொள்கிறது".

தலைவரவர்களே, நேற்று நடைபெற்ற விவாதத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் நண்பர் தங்கமணி அவர்களும், பழைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் நண்பர் பொன்னப்ப நாடார் அவர்களும், சுதந்திராக் கட்சியின் தலைவர் வெங்கடசாமி அவர்களும் இப்படி ஒரு தீர்மானம் இன்றைக்குக் கொண்டு வரப்படும் என்று அறிவித்ததை ஏற்றுக்கொண்டார்கள். இப்படி ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட வேண்டுமென்ற கருத்தைக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரவர்கள் இங்கே வெளியிட்டபொழுது, எந்த நல்ல கருத்துக்கள், பயனுள்ள கருத்துக்கள் எதிர்க்கட்சியிலேயிருந்து எடுத்துச் சொல்லப்பட்டாலும் அவைகளை இந்த அரசு ஏற்றுக்கொள்ளும் என்பதற்கு எடுத்துக்காட்டாக, உடனடியாக நான் இந்த அவையிலே எழுந்து அதை ஏற்றுக்கொண்டது மட்டுமல்லாமல், அதை விரைவாகச் செயல்படுத்தும் வகையிலே இந்தத் தீர்மானத்தையும் இங்கே முன்மொழிந்திருக்கின்றேன்.

இந்தத் தீர்மானத்திலே மிக முக்கியமான அம்சமாக நாம் கோடிட்டுக் குறித்து வைத்துக்கொள்ள வேண்டியது, "கறுப்புப் பணத்தை வெளியில் கொண்டு வருவதற்கு வாஞ்சு குழுவினர் கூறி இருக்கும் பரிந்துரைகளை மத்திய அரசு ஏற்றுச் செயற்படுத்தவேண்டும்" என்பதும், "அவ்வாறு செயற்படுத்தும் நடவடிக்கைகளை மாநில அரசுகளும் எடுப்பதற்குத் தேவையான அதிகாரங்களை மாநில அரசுகளுக்கு வழங்க வேண்டுமென்றும் மத்திய அரசை இந்த மன்றம் கேட்டுக் கொள்கிறது" என்பதும் முக்கியமான அம்சமாகும். வாஞ்சு கமிட்டி என்று சொல்லப்படும் அந்தக் குழு "டைரக்ட் டாக்சஸ் என்கொயரி கமிட்டி" என்ற பெயரால் ஒரு அறிக்கையைத் தயாரித்திருக்கிறது. அந்த அறிக்கையிலே மிக முக்கியமான சில பரிந்துரைகள் கறுப்புப் பணத்தைப் பற்றிய பகுதியாகும். இதிலே அந்தக் குழுவினர் கூறுகிறார்கள்.

'Black money is like a cancer growth in the country's which, if not checked in time, is sure to lead to ruination'.

என்று குறிப்பிடுகிறார்கள். கறுப்புப் பணம் பொருளாதாரச் சீரழிவிற்குப் புற்று நோயைப்போல் இன்றைக்கு வளர்ந்து வருகிறது. ஆகவே, உடனடியாக,



அந்தக் கறுப்புப் பணத்தை ஒழித்துக் கட்ட வேண்டுமென்ற குறிக்கோள் இந்தப் பரிந்துரையிலே அடங்கியிருக்கிறது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அதைப்போல, எப்படி உருவாகிறது, ஏன் உருவாகிறது, என்ற காரணங்களைச் சொல்லும் நேரத்திலே கூட,

'black-money is found widely used for conducting concealed business transactions smuggling gold and luxury articles, financing secret commissions, giving donations to political parties, acquiring assets in benami names and the vulgar display of wealth which is evidenced by ostentatious living and levisn expenditure in wedding, festival, etc. is the scourage of black-money.'

என்றும் அந்த அறிக்கையிலே அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். படாடோபச் செலவு, பினாமி ஆக சொத்துக்களை எழுதி வைப்பது, தொழில்களைத் தொடங்குவதற்கு மறைமுகமாகப் பணத்தை முடக்குவது, ஆடம்பர வாழ்க்கை வாழ்வது ஆகிய இவைகளுக்கு இந்தக் கறுப்புப் பணம் ஒரு காரணமாக இருப்பதால் அதை இன்றைக்கு மறைத்து வைத்து, அப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்வதற்காக நாட்டிலே குறிப்பிட்ட சிலர் வரி ஏமாற்றுதல் போன்றவைகளைச் செய்து, கறுப்புப் பணத்தை மறைத்து வைத்து, ஆடம்பர வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் இந்த அறிக்கை சுட்டிக் காட்டத் தவறவில்லை. விலை உயர்வால் இன்றைக்குக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்ற இந்திய நாட்டில் இந்தக் கறுப்புப் பணத்தை, கள்ளச் சந்தையை ஒழிப்பதற்காகத் தீவிரமாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் நிச்சயமாகப் பயன்படும் என்கின்ற கருத்தை நேற்று இந்த அவையிலே நான் எடுத்துச் சொல்லியிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் மறந்திருக்க மாட்டார்கள் என்றே நம்புகிறேன்.

வரி உயர்வால் கறுப்புப் பணம் பதுக்கப்பட்டுள்ளது என்பது ஒரு வாதம். இந்த வாஞ்சு கமிட்டியிலேகூட வரியைப்பற்றிச் செய்திருக்கின்ற சில சிபார்சுகள் எல்லாவற்றையுமே நாம் ஏற்றுக்கொள்கிறோமா என்பது வாதத்திற்குரிய பிரச்சினை. வரியைப்பற்றி சொல்லியிருக்கிற பிரச்சினைகளில் மாநில அரசுகளையும் கலந்துகொண்டு அந்தப் பரிந்துரைகளை அமல்படுத்த வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கு இருக்கிறது. ஆனால், நான் தேசிய வளர்ச்சிக்

குழு முதலமைச்சர்கள் மாநாட்டிலே கலந்துகொண்டபொழுதுகூட ஒரு கருத்தைச் சொன்னேன். கறுப்புப் பணத்தை வெளிக் கொணர மென்மையான வழிகளைப் பின்பற்ற இந்த அரசு கருதுமேயானால், வரி உயர்வால் வரி கட்டப் பயந்து அல்லது வரி கட்டினால் தங்களுடைய சம்பாதித்த பணம் முழுவதும் போய்விடும் என்று எண்ணி மறைத்து வைத்திருப்பவர்கள் அவர்களாகவே அதை வெளிக்கொணர, அவர்களே முன்வந்து தொழிலிலே முதலீடு செய்ய வந்தால் அப்படி முன் வருபவர்களுக்கு வரிச் சலுகை அளித்தாவது அந்தப் பணத்தை வெளிக் கொணரலாம். அது என்னுடைய முடிந்த முடிவு அல்ல; அதுபற்றி மத்திய அரசு யோசிக்கலாம் என்ற கருத்தைக்கூட தேசிய வளர்ச்சிக் குழுவில் எடுத்துச் சொன்னேன். அதையும் இந்த அவை அறியுமென்று நான் கருதுகிறேன்.

இந்த அறிக்கையிலே இன்னொன்றையும் குறிப்பிடுகிறார்கள். பொதுவாக, அரசியல் கட்சிகளுக்கு நன்கொடைகள் தருவது இந்தக் கறுப்புப் பணத்திலிருந்துதான் என்பதைச் சுட்டிக்காட்டுகிற நேரத்தில் ஒன்றை அவர்கள் கோடிட்டுக் காட்டுகிறார்கள்.

‘Removal of the ban on donations by companies to political parties is, therefore, not favoured. Nevertheless, it is an accepted
மு.க. 11–30 fact of life that in a democratic set-up political parties have to spend considerable sums of money, and that large sums are required for elections. As in West Germany and Japan, in our country also, the Government should finance political parties.’
என்ற கருத்தையும் அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

நான் சென்ற முறைக்கு முன்முறை இந்தியப் பிரதமர் அவர்களைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தபோது நானும், நம்முடைய சட்ட அமைச்சர் மாதவன் அவர்களும் இந்தக் கருத்தை அவர்களிடத்தில் சொன்னபோது, அவர்களும் அதை முழுக்க முழுக்க ஒத்துக்கொண்டார்கள். ஒத்துக் கொண்டு தேர்தல் நேரங்களில் அரசாங்கமே அந்தத் தேர்தல் செலவுகளைக் கவனிக்கின்ற அளவுக்கு நன்கொடைகளை வழங்கலாம், செலவுகளை ஏற்றுக் கொள்ளலாம் என்ற கருத்தைப் பிரதமர் அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். நாங்கள் கலந்து பேசக்கூடிய காலத்தில் இரு சாராரும் ஒத்துக் கொள்ளக்கூடிய கருத்தாக இருந்த காரணத்தால், தஞ்சை





மாவட்டத்தில் நடைபெற்ற மன்னார்குடி திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டில் கூட, தேர்தல் செலவுகளை எல்லாம், கறுப்புப் பணத்தை ஒழிக்க வேண்டுமென்ற அடிப்படையில் அரசாங்கமே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற அடிப்படையில் கழகத்தின் சார்பில் நாங்கள் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறோம். அது பத்திரிகைகளில் எல்லாம் வந்திருப்பதை அனைவரும் அறியக் கூடும்.

ஆகவே, இப்படிப்பட்ட பல்வேறு நிலைகளில் இன்றைக்கு வளர்ந்து கொண்டு போகிற கறுப்புப் பண நடமாட்டத்தை—கறுப்புப் பணம் முடங்கிக் கிடக்கிறது, இரவு நேரங்களில் நடமாடிக் கொண்டிருக்கும். இரவு நேரம் என்று நான் குறிப்பிட்டது யாருக்கும் தெரியாமல் நடமாடுவதைத்தான் நான் குறிப்பிடுகிறேன்—தடுக்க, முடங்கிக் கிடப்பதை வெளியிலே கொண்டுவர என்ன முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று வாஞ்சு கமிட்டியினர் சொல்லுகிற நேரத்தில்—

‘The power of search under the Income-tax Act is a potent instrument in the hands of the Department to provide direct and clinching evidence about tax evasion and the existence of black money. The Department should make an increasing use of its powers of search and seizure in appropriate cases.’
என்று அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

வருமான வரித் துறையினர் இன்றைக்கு எடுக்கிற நடவடிக்கைகள் மேலும் வேகமாக முடுக்கப்பட வேண்டும், தீவிரமாக ஆக்கப்பட வேண்டும் என்ற கருத்தும் இந்தக் குழுவின் மிக முக்கியமான சிபாரிசாக இருப்பதை நாம் அறிவோம். இந்த நேரத்தில் தீர்மானத்திலே ஒன்றைச் சேர்க்க எண்ணினோம். அதை இணைக்கவேண்டுமென்பதிலே கருத்து வேறுபாடு எழுந்தது. ஆனால் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கூட அதையும் இணைத்துக் கொள்ளலாம் என்று உறுதியாகச் சொன்னார்கள்.

இந்த அதிகாரங்கள், கறுப்புப் பணத்தை வெளியே கொணர எடுக்கும் அதிகாரங்கள் மத்திய அரசுக்கு இருப்பதோடு மாநில அரசுக்கும் வழங்கப்பட வேண்டும். மத்திய அரசு தலையிடக் கூடாது என்று கூறவில்லை. மத்திய அரசு நடவடிக்கை எடுக்கிற நேரத்தில் மாநில அரசுக்கும் அந்த

அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். மத்திய மாநில அரசு அளவுக்கு இந்த நாட்டில் இருக்கும் நிலைமைகளோடு நெருங்கிப் பழகுகின்ற சூழ்நிலை பெற்றிருக்கவில்லை. அது டில்லிப் பட்டணத்தில் இருக்கிறது என்பது மாத்திரமல்ல; டில்லிப் பட்டணத்தில் இருந்தாலும் அதிகாரக் கால்கள் நாடெங்கும் பாவி இருக்கிறது; இந்திய பூபாகம் முழுவதும் படர்ந்து இருக்கிறது என்றாலும் மாநில அரசுகள் பரவலாகப் படர்ந்து மக்களோடு நெருங்கி நிலைமைகளை அறியும் வாய்ப்புக் கூறுகள் பெற்றிருக்கிற அளவு மத்திய அரசு பெற்றிருக்காது என்று கருதுகிறேன். மாநில அரசுக்கும் அந்த அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென்று மிகத் தெளிவாகத் தீர்மானத்தில் குறிப்பிட்டிருக்கிறோம். ஆகவே, அப்படிச் செய்தால்தான் மக்களோடு நெருங்கிய தொடர்புகொண்ட மாநில அரசுகள் கறுப்புப் பணத்தை வெளியில் கொண்டு வருகிற முயற்சியில் வெற்றி காண முடியும்.

அந்த அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்படும் என்றார்கள். அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்வது என்றால் அதை மாநில அரசும் செய்யலாம், மத்திய அரசும் செய்யலாம். மாநில அரசுகள் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்யும், மத்திய அரசு ஒன்றுதான் புனிதமானது என்ற எண்ணத்தை வளர்த்துக் கொள்ள வேண்டாம். மத்திய அரசு புனிதமான தாக இருந்து மாநில அரசுகள் துஷ்பிரயோகம் செய்வதாக இருக்கலாம். சில நேரங்களில் மாநில அரசு புனிதமானதாக இருந்து மத்திய அரசு துஷ்பிரயோகம் செய்வதாகவும் இருக்கலாம். ஆகவே, இதிலே மாநில அரசு என்றென்றும் துஷ்பிரயோகம் செய்யும், மத்திய அரசு துஷ்பிரயோகமே செய்யாது என்ற முடிவை எடுத்துக் கொள்ளக் கூடாது. மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற எந்த அரசும் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்தால் தீர்ப்பளிக்கும் பொறுப்பை மக்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் ஜனநாயகம் விதித்திருக்கும் காலகட்டத்தில் அந்தத் தீர்ப்பை நிச்சயமாக அளிக்க மக்கள் காத்திருப்பார்கள் என்ற நம்பிக்கையோடு, மாநில அரசும் அதிகாரத்தைப் பெறவேண்டும், துஷ்பிரயோகம் செய்யப்படமாட்டாது என்ற உறுதியை அளிக்கிறேன்.

பரிட்சார்த்தமாக ஓராண்டுக் காலத்திற்கு மத்திய அரசு, மாநில அரசுக்கு அந்த அதிகாரத்தைக் கொடுத்துப் பார்க்கட்டும். இட்டத்தட்ட ஆறாயிரம்-கோடி வரை நம் நாட்டில் கறுப்புப் பணம் இருக்கிறது. அதிலே



தமிழ்நாட்டிலே முடங்கிக் கிடக்கும் கறுப்புப் பணத்தில் பெரும்பகுதியை— பரிட்சார்த்தமாக ஓராண்டுக் காலத்திற்கு அதிகாரத்தைக் கொடுத்தால்— வெளிக் கொணரும் முயற்சியில் வெற்றி பெறும் என்று எடுத்துச் சொல்லி, இந்த முக்கியமான தீர்மானத்தை, நேற்றைக்கு எல்லாக் கட்சித் தலைவர்களும் அங்கீகரித்ததற்கு ஏற்ப, இதற்கு அங்கீகார முத்திரையை வழங்குவார்கள் என்ற நம்பிக்கையோடு முன்மொழிகிறேன்.

* THIRU K. M. SUBRAMANIAM: Mr. Speaker, Sir, on behalf of my party, I fully support the Resolution that has been brought before this House.

But, before doing so, I would like to know whether the Government are not having powers in the State to curb blackmarketing of various things and unearthing of black money within the State. There have been many, many instances of tax evasion in the State. There is already the evasion of Sales Tax. There are also other forms of tax evasion and creation of a lot of black-money. It was said that the black money was to the extent of 6,000 crores of rupees in the country. Every year the black money is being created and the amount is increasing. Another black money is in the form of interest that is obtained on the loans issued on pro-notes.

Black money in the form of interest is also going up. Interest charges are accumulated by the Pawn brokers and others who are giving money on pro-notes. They give on the pro-notes at the rate of 12 per cent, but actually they are charging 24 per cent or 36 per cent or even more. Such things can be checked by this Government, because the black money is multiplied at the rate of 25 per cent according to certain reports. Now the black money has increased by 2,000 rupees according to certain reports,. According to a recent statement in the Press and also quoted by certain authorities, the black money in the country is Rs. 7,500 crores. Previously, it was 5,000 crores. Now the amount has multiplied. I entirely agree that such powers must be given to check and unearth black money. Certain powers are already in

existence in the State. But they have not been enforced by the Government properly. If they can exercise such powers, they will be able to bring out more black money. I hope the Government will do it. They can do substantially to reduce the black money inside the State itself. How much black money is in circulation in Madras City alone, God only knows! Thank you. Sir.

* **திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** தலைவர் அவர்களே, அரசால் கொண்டு வரப்பட்டிருக்கும் இந்தத் தீர்மானத்தின் முற்பகுதியைத்தான் எங்கள் கட்சியின் சார்பில் ஏற்றுக்கொள்ள முடிகிறது. இன்றைக்கு நாட்டிலே கறுப்புப் பணத்தினுடைய விளைவுகள், நாட்டினுடைய பொருளாதாரத்தை எவ்வளவு சீரழியச் செய்திருக்கின்றன என்பதை நாம் உணர்ந்து கொண்டிருக்கிறோம். அந்த நிலையிலே கறுப்புப் பணத்தைக் கட்டுப்படுத்தி, அதனுடைய போக்கைக் கட்டுப்படுத்தி, நாட்டைப் பொருளாதாரச் சீரழிவிலிருந்து நாம் மீட்டாக வேண்டும். அதற்காக வாஞ்சு கமிட்டியினர் தங்களுடைய ரிப்போர்ட்டில் கள்ளப் பணத்தை எப்படிக் கட்டுப்படுத்துவது என்று கூறியிருக்கின்ற சிபாரிசுகளை மத்திய சர்க்கார் அமலாக்க வேண்டுமென்று சொல்ல வந்த தீர்மானத்தை நாங்கள் பரிபூரணமாக ஏற்றுக் கொள்கிறோம்.

அடுத்து, மாநில அரசுக்கும் அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என்றிருக்கிற வாசகத்தை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. காரணம், ஏதோ அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்துவிடுவார்கள் என்ற காரணத்தால் மட்டும் அல்ல. துஷ்பிரயோகம் இன்னும் பல இடங்களில் கூட நடக்கலாம். ஆனால் வாஞ்சு கமிட்டியினர் நடவடிக்கைகள் எப்படி இருக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். (1) Demonetisation, (2) Ceiling on cash holdings, (3) Acquisition of immovable property in cases of under-statement of purchase consideration இது மூன்றிலும நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். இதை அமலாக்கும்போது ஸ்டேட் கவர்ன்மென்ட்க்கு இதை அமலாக்கக் கூடிய அதிகாரம் எப்படி வருகிறது, எப்படிச் செயல்படுத்த முடியும் என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும். Demonetisation என்பது மாநில சர்க்கார் செய்யமுடியாத ஒன்று. ceiling on cash holdings பாங்கிங் பூராவும் மத்திய அரசின் அதிகார வரம்பிற்கு உட்பட்டிருக்கிறது. Acquisition of immovable property in cases of under-statement of purchase consideration இது இன்கம் டாக்ஸ் ஆபீஸ் கவனிக்க வேண்டிய ஒன்று. ஆகவே கான்ஸ்டிட்யூஷனில் மத்திய



சர்க்கார் அமலாக்கக்கூடிய அதிகார வரம்பிற்கு உட்பட்டு இத்திட்டம் இருப்பதால் இதை, வாஞ்சு கமிட்டி ரிப்போர்ட்டில் அமலாக்கும் அதிகாரம் மாநில அரசுக்கும் கொடுக்கப்பட்டால் சட்டப் பிரசனையில் மத்திய அரசும் மாநில அரசும் மோதக்கூடிய ஒரு நிலை ஏற்படுமே தவிர அதனால் பெரும் பலன் கிடைக்காது என்பதால் "... அவ்வாறு செயற்படுத்தும் நடவடிக்கைகளை மாநில அரசுகளும் எடுப்பதற்குத் தேவையான அதிகாரங்களை மாநில அரசுகளுக்கு வழங்க வேண்டுமென்றும்..." என்ற வரியை எதிர்த்து மேலே உள்ள வாஞ்சு கமிட்டி ரிப்போர்ட்டை அமலாக்கவேண்டுமென்ற இந்தத் தீர்மானத்தின் முற்பகுதியை ஆதரித்து அமர்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டிருக்கிற இந்தத் தீர்மானத்தை நான் முழுமனதுடன் ஆதரிக்கிறேன்.

வாஞ்சுக் கமிட்டி சார்பாக நாட்டிலே இருக்கிற பொருளாதார நிலைகளை எல்லாம் ஆராய்ந்து நாட்டிலே இன்றைக்கு இருக்கிற பொருளாதார சீர்குலைவிற்கெல்லாம் நடமாடுகிற கறுப்புப் பணம்தான் காரணம் என்பதை உணர்ந்து இந்தச் சிக்கலை எப்படித் தீர்க்கவேண்டும், இந்தக் கறுப்புப் பணத்தின் நடமாட்டத்தை எப்படித் தடுக்கவேண்டும் என்பதற்காகச் சில பரிந்துரைகளை வழங்கியிருக்கிறார்கள். அதன் அடிப்படையில்தான் இந்த அவையில் பல உறுப்பினர்களால் மிகவும் கவலையோடு நேற்று எடுத்துச் சொல்லப்பட்ட விலைவாசியேற்றத்தைத் தடுக்க நாம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்ற அடிப்படையிலும், இந்த அரசு நாட்டினுடைய பொருளாதாரத்தின்மீது கொண்டிருக்கிற மிகுந்த அக்கறையின் அடிப்படையிலும், இந்த அவையின் எண்ணத்தைப் பிரதிபலிக்கிற வகையிலும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இத்தீர்மானத்தை இங்கு முன்மொழிந்திருக்கிறார்கள். இதை நான் முழுமனதுடன் ஆதரிக்கிறேன்.

ஒரு பொருளாதார மாணவன் என்ற முறையில் சொல்கிறேன், இன்றைக்கு நாட்டிலே கறுப்புப் பணம், கள்ளப் பணம் நடமாடுவது பொருளாதாரத்தையே அதனுடைய அடிப்படையையே தகர்த்தெறியக் கூடிய ஒரு நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறது என்பதை நிச்சயமாக நான் உணருகிறேன். அதே நேரத்தில் என் கவலை எல்லாம் இந்தக் கறுப்புப்

[திரு. எம். ஏ. லத்திப்] [1973 ஆகஸ்ட் 11

பணம் என்கிற ப்ளாக் மணி எப்படி உருவாகிறது என்பதைக் கூட நாம் சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். இது ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டும், தமிழ் மாநிலத்தில் மட்டும் அடக்கப்படக் கூடிய ஒரு பிரச்னை இல்லை. இந்தியா முழுவதும் நடக்கிற சில பொருளாதார நடவடிக்கைகளின் அடிப்படையில் அந்தப் பொருளாதார நடவடிக்கைகளை நடாத்துகிற முழுப் பொறுப்பையும் மத்திய அரசு வைத்துக் கொண்டிருக்கிற ஒரே காரணத்தால் இன்று மற்ற மாநிலங்களில் நடக்கிற பலவிதமான பொருளாதாரச் சிக்கல்களின் விளைவுகளைத் தமிழ் மாநிலமும் அனுபவிக்கிற ஒரு சூழ்நிலை இருப்பதால் இந்தக் கறுப்புப் பணத்தை வெளியே கொண்டு வருகிற அதிகாரத்தை மத்திய அரசு மட்டுமல்லாமல் மாநில அரசுகளும் பெற வேண்டும். அதற்கான அதிகாரத்தை மாநில அரசும் பெறுவதற்கான வகைகளை நாம் காண வேண்டும் என்று முதல் அமைச்சர் அவர்கள் சொல்வது முற்றிலும் ஒரு நியாயமான கோரிக்கை என்பதை ஒரு நியாயமான எண்ணம் என்பதை வலியுறுத்திச் சொல்கிறேன். ஏனெனில், ஒரு மாநில அரசுதான் ஒரு மாநிலத்தில் இருக்கிற வியாபாரிகள் யார், பெரும் பணக்காரர்கள் யார் என்பதை மத்திய அரசை விட நல்ல முறையில் அதிகமாக அறிந்திருக்க முடியும். ஆகவே, இந்த அதிகாரத்தை மாநில அரசுக்குத் தர வேண்டும் என்று கோருவது ஒரு நியாயமான கோரிக்கையாகும். இந்த நாட்டினுடைய பொருளாதாரச் சீர்குலைவை அகற்ற வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் கோரப் படும் கோரிக்கைதான் இது.

கறுப்புப் பணம் ஏற்படக் காரணம் என்ன என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாட்டில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அதை யாரும் மறுப்பதற்கில்லை. உற்பத்தி பெருகியிருக்கிறது. அதையும் யாரும் மறுப்பதற்கில்லை. நாஷனல் இன்கம் பெருகியிருக்கிறது. அதையும் யாரும் மறுப்பதற்கில்லை. ஜனத்தொகை அதிகமாக இருந்தாலும் இன்றைக்கு 'ஓவர் ஆல் எக்கனமிக் க்ரோத்' 'ஓவர் ஆல்' பொருளாதார வளர்ச்சி நிச்சயமாக ஏற்பட்டிருக்கிறது. அப்படிப் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டிருக்கிற இந்தச் சூழ்நிலையில் நம் நாட்டிலிருக்கிற குறை என்ன வெனில் நம்முடைய ப்ளானிங்கில் அடிப்படையான எந்தக் கோளாறும் இல்லை. ப்ரொடக்ஷன் பாட்டேர்ன்-ல், ப்ரையாரிட்டி ஆப் செர்டன் ப்ரொடக்ஷன்-ல் ப்ரயாரிட்டியில் எந்தவிதமான அடிப்படையான கோளாறும் இல்லை. உற்பத்தி முறைகளில் எந்தவிதமான அடிப்படையான கோளாறும்



1973 ஆகஸ்ட் 11] [திரு. எம். ஏ. லத்திப்]

இல்லை. இருப்பதெல்லாம் டிஸ்ட்ரிப்யூஷன், பங்கீட்டு முறையில்தான் இன்று கோளாறுகள் வருகின்றன. நாட்டில் அபரிதமான உற்பத்தி ஏற்பட்டும்கூட பங்கீடு செய்யும்போது பங்கீட்டின் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற வர்கள், ஏஜென்ட்கள், இடையில் இருப்பவர்கள், ஏஜன்ட்களாக இருக்கக் கூடியவர்கள், இன்று என்ன செய்கிறார்கள் என்றால் அது மக்கள் வரை செல்ல முடியாத முறையில் அவர்கள் அதைத் தடுத்துவிடுகிறார்கள், பங்கீட்டு உரிமை பெறுகிறவர்கள், யார் யார் பெறக் கூடாதோ அவர்கள் எல்லாம் அந்த உரிமையைப் பெறுகிறார்கள். அப்படிப் பெறுகிற அவர்கள் அந்த உரிமையைப் பெற்று அந்த உற்பத்திப் பொருள்கள் மக்களுக்குக் கிடைக்காமல் இவர்கள் பதுக்கல் செய்கிறார்கள். அப்படிச் செய்கிற பதுக்கலின் விளைவாகத்தான் இன்று கறுப்புப் பணம் நாடு முழுவதும் நிலைத்து விட்டிருக்கிறது. இதைத் தடுப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். இப்படிப்பட்ட பதுக்கல்களை எப்படி தடுக்க வேண்டும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

யாரையும் குறை கூற நான் சொல்லவில்லை. இன்று கவர்ன்மென்ட், க்வாஸி-கவர்ன்மென்ட் பாடீஸ் என்றளவில் இருக்கிற சில பாடீஸ் நம் நாட்டில் இருக்கின்றன. அவர்களைக் கூட நாம் சரியானமுறையில் கண்காணிக்க முடியாத நிலையில் நடைமுறை இருந்து கொண்டிருக்கிறது. அவர்கள் வாயிலாகக் கூட இன்றைக்குப் பதுக்கல் முறைகள் கையாளப் படுகின்றனவோ என்ற ஐயம் நாட்டு மக்களிடையே இருந்து வருகிறது. அதைத் தடுத்திட வேண்டும்.

நேற்று பேசிய உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். நான் கூட சில நாட்களுக்கு முன்னால் கம்பம் பகுதிக்குச் சென்றிருந்தேன். என்னுடன் சட்டமன்ற உறுப்பினர் நண்பர் ராஜரத்தினம் அவர்களும் வந்திருந்தார்கள். வேறு ஒரு காரியமாக நாங்கள் இருவரும் அந்த வழி சென்று கொண்டிருந் தோம். அப்போது கம்பத்தில் சொன்னார்கள், கம்பம் ஒரு வளமான பகுதி என்று. அப்படி ஒரு வளமான பகுதியாக இருந்தும்கூட மதுரையில் படி அரிசி ரூ. 2.25 என்றால் கம்பத்தில் படி அரிசி ரூ. 4.25 என்று சொல்கிறார்கள். அங்குள்ள மக்களிடத்தில் கேட்டுப் பார்த்தேன். உத்தமபாளையம் பேரூராட்சி மன்றத்தில் எங்களுக்கு ஒரு வரவேற்புக் கொடுத்தார்கள். என் திடீர் வரவேற்பு என்று ஆச்சரியமாக இருந்தது. வரவேற்பு கொடுப்பதாக அழைத்துச் சென்று ஒரு கோரிக்கை கொடுத்தார்கள். எல்லாக் கட்சிக் காரர்களும் இருந்தார்கள். அதில் முஸ்லீம் லீக்காரர்கள் இருந்தார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இருந்தார்கள், காங்கிரஸ்காரர்கள் இருந்தார்கள் கம்யூனிஸ்ட் வலது, இடது இரு பிரிவினரும் இருந்தார்கள். எல்லோரும் சொன்னார்கள். ஒரு லாரி மதுரையில் இருந்து தேனி வழி கூடலூர் செல்கிறது என்றால் இடையில் இருக்கிற ஐந்து செக்போஸ்ட்களிலும் அந்த லாரி செல்லக் கூடிய நேரத்தில் என்ட்ரி செய்யாத நிலையிலிருந்திருக்கிறது. இதை கலக்டர் அவர்களும் அறிவார்கள். ஐந்து செக் போஸ்ட்களிலும் என்ட்ரி இல்லை. ஒரே பெர்மிட்டை வைத்துக் கொண்டு நடத்துகிறார்கள். இது யார் மேல் உள்ள குற்றம்? இந்த ஆட்சியின் மீது குற்றம் சொல்ல முடியுமா? அமைச்சர்கள் கம்பத்திற்குச் சென்று அங்கு உட்கார்ந்து கொண்டு கவனிக்க முடியுமா? Ultimately the Government are responsibl and the Minister concerned is answerable to that என்பார்கள்.

இன்று பரவலாக நாட்டிலே என்னவாகியிருக்கிறது என்றால் ஒவ்வொருவரும் பணம் சம்பாதிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் உற்பத்தியாகும் பொருள்களையெல்லாம் பதுக்கல் செய்ததன் விளைவாக, இத்தகைய சட்டத்திற்குப் புறம்பான காரியங்களுக்குத் துணை நிற்பதன் வாயிலாகத்தான் இன்றைக்கு நாட்டிலே பொருளாதாரச் சிக்கல் பொதுவாக ஏற்பட்டு இருக்கிறது. கறுப்புப் பணம் நாட்டிலே நடமாடுகிறது. அதைத் தடுக்க என்ன செய்ய வேண்டும்? அந்த வகையில் இந்த 'டிஸ்டிரிபியூஷன் பேட்டர்னை' மாற்ற வேண்டும் என்பதைத் தயவு செய்து சிந்திக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

(திரு. நா. வீராசாமி தலைமை)

அதை நாம் நல்ல முறையில் ஆராய்ச்சி செய்து பார்த்தால் நன்றாக இருக்கும். நம்முடைய நாட்டிலே மக்களுக்கு இருக்கும் 'புரோபன்சிடி டு சேவ், புரோபன்சிடி டு இன்வஸ்ட்' என்று சொல்வார்கள், அந்தச் சேமிப்பு செய்யும் எண்ணம். முதலீடு செய்யும் எண்ணம் மிகவும் குறைவாக இருக்கிறது. சாதாரணமாக நாம் கடன் கொடுக்கிறோம். பல்வேறு காரணங்களுக்காக விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கிறோம். நம்முடைய நோக்கம் என்ன? அவர்கள் விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பதுதான். விவசாயிகளுக்கு இருக்கும் பணச் சிக்கல் தீர்க்கப்பட்டு, நல்ல முறையில் அவர்கள் விவசாயத்தைக் கவனித்து விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்பதுதான். சரியாகவோ, தவறாகவோ அவர்கள் அவ்விதம் செய்வது இல்லை. அப்படி கொடுக்கப்படுகிற கடன்



அவர்களிடத்தில் சேருகிறபோது, அது எந்த வகையில் செலவழிக்கப்படுகிறது என்பதைச் சொல்லத் தேவையில்லை. அந்த வகையில் பலவிதமான கருத்துக்கள் இருந்து கொண்டிருக்கின்றன. அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற அந்தக் கடன் பணத்தைக் கொண்டு விவசாய உற்பத்தியைக் கவனிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளாமல், கல்யாணச் செலவிற்கு உபயோகித்துக் கொண்டு விடுகிறார்கள். நிலைமை அப்படியாகிவிடுகிறது. ஆகையால் அங்கே கொடுக்கப்படும் பணம் கடைசியில் எங்கே போய்ச் சேருகிறது என்றால், விவசாயிகளின் வாழ்வுக்கு வளம் கொடுப்பதற்கு அல்ல, சில முதலாளிகள், சில சமுதாய விரோதிகள், நாட்டிலே ஏழைகளைச் சுரண்ட வேண்டுமென்று இருக்கிறார்களே அவர்கள் கையில் போய்ச் சேருகிறது. அவர்கள் அதைப் பதுக்கிறார்கள். அந்த வகையில் நம் நாட்டில் கறுப்புப் பணம் நடமாடுகிறது. அதைத் தடுப்பதற்கு என்ன முயற்சிகளை நாம் செய்ய வேண்டுமென்பதை நினைத்துப் பார்க்க வேண்டும் அதனால்தான் நாம் கூறுகிறோம். இந்த அரசுக்கு, நாட்டு மக்களிடத்திலே நெருக்கடியான தொடர்பு வைத்து இருக்கிற இந்த அரசுக்கு, பொருளாதாரத் திட்டங்களை வகுக்கும் உரிமைகளைத் தாருங்கள், பொருளாதாரத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் உரிமைகளைத் தாருங்கள், நாட்டு மக்களுக்குப் பங்கீடு செய்யும் உரிமைகளைத் தாருங்கள், பங்கீடு முறைகளை வகுக்கும் உரிமைகளையும் தாருங்கள் என்று கேட்கிறோம். எங்கே கறுப்புப் பணம் நடமாடுகிறது என்று மாநில அரசு கருதுகிறதோ அங்கேயெல்லாம் அரசின் சட்டம் நுழைந்து, அவர்களைப் பிடித்து தண்டனை கொடுக்கும் வாய்ப்பையும், அதிகாரத்தையும் இந்த அரசு பெற்று இருக்க வேண்டும். அப்படிப்பெற்று இருந்தால்தான் நிச்சயமாக நாட்டிலே பொருளாதார மறுமலர்ச்சி ஏற்படுமே தவிர வேறு வகையில் நிச்சயமாக ஏற்படாது.

நண்பர் திரு. மாரிமுத்து அவர்கள் சொன்னார்கள், அவர்களுக்கும், இவர்களுக்கும் தகராறு ஏற்படும் என்று. என்ன தகராறு வரும்? மாநில அரசு யாரையாவது உண்மையாகப் பிடித்தால், நீ ஏன் பிடித்தாய் என்று மத்திய அரசு கேட்கப் போகிறதா, மத்திய அரசு உண்மையாக யாரையாவது பிடித்தால், நீ ஏன் பிடித்தாய் என்று மாநில அரசு கேட்கப் போகிறதா? எங்கள் மாநிலத்தில் நீ பிடிக்கலாமா என்று கேட்கப் போகிறார்கள்? யார் கறுப்புப் பணம் வைத்திருந்தாலும் அவர்களைப் பிடித்து தண்டனை அளிக்க வேண்டும். அவர்களை எந்த அரசு பிடித்தது என்பது அல்ல. அதிலேகூட ஒரு வருத்தம் வரக் கூடாது. இதிலே உள்நோக்கம் கற்பிப்பது சரியல்ல, தவறான

எண்ணத்தைக் கற்பிப்பது சரியல்ல. நான் திரு. மாரிமுத்து அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன், இந்தத் தீர்மானம் தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, நாட்டுக்கே எடுத்துக்காட்டாக அமைகிற ஒரு முக்கியமான தீர்மானம். மாநில முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வேன், மாநில அரசுக்கும் சீஷர் செய்து பிடிக்க, அவர்களிடத்தில் இருக்கும் கறுப்புப் பணத்தை வெளியே கொண்டு வர, பறிமுதல் செய்கிற அதிகாரம் வேண்டும், அதைக் கேட்கிற வகையில் அமைந்து இருக்கும் இந்தத் தீர்மானத்தை முழு மனதுடன் ஆதரிக்கிறேன் என்று சொல்லி, இந்த அவையின் முழு ஒப்புதல் இதற்கு இருக்கிறது, நல்லெண்ணம் இருக்கிறது என்று சொல்லி, இதை முழு மனதுடன் ஆதரித்து முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி)**: பேசுகின்ற உறுப்பினர்கள் சுருக்கமாகப் பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. என். கே. பழனிசாமி**: தலைவரவர்களே, இந்தச் சர்க்கார் கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தின் முதல் பகுதி இந்த வாஞ்சு கமிட்டியின் சிபார்சை அமல் செய்ய வேண்டுமென்று இருப்பதை நான் ஆதரிக்கிறேன். அது மட்டுமல்லாமல், முதன்முதலாக, மாநிலங்களிலே இப்படிப்பட்ட ஒரு பிரச்னையை எழுப்புவது ஒரு புரட்சிகரமான அம்சம் என்று நான் கருதுகிறேன். எல்லா மாநிலங்களிலும் இப்படி ஒரு நிர்ப்பந்தம் கொண்டு வந்து, மத்திய அரசை நிர்ப்பந்திப்பதன் மூலம் இதற்கு ஒரு வழி காண முடியும். பாராளுமன்றத்தில் இந்த மாதிரியான தீர்மானம் கொண்டுவந்து முடிவு எடுத்தால்தான் நடவடிக்கை எடுப்பது முறையாக இருந்தாலும், மாநிலத்திலேயும் இதன் அவசியத்தை உணர்ந்து சர்க்காருக்கு உணர்த்த வேண்டியது தான். இன்று வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசியேற்றம் போன்ற பல கஷ்டங்கள் முதலாளித்துவக் கொள்கை அடிப்படையில்தான் ஏற்படுகிறது.

இந்திரா காந்தி அம்மையார் என்னதான் சோசலிசம் பேசினாலும் நடைமுறையில் முதலாளித்துவக் கொள்கைதான் செய்கிறார்கள். அதற்குக் காரணம் கூட எடுத்துச் சொல்லலாம். டெபிசிட் பைனான்சிங் 1972-ல் பட்ஜெட் சமர்ப்பிக்கும்போது இருந்தது. அது பின்னாலே சப்ளிமென்டரி பட்ஜெட் சமர்ப்பிக்கப்படும்போது ரூ. 450 கோடிக்குப் போய்விட்டது. 1975-ல் பட்ஜெட் சமர்ப்பிக்கும்போது அது 850 கோடி ரூபாயாக ஆயிற்று. மாகாண சர்க்காருக்குக் கொடுத்த ரூ. 1,500 கோடி ரூபாய் ஓவர் டிராப்ட் இதில்



இருக்கிறது. இதற்கெல்லாம் நோட் அடித்துக் கொடுத்தாக வேண்டும். 16 மடங்கு நோட்டு அடித்ததால் விலைவாசிகள் அதிகமாயிருக்கிறது, உற்பத்தி அளவு குறைந்து இருக்கிறது.

THE HON. THIRU Si. Pa. ADITANAR: The correct facts are the increase in currency is 19 per cent. The increase in production is 4 per cent.

THIRU N. K. PALANISAMY: Opinions differ, Sir.

ஆகவே, 16 மடங்கு விலையேறுகிறது. கடலையை எடுத்துக் கொள்ளலாம். 250 விற்றார்கள், 450 ஆயிற்று அது. வியாபாரிகள் அதை வாங்கவில்லை, அது 300 ஆகிறது. பிறகு ஒரு மாதத்திற்குப் பிறகு ரூ. 600 விற்கிறது. இதற்கு யார் காரணம்? மத்திய சர்க்காரின் கொள்கை தான். ஆகவே தான் இடதுசாரி ஜனநாயக சக்திகள் என்ன சொல்கிறோம் என்றால் முதலாளித்துவப் பாதையில் சென்றால் இப்பிரச்னைகளுக்கு முடிவு காண முடியாது, ஏகபோக முதலாளிகளை ஒழிக்க முடியாது என்று சொல்கிறோம். (மணியடிக்கப்பட்டது)

**திரு. கே. டி. கே. தங்கமணி**: இந்தத் தீர்மானம் ஏற்கெனவே பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் விவாதிக்கப்பட்ட தீர்மானம். இது ரொம்பவும் முக்கியமான தீர்மானம். இந்தத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில் எல்லாக் கட்சி உறுப்பினர்களையும், ஆளும் கட்சி உறுப்பினர்கள் உள்பட, அவர்கள் கருத்து சொல்ல அனுமதி கொடுக்க வேண்டும் அப்படியில்லாமல், இப்படி டைம் லிமிட் செய்வது சரியல்ல.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி)**: இருக்கிற நேரம் மிகவும் குறைவு. இப்போதே மணி 12 ஆகிறது. இன்னும், சட்ட முன்வடிவுகள் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும், தனியார் அலுவல்கள் இருக்கிறது. ஒரு கட்சிக்கு ஒருவர் பேசினால் போதும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி**: இந்தக் கறுப்புப் பணத்தை வெளியே கொண்டு வருவதற்காக வாஞ்சு கமிட்டியின் அறிக்கையை உடனடியாக அமல் செய்ய வேண்டுமென்று தீர்மானம் கொண்டுவரவேண்டுமென்று நேற்றைக்குச் சொன்னோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனே அதை இன்று கொண்டு வந்திருக்கிறார்கள். நன்றி. அதை நன்றாக அலசிப் பார்த்து கருத்துக் கூற வாய்ப்புக் கொடுக்கப்பட வேண்டும். எல்லா உறுப்பினர்களுக்கும்

அதனுடைய நகல் கொடுத்திருந்தால் நன்றாக இருக்கும். சில உறுப்பினர்களுக்கு அதனுடைய பரிந்துரைகள் என்ன என்பது தெரியாமல் இருக்கிறது.
ந. ப. 12-00 அதைக் கொடுத்திருந்தால் நல்ல பல விஷயங்களைச் சொல்லியிருக்கலாம்.

MR. CHAIRMAN (THIRU N. VEERASAMI) : Under what rule the Hon. Member is talking?

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Under the rules of the Assembly.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்** (திரு. நா. வீராசாமி) : தயவு செய்து உட்காருங்கள். திரு. பழனிசாமி அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

**திரு. என். கே. பழனிசாமி :** மத்திய சர்க்காருடைய பொருளாதாரக் கொள்கையை எடுத்துக் கொண்டால் ஒரு பகுதி பொதுத்துறை, மற்றொரு பகுதி தனிப்பட்டோர் துறை. தனிப்பட்டவர்களிடத்தில் தான் அதிகமாகப் பணம் இருக்கிறது. பொருளாதாரத் திட்டங்கள் என்று சொல்லி குறிப்பிட்ட ஏகபோக முதலாளிக்கு லைசென்ஸ் கொடுப்பது, சில பேர்களுக்கு மட்டும் லைசென்ஸ் கொடுப்பதன் காரணமாக, அவர்களுக்கு மார்க்கெட் காரண்டி ஆகி விடுகிறது. வேறு யாரும் அந்தப் பொருள்களை விற்பதற்கு முடியாது. என்ன விலைக்கு வேண்டுமானாலும் விற்கலாம். சர்க்காருக்குக் கொஞ்சமாகக் கணக்குக் காட்டினால் போதும். கள்ளப் பணம் சில பேர்களிடத்தில் தான் இருக்கிறது பெரும் பகுதிப் பணம் அவர்களிடத்தில் தான் இருக்கிறது. 1956-ல் மொனோபலி கமிஷன் ஏற்படுத்தப்பட்டது. ஏகபோக முதலாளிகள் 75 குடும்பங்கள், அந்தக் குடும்பங்களுக்கு லைசென்ஸ் கொடுக்கக் கூடாது. இப்படி இப்படித் தான் லைசென்ஸ் கொடுக்க வேண்டும் என்று பரிசீலனை செய்து கொடுப்பதற்கு கமிட்டி போடப்பட்டது. மூன்று கமிட்டிகள் போடப்பட்டன. ஏற்கெனவே பல சிபார்சுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அந்தச் சிபார்சுகள் இன்று வரையிலும் அமுல் செய்யப்படவில்லை. அதிக அளவில் கள்ளக் கடத்தல் நடைபெறுகிறது. கள்ளத் தங்கம் வெளியிலிருந்து வருகிறது. அதைக் கண்டுபிடிக்க முடிய வில்லை பல இடங்களில். அதைக் கண்டுபிடிப்பதற்கு, வெளியே கொண்டு வருவதற்கு மத்திய சர்க்காரின் கொள்கை சரியானபடி இல்லை. சரியாக போலீஸ் போட்டிருந்தால் பிடிக்க முடியும்.





பல சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. சர்க்கார் அதிகாரிகளும், மற்றவர்களும் கூட இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். நாட்டிலே ஏராளமாகக் கள்ளப் பணம் இருக்கிறது. இந்தத் தீர்மானத்தில் வாஞ்சுக் கமிட்டியின் சிபார்சுகளை எப்படி அமுலாக்குவது என்று சொல்லியிருந்தால் நலமாக இருந்திருக்கும்.

வாஞ்சுக் கமிட்டியின் முக்கியமான தீர்மானம் 100 ரூபாய் நோட்டுகளைச் செல்லாது என்று அறிவிக்க வேண்டும் என்பது தான். சமீபத்தில் கூட அதைப் பற்றி ஒரு கிளர்ச்சி இருந்தது. மத்திய சர்க்கார் பதில் என்ன? பார்க்கலாம், பார்க்கலாம் என்று தள்ளி வைத்துக் கொண்டே போவது. ஒன்று அதை அமுல் செய்ய முடியாது என்று சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் அமுல் செய்யவில்லை என்று சொல்ல வேண்டும். ஒன்றுமே சொல்லாமல் பேசாமல் இருந்தால் நாட்டில் குழப்பம் ஏற்படுகிறது. இந்தியா பூராவும் 100 ரூபாய் நோட்டுப் புழக்கம் அதிகமாக இருக்கிறது. இப்படிப்பட்ட தவறான கொள்கையினால் தான் இந்தக் கஷ்டம். முதலாளித்துவம் இருப்பதினால் தான் இம்மாதிரி கஷ்டங்கள் நாட்டில் நிலவுகின்றன.

டாக்ஸ் எவேஷன் ரூ. 750 கோடி இருக்கிறது. 10 வருஷங்களாக இருக்கிறது. 50 கோடி ரூபாய் செலவு செய்தாகிவிட்டது. இன்னமும் இந்தப் பணத்தை வசூல் செய்ய முடியவில்லை. யாராவது சாதாரண மனிதர் வரி கொடுக்கவில்லை என்றால், உடனே அவருடைய சொத்து ஜப்தி செய்யப்பட வேண்டும் என்று எல்லாம் சொல்கிறோம். கிட்டத்தட்ட இவ்வளவு பணம், நமது இந்தியா சர்க்காரின் வருமானத்தில் பாதி இன்னும் வசூல் செய்யப்படாமல் இருக்கிறது. இதை ஏன் இன்னும் வசூல் பண்ணுவதற்கு முடியவில்லை? பெரிய முதலாளிகளிடம் தானே வசூல் பண்ண வேண்டும்? கள்ளப் பணத்தினால் தான் விலைவாசி ஏற்றம் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. மத்திய அரசு 100 ரூபாய் நோட்டுகள் செல்லாது என்பதை அவசியம் அறிவிக்க வேண்டும். பினான்ஸ் மினிஸ்டர் அவர்களும் மத்திய சர்க்கார் சார்பாக பதில் சொல்லக்கூடிய காலத்தில் டிமானிடைசேஷன் தவிர மற்றச் சிபார்சுகளையெல்லாம் அமல் செய்கிறேன் என்று சொன்னார். இது தான் முக்கியம். இதைச் செய்யாமல் மற்றதைச் செய்து என்ன பயன்? 100 ரூபாய் நோட்டுகள் எப்படி சம்பாதிக்கப்பட்டது, என்ன சமாசாரம் என்பதெல்லாம் தெரிந்தாக வேண்டும். பணம் எப்படிச் சம்பாதித்தார்கள் என்று கேட்காமல் இருந்தால், கள்ளப் பணத்தை எப்படி வெளியே கொண்டு வர முடியும்? இந்தத் தீர்மானத்தில் முற்பகுதியை நான் ஆதரிக்கிறேன்.

THIRU B. VENKATASWAMY : Sir, on behalf of the Swatantra Party, I support the Resolution brought forward by the Hon. Chief Minister by stating that the black money should come out according to the recommendations of the Wanchoo Committee.

The Hon. Chief Minister has read out a very beautiful paragraph in the report of the Wanchoo Committee. It is stated that black money is like cancer which leads to ruination of the nation. If there is cancer, how can we expect that we can have a good administration and a good nation ? When there is cancer, we must see that it is operated. Without that operation, definitely the nation is going to be ruined, and there is no doubt about it. Whether Thirumathi Indira Gandhi operates it or our Dr. Karunanidhi operates, it does not matter (Interruption) Dr. Karunanidhi is also a ' doctor ' and he can do it effectively. So, we need not say that only the Central Government should do it. Our State Government also should do it and there is no harm in doing it. So, I hope the Central Government will accept the resolution if they are sincere and honest in their resolve to implement the recommendations of the Wanchoo Committee.

Then, Sir, the Hon. Minister has just now stated that the increase in currency is 19 per cent while the increase in production is only four per cent. That itself shows that so much of black money is on the increase and the production is going down and this state of affairs will create chaos in the country. I hope the Hon. Chief Minister will not delay the operation so that he can do something good to the people and the nation.

* **திரு. செ. கந்தப்பன் :** மாண்புமிகு தலைவரவர்களே, கடந்த சில ஆண்டுகளாக நாடு முழுவதும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஒரு தீர்மானத்தை, பரபரப்பூட்டுகின்ற வகையிலே எதற்கும் முன்னோடியாக விளங்குகின்ற தமிழகம் இந்தத் தீர்மானத்திற்கும் ஒரு முன்னோடியாக இருந்து கொண்டுவந்திருக்கிறது. அந்தத் தீர்மானமும் இந்த அவையிலே நிறைவேறப் போகிறது. அதுவும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்களே இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதையும், இதை இந்தச் சட்ட



மன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒருமனதாக நிறைவேற்ற இருக்கிறார்கள் என்பதையும் நினைக்கின்றபோது உண்மையிலேயே இந்தச் சட்டமன்றத்தினுடைய சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்றுகும் இந்த நிகழ்ச்சி.

1971-க்கு முன்னதாக நான் நாடாளுமன்றத்திலே இருந்தபோது நானும் என்னைப் போன்ற மற்றும் பலரும் நாடாளுமன்றத்திலே 'வாஞ்சு அறிக்கை என்ன ஆயிற்று, என்ன ஆயிற்று' என்று கேட்டுக் கொண்டே இருந்தது என் நினைவைவிட்டு இன்னும் மறையவில்லை. இப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டுமென்று பல ஆண்டு காலமாகக் கேட்டு கேட்டு, அதற்கு ஒரு குழு போட வேண்டுமென்று கேட்டு கேட்டு, கடைசியில் வாஞ்சுக் குழு நியமிக்கப்பட்டு அறிக்கை பெறப்பட்டது. ஆனால் அந்த அறிக்கையை நாடாளுமன்றத்திலே சமர்ப்பிப்பதில் தயக்கம் காட்டினார்கள். இந்த நேரத்தில் கடந்த காலச் சம்பவத்தை நினைவுபடுத்த வேண்டியது என்னுடைய கடமை என்று நான் கருதுகின்றேன்.

வாஞ்சுக் குழுவின் அறிக்கையை நாடாளுமன்றத்திலே தாக்கல் செய்ய தயக்கம் காட்டிக் கொண்டிருந்தபோது எதிர்க்கட்சி உறுப்பினர்களிலே ஒருவர் வாஞ்சுக் குழுவின் அறிக்கையின் நகல் ஒன்றைக் காட்டி நாடாளுமன்றத்திலே உரையாற்றினார். அது உண்மையான நகல் தானா என்று கேட்டபோது, நான் கையெழுத்து வேண்டுமானால் போட்டுத் தருகிறேன்; அந்தப் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன்; இது வாஞ்சுக் குழு அறிக்கையின் நகல்தான் என்று அந்த உறுப்பினர் பேசினார். வேறு வழியில்லாமல் நாடாளுமன்றத்திலே அதை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. அதற்குப் பின்னர்தான் வாஞ்சுக் குழு அறிக்கை நாடாளுமன்றத்திலே தாக்கல் செய்யப்பட்டது, வேறு வழியில்லை என்ற நிலையில்.

இதையெல்லாம் நான் சுட்டிக்காட்டுவதற்குக் காரணம், இன்றைக்கு நாட்டிலே பரந்து கிடக்கின்ற கறுப்புப்பணம் என்று சொல்கின்ற 'கான்சரை' அறுவை சிகிச்சை செய்யவேண்டும் என்பதில் தயக்கமே கூடாது என்பதற்காகத்தான். அதுமட்டுமல்ல. இந்தக் கான்சர் சிகிச்சை செய்வதிலே மத்திய அரசு எவ்வளவு தயக்கம் காட்டியது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எடுத்துக் காட்டுவதற்காகவுந்தான் சொல்கிறேன்.

***திரு. மணலி சி. கந்தசாமி :*** தலைவர் அவர்களே, சுடச்சுட நேற்றைய விவாதத்தினுடைய அடிப்படையில் இந்தத் தீர்மானத்தை முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருப்பதை நான் மிகவும் வரவேற்கிறேன்.

கள்ளப் பணத்தைப்பற்றி இன்றைக்கு யாரும் குறைத்து மதிப்பிடு கிறார்கள் என்று நான் சொல்லவில்லை. ஆனால் கள்ளப் பணத்தை வைத்துக் கொண்டு போட்டி சர்க்கார் நடத்தக்கூடிய அளவுக்கு இன்றைக்கு நாட்டில் கள்ளப் பணம் வலுவு பெற்றிருக்கிறது என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது. அதைப்போல பல துறைகளிலும் சமுதாயத் துறையிலும் சரி, அரசியல் துறை யிலும் சரி, பொருளாதாரத் துறையிலும் சரி போட்டி சர்க்கார் நடத்தக் கூடிய அளவுக்குக் கள்ளப் பணம் வலுவு பெற்று இருக்கிறது என்பதை யாவரும் உணர்வார்கள் என்பதில் ஐயமில்லை. அந்த நிலைமையைப் போக்குவதற்கு நிச்சயம் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி நடவடிக்கை எடுக்கக்கூடிய பொறுப்பை மாநில சர்க்காருக்கும் கொடுக்கவேண்டும் ' என்ற கோரிக்கை மிகவும் நியாயமானது என்பதை யாரும் மறுக்க முடியாது.

வாஞ்சு கமிட்டி சிபார்சுகள் அத்தனையையும் ஒத்துக்கொள்ளவேண்டும் என்று கூற முடியாது. ஏன் என்று கேட்டால் அதிக வரி போடுவது கள்ளப் பணம் சேர்ப்பதற்கு வழி செய்கிறது என்று சொல்வதை நான் ஒத்துக் கொள்ளத் தயாராக இல்லை. வாஞ்சு கமிட்டியின் சிபார்சுகள் அத்தனையையும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பது அல்ல. அந்த சிபார்சுகளில் பல பல ஊனங்கள் இருக்கின்றன. குறிப்பாக ? விஷயங்கள் திரு. மாரிமுத்து அவர்கள் எடுத்துக்காட்டினார்கள். 3 வழிகளில் கள்ளப் பணத்தைக் குறைக்கலாம். அந்த மூன்று வழிகளிலிருந்தும் தப்பித்துக்கொள்ளக்கூடிய விதத்தில் நடந்து கொள்வதில் கள்ளப் பணம் வைத்திருப்பவர்கள் கெட்டிக்காரர்கள் அவர்கள் இன்றைக்குப் பவுன், டாலர், வைரங்கள் என்று பல்வேறு வழிகளில் பணத்தைப் பதுக்கி வைத்திருக்கிறார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. நோட்டுகள் செல்லுபடியாகாது என்று அறிவித்தால் கூட, நோட்டுகளைப் பல்வேறு வழி களில் ஒன்றுக்குப் பாதி, ஒன்றுக்கு முக்காலாக மாற்றிக் கொள்ளக்கூடிய அளவுக்கு வல்லமை, வசதிகள் படைத்தவர்கள். இதையெல்லாம் தவிர்க்க வேண்டுமென்றால் கட்டாயமாகத் தீவிர நடவடிக்கை எடுத்தால் அல்லாது இதைக் கட்டுப்படுத்த முடியாது.



அது மட்டுமல்ல. கள்ளப் பணம் வைத்திருப்பவர்களினால் பொருளாதாரத் துறையில் சீரழிவு ஏற்பட்டு, கள்ள மார்க்கெட்டு ஏற்படுகிறது, விலைவாசி ஏறுகிறது. மனிதத் தன்மையில் எடுத்துக் கொண்டால் கூட நல்லவர்களுக்கு நாட்டில் மதிப்பு கிடையாது. கள்ளப் பணம் வைத்துக் கொண்டிருப்பவர்கள் பெரிய தர்மகர்த்தாக்கள், கொடை வள்ளல்கள் என்று சொல்லிக்கொண்டு பெரிய மனிதர்களாக இந்த நாட்டில் உலாவுகிறார்கள். நல்லவர்களைக் கண்டால் அண்ணாந்து பார்க்கக்கூடாத அளவுக்குக் கூட இன்றைக்கு நாட்டினுடைய எல்லா அடிப்படைகளையும் தகர்த்தெறியக்கூடிய விதத்தில் கள்ளப்பணம் திருவிளையாடல் புரிகிறது. திருட்டைக் கண்டுபிடிப்பதற்கு யார் வேண்டு மானாலும் கண்டுபிடிக்கலாம். மாநில அரசும் கண்டுபிடிக்கலாம். திருட்டுப் பணத்தைக் கண்டுபிடிப்பதற்கு மத்திய சர்க்கார் மட்டும் தான் நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம் என்பதை ஒத்துக் கொள்வதற்கு நான் தயாராக இல்லை. எல்லோரும் ஏகோபித்து கடுமையான நடவடிக்கை எடுக்காவிட்டால், இந்தப் பிரச்சினைக்கு விமோசனம் காண முடியாது. நான் அதிகமாகப் பேசி வளர்த்துக் கொண்டு போக விரும்பவில்லை. இந்தத் தீர்மானத்தை முழு மனதுடன் ஆதரிக்கிறேன். நாட்டின் நலன் கருதி கடுமையான நடவடிக்கை வேண்டும் என்று வலியுறுத்தி என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. ஏ. ஆர். மாரிமுத்து :*** இந்தத் தீர்மானம் மிகவும் முக்கியமானது என்று கருதப்படுவதால், இன்னும் ஒரு சில மெம்பர்கள் பேசவேண்டு மென்று விரும்புகிறார்கள் ஆகையால் நேரத்தைக் கொஞ்சம் அதிகரித்து மெம்பர்கள் பேசுவதற்கு வழி காண வேண்டும். வேண்டுமானால் மாலையிலும் கூட சபையை வைத்துக்கொள்ளலாம். இல்லாவிட்டால் இன்னும் அரை மணி நேரமாவது நீட்டி வைத்து, ஒரு மெம்பருக்கு ஐந்து நிமிஷங்களாவது பேசு வதற்குத் தயவு செய்து அனுமதிக்க வேண்டும்.

***மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :*** இன்றைய நிகழ்ச்சி நிரலில் அரசினர் தீர்மானங்கள் இருக்கின்றன, அரசினர் சட்ட முன்வடிவுகள் —மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, தனியார் மின்விசை வழங்கும் நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு, நில உடைமைகள் (நிறைவேற்று நடவடிக்கைகளை நிறுத்திவைத்தல்) (தமிழ் நாடு) திருத்தச் சட்ட முன்வடிவு, அரசினர் தனித் தீர்மானம் ஆகியவைகள் இருக்கின்றன. இருப்பது இன்னும் 1½ மணி நேரம். இதையெல்லாம் எப்படி முடிப்பது என்பதைத் தலைவர்கள்தான் முடிவு பண்ண வேண்டும்.

## கறுப்புப் பணத்தை வெளிக் கொண்டுவருவதற்கு வாஞ்சு குழுவினரது பரிந்துரைகளை மத்திய அரசு ஏற்று செயல் படுத்தலும், மாநில அரசுகளும் அதனைச் செயல் படுத்தத் தேவையான அதிகாரங்களை மத்திய அரசு வழங்க வேண்டும் என்பதும் குறித்து

[திரு. செ. கந்தப்பன்] [1973 ஆகஸ்ட் 11

இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் மாரிமுத்து அவர்கள் இந்தத் தீர்மானத்தை எதிர்த்துப் பேசினார்கள். மாநில அரசுக்கு அந்த அதிகாரம் வேண்டுமென்று கேட்கவில்லை. மாநில அரசுக்கும் அந்த அதிகாரம் வேண்டுமென்றுதான் தீர்மானம் தெரிவிக்கிறது. திரு. மணலி அவர்கள் குறிப்பிட்டதைப்போல திருடனைப் பிடிப்பது யார் என்ற பிரச்சினை இல்லை. திருட்டு செய்பவனை நீங்களும் பிடியுங்கள்; நாங்களும் பிடிக்கிறோம் என்ற முறையிலேதான் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறதே அல்லாமல் அந்த அதிகாரம் எங்களுக்குத்தான் வேண்டுமென்று கேட்கவில்லை. அதை சீர்தூக்கிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு மத்திய மாநில உறவு விலகி இருப்பதற்கு இதைப்போன்ற பல சிக்கல்கள்தான் காரணம் என்று பலமுறை நாடாளுமன்றத்திலே நான் சுட்டிக் காட்டியிருக்கிறேன். ஒரு மாநிலத்திலே இருக்கின்ற அமைச்சர் அல்லது அமைச்சர்கள்—அவர்களும் அமைச்சர்கள்தான் என்ற முறையிலே மத்தியிலே உள்ளவர்கள் நினைக்க வேண்டும். மத்திய அரசுக்கு நிர்வாகத்திலே பொறுப்பு இருப்பதைப்போல மாநில அரசுக்கும் பொறுப்பு இருக்கிறது. மாநில அரசு என்பது ஒரு தனி இயக்கம் அல்ல என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். பிரதம அமைச்சருக்கு நாடாளுமன்றத்தில் பொறுப்பு இருப் பதைப் போல முதலமைச்சருக்குச் சட்டமன்றத்திலே பொறுப்பு இருக்கிறது. அந்தந்த மாநில எல்லைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள மத்திய அரசைச் சேர்ந்த நிறுவனங்களையும் மாநில முதல்வருக்குக் கண்காணிக்கின்ற உரிமை இருக்க வேண்டும். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் குறிப்பிட்டதைப் போல அந்த உரிமை இல்லை என்றால் நிர்வாகம் செம்மையாக நடைபெற முடியாது.

உதாரணத்திற்காக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மாநிலத்திலே நிர்வாகத்தைக் கண்காணிக்க காவல்துறை இருக்கிறது. ஆனால் மத்திய அரசு 'சென்ட்ரல் இன்டஸ்ட்ரீஸ் செக்யூரிட்டி ஃபோர்ஸ்' என்ற ஒரு காவல் பிரிவை மாநிலத்திலே வைத்திருக்கிறார்கள். அதன் நோக்கம் என்னவென்று கேட்டால் மத்திய அரசுக்குச் சொந்தமான பல தொழில் கூடங்கள் மாநிலத்திலே இருக் கின்றன. அவைகளை மாநில காவல்துறையினரால் சரியாகக் கண்காணிக்க முடியவில்லை. அதனால் அந்தப் பிரிவை இங்கே வைத்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். மத்திய அரசாங்கம் இந்த முடிவை எடுத்தபோது, ஏன் மாநிலத்திற்குள் மத்திய காவல் பிரிவைப் புகுத்த வேண்டும் என்று ஒரு பெரிய விவாதமே நடைபெற்றிருக்கிறது.

கறுப்புப் பணத்தை வெளிக் கொண்டுவருவதற்கு வாஞ்சு குழுவினரது பரிந்துரைகளை மத்திய அரசு ஏற்று செயல் படுத்தலும், மாநில அரசுகளும் அதனைச் செயல் படுத்தத் தேவையான அதிகாரங்களை மத்திய அரசு வழங்க வேண்டும் என்பதும் குறித்து 

1973 ஆகஸ்ட் 11] [திரு. செ. கந்தப்பன்]

நம்முடைய அரசியல் சட்டத்திலே காவல் துறையினருக்குச் சட்டம் ஒழுங்கு, அமைதியைப் பாதுகாக்கின்ற பொறுப்பு குழப்பத்திற்கு இடம் இல்லாமல் மாநில அரசுக்குத் தரப்பட்டிருக்கிறது. அதைச் சுட்டிக்காட்டி அப்போது விவாதம் நடைபெற்றது. சட்டம், ஒழுங்கை நிலைநாட்டக்கூடிய பொறுப்பு ஒரு மாநில அரசுக்கு இருக்கிறபோது, நீங்கள் இன்னொரு காவல் பிரிவை மாநிலத்திற்குள் நுழைத்தால் அந்த இரு காவல் துறையினருக்கும் மோதலை ஏற்படுத்திவிடாதா? இது சட்டப்படி முறையா என்று கேட்டோம். அப்போது 'மாநில அரசு நிர்வாகத்தில் தலையிடுவது இதன் நோக்கமல்ல; மாநில காவல் துறையினருக்குத்தான் முழுப் பொறுப்பும் இருக்கிறது; மத்திய அரசின் தொழிற்சாலைகளில் இந்தப் பிரிவு பாதுகாப்புக்காக இருக்கும்; ஏதாவது குழப்பமோ, தகராறோ ஏற்பட்டால் சம்பந்தப்பட்டவர்களைப் பிடித்து மாநில காவல் துறையினரிடம் ஒப்படைத்து அவர்கள் மூலமாகத்தான் நடவடிக்கை எடுக்கப்படும்' என்று விளக்கம் கொடுத்தார்கள்.

கடந்த 4, 5 ஆண்டுக் காலத்தில் கல்கத்தா போன்ற இடங்களில் பல சம்பவங்கள் நடைபெற்றன. இந்தத் தமிழகத்திலே கூட ஒன்று இரண்டு தகராறுகள் ஏற்பட்டன. அப்போதெல்லாம் இந்த சென்ட்ரல் இன்டஸ்ட்ரீஸ் செக்கியூரிட்டி போர்ஸினால் எதிர்பார்த்த பலன்கள் ஏற்படவில்லை என்பதை நாமெல்லாம் நன்றாக அறிவோம்.

வருமான வரிப் பிரிவை மத்திய அரசே நிர்வகித்து வருகிறது. அதிலே என்ன தவறு ஏற்பட்டாலும் மாநில அரசு கண்காணிக்க முடியாத நிலை இருக்கிறது. அதே மாதிரி விஜிலன்ஸ் இலாக்கா இருக்கிறது. ஏதாவது ஒரு அதிகாரி தவறு செய்கிறார் என்று தெரிந்தால் விஜிலன்ஸ் இலாக்காவுக்குத் தகவல் போகிறது. அவர்கள் இந்த இலாக்காவிலே இருக்கிற அதிகாரிக்கு எழுதி, சம்பந்தப்பட்ட அதிகாரியினுடைய 'பர்சனல் பைலை' வாங்கி நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. இதற்கிடையே இருக்கின்ற 'லயசன்' அதிகாரிகளுடைய தொடர்பு சரியாக இல்லாததால் நடவடிக்கை எடுப்பதிலே கால தாமதம் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட காரியங்களை எல்லாம் அந்தந்த மாநில அரசுகளே கவனிப்பதாக இருந்தால் காலதாமதம் தவிர்க்கப்படும்.

நேற்று பேசும்போது திரு. மணலி அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். இன்றைக்குக் கள்ளக் கடத்தல் செய்கிறவர்கள், கள்ள மார்க்கெட்காரர்களை—எல்லோரையும் பிடித்து சிறையில் அடைக்கவேண்டுமென்று சொன்னால் இப்போது இருக்கின்ற சிறைச்சாலைகள் போதாது; புதிதாகக் கட்டவேண்டி

வரும் என்று கொஞ்சம் மிகைப்படுத்திச் சொன்னார்கள். அந்த அளவுக்கு நாட்டிலே இருக்கிறபோது மாநில அரசுக்கும் அதிலே பொறுப்பு இருந்தால் இன்னும் நல்லமுறையிலே அந்த மாதிரியான நடவடிக்கைகளைக் கண்காணிக்க முடியும். தவறு செய்கின்ற அதிகாரியினுடைய பர்சனல் ஃபைலை நேரடியாகப் பெறமுடியாதபோது,—நமது முதல் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டால் கூட ஃபைலைப் பார்க்கமுடியாது—இந்த நாட்டிலே கள்ளப் பணத்தை, கள்ள மார்க்கெட்காரர்களை எப்படிக் கட்டுப்படுத்த முடியும் என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்றைக்கு வங்கிகள் எல்லாம் தேசியமயமாக்கப்பட்டிருக்கின்றன. வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டபோது, நம்முடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞரவர்கள் திட்டவட்டமாக ஒரு கருத்தைச் சொன்னார்கள். மாநில அரசின் பிரதிநிதிகள் அந்த மாநிலத்திற்குள் இருக்கின்ற தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் இடம் பெறவேண்டும். அப்போதுதான் அதன் நோக்கமே ஈடேறும் என்று சொன்னார்கள். அப்போது மத்திய அரசு அந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை; இன்றைக்கும் ஏற்றுக்கொள்ளவில்லை. அதன் பலன் எப்படி இருக்கிறது என்று நாம் இன்றைக்குப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு மாநிலத்திற்கும் இருக்கின்ற தேவைகள் வெவ்வேறு விதமாக இருக்கும். மக்களின் பிரச்சினைகள் வேறுபடுகின்றன. மக்களின் தேவைகள் வித்தியாசப்படுகின்றன. இருக்கின்ற நிலைமைகளை அனுசரித்து அந்தந்த மாநிலத்தின் தேவைகளுக்கேற்றபடி செயல்பட வேண்டுமென்றால், அந்தந்த மாநிலத்தின் பிரதிநிதிகள் இடம் பெற வேண்டும்.

ஆனால் இன்றைக்கு ஒரு மாநிலத்தின் தேவையை முடிவு செய்யக் கூடியவர்கள், அந்த மாநிலத்திலிருந்து நெடுந்தூரத்தில் இருப்பதால் தேவைக் கேற்ற நிவாரணம் அளிக்க முடியவில்லை; தேசிய வங்கிகள் சரியாக இயங்க முடியவில்லை. அதைப்போலதான் இன்கம் டாக்ஸ், வெல்த் டாக்ஸ், கஸ்டம்ஸ் டாக்ஸ் போன்ற நிர்வாகப் பிரிவுகளைக் கட்டுப்படுத்துகின்றவர்கள் எங்கோ இருப்பதால் அவைகள் சரியாக இயங்க முடியவில்லை. மாநில அரசுக்குப் அதிலே பொறுப்பு இருந்தால், கள்ளப்பணத்தைத் தடைசெய்ய முடியும் கள்ளப் பணம் வைத்திருப்பவர்களைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கக் கூடிய அதிகாரம் நமக்கில்லை.

இப்போது சேல்ஸ் டாக்ஸ்—விற்பனை வரிப் பிரிவு இருக்கிறது. அதைப்பற்றி ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். விற்பனை வரி அதிகாரிகள் மாநிலத்திற்கு



சேரவேண்டிய பணத்தை மாநிலத்திற்கும், மத்திய அரசுக்குச் சேரவேண்டிய பணத்தை மத்திய அரசுக்கும் செலுத்திவிடுகிறார்கள். தலைவரவர்களே! நீங்கள் என்னைப் பார்த்து அடிக்கடி தலையாட்டிக் கொண்டிருப்பது எனக்குக் கஷ்டமாக இருக்கிறது. இது முக்கியமான விஷயம். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலர் பேச இருக்கிறார்கள். ஆகவே எனக்குக் கொஞ்சம் நேரம் அதிகமாகக் கொடுங்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தின்மீது பல அங்கத்தினர்கள் பேச இருக்கிறார்கள். இன்னும் மசோதாக்கள் இருக்கின்றன. இன்றைக்கே இந்த அலுவல்களை எல்லாம் எடுத்து முடிப்பது என்பது முடியாத காரியம். ஆகவே இன்னும் ஒரு நாள் இந்தச் சட்டமன்ற நடவடிக்கையை நீட்டித்தால் நல்லது என்கிற கருத்தினை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

THIRU A. R. MARIMUTHU: We have decided in the Business Advisory Committee that we can set if necessary on 14th also.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் 13-ம் தேதி வரை பிசினஸ் போட்டுவிட்டு, தேவைப்பட்டால் 14-ம் தேதியையும் எடுத்துக் கொள்ளலாம் என்றே முடிவு செய்திருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அலுவல் ஆய்வுக் குழுவில் 13-ம் தேதிவரை செல்லலாம் என்று போட்டோம். அவசியம் ஏற்பட்டால் 14-ம் தேதியும் வைத்துக்கொள்ளலாம் என்று வைத்திருப்பதால் 14-ம் தேதியும் வைத்துக்கொள்ளலாம்.

**திரு. செ. கந்தப்பன்:** விற்பனை வரி அலுவலர்கள் மத்திய அரசுக்கான வரியையும் இன்றையதினம் வசூலிக்கிறார்கள். மாநில அரசுப் பணத்தை மாநில அரசுக்கும், மத்திய அரசுப் பணத்தை மத்திய அரசுக்கும் செலுத்தி வருகிறார்கள். அந்த இடத்தில் எந்தச் சிக்கலும் வரவில்லை. வருமான வரித் துறையில் இது போன்ற ஒரு ஏற்பாட்டை ஏற்படுத்துவதனால் எந்தவிதமான விபரீதமும் ஏற்பட்டுவிடாது. நீண்டநெடுங்காலமாக இது கவனிக்கப்படாமல் இருந்து வருகிற காரணத்தினால் பலவிதமான மோதல்களுக்கும், தகராறுகளுக்குமே இது இடமளித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, திரு. மாரிமுத்து அவர்களை நான் கேட்டுக்கொள்வேன். ஒரு முன்மாதிரியாக நாம் இந்தத்

தீர்மானத்தை இங்கே ஒருமனதாக நிறைவேற்றி அனுப்ப அவர்கள் இதை ஆதரிக்கவேண்டும். வருமான வரி, கஸ்டம்ஸ் போன்ற இலாக்காக்களின் அதிகாரிகளை மாற்றுவதற்கு நாம் அதிகாரம் கேட்கவில்லை. அவர்களுக்கு ப்ரமோஷன் கொடுப்பது போன்றவற்றில் கூட கேட்கவில்லை. அந்த இலாக்காக்கள் மத்திய அரசின் நேரடிப் பொறுப்பில் இருக்கிற காரணத்தினால், மாநில ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் செயல்பட்டு வருகிற காரணத்தினால்—கள்ளப்பணத்தை வெளிக்கொணர வேகமாகச் செயல்பட—இத்தகைய ஒட்டுறவு இருப்பது சாலச் சிறந்ததாக இருக்கும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இப்படிப்பட்ட முக்கியமான தீர்மானத்தை நாடு பூராவும் எதிர்பார்க்கிற தீர்மானத்தை, இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட செய்தி வானொலி மூலமாக, செய்தி ஏடுகள் மூலமாகக் கேட்கிறபோது 50 கோடி மக்களின் உள்ளங்கள் குளிரும். நாடாளுமன்ற உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். இன்னும் சொல்லப்போனால் இது போன்ற தீர்மானத்தை மற்ற மாநில சட்ட மன்றங்களிலும் நிறைவேற்ற இது ஒரு முன்னோடியாக அமையும். அநேகமாக, ஒருமனதாக இந்தத் தீர்மானத்தை நாம் நிறைவேற்றினால் மத்திய அரசு கூட ஏற்கெனவே சொல்லிக்கொண்டிருந்த பிடிவாதத்தினைத் தளர்த்திக்கொண்டு ஓரளவு நம் கருத்தோடு சேர்ந்து செயல்பட முன்வரலாம். ஆகவே அரசியல் பிரச்சினையை மனதில் வைத்துக்கொண்டு இதை யாரும் தடுத்துவிடக்கூடாது. இதை நிறைவேற்ற ஒருமனதாக ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டு, டாக்டர் கலைஞர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற தீர்மானத்தை முழுமனதுடன் வரவேற்று, ஏற்று அமைகிறேன். வணக்கம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை இந்த அரசு கொண்டு வந்ததில் எனக்குப் பெரிய மகிழ்ச்சி. நேற்று மாலைதான் இப்படிப்பட்ட தீர்மானத்தைக் கொண்டுவரவேண்டுமென்று திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னார்கள். சொல்லி 24 மணி நேரம் கூட ஆகவில்லை, அவசரம் அவசரமாகக் கொண்டுவந்துவிட்டார்கள். வாஞ்சு ரெக்கமெண்டேஷன்கள் பற்றி சட்டமன்ற அங்கத்தினர்கள் முழுமையாக விவாதித்து அவரது சிறந்த யோசனைகளை எப்படி., எப்படிச் செயல்படுத்தலாம் என்று ஆர அமர யோசிக்க சந்தர்ப்பம் கொடுத்திருந்தால் வரவேற்று இருக்கலாம். எதையும் அவசர கோலமாகக் கொண்டு வருவது—அதைப் போலவே இதையும் இன்றைக்குக் காலையிலேயே கொண்டுவந்து தீர்மானத்தை





பேசுங்கள என்றால் என்ன செய்வது? கள்ளப்பணத்தை மூடி மறைக்கக் கூடாது—கள்ளப்பணம் என்பது நமக்கு வரியாகக் கிடைக்காத பணம்—வரி போடுகிற அதிகாரியை ஏமாற்றி வைத்திருக்கிற பணம்—அதற்கு எந்தக் கட்சியும் ஆதரவு கொடுப்பது கிடையாது. நேற்றையதினம் இதுபற்றிய முழு அதிகாரத்தையும் எங்களுக்குக் கொடுத்துவிடவேண்டும் என்று சொன்ன முதலமைச்சர் அவர்கள், இன்றைக்கு ஞானோதயம் பிறந்து எங்களுக்கும்—என்றும் போட்டுக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அம்மையார் அவர்கள் இப்போது அடிக்கடி ஞானோதயத்தைப்பற்றிப் பேசுகிறார்கள். ஞானோதயம் அம்மையாருக்குச் சொந்தமானது அல்ல. எல்லாருக்கும் சொந்தமானது. நேற்று முழு அதிகாரத்தையும் கேட்டேன், இன்றைக்கு நமக்கும் அதிகாரம் இருக்கவேண்டும் என்பதாகப் போட்டுக் கொண்டுவந்திருப்பதாகச் சொன்னார்கள். நேற்றே நான் முழு அதிகாரத்தையும் கேட்கவில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சட்டசபையில் சில துறவிகள் இருக்கிறார்கள். அவர்களோடு சேர்ந்து ஞானோதயம் வருகிறது. நேற்று முழு அதிகாரத்தையும் கொடுப்பீர்களா என்று கேட்டதற்கு திரு. தங்கமணி அவர்கள் எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னார்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஒரு கட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்டு, இன்னொரு கட்சியில் போய்ச்சேருகிற ஞானோதயம் எங்களுக்கு இல்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** திராவிட கழகத்தில் இருந்து திராவிட முன்னேற்றக் கழகத்திற்குச் சென்ற நிலை எங்களுக்குத் தெரியும்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** நாங்கள் திராவிட கழகத்தில் இருந்தபோது எம்.எல்.ஏ.-க்களாக இல்லை. திராவிட கழகத்தில் இருந்து பிரிந்து எத்தனை எத்தனை துன்பங்களை, துயரங்களை அனுபவித்து, தொண்டர்கள் எல்லாம் மறியல் பண்ணவேண்டுமென்றபோது கூட தலைவர் அவர்கள் அதைத் தடுத்து, வேண்டாம் என்று சொன்னதை எல்லாம் நாடு மறக்காது—சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின் கட்சி மாறியவர்கள் அல்ல நாங்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** உங்கள் தலைவர் சட்டமன்றத்திற்கே நிற்க வேண்டாம் என்று சொன்னபோது மீறி நின்றவர்கள் தான் நீங்கள். . .

[1973 ஆகஸ்ட் 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதுபோன்ற விவாதத்தை நான் அனுமதிக்க முடியாது. அம்மையார் அவர்கள் பேரவைக்கு முன்னுள்ள தீர்மானத்தைப்பற்றிப் பேசப்போகிறார்களா இல்லையா ?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அவர்கள் குறுக்கிட்டுப் பேசும்போது அதற்கு நான் பதிலளிக்கக் கூடாது என்கிறீர்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பேரவை முன்னுள்ள பிரச்சினையைப் பற்றிப் பேசும்போது திரு. மாரிமுத்து அவர்கள் தீர்மானத்தின் ஒரு பகுதியை ஆதரிக்காமல், தம்முடைய கருத்தைத் தெரிவித்தார்கள். அப்படியின்றி அம்மையார் அவர்கள் நேற்று மாலையில் வராத ஞானோதயம் எனக்குக் காலையில் வந்துவிட்டது என்பதாகத் தேவையில்லாத ஒன்றைச் சொல்லி—பிறர் மனதைப் புண்படுத்தக் கூடிய வகையில் விவாதத்தை ஆரம்பித்தார்கள். ஒரு கட்சியின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டு பிறகு வேறு ஒரு கட்சிக்குப் போகிற எந்தத் துரோகத்தையும் நாங்கள் செய்யவில்லை என்று அவர்கள் குறுக்கிட்டுச் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஞானோதயம் பற்றி இங்கே வேண்டாம். அவை முன் இருப்பதைப்பற்றிப் பேசுங்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** ஞானோதயம் என்பது என்ன, அன்பார்லி-மெண்டரி வார்த்தையா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சொல்லில் ஒன்றும் இல்லை. அந்தச் சொல்லை உபயோகப்படுத்துகிற முறையில்தான் எதுவும் இருக்கிறது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** ஞானோதயத்தைப்பற்றிப் பேசுகிறார்கள். உதயத்தைப்பற்றிச் சொன்னதற்கு வருத்தப்படவேண்டாம். அஸ்தமித்ததைச் சொல்லவில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** உதயத்தைத்தான் சொன்னேன். இந்தப் பிரச்சினையில்—மாநில அரசாங்கத்திற்கும் அதிகாரம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஸ்டேட் லிஸ்ட், யூனியன் லிஸ்ட், கன்கரென்ட் லிஸ்ட் என்று இருக்கும்போதே இன்றையதினம் இதுபோன்ற ஒரு தீர்மானத்தைக் கொண்டுவருவது—எல்லாவற்றையும் பற்றி நன்கு பரிசீலிக்காமல் கொண்டு வருவது சரிதானா என்பதை விளக்க விரும்புகிறேன். பத்து ரூபாய்க்கு



1973 ஆகஸ்ட் 11] [திருமதி த. ந. அனந்தநாயகி]

மேற்பட்ட நாணயங்களை எல்லாம் செல்லாததாக ஆக்கவேண்டுமென்று வாஞ்சு சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில்—அதை நாம் செய்ய முடியுமா ? எதையும் யோசித்துப்பார்த்து இப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தைக் கொண்டுவருவார்களானால் அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கிறோம்.

நாங்கள் என்ன மாநில அரசாங்கத்திற்கு அதிகாரம் கொடுக்கக் கூடாது
என்று சொல்லுகிறோமா ? எங்கெங்கே அதிகாரங்கள் வேண்டுமோ அங்கங்கே **12-30 பி.ப.**
கேட்க வசதி இருக்கிறது. அப்படிக் கேட்பதிலே யாருமே குறுக்கே நிற்கப் போவது கிடையாது ; தாராளமாகக் கேட்கலாம். ஆனால், இதில் முதலமைச்சர் அவர்கள் ஒரு விவாதத்தைக் கிளப்பினார்கள். மத்திய அரசாங்கத்தைக் காட்டிலும் மாநில அரசாங்கத்திற்கு மக்களோடு அதிகத் தொடர்பு இருக்கிறது. ஆகவே, எங்கே கறுப்புப் பணம் இருக்கிறது என்பது எங்களுக்குச் சுலபமாகத் தெரியும். அதைச் சுலபமாக எடுத்துவிடமுடியும் என்று சொல்கிறீர்கள். அதே விவாதத்தைத் தான் நான் திருப்பிச் சொல்கிறேன். மத்திய அரசாங்கத்தைவிட மாநில அரசாங்கத்திற்குப் பொது மக்களோடு அதிகத் தொடர்பு இருப்பதாலேதான் நாளைக்கு உண்மையிலேயே நீங்கள் தீவிரமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று சொன்னாலும் அந்தத் தொடர்பே உங்களைச் சிக்கலான நிலையிலே கொண்டுபோய் நிறுத்தி விடும். ஆகவே, இந்த அதிகாரத்தைக் கூட எப்படிப் பங்கு பிரித்துக்கொள்ள வேண்டுமென்று யோசித்துப் பார்த்து சொல்வதுதான் நியாயமானது. மாநில அரசாங்கமும் தவறு செய்யலாம், மத்திய அரசாங்கமும் தவறு செய்யலாம். ஆனால் மக்களோடு நெருங்கிய தொடர்பு இருப்பதால், மத்திய அரசாங்கத்தைக் காட்டிலும் மாநில அரசாங்கம் அதிகத் தவறுகள் செய்யலாம். காரணம், இன்றைக்கு உங்களுக்கு மக்களோடு நெருங்கிய தொடர்பு இருக்கிறது.

வாஞ்சு குழுவினர் பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். ரூ. 10-க்கு மேலே எல்லா நோட்டுகளையும் செல்லாதவைகளாக மாற்றவேண்டும். 'காஷ் சீலிங்' இருக்கவேண்டும். ரூ. 5,000-க்கு மேல் யாரிடத்திலும் காஷாக இருக்கக் கூடாது. இருந்தால் எதற்கு இருந்தது என்று சொல்லவேண்டும். அது மட்டுமல்ல, ரூ. 2,000-க்கு மேல் ஏதாவது பொருள்களை வாங்கினால், அப்படிப் பட்ட செலவுகளைச் செய்யவேண்டுமென்றால்

## கறுப்புப் பணத்தை வெளிக் கொண்டுவருவதற்கு வாஞ்சு குழுவினரது பரிந்துரைகளை மத்திய அரசு ஏற்று செயல் படுத்தலும், மாநில அரசுகளும் அதனைச் செயல் படுத்தத் தேவையான அதிகாரங்களை மத்திய அரசு வழங்க வேண்டும் என்பதும் குறித்து

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1973 ஆகஸ்ட் 11

It must be in the form of cheques and not in the form of cash payment.

இப்படிப் பல யோசனைகளை 'வாஞ்சு கமிட்டியினர் சொல்லியிருக்கிறார்கள். இந்த இந்த யோசனைகளை, இந்த இந்த அளவிலே நாம் செய்ய முடியும். மத்திய அரசாங்கம் இதை இதைச் செய்ய முடியும், என்று ஒரு உரசல் இல்லாமல் மாநில-மத்திய உறவு கெட்டுப்போகாமல், எந்த எந்த வகையிலே செய்யவேண்டுமென்று சொல்லியிருப்பார்களானால் அதை நாங்கள் முழுக்க முழுக்க ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மனைவி அவர்கள் ஹாஸ்யமாகச் சொன்னார்கள், திருடனை யார் பிடித்தால் என்ன என்று. திருடனை யார் வேண்டுமானாலும் பிடிக்கலாம், அவர்களும் பிடிக்கலாம்; நாமும் பிடிக்கலாம். ஆனால், மற்றைய சிபாரிசுகள் மாநில அரசாங்கமே செய்ய முடியாத சிபாரிசுகள், அப்படிப்பட்ட சிபாரிசுகள் இருக்கும்போது, எவற்றையெல்லாம் நாம் கட்டுப்படுத்திக்கொள்ளவேண்டும், எவற்றையெல்லாம் மத்திய அரசாங்கம் கட்டுப்படுத்திக்கொள்ளவேண்டும் என்பதை நாம் யோசித்துப் பார்க்கவேண்டும். இல்லையென்றால், இங்கே துஷ்பிரயோகத்திற்கு இடமிருக்கும்.

நேற்றைய முன்தினம்கூட, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது பேசும் போது, எப்படி அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது என்று திட்டவட்டமாக எடுத்து சொல்லப்பட்டது. நீங்கள் இப்படிச் செய்வது எதைச் காட்டுகிறது? உங்களுக்கு ஏதோ அதிகாரம் குறைந்து நிற்பது மாதிரியும், மத்திய அரசு அந்த அதிகாரத்தைக் கொடுத்தால் கள்ளப் பணத்தை ஒழித்துக் கட்டுவோம் என்று தீர்மானத்தை ஒழுங்காகப் போட்டுவிட்டு, மக்களிடத்திலே போய், மாநில அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லை, அதை மத்திய அரசாங்கம் கொடுக்கவில்லையென்று பிரச்சாரம் செய்ய இதை ஒரு கருவியாகப் பயன் படுத்திக் கொள்ளுகின்றீர்கள் என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

திட்டவட்டமாக உங்களுடைய அதிகாரம் என்ன என்று சொல்லுங்களேன், உங்களுக்குத் தேவை என்ன என்று சொல்லுங்களேன். மாநில சுயாட்சி, மாநில சுயாட்சி என்று சொல்லிக் கொண்டிருக்கின்றீர்களே, அந்த அறிக்கையை இங்கே வையுங்களேன். ராஜமன்னார் குழு அறிக்கையை இங்கே விவாதிக்கப் போகிறோம், விவாதிக்கப் போகிறோம் என்று சொன்னீர்கள்.



1973 ஆகஸ்ட் 11] [திருமதி த. ந. அனந்தநாயகி]

நாங்களும் கேட்டுப் பார்த்துவிட்டோம். என்றைக்காவது நீங்கள் விவாதத்திற்கு எடுத்து வைத்தீர்களா? உங்களுக்கு என்ன தேவை என்பதைத் தெளிவாகப் பார்ப்போமே. கன்கரன்ட் லிஸ்டில் உங்களுக்கு என்ன என்ன வேண்டுமோ அதையெல்லாம் சொல்லுங்களேன். ரெசிடுவரி பவர்சில் உங்களுக்கு ஏதாவது வேண்டுமா? சொல்லுங்கள். அதல்லாமல், யாருக்கும் புரியாத மாநில சுயாட்சி, மாநில சுயாட்சி என்பது, சர்வரோக நிவாரணி யாகத்தான் எங்களுக்குத் தெரிகிறது. காரணம், நீங்கள் பேசிக்கொண்டிருப்பது தமிழ் மக்களைக் குழப்பக் கூடிய அளவிலே இருக்கிறது (குறுக்கீடு.) நான் இதைப்பற்றி ரெலவண்ட்டாகத்தான் பேசுகிறேன். ஃபுட் மினிஸ்டர் எனக்குத் தெரிவிக்கவேண்டாம். நான் சபையில் உள்ள சப்ஜக்டிற்கு ரெலவண்ட்டாகத் தான் பேசுகிறேன். அவர் தன்னைத் தெளிவாக்கிக்கொள்ளவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சபையிலுள்ள மரபு, பேசுவதற்கு எல்லோருக்கும் உரிமை இருந்தாலும், தலைவர்கள் பேசிய பிறகு உறுப்பினர்கள் பேசுவது கிடையாது. உறுப்பினர்கள் பேசிய பிறகு தலைவர்கள் பேசுவது என்பது இந்த மன்றத்திலே இதுவரை கடைப்பிடித்து வருகிற மரபு. ஆனால் இங்கே தலைவர் பேசியபிறகு உறுப்பினர் பேசுகிறார். ஆகவே, இருக்கிற மரபை இனி கடைப்பிடிக்க வேண்டும்.

**திரு. கே. ஏ. வகாப்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த வாஞ்சு கமிட்டியினுடைய சிபாரிசுகளின் பேரில் இருக்கிற, இந்தத் திருத்தத்தை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

நேற்றைக்கு முன்பு வரையிலே இந்த மன்றத்திலே ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு, அதைப்பற்றி எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் எல்லாம் பலப்பல பேசினார்கள். அதிலே குறிப்பிட்ட முக்கியமான குற்றச்சாட்டு என்னவென்று கேட்டால் இன்றைக்கு ஆளும் கட்சியாக இருக்கிற திராவிட முன்னேற்றக் கழக அரசானது பணக்காரர்களுக்குப் பின்னால் செல்கின்றது. இங்கே பெயர்களைக் குறிப்பிட்டுக் கூடச் சொன்னார்கள். மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர், டி.எஸ்.டி., ஏ.பி.டி. என்று இப்படிப் பட்ட பெரிய பணக்காரர்களுக்குப் பின்னால் செல்கிற கட்சி இது. ஆகவே இது பணக்காரர்களை ஆதரிக்கிற கட்சி என்று சொன்னார்கள். ஆனால், அவருடைய வாதத்தின்படி 'வாஞ்சு கமிட்டி சிபாரிசு மீது கருத்துக்களைச்

[திரு. கே. ஏ. வகாப்] [1973 ஆகஸ்ட் 11

சொல்லும்போது வழக்கம்போல் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதைச் செய்தார் என்று கூடச் சொல்லலாம். அவர் சொன்னதை ஏற்றுக்கொண்டு இன்றையதினமே அதைச் சபைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதைத் தான் நான் நேற்றுகூடக் குறிப்பிட்டேன், மின்னல் வேகத்திலே நல்ல காரியங்களைச் செய்யக் கூடியவர் நம்முடைய முதல்வர் அவர்கள் என்று. அந்த விதத்தில் நேற்று கூறியதை, வாஞ்சு கமிட்டி சிபாரிசுகளை, இன்றைக்கே தீர்மானமாகக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்றால், அதைக் கூட குறை கூறுகிற அளவிலே அம்மையார் அவர்கள் சொன்னார்கள். அவர்கள்தான் அதைக் கொண்டு வாருங்கள் நாங்கள் ஆதரிக்கிறோம் என்று சொல்லிவிட்டு, இன்றைக்கு இவ்வளவு அவசரமாக இதைக் கொண்டு வந்தீர்களே என்று சொல்வது, நேற்று நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்போது அவர்கள் பேசியவை பொய் என்ற நிலைக்குக் கொண்டு போய்முடிகிறது.

கள்ளப்பணம் வைத்திருப்பவர்களைக் காட்டிக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறது இந்த அரசாங்கம் என்று மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக இருப்பதால் அதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நாட்டினுடைய பொருளாதாரம், மக்களுடைய பொருளாதாரம், தமிழகத்தி னுடைய பொருளாதாரம் எல்லாவிதத்திலும் சீர்குலைக்கப்பட்டிருப்பதற்குக் காரணம் கள்ளக் கடத்தல், கள்ளப் பணம், கள்ளச் சந்தை, கள்ளப் பணப் புழக்கம். இப்படிப்பட்ட காரணங்களால் பொருளாதாரம் சீர்குலைந்திருக்கிறது என்று கூறும்போது கள்ளப்பணமானது எங்கே இருக்கிறது என்பதைக் கண்டுபிடிப்பதிலே போட்டி இருப்பது நல்லதுதான். நல்ல விஷயங்களை எல்லோரும் போட்டி போட்டுக்கொண்டு செய்வது நல்லதுதான்.

ஆனால், அதே நோக்கிலே மத்தியிலே ஆளுகின்ற கட்சியைச் சேர்ந்தவர்கள் பாதிக் கிணறு தாண்டுவது என்று சொல்வார்கள். அம்மாதிரி—இந்தத் தீர்மானத்திலே பாதியை ஆதரிக்கிறோம் என்று சொன்னார்கள். அம்மையார் அவர்கள் கேட்டார்கள். 'நாமாக' என்றுகூட முதலமைச்சர் அவர்கள் சொல்லவில்லை. மாநில அரசும் என்று சொன்னார்கள். அந்த 'உம்' விகுதியைப் பற்றி இங்கே பேசப்பட்டது. மாநிலத்திற்கும் கொஞ்சம் அதிகாரம் கொடுங்கள் என்று கேட்டிருக்கிறார்கள். ஆகவே, உங்கள் கட்சியும் இதிலே ஒத்துழைப்பு அளித்தால் கள்ளப் பணம், கள்ளச் சந்தை ஆகியவை இந்த நாட்டிலிருந்து படிப்படியாக ஒழிக்கப்படக் கூடிய சூழ்நிலை ஏற்படும்.



1973 ஆகஸ்ட் 11] [திரு. கே. ஏ. வகாப்]

இந்த நாட்டிலே கள்ளப் பணம் தங்கக் கட்டிகளாக இருக்கின்றன, கள்ளப் பணம் உணவு தானியங்களாகப் பதுக்கிவைக்கப்பட்டிருக்கின்றன. இந்த நாட்டிலுள்ள கள்ளப் பணம் சுவிட்சர்லாந்திலே, ஹாங்காங்கிலே உள்ள பாங்குகளிலே இருப்பு செய்யப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் கண்டு பிடிப்பதற்கு மத்திய அரசாங்கத்திற்கு மாநில அரசாங்கமும் யோசனைகள் சொல்வது நல்லது என்று நினைக்கிறேன். சுவிட்சர்லாந்தில் உள்ள பாங்குகளில் உலகத்திலே உள்ள கோடீசுவரர்கள், தங்களிடத்திலுள்ள மிகுதியான பணத்தைப் போட்டு வைத்திருக்கிறார்கள். இந்திய துணைக் கண்டத்திலே உள்ள தலைவர்கள் எல்லாம் அப்படிப் போட்டுவைத்திருந்தார்கள் என்று சொல்லப்பட்டது. இங்கே இருக்கிற தொழில் அதிபர்கள் அந்நாட்டு வங்கியில் கணக்கு வைத்திருக்கிறார்கள் என்று சொல்கிற நிலையிலே மத்திய அரசாங்கம் அவற்றையெல்லாம் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, மாநில அரசாங்கம் அப்படி முடி[illegible] எங்களுக்கும் உரிமை கொடுங்கள் என்று சொல்லும்போது, தயவுசெய்து இங்[illegible] இருக்கிறவர்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

61623

இங்கே இருக்கிற, இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் [illegible]லிசவாதியாக இருப்பவர்; இன்று சமுதாயத்திலே என்ன நிலைமை இருக்கிற[illegible]? இன்றைய தினம் நாய் வளர்ப்பதற்காக [illegible] ஒன்றுக்கு ரூ. 400 [illegible] வழிப்பவர்கள் இருக்கிறார்கள். அதே நேரத்திலே, தான் 10 மாதம் சுமந்துபெற்ற குழந்தைக்குப் பால்கூடத் தரமுடியாத சூழ்நிலையிலே நாட்[illegible] பொருளாதாரம் சீர்குலைந்து இருக்கிறது. தொழி[illegible] ஒரு [illegible] இல்லாமலிருக்கிற சூழ்நிலைகள் எல்லாம் இருக்கின்றன[illegible]தாரத் திட்டத்தை, சமதர்மத்தைப் பற்றி வாயளவில் மட்டும் பேசினால் போதுமா? இப்படிப்பட்ட திட்டங்கள் மூலமாகத்தானே அவற்றை அமுல்படுத்த முடியும்? மாநில அரசாங்கம் அதற்கான அதிகாரத்தை வாங்க, அதை வாங்கிக் கொடுக்க நீங்கள் முயற்சி எடுக்கவேண்டும். இந்த மாநிலத்திலிருக்கிற, மத்திய ஆளும் கட்சியைச் சேர்ந்த, உறுப்பினர்கள் இதில் அக்கறை காட்ட வேண்டு மென்பதை நான் வலியுறுத்திக் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அதிகாரத்தை எல்லாம் கொடுத்து விடுங்கள் என்றுகூடக் கேட்கவில்லை. ஒரு பகுதியைக் கொடுங்கள் என்று கேட்டார்கள். ஓராண்டிற்காவது, பரீட்சார்த்தமாகக் கொடுங்கள் என்று கேட்டார்கள். கொஞ்சம் கொடுங்கள் என்றுதான் கேட்டிருக்கிறார்.

[திரு. கே. ஏ. வகாப்] [1973 ஆகஸ்ட் 11

பாரதத்திலே ஒரு சம்பவம். துரியோதனனிடத்திலே பாண்டவர்கள் எங்களுக்கு நாட்டிலே பாதியைக் கொடுங்கள் என்று கேட்டார்கள். அதற்குப் பிறகு 5 ஊர்களையாவது கொடுங்கள் என்று கேட்டார்கள். அதற்குப் பிறகு 5 வீடுகளையாவது கொடுங்கள் என்று கேட்டார்கள். ஆனால், துரியோதனன் இருக்கக்கூட இடம் கொடுக்கமாட்டேன் என்று சொன்னான். ஆனால், பாரதத்தினுடைய முடிவு என்ன என்பது அனைவருக்கும் தெரியும். அதே போல், மாண்புமிகு முதல்வர்கள் 5 விதிகள் என்ற அளவிலே, எங்களுக்கு ஓராண்டு பரீட்சார்த்தமாகக் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். அதற்கு இங்கே இருக்கிற ஆளும் காங்கிரஸ்காரர்கள் ஆதரவு தரவேண்டுமென்பதை முக்கிய கோரிக்கையாக வைத்து, பொருளாதாரம் சீரடைய, சமுதாயத்திலுள்ள ஏழைகள் வாழ்வு வளம்பெற, கள்ளப் பணத்தை வெளியே கொண்டுவர எடுக்கின்ற எல்லா முயற்சிகளையும் ஆதரித்து, நான் என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் பேசும்பொழுது துரியோதனர்களுக்கு எங்களை ஒப்பிட்டார்கள் நாங்கள் இங்கே 6 பேர்கள்தான் இருப்பது. ஆகவே துரியோதனர்கள் நாங்கள் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** துரியோதனன் சபையிலே விதுரன் வில்லை முறித்துப்போட்டு விட்டான் என்று பாரதத்திலே வருகிறது. அதுபோல் தாங்கள் விதுரனாக இருந்து இதை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இதை நாங்கள் எதிர்க்கவில்லை. இதிலே என்ன செய்யப்போகிறீர்கள் என்று திட்டவட்டமாக விவரங்களைச் சொல்ல வேண்டுமென்று தான் கேட்டோம். அதை யாரும் இங்கே எதிர்க்கவில்லை. எல்லோரும் ஆதரித்துத்தான் பேசினார்கள். எனவே நாங்கள் விதுரன் என்று திரித்துப் பேசுவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** உங்களுடைய கட்சித் தலைவர் பேசியபோது நீங்கள் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தால் இப்படிப்பட்ட சந்தேகம் வராது. உங்கள் கட்சித் தலைவர் பேசும்பொழுது இந்தத் தீர்மானத்தின் முன்பகுதியை நான் ஆதரிக்கிறேன், மாநிலத்திற்கு அதற்காக அதிகாரம் கேட்பதைத்தான் ஆதரிக்கவில்லை என்று சொன்னார்கள். தலைவர் பேசும்பொழுது ஒரு உறுப்பினர் கவனமில்லாமல் இருப்பது மிக மிகத் தவறு.



1973 ஆகஸ்ட் 11]

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை ஆதரித்து எங்கள் கட்சியின் சார்பாக சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். இந்தத் தீர்மானத்தில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன.

அதில் முதல் பகுதி வாஞ்சு குழு அறிக்கையின் சிபாரிசுகளை மத்திய அரசாங்கம் செயல்படுத்தவேண்டும். இன்னொரு பகுதி மாநில அரசாங்கத்திற்கு அந்த சிபாரிசுகளைச் செயல்படுத்துவதற்காக அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்பது ஆகும். என்னைப் பொறுத்தவரையில் முதல் பகுதிதான் முக்கியமான அம்சமாக இருக்கிறது. இரண்டாவது பகுதியைப் பொறுத்த வரையில் அதில் விவாதத்திற்கே இடம் இல்லை. ஒரு நல்ல காரியத்தைச் செய்வதற்காகத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த மன்றத்தின் மூலமாக இதை நிறைவேற்றி, மற்ற மாநில முதலமைச்சர்களைக் கலந்து கொண்டு மத்திய அரசாங்கம் அதற்காக ஒரு கூட்டம் கூட்டி மாநில அரசுகளுக்கு அந்த அதிகாரம் வழங்கப்படலாமா என்று பரிசீலனை செய்யலாம் என்றுகூட கருதுகிறேன்.

வாஞ்சுக் குழு அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கின்ற சிபாரிசுகளை அமல் படுத்தவேண்டுமென்ற முறையிலே இது கொண்டுவரப்பட்டு இருக்கிறது. கடந்த ஆண்டு ஆகஸ்டு எட்டாம் தேதியன்று அந்தக் குழுவின் அறிக்கை பாராளுமன்றத்திலே வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதுகாறும் ஒரு ஆண்டுக் காலமாக மத்திய அரசாங்கம் அந்த அறிக்கையின் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் அது வருந்தத்தக்கது. சமுதாயத்தை வாட்டி வதைத்துக்கொண்டிருக்கின்ற பொருளாதார நெருக்கடியை நாட்டிலே உருவாக்கிக் கொண்டிருக்கிற கறுப்புப் பணத்தை அகற்றுவதற்கு மத்திய அரசாங்கத்தின் அக்கறை எந்த அளவிற்கு இருக்கிறது என்பதைத்தான் இது காட்டுகிறது. அந்த அளவிற்கு இருக்கின்ற மத்திய அரசாங்கம் வேகமாகச் செயல்பட வேண்டுமென்ற முறையிலே வற்புறுத்துகின்ற தீர்மானமாக இது இருக்கிறது. இந்த நாட்டிலே மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும் சமதர்ம சமுதாயக் கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கின்றன. நல்ல சமதர்ம சமுதாயத்தை நம்மால் உருவாக்க முடியவில்லை, அந்த அளவிற்கு வெற்றியைத் தேடித் தரவில்லை என்று சொன்னால் அதற்குக் காரணம் கறுப்புப் பணமும் ஒன்று. இந்த நாட்டிலே உள்ள ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வடைய வேண்டுமென்றால் வசதி

யுள்ளவர்களுக்கும், வசதியற்றவர்களுக்கும் இடையிலே இருக்கிற இந்த இடை-வெளியைக் குறைக்கவேண்டுமென்றால் நாட்டிலே கறுப்புப் பணம் அகற்றப்பட வேண்டும். இதிலே அரசாங்கம் தீவிரமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

நம்முடைய நாட்டிலே ஏறக்குறைய 6 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு கறுப்புப் பணம் இருக்கிறது என்ற கணக்கை நாம் அறிந்திருக்கிறோம். மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கத்திற்கும் கறுப்புப் பணம் யாரிடம் இருக்கிறது என்று தெரிந்துகொண்டும்கூட நடவடிக்கைகள் எடுக்காமல் இருந்தால் இதற்கு யார் காரணம் என்பதை நாம் மக்களுக்குச் சொல்லியாக வேண்டும். இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றாமல் இருந்ததுதான் காரணம் என்று சொன்னால் சீக்கிரமாக நிறைவேற்றித் தருவோம்.

முன்பு திரு. வெங்கிடசாமி அவர்கள் பேசும்பொழுது கூறியதுபோல் மத்தியிலே இருக்கிற டாக்டர் ஆபரேஷன் செய்தால் என்ன, மாநிலத்திலே இருக்கிற டாக்டர் ஆபரேஷன் செய்தால் என்ன, ஆபரேஷன் சக்ஸஸ் ஆக வேண்டும். அது மாத்திரமல்ல, பேஷண்டும் பிழைக்கவேண்டும். அப்படி யில்லாமல் ஆபரேஷன் மட்டும் சக்ஸஸ் ஆகி பேஷண்ட் கொலாப்ஸ் ஆனால் பிரயோஜனம் இல்லை, என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நாட்டிலே இருக்கிற அதிகாரம் குறைவாக இருக்கிறது. இருக்கிற சட்டங்களை வைத்து இந்த நாட்டிலே சமதர்ம சமுதாயத்தை அமைப்பதற்கு எப்படிச் செயல்பட வேண்டும் என்பது பிரச்னை. ஒருவேளை நிர்வாகச் சீர்கேடுகளினால் —நாங்கள் எல்லாம் நான்கு நாட்களாக இந்த அரசாங்கத்திலே இருக்கின்ற குறைகளைச் சொல்லியிருக்கிறோம். இந்த அரசாங்கத்திற்கு இருக்கின்ற அதிகாரத்தை வைத்துக்கொண்டு நிர்வாகத்தை செம்மையாகச் சீராகச் செய்ய முடியாத நிலையில் குறைபாடுகள் இருப்பதை எல்லாம் எடுத்துக் காட்டினார்கள். இருக்கின்ற சட்டத்தை வைத்து ஏழைகளுக்கு நல்ல முறையிலே பயன்படக் கூடிய முறையிலே செயல்படுத்த வேண்டும். அதிகாரம் அதற்காக வேண்டு மென்றால் பெற்றுக்கொள்வோம், நான் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. இருக்கின்ற அதிகாரத்தை வைத்து சக்தியோடு செயல்படவேண்டும், திட்டவட்டமாகச் செயல்படவேண்டும், கறுப்புப் பணம் அகற்றப்படவேண்டும், அப்பொழுதுதான் இந்த நாட்டிலே ஏற்றத் தாழ்வுகள் அகற்றப்படும்.

பல்வேறு வெளிநாடுகளிலே கறுப்புப் பணத்தை அகற்றுவதற்கு டிமானிட்டைசேஷன் முறையைக் கையாண்டு வருகிறார்கள். அந்த முறையைக் கொண்டுவரவேண்டுமானால் இப்பொழுது இருக்கிற அதிகாரத்தின்படி மத்திய



அரசாங்கம்தான் செய்யவேண்டும். மத்திய அரசாங்கம் செய்தாலும் சரி, மாநில அரசாங்கம் அந்த அதிகாரத்தைப் பெற்றுச் செய்தாலும் சரி அதிக நோட்டுப் புழக்கத்தை, கள்ளப் பணத்தை அகற்ற வேண்டும். ஒரு சவரன் 300 ரூபாய்க்கு விலை உயர்ந்திருக்கிறது என்று சொன்னால் வாஞ்சுக் குழு அறிக்கையின் காரணமாக இன்று இருக்கிற நோட்டுகளுக்கு ஆபத்து வருகிறது. ஆகவே நோட்டை சவரனாக மாற்றவேண்டுமென்ற முயற்சியிலே கள்ளப் பணத்தை வைத்திருக்கிறவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று அர்த்தம். விலைவாசி ஏற்றத்திற்கு அது காரணம். வாஞ்சுக் குழுவின் அறிக்கையை கோல்ட் ஸ்டோரேஜிலே வைத்துவிடாமல் இந்த நாட்டிலே இருக்கிற கள்ளப் பணத்தை அகற்றுவதற்கு முயற்சி செய்யவேண்டும். கள்ளப் பணம் வைத்திருக்கிறவர்கள் தப்பித்துக்கொள்ள காலத்தை அதிகமாக அனுமதிக்காமல் இந்தத் தீர்மானத்தைத் தீவிரமாகச் செயல்படுத்த வேண்டும். இந்த மாநில அரசு அதிக அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கூறி இந்தத் தீர்மானத்தை ஆதரித்து விடைபெறுகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மிஸ்டர் ஸ்பீக்கர் சார், இந்தத் தீர்மானத்தை வரவேற்றுச் சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக் கிறேன்.

நேற்று விவாதம் முடியக்கூடிய நேரத்திலே வாஞ்சு கமிட்டி கறுப்புப் பணம் சம்பந்தமாகக் கொடுத்திருக்கக்கூடிய சிபாரிசுகளை அமல் நடத்தவேண்டு மென்று வேண்டிக்கொள்ளக்கூடிய ஒரு தீர்மானத்தை இந்த அரசு நிறை வேற்றத் தயாரா என்று கேட்டேன். உடனடியாக முதலமைச்சர் தயார் என்று சொல்லி அந்த முறையிலே இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக் கிறார்கள். இந்தத் தீர்மானத்திலே இருக்கக்கூடிய பிரதான அம்சம், வாஞ்சுக் கமிட்டி பல சிபாரிசுகளைச் செய்தாலும்கூட கறுப்புப் பணம் சம்பந்தப்பட்ட சில சிபாரிசுகளை உடனடியாக அமல்படுத்த வேண்டுமென்பதுதான் என்னுடைய கோரிக்கை. பொதுவாகப் பத்திரிகைகளிலும், நாடாளு மன்றத்திலேயும் கறுப்புப்பணம்பற்றி வாஞ்சுக் கமிட்டி செய்துள்ள சிபாரிசு களைப் பற்றிப் பல விவாதங்கள் எல்லாம் நடந்திருக்கின்றன. 1970-ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இந்த வாஞ்சு கமிட்டியிலே சிலாக்கியமான சிறந்த மெம்பர் களைப் போட்டிருக்கிறார்கள். குறிப்பாக சுப்ரீம் கோர்ட் முன்னாள் ஜட்ஜாக இருக்கும் வாஞ்சு அவர்கள், பொருளாதார நிபுணரும் நல்ல சட்ட மேதையுமான சிட்டாலே அவர்கள், சார்ட்டட் அக்கவுண்டெண்ட் மிஸ்டர் பிரகாஷ் சோப்ரா அவர்கள், சென்ட்ரல் போர்ட் ஆப் ரெவின்யூவிலே இருந்த

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 ஆகஸ்ட் 11

பாரி அவர்கள், எகனாமிக் டைம்ஸின் ஆசிரியராக இருந்த சங்கனேக்கர் போன்றவர்கள் அதில் இருக்கிறார்கள். நான் ஏன் இந்தப் பெயர்களையெல்லாம் சொல்கிறேன் என்றால், இது நல்ல ஹை பவர் கமிட்டி என்பதுபோல் இருப்பது மட்டுமல்லாமல் நிபுணர்களையும் இந்தக் குழு கொண்டிருக்கிறது. ஏற்கெனவே இருந்த நிபுணர்களின் சிபாரிசுகளையெல்லாம் நன்றாக அலசி ஆராய்ந்து நடைமுறையிலே உள்ள பிரச்னைகளையும் தெரிந்து தெளிவாகக் கொடுத்திருக்கிறார்கள். முதலிலே இடைக்கால அறிக்கையை வெளியிட்டார்கள். இதைக் கொண்டுவர வேண்டுமென்று எழுந்த பிரச்னைகளைப் பற்றியெல்லாம் எனக்கு முன்னால் பேசிய ஒருவர் கூறினார். பிறகு மொத்த இறுதி அறிக்கையே வந்துவிட்டது.

இதன்பேரில் பல பத்திரிகைகள் தங்கள் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே குறிப்பாக நம்முடைய தமிழ்நாட்டுப் பத்திரிகை என்ற முறையிலே 1972-ஆம் வருஷம் மார்ச் 23-ஆம் தேதி 'இந்து' பத்திரிகையில் எழுதியிருக்கும் தலையங்கத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். பொதுவாக அந்த சிபாரிசை வரவேற்றிருக்கிறார்களா என்பது ஒருபுறத்தில் இருக்கட்டும், ஆனால் கடைசியிலே கொடுத்திருப்பது ரொம்பப் பொருத்தமாக இருக்கிறது.

"The test of the Governments apt to express a desire to set things right lies in the purposeful way in which the recommendations are put into effect."

இது அநேகமாக எந்தச் சர்க்காருக்கும் பொருந்தும். மத்திய சர்க்காராக இருந்தாலும் பொருந்தும், மாநில அரசாங்கமாக இருந்தாலும் அது பொருந்தும். மத்திய அரசு 1970-ஆம் ஆண்டிலே இந்தக் கமிட்டியைப் போட்டு, அந்த அறிக்கை வெளிவந்த பிறகு, அதை சரியாக அமல் நடத்தவில்லை என்று பலரும் கூறிக்கொண்டிருக்கிறார்கள். எனக்கு நேரம் அதிகமாகக் கிடைக்காது என்ற காரணத்தால் அவைகளைத் தொகுத்துச் சொல்ல முடியவில்லை.

இந்த நேரத்தில் நான் ஒன்றைச் சொல்ல வேண்டுமென்று நினைக்கிறேன். நாடாளுமன்றத்தில் ஜோதிர்மாய் பாசு அவர்கள் ஒரு பிரச்னையை எழுப்பினார்கள். எல்லாக் கட்சி உறுப்பினர்களும் பேசும்பொழுது, எங்கள் கட்சியைச் சேர்ந்த பாலதண்டாயுதம் அவர்கள் சொன்னது இந்த வாஞ்சு கமிட்டியின் ரிப்போர்ட்டை வெறும் கோல்ட் ஸ்டோரேஜில் போட்டுவிட்டார்கள் என்று.



1973 ஆகஸ்ட் 11] [திரு. கே. டி. கே. தங்கமணி]

'The Wanchoo report speaks of parallel economy; Because the Government is biased to the moneyed class, you are hesitant in taking prompt action. Steps must be taken for mopping up the hundred rupee notes. In other words, hundred-rupee notes should be demonestised.'

அந்தக் குறிப்பிட்ட ஒரு விஷயத்தை அவர்கள் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். இது எங்கள் கட்சியின் நிலையாக இருந்து இருக்கின்றது.

இங்குகூட அந்த சிபாரிசுகளைப் பொறுத்தவரையில் மூன்று சிபாரிசுகளில் ஏன், எப்படிக் கறுப்புப் பணம் வருகிறது என்ற காரணத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அது யாருக்கும் தெரியாத விஷயம் அல்ல. யாராவது லஞ்சம் வாங்குபவர்கள் இருந்தால் அவர்களிடம் கறுப்புப் பணம் இருக்கும், ஏதாவது ஊழல் நடந்தால் அது கறுப்புப் பணம், அல்லது ஏதாவது குறிப்பிட்ட தொழிலுக்குக் கொடுக்க வேண்டுமென்றால் அதில் ப்ளாக் மணி கொஞ்சமும், ஒயிட் மணி கொஞ்சமுமாக இருக்கிறது. இப்படிப் பல விஷயங்களிலே கறுப்புப் பணம் வந்து 'பேரலெல் மார்க்கெட்டாக இருக்கிறது. இது இன்று ஏற்பட்டதல்ல, யுத்தம் முடிந்த பிறகு அது ஆரம்பித்தாகிவிட்டது. இப்படி பேரலெல் மார்க்கெட் உருவாவதைத் தடுக்க ஆங்காங்கே நடவடிக்கை எடுத்தார்கள்.

அதைப்போல இங்கே சர்க்காரிலே எடுத்தார்களா? பெல்ஜியம் போன்ற நாடுகளிலே—நான் சொல்லும் நாடுகள் இந்தியாவைப் போன்ற முதலாளித்துவ நாடுகளைச் சொல்கிறேன்—நெதர்லேண்ட் போன்ற நாடுகளிலே அமல் நடத்தி வெற்றி கண்டிருக்கிறார்கள். ஒரு ஆண்டுக்கு முன்னாலே சிலோனிலே செய்தார்கள், அவர்கள் செய்தது கடுமையான காரியம். நாளைக் காலையிலேயிருந்து குறிப்பிட்ட நோட்டுகள் செல்லாது என்று சொல்லி, அதுமாதிரி ஒன்றிரண்டு நோட்டை வைத்திருந்தவர்கள் 'ஹார்ட் அட்டாக்'காகக் கூடிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. இது ஷாக் ட்ரீட்மெண்ட்தான்.

மூன்று அம்சங்களைச் சொல்கிறார்கள். ஒன்று, டிமானடைசேஷன். இதிலே சொல்லும்பொழுது. இப்பொழுது 20 ரூபாய் நோட்டு வந்துவிட்டது, இப்படி பத்து ரூபாய், இருபது ரூபாய், நூறு ரூபாய் நோட்டு இந்த நோட்டுகளை செல்லாது என்று சொல்லவில்லை, இந்த நோட்டுகளை ஒரு வாரத்திற்குள்ளாகப் புதுப்பித்து விட வேண்டும். இந்தக் கறுப்புப் பணம் 1968-69-லே 7,000 கோடி இருந்ததாக வாஞ்சு கமிட்டி சிபார்சிலே சொல்கிறது. அதுமட்டுமல்லாமல்

ஒவ்வொரு வருஷத்திற்கும் இன்கம் டாக்சுக்கு வராத பணம் 1,400 கோடி ரூபாய் இருக்கிறது. இப்படி அந்தக் கறுப்புப் பணம் சேர்ந்து கொண்டிருக்கிறது என்றும் தெரிவிக்கிறார்கள். அப்படியானால் இந்தப் பணத்தை வெளியிலே கொண்டுவரும் முயற்சியிலே நாங்கள் கேட்கிறோம், 25,000 ரூபாய் வரையிலே அல்லது 50,000 ரூபாய் வரையிலே அந்தப் பணத்திற்குப் பணமாகவே கொடுக்க வேண்டும். 5,000 ரூபாய் வரையிலே 10 ரூபாய் 100 ரூபாய் நோட்டுக்களாகக் கொடுக்கலாம். அதற்கு மேல் செக்காகக் கொடுக்க வேண்டும். உதாரணமாக 1,000 கோடி ரூபாய் பணம் என்பது 100 கோடி ஆகிவிடும். அதனால் புழக்கத்திலே உள்ள நோட்டுகள் குறைந்துவிடும். அதை சிலோனிலே அனுஷ்டித்தார்கள். ரிசர்வ் பாங்குதான் இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும். ஆனால் அதைக் கண்ட்ரோல் செய்யும் பலர் இதை விரும்பவில்லை, அதனால் தயக்கம் ஏற்படுகிறது. அரசே கட்டளையிட்டாலும் பழைய கருத்துள்ள அதிகாரிகள் பலர் இருக்கிறார்கள் என்று நேற்றுக் கூறினார்கள். அதைப் போலவே பழைய பொருளாதார அஸ்திவாரத்திலே தங்கள் கொள்கையை வைத்திருப்பவர்களில் சிலரால் இதை நினைக்கவே முடியவில்லை.

**திரு. செ. கந்தப்பன் :** தலைவரவர்களே, மதிப்பிற்குரிய திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொல்லும் நேரத்திலே ரிசர்வ் பேங்கைப் பற்றிய கருத்தைச் சொன்னார்கள். நான் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகக் கேட்கிறேன், ரிசர்வ் பேங்கிற்குத் தனி அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருந்தாலும் மத்திய சர்க்கார் ஒரு ஆக்டின் மூலம் கட்டுப்படுத்துகிறது. எனவே, மத்திய அரசு மனம் வைத்தால் நிச்சயமாகக் கட்டுப்படுத்த முடியும் என்று நான் அறிந்த வரையில் தெரிந்துகொண்டிருக்கிறேன். ஆனால் அவர்கள் சொல்வது வேறு விதமாக இருக்கிறது. அதை விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சிபார்சை அமல் நடத்த வேண்டுமென்றால் உடனடியாகச் செய்துவிடலாம். நான் அமல் நடத்தாமல் இருக்கும் அப்படிப் பட்ட அதிகாரிகளைப்பற்றித்தான் சொன்னேன். சிபார்சை அமல் நடத்த வேண்டும் என்றால் ரிசர்வ் பேங்க் பழைய நோட்டுக்கள் செல்லாது என்று சொல்லிவிட்டால் 7 நாட்களுக்குள் அவைகள் செல்லாமல் போய்விடும். அப்படிச் செய்தால் நோட்டுகள் வந்துவிடும், நோட்டுகளைச் சேர்த்து வைத்திருப்பவர்களின் பாடு திண்டாட்டமாகப் போய்விடும்.





இரண்டாவது—ரொக்கப் பணமாகவோ அல்லது நோட்டுக்களாகவோ 5,000 ரூபாய்க்கு மேல் வைத்திருக்கக்கூடாது என்பது இரண்டாவது சிபார்சு. அப்படி 5,000 ரூபாய்க்குமேல் வைத்திருக்கக்கூடாது என்றால், 'எசென்ஷியல் கமாடிட்டீஸ் ஆக்ட்' மாதிரிகூட ceiling on cash holdings என்று ஒரு சட்டத்தைப் போடலாம். அம்மாதிரி ஒரு சட்டத்தைப் போட்டு அதற்கு மேலே நோட்டுகள் இருக்கக் கூடாது, அப்படியிருந்தால், இருந்தது என்று தெரிந்தால் அதைப் பிடிக்க நமக்கு அதிகாரம் வரும். தமிழக அரசுக்கு எங்கே அதிகாரம் வரும் என்றால் உடனடியாக நோட்டைத் திருப்பிக் கொடுக்கும் இடத்தில் வராது, 5,000 ரூபாய்க்குமேல் யார் வைத்திருக்கிறார்கள் என்று பார்க்கும்பொழுது அதிகாரம் இருக்குமே தவிர, அப்படி ஒரு லிமிடெட் பவர்ஸ்தான் மாநில அரசாங்கத்திற்கு வர முடியும்.

மூன்றாவது ஆலோசனை என்னவென்றால்,

acquisition of immovable property and under-statement of purchase considerations

இது இப்பொழுது நடக்கிறது, எல்லோருக்கும் தெரியும். கையிலே ஒரு இலட்சம் ரூபாய் வைத்திருந்தால் சொத்து வாங்குகிறார்கள், எல்லோரும் வாங்குகிறார்கள். பொது ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்கள் வாங்குகிறார்கள், அரசியல் கட்சிகள் வாங்குகின்றன, தனியார் வாங்குகிறார்கள், பணக்காரர்கள், கள்ள மார்க்கெட்காரர்கள் இப்படி எல்லோருமே வாங்குகிறார்கள். எப்படி வாங்குகிறார்கள் என்றால் ஒரு இலட்சம் ரூபாய்க்கு ஒரு வீட்டை வாங்கு கிறார்கள் என்றால், அதன் மதிப்பீடு ஒரு இலட்சம் என்றால், 40,000 ரூபாய் என்று சொல்லிப் பதிய வேண்டியது, 60,000 ரூபாய் பணத்தைக் கள்ளப் பணமாகக் கொடுப்பது. இது பம்பாயிலே ஓபனாக நடக்கிறது. 60-40 என்றே சொல்வார்கள். அதாவது 60 கள்ளப் பணம், 40 வெள்ளைப் பணம். இது 75-25 என்று ஏற்படக்கூடிய அளவிற்குக்கூட ஓபனாக வந்துவிட்டது. ஆகவே, இதிலே ரகசியம் ஒன்றும் இல்லை. இன்றைக்குச் சட்டம் இருக்கிறது. ஒரு சிறு கொட்டேஷனைக் கொடுக்கலாம் என்று நினைக்கிறேன்.

"To buy and sell properties at prices much greater than what is found in the conveyance deeds has become a common method of cheating the Central Government of Income-tax and other taxes of the State Government, by conveniently transferring as black-money. If a special Corporation is set up for the purpose and empowered to step in and acquire such properties at the stated value, it will make a blow against black-money." பி.ப. 1-00

இந்தச் சிபாரிசு சந்தானம் கமிட்டியின் சிபாரிசு. ஏற்கெனவே 1889-ம் ஆண்டுச் சட்டம் இருக்கிறது. இந்தியன் ஸ்டாம்ப் ஆக்ட் 1889—செக்ஷன் 64 படி—

'It provides for the imposition of fine which may extend to Rs. 5,000 in case consideration has not been fully disclosed in the sale deed'.

சட்டத்திற்கு ஒன்றும் குறைவு இல்லை. சட்டம் இருந்தாலும் கூட இன்றைக்குச் சட்டத்தை மீறுகிறார்கள். இப்படி மீறுகிற நேரத்தில் அதைத் தடுக்க மாநில சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கலாம்.

ஒரு வீடு வாங்கியிருப்பதாகச் சொல்வதாக வைத்துக் கொள்ளுங்கள். 40,000 ரூபாய்க்கு வாங்கியிருப்பதாக சேல் டீட் இருந்தால், அது அண்டர் வால்யூ என்று தெரிந்தால் அதை அரசாங்கமோ அல்லது அதற்கான கார்ப்பரேஷனோ பணம் கொடுத்து வாங்க வேண்டுமென்ற அளவுக்கு அதிகாரத்தை வைக்க வேண்டும். மூன்று விஷயத்தைச் சொல்லி இருக்கிறார்கள். இப்படிச் செய்வதன் மூலம் பெருமளவுக்குக் கறுப்புப் பணத்தை வெளியேற்ற முடியும். நாடாளுமன்றத்தில் இதை விவாதம் செய்வதாக இருந்தால் நான் ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம் விவாதிப்பதற்கான விவரங்களைச் சேகரித்து வைத்திருக்கிறேன். இப்போது இருக்கக்கூடிய தீர்மானத்தின் நோக்கம்—மத்திய சர்க்கார் ஒரு சிறந்த கமிட்டியைப் போட்டு வெகு அருமையான சிபாரிசுகளைக் கொடுத்திருக்கிறார்கள், அந்த சிபாரிசுகள் போற்றத்தக்கவை. இந்து பத்திரிகையில் சொன்னது மாதிரி இந்த சிபாரிசை அமல் நடத்துகிறார்களா என்பதைப் பொறுத்துத்தான் பலன் இருக்கிறது.

அந்தச் சிபாரிசிலே டாக்ஸ் எவேஷனைத் தடுப்பது பற்றியும் மற்றும் பல விஷயங்களும் இருக்கின்றன. கறுப்புப் பணம் என்ற ஒரு விஷயத்தைப் பொறுத்தவரையில் கொடுத்திருக்கும் சிபாரிசை மத்திய சர்க்கார் அமல் நடத்த வேண்டும். அப்படி அமல் நடத்தும்போது மாநில சர்க்காரை இணைத்துக் கொள்ளுங்கள். எந்த அளவுக்கு அதிகாரம் கொடுக்கவேண்டுமோ கொடுங்கள். நடைமுறையில் சில இடங்களில் கண்டிப்பாக மாநில சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்காமல், இணைக்காமல் முடியாது.

உதாரணமாக, லேபர் கோர்ட் இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். ரயில்வே தொழிலாளர்கள் அல்லது பாங்கு சிப்பந்திகளுக்கு லேபர் கோர்ட்—ட்ரிப்யூனல் சென்டர்தான். ஆனால் நீங்களும் ஒரு ட்ரிப்யூனலைப் போட்டு



வைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லுகிறார்கள். அந்த டெலிகேஷன் ஆப் பவர் அவசியந்தான். அந்த இணைப்பும் அவசியந்தான். அந்த முறையில்தான் கோஆபரேஷன் ஏற்பட முடியுமே தவிர, அதிலே முரண்பாடு இருப்பதாகத் தெரியவில்லை. இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தது வரவேற்கத்தக்கது. எங்கள் கட்சியின் சார்பில் இந்தத் தீர்மானத்தை நாங்கள் ஆதரிக்கிறோம் என்று சொல்லி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஜோதி வெங்கடாசலம். . .

**திரு. கே. டி. கே. தங்கமணி:** ஒரே ஒரு விஷயம். இந்த அரசு அதிகாரத்தில் சில விஷயங்கள் இருக்கின்றன. பதுக்கல் இருக்கிறது. அதற்கு நாமே நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். எடுப்பதற்கு அதிகாரம் இருக்கிறது. அப்படி இருக்கும் அதிகாரங்களை அரசு உபயோகிக்க வேண்டும். அப்படி என்னென்ன அதிகாரங்கள் நமக்கு இருக்கின்றனவோ அவற்றை எல்லாம் ஜனங்களுக்குச் சாதகமான முறையில் பயன்படுத்த வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

*** திருமதி ஜோதி வெங்கடாசலம்:** தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை எங்கள் கட்சியின் சார்பாக ஆதரித்து என்னுடைய கருத்தைக் கூறுவதற்கு முன் வந்திருக்கிறேன். மத்திய அரசு முதல் கட்டமாக வாஞ்சு கமிட்டியின் அறிக்கைகளை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது. இரண்டாவது கட்டமாக மத்திய அரசு மாநில அரசுக்கு சில அதிகாரங்களைக் கொடுக்க வேண்டுமென்பது. கறுப்புப் பணம் அதிகமாகப் புழங்குவதன் காரணமாகத்தான் இன்றைக்கு விலைவாசி உயர்ந்திருக்கிறது என்று மத்திய அரசே ஒப்புக் கொண்டிருக்கிறது.

இன்றைக்குப் பெருமளவில் ஐயாயிரம் கோடி ரூபாய் அளவுக்குத் தமிழ் நாட்டைப் பொறுத்தமட்டில் கறுப்புப் பணம் புழங்கிக் கொண்டிருக்கிறது என்றால் அதைப் பொறுத்து ஹை பவர் கமிட்டி கொடுத்த சிபாரிசுகளை அமல் நடத்த வேண்டுமென்று நாம் மத்திய அரசுக்குச் சுட்டிக்காட்ட வேண்டும். எக்ஸ்பர்ட்ஸ் கமிட்டி இதை கான்சர் வியாதி என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கான்சர் ஆப்பரேஷனைச் செய்வது யார் என்பதைப் பற்றியெல்லாம் நமக்குக் கவலை இல்லை. கான்சர் என்பது தீராத வியாதி என்பதை மாத்திரம் புரிந்து கொண்டிருக்கிறோம். அப்படிக் கொடுமையான வியாதியாக இருக்கக்

கொண்டு வருவதற்கு வாஞ்சு ( Wanchoo ) குழுவினர் கூறியிருக்கும் பரிந்துரைகளை மத்திய அரசு ஏற்று செயற்படுத்த வேண்டுமென்றும், அவ்வாறு செயற்படுத்தும் நடவடிக்கைகளை மாநில அரசுகளும் எடுப்பதற்குத் தேவையான அதிகாரங்களை மாநில அரசுகளுக்கு வழங்க வேண்டுமென்றும் மத்திய அரசை இந்த மன்றம் கேட்டுக்கொள்கிறது".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

(3) தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) 13—8—1973 அன்று தனியார் அலுவல்களுக்குப் பதிலாக அரசு அலுவல்களை எடுத்துக்கொள்வது குறித்து.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"2—8—1973-ம் நாளன்று அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவின்படி 13—8—1973-ம் நாளன்று தனியார் அலுவல் என்று இருப்பதை மாற்றி அரசு அலுவல்கள் என்றும், 14—8—1973-ம் நாளன்று தனியார் அலுவல்கள் என்றும் எடுத்துக்கொள்ள வேண்டும்".

THIRU K. T. K. THANGAMANI: No, No, Sir, I strongly object.
நாங்கள் ஏற்கெனவே 13-ம் தேதி தனியார் அலுவல் என்று சொல்லி முடிவு எடுத்து இருக்கிறோம். அதற்காக சில ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அப்படி இருக்கிறபோது .......

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தனியார் அலுவல்கள் 14-ம் தேதி எடுத்துக்கொள்ளப்படும். 13-ம் தேதி அரசு அலுவல்கள் வைத்துக் கொண்டால், இங்கே நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவுகளை மேலவைக்கு அனுப்புவதற்கு வசதியாக இருக்கும். அதனால்தான் இந்தத் தீர்மானம் கொண்டு வரப்படுகிறது.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"2—8—1973-ம் நாளன்று அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவின்படி 13—8—1973-ம் நாளன்று தனியார் அலுவல் என்று இருப்பதை மாற்றி அரசு அலுவல்கள் என்றும், 14—8—1973-ம் நாளன்று தனியார் அலுவல்கள் என்றும் எடுத்துக் கொள்ளப்படும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 1.26 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.

(6) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders*

Nil.

B. *Reports, Notifications and Other Papers*

47. Notification issued with G.O. Ms. No. 2792, Revenue, dated the 22nd May 1973 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of the gift deeds to be executed by the Municipal Council, Mettupalayam in favour of the landless poor people in Mettupalayam town in Nilgiris district.

48. Notification issued with G.O. Ms. No. 225, Labour and Employment, dated the 26th March 1973 in regard to certain amendments to the Tamil Nadu Plantations Labour Rules, 1955.

49. Fifth Report (Fifth Assembly) of the Committee on Government Assurances.

[திருமதி ஜோதி வெங்கடாசலம்] [1973 ஆகஸ்ட் 11

கூடிய கறுப்புப் பணம் நாட்டில் புழங்குகிறது என்றால் அதைக் கட்டுப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலந்தான் மக்களுக்கு நன்மை ஏற்படும், உயர்ந்திருக்கும் விலைவாசியையெல்லாம் குறைக்க வாய்ப்பு ஏற்படும்.

வாஞ்சூ கமிட்டி அதிலே பல சிபாரிசுகளைச் செய்திருக்கிறார்கள். எல்லா சிபாரிசுகளையும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் 100 ரூபாய் நோட்டுக்களை டிமானடைசேஷன் செய்ய வேண்டுமென்பதையாவது ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த அரசு அதற்கு மத்திய சர்க்காரை வற்புறுத்த வேண்டும். மத்திய அரசு தன்னுடைய பொறுப்பில் பல அதிகாரங்களை வைத்துக் கொண்டிருக்கிறது. பழைய காலத்தைப் போல் மாமியார் மருமகளுக்கு அதிகாரத்தைக் கொடுக்காமல், அதிகாரத்தை மருமகளுக்குக் கொடுத்தால் மருமகள் மிஞ்சிவிடுவாள் என்று இருக்க முடியாது. இந்தக் காலத்தில் அதெல்லாம் செல்லாது. அதிலும் நாட்டின் பிரச்சினை என்று ஏற்படும்போது மாநிலத்திற்குச் சில அதிகாரங்களைக் கொடுத்துத்தான் ஆகவேண்டும்.

மதிப்பிற்குரிய கே. டி. கே. அவர்கள் எந்த அதிகாரத்தையும் இங்கே கொடுக்கக்கூடாது என்று கட்சியின் சார்பாகவோ, எல்லா அதிகாரமும் மத்திய அரசிடந்தான் இருக்கவேண்டுமென்ற கொள்கையின் சார்பாகவோ இல்லாமல் பொது நலத்திற்காக, பல கோடி மக்களுடைய நன்மைக்காக வாஞ்சூ கமிட்டி சிபாரிசுகளை அமல் நடத்துவதோடு மாநில அரசுக்கு இன்னும் விரிவான அதிகாரம் கொடுக்கவேண்டுமென்றும் கூறினார்கள். அதை நானும் ஒப்புக் கொள்ளுகிறேன். அப்படி அதிகாரத்தைக் கொடுத்தால்தான் தமிழ்நாட்டில் இருக்கின்றவர்களிடத்தில் இருக்கின்ற கறுப்புப் பணத்தை வெளியே கொண்டு வரும் முயற்சிகளை எடுத்துக் கொள்ள முடியும். மத்திய அரசோடு ஒத்துழைக்க வேண்டும். மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் கறுப்புப் பணத்தை வெளிக் கொணர ஒவ்வொரு மாநிலமும் எப்படி முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று மற்ற மாநில முதலமைச்சர்களுக்கெல்லாம் தெளிவுபடுத்து வதோடு மற்ற மாநில முதல் அமைச்சர்கள் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும். மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளும் போது இதைப்பற்றி வலியுறுத்தி, அதற்கு முன்பாக மத்திய அரசை இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எங்கள் கட்சியின் சார்பாக இந்தத் தீர்மானத்தை முழு மனதோடு ஆதரிக் கிறேன்.



1973 ஆகஸ்ட் 11]

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, இந்திய நாடு எதிர் பார்த்திருக்கின்ற பொருளாதாரச் சிக்கலைத் தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்ற ஒரு முக்கியமான தீர்மானத்தை இந்த மன்றம் நிறைவேற்றுகின்ற ஒரு நல்ல நாள் இன்னாள் என்று கருதுகிறேன்.

ஜனநாயகத்தை மதிக்கின்ற அரசு இந்த அரசு என்ற முறையில் எதிர்த் தரப்பில் இருந்து எந்த ஒரு நல்ல கருத்தைச் சொன்னாலும் அதை உடனடி யாக ஏற்று தீர்மானமாக நிறைவேற்றுகின்ற முறையையும் பின்பற்றுகிறோம் என்பதை நிரூபிக்கின்ற வாய்ப்பாகவே இந்த வாய்ப்பை நான் கருதுகிறேன்.

பொருளாதாரச் சீர்குலைவு நாட்டிலே இருப்பதும், அதற்கு முக்கியமான காரணம் கணக்கில் வராத கறுப்புப் பணம் என்பதையும், அதைத் தடுத்து அந்தக் கறுப்புப் பணத்தை வெளியே கொணர வேண்டுமென்பதையும் பற்றி எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அளவில் இந்த விவாதம் நடந்தது. வெறும் சட்டத்தால் மாத்திரம் இந்தக் கறுப்புப் பணத்தினுடைய நிலையை மாற்றியமைக்க முடியும் என்று யாரும் கருதவில்லை. நாம் எடுக்கின்ற பொருளாதார முடிவுகள், பொருளாதாரக் கொள்கைகள், தொழில் கொள்கைகள், உணவுப் பங்கீட்டுக் கொள்கைகள் இவைகளின் மூலமாகவே இந்தக் கறுப்புப் பணத்தை முழுக்க முழுக்க நீக்கிவிட முடியும் என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்கிறோம். இதை அடிப்படையாக வைத்துத்தான் வாஞ்சுக் குழு பல சிபாரிசுகளைச் செய்திருக்கிறது. அந்த சிபாரிசுகளை ஏற்று எது எது தேவையோ அவைகளை உடனடியாக அமலுக்குக் கொண்டு வர வேண்டும் என்பதுதான் இந்தத் தீர்மானத்தின் நோக்கமாகும்.

இதை விவாதிக்கும்போது, மத்திய அரசு தன்னுடைய அதிகாரங்களை மாநில அரசுக்குக் கொடுக்கவேண்டும் என்ற வார்த்தையைக் கேட்டவுடனே ஒரு பயம் ஏற்படுகிறது. இந்த மன்றத்தில் மத்திய சர்க்கார் என்று சொன்னாலே ஒரு எதிர்ப்பு. இந்த மாநில அரசு என்ன செய்துவிடுவார்களோ மத்திய அரசை, அதிகாரம் போய்விட்டால் மத்திய அரசுக்கு என்ன ஏற்பட்டு விடுமோ என்ற அச்சத்தினை நாமே வரவழைத்துக் கொண்டு பேசுவது நல்லது அல்ல.

இந்தத் தீர்மானத்தின் வாசகங்களை உன்னிப்பாகக் கவனித்தால் வாஞ்சுக் குழு சிபார்சுகள் அனைத்தையும் மத்திய அரசு செயல்படுத்தவேண்டுமென்று நாங்கள் எங்கும் குறிப்பிடவில்லை. கறுப்புப் பணத்தை வெளியே கொண்டு வருவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென்று சொல்கிறோம். ஆகவே வாஞ்சுக் குழு சிபார்சுகளில் எதை எதை, இந்தக் கறுப்புப் பணத்தை

[திரு. செ. மாதவன்] [1973 ஆகஸ்ட் 11

வெளியே கொண்டுவருவதற்குப் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்க முடியுமோ அவைகளை மத்திய அரசு எடுக்கலாம். அந்த வாய்ப்பும் இத் தீர்மானத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. நாமே எது, எது என்று சொல்ல வேண்டாம். அவர்களே இந்த முடிவைச் செய்யலாம் என்றுதான் கொடுத்திருக்கிறோம். இந்த முடிவுகளில் மாநில அரசுகளுக்கும் அதிகாரம் கொடுக்க வேண்டும். நேற்றும் அதைத்தான் சொன்னோம், இன்றும் அதைத்தான் சொல்கிறோம். அதில் கருத்து வேறுபாடு கிடையாது.

இதைக் கேட்கும்போது, நம்மால் நிறைவேற்றமுடியாத சிபார்சுகள் அதில் இருக்கின்றன, அதை ஆட்சேபிக்கவில்லை. அந்த அதிகாரம் எல்லாம் தரப்பட வேண்டுமென்று கேட்கவில்லை. தீர்மானத்தின் பிற்பகுதியில் மாநில அரசுகள் அப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்குத் தேவையான அதிகாரங்களை வழங்கவேண்டும் என்ற வார்த்தையைப் போட்டிருக்கிறோம். எந்தெந்த சிபார்சுகளை மாநில அரசுகள் அமல் நடத்தமுடியுமோ அந்த சிபார்சுகளை மாநில அரசுகளுக்குக் கொடுக்கலாம் என்பதுதான் நோக்கமே தவிர, மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் ஒரு போராட்டம், ஒருவருக்கொருவர் தகராறு செய்யக்கூடிய ஒரு சிக்கலை ஏற்படுத்தும் எந்த அதிகாரமாவது இருக்குமானால் அந்த அதிகாரம் வேண்டுமென்பது இந்தத் தீர்மானத்தின் நோக்கம் அல்ல. இந்த அரசாங்கம் கேட்க விருப்பமும் இல்லையென்று சொல்ல ஆசைப்படுகிறேன். அந்த அம்சத்தைப் புரிந்துகொண்டால் இந்த எதிர்ப்பைக்கூட அவர்கள் திரும்பப் பெற்றுக்கொள்ள ஒரு வாய்ப்பிருக்கும்.

திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னதைப்போல், வாஞ்சுக் குழு சிபார்சுகளில் நம் தமிழக அரசைப் பாராட்டி ஒரு இடத்தில் சொல்லியிருக்கிறார்கள். கள்ளப்பணம், கறுப்புப்பணம் சேருகிறது சொத்துக்கள் வாங்குவதில் குறைந்த மதிப்பு போடும் வகையில். இதைத் தவிர்ப்பதற்காக இந்தத் தமிழக அரசுதான், நாங்கள் பொறுப்பேற்ற பிறகுதான் ஒரு சட்டத்தை நிறைவேற்றினோம். அப்படி யாராவது குறைந்த மதிப்பு போட்டால் மார்க்கெட் வால்யூ என்ற அடிப்படையில் அதைக் கண்டுபிடித்து வசூலிப்பதற்கு அதிகாரம் கொடுக்கப்படவேண்டுமென்று ஸ்டாம்ப் சட்டத்தில், திருத்தத்தை இந்த மாநில அரசுதான் கொண்டு வந்தது. இதை எல்லா மாநில அரசுகளும் பின்பற்ற வேண்டும் என்று வாஞ்சுக் குழு எடுத்துச் சொல்லியிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு நிலை இருக்குமானால், அதுபோன்ற சொத்துக்களை, குறைந்து மதிப்பு போட்டிருக்கும் சொத்துக்களை அரசே வாங்கவேண்டும்



1973 ஆகஸ்ட் 11] [திரு. செ. மாதவன்]

என்று சிபார்சும் செய்திருக்கிறது. அதை மாநில அரசுக்குக் கொடுக்கலாம் என்று கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னார்கள். அது கொடுக்கப்படுமானால் இன்று பதிவாளர் அலுவலகத்தில் செயல்படுத்தப்படும் முறைகேடான நிகழ்ச்சிகளைக் கண்டுபிடிக்கும் வாய்ப்பு மாநில அரசுக்கு இருக்கிறது. உடனடியாக அந்தச் சொத்துக்களை வாங்கும் வாய்ப்பும் நமக்குத் தரப்படுமானால் நிச்சயமாகப் பல சிபார்சுகளில் இந்த சிபார்சு நல்ல முறையில் அமல் படுத்தப்படுவதற்கு வாய்ப்பாகயிருக்குமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல சிபார்சுகளை மாநில அரசுகளால் நிறைவேற்ற முடியும். எப்படி முடியும், சட்டச் சிக்கல்கள் வந்துவிடுமே என்ற சந்தேகமும் கிளப்பப்பட்டது. இதற்குப் புதிய சட்டமெல்லாம் வேண்டாம். இப்போது அரசியலமைப்புச் சட்டத்தில் 258-வது பிரிவில் மத்திய அரசுக்கு சட்டப்படி இருக்கிற எக்விக்யூட்டிவ் பவரை மாநில அரசு மூலமாகச் செயல்படுத்துவதற்கு ஒரு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி எந்தெந்த சிபார்சுகள், எந்தெந்த அதிகாரங்கள் மாநில அரசுகள் நிறைவேற்றுவதற்கு வாய்ப்பிருக்கிறதோ அவற்றை மாநில அரசுக்கு மத்திய அரசு கொடுக்கிற முறை இப்போதே இருக்கிறது. அந்த முறையைப் பயன்படுத்தி மத்திய அரசு இந்தச் சிபார்சுகளையெல்லாம் மாநில அரசு மூலம் நிறைவேற்றுவதற்கு வாய்ப்பு கொடுக்கிற ஒரு முறையைப் பின்பற்ற வேண்டுமென்றுதான் இத் தீர்மானம் கேட்டுக் கொள்கிறது.

இந்தப் பணம் எதற்காக உருவாகிறது? நம் நாட்டின் பொருளாதாரக் கொள்கை, நம் நாட்டின் வரி அமைப்பு முறை. ஒவ்வொரு தனி நபரும் தனது வாழ்க்கையைப் படாடோபமாக லக்சுரியஸாக அமைத்துக் கொள்ளவேண்டுமென்று கருதுகிறார்கள். அந்தச் செலவுகளுக்குப் பணம் கண்டுபிடிக்க ஆசைப்படுகிறார்கள். அதற்குத்தான் இந்தக் கள்ளப்பணம் உலாவுகிறது. இந்த முறையில், மத்திய அரசு தன் கொள்கையைத் திட்டவட்டமாக அறிவிக்க வேண்டும். இப்படிப்பட்ட முறைகளில் கள்ளப் பணம் உலாவுவதை அக் கமிட்டி சுட்டிக்காண்பித்திருக்கிறது. முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல் நம் அரசை அமைக்கிற அரசியல் கட்சிகளே கள்ளப் பணம் உலவ வாய்ப்புகள் அமைத்திருக்கின்றன, தேர்தல் முறை என்ற காரணத்தால் என்று அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இந்தக் குழு அதையெல்லாம்

எடுத்துச் சொல்லியிருக்கிறது. அத்தனை அரசியல் கட்சிகளும் ஒன்றாகச் சேர்ந்து ஒரு முடிவு எடுக்கவேண்டும். இந்த அரசு சார்பில், எங்கள் கட்சி சார்பில் இந்த சிபார்சை ஏற்று எங்கள் மாநாட்டில் தீர்மானம் செய்திருக்கிறோம். இந்தியப் பிரதமரிடம் நேரடியாக வாதாடினோம். இப்படிப்பட்டதொரு முறை அரசியலமைப்புச் சட்டத்தில் உருவாகுமேயானால் கள்ளப் பணத்தைக் குறைக்க ஒரு வாய்ப்பு ஏற்படும். ஆகவே வாஞ்சுக் கமிட்டி சிபார்சுகள் எது எது தேவையோ அவற்றை உடனடியாக நிறைவேற்றுவதற்கு முடிவு எடுக்கவேண்டும் என்பதைத்தான் இத்தீர்மானம் வலியுறுத்துகிறது.

எக்ஸ்பெண்டிச்சர் டாக்ஸ். இன்று சமுதாயத்தில் விரல் விட்டு எண்ணக் கூடியவர்கள் சிலர் தங்களுடைய கணக்கில் காட்டப்படாத பணம் இருக்கிற ஒரே காரணத்தால் ஏராளமான செலவுகளைச் செய்ய, சட்ட விரோதமான செயல்களைச் செய்யக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது. இதை மாற்றவேண்டும். அதையும் அக்குழுவினர் சிபார்சு செய்திருக்கிறார்கள். அந்தச் செலவுகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை மாநில அரசுக்குக் கொடுக்கலாம். சில மாதங்களுக்கு முன்னால் இது சம்பந்தமாக ஒரு கருத்தை மத்திய அரசுக்கு நம் அரசு எழுதியுள்ளது. வெளிநாட்டுப் பணம் இந்த நாட்டின் பொருளாதாரத்திற்குள்ளே பல்வேறு முறைகளில் வருகிறது. எந்த முறையில், எந்த நாடு என்றெல்லாம் விவரங்களுக்குள் நான் போகத் தயாராயில்லை. வெளிநாட்டுச் செலாவணி, வெளிநாட்டுப் பணம் பல்வேறு முறைகளில் இந்த நாட்டின் பொருளாதாரத்திற்குள்ளே நுழைய விடுகிற முறை இந்த நாட்டிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசால் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இது தடுக்கப்பட்டாலொழிய ஒரு நிலையான பொருளாதாரம் வரமுடியும் என்று யாரும் கூறமுடியாது. மத்திய அரசுக்கு, நிதி அமைச்சருக்கு, நம் அரசிலிருந்து எழுதப்பட்ட ஒரு காரியமாகும் இது. இந்த மாநிலத்திற்குள்ளாக எந்த வெளிநாட்டுப் பணம் எங்கெங்கு நடமாடுகிறதோ அதையெல்லாம் கண்டுபிடித்து நாம் தடுக்கக்கூடிய அதிகாரத்தை மாநில அரசுக்குத் தருவதைப் பரிசீலிக்கவேண்டுமென்று எடுத்துச் சொன்னோம். அங்கிருந்து ஒரு அதிகாரியை அனுப்பியிருந்தார்கள். நிதித் துறையைச் சேர்ந்த அந்த அதிகாரி நம் மாநில அரசு அதிகாரிகளோடு எல்லோரும் உட்கார்ந்து பேசினோம். அவர்களுக்கு எடுத்துக் காட்டப்பட்டது, இந்த மாநிலத்தில் எங்கெங்கு இப்படி வெளிநாட்டுச் செலாவணி முறை மீறப்படுகிறது, அதன் விளைவாக நம் பொருளாதாரம் எப்படி சீர்



குலைகிறது என்று. தடுப்பதற்கு மத்திய அரசுக்கு அதிகாரம் இருந்தாலும் செயலற்ற நிலை இருக்கிறது. அதையே முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

தமிழ் நாடு என்று மட்டுமல்ல, ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொருவரையும் நெருங்கிப் பார்க்கிற வாய்ப்பு, மாநில அரசின் ஆட்சி இயந்திரம் பரவலாக இருப்பதால், நமக்கு இருக்கிறது. இதைச் சொல்லும்போது அதில் கூட சந்தேகம். தொடர்பு என்ற வார்த்தையில் அதிகக் கவனம் செலுத்தினார் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள். நான் சொன்னதன் பொருள் மாநில ஆட்சி இயந்திரம் பரவலாக இருந்து எல்லா மக்களையும் கண்காணிக்கிற வாய்ப்பிருப்பதால் சொல்கிறோம். இதை மத்திய சர்க்கார் அதிகாரிகளுக்குத் தெரிவித்தோம். அவர்களும் ஓரளவு ஏற்றுக்கொண்டார்கள்.

ஆகவே, மாநில அரசுக்குப் போதிய பொறுப்பு கொடுக்கப்படுமானால், போதிய அதிகாரங்கள் கொடுக்கப்படுமானால் பெரும்பகுதி கறுப்புப் பணம் வெளியே வருவதற்கு வாய்ப்பாக இருக்கும். ஒரு ஆண்டுக்குள்ளாக எங்களால் செய்ய முடியும் என்ற அறைகூவலையும், ஒரு உறுதியையும் இந்த மன்றத்திற்கு அரசின் சார்பில் முதல் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள்.

ஆகவே, இந்தத் தீர்மானம் ஏகோபித்து ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானமாக இருக்கவேண்டுமென்று நான் உண்மையில் மனப்பூர்வமாக விரும்புகிறேன். அவர்கள் எழுப்பியுள்ளது இரண்டு கருத்துக்கள்தான். அந்த இரண்டு கருத்துக்களுக்கும் பதில் சொல்லிவிட்டேன். மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையே எந்தவிதமான சிக்கல்களும் வராது.

அரசியலமைப்புச் சட்டத்தின் 258-வது பிரிவின்படி பேசிக்கொள்ளலாம். எந்த அதிகாரங்கள் என்று சொல்லிவிடுங்கள் என்று கேட்டார்கள் எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள். இப்போது வரையறுத்து இந்த இந்த அதிகாரங்களைக் கொடுங்கள் என்று கேட்கவில்லை. அந்தப் பிரிவின் அடிப்படையில் எந்த அதிகாரத்தை அவர்கள் கொடுக்கமுடியுமோ—விரும்பினால் அந்த அதிகாரத்தைக் கொடுக்கவும் வாய்ப்பிருக்கிறது. எல்லாம் கேட்கவில்லை. தேவையான அதிகாரங்கள் என்றுதான் போட்டிருக்கிறோம். ஆகவே எந்த விதமான சிக்கல்களும் ஏற்படாது. ஆகவே இதை ஏகமனதாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

[திரு. செ. மாதவன்] [1973 ஆகஸ்ட் 11

டெல்லி அரசு ஏதாவது கேட்டுவிடுமோ, அகில இந்தியக் கட்சி என்ற முறையில் இப்படி கட்சியை விட்டுகொடுத்துவிட்டீர்களே என்று கேட்பார்களோ என்று பயப்படவேண்டாம். தமிழ் நாட்டு மக்களின் நன்மைக்காக இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழ் நாட்டில் எல்லாக் கட்சிகளும் சேர்ந்து நிறைவேற்றிய தீர்மானம் என்றிருக்கவேண்டும். தமிழ்நாடு மட்டுமல்ல, இந்திய நாடு முழுவதும் பாராட்டக்கூடிய அளவிற்கு இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்களும் இதிலாவது ஆதரிக்க முன்வரவேண்டும். இந்த நாட்டின் பொருளாதாரப் பிரச்னையில் எங்களை விட்டு வெளியேறி ஒதுங்கி நிற்க விருப்பப்படாமல் நாலரைக் கோடி தமிழ் சமுதாயத்திற்காக, அதன் நலனுக்காகச் சேர்ந்து போராடுகிறோம் என்ற உணர்வை ஏற்படுத்தவேண்டும். அப்போதுதான் தமிழ் மக்கள் அவர்களை ஏற்றுக்கொள்வார்கள். ஆகவே இந்தத் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதுவும் திரு. மாரிமுத்து அவர்கள்தான் எதிர்க்கிறார்கள். திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் எதிர்க்கவில்லை. அவர்கள் சொல்லி விட்டார்கள், தேவையான அதிகாரங்களை மட்டும் கேளுங்கள் என்று. பேச்சுவார்த்தை மூலம் பெற்றுக் கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். அவர்களும் ஒத்துக்கொண்டுவிட்ட பிறகு—மாரிமுத்து அவர்கள் நல்ல உள்ளம் படைத்தவர்கள். அவர்கள் நாட்டு மக்களுக்காக, இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** தலைவர் அவர்களே, இங்கே இந்தத் தீர்மானத்தின் மீது பேசிய அனைவரும் கறுப்புப் பணத்தைக் கொண்டுவரவேண்டுமென்று சொன்னதிலே இரண்டு விதமான கருத்து இல்லை. என்னைப் பொறுத்த வரையிலும் அதிலே கருத்து வேறுபாடு கிடையாது. இந்த நாட்டிலே சீரழிவை உண்டு பண்ணிக்கொண்டிருக்கும் கறுப்புப்பணத்தை வெளியே கொண்டு வரவேண்டுமென்பதில் எந்தவிதமான கருத்து வேறுபாடும் கிடையாது. அதை வெளியே கொண்டு வரவேண்டுமென்பதில் அபிப்பிராய பேதமும் கிடையாது. அது சம்பந்தமாக வாஞ்சு கமிட்டியில் கண்டிருக்கும் கருத்துக்களை அமலாக்க வேண்டுமென்பதிலும் கருத்து வேறுபாடு கிடையாது. அதை மத்திய சர்க்கார்தான் அமலாக்க வேண்டும். இதைத் தமிழ்நாட்டில் இருக்கும் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். மத்திய சர்க்கார்தான் அதைச் செய்யவேண்டும். மத்திய சர்க்கார் அதை அமலாக்கவேண்டுமென்று சொல்கிற



1973 ஆகஸ்ட் 11] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

அந்தத் தீர்மானத்தின் முதல் பகுதியை நாங்கள் ஆதரிக்கிறோம். நாங்கள் பயப்படவில்லை. எது சரியான கருத்தோ அதை எடுத்துச் சொல்கிறோம். அதைச் சொல்ல நாங்கள் தவறவில்லை.

ஆனால் இந்தத் தீர்மானத்தை அமலாக்குகிறபோது, அந்த வாஞ்சு கமிட்டியின் ரிப்போர்ட்டில் ஸ்டேட் கவர்ன்மென்ட் தான் செய்யவேண்டுமென்று சொல்லவில்லை. வாஞ்சு கமிட்டி எல்லாவற்றையும பரிசீலித்துவிட்டுத் தான் மத்திய அரசு அதை அமலாக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறது. அதிலே சிறந்த நிபுணர்கள் இடம் பெற்று இருந்தார்கள். அவர்கள் எல்லாக் கோணங்களிலும் ஆராய்ந்து பார்த்துத்தான் ரிப்போர்ட் கொடுத்து இருக்கிறார்கள். ஆகவே, எங்கள் கருத்து என்னவென்றால், அந்தத் தீர்மானத்தை அமலாக்குகிறபோது, இப்போது இருக்கிற அரசியல் அமைப்புச் சட்டப்படி அது மத்திய அரசாங்கத்தின் வரம்புக்குட்பட்டு வருகிறது. அந்த அதிகாரம் மாநில அரசுக்குக் கொடுக்கப்படவேண்டுமானால் அதிலே தவறுகள் வரும். ஒன்றுக்கு ஒன்று போராட்டம் வரும் என்ற காரணத்தினால் அந்தப் பகுதியை மட்டும் நாங்கள் எதிர்க்கிறோம். மாநில சர்க்காரில் இன்றைக்கு தி.மு.க. இருக்கிறது என்பதற்காகச் சொல்லவில்லை. கல்லும், காவிரியும், புல்லும், பூமியும் இருக்கிற வரையிலா தி.மு.க. ஆளப்போகிறது? இன்னொரு கட்சி வரலாம். ஏதோ வேறு கட்சி வராது என்ற ஞாபகத்தில் சொல்லவில்லை. இப்போது இருக்கிற அரசியல் அமைப்புப்படி இருப்பதைச் சொன்னோம். அந்தச் சட்டம் அமலாக்கப்படுகிற நேரத்தில் மத்திய சர்க்கார்தான் பொறுப்பேற்கவேண்டும், மாநில அரசாங்கத்திற்கு அந்தப் பொறுப்பு இல்லை, அது கொடுக்கப்படவில்லை, ஆகையால் தான் எதிர்க்கிறோமே தவிர வேறு எந்த விதமான காரணத்திற்காகவும் அல்ல. கறுப்புப் பணத்தை வெளியே கொண்டு வரவேண்டுமென்பதில், வாஞ்சு குழுவின் சிபார்சுகளை மத்திய சர்க்கார் உடனடியாக அமலாக்கவேண்டுமென்பதில் கருத்து வேறுபாடு இல்லை. ஆகவே, அந்தக் கருத்தை ஆதரித்து, மாநில சர்க்காருக்கு அந்த அதிகாரம் கொடுக்கப்படவேண்டுமென்ற கருத்தை ஆதரிப்பதற்கு இல்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

**"நாட்டின் பொருளாதாரச் சீரழிவிற்கும், விலை ஏற்றத்திற்கும், வாழ்க்கைச் செலவுப் பெருக்கத்திற்கும் முக்கியமான காரணம் கறுப்புப் பணப் புழக்கம் என்பதை எடுத்துக்காட்டி, அந்தக் கறுப்புப் பணத்தை வெளியில்-**

[8-ம் பக்கத்தில் 80-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

(அ) ஆம்.

(இ) மத்திய அரசு "ஊரகப் பொறியியல் நில அளவைத் திட்டம்" என்ற ஒரு திட்டத்தை இந்தியா முழுவதும் உருவாக்கி இருக்கிறது. இத் திட்டத்தின் மூலம் வேளாண்மை அடிப்படை புள்ளி விவரம், மக்கள் தொகை, அவர்களின் வருமானம், தற்போதுள்ள குடிநீர் வசதிகள், போக்குவரத்து, மின் விநியோகம் பற்றி விவரம் தொகுக்கப்படுகிறது. மற்றும் எதிர் காலத்தில் முழுமையான திட்டங்கள் வரைய உதவும்படி வரைபடமும் தயாரிக்கப்படுகிறது.

இத் திட்டம் தொடர்ச்சியாக வறட்சியாக உள்ள மாநிலங்களில் செயல்பட திட்டமிடப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கான செலவினை முழுமையாக மத்திய அரசு மானியமாக வழங்குகிறது.

இத் திட்டத்தின் மூலம் வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு வேலையில்லாத வேளாண்மை மற்றும் பொறியியல் பட்டதாரிகளுக்கும், வேலையில்லா இதர வகையினருக்கும் வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. திட்டத்தின்படி இந்தியாவில் 550 ஆய்வுக் குழுக்கள் செயல்படுத்தப்படுகின்றன. தமிழ்நாட்டில் 25 ஆய்வுப் பிரிவு கொண்ட ஒவ்வொரு குழுவிற்கும் கீழ்க்கண்ட அலுவலர் கொண்ட ஆய்வுப் பிரிவுகள் பயிற்சி அளிக்கப்பட்டு வேலையில் அமர்த்தப்பட்டுள்ளது :—

(1) வேளாண்மைப் பட்டதாரி .. 1

(2) பொறியியல் பட்டதாரி .. 2

(3) களப்பணி உதவியாளர் 1

(4) ஆய்வுப் பணியாளர் .. 5

மேற்கண்ட 25 ஆய்வுப் பிரிவுகளும் மூன்று தொகுதியாய் பிரிக்கப்பட்டு பயிற்சிக்குப்பின் களப்பணியில் அமர்த்தப்பட்டுள்ளது. தற்போது இந்தப் பிரிவுகள் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த சாத்தூர், திருப்பத்தூர், பரமக்குடி தாலுக்காக்களிலுள்ள கிராமங்களில் ஆய்வுப் பணியை மேற்கொண்டுள்ளன.



இக்குழுக்களின் வேலையை மேற்பார்வை செய்ய, மேலதிகாரிகளுக்குத் தேவையான அடிப்படை விவரங்களைச் சேகரித்து அளிக்க, தனிக்கோட்டம் மதுரையில் 6—4—1972 முதல் செயல்பட்டு வருகிறது.

இக்கோட்டம் இதுவரை ஆறு கிராமங்களுக்கான முழு ஆய்வு அறிக்கைகளை சமர்ப்பித்து உள்ளது. ஒன்பது கிராமங்களுக்கான அறிக்கைகள் தயாரிப்பில் உள்ளன.

இதுவரை 47 கிராமங்களுக்கான பொறியியல் ஆய்வும், 17 கிராமங்களுக்கான வேளாண்மை ஆய்வும் முடிக்கப்பட்டுள்ளன. மற்றும் 20 கிராமங்களுக்கான பொறியியல் ஆய்வு அறிக்கையும் 13 கிராமங்களுக்கான வேளாண்மை ஆய்வு அறிக்கையும் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

(a) Yes.

(b) The Government of India have launched a scheme called "Rural Engineering Survey" throughout India for undertaking surveys on Engineering and Agricultural aspects in villages of drought-prone districts. The survey envisages collection of data on agricultural statistics, population, their income, compilation of information of existing facilities for drinking water, communication and power supply and also preparation of contour maps for facilitating preparation of full-fledged schemes in future. This scheme is to be implemented in areas where centrally sponsored schemes such as "Special Rural Works Programme" (now known as Drought Prone Area Programme) are already in operation. In Tamil Nadu this scheme has been introduced in Ramanathapuram district for which funds are provided by the Centre to the State as grants covering 100 per cent of outlay.

This scheme has been evolved for providing employment to the unemployed Engineers and Agriculture Graduates and also other types of unemployed such as Technicians, Ministerial staff etc. The survey scheme envisages training and deploying 550 survey parties throughout India. In Tamil Nadu, 25 survey parties, each consisting of the following staff are to be trained and deployed :—

(1) Agricultural Graduate—One.

(2) Engineering Graduates—Two.

(3) Field Assistant-*cum*-Tracer—One.

(4) Survey Lascars—Five.

These twenty-five survey parties have been divided into three groups. All the three groups have completed their training and have been deployed for field work in the villages of Sattur, Tiruppathur and Paramakudi taluks of Ramanathapuram district.

A special division called "Rural Engineering Survey Cell" was formed on 6th April 1972 at Madurai to supervise the work of the survey parties and to scrutinise and submit reports on the survey to the higher authorities. The special division has so far submitted six survey reports and nine reports are under preparation.

The survey parties have so far completed Engineering Survey in 47 villages and Agricultural Survey in 17 villages. Twenty villages are under Engineering Survey and thirteen villages are under Agricultural Survey.

## இணைப்பு II

(42-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## REPORT OF THE COMMITTEE ON RULES OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

To

The Hon. the Tamil Nadu Legislative Assembly,
Madras.

The Committee on Rules has the honour to make the following report of the recommendations of the Committee on Rules.

2. The Committee nominated by the Hon. Deputy Speaker for the year 1973–74 met on 2nd and 3rd July 1973 in the Legislature Committee Room (formerly Members' Lounge Room), Fort St. George, Madras and considered the amendments to certain rules suggested by the Legislative Assembly Secretariat and by Thiruvalargal K. T. K. Thangamani, N. Dennis and D.S.A. Sivaprakasam.



3. The important amendments recommended by the Committee are as follows :—

### *Rule 2*

Sub-rule (*e*) of rule 2, as it now stands empowers the Finance Minister to delegate his functions to any other Minister. But, in practice such delegation of power is not being made. Hence the sub-rule has been recast suitably.

Sub-rule (*n*) defines the term "precincts of the House". The Committee has decided to include 'lobbies' also in the above definition and also to define the word "Lobbies".

Sub-rule (*n*) has accordingly been amended and a new definition for the word "Lobbies" added in sub-rule (*jj*)

### *Rule 4*

This rule deals with the election of Speaker. The rule as it stands does not prescribe the procedure to be adopted when only two candidates have been nominated. A new sub-rule (8) incorporating the procedure to be adopted in such circumstances has been added to Rule 4.

Provision has also been made to prohibit a member (i) to propose or to second his own name ; and (ii) to propose or second in more than one nomination paper.

### *Rule 9*

This rule relates to the discussion on the Governor's Address. Under sub-clause (2) of Article 176 of the Constitution, discussion on the Governor's Address made under clause (1) of the said Article is mandatory whereas it is not so in the case of the Address by Governor under Article 175 of the Constitution.

Hence, suitable amendment has been made to sub-rule (1) of Rule 9 making it applicable to the address under Article 176.

*New Rule* 11-A

Provision has also been made for the Speaker to allot time for discussion of the matters referred to in the Governor's Address made under Article 175 (1) of the Constitution.

*Rule* 13

At present all questions lapse on prorogation of a session. The Committee decided that notice of questions and questions which were pending should not lapse on prorogation of a session. The rule has been suitably amended.

*Rule* 16

Rule 16 confers on the Speaker the power to adjourn the House. If the adjournment of the House is made against the will of the majority and against the rules of procedure there is no provision in the Rules at present to make the adjournment of the House infructuous. Hence, it was considered that specific provisions were necessary for continuance of the sittings for transaction of the business of the House already listed in the Agenda A revised procedure for adjournment of the House has, therefore, been laid down in rule 16 on the lines of the recommendations made by the Committee of Presiding Officers at its meeting held in New Delhi in 1968.

*Rule* 34.

The Committee felt that provision should be made for inclusion of questions in the list on the 42nd day at the latest after its admission by the Speaker irrespective of whether the answer to the question was received or not.

Rule 34 has, therefore, been amended suitably.

*Rule* 41

At present, a Minister may make a statement under Rule 41 of the Assembly Rules, on a matter of urgent public importance, when a member who has given notice of the same raises the matter in the House. If for any reason, that particular member happens to be absent in the House at the time the notice is about to be taken up, the Minister could not make the statement on that day.



Provision has, therefore, been made to enable the Hon. Speaker to direct that the statement on the matter be made at the request of any other member.

*Rules* 52 *to* 54

Rules 52 to 54 relate to the procedure for the removal of Speaker or Deputy Speaker. The rules have been amended to the effect that the motion for leave to move the resolution shall be entered in the list of business on the day of the meeting immediately after the prescribed period of notice and that it shall be taken up for consideration immediately after Question Hour. Provision has also been made to elect any other person to preside over the Assembly and conduct the business in case of non-compliance with the provisions of rules 53 and 54.

*Rule* 88

At present copies of Bills are not circulated to members at the time of introduction. The Committee has decided that copies of Bills should be circulated at the time of introduction in view of the fact that under rule 92, even a motion for leave to introduce a Bill can be opposed.

The rule has been amended accordingly.

*New Rules* 142-*B and* 142-*D*

At present there is no provision in the Rules in regard to the procedure to be adopted for ratification of Constitution Amendment Bills. Provision has, therefore, been made in this regard.

*Rules* 200–212

On the recommendation of the Committee on Subordinate Legislation, the Committee has decided to substitute the expression " Committee on Delegated Legislation " for the expression " Committee on Subordinate Legislation ". The rules have been amended accordingly.

[1973 ஆகஸ்ட் 13

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றத்தில் முடிவுறா நிலையில் உள்ள வழக்குகளாவன :—

(1) அரசிதழ்ப் பதிவு அதிகாரிகள்—20.

(2) அரசிதழ்ப் பதிவிலா அதிகாரிகள்—71.

| வழக்குகள் முடிவுறாமல் உள்ள கால அளவு | ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றத்தின் முன் முடிவுறா நிலையில் உள்ள வழக்குகள் |
|---|---|
| 1967 முதல் | 1 |
| 1968 முதல் | 1 |
| 1969 முதல் | 19 |
| 1970 முதல் | 19 |
| 1971 முதல் | 27 |
| 1972 முதல் | 24 |
| 1973 முதல் (1–2–73 நிலவரப்படி) | ஒன்றுமில்லை. |

**திரு. என். டென்னிஸ்:** தலைவரவர்களே, அவர்களில் எத்தனை பேர் சஸ்பென்ஷனில் இருக்கிறார்கள்? பலர் நீண்டகாலமாக சஸ்பென்ஷனில் இருப்பதாகத் தெரிகிறது. அந்த வழக்குகளை டிஸ்போசல் செய்வதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** எத்தனை பேர் சஸ்பென்ஷனில் இருக்கிறார்கள் என்ற விபரம் இல்லை. ஆனால் இப்போது வழக்குகள் வேகமாக முடிவு செய்யப்பட்டு வருகின்றன. சென்னை, திருச்சி, மதுரையில் 1970-ல் 52, சென்னை, திருச்சி, மதுரையில் 1971-ல் 52, சென்னை, திருச்சி, மதுரையில் 1972-ல் 51 என்ற அளவில் வேகமாக இந்த வழக்குகள் முடிக்கப்பட்டு வருகின்றன.



1973 ஆகஸ்ட் 13]

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, கூடுதல் நடுவர்களை நியமித்து, இந்த வழக்குகள் 1968, 1969-லிருந்தே ஆரம்பமாகியிருப்பதால், இந்த வழக்குகளை பைசல் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இப்போதே வேகமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதனால் கூடுதலாக நடுவர்களை நியமிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏற்கெனவே சென்னையிலே வழக்குகள் மிகவும் குறைந்துவிட்ட காரணத்தினால் நாம் திருச்சியிலே உள்ள நடுவர் மன்றத்தை மாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், 1969-ல் ஆரம்பிக்கப்பட்ட வழக்குகள் இன்னும் எத்தனை பெண்டிங்கில் இருக்கின்றன?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** 1969-ல் 19, 1970-ல் 19.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, என்னென்ன காரணங்களுக்காக இந்த அதிகாரிகள்மீது வழக்குகள் போடப்பட்டன?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதிகாரிகள்மீது என்னென்ன காரணங்களுக்காக வழக்குகள் போடுவார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரிந்தது தான்.

### *Disbursement of Provident Fund accumulations*

*100 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Chief Minister be pleased to state the number of pending applications of retired Non-Gazetted Officers in Tamil Nadu for disbursement of their Provident Fund accumulations for more than six months?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** 28—2—73 அன்றுள்ளபடி, 15 விண்ணப்பங்கள் மட்டுமே ஆறு திங்களுக்கு மேலாக முடிவு செய்யப்படாமல் உள்ளன என்று சென்னை மாநிலக் கணக்காய்வுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, இந்த 15 வழக்குகள் கூட அவர்கள் சர்வீசில் இருக்கும்போது, அவர்களுடைய சேமிப்புக் கணக்குப் பற்றிய சரியான விவரங்கள் கொடுக்காததால் தான் பென்டிங்கில் இருப்பதாகச் சொல்லப்படுவது அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, மொத்தம் வந்துள்ள 4,500-க்கு மேற்பட்ட விண்ணப்பங்களில் இன்னும் முடிவு செய்யப்படாமல் இருக்கும் விண்ணப்பங்கள் 15 தான். முடிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் இந்த 15 விண்ணப்பங்கள் என்பது மிகவும் குறைவானதாகும். இதையும் தவிர்ப்பதற்காக 8—5—1972-ல் அரசு ஒரு உத்தரவு பிறப்பித்து, இந்த விதிமுறைகளைச் சுருக்கியும் சுலபமாக்கியும் இருக்கிறது. திரு. வீராசாமி அவர்கள் குறிப்பிட்டதைப்போல இந்த 15 விண்ணப்பங்களும் முடிவு செய்யப்படாமல் இருப்பதற்குக் காரணம் அவர்களுடைய சேமிப்புக் கணக்கு விபரங்கள் சரியாகக் கொடுக்காததால்தான்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், இந்த பிராவிடண்ட் பணம் முழுவதும் கொடுக்கப்படவில்லை என்று புகார் வந்திருக்கிறது. முழுப் பணமும் கொடுக்காமல் முதலில் பாதி கொடுக்கிறார்கள். மீதியுள்ள பாதிப் பணம் வேண்டுமென்று கேட்டு, 2 ஆண்டு 3 ஆண்டு காலமாகியும் கொடுக்கப்படாமல் இருக்கிறது. அதையும் உடனடியாகக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அப்படி எந்தத் தகவலும் இல்லை. ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல 4,500-க்கு மேற்பட்ட விண்ணப்பங்களில் 15 விண்ணப்பங்கள் தான் இன்னும் முடிவு செய்யப்படாமல் இருக்கின்றன. ஏதாவது தகராறுகள் இருந்தால், பாதிப் பணம்தான் கொடுக்கிறார்கள் என்று புகார் வந்தால் அரசு நிச்சயம் கவனிக்கும்.

THIRU K. S. KOHANDARAMIAH: May I know from the Chief Minister whether there are applications from the retired teachers whose amounts have not been returned?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அந்த 15-ல் அவர்கள் எவ்வளவு பேர்கள் என்பது தெரியாது.



*Administration of Elementary Schools*

* 101 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether there is any proposal to constitute an autonomous Board for Education in the State for the administration of all elementary schools; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே. எ. வகாப்:** தலைவர் அவர்களே, இப்பொழுது இந்த வாரிய அமைப்பு நிர்வாகம் செம்மையாகச் செயல்படுவதற்கு வசதியாக இருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட வாரியத்தை அமைப்பதற்கு அரசு இனியாவது யோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இப்பொழுது ஆலோசனை கூறுகின்ற அளவுக்கு ஒரு வாரியம், போர்டு, இருந்து கொண்டு வருகிறது. அதிலே பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் தலைவராக இருக்கிறார்கள். பல்கலைக் கழகப் பிரதிநிதிகளும், தொழில் நுட்பப் பிரதிநிதிகளும் பல்வேறு நிர்வாகங்களுடைய பிரதிநிதிகளும், ஆசிரியர்களுடைய பிரதிநிதிகளும் இதில் இருக்கிறார்கள். அந்த வாரியம் ஆலோசனை கூறுவதற்காக இப்பொழுது இருக்கிறது. நிர்வாகப் பொறுப்பு முழுவதையும் அவர்களிடத்திலே விட்டுவிடுவோமானால், அரசாங்கத்திற்கும் அதற்கும் தொடர்பு இருக்காது என்பது மட்டுமல்லாமல், சட்டமன்றத்திற்கும் அதற்கும் தொடர்பு இருக்காது. சட்டமன்ற உறுப்பினர்கள் வாதிட, கொள்கையைப் பற்றிக் குறிப்பிட நடைமுறையில் வாய்ப்பிருக்காது. அப்படி அமைத்தாலும், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகளின்கீழ் உள்ள பள்ளிகளைத்தான் சேர்ப்பிக்க முடியுமே தவிர, சிறுபான்மையோர் பள்ளிகளை, தனியார் பள்ளிகளை, அதில் சேர்ப்பிக்க இப்பொழுது விதிமுறைகளில் வழிமுறை இல்லை.

இங்கே இப்பொழுதிருக்கிற நிலைமையே போதுமானது. இப்பொழுதிருக்கிற வாரிய அமைப்பே போதுமானது என்று கருதுகிறோம்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, வாரியம் அமைக்கப்படாவிட்டாலும், இன்றைக்கு இருக்கிற பள்ளிகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து, ஒரே நிர்வாகத்தின்கீழ் கொண்டு வருவது குறித்து அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அரசாங்கமோ அல்லது ஊராட்சி ஒன்றியம், நகராட்சி மன்றங்கள் நடத்துகின்ற பள்ளிகளைத்தான் சேர்க்க முடியும். அரசாங்கம் நடத்துகிற பள்ளிகளைத்தான் சேர்க்க முடியும். சிறுபான்மையோர் நடத்துகிற பள்ளிகளை, தனியார் நடத்துகிற பள்ளிகளை நாம் வலுக் கட்டாயமாகச் சேர்க்க இயலாது. அதையெல்லாம் கட்டுப்படுத்தத்தான் இப்பொழுது மசோதா ஒன்று செலக்ட் கமிட்டிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த மசோதா வந்த பிறகு, ஓரளவுக்கு எல்லோரையும் கட்டுப்படுத்தி, நிர்வாகத்தைச் செம்மைப்படுத்துகிற சூழ்நிலை ஏற்படும். ஆகவே தான் போர்டு அமைக்கிற சூழ்நிலை இல்லை.

*Teachers for B.Com., courses*

* 102 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether the Government are aware of dearth of qualified teachers for B.Com., in this State; and

(**b**) if so, the remedial steps taken thereon ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) :** பி. காம்., வகுப்புகளை நடத்தப் போதிய பட்டதாரிகள் உள்ளதால், "பி. காம். வகுப்பு நடத்த ஆசிரியர்கள் இல்லை" என்ற குறைக்கு இடமில்லை.

**திரு. என். டென்னிஸ் :** தலைவர் அவர்களே, பி. காம். படிப்பதற்கு, பெண்களுக்குப் போதுமான அளவு வசதி அளிக்கப்படவில்லை. போதுமான அளவு பெண் ஆசிரியர்களும் இருப்பதாகத் தெரியவில்லை. இக் குறையைப் போக்க அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, 3, 4 ஆண்டுகளுக்கு முன்பு ஓரளவுக்குக் குறைபாடு இருந்தது. இப்பொழுது ஓரளவு ஆசிரியர்கள் இல்லையென்ற குறைபாடு இல்லை. இப்பொழுது பொதுவாக, பி.காம்., எம்.காம். ஆகியவைகளுக்கு அனுமதி வழங்க வேண்டுமென்ற ஆலோசனையைப் பல்கலைக் கழகத்திற்கு அரசு அளித்திருக்கிறது. இவ் வகுப்புகளை நடத்தச் செலவு அதிகமில்லை. ஆய்வுக் கூடங்களை ஏற்படுத்த வேண்டுமென்ற செலவுகள் இல்லை. இப்பொழுது பி.காம்., எம்.காம். படிக்க வேண்டுமென்ற ஆர்வம் ஏற்பட்டிருக்கிற காரணத்தால், எந்த எந்தக் கல்லூரிகளில் போதுமான இட வசதி இருக்கிறதோ, அக்கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டுமென்ற யோசனையை பல்கலைக் கழகத்திற்குத் தந்திருக்கிறோம். சென்ற 2 ஆண்டுகளாக, எம். காம்., பி. காம்., வகுப்புகள் நடத்த அனுமதி தருவதிலே பல்கலைக் கழகம் மிகுந்த தாராள மனப்பான்மையோடு நடந்து வருகிறது.

### வாணியம்பாடியில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி

* 103 வினா—**திரு. எம். ஏ. லத்தீப் :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வாணியம்பாடித் தொகுதியில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி/கல்லூரி ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

### சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்கருகில் விளையாட்டுத் திடல்.

* 104 வினா—**திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சட்டமன்ற உறுப்பினர் தங்கும் விடுதிக்கு அருகில் ஒரு நீச்சல் குளமும் (Swimming Pool) டென்னிஸ், வாலிபால், கால்பந்து போன்ற விளையாட்டுகளுக்கான வசதிகளும் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உண்டா ?

*New Rules 182-A to 182-H*

The new rules deal with the constitution, functions and conduct of business of the Committee o n Public Undertakings.

The relevant rules as in force and the Rules as revised by the Committee are shown in Annexure. @

Fort St. George,
Madras-600009
1st August 1973.

P. SEENIVASAN.
*Chairman*

@ Circulated to Members on 10th August 1973

## தமிழ்நாடு சட்டப் பேரவை.

---

### திங்கட்கிழமை, 1973 ஆகஸ்ட் 13.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. நீத்தார் நினைவுக் குறிப்பு

### கோவா-டையூ-டாமன் முதலமைச்சர் திரு. தயானந்த பாலகிருஷ்ண பண்டோக்கர் மறைவு குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோவா-டையூ-டாமன் மாநிலத்தின் முதலமைச்சர் திரு. தயானந்த பாலகிருஷ்ண பண்டோக்கர் அவர்கள் பனாஜியில் 12—8—1973 ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்து, இப்பேரவையின் சார்பில் இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கும் அம்மாநில மக்களுக்கும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்தவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மௌனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மௌனமாக நின்றார்கள்).

### 2. வினாக்கள்—விடைகள்

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்

*Cases pending before the Tribunal for Disciplinary Proceedings*

*99 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Chief Minister be pleased to state the number of cases of Gazetted and Non-Gazetted Officers pending before the Tribunal for Disciplinary Proceedings as at present and the period of pendency?

[1973 ஆகஸ்ட் 13

(இ) ஆம் எனில், அவை எப்பொழுது ஏற்படுத்தப்படும்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) சட்டமன்ற உறுப்பினர் தங்கும் விடுதியின் அருகில் பூப்பந்து (Bad minton) கைப்பந்து (Volley Ball) விளையாட்டுக்களுக்கான வசதிகள் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ளன. நட்பாயம் நீச்சல் குளமும் (Swimming Pool) டென்னிஸ், கால்பந்து (Foot Ball) விளையாட்டுகளுக்கான வசதிகள் ஏற்படுத்தும் செயற் குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

(இ) எழவில்லை.

**திரு. கே. எ. வகாப் :** தலைவர் அவர்களே, நீச்சல் குளம் இல்லையென்றாலும்கூட, இப்பொழுது அவர்கள் சொன்ன டென்னிஸ், வேறு சின்ன விளையாட்டுக்களை விளையாடக்கூட வசதி இல்லை. இப்பொழுதிருக்கிற இடத்திலே கல்லும் முள்ளும் தான் நிறைந்திருக்கின்றன. ஆகவே, அவற்றைச் செம்மைப்படுத்தி, சீர்படுத்தி, விளையாட வசதி அமைக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய, அரசு ஆவன செய்ய முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இப்பொழுது மெரினாவுக்கு அருகிலேயே அழகான நீச்சல் குளம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. உறுப்பினர்களும் அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம். மாண்புமிகு இராசாராம் அவர்களும் அடிக்கடி அதைப் பயன்படுத்துவதாகக் கேள்விப் பட்டேன். அதைப்போல் மாண்புமிகு உறுப்பினர்களும் அதைப் பயன்படுத்தலாம்.

டென்னிஸ், கால் பந்து, போன்ற விளையாட்டு விளையாட— மாண்புமிகு உறுப்பினர்கள் போதுமான அளவு ஆர்வம் காட்டுகிறார்கள் என்று தெரிந்தால், அதற்கான வசதி இருந்தால் அமைக்க முயற்சி எடுக்கலாம்.

**திரு. வை. பாலசுந்தரம் :** தலைவர் அவர்களே, வாலிபவயதுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் இப்பொழுது வெளியே விளையாடி வருகிறார்கள். ஆனால், வயதான சட்டமன்ற உறுப்பினர்கள், இல்லை விளையாட 'இன்டோர் கேம்'. விளையாட ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

9—10 /



1973 ஆகஸ்ட் 13]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதற்கான வசதி இப்பொழுது இருக்கிறதா என்ற விவரக் குறிப்பு இப்பொழுது என்னிடத்திலே இல்லை. அதற்கு சட்டமன்ற விடுதிக்குள்ளே என்ன வசதிகளை ஏற்படுத்தலாம் என்று ஆராய்ந்து தக்க முறையை எடுக்கலாம். அதற்கென்று உறவுஸ் கமிட்டி இருக்கிறது. உறவுஸ் கமிட்டி பரிந்துரை செய்யுமானால் அரசு அதைக் கவனிக்கும்.

**திரு. கே. எ. வகாப் :** தலைவர் அவர்களே உறவுஸ் கமிட்டி என்ற ஒன்று இருக்கிறது. ஆனால் ஆண்டுக்கு ஒரு முறையோ, இரண்டு முறையோ கூட அது கூடுவதில்லை. ஆகவே அந்த உறவுஸ் கமிட்டியை அடிக்கடி கூட்டுவதற்கு ஆவன செய்தால், இப்படிப் பட்ட யோசனைகளை அங்கத்தினர்கள் சொல்ல வசதியாக இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன். அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் கேள்விதான் கேட்க வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, உறவுஸ் கமிட்டி எப்பொழுது வேண்டுமானாலும் கூடலாம். அதனுடைய தலைவர் மாண்புமிகு பேரவைத் தலைவர் தான். அதிலே இருக்கிற உறுப்பினர்கள், தலைவரிடத்திலே— தலைவரிடத்திலே—விண்ணப்பித்து அந்தக் கமிட்டியைக் கூட்டலாம். அவர்களின் பரிந்துரையை ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்க அரசு ஆயத்தமாக இருக்கிறது.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், உறவுஸ் கமிட்டியிலே நிறைவேற்றுகின்ற தீர்மானங்கள் பல அமுலுக்கு வராமல் இருக்கின்றன. உறவுஸ் கமிட்டி எந்த பகுதிகளிலே எப்படி எப்படி வேலை செய்கிறது என்பதை அறிவதற்காக, வெளியூருக்குச் சென்று பார்வையிடுவதற்கும் வாய்ப்பு அளிக்கப்படுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தக் கேள்வி உறவுஸ் கமிட்டியைப்பற்றியல்ல.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மற்ற துறையின் கட்டிடங்களை அங்கு போய்ப் பார்க்க வேண்டுமென்று இல்லை. அவைகளை யெல்லாம் குறிப்புகளை வேண்டுமானாலும் அமைச்சர் துறையின் கட்டிடத்தில் காணலாம். அவர்கள் அறிந்து தக்க முறை எடுக்கலாம்.

**திரு. நா. வீராசாமி:** இப்பொழுது நாட்டிலே பள்ளிக்கூடங்கள் கட்டாயம், பருவங்கள் தோறும் கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. இந்தத் தொலைக்காட்சியிலே பல விளையாட்டு ஏற்பாடு செய்தால், பள்ளிக்கூடங்கள் போட்டியிலே விளையாடுகிறார்கள் என்று பதிக்க முடியிலே இருக்கிறார்கள் போவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது. ஆகவே, இதை தயவு பரிசீலனை செய்து, கைவிட வேண்டாம் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, 'இன்டோர் கேம்ஸ்' என்று இருப்பது மிகமிக நல்லதுதான். இப்பொழுது அறைக்கு அறை சீட்டு விளையாட்டுக்கள் விளையாடுவதாகக் கேள்விப்படுகிறோம் (சிரிப்பு). அவற்றிலிருந்து மாறி இப்படிப்பட்ட நல்ல விளையாட்டுகளில் ஈடுபடுவது நல்லதுதான்.

## தஞ்சை மாவட்டத்திலுள்ள அரசு மருத்துவ மனைகள்.

*105 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சையில் உள்ள இராசா மிராசுதார் மருத்துவ மனையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** ஆம், பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. எஸ். வடிவேல்:** அவைத் தலைவர் அவர்களே, தஞ்சையிலே ராஜா மிராசுதார் மருத்துவ மனையிலே தினம் தினம் கூட்டம் அதிகமாக வந்து கொண்டிருக்கிறது. அந்தக் கூட்டம் அதிகரிக்காமல் இருப்பதற்கு கட்டடங்களை விஸ்தரிக்க அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, அண்மையிலேதான் அங்கே பிரசவத்திற்கும் அறுவை சிகிச்சைக்குமாக 30 படுக்கை கொண்ட வார்டு ரூ. 2,95,000 செலவில் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் குடும்ப நலத் திட்ட அடிப்படையில் அறுவை சிகிச்சைக்கு ஒரு வார்டு 20 படுக்கையோடு ரூ. 2,00,000 செலவில் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் தொற்று வியாதிக்கும், இன உறவு காரணமாக ஏற்படுகிற வியாதிக்கும், 'வெனரல்' வியாதிக்கும் அதேபோல் குழந்தைகளுக்கான சிகிச்சைத் தேவைகளுக்காக 40 படுக்கைகளோடு ரூ. 1,65,000 செலவில் ஒரு வார்டு கட்டப்படுகிறது. அதற்காக கட்டப்பட்டிருந்தது. இதற்கான சுற்றுச் சுவர் ரூ. 60,000 செலவில் கட்டி முடிக்கப்பட்டு வருகிறது. மேலும் பல பகுதிகளை விரிவாக்க ஆலோசனை இருக்கிறது. நிதி வசதிக்கேற்ப அவ்வப்போது விரிவாக்கப்படும்.

*106 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குடந்தை அரசினர் மருத்துவ மனையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** கும்பகோணம் அரசு மருத்துவமனையில் ரூ. 1,81,000 செலவில் 32 படுக்கைகள் கொண்ட ஒரு பகுதி கட்டவும், ரூ. 30,000 செலவில், காது, மூக்கு, தொண்டைப் பகுதிக்காக ஒரு சிகிச்சைப் பகுதி கட்டடம் கட்டவும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இவ் வேலைகள், பொதுப்பணித் துறையினரால் விரைவில் தொடங்கப்படும்.

## *Post Graduate course in Orthopaedics*

*107 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether Post-Graduate course in Orpthopaedics is being conducted in the Medical Colleges in this State; and

(b) if so, the details thereof?

[1973 ஆகஸ்ட் 13

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) ஆம்.

(இ) டி. ஆர்த்தோ (D. ORTHO) என்ற மேல் பட்டப் படிப்பில் சுருதிப் பட்டயப் படிப்பும், எம்.எஸ். (M. S.) முடவியல் மருத்துவம் என்ற பட்ட மேற்படிப்பும் சென்னை மருத்துவக் கல்லூரியிலும் மதுரை மருத்துவக் கல்லூரியிலும் நடத்தப்படுகின்றன.

**திரு. என். டென்னிஸ் :** தலைவர் அவர்களே, இந்தப் படிப்பு வேறு கல்லூரிகளிலே ஏற்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, சிறப்புத் தகுதிகள் பெற்ற, ஆசிரியர் தகுதிகள் உள்ள பேராசிரியர்கள் பணி இருக்கின்ற இடங்களிலேதான் இந்தப் படிப்பை ஏற்படுத்த முடியும். ஸ்டான்லி மருத்துவமனையிலே இதை ஏற்படுத்த வேண்டுமென்ற கருத்து பரிசீலிக்கப்பட்டு அது பல்கலைக் கழகத்தின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. அந்தக் கருத்து பின்னால் அரசின் நிதிநிலைக்கேற்ப இந்தப் படிப்பு அங்கே அமைக்கப்படக்கூடும்.

**திரு. கோவை செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த போலியோ நோயினால் பொறுத்தவரையில், பி.யூ.சி. படித்துக் கொண்டிருக்கும் மாணவர்கள் ஐந்தாண்டுக் காலம் படித்து விட்டு அதற்குப் பின்னாலே வேலை கிடைக்காமல் இருந்து அதற்குப் பின்னாலே போலியோ நோய் ஏற்பட்டு இருக்க அதற்குப் பின்னாலே அப்போதும் படிப்பைத் தொடர வேண்டிய நிலைமை ஏற்படுவதால் அவர்கள் இதையெல்லாம் முடித்துவிட்டு வேலைக்கு வருகிறபொழுது வயதாகி பாதி வயது வந்து விடுகிறது. இப்படி ஆவதற்கு முடியாமல் சிலபேர்கள் கிடைப்பதாகி விடுவதால் அந்த நேரத்திலே சிலபேர்கள் வயதை மாற்றி, தங்களின் ஜாதகத்திலே இருக்கின்ற முறைப்படி வயதைக் காட்டி சர்டிபிகேட்டிலே வயதை மாற்றி இரண்டு அதிகாரிகள் கண்டுபிடித்து வெற்றியும் பெற்றிருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். அது உண்மைதானா என்பதை அறிய விரும்புகிறேன்.



1973 ஆகஸ்ட் 13]

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, கேள்வி முடவியல் மருத்துவம் பற்றியது. கல்லூரியிலே இப்படிப்பட்ட படிப்பு சொல்லித்தரப்படுகிறதா என்பது. ஜாதகத்திலே பல குறைபாடுகள் இருக்கலாம். பல பேருடைய ஜாதகம் எனக்குத் தெரியாது. அவர்கள் ஜாதகத்தைக் காட்டி ஆதாரங்களைத் தெரிவித்திருந்தால் முறைப்படி அவை பரிசீலிக்கப்பட்டிருக்கும்.

*Kancheepuram Drainage Scheme.*

* 108 Q.—THIRU R. R. MUNUSAMY: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that the Tamil Nadu Water Supply and Drainage Board has executed a drainage scheme at Kancheepuram: and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) ஆம். திட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டு வருகிறது.

(இ) காஞ்சிபுரம் வடிகால் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக ரூ. 105.44 லட்சம் செலவும் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1.22 லட்சம் பேணுதல் நடைமுறைச் செலவும் ஆகும் என மதிப்பிடப் பட்டுள்ளது. இதற்கு அரசு 1970 ஜூன் திங்களில் ஒப்புதல் வழங்கியது. ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்தும், அரசிடமிருந்தும் கடனுதவி பெற்று தமிழ்நாடு நீர் வழங்கு—வடிகால் வாரியம் இத்திட்டத்தை நிறைவேற்றி வருகிறது.

**திரு. ரா. ரா. முனுசாமி :** தலைவர் அவர்களே, காஞ்சிபுரத்திலே கழிவுநீர் வாரியம் அமைப்பதுபோல் என்னுடைய கோட்டத்திலுள்ள திண்டிவனம் போன்ற இடங்களிலே வடிகால் இல்லாததால் போதுமான சுகாதார வசதிகள் இல்லை, இதனால் மக்களின் சுகாதாரம் கெடுகிறது. எனவே தமிழகத்தின் மற்ற நகராட்சிகளிலும் குடிநீர் வாரியம் அமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** நகராட்சி மன்றங்களிலே வடிகால் வாரியம் அமைக்கப்பட்டால், மன்றங்களைக் கலந்துவிடு வதற்குத்தான் அவை பயன்படும். நகராட்சியின் பகுதிகளில் வடி கால் வசதிகள் இல்லையென்றால், அதைச் செய்ய வேண்டுமென்று

[1973 ஆகஸ்டு 13

நகராட்சிகள் விண்ணப்பித்துக்கொள்ளவில்லை. அதை நிறைவேற்றுவது சாத்தியமா என்பது பரிசீலிக்கப்படும். அதற்குப் பிறகு கடன் உதவி ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து என்ன பங்கு கிடைக்கிறது என்பதைப் பொறுத்தும் தமிழக அரசு எந்த அளவுக்கு நிதி ஒதுக்க முடியும் என்பதையும் தீர்மானித்து அதற்குப் பின்னால் செயல்படுத்தப்படும். அந்தந்த நகராட்சிகள் விண்ணப்பித்துக்கொண்டால், முறைப்படி அவை பரிசீலிக்கப்படும்.

**திரு. வை. பாலசுந்தரம்:** தலைவர் அவர்களே, வடிகால் வாரியம் தமிழ்நாட்டிலே சிறந்த பணியாற்றி வருகிறது. வடிகால் வாரியம் மத்திய சர்க்காரிடமிருந்து பெருந்தொகையைப் பெற்று தமிழகத்திலே அந்தப் பணிகளை விரைவுபடுத்துவதற்கு அரசு வழிசெய்யுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியம் என்பது மக்களுக்குக் குடிநீர் வழங்குவதற்காகவும், வடிகால்களை ஆங்காங்கே ஏற்படுத்தித் தருவதற்காகவும் அமைக்கப்பட்டிருப்பது ஆகும். இந்த குடிநீர் வழங்கு திட்டங்களுக்கு ஒரு குறிப்பிட்ட தொகை மத்திய அரசு கொடுக்க முன்வந்தது. அப்படி முன்வந்தபோதிலும், அந்தத் தொகையை—1 கோடியே 70 லட்சம் ரூபாய் தருவதற்கு இசைவு தந்தாலும்—அந்தத் தொகையின் அளவைக் குறைத்துக் கொண்டே வந்துவிட்டது. இப்படிப்பட்ட வடிகால் திட்டத்தைப் பொறுத்த வரையில் ஒரே இடத்தில் பல லட்சம் ரூபாயைச் செலவிடவேண்டிய திட்டமாக இருப்பதால், ஓரளவிற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் கடன் நிதி உதவியினாலும், தமிழக அரசின் கடன் உதவியினாலும் நிறைவேற்றப்படுகின்றன. ஒவ்வொரு திட்டமும் அதற்குரிய பல்வேறு விதமான பிரச்சினைகளைத் தீவிரமாக ஆராய்ந்து அதற்கான கடன் பல்வேறு முனைகளிலிருந்து கிடைப்பதைப் பொறுத்து நிறைவேற்றப்படுகின்றன.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** காஞ்சிபுரத்திலே இந்தத் திட்டம் ஏறத்தாழ இரண்டு ஆண்டுக் காலம் ஆகியும் இன்னும் ஏன் முடிவடையாமல் இருக்கிறது. காரணம் என்ன? காண்ட்ராக்டர் தாமதம் செய்கிறாரா அல்லது இந்த ட்ரெய்னேஜ் போர்டு பணம் கொடுப்பதில் தாமதம் ஏற்பட்டதால் வேலை முடியவில்லையா?



1973 ஆகஸ்டு 13]

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** ஏறத்தாழ இரண்டாண்டுக் காலம் என்பது தாமதத்திற்கு அடையாளம் அல்ல. ஏறத்தாழ இரண்டு ஆண்டுக் காலம் ஆகலாம். ஏறத்தாழ மூன்று ஆண்டுக்கால அளவில் நிறைவேற்றப்படும் என்ற அளவிலேதான் இது தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இதுபற்றி விளக்கமாகச் சொல்லவேண்டுமானால், பம்பிங் ஸ்டேஷன் சம்பந்தப்பட்ட வேலை 60 சதவீதம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதேபோல் அதிக அகலமான பைப்கள் போடுகின்ற வேலை 70 சதவீதம் நிறைவேறியிருக்கிறது. 1974 ஆம் ஆண்டு இறுதிக்குள்ளாக இது முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக 175 லட்ச ரூபாய் ஆகுமென்றும் இதிலே 73 லட்சம் ரூபாய்க்கான வேலைகள் இதுவரை நடைபெற்றிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கா. வேழவேந்தன்:** நூற்று ஐந்து லட்சம் ரூபாய்க்கு மேல் திருத்த மதிப்பீடு வர இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, அப்படியொரு விவரம் என்னிடத்திலே இல்லை.

**திரு. எம். சுரேந்திரன்:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில்சொல்கிறபோது ஆங்காங்கே இருக்கிற நகர சபைகள் கழிவுநீரைப் போக்குவதற்கான வடிகால்களை அமைக்க விண்ணப்பம் போட்டால் பரிசீலிக்கப்படும் என்று சொன்னார்கள். இது எல்லா நகராட்சிகளுக்கும் அவசியமாக இருப்பதால், அவர்களே விண்ணப்பம்போடும்படி ஏன் அரசாங்கம் வற்புறுத்தக் கூடாது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற நகரசபைகளுக்கு, அரசாங்கம் என்ன என்ன தேவை என்று ஆலோசனை சொல்லவேண்டிய அவசியம் இல்லை. பலபேர்கள் விண்ணப்பிக்கிறார்கள். எந்த விண்ணப்பம் உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டும், நெருக்கடியானது என்று கவனிக்கப்பட்டு, அந்த வரிசையிலேதான் முடிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

[1973 ஆகஸ்ட் 13

காவேரி மேலணைப்பகுதி.

*109 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரியில் மேலணைப் பகுதியில் ஓர் அணை கட்டும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம். மேல் அணையில் காவேரியின் குறுக்கே ஒரு 'ரெகுலேட்டர்' அமைக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

(இ) இத்திட்டம் மத்திய அரசின் நீர்மின் குழுவினரின் ஆய்வில் உள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, எவ்வளவு ரூபாயிலே திட்டமிடக்கூடிய நிலையுள்ளது? எந்த எந்தப் பகுதிகளுக்குப் பாசனம் கிடைக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, பாசனத்திற்கான திட்டமில்லை இது. வெள்ளப்பெருக்கு ஏற்படும் பொழுது நாசம் ஏற்படாமல் தடுப்பதற்காகத்தான் இந்த அணையைக் கட்டுகிறோம். அதற்காகப்போடப்பட்டுள்ள மதிப்பீடு 212 லட்சம் ஆகும். இந்த ஆண்டு இதற்காக 30 லட்சம் ஒதுக்கியிருக்கிறோம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Minister for Public Works the number of dams on the Cauvery at present and the number of proposals for construction of fresh dams?

THE HON. THIRU P. U. SHANMUGHAM : Sir, I want notice.

திருமதி த. ந. அனந்தநாயகி : இது மத்திய சர்க்காருடைய ஆய்வில் இருக்கிறது என்று சொன்னார்கள். இருந்தாலும் இந்த ஆண்டு 30 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். எப்பொழுது அவர்கள் ஆய்விற்கு அனுப்பப்பட்டது? இந்த 30 லட்சம் எப்பொழுது சாங்ஷன் செய்யப்பட்டது?



1973 ஆகஸ்ட் 13]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : 1972-73 கடைசிப் பகுதி வரையிலே கடிதம் எழுதியிருக்கிறோம். 1961-லே இது ஆரம்பமானது. மத்திய அரசாங்கத்தின் ஒப்புதலை எதிர்பார்த்து இந்த அரசு வேலையை ஆரம்பிக்கலாமா என்று யோசனை செய்து கொண்டிருக்கிறது.

*Peruvaripallam Dam.*

*110. Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) the total quantity of water stored at Peruvaripallam Dam as on February 1973; and

(b) the total area of land likely to benefit therefrom?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) துனக்கடவு நீர்த்தேக்கமும் பெருவாரிப்பள்ளம் நீர்த்தேக்கமும் ஒரு வாய்க்காலால் ஒன்றிணைக்கப்பட்ட ஒரே நீர்த்தேக்கமாகும். இவைகளின் நீர் மட்டம் 1973-ம் ஆண்டு பிப்ரவரி முதல் தேதியன்று 1754.64 ஆக இருந்தது. இந்த மட்டத்திற்கு நீரின் கொள்ளளவு 633 மில்லியன் கன அடியாகும்.

(இ) மின் சக்தி உற்பத்தி செய்ய தேவையான குறைந்த பட்ச நீரின் மட்டம் 1761.00 ஆகும். பிப்ரவரி மாதம் முதல் தேதியன்று நீரின் மட்டம் மின் சக்தி இயக்குவதற்கான குறைந்த பட்ச மட்டத்திற்கும் தாழ்வாக இருந்ததால் குடைவு வழியின் தரை மட்டத்திற்கு மேலே இருந்து 125 மில்லியன் கன அடி நீர் மின்சக்திக்கும் பயன்படாமல் நீர்ப்பாசனத்திற்குப் பயன்பட இருந்தது. இது சர்க்கார்பதி மாற்று வழியின் மூலம் கொண்டு செல்லப்பட்டது. இந்த 125 மில்லியன் கன அடி நீரினால் 1,042 ஏக்கர் பாசன வசதி அடையக்கூடும்.

திரு. ச. சங்குமுத்து தேவர் : தலைவரவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் மணிமுத்தாறு நீர்த்தேக்கம், பாபநாசம் நீர்த்தேக்கம் ஆகியவைகளின் மூலம் உள்ள விவரத்தைச் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தனிக்கேள்வி வேண்டும்.

[1973 ஆகஸ்ட் 13

**இரயில் பாதைகளை மின்சாரப்படுத்தல்.**

*111 வினா—**திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள இரயில் பாதைகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பது குறித்து மத்திய அரசுக்குப் பரிந்துரை ஏதேனும் செய்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) ஆம்.

(இ) சென்னை-அரக்கோணம், சென்னை-கும்மிடிப்பூண்டி இரயில் பாதைகளை மின்சாரப்படுத்த மத்திய அரசிடம் கோரப்பட்டுள்ளது.

**திரு. ஆ. பரந்தாமன்:** தலைவரவர்களே, இந்த இரயில் பாதைகளுக்கு மின் இணைப்பு கொடுக்கும் அந்தத் திட்டம் எப்பொழுது மேற்கொள்ளப்படும் என்று மத்திய அரசிடமிருந்து ஏதேனும் தகவல் வந்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, சென்ற ஆண்டு சூன் மாதம் 21 ஆம் தேதி வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. 1973-74-இல் முழுமையாகத் துவங்கப்படும், அநேகமாக 1976-77-இல் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவரவர்களே, மின்சாரப் பற்றாக்குறையின் காரணமாக இப்படிப்பட்டவைகளுக்கு மின் இணைப்பு கிடைப்பதில் தாமதமேற்பட்டு பாதிக்கப்படாமல் இருக்க அவர்களுக்குத் தேவைப்பட்ட மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய அளவில் அனல் மின்சார நிலையத்தை ஏற்படுத்த வேண்டுமென்று அரசு சொல்லியிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அப்படிச் சொல்லவில்லை, அப்படித் தேவையுமில்லை.

**திரு. ஏ. எம். இராஜா:** தலைவரவர்களே, சென்னையைச் சுற்றி இப்படிப்பட்ட மின்சார இரயில்களைப் போடுவதற்கு நம்முடைய அரசு மத்திய அரசைக் கேட்டுக்கொண்டதைப்போல, வளர்ந்து



1973 ஆகஸ்ட் 13]

வரும் பெருநகரங்களான கோவை, மதுரை, திருச்சி போன்ற நகரங்களிலும், புறநகர்ப் பகுதிகளில் போக்குவரத்தை எளிதாக்கும் வகையில் இதுபோன்ற மின்சார இரயில்களை விடுவதற்கு மத்திய அரசை மாநில அரசு கேட்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, சென்னையைச் சுற்றிப் போடவில்லை. சென்னையிலிருந்து அரக்கோணத்திற்கு போட இருக்கிறோம். பாக்கியிடங்களைப் பற்றி விவரங்கள் இல்லை.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவரவர்களே, மின்சாரப் பற்றாக்குறை நமக்கு இருப்பதால் இப்படிப்பட்ட மின்சாரத்தைக் கொடுக்காமல் இருக்க அரசாங்கம் முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இல்லை. இப்படிக் கொடுப்பதால் மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படாது என்றுதான் கணக்கிடப்பட்டிருக்கிறது.

**திரு. வை. பாலசுந்தரம்:** தலைவரவர்களே, இந்திய இரயில்வே இலாக்கா தமிழகத்தில் இருக்கும் மீட்டர்கேஜ்களை அகற்றிவிட்டு, பிராட்கேஜ் போடுவதற்காகத் திட்டம் வகுக்கப்பட்டதே, அது எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்று அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, தனிக் கேள்வி போட வேண்டும்.

**பல்புகள் உற்பத்தி.**

*112 வினா—**திரு. எம். சுரேந்திரன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின்சார வாரியத்தின் கீழ், ஓர் பல்பு உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதற்கான எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டிருக்கிறதா?

(உ) வருடத்துக்குத் தேவைப்படும் பல்புகளின் எண்ணிக்கையும் அதன் ரூபாய் மதிப்பும் கணக்கிடப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ), (இ) & (உ) பேரவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், மின்சார பல்புகள் மிகவும் அதிகமாகத் தேவைப்படுவதால், இதை நாமே ஏற்றுச் செய்வதற்கு முறையான காரியங்கள் நடைபெறுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மின் வாரியம் இதைப்பற்றிப் பரிசிலித்து, அவர்களுடைய தேவை ஒரு பெரிய தொழிற்சாலை அமைக்கப்போதாது, ஆகவே, வயபிள் யூனிட் ஆரம்பிக்க வேண்டுமென்ற முடிவை தெரிவித்திருக்கிறார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சார், மாதவரம் பகுதியில் பல்பு ஃபேக்டரி இருந்தது. அதனுடைய தயாரிப்பு பாதிக்கப்பட்டு, அது ஒழுங்காக நடைபெறுவதில்லை. ஆகவே, இப்பொழுது இருக்கும் அப்படிப்பட்ட 'சிக் இண்டஸ்ட்ரிகளை' சீர்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** Zenith Lamp Factory ரொம்ப நாள் பிரச்சினை, நீண்ட பிரச்சினை. திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொன்னதைப்போல அவர்கள் அப்படித் திட்டம் தந்தால் பரிசீலிக்கலாம்.

**திரு. வை. பாலசுந்தரம் :** தலைவரவர்களே, இந்த பல்பு விஷயங்களில் 'எல்மி குருப்' என்ற ஸ்டாண்டர்ட் குருப்பை அந்தந்த இலாக்காக்கள் பயன்படுத்துகிறது என்பது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அதைப்பற்றி மின்சார வாரியத்திடம்தான் கேட்க வேண்டும்.

**திரு. கே. கந்தசாமி :** தலைவரவர்களே, மின்சார பல்புகள் முன்பு இருந்ததைவிட இப்பொழுது விரைவில் பழுதடைவதை உணர்கிறோம். இப்படிப்பட்ட நிலையில்லாமல் நீண்ட நாட்களுக்கு உழைக்கும் அளவில், இதைக் கருத்திற்கொண்டு பல்புகளை நல்ல முறையில் செய்ய ஆவன செய்யுமா ?

---

@ 276-ம் பக்கத்தில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.





**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இது மின்சார பல்பு தொழிற்சாலையைப் பற்றிய கேள்வி. மின்சார வாரியத்திலே எப்படிப்பட்ட பல்புகளை உபயோகிக்கிறார்கள், யாரிடத்திலே வாங்குகிறார்கள் என்ற விவரம் என்னிடத்திலே இல்லை.

*Steel wire manufacturing company*

* 113 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any factory for the production of sttel wire has been opened in December 1972; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) & (இ) சென்னையில் உள்ள திருவாளர்கள் மோடி மானுபாக்சரிங் கம்பெனி ஆண்டு ஒன்றுக்கு 10,000 டன்கள் பல்வேறு வகைப்பட்ட எஃகு கம்பிகளை உற்பத்தி செய்வதற்கு, அம்பத்தூரில் ஒரு தொழிற்சாலையை நிறுவியிருக்கிறார்கள். அத்தொழிற்சாலை 23—12—1972 அன்று துவக்கிவைக்கப்பட்டது.

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, தமிழகத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த எஃகு உற்பத்தி தொழிற்சாலைகளுக்கெல்லாம் 'ரா மெட்டீரியல்ஸ்' பற்றாக்குறை இருப்பது அரசுக்குத் தெரியுமா ? ரீ-ரோலிங் மில்ஸ் ஆரம்பித்திருப்பவர்கள் ரா மெட்டீரியல்ஸ் இல்லாமல் சிரமப்படுகிறார்கள். அதற்காக அதிகக் கோட்டாவைப் பெற்றுத்தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்த ஆலைகளுக்குத் தேவையான மூலப்பொருள்கள் எவ்வளவு கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசு D.G.&S.D. மூலம் முடிவு செய்கிறது. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையிலே இங்கே மாநிலத்திலே தொழிற்சாலைகளிடம் சிபார்சு செய்கிறோம். பத்திலே ஒன்றுதான் கொடுப்பதாகக் கணக்கு.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவரவர்களே, இப்படிப்பட்ட தொழிற்சாலைகளில் எத்தனைத் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள் அதனுடைய உற்பத்தித் திறன் எவ்வளவு என்பதை அரசு சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஆண்டு ஒன்றுக்கு 10,000 டன்.

### சிறைச்சாலைகளில் வைக்கப்பட்டுள்ள வெளிமாநிலக் கைதிகள்

* 114 வினா—திரு. அ. தேவேந்திரன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் வெளி மாநிலத்தைச் சேர்ந்த கைதிகளின் எண்ணிக்கை எத்தனை?

(இ) அவர்கள் எந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்?

(உ) எந்தெந்த சிறைச்சாலைகளில் உள்ளனர்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) 16.

(இ) திரிபுரா மற்றும் பாண்டிச்சேரி மாநிலக் கைதிகள்.

(உ) திரிபுராவைச் சார்ந்தவர்கள் கோவை மத்திய சிறையிலும், பாண்டிச்சேரி மாநிலக் கைதிகள் சேலம், சென்னை, திருச்சிராப்பள்ளி, கடலூர் மத்திய சிறைகளிலும் உள்ளனர்.

**திரு. அ. தேவேந்திரன்:** தலைவரவர்களே, வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனைபேர்கள் நம்முடைய சிறைச்சாலைகளில் இருக்கிறார்கள்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அதைத்தான் சொன்னேன், மொத்தம் 16. திரிபுரா மற்றும் பாண்டிச்சேரி மாநிலக் கைதிகள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** பங்களாதேஷ் கைதிகள் சிறையிலே இருக்கிறார்களா, பூராவும் திருப்பி அனுப்பப்பட்டு விட்டார்களா அல்லது யாராவது இன்னும் இருக்கிறார்களா? அவர்களுக்காக விசேஷமாகப் போடப்பட்ட அந்த வார்டர்களுக்கு விசேஷ சலுகை கொடுக்கப்பட்டதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** வார்டர்களைப்பற்றிய தகவல் இல்லை. பெரும்பாலும் போய்விட்டார்கள். அதனால்தான் இந்தக் கணக்கில் தரவில்லை.

**திரு. த. சோனையா:** தலைவரவர்களே, நம்முடைய சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டிருக்கும் வெளி மாநிலத்தைச் சேர்ந்த அவர்கள் எப்படிப்பட்ட வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள் என்பதை அறிவிக்க இயலுமா?





**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இந்தக் கேள்வி மற்ற மாநிலங்களைச் சேர்ந்த கைதிகள் இங்கே அனுப்பப்பட்டு, நம்முடைய சிறைகளில் வைக்கப்பட்டிருக்கிறார்களா என்பது. அதைப்பற்றிய பதில்தான் இது.

**திரு. கோவை செழியன்:** பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்களுடைய பதிலிலே வங்க தேச கைதிகள் இங்கே வைக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள், அதற்கான செலவை மத்திய அரசு தந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மத்திய அரசினுடைய வேண்டுகோளும், மேற்கு வங்க அரசினுடைய வேண்டுகோளும் ஏற்கப்பட்டு அவர்கள் எடுத்துக்கொள்ளப்பட்டார்கள். அதற்கான செலவை அந்தந்த மாநில அரசு தர ஒப்புக்கொண்டுள்ளன.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவரவர்களே, கள்ள டாலர் அடித்த வெளிநாட்டுக் கைதிகள் நம்முடைய சிறைச்சாலைகளில் இருக்கிறார்கள். அந்தக் கேசில் சம்பந்தப்பட்டவர்கள் கோயம்புத்தூர் சிறைச்சாலையில் இருந்தாரே, அந்த கேஸ் சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? அவரைப்பற்றி இதில் சொல்லப்படவில்லையே, ஏன் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அந்தத் தகவல் என்னிடத்திலே இல்லை.

### *Persons arested on Counter-feit charges*

* 115 Q.—THIRU A. PARANDHAMAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether anybody was arrested in the Central Jail, Coimbatore on charge of trying to print twenty rupees counterfeit notes in March 1973; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) & (இ) 20 ரூபாய் நோட்டுக்களைக் கள்ளத்தனமாக அச்சிடும் முயற்சியில் பாஸ்கரன் என்ற காவல் கைதிக்கு உதவி செய்ததாகச் சந்தேகத்தின் பேரில் கோயம்புத்தூர் மத்திய சிறையைச் சேர்ந்த பரமேஸ்வரன், கண்ணப்பன், தாஸ்தகிரி என்ற மூன்று காவலர்கள் கைது செய்யப்

பட்டு அவினாசி கிளைச் சிறையில் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இதுபற்றி காவல் துறையினர் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவர்களே, கோவை மத்திய சிறைச் சாலையில் இப்படி கள்ளத்தனமான முறையில் 20 ரூபாய் நோட்டு அடிக்கும் முயற்சியிலே சிறைச்சாலையில் வேலை செய்தவர்களே ஈடுபட்டார்கள் என்று அறிகிறேன். அவர்களில் மேலும் பலர் ஈடுபட்டிருக்கக்கூடும் என்று தெரிகிறது. ஆகவே, இதை விசாரணை செய்து தக்க நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்பொழுது புலன் விசாரணை நடந்து வருகிறது.

**திரு. எஸ். வடிவேல் :** அவைத் தலைவர்களே, இந்தமாதிரி கள்ள நோட்டு அடிப்பவர்களுக்கு ஏ க்ளாஸ், பி க்ளாஸ் கொடுக்கப் படுகிறதே, அதை அவர்களுக்குக் கொடுக்காமல் இருக்க தமிழக அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கள்ள நோட்டு அச்சடிப் பவர்கள் அல்லது பணக்காரர்கள் என்று சிறையிலே வகுக்கப்பட வில்லை. நான் இதைப்பற்றிப் பரிசீலித்தேன். அவர்களுடைய 'டெஃபனிஷன்', சிறைக்கு வருவதற்கு முன்னால் அவர்களுடைய வாழ்க்கை எப்படி அமைந்திருந்தது என்று பார்க்கிறார்கள், அந்த முறையிலே சிலர் சிறைக்கு வருவதற்கு முன்னால் அவர்களுடைய வாழ்க்கை எப்படி அமைந்திருக்கிறதோ, அதைப் பொறுத்து கொடுக்கப்படுகிறது.

**திரு. கே. கந்தசாமி :** கள்ள நோட்டு அடிப்பது தேசவிரோத, மக்கள் விரோதச் செயலாக இருக்கும் காரணத்தாலும், தண்டனை வழங்கப்பட்டாலும் திரும்பத் திரும்பச் செய்கிற காரணத்தாலும், அது சமுதாயத்தைப் பாதிக்கும் விலைவாசி ஏற்றத்திற்கு அடிப் படையாக இருக்கும் காரணத்தாலும் இந்தத் தவறு செய்தவர்களைத் தண்டிக்கும்போது ரயில் பாதையை அகற்று



கிறவர்களுக்குத் தூக்குத் தண்டனை விதிக்க வேண்டுமென்று கூறுவதுபோல் இவர்களுக்கும் தூக்குத் தண்டனை விதிக்க வேண்டு மென்று நம்முடைய அரசு மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மத்திய அரசு இதுபற்றிப் பரிசீலித்து வருகிறார்கள். அப்போது இப்படிப்பட்ட யோசனை வருமானால் நம்முடைய அரசு ஏற்றுக்கொள்ளலாம்.

**திரு. முனு ஆதி :** கள்ள நோட்டு அடிப்பவர்களின் வாழ்க்கை வசதி உயர்ந்ததாகத்தான் இருக்கும். ஆகவே, நம்முடைய தமிழக அரசு கள்ள நோட்டு அடிப்பவர்களின் வாழ்க்கை வசதி எப்படி இருந்தாலும் அவர்களுக்கு ஏ கிளாஸ் சிறையில் கொடுக்கக் கூடாது என்று சட்டம் கொண்டு வர முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்போதே அப்படிப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இந்தக் கள்ள நோட்டு அடித்த வர்களிடமிருந்து என்ன சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக் கின்றன ? அந்தவகையில் புலன் விசாரணையில் துப்புகள் கிடைத் திருக்கின்றனவா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அந்த விவரங்களை எல்லாம் இப்போது சொன்னால் அது வழக்கைப் பாதிக்கும்.

**திரு. கோவை செழியன் :** கள்ள நோட்டு அடிக்கிறவர்கள், கள்ள டாலர் அடிக்கிறவர்கள், வெளிநாட்டுச் சாமான்களைக் கடத்துகிறவர்களை எல்லாம் தமிழ்நாட்டுச் சிறையில் கொண்டு வந்து அடைக்கிறார்கள். அவர்களை எல்லாம் தனிச் சிறையில் போட்டு அடைப்பது நலமாக இருக்கும். இல்லையென்றால் அவர்கள் தொழில் நுட்பத்தைத் தமிழ்நாட்டுக் கைதிகளுக்குச் சொல்லிக் கொடுத்து விடுவார்கள். இது பற்றி அரசு பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இது ஒரு உண்மையான வாதமாகும். அந்த வகையிலே இப்படிப்பட்ட குற்றங்களைச் செய்தவர்களைத் தனியாக வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக் கிறது.

[1973 ஆகஸ்ட் 13

## புறம்போக்கு நிலங்கள் ஒப்படை.

*116 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972-73-ல் ஏழை எளிய மக்களுக்கு இனாமாக வழங்கப்பட்ட புறம்போக்கு நிலங்களின் பரப்பளவு என்ன ?

(இ) இதனால் பயன் அடைந்தவர்கள் எத்தனை பேர், மாவட்ட வாரியாக?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) 85,013.16 ஏக்கர் நிலங்கள் வழங்கப்பட்டன.

(இ)

| | பட்டா வழங்கப்பட்ட விவரம். |
|---|---|
| செங்கற்பட்டு | 1,571 |
| தென்னாற்காடு | 1,375 |
| வட ஆற்காடு | 4,146 |
| தஞ்சாவூர் | 3,893 |
| திருச்சிராப்பள்ளி | 4,641 |
| மதுரை | 13,281 |
| ராமநாதபுரம் | 6,028 |
| திருநெல்வேலி | 132 |
| சேலம் | 3,195 |
| தர்மபுரி | 9,061 |
| கோவை | 600 |
| மொத்தம் | 47,923 |

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** திருச்சி மாவட்டத்தில் காவிரிக் கரையின் ஓரத்தில் கொடுக்கப்பட்டுள்ள புறம்போக்கு நிலங்களைத் திரும்ப ஒப்படைக்க வேண்டுமென்று சிலர் வற்புறுத்தப்படுகிறார்கள். இதைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?



1973 ஆகஸ்ட் 13]

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** விவரம் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் பதில் சொல்ல முடியும்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** ஏழை எளிய மக்களுக்கு இனாமாக வழங்கப்படக்கூடிய புறம்போக்கு நிலங்கள் விண்ணப்பம் செய்து ஆண்டுக் கணக்காகியும் ஜாரி செய்து தரப்படவில்லை. என்னுடைய தொகுதியில் அந்தப் பணி மாவட்ட ஆட்சித் தலைவரால் பூர்த்தி செய்யப்படவில்லை என்று அமைச்சர் அவர்களிடம் கூடத் தெரிவித்திருக்கிறோம். இதிலே துரிதமாக நடவடிக்கை எடுக்க அதிகாரிகள் மீது கண்காணிப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறதா ? உத்தரவுகள் பிறப்பிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஆண்டு ஒன்றுக்கு இவ்வளவு ஏக்கர் நிலத்தை ஜாரி செய்து கொடுக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில்தான் கடந்த ஆண்டு 75,000 ஏக்கர் ஜாரி செய்து கொடுக்க வேண்டுமென்று உத்தரவு போடப்பட்டு 85,000 ஏக்கர் வரை ஜாரி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. காலதாமதத்தைத் தவிர்க்கும்படி அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** அமைச்சர் அவர்கள் படித்த பட்டியலில் இருந்து கன்னியாகுமரி ஜில்லாவில் ஒரு நபருக்குக் கூட பட்டா வழங்கப்படவில்லை என்று தெரிகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில்கூட 132 ஏக்கர்தான் வழங்கப்பட்டதாகப் பட்டியலில் கூறப்பட்டிருக்கிறது. அங்கு ஏழைகள் குறைவு என்ற காரணமா அல்லது வேறு காரணமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நான் சொன்னது ஏக்கர் கணக்கில் அல்ல ; 132 பேருக்கு என்றுதான் சொன்னேன். அங்குள்ள நிலங்களை அனுசரித்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கு. அ. பொம்மன் :** அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து எல்லா மாவட்டங்களிலும் இவ்வாறு பட்டா வழங்கப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. நீலகிரி மாவட்டத்தில் மட்டும் இல்லை. நீலகிரி மாவட்டத்தில் நிலங்களே இல்லையா அல்லது ஏழைகள் இல்லையா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** நீலகிரி மாவட்டத்தில் நிலம் ஒப்படை செய்வது சம்பந்தமாகத் தடை இருந்தது. அந்தத் தடை இப்போது நீக்கப்பட்டிருக்கிறது. இனி மேல் ஒப்படை செய்வதற்கான வேலைகள் துரிதமாக நடைபெறும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** நில வருவாய்த் துறை அதிகாரிகள் கன்னியாகுமரி ஜில்லாவில் விசாரிக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கு பலரும் புறம்போக்கு நிலத்தைக் கைவசம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலே ஆட்சேபம் இல்லாத நிலங்களுக்கு உடனடியாகப் பட்டா வழங்க ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** விசாரணை முடிந்து ஆட்சேபணை இல்லாத நிலங்கள் இருக்குமானால் உடனடியாக ஒப்படை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. க. சோணையா:** மதுரை மாவட்டத்தில் 12,000 பேருக்கு பட்டா ஒப்படை செய்யப்பட்டதாக அறிவித்தார்கள். அருகாமையில் இருக்கும் இராமநாதபுரத்தில் அந்த எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. இராமநாதபுரத்தில் பரிசீலனைகள் எல்லாம் முடிந்து விட்டதாகத் தெரிகிறது. அப்படிப்பட்ட நிலங்களை உடனடியாகப் பட்டா செய்து கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** கடந்த ஆண்டு ஏராளமான நிலம் பட்டா செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆண்டுதோறும் குறிப்பிட்ட அளவுக்குப் பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதிகமான நிலம் இல்லாத நிலையில் கொடுக்கின்ற எண்ணிக்கை குறைவாக இருக்கலாம். கொடுப்பதில் வேகம் குறைவாக இருக்கிறது என்று சொல்ல முடியாது.

**திரு. எம். சுரேந்திரன்:** பட்டா வழங்குவதில் கிராமாதிகாரிகள் கணக்கு பல சிக்கல்களை உண்டாக்குகிறது. பல்வேறு நிலங்கள் மேய்ச்சல் நிலங்கள், சாலைப் போக்குவரத்து என்று வேறு வேறு பெயரில் இருக்கின்றன. ஆனால் அந்த நிலங்களில் 20, 30 ஆண்டுகளாக விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். தஸ்தாவேஜில் அது இல்லாத காரணத்தால் அவர்களுக்குப்



பட்டா செய்து கொடுக்க முடியவில்லை. அம்மாதிரி நிலங்களைப் பரிசீலனை செய்து ரெக்கார்டில் மாற்றியமைத்து பட்டா செய்து கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அந்தக் கிளாசிபிகேஷனை மாற்றுகின்ற பணிகளை டி.ஆர்.ஓ. செய்ய வேண்டும். அதை டி.ஆர்.ஓ. கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கப்படும். இதிலே காலதாமதம் ஒன்றும் ஏற்படுவதில்லை. தகுதியுள்ள நிலங்களாக இருந்தால் விரைவாக பட்டா கொடுக்க வேண்டுமென்று அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. எஸ். வடிவேல்:** பட்டா வழங்குவதில் கணக்குப் பிள்ளை மனது வைத்தால்தான் நடக்கும் என்ற நிலை இருக்கிறது. பத்து வருஷம் சாகுபடி செய்திருந்தாலும் கூட திடீரென்று வேறு பெயரைப் போட்டுவிட்டால் உண்மையில் சாகுபடி செய்தவர்களுக்கு பலன் இல்லாமல் போய்விடுகிறது. அரசு இதுபற்றி நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** கணக்குப் பிள்ளை சொல்லுவதை மட்டும் வைத்துச் செய்வதில்லை. மனு நீதித் திட்டத்தின்போது கூட சர்க்கார் அதிகாரிகள் நேரடியாகச் சென்று நடவடிக்கை எடுக்கிறார்கள். கணக்குப் பிள்ளை குறிப்பதில் தவறு இருந்தால் மேலதிகாரிகளுக்கு விண்ணப்பித்துக் கொண்டால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். அப்படிப் பட்ட புகார் குறிப்பாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை.

THIRU B. VENKATASWAMY: Sir, especially in the case of the Dharmapuri district, the Government have passed an order to give lands only for raising mulberry cultivation. Now, as it is, they are given only for lease for five years and the persons concerned are fearing that they may be taken back after the lease period and so they are not in a position to improve them. Also, may I know whether, while assigning them, they would put a condition that 50 per cent of the lands should be brought under mulberry cultivation so that they can be cultivated in a better way?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கேள்வியைத் தனியாகத் தொழிலமைச்சர் அவர்களுக்குப் போட்டால் நிச்சயமாகப் பதில் சொல்லுவார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்து அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது.

### Land for Mentally Retarded Children's Home

*117 Q.—THIRU R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to grant lands for locating the home for the mentally retarded children run by the Guild of Service at Madras; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) & (இ) சென்னை கில்ட் ஆப் சர்வீஸின் ஆதரவில் இயங்கும் பால விகாரிலுள்ள மன வளர்ச்சி குன்றிய சிறுவர் சிறுமியர்க்காக ஒரு விவசாயப் பண்ணை தொடங்குவதற்கு, செங்கற்பட்டு மாவட்டம், சைதாப்பேட்டை வட்டம், ஜல்லடையன்பேட்டை கிராமத்தில் 25 ஏக்கரா நிலத்தை அளிக்க அரசு அண்மையில் ஆணை பிறப்பித்துள்ளது.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** இந்த மன நோய் இருக்கின்ற குழந்தைகளுக்கு விடுதி கட்ட வேண்டுமென்று மகாபோதி சொசைடி மூலமாக விண்ணப்பம் அரசுக்கு வந்திருக்கிறதா? என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அதுபற்றிய விவரம் இப்போது இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சொல்ல முடியும்.

### எண்ணெய், பருப்பு விற்பனை

*118 **வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

**எண்ணெய், பருப்பு வகைகளின் விற்பனையை அரசு வர்த்தக கார்ப்பரேஷன் நேரடியாக மேற்கொள்ள உத்தேசித்துள்ளதா?**



**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கல் கழகம், வட இந்திய மாநிலங்களில் பருப்பு வகைகள் விளைகின்ற இடங்களிலிருந்தும், கிடைக்கும் பொழுதெல்லாம் இந்திய உணவுக் கழகத்திடமிருந்தும் பருப்பு வகைகளை மொத்தமாக வாங்கி, சென்னை மாநகரிலும் ஏனைய பெரு நகரங்களிலும் கழகத்தினால் நடத்தப்படுகின்ற சில்லறை விலைக் கடைகளின் மூலமாக அவற்றை விற்கிறது. சூரியகாந்தி எண்ணெய், வனஸ்பதி, தூய்மைப்படுத்தப்பட்ட எண்ணெய் ஆகியவற்றை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, தனியார் கடைகளில் விற்கப்படுகிற பருப்பு, எண்ணெய்களை விட நமது அரசாங்கக் கடைகளில் விலை குறைவாக இருந்தாலும் கூட மக்களுக்குச் சரியான முறையில் தெரியவில்லை; இவ்வளவு விலை குறைவாக விற்கப்படுகிறது என்பதற்கு நல்ல விளம்பரம் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** விலை குறைவாக இருந்தும் வாங்குகிறவர்கள் ஆங்காங்குள்ள கடைகளில் கடன் வாங்குகிற காரணத்தினால் தொடர்ந்து அந்தக் கடைகளிலேயே வாங்குகிறார்கள். இங்கே குறைந்த விலையில் இருந்தாலும் அவர்கள் இன்னும் தங்கள் நிலையைச் சரிப்படுத்திக் கொள்ளவில்லை.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** சிவில் சப்ளை கார்ப்பரேஷனால் சென்னை நகரத்திலும், கோவை மாநகரிலும்தான் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. நமது மாநிலத்திலுள்ள பெரு நகரங்களில் பருப்பு விலைகள் உயர்ந்துகொண்டே போகின்றன. அதைத் தடுக்க பெருத்த அளவில் வட மாநிலங்களில் இருந்து கொள்முதல் செய்து தனியார் வியாபாரிகளுக்கும் கொடுத்து விலைவாசியைக் குறைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** நான் முன்பே சொல்லியிருக்கிறேன். நமது மாநிலத்தில் பெரு நகரங்களில் நமது கடைகளை ஆரம்பித்திருக்கிறோம் என்றாலும் வாங்குகிற மக்கள் அங்கே வாங்கவில்லை என்று சொல்லியிருக்கிறேன். நாம் முன்பு 986 டன் கொள்முதல் செய்ததில் 635 டன்தான் கிட்டத்தட்ட

[1973 ஆகஸ்ட் 13

சென்ற 1972 ஆகஸ்டில் இருந்து இதுவரை விற்பனையாகி யிருக்கிறது. எனினும் இப்போதும் இரண்டாயிரம் டன் வாங்கி யிருக்கிறோம், விற்குமா, நட்டம் வந்துவிடுமா என்கிற சந்தேக நிலையில்தான். நாம் வாங்கி தனியாரிடம் கொடுத்து விற்கச் சொல்கிற கொள்கை இன்னமும் வகுக்கப்படவில்லை.

**திரு. எஸ். வடிவேல் :** தஞ்சை மாவட்டத்தில் வயல் வரப்புகளில் துவரை பயிரிடுகிற பழக்கம் முன்பு இருந்தது. அதைப்போல இப்போதும் பயிரிட்டு துவரை உற்பத்தியைப் பெருக்க அரசு உதவி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** விவசாய இலாக்காவில் இப்போது திட்டம் போட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு பருப்பு வகைகளை அதிகமாக உற்பத்தி செய்யவேண்டு மென்று துவரை—நிலக்கடலை—நவரை சாகுபடியில் திட்டம் போட்டிருக்கிறார்கள். நமது நண்பர் சொன்னதுபோல வயல் வரப்புகளில் போடுவதன் மூலம் நிரந்தரப் பயன் இல்லை. சாதாரணமாக ஒரு குடும்பத்திற்குப் போதுமானது கூட கிடைக்காது. நமது மாநிலத்திற்கு 4 லட்சம் டன் தேவைப் படுகிறது. இரண்டு லட்சம் டன் உற்பத்தி செய்வதற்கு போதுமான நிலப்பரப்பும், அதற்குத் தகுந்த மண்வளமும் நமது தமிழ்நாட்டில் இல்லை என்ற காரணத்தினால் பெரும்பகுதி வெளி மாநிலங்களில் இருந்தே தருவிப்பது அவசியமாக இருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் குறைந்த விலையில் எண்ணெய், பருப்பு விற்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். இந்தக் கடைகள் பெரும்பாலும் எங்கே இருக்கின்றன என்கிற விளம்பரம் சரியாக இல்லாத காரணத்தினால் சூப்பர் மார்க்கெட் மூலமாக இவற்றை விற்பதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** அதையும் செய்ய முயற்சிக்கலாம். இந்தக் கடைகள் எங்கே இருக்கின்றன என்கிற விளம்பரம் சரியாக இல்லை என்றார்கள். நான் அதனையே படிக்கிறேன். (1) ஜார்ஜ் டவுன்—மூர் தெரு, (2) தங்கசாலை, (3) தண்டையார்பேட்டை, (4) பெரம்பூர்—வியாசர்பாடி, (5) வெங்கடேசபுரம், (6) நுங்கம்பாக்கம்—ஹாரிங்டன் ரோடு, (7) அசோக் நகர், (8) நந்தனம், (9) கோபாலபுரம், (10) சைதாப்



1973 ஆகஸ்ட் 13]

பேட்டை, (11) இந்திரா நகர், (12) சிந்தாதிரிப்பேட்டை, (13) கோமளீஸ்வரன்பேட்டை, (14) அண்ணா நகர், (15) சூளை—பின்னி. என். கே. ஈ.டி. மில்ஸ் காம்பவுண்டு, (16) திருவல்லிக்கேணி—சின். என். கே. ரோடு, (17) தியாகராயநகர்.

**திரு. ஏ. எம். இராஜா :** பம்பாய் நகரத்தில் அங்கே இருக்கிற வியாபாரிகளை ஒன்றுகூட்டி, மக்கள் நலம் கருதி எண்ணெய் விலையை 7½ ரூபாய்க்குமேல் உயர்த்துவது இல்லை என்கிற முடிவுக்கு வரும்படி செய்திருப்பதாகத் தெரிகிறதே. அதுபோல நமது மாநிலத்திலும் வியாபாரிகளைக் கூட்டி வைத்து எண்ணெய் விலையைக் கட்டுப்படுத்த அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பம்பாய் நகரத்தில் அப்படிப்பட்ட ஒரு முயற்சியை பம்பாய் மாநில முதலமைச்சர் எடுத்துக்கொண்டதாக செய்தி வந்தது. மறுநாளே இந்த செய்திப் பத்திரிகையில் அந்த முயற்சி வெற்றிபெறவில்லை என்பதாகவும் செய்தி வந்தது. எது சரி என்பதை ஆராய்ந்து பார்த்து, இங்கும் அப்படிப்பட்ட முயற்சியில் ஈடுபடலாம்.

## திருத்தங்கல் கூட்டுறவு விவசாயப்பண்ணை

***119 வினா—திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருத்தங்கல் கிராமத்தில் 1958-ல் ஆரம்பிக்கப்பட்ட விவசாயக் கூட்டுப்பண்ணை கலைக்கப் பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதில் ஏற்பட்ட நஷ்டத் தொகைக்காக அப்பகுதி விவசாயிகள் பாதிப்புக்குள்ளாகியிருப்பதை அரசு அறியுமா ? எடுக்கப்பட்டுவரும் ஜப்தி நடவடிக்கைகளால்

(உ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** (அ) ஆம்.

(இ) & (உ) ஜப்தி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே அதனால் யாரும் பாதிக்கப்படவில்லை.

[1973 ஆகஸ்ட் 13

**திரு. எஸ். வடிவேல்:** தலைவர் அவர்களே, சிலர் குறைவு இழைத்த காரணத்தினால் விவசாயிகள் இதில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்காவது விதிவிலக்கு அளிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அவர்கள் சொல்வது தவறு. மொத்தமாக 59 உறுப்பினர்கள் இருப்பதாகச் சொன்னார்கள். 43 பேர்களைத்தான் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொண்டிருந்தார்கள். மொத்தத் தொகை 73 ஆயிரத்தில் 6 பேர்கள் மட்டும் 48 ஆயிரம் ரூபாய் கிணறுகள் வெட்டுவதற்காக வாங்கியிருக்கிறார்கள். இவைகளை எல்லாம் நன்கு ஆராய்ந்து பார்த்து சென்ட் 5 ரூபாய் என்று அவர்கள் பகிர்ந்து கொடுக்கவேண்டுமென்று தீர்ப்புச் சொல்லியிருக்கிறார்கள். 43 பேர்களில் 13 பேர்கள் வந்து அப்படித் தருவதாக ஒப்புக்கொண்டுவிட்டார்கள். பாக்கியுள்ள 30 பேர்கள் பற்றித்தான் பிரச்சினை. அதுபற்றியும் பரிசீலனை செய்து டி.ஆர். அளிக்கிற தீர்ப்புப்படி நடக்க வகைசெய்யப்பட்டிருக்கிறது.

**திரு. சோ. அழகர்சாமி:** இந்தக் கூட்டுப் பண்ணையை அரசாங்கம் விவசாயிகளை நன்று கிட்டி அதிகமாக உதவி செய்ய வேண்டுமென்று ஆரம்பித்தது. நான்கைந்து கிணறுகள் வெட்டப்பட்டன. பம்பு செட்டுகள் போடப்படாத காரணத்தினால் கிணறுகள் வெட்டியும் பயனில்லாது போய்விட்டது. இப்போது அந்தப் பணத்தை வசூல் செய்ய நடவடிக்கை எடுத்தால் நிலங்களை போய்விடக்கூடிய நிலை இருப்பதால் அந்தப் பணத்தை வஜா செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** நான் முன்பே சொன்னேன். இதில் 43 பேர்கள் தான் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். ஆறு பேர் பயன் அடைந்திருக்கிறார்கள். கணக்குத் தொகை கிட்டத்தட்ட 26 ஆயிரம் ரூபாய்—அதைப் பிரித்து சென்டுக்கு 5 ரூபாய் வீதம்—நிலத்தைச் சீர்திருத்தம் பண்ணின, செலவும் இதில் சேர்ந்தது தான்—செலுத்த வேண்டுமென்று தீர்ப்பு அளித்திருக்கிறார்கள். பதின்மூன்று பேர்கள் சம்மதித்து விட்டார்கள். பாக்கியுள்ள 30 பேர்கள் தான் சம்மதிக்கவில்லை. அதற்கும் அவர்களுடைய குறைகள் என்ன என்பதை விசாரிக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். அவர்களுக்கு உண்மையில் என்ன



1973 ஆகஸ்ட் 13]

கஷ்டம் இருக்கிறதோ அதை அறிந்து நீக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வது பற்றி பரிசீலிக்கலாம். எனினும் இப்போது ஜப்தி நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

**திரு. சோ. அழகர்சாமி:** அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கத்திற்கு நன்றி. இருந்தாலும் சென்ட் 5 ரூபாய் என்றால் ஒரு எக்கரா 500-க்கு வருகிறது. சென்ட் 3 ரூபாய் தான் நிலத்தின் மதிப்பே இருக்கும். நிலத்தை விற்றுக் கொடுக்கக்கூடிய நிலைதான் வரும். ஆகவே இதைப் பரிசீலனை செய்வார்களா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** விவசாயிகளுடைய குறைகளை, கஷ்டங்களை அறிந்து எந்தமுறையில் தீர்க்க முடியுமோ அந்த முறையில் தீர்க்கப்படும்.

*Houses for weavers*

*120. *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the State Housing Board has proposals to build cheap houses for the weavers; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) ஆம்.

(இ) மனையின் விலை நீங்கலாக ரூ. 7,500 செலவில் குடியிருப்புக்காக 285 சதுர அடி பரப்பும், நெசவு வேலைக்காக 200 சதுர அடி பரப்பும், ஒரு அறையும் கொண்ட catenary shell type வீடுகள் நெசவாளர்களுக்குக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். வீட்டின் விலையில் ரூ. 1,000 முன் பணமாகவும் மீதமுள்ள ரூ. 6,500-ஐ மாதத் தவணை முறையில் ரூ. 90 ஆகவும் நெசவாளர்கள் செலுத்த வேண்டியதிருக்கும். இத்திட்டம் ஆரம்ப நிலையில் உள்ளது. அதற்காக விபரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, in view of the vastness of the problem and also the fact that a large number of houses are required for the weavers and other poor class people, will this Government consider the question of stopping construction of

houses for higher income groups and upper-middle income groups for the present, so that the entire resources can be diverted for the construction of houses for poor and lower classes of people?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** வசதிபடைத்தவர்களுக்காக கட்டப்படும் வீடுகள் கட்டுவதை நிறுத்திவிட்டு, அந்தப் பணத்தையும் சேர்த்து ஏழைகளுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்படுமா என்று கேட்கிறார்கள். அது தேவையில்லை. வசதி படைத்தவர்களுக்குக் கட்டிக்கொடுக்கும்போது அதிகப்பணம் வசூலிக்கிறோம். அந்த அதிகப்பணத்தைக்கொண்டு ஏழைகளுக்கு குறைந்த விலையில் வீடு கட்டிக்கொடுக்க வசதியாக இருக்கும்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** தலைவர்களே, இப்போது கைத்தறித் துணிகளுக்கு ரிபேட் என்ற முறையில் நாம் உதவி செய்துவருகிறோம். இந்த ரிபேட் தொகையை நிறுத்தி வைத்துக் கொண்டு, அந்தத் தொகையைக் கொண்டு அந்தத் துணியை நெசவு செய்த நெசவாளிகளுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டத்தை அரசு பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** அதைப்பற்றித் தனிக் கேள்வி போடவும்.

**திரு. நா. வீராசாமி:** தலைவர்களே, நெசவாளர்களுக்கு 7.500 ரூபாயில் வீடு கட்டிக்கொடுக்கும் ஒரு திட்டம் பரிசீலனையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்தத் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா? குறிப்பாக நெசவாளர்களின் வீடுகள் அடிக்கடி தீப்பிடித்து விடுகின்றன. அண்மையில் எனது தொகுதியிலுள்ள திமிரி என்ற பகுதியில் 40 வீடுகள் எரிந்துவிட்டன. ஆகவே, அப்படிப்பட்ட இடங்களில் உடனடியாக, தீப்பிடிக்காத முறையில் இப்படிப்பட்ட வீடுகளைக் கட்டிக்கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** நெசவாளர்களுக்கு குறைந்த விலையில் வீடுகளை கட்ட வேண்டியிருக்கிறது. ஆகவே அங்காங்கே தயாராகக் கிடைக்கின்ற பொருட்களைக்கொண்டு வீடு கட்டிக்கொடுக்க வீட்டுவசதி வாரியம் முயற்சி செய்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், சேலத்தில் கருங்கல் தாராளமாகக் கிடைக்கிறது. அங்கே அந்த கருங்கல்லினால் வீடு



கட்டுவதில் செலவு குறைவு. அதேபோல் தஞ்சையில் கருங்கல் விலை அதிகம். செங்கல் விலை குறைவு. அதனால் அங்கே செங்கல்லினால் வீடு கட்டுவதில் செலவு குறைவு. ஒவ்வொரு இடத்திலும் எப்படிப்பட்ட வீடுகளைக் கட்டலாம் என்பதை பரிசீலனை செய்வதற்காக பொறியியல் வல்லுநர்களைக்கொண்டு மாதிரி வீடுகளைக் கட்டச் சொல்கிறோம். திருச்சி, சேலம், கோவை ஆகிய இடங்களில் மாதிரி வீடுகள் கட்டப்பட்டு, அவை அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கின்றன.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** இந்தத் திட்டம் ஏறத்தாழ 4, 5 ஆண்டு காலமாக பரிசீலனையில் இருந்தாலும், அதிலே எந்தவிதமான மாற்றமும் இல்லாமல் இருக்கிறது. குறிப்பாக, ரூளை பகுதியில் வீடு கட்டுவதற்கு மனு கொடுத்தார்கள். நிலம் ஆர்ஜிதம் செய்து, அந்த இடத்திலேயே வீடு கட்டித்தர ஏற்பாடு செய்வதாக அமைச்சரவர்கள் இந்த மன்றத்திலேயே வாக்குறுதி தந்தார்கள். அப்படி இருந்தும் ரூளை பகுதி மக்கள் கொடுத்த மனு என்னவாயிற்று என்று தெரியவில்லை. எனவே, அங்கே நிலம் ஆர்ஜிதம் செய்து, வீடு கட்டும் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** அதுபற்றிய குறிப்புகள் தற்போது என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் தக்க பதில் அளிக்கலாம்.

### *Construction of tenements in Visalakshi Amman Thottam area.*

*121 Q.—THIRU R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Labour be pleased to state:

(a) whether the construction of tenements at Visalakshi Amman Thottam, Mylapore, Madras have been completed by the Slum Clearance Board; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) இன்னும் முழுவதும் கட்டி முடிக்கப்படவில்லை.

(ஆ) இந்த இடத்தில் 622 குடியிருப்புகள் கட்ட குடிசைப் பகுதி மாற்று வாரியம் திட்டமிட்டிருக்கிறது. அவற்றில் 510 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு குடிசைவாழ் குடும்பங்

[1973 ஆகஸ்ட் 13

களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. 72 குடியிருப்புகளுக்கு கட்டிட வேலை நடந்துகொண்டிருக்கிறது. எஞ்சியுள்ள 40 குடியிருப்புகள் அதற்கு வேண்டிய நிலம் கிடைக்காததால் கட்ட முடியாமல் உள்ளது.

**திரு. ரா. ரா. முனுசாமி:** தலைவரவர்களே, இந்த விசாலாட்சி அம்மன் தோட்ட குடிசைப் பகுதியில், இப்போது கணக் கிட்டிருக்கிறபடி பார்த்தால் எல்லோருக்கும் அங்கே குடியிருக்க வசதி இல்லை என்று தெரிகிறது. ஆகவே, மீதி இருப்பவர்களுக்கும் அங்கே கட்டிக் கொடுக்கப்படுமா அல்லது அவர்களுக்கு வேறு இடத்தில் கட்டிக் கொடுக்கப்படுமா என்பதை அறிய ஆசைப் படுகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** அந்த இடத்தில் மேலும் 40 வீடுகள் கட்ட வேலை தொடங்கப்பட இருக்கிறது. ஆனால் அதிலே சில சிக்கல்கள் இருக்கின்றன. அங்கே போதுமான இடம் இல்லை. ஆகவே 40 வீடுகள் கட்டுவதற்கு என்ன செய்வது என்று குடிசைமாற்று வாரியம் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. ஏற்கெனவே 510 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. இப்போது 72 குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. மீதி 40 குடியிருப்புகள் கட்டுவதற்கு போதுமான இடவசதி இல்லை. அங்கே இருப்பவர்களும் மேற்கொண்டு கட்டுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். ஏனென்றால் மேலும் மாடி வீடுகளைக் கட்டினால் காற்று வசதி இருக்காது என்று சொல்கிறார்கள். ஆகவே, குடிசை மாற்று வாரியம் அதைப்பற்றி பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அங்கே கட்டியிருக்கின்ற வீடு களுக்கு எல்லாம் தனித்தனியாக குழாய் தண்ணீர் கிடைக்க வசதி செய்யப்பட்டிருக்கிறதா? ஏற்கெனவே கட்டப்பட்ட குடியிருப்புப் பகுதிகளில் வீட்டுக்கு வீடு குழாய் இல்லாமல் மொத்தமாக—மாடி யிலிருப்பவர்களும் கீழே வந்து தண்ணீர் எடுக்க வேண்டி யிருக்கிறது. ஆகவே, புதிதாகக் கட்டப்படும் குடியிருப்பு களிலாவது தனித்தனி குழாய் வசதி செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, தனித்தனி குழாய் வசதி இருக்கிறதா என்பதற்கு தகவல் இல்லை. தனிக் கேள்வி போடவும்.



1973 ஆகஸ்ட் 13]

**திரு. அ. ஆறுமுகம்:** குடிசைமாற்று வாரியம் நம்முடைய மாநகரில் மட்டும்தான் இருக்கிறது. கிராமப்புறங்களில் இல்லை. இந்த மாதிரியான திட்டம் கிராமப்புறத்திற்கும் வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆகவே, கிராமங்களுக்கும் இந்தத் திட்டம் பயன் படும் வகையில் விஸ்தரிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** குடிசைமாற்று வாரியம் மூலமாக கிராமங்களிலும் வீடு கட்டிக்கொடுக்க வேண்டுமென்ற திட்டம் இல்லை. கிராமங்களுக்கென சில வீடுகளைக் கட்டித்தர வேறு திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தத் திட்டங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**திரு. முனு ஆதி:** தலைவரவர்களே, ஏழைகளுக்கு வீடு கட்டிக்கொடுக்கிற திட்டம் சென்னையைச் சுற்றியுள்ள பெல்ட் ஏரியாக்களுக்கும் விரிவுபடுத்தப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தற்போது இல்லை.

**திரு. ரா. ரா. முனுசாமி:** தலைவரவர்களே, 1967-க்குப் பிறகு தமிழக அரசால் சென்னையிலே கட்டப்பட்ட வீடுகள் ஏராளமாக இருக்கின்றன. ஆனால் இதேபோல 1967-க்கு முன்னால் இருந்த ஆட்சியாளர்களால் சென்னையிலே வீடுகள் கட்டப்பட்டிருக் கின்றனவா அல்லது மற்ற ஏரியாக்களில் வீடு கட்டியிருக்கிறார் களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** அப்படிப்பட்ட தகவல் இல்லை.

**திரு. செ. கந்தப்பன்:** தலைவரவர்களே, குடிசைமாற்று வாரியத்தின் மூலமாக சென்னை நகரில் நல்லமுறையில் வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. இந்த வீடுகளுக்கெல்லாம் நியாயமான வாடகை இல்லாமல் குறைந்த வாடகையே வசூல் செய்யப்படு வதாகச் சொல்லப்படுகிறது. ஒவ்வொரு வீட்டுக்கும் நியாயமான வாடகை எவ்வளவு? அரசு அதிலே எவ்வளவு குறைத் திருக்கிறது?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** நியாயமான வாடகை 45 ரூபாய். ஆனால் அரசு வசூல் செய்வது 15 ரூபாய்.

[1973 ஆகஸ்ட் 13

**திரு. எஸ். நல்லசாமி :** தலைவரவர்களே, குடிசைமாற்று வாரியம் நகர்களில்தான் இருக்கிறது. கிராமப்புறங்களுக்குக் குடிசைமாற்றுவாரியத் திட்டத்தை விஸ்தரிக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை என்று சொன்னார்கள். அப்படியானால் ஜில்லாத் தலைநகர்களுக்கும், தாலுகா தலைநகர்களுக்குமாவது இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தமிழ்நாடு ஒன்றிலேதான் இந்தக் குடிசைமாற்று வாரியம் இருக்கிறது; மற்ற எந்த மாநிலங்களிலும் இல்லை. கிராமப்புறங்களுக்கு இப்போது இத்திட்டம் விரிவுபடுத்தப்பட இயலாது. ஆனால் மாவட்டத் தலைநகர்களுக்கு விஸ்தரிக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஒருசில மாவட்டத் தலைநகர்களில் இப்போது நடைமுறையில் இருக்கிறது.

### ஆலயங்களில் கவிதை அரங்கம்

* 122 **வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலயங்களில் கவிதை அரங்கம் நடத்தி கவிஞர்களுக்குப் பரிசளிக்கும் திட்டம் எதேனும் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** (அ) ஆம்.

(இ) மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக் கோயிலில் ஆவணி மூலத்தில் நடக்கும் திருவிழா ஒட்டி கவிதைப் போட்டி நடத்தி கவிஞர்களுக்குப் பரிசளிக்கும் ஒரு திட்டம் உருவாகி இருக்கிறது. இந்த ஆண்டு வருகிற ஆவணி மூலத் திருநாள் அன்று இந்த விழா முதல் முறையாக நடைபெற இருக்கிறது. கவிதைக்கு உரிய பொருள் ஏற்கனவே அறிவிக்கப் பட்டுள்ளது. கவிதை அனுப்பக் கடைசி தேதி 31—7—1973 ஆகும். சிறந்ததெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைக்கு 1,001 வெண்பொற் காசுகள் பொற்கிழிப் பரிசாக அளிக்கப்படும். ஆசிரியர் பாராட்டும் பெறுவர்.



1973 ஆகஸ்ட் 13]

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவரவர்களே, மதுரையிலே மட்டும் கவியரங்கம் நடப்பதாகச் சொன்னார்கள். இந்த சிறந்த திட்டத்தை தமிழ்நாட்டிலே இருக்கிற நிதிவசதி படைத்த எல்லா ஆலயங்களிலும் செயல்படுத்தி, கவிஞர் சமுதாயத்தை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரையில் முதலில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. பிறகு மற்ற ஆலயங்களிலும் இந்தத் திட்டத்தைப் புகுத்துவதைப்பற்றி யோசிக்கலாம்.

### *Incentives for production of honey.*

* 123 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the details of the incen-
tives provided in regard to the production of honey during 1971-72
and 1972-73 in this State ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** விவர அறிக்கை @ ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. என். டென்னிஸ் :** அவைமுன் வைக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கையில் அரிசன நல நிதியிலிருந்து தனி உதவி பெறும் ஐந்து மாவட்டங்களை கதர்-கிராமத் தொழில் வாரியம் தேர்ந்தெடுத்திருக்கிறது. ஆனால் அதிகமாக தேன் உற்பத்தி செய்கின்ற கன்னியாகுமரி மாவட்டம் அதில் இடம் பெறவில்லை. எனவே, இந்தத் தனித் திட்டத்தை கன்னியாகுமரி
மாவட்டத்திலும் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, இந்த தேன் சேகரிக்கின்ற திட்டம் எந்தெந்த முறையிலே நடத்தப் படுகிறது என்ற விபரம் இந்தக் குறிப்பில் கொடுக்கப்பட்டிருக் கிறது. கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தும் சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கலாம்.

---

ஆக அச்சிடப்
@ 277–280-ம் பக்கத்தில் இணைப்பு II
பட்டுள்ளது.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, [illegible] தேன் [illegible] செய்து [illegible] கூடு [illegible] தேன் [illegible] செய்யும் [illegible] திட்டத்தை [illegible] களை [illegible] செய்வார்களா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** [illegible] கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் சார்பில் தேன் வளர்ப்பாளர்களுக்கு [illegible] பயிற்சி [illegible], பாது காத்தல், [illegible] கதர்-கிராமத் தொழில் வாரியம் [illegible] விளக்கம் [illegible].

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, ஒவ்வொரு [illegible] இந்தத் திட்டத்தை [illegible] நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, [illegible] இந்த தேனீ வளர்ப்புப் பணியாளர்கள் பணியாற்றிக்கொண்டு வந்தார்கள். [illegible] சில நிர்வாகச் சிக்கல்கள் காரணமாக [illegible] முறையிலே பணியாற்றவில்லை என்ற கருத்தை [illegible]. அந்தப் பணியிலே இருந்த அவர்கள் [illegible] கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் சார்பிலே இப்பொழுது பணியாற்றிக்கொண்டு வருகிறார்கள். இந்த முறையைப் பின்பற்றி மேலும் விஸ்தரிப்பதற்கான வகையில் ஏற்பாடுகளைச் செய்யலாம்.





**திரு. ஆ. பரந்தாமன்:** தலைவர் அவர்களே, தேன் உற்பத்தித் [illegible] திட்டங்களில் 1972-73-ல் [illegible] திட்டங்களிலேயும் [illegible] காரணங்களைக் [illegible] குறைந்த உற்பத்தி [illegible] என்று கண்டறிந்து உற்பத்தியைப் பெருக்க [illegible] என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உறுப்பினரின் [illegible] (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட[illegible] என்பதைக் குறிக்கும்.]

## 5. ஒத்திவைப்புத் தீர்மானம்

### வயது வந்த பள்ளிக் குழந்தைகள் காணாமற் போவதாகப் பத்திரிகையில் வந்த செய்தி குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் 'That many teen-aged school children in Madurai and some places like Samayanallur were found to be missing or absconding during the last week. It appears that there seems to be several cases of lost children which has not been reported to the Police.' என்ற பொருள்பற்றி விவாதிக்க இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்ற ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது பற்றி அவையை ஒத்திவைத்து விவாதிக்கத் தக்க அளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பற்றி விளக்கம் அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

THIRUMATHI JOTHI VENCATACHELLUM: Sir, I have given notice of the following motion under Rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules: "The House do stand adjourned to discuss about an urgent matter of public importance, namely, that many teen-aged school children in Madurai and some place like Samayanallur were found to be missing or absconding

during the last week. It appears that there seems to be several cases of lost children which has not been reported to the Police." தலைவர் அவர்களே, பத்திரிகைகள் வாயிலாக இந்தச் செய்தியைப் பார்த்தது முதல் இந்த பல குழந்தைகள், அதிலும் வயதுவந்த குழந்தைகள் எல்லாம் பறக்கடி இப்பொழுது காணாமல் போவதைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். கிழக்கு மதுரையைச் சேர்ந்த போலீஸ் அதிகாரி அவர்களும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள், பல குழந்தைகள் போனது போலீசுக்குத் தகவல் இல்லாமல் இருக்கிறது என்று. இந்த பள்ளிகளுக்குச் செல்கின்ற குழந்தைகள் எப்படிக் காணாமல் போகின்றார்கள் என்று அந்தக் குழந்தைகளின் பெற்றோர்களுக்கு மிகவும் கவலை கொடுக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இந்தக் குழந்தைகளை யார் பிடிக்கிறார்கள்? பிள்ளை பிடிக்கின்றவர்கள் இன்னும் நடமாடிக் கொண்டிருக்கிறார்களா? இந்தக் குழந்தைகளைப் பிடித்து என்ன செய்கிறார்கள்? அவர்களை எதற்காகப் பயன்படுத்துகின்றார்கள்? பல பத்திரிகைகளிலே பார்க்கும்போது, 'ஸ்மக்ளிங்' செய்ய எல்லாம் இவர்களை உபயோகப்படுத்துகிறார்கள். அவர்கள் இந்தப் பிள்ளைகளைப் பிடித்துச்சென்று அவர்களுடைய கேங்கிலே சேர்த்து, தங்களுக்கு உபயோகப்படுத்துவதாகவும் பார்க்கிறோம். இந்தப் பிள்ளைகளினுடைய முக்கியத்துவத்தை அறிந்து பாதுகாப்பது, நம்முடைய கடமையை பொறுப்பு, அதிலும் மேலாக இருக்கிறது. அவர்களைக் கண்டுபிடிப்பதற்கு போலீஸ் அதிகாரிகள் என்ன முயற்சி எடுத்திருக்கிறார்கள்? அதற்கு ஆவன செய்ய வேண்டும். இப்படி பிள்ளைகள் காணாமல் போய்க்கொண்டே இருந்தால், ஒருபக்கத்திலே—ஒருபுறம் நாம் பாரதி விழாவிலே பிள்ளைகளைக் காத்து வைத்திருக்கிறோம்—மறுபுறம் இருக்கக்கூடிய குழந்தைகளும் காணாமல் போனால்—கஷ்டம் ஏற்படும். பல நகரங்களிலே ஒரே பிள்ளையாக இருக்கிற குழந்தைகளும் காணாமல் போயிருக்கின்றன என்ற தகவலும் வந்திருக்கிறது. அந்தப் பெற்றோர்களுடைய மனக் கஷ்டம் அதிகமாக இருக்கும். குழந்தைகள் காணாமல் போவதைத் தடுக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பல ஆண்டுகளுக்கு முன்பாக 'ஆலிவர் டுவிஸ்ட்' என்ற புத்தகத்தில் ஃபேகின் என்ற ஒருவன், இருந்த பிள்ளைகளைப் பிடித்துச் சென்று பிச்சையெடுக்கப் பயன்படுத்தின அளவிலே,





நம்முடைய தமிழ் நாட்டிலே வண்ணாரப்பேட்டையிலே செய்து கொண்டிருந்தார்கள். அப்படி யாராவது இருக்கிறார்களா? இந்தக் குழந்தைகள் எங்கு செல்கின்றன, எப்படிக் கொண்டு செல்கின்றார்கள், பள்ளிகளுக்குச் செல்கின்ற குழந்தைகளுக்குப் பாதுகாப்பு வேண்டுமென்ற முறையில் நடவடிக்கை எடுக்க, அந்த முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையைப் பற்றி விவாதிக்க அவையை ஒத்தி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைப் பற்றி நான் மாவட்ட ஆட்சித் தலைவர்களோடு உடனடியாகத் தொடர்பு கொண்டு அதுபற்றிய விவரங்களைத் தருமாறு கோரினேன். அதற்கு ஏற்ப இப்படி சில இடங்களிலே காணாமல் போய்விட்டதாகச் செய்தி வந்திருக்கிறது. ஆனால், அதுபற்றி புகார்கள் போலீசாருக்குத் தரப்படவில்லை. தஞ்சாவூரிலே உயர்நிலைப் பள்ளி மாணவன் ரவி சங்கர் என்ற மாணவன்—காணப்படவில்லையென்று குறிப்பிட்டதாகவும், ஆனால் இதுவரையிலே எந்தப் புகாரும் போலீசுக்கு வரவில்லையென்றும் அங்கிருந்து செய்தி வந்துள்ளது.

அதைப் போல், தஞ்சை சரபோஜி கல்லூரி பேராசிரியர் ஒருவரின் மகன் காணாமல் போய் மீட்கப்பட்டதாகத் தகவல் வந்திருக்கிறது. அதுபற்றியும் போலீசுக்குத் தகவல் இல்லை.

தஞ்சை ஜெயராஜ்புரா நகரில் இரண்டு பெண்கள் காணாமல் போனதாகக் கூறப்படுகிறது. ஆனால், அதுபற்றியும் இதுவரையிலே எந்தவிதமான புகாரும் போலீசுக்கு வரவில்லை.

இதுபற்றி ஒரு தீர்மானம் வந்தபிறகு அவர்களாகப் புகார் கொடுக்காவிட்டாலும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் அங்குள்ள காவல் துறையினர் மூலமாக அதுபற்றி விசாரணை நடத்துவதாகக் கூறி இருக்கிறார்கள்.

மதுரையைப் பொறுத்தவரையிலே, மதுரையைச் சேர்ந்த சீனிவாச ஐயரின் 15 வயது மகன் ரெங்கராஜன் என்பவன் 2—8—1973 முதல் 9—8—1973 வரை ஒருவார காலத்திற்குக் காணாமல் போயிருந்தான். அவன் கண்டுபிடிக்கப்பட்டு அவனுடைய சகோதரிடம் ஒப்படைக்கப்பட்டான். இந்தப்

[illegible] செய்தி. இவன் [illegible] காணாமல் போயிருக்கிறான். [illegible] என்பது தான். [illegible] இருக்கலாம் [illegible] இல்லாமல், இவை [illegible] இருந்தாலும், [illegible] இருந்தாலும் [illegible] காவல் [illegible]. ஆகவே, அந்த [illegible] இதை [illegible] அவசியம் இல்லையென்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் [illegible] இந்த அவையை [illegible] வைத்து இப்போது அதுகுறித்து விவாதிக்கத் தேவையில்லையென்று கருதுகிறேன்.

அடுத்து, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் ஒரு தீர்மானம் கொண்டு வருவார்கள்.

## (4) அரசினர் தீர்மானம்

### விதி 41 (3)-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, [illegible] பேரவை விதி 244-ன் கீழ் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"விதி 41 (3)-ன்படி, ஒரே கூட்டத்தில் இரண்டிற்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டுவரக் கூடாது என்பதை இன்று தளர்த்த வேண்டும்."

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.



## (5) கவன ஈர்ப்பு

### (அ) 1973 ஜூலை திங்களில் சென்னை நகரில் பரவிய காலரா நோய் குறித்தும் அதனால் ஏற்பட்ட உயிரிழப்பு குறித்தும்.

THIRU N. DENNIS : Sir, I wish to call the attention of the Hon. Minister for Health to an urgent matter of public importance, namely, the outbreak of Cholera in Madras City during July 1973 and the number of loss of life on this account.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் 1973, ஜூலையில் இராயபுரம், தண்டையார்பேட்டை, திருவல்லிக்கேணி பகுதிகளைச் சேர்ந்த வட்டம் 2 முதல் 4 வரையிலான மாநகர வட்டங்களில் காலரா பரவியது. அது குறிப்பிட்ட இடத்தில் மட்டுமே நிலவியது; பெருவாரியாக வளர்ந்து பரவவில்லை. அந்நோயை எதிர்த்துப் போராடும் வகையில் சென்னை மாநகராட்சி தடுப்பு நடவடிக்கைகளை முனைப்பாக மேற்கொண்டதனால் இந்நோய் கடும் கொள்ளை நோயாகப் பரவவில்லை.

14—7—1973 ஆம் நாளுடன் முடிவடைந்த வாரத்தில் காலராவால் பாதிக்கப்பட்டவர்கள் இல்லையென அறிவிக்கப் பட்டது. ஆனால், அடுத்த வார இறுதியில் காலரா நோயால் பலர் பாதிக்கப்பட்டனர் என்று தெரிந்தது. அந்த வாரத்தில் 227 பேர் காலராவினால் பிடிக்கப்பட்டனர். ஆய்வுக்கூடப் பரிசோதனைகளில் மலப்பரிசோதனைகள் மூலம் இது காலராதான் என்று முடிவு செய்யப்பட்டது. அவர்களில் இருவர் இறந்து விட்டனர். இந்த 227 பேரில், 93 பேர் மாநகரப் பகுதிக்கு அப்பாற்பட்ட பகுதியிலிருந்து அதாவது திருவொற்றியூர் பகுதியிலிருந்து, காலரா நோயால் பாதிக்கப்பட்டவர் என்று அறிவிக்கப்பட்டவர்கள். அவர்கள் தண்டையார்பேட்டையில் உள்ள, சென்னை மாநகராட்சியைச் சேர்ந்த தொத்துநோய் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

முன்னர் கூறப்பட்டவாறு, காலரா நோயை எதிர்த்துப் போராட தடுப்பு நடவடிக்கைகள் முனைப்பாக மேற்கொள்ளப் பட்டன. கிடைக்கக்கூடிய மருத்துவ, தடுப்பு வசதிகள் அனைத்தும் ஒருங்கு திரட்டப்பட்டு, காலரா கொள்ளை நோயாக பரவுமோ என்ற அச்ச நிலையை எதிர்த்துப் போராடுவதில் உயரளவு சக்தி பயன்படுத்தப்பட்டது. குறிப்பிட்ட இடத்தில்

[திரு. க. அன்பழகன்] [1973 ஆகஸ்ட் 13

நோய் பரவியதற்குக் காரணமான கூறுகள், நோய் பரவியதில் மேற்பாடு ஆகியவை மிக விரைவாக ஆய்வு செய்யப்பட்டுப் பின்வரும் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

(1) குடிநீர்ப் பெருங்குழாய்களோடு சாக்கடைக் கழிவுநீர் கலந்து குடிநீர் தூய்மை கெட்டிருக்கக்கூடும் என்று சந்தேகப் பட்ட இடங்களில் அத்தகைய பெருங்குழாய்களை மூடிவிட்டு, அப்பகுதிகளில் வாழும் மக்களுக்கு குடிநீர் வழங்க மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கசிப்பணிகள் இடத்திலும், துணை உந்து கருவிகள் உள்ள இடத்திலும் குடிநீரில் கணிசமான அளவு குளோரின் கலக்கப்பட்டது.

மாநகரத்தில் உள்ள குடிநீர்ப் பெருங்குழாய்கள் யாவும் துப்புரவு செய்யப்பட்டன. மாநகரத்தில் உள்ள பொதுமக்கள் கழிப்பிடங்களைச் சேர்ந்த நீர்க் குழாய்களில் பலனளிக்கக்கூடிய வகையில் குளோரின் கலக்கப்பட்டது. குடிநீர்ப் பெருங்குழாய்களுக்கு நீர் வழங்கும் பொதுக் கிணறுகள் அனைத்திலும் அதிக அளவு குளோரின் கலக்கப்பட்டது. பள்ளங்களில் உள்ள குடிநீர்க் குழாய்கள் யாவும் நீர் தூய்மை கெடும் வாய்ப்பில்லாமல் தடுப்பதற்காக மூடப்பட்டன.

பெருமளவு எச்சரிக்கை நடவடிக்கையாக, நீர்வழங்கப்படும் பல்வேறு மட்டங்களிலிருந்தும் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் தண்ணீர் மாதிரிகள் எடுக்கப்பட்டு, குளோரின் எஞ்சியுள்ளதா என்பதையும் நுண்கிருமிகள் பரவியுள்ளனவா என்பதையும் காணும்பொருட்டுச் சோதனைகள் செய்யப்பட்டன.

நீரில் கிருமிகள் கலந்து பரவவில்லை. எங்கெங்கு மாதிரி நீரில் கிருமிகள் கலந்துள்ளதாக அறியப்பட்டதோ அங்கெல்லாம் நீர் வெளியேற்றப்பட்டு மேலும் கூடுதலாக குளோரின் கலக்கப் பட்டது.

(2) காலரா தடுப்பு ஊசிகள் ஏராளமானவர்களுக்குப் போடப்பட்டன. சென்னை மாநகரில் உள்ள 61 மாநகராட்சி மருந்தகங்களிலும் தடுப்பு ஊசி போடுவதற்கான வசதிகள் செய்யப்பட்டன. காலரா நோய்த் தடுப்பூசி போடுவதில், ஏறத்தாழ 130 துப்புரவு ஆய்வாளர்களும் மருந்தகங்கள், தாய் சேய் நலத்திட்டங்கள், குடும்பநலத் திட்டங்களில்



1973 ஆகஸ்ட் 13] [திரு. க. அன்பழகன்]

பணியாற்றும் எல்லா மருத்துவ அதிகாரிகளும் ஆகியோரும் ஈடுபடுத்தப்பட்டனர். இதோடு கூட பொறுப்பிலுள்ள மருத்துவ அதிகாரி ஒருவருடன் கூடிய விரைந்து செயல்படும் இயல்படை (மொபைல் யூனிட்) ஒன்றும் அவசரகால காலரா தடுப்பு ஊசி போடும் பணியைக் கவனித்து வருகிறது.

காலரா தடுப்பு ஊசி போடுவதற்காக, சுகாதாரப் பணிகள் குடும்பநலத் திட்டத் துறையின் சுகாதார ஆய்வாளர்கள் 8 பேருடைய பணிகளும் மாநகராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளன.

காலரா பரவிய தொடக்கக் காலத்தில் நாளொன்றுக்கு போடப்பட்ட சராசரி தடுப்பு ஊசிகளின் எண்ணிக்கை 3,000 ஆகும். ஆனால், நோய் பரவுவது அதிகரித்தபோது நாளொன்றுக்கு போடப்பட்ட ஊசிகளின் எண்ணிக்கை 15,000 ஆகியது. மேலும், பல்வேறு கல்வி நிறுவனங்கள், தொழிற்சாலைகள், அரசு அலுவலகங்கள், உணவகங்கள், உரிமம் வழங்கத்தக்க வர்த்தக இடங்கள், ஏனைய பெரிய நிறுவனங்கள் ஆகியவற்றில் காலரா தடுப்பு ஊசி போடுவதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. இவ்வாறாக, 1973-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் மொத்தம் 1,99,526 காலரா தடுப்பு ஊசிகள் போடப் பட்டன.

(3) துப்புரவுப் பணி முனைப்பாக்கப்பட்டதோடு, வகை தொகையற்று குப்பை கூளங்களைக் கொட்டிவைப்பது தவிர்க்கப் பட்டது.

(4) ஈக்களை ஒழிப்பது குறித்த நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. அங்காடிகள், குப்பை கூளங்களைக் கொட்டி வைக்கும் திடல்கள், பொது மலஜலக் கழிப்பிடங்கள், உணவு நிறுவனங்கள் ஆகிய அனைத்திலும் ஈக்களை ஒழிப்பதற்கு சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது. ஈக்களை ஒழிக்கும் பணியில் நாளொன்றுக்கு 200 தெளிப்பான்கள் பயன்படுத்தப்பட்டன. சராசரியாக 4,000 லிட்டர் கிருமி நாசினி மருந்து பயன்படுத்தப் பட்டது. நாளொன்றுக்கு, கிருமிகள் வளரும் பகுதியில், சுமார் 2 லட்சம் சதுர மீட்டரில் கிருமி நாசினி தெளிக்கப்பட்டது.

(5) நோய் பரவியுள்ள இல்லங்களிலும் நோய் எளிதில் பரவக் கூடிய ஏனையப் பகுதிகளிலும் நோய்த் தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஜீப் ஒன்று, துப்புரவு ஆய்வாளர் இருவர்,

[திரு. க. அன்பழகன்] [1973 ஆகஸ்ட் 13

நோய்த் தடுப்புத் தொழிலாளிகள் 4 பேர் ஆகியோருடன் கூடிய நோய்த் தடுப்பு இயக்க படை ஒன்று, தண்டையார்பேட்டையில் உள்ள மாநகராட்சி மருத்துவ மனையில் நிறுத்தப்பட்டுள்ளது. இப்படை, நோய் பரவியுள்ள இடங்களில் நோய்த் தடுப்புப் பணியைக் கவனிப்பதோடு, நோயால் பீடிக்கப்பட்டோர் குறித்து மாலை 5.00 மணியிலிருந்து அடுத்த நாள் காலை 8 மணி வரை நோய்கண்டவர்கள் வருவதைக் கொண்டு அவர்களுடன் தொடர்பு உள்ளவர்களுக்கு ஊசிபோடும் பணியையும் கவனித்து வருகிறது.

(6) சுகாதார நலக்கேட்டை விளைவிக்கும் உணவுப் பொருட்கள் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் பாதிக்கப்படும் வகையில் வைக்கப்படும். அழுகிப்போன பழங்கள் ஆகியவற்றை அழிப்பதற்காக, முறையாக தொடர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. தேவையான போலீஸ் காவல் துறையின் உதவியும் பெறப்பட்டது. அதுபோன்ற சோதனைகளில், நாள்தோறும், தொழிலாளர்களுடன் கூடிய 5 லாரிகளும், 4 தொழிலாளர்களுடன் கூடிய ஊர்தி ஒன்றும் தொடர் சோதனைக்காக பயன்படுத்தப்படுகின்றன.

(7) தற்போதுள்ள நிலைமையின் தேவையைச் சரிக்கட்ட தண்டையார்பேட்டையில் உள்ள மாநகராட்சி மருத்துவ மனையிலுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது.

உடனடியாக எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகளால், நோய் ஏற்படும் நேர்வுகளின் எண்ணிக்கை குறைந்து வந்ததென்று உறுதியாகத் தெரிகிறது. 28—7—73-ஆம் நாளோடு முடிவடையும் வாரத்தில் நோயுற்றோரின் எண்ணிக்கை 91 தான். 30—7—73-ஆம் நாள் தெரிவிக்கப்பட்ட நோயுற்றோரின் எண்ணிக்கை 22 ஆக இருந்த 31—7—73 ஆம் நாள் 20 ஆக இருந்தது. மிகக் குறைந்த காலத்திற்குள் காலரா காணப்படுவது குறைந்துள்ளது என்பது எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகளைத் திறம்படச் செய்வதற்கான சான்றாகும். மரணமடைந்தோரின் விகிதம், அதாவது, நோய்கண்ட 100 பேரில் இறந்தோரின் எண்ணிக்கை நோய் பரவிய காலத்தில் சாதாரணமாக ஏற்படக்கூடிய



1973 ஆகஸ்ட் 13] [திரு. க. அன்பழகன்]

எண்ணிக்கைக்கு மிகக் குறைவானதாக இருந்தது. 1973-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் இந்த விகிதம் 0.59 சதவீதமாக இருந்தது. ஒரு விழுக்காட்டிற்கும் குறைவு.

டெல்லியிலுள்ள தேசிய தொற்றுநோய் தடுப்பு நிலைய இயக்குநரால் சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்பட்ட மிகக் குறுகிய காலத்தில் அதிகம் பேருக்கு ஊசிபோடும் திறனுடைய ஊசி போடும் கருவியை ( Jet inoculator ) பயன்படுத்தக் கருதப்பட்டிருக்கிறது என்பதை இங்கே குறிப்பிடலாம். அண்மையில் அந்தக் கருவி பெறப்பட்டு பயன்படுத்தப்படுகிறது.

இந்நோய் குறைந்து வருவதற்கான அறிகுறிகள் காணப்படினும் மேற்கொண்டும் எதும் பீதி உண்டாக்காமல் இந்நோய் அடங்கிவிட்ட போதிலும், சென்னை மாநகராட்சி தாம் எடுத்த நடவடிக்கைகள் போதுமென்று இருந்துவிடாமல், காலரா நோய் திரும்பவராது என்பதையும், மேற்கொண்டும் அபாயகரமான நிலை இருக்கக்கூடாது என்பதையும் உறுதி செய்வதற்காக, மேற்கூறிய தடுப்பு நடவடிக்கைகள் அனைத்தையும் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது.

THIRU N. DENNIS: Sir, it is complained that hygienic conditions are not improved proportionate to the increase of population and mass vaccination and check on water pollution are not effectively done. May I know whether the Government are aware that the outbreak is due to failure to take effective steps in time?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, இந்த காலராவுக்கு உட்பட்ட பகுதிகளைப் பொறுத்தவரையில் எந்த அளவிற்கு அதிகக் கவனம் செலுத்த வேண்டுமோ அந்த அளவிற்கு உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு காலரா மேலும் பரவாமல் தடுக்கப்படுகிற முயற்சி தீவிரமடைந்து இருப்பது உண்மைதான். ஆனால் மற்றப் பகுதிகளிலும் இதற்கான முன்னேற்பாடுகள் எல்லாப் பகுதிகளிலும் ஒரே நேரத்திலே செய்யப்படுவதிலே காலதாமதம் இருக்கலாம். ஆனாலும் தொடர்ந்து அதற்கான முன்னேற்பாடுகள் எல்லாப் பகுதிகளிலும் செய்யப்படுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். குடிநீர்க்

[திரு. க. அன்பழகன்] [1973 ஆகஸ்ட் 13

குழாய்கள் அடைப்பட்டிருந்ததன் காரணமாக பலிகள் ஏற்பட்டு அதன் காரணமாக அந்த நோய்க் கிருமிகளை மக்களிடத்திலே பரப்பக் கூடிய காரியத்தை செய்து கொண்டிருக்கின்ற பாதகமான நிலையைத் தடுக்க தேவையான முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அந்த அளவிற்கு ஒரு மாநகராட்சி மன்றம் நலத்துறையின் அலுவலர்களையும் ஒத்துழைப்போடு இந்த காலராவைத் தடுப்பதற்கான முயற்சியிலே விரைவாக ஈடுபட வேண்டுமோ அந்த அளவிற்கு விரைவாகச் செயலாற்றி வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மக்கள் தொகை வளர்ச்சிக்கேற்ப பொதுவாகவே நம்முடைய பணிகள் நூறு சதவிகிதம் நடைபெறும் என்று சொல்லிவிட முடியாது. ஒரு பெரிய மாநகராட்சியில் மக்கள் தொகை மிக வேகமாக வளரக் கூடிய நிலையிலே இருக்கின்ற நிலையில் எடுக்கப்படக்கூடிய முயற்சிகளில் குறைபாடுகள் இருக்கலாம். ஆனால் விரைவிலே அதை எல்லாம் திருத்துவதற்கான முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(ஆ) செயற்கைப் பட்டுநூல், ரேயான் ஆகியவற்றின் விலை உயர்வு காரணமாக, கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப் பட்டிருப்பதும், அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதும் குறித்து.**

**திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி:** தலைவர் அவர்களே, பேரவையின் 41-வது விதியின்படி செயற்கைப் பட்டு நூல், ரேயான் நூல் ஆகியவற்றின் விலை பன்மடங்காக உயர்ந்து விட்டதால், கைத்தறித் தொழிலில் மந்தநிலை ஏற்பட்டதன் காரணமாக கைத்தறி நெசவாளர்களுக்குக் குறிப்பாக, அருப்புக்கோட்டையில் உள்ள சுமார் 200 குடும்பங்களைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு வேலையில்லாமல் பட்டினி கிடக்கும் நிலை ஏற்பட்டுள்ளதால் அவர்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்க வேண்டியதுபற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.



1973 ஆகஸ்ட் 13]

(6) நடைமுறைக் கேள்விகள்.

**(அ) கவன ஈர்ப்பு, ஒத்திவைப்புத தீர்மானங்களை பலர் கொடுத்திருந்தும் ஒரு சிலருக்கே அவற்றைக் கொண்டுவர அனுமதி அளிக்கப்படுவதுகுறித்து.**

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, on a point of order. We have also given some notices of call attention and adjournment motion. But only certain Members have been given the privilege of moving them and we are not given that privilege . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல. அதையெல்லாம் பேரவைத் தலைவர் அறையிலேதான் கேட்க வேண்டும், இங்கே கேட்கக் கூடாது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, when others have been given the privilege to move them, why should we be denied the privilege of moving them .........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதற்குப் பதில்கள் தயாராக இருந்திருந்தால் அவையிலே வைக்கப்பட்டிருக்கும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** நாங்களும் அப்படிப்பட்ட நோட்டீஸ் கொடுத்திருக்கிறோம், எங்களுடைய பெயரையும் பிராக்கட்டிலே போட்டிருக்கலாம்.

(5) கவன ஈர்ப்பு (தொடர்ச்சி).

**(ஆ) செயற்கைப் பட்டு நூல், ரேயான் நூல் ஆகியவற்றின் விலை உயர்வு காரணமாக, கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப் பட்டிருப்பதும், அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதும் குறித்து.**

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** 1973, பிப்ரவரி முதல் அரசு 75 சதவிகிதம் மின்வெட்டு கொண்டுவர வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டதன் காரணமாக பருத்தி நூல் உற்பத்தி வெகுவாகக் குறைந்தது. அதன் விளைவாக, நூல் பற்றாக்குறை கடுமையாக ஏற்பட்டது. இம்மாநிலத்திலுள்ள நெசவாளர்கள் தங்களுக்குத் தேவையான நூலை முழு அளவில் பெற முடியவில்லை. அதனால், அவர்கள் முழு வேலைவாய்ப்புப் பெற இயலவில்லை. இதன்

[திரு. செ. மாதவன்] [1973 ஆகஸ்ட் 13

விளைவாக, பாவுபோடுதல், கஞ்சியிடுதல், சாயம் தோய்த்தல் ஆகிய துணைத் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களும் முழு அளவு வேலை வாய்ப்பைப் பெற முடியவில்லை. நூல் பற்றாக்குறையினால் அருப்புக்கோட்டை பகுதியிலுள்ள பாவு போடுவோருங்கூட, முழு அளவு வேலைவாய்ப்பு இல்லாமல் இருந்திருப்பர். எனினும், மார்ச் முதல் ஜூன் இறுதி வரையில் அருப்புக்கோட்டை வட்டத்திற்கு 838 நூல் பொதிகள் ஒதுக்கப்பட்டன. இதனால் அப்பகுதியிலுள்ள கைத்தறி நெசவாளர்களின் தேவையில் 50 சதவிகிதம் நிறைவு செய்யப்பட்டிருக்கும்.

இம்மாநிலத்தில் இப்போது மின்வெட்டு முழுமையாக நீக்கப்பட்டுள்ளதால் நூல் உற்பத்தி அளவு உயர்ந்துள்ளது. தற்போது அருப்புக்கோட்டையிலுள்ள நெசவாளர்கள் போதுமான அளவு நூலைப் பெற முடியும். அதனால் பாவு போடுவோருக்கும் போதுமான வேலைவாய்ப்பு கிடைக்கும். பொதுவாக நமது மாநிலம் நூல் உற்பத்தியில் உபரி மாநிலமாகும். ஆங்காங்கு பரவியுள்ள கைத்தறிகளும், விசைத் தறிகளும் 40,000 நூல் பொதிகள் தேவையாக இருக்க 60,000 பொதிகள் நூல் உற்பத்தி செய்யப்படுகிறது.

மு. ப. 10–30 செயற்கைப்பட்டு, நார்ப்பட்டு நூல்களுக்கு சட்டப்படிக்கான கட்டுப்பாடு எதுவுமில்லை. அவை இறக்குமதியாளர்களும், ஆலைகளும் பயன்படுத்துவோரும் சேர்ந்து தாங்களாகவே செய்துகொண்ட உடன்பாட்டின்மூலம் இவை வழங்கப்படுகின்றன. ஆனால் இவற்றை ஒதுக்கீட்டின்படி கொடுப்பதில் ஆலைகள் அடிக்கடி தயக்கம் காட்டுகின்றன. மேலும், பல்வேறு மாநிலங்களில் மின்சார வெட்டினால் ஆலைகளின் நூல் உற்பத்தி தடைப்பட்டது. பல்வேறு மாநிலங்களில் மின்சார வெட்டு நீக்கப்பட்டதனால் நிலைமையில் முன்னேற்றம் ஏற்படத்தான் செய்யும். ஆனால், ஆலைகளுக்கு மூலப் பொருள்கள் வழங்கப்படுவதிலுள்ள நிலை தொடர்ந்து கவலையளிப்பதாயுள்ளது. எடுத்துக்காட்டாக, மோட்டிய மாநிலத்திலுள்ள சென்சுரி ரயான் ஆலை இந்நாட்டின் மொத்த ரயான் உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கை உற்பத்தி செய்கிறது. அது மூலப்பொருள் பற்றாக்குறையினால் தனது உற்பத்தித் திறனில் 30 சதவீதம்தான் தற்போது உற்பத்தி செய்கிறது.



1973 ஆகஸ்ட் 13] [திரு. செ. மாதவன்]

செயற்கைப் பட்டில் நமது தேவை திங்கள் ஒன்றுக்கு ஒவ்வொன்றும் 100 கிலோ கொண்ட 5,000 கட்டுகள் ஆகும். ஆனால், 1—1—1972-லிருந்து சராசரி திங்கள் ஒன்றுக்கு சுமார் 1,000 கட்டுகள் மட்டுமே நாம் பெற முடிந்தது.

நார்ப்பட்டைப் பொறுத்தவரை பொதுவாக நம் மாநிலத்திலுள்ள ஆலைகள் திங்கள் ஒன்றுக்கு ஒவ்வொன்றும் 200 கிலோ எடையுள்ள 15,900 பொதிகளை உற்பத்தி செய்கின்றன. இதில் நாம் பயன்படுத்துவது 12,000 பொதிகளே. தற்போது மின்சார வெட்டு நீக்கப்பட்டுள்ளதால், இயல்பான உற்பத்தி தொடங்கி நிலைமை சீராகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இம்மாநிலத்திலுள்ள கைத்தறிகள், விசைத்தறிகள் குறித்து முழுமையாகக் கணக்கெடுக்கப்பட்டு இந்த நூல்களையும் தறிகளின் எண்ணிக்கை அடிப்படையில் பங்கீடு செய்யுமாறு இந்திய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி :** தலைவரவர்களே, அருப்புக் கோட்டையிலே மட்டும் ஏறத்தாழ 12,000 தறிகள் இருக்கின்றன. அவைகளிலே சுமார் ஆயிரம் தறிகள்தான் நூல் மூலம் உற்பத்தி செய்யக்கூடியவை. மீதி இருப்பது, செயற்கைப்பட்டு, நார்ப் பட்டு ஆகியவற்றை உபயோகிப்பவை. எனவே, சுமார் 11,000 தறிகள் வேலையில்லாமல் இருக்கும் நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். செயற்கைப்பட்டு, நார்ப்பட்டு ஆகியவைகளுக்கு கார்டுகள்மூலம் கொடுத்துச் செய்வதைப்போல், தமிழ்நாட்டில் உள்ள இந்தத் தறிகளுக்கு வேண்டிய நூலையும் மொத்தமாக அரசாங்கமே கொள்முதல் செய்து, சொசைட்டிகள் மூலமோ அல்லது அவர்களது சங்கங்களின்மூலமோ கார்டுகள் மூலம் விநியோகம் செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, நம்முடைய அரசாங்கத்தின் கொள்கை, கைத்தறி சொந்தக்காரர்களுக்கு அவர்கள் உபயோகிக்கும் கன்ஸ்யூமர் என்ற முறையில் சென்சஸ் எடுத்து கார்டுகள் கொடுத்திருக்கிறோம். 'பருத்தி நூல், வேறு நூல்களில் மாநில அரசு இயந்திரங்களிடத்திலே ஒப்படைத்தால் நாங்கள் வழங்கத் தயாராக இருக்கிறோம் என்று மத்திய அரசிடத்தில் வற்புறுத்தியிருக்கிறோம். நேற்று காலையிலேகூட

முதலமைச்சரும் நானும் அந்த அமைச்சரிடத்திலே வற்புறுத்தினோம். இதிலே அந்தத் திட்டத்தை ஏற்காமல் "வாலண்டரி ஸ்கீம்" என்று ஆலை அதிபர்கள் சிலர் சேர்ந்து குழு அமைத்து அவர்கள் என்ன முடிவு செய்கிறார்களோ அதைத்தான் மத்திய அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது. நம் மாநிலத்திலே 'அசோசியேஷன்' என்ற முறையிலே இதைப் பயன்படுத்தி வியாபாரம் செய்பவர்களுக்கு இது கிடைக்கிறது. இதை மாற்ற வேண்டும், நம்முடைய இயந்திரங்களிலேயே இதை ஒப்படைக்க வேண்டுமென்று சொல்கிறோம். நம்முடைய மாநிலத்தின்மீது சந்தேகம் இருந்தால் மத்திய அரசாங்க அதிகாரிகள் பரிசீலித்து, யார் தறிகளை உண்மையாக உபயோகிக்கிறார்களோ அவர்களுக்குக் கொடுக்கும் திட்டத்திற்கு ஆதரவு கொடுக்க வேண்டுமென்று சொல்கிறோம். ஆனால் மத்திய அரசின் கருத்திலே, அப்படிக் கொடுக்கக்கூடாது, அசோசியேஷனுக்குத்தான் கொடுக்க வேண்டும், ஏராளமான தறிகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. அந்தத் தறிகள் வியாபாரிகள் குண்டுவிட்டுக் கொடுத்திருக்கிறார்கள். அதற்குப் பிறகும் அந்த வியாபாரிகளுக்கு நேரடியாகத் தருகிறார்களோ இல்லையோ, அதைப்பற்றிக் கவலையில்லை. ஆனால் மாநில அரசாங்கத்திலே சொந்தமான தறிகள் என்று யார் பதிவு செய்திருக்கிறார்களோ அவர்களுக்கு மாநில அரசாங்கத்தின் மூலம் கொடுக்க வேண்டும், எங்கள்மீது சந்தேகம் இருந்தால் உங்கள் அலுவலரையும் எங்கள் அலுவலகத்தில் வைத்துக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறோம். அதைப் பரிசீலிக்கிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள்.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி:** தலைவரவர்களே, அமைச்சர் அவர்களின் விளக்கத்தின் பிரகாரம் இப்பொழுது ஏற்கனவே இதிலே இருக்கும் வியாபாரிகள், 'அசோசியேஷன்'காரர்கள் இதிலே கொள்ளை லாபம் அடிக்கிறார்கள். தறியாளர்களுக்குச் சேர வேண்டிய பணத்தையெல்லாம் இந்த வியாபாரிகளும் அசோசியேஷன்காரர்களும்—'போகஸ் அசோசியேஷன்'களும் இருக்கின்றன—பெற்றிருக்கிறார்கள். மத்திய அரசு இந்த நிலையைச் சரியாக உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை. உண்மை நிலை என்ன என்பதைச் சரியாகப் புரிந்துகொள்ளாத நிலையிலே



இருக்கிறார்களோ என்ற சந்தேகம் இருக்கிறது. ஆகவே, வேறு எந்த மாநிலங்கள் எப்படியிருந்தாலும், நம்முடைய தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் நமக்குத் தேவையானவற்றை நம்முடைய அரசிடம் கொடுப்பதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்று கவனிக்க வேண்டும். அதைப்போல அருப்புக்கோட்டையில் 200 குடும்பங்களுக்கு மேல் பாவு போடுபவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தக் கைத்தறி தொழிலிலே இடைஞ்சல் வரும்பொழுது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விளக்கத்திற்கு ஏதாவது கேள்வி கேட்க வேண்டுமே தவிர புதிதாகக் கருத்து சொல்ல முடியாது.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி:** அமைச்சருடைய பதிலில் இருந்த கருத்தைப்படிதான் கூறுகிறேன். இரண்டு கால் அட்டென்ஷன் நோட்டீஸ் கொடுத்திருந்தேன். அந்த இரண்டையும் ஒன்றாகச் சேர்த்துக் கொண்டுவந்துவிட்டார்கள். எனவே, அதையும் கேட்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறேன்.

பாவு போடுகின்ற அவர்களுக்கு ஏதாவது நிவாரணம் செய்தால் தான் அந்த 200 குடும்பங்களும் பிழைக்க வழி ஏற்படும். இந்த அரசாங்கம் பரிசீலித்து, அவர்களுடைய கோரிக்கைகளிலே எதை ஏற்க முடியுமோ அதை ஏற்று உடனடியாகச் செய்ய முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** பாவு போடுபவர்கள், உண்மையிலேயே தறிகளிலே நெய்பவர்கள் என்ற சிக்கலிலே அவர்களுக்குக் கொடுப்பதா அல்லது இவர்களுக்குக் கொடுப்பதா என்பதில் நூல் பற்றாக்குறை இல்லாததால் அந்தப் பிரச்னை எழாது.

மத்திய அரசு புரிந்து கொண்டிருக்கிறதா என்று கேட்டார்கள். நானே அந்த அமைச்சரிடத்தில் டெல்லியிலேயும் விரிவாகப் பேசினேன். நேற்றும் முதலமைச்சரவர்களுடைய வீட்டிலேயும் பேசினோம். அவர்களால் புரிந்துகொள்ள முடியாது என்று நான் கருதவில்லை. ஆனால் அவர்களாலே நிறைவேற்ற முடியுமா என்று தான் சந்தேகமாக இருக்கிறது.

[1973 ஆகஸ்ட் 13

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: தலைவரவர்களே, . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு கேள்விகளுக்கு மேல் கொடுப்பதில்லை. ஒன்று அல்லது இரண்டுதான் கேட்க வேண்டும். மேலும் கேட்க அனுமதி கொடுத்தால் அது முன்மாதிரியாக வந்துவிடும்.

## (இ) சென்னை மாநகராட்சித் தேர்தலைக் காலவரம்பின்றி தள்ளிப் போடுவது குறித்து

THIRU N. DENNIS: Sir, I call the attention of the Hon. Minister for Local Administration to a matter of urgent public importance namely, the indefinite postponement of the elections to the Madras City Corporation.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவரவர்களே, 1971 ஆம் ஆண்டின், சென்னை மாநகராட்சி மற்றும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தமும் பதவிக்கால நீடிப்பும்) சட்டத்தின் (சட்டம் எண். 22/71) 39-வது பிரிவின்படி, சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் 1—11—1973 வரை நீடிக்கப்பட்டுள்ளது. எனவே, தற்போதுள்ள சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் 31—10—1973-ல் முடிவடைகிறது.

சென்னை மாநகராட்சி மன்றம் தீர்மானித்தபடி, சட்டம் எண். 7/73-ல், சென்னை நகரின் கோட்டங்களின் எண்ணிக்கை 120-ல் இருந்து 150 ஆக உயர்த்தப்பட்டது. கோட்டங்களின் எல்லை வரையறை விஷயங்களை 12 உறுப்பினர்களைக் கொண்ட சிறப்புக் குழுவின் மூலமாக மன்றத்திற்கு வைக்கப்பட வேண்டும் என்றும் மாநகராட்சி மன்றம் தீர்மானித்தது. இத்தீர்மானத்தை அரசு அங்கீகரித்தது. கோட்டங்களின் எல்லைகளை மாற்றியமைக்கும் வரைவுத் திட்டத்தையும், வாக்காளர் பட்டியலைத் திருத்தியமைக்கும் வேலையையும் குறித்த காலத்திற்குள் முடித்து, தேர்தலை அக்டோபர் 73-ல் நடத்த வகை செய்யுமாறு அரசு மாநகராட்சி ஆணையரை கேட்டுக்கொண்டது. மின்சார வெட்டின்



1973 ஆகஸ்ட் 13] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

காரணமாக வாக்காளர் பட்டியலை அச்சிடும் வேலை இன்னும் முடிவுறவில்லை என்று மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும், கோட்டங்களின் எல்லைகளை வரையறை செய்யும் வேலையும் இன்னும் முடியவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

சென்னை நகர்ப்புறங்களையும், வில்லிவாக்கம் பேரூராட்சியையும் சென்னை நகருடன் சேர்க்கும் கருத்துருவும் அரசின் பரிசீலனையில் உள்ளது. இதுகுறித்து சென்னை மாநகராட்சி மன்றத்தின் கருத்து கேட்கப்பட்டுள்ளது. மன்றத்தின் கருத்து இன்னும் அரசுக்கு வரவில்லை.

தற்போது, மாநகராட்சித் தேர்தலைத் தள்ளி வைக்கும் எண்ணம் அரசு தரப்பில் இல்லை. வாக்காளர் பட்டியலை அச்சிடும் வேலை முடிந்ததும், கோட்டங்களின் எல்லைகளைத் திருத்தியமைக்கும் வரைவுத் திட்டம் மாநகராட்சி ஆணையரால் அரசுக்கு அனுப்பப்படும். கோட்டங்களின் எல்லைகளைத் திருத்தியமைக்கும் வரைவு திட்டமும், மாநகராட்சியோடு சில பகுதிகளை இணைக்கும் கருத்துருமீது மாநகர மன்றத்தின் கருத்தும், அரசுக்குக் கிடைத்த பின்பு, இதுபற்றி அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும்.

**திரு. என். டென்னிஸ்:** தலைவர் அவர்களே, இதே தேர்தல் கால தாமதமின்றி நடத்தப்படும் என்று இந்தச் சட்டப் பேரவையிலேயே கூறப்பட்டது. மாநில அதிகார வரம்பிலேயுள்ள தேர்தல் இது. டீ-லிமிடேஷன் செய்வது, வாக்காளர் பட்டியல் தயாரிப்பது ஆகியவை வேகமாக நடக்கவில்லை என்பதை அரசு அறியுமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** 120 கோட்டங்களை 150 ஆகப் பிரிப்பதற்கான திட்டங்களுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து, அது மீண்டும் அனுப்பப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகுதான் செய்யப்படும். எனவே, மாநில அதிகாரத்திற்கு உட்பட்டதாக இருந்தாலும், அவசர அவசியத்தை உத்தேசித்து அதை நீட்டிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஈ) லெவி சர்க்கரை, கூட்டுறவு பண்டகசாலைகளின் மூலமே விநியோகிக்கப்படும் என்ற அரசின் உத்திரவு காரணமாக கூட்டுறவு பண்டகசாலைகள் இல்லாத இடங்களில் உள்ள மக்களுக்கு ஏற்படுகிற இன்னல் குறித்து

THIRU V. M. ABDUL JABBAR : Sir, I wish to call the attention of the Hon. Minister for Agriculture and Co-operation to a matter of urgent public importance, namely, the hardship caused to the people residing in areas where co-operative stores are not in existence in view of the Government Order permitting only co-operative institutions to stock and distribute sugar to the public, and depriving the public residing in areas where the Co-operative Societies are not in existence.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** லெவி சர்க்கரை விநியோகிக்க வியாபாரிகளை நியமிக்கும்போது கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கு முதலிடம் அளிக்குமாறு மாநில அரசு மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கேட்டுக்கொண்டது. மேலும் கூட்டுறவுப் பண்டகசாலைகள் இல்லாத ஊர்களிலும், கூட்டுறவுப் பண்டகசாலைகள் இருந்து அவை சரியான முறையில் இயங்காத ஊர்களிலும், மற்றும் கூட்டுறவுப் பண்டகசாலைகள் இருந்தும், அவை லெவி சர்க்கரை விநியோகப் பொறுப்பை ஏற்க மறுக்கும் இடங்களில் மட்டுமே தனிப்பட்ட வியாபாரிகளை லெவி சர்க்கரை விநியோகிக்க நியமிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கோரப்பட்டனர். சில இடங்களில் பஞ்சாயத்துக்களும் சர்க்கரை விநியோகப்பணி புரிந்து வருகின்றன. தமிழ்நாடு உணவுப்பொருள் வழங்கல் கழகம் இதுவரை சென்னையில் 15 மாதிரிக் கடைகளையும், மாநிலத்திலுள்ள இதர பெரிய நகரங்களில் 33 கடைகளையும், அண்மையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் 26 கடைகளையும் திறந்து லெவி சர்க்கரையையும் மற்றும் அத்தியாவசியமான உணவுப் பண்டங்களான அரிசி, கோதுமைப் பொருட்கள், பருப்பு வகைகள் போன்றவற்றையும் விநியோகம் செய்கிறது.

2. அரசால் ஏற்கெனவே ஆணையிடப்பட்டபடி கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கு லெவி சர்க்கரை மற்றும் இதர அத்தியாவசிய உணவுப்பொருள்கள் விநியோகத்தில் முதலிடம் முழு அளவில் **கொடுக்கப்பட்டுள்ளதா என்பதை சரிபார்த்து மறுபரிசீலனை**



செய்ய முடிவு செய்தது. மாவட்ட ஆட்சித்தலைவர்களை சில்லரைக் கடைகள் இயங்கும் எண்ணிக்கைகளையும் மற்றும் இன்னும் அதிக அளவில் கூட்டுறவுப் பிரிவுகளின் செயல்களை விரிவுபடுத்தவும் அந்த விரிவுபடுத்தப்பட்ட அளவிற்குத் தனிப்பட்ட சில்லரை வியாபாரிகளைக் குறைக்கவும் இயலுமா எனக் கேட்கப் பட்டுள்ளனர். அதே நேரத்தில் சர்க்கரை மாதத்தில் ஒரு நாள் மட்டுமே மக்கள் வாங்குகின்றனர் என்பதையும் ஆனால் அதே சமயத்தில் சில்லரைக் கடைகள் அதிக தூரத்தில் அமையாமலும் இருக்க வேண்டும் என்பதையும் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது. கூட்டுறவுப் பண்டகசாலைகளை அதிக தூரமுள்ள இடங்களுக்கு விநியோகம் செய்ய கிளைக்கடைகளை ஏற்படுத்துமாறு ஊக்கப் படுத்தப்பட்டுள்ளனர். இந்த நடவடிக்கைகள் எடுக்கக் காரணம், லெவி சர்க்கரை விநியோகத்தில் ஊழல்கள் உள்ளன என பரவலான குற்றச்சாட்டுக்களும், இத்தகைய ஊழல்கள் மிகுதியாகத் தனிப்பட்ட சில்லரை வியாபாரிகள்மீதும் வருவதேயாகும். சரியற்ற முறையில் இயங்கும் கூட்டுறவுப் பண்டகசாலைகளையும் நீக்கப்படவிருக்கின்றன. ஒவ்வொரு கூட்டுறவுப் பண்டகசாலையின் நிதிநிலையையும். திறமையையும் கருத்தில் கொண்டு, நிதி வசதி கொண்ட தரமான கூட்டுறவுப் பண்டகசாலைகள் மட்டுமே நியமிக்கப்படுகின்றன. லெவி சர்க்கரை சில்லரை விநியோகத்தில் சீர்திருத்தம் செய்ய எடுத்துக்கொள்ளப் பட்ட இப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தினால் சில்லரைக் கடைகளின் எண்ணிக்கை ஓரளவு குறையலாம். ஆனால் இதனால் மக்களுக்கு அசௌகரியம் ஏதும் நேரா வண்ணம் பாதுகாக்கப்படும்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலில், லெவி சர்க்கரையை கூட்டுறவு ஸ்டோர்ஸ் மூலமாகத்தான் கொடுக்கவேண்டும். தனிப்பட்டவர்கள் மூலமாகக் கொடுக்கக்கூடாது என்ற கருத்து தொனித்தது. திருச்சி மாவட்டத்தில் என்னுடைய தொகுதியில் பள்ளப்பட்டியில் பத்தாயிரம் மக்கட்தொகை இருந்துங்கூட, அங்கு ஒரு கூட்டுறவு ஸ்டோர் கூட இல்லாத காரணத்தால், கோஷாப் பெண்கள் நான்கு மைல் தூரத்திலுள்ள ஆண்டிப்பட்டிக்குச்

[திரு. வா. மை. அப்துல் ஜப்பார்] [1973 ஆகஸ்ட் 13

சென்றுதான் அரைக் கிலோ சர்க்கரை வாங்க வேண்டிய நிர்பந்தத்தை வட்ட ஆட்சித்தலைவர் ஏற்படுத்தி உள்ளார். ஆயிரம் பேர் மக்கட்தொகை உள்ள ஆண்டிப்பட்டியில் ஒரு கூட்டுறவு ஸ்டோர் இருக்கிறது. ஆனால், பன்னப்பட்டியில் இல்லை. மாவட்ட அபிவிருத்தி கவுன்சில் கூட்டத்திலும் இதுபற்றி விவாதம் செய்த போது அங்குள்ள மாவட்ட ஆட்சித் தலைவரே ஒப்புக்கொண்டார். கூட்டுறவு ஸ்டோர்கள்மூலம் மாத்திரம்தான் இது விநியோகிக்கப்பட வேண்டுமென்று அரசு ஆணை தெளிவாக இருக்கிறது. ஆகவே, தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்க இயலாது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் சொன்னார்கள். இதுகுறித்து அரசுக்கு அறிக்கை அனுப்புவதாகவும் சொன்னார்கள். இதிலே எது உண்மை என்பதை அரசு திட்டவட்டமாக அறிவிக்குமா? ஏழு, எட்டு மைல் சென்று அரை கிலோ சர்க்கரை வாங்கிவர வேண்டிய நிர்ப்பந்தத்தைத் தவிர்க்க இப்போதுள்ள அரசு ஆணையை வாபஸ் பெற அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையின்மூலம் விநியோகிக்கும் ஏற்பாட்டை அதிகப்படுத்தி, மக்களுக்கு இந்த முக்கியமான அத்தியாவசியமான பொருளைக் கிடைக்கச் செய்யவேண்டுமென்று அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது. அதன்படியே முயற்சி களெல்லாம் நடந்துகொண்டிருக்கின்றன. நம்முடைய நண்பர் அவர்கள் சொன்னதுபோல, சில இடங்களில் மக்கள் சில மைல் தூரம் சென்று வாங்கிவரவேண்டிய கஷ்டங்கள் இருக்கலாம். எங்கெங்கு கூட்டுறவு ஸ்தாபனம் இருக்கிறதோ அதையொட்டி யுள்ள பகுதிகளில் உள்ள மக்களுக்கு மொபைல் வாகனங்கள் மூலம் பொருள்களைக் கொண்டுசென்று விநியோகிக்க ஏற்பாடு செய்யலாமா என்பதெல்லாம் யோசனையில் இருக்கிறது. சில மாவட்டங்களில் தாலுக்கா கூட்டுறவுச் சங்கங்களிடம் லாரி களெல்லாம் இருக்கின்றன. அவற்றைப் பயன்படுத்திக்கூட சில இடங்களில் விநியோகிக்கச் சொல்லுகிறோம். ஆகவே, இது ஆரம்பக் கட்டமாக இருப்பதால், ஒருசில இடங்களில் இப்படிப் பட்ட சிரமம் இருக்கலாம். சமீபத்திலேயே வாங்கிக்கொள்ள



1973 ஆகஸ்ட் 13] [மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி]

முடியாத நிலை இருக்கலாம். இதையெல்லாம் தவிர்க்கும்பொருட்டு, வேகமான தக்க நடவடிக்கைகளை கூட்டுறவுச் சங்கங்கள் எடுத்துக் கொண்டு வருகின்றன என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** தலைவர் அவர்களே, மதிப்பீட்டு குழுவின் அறிக்கையில் தற்போது நமது மாநிலத்தில் பற்றுக்குறையாக இருப்பது 1,500 டன்தான் என்றும், ஆகவே, 2,000, 2,500 டன் சர்க்கரையை வெளிச் சந்தையின்மூலம் விநியோகிக்கும் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அறிக்கை அளித்தபிறகு, அந்த அறிக்கைக்கு அப்பாலுள்ள புதுக் கருத்துக் களைச் சொல்லக் கூடாது.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** சர்க்கரைப் பிரச்சினை உயிர்ப் பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கவன ஈர்ப்புத் தீர்மானத் திற்கு அமைச்சர் அளித்த அறிக்கையில் கூறியவற்றைக் குறித்துத் தெளிவுபெற இரண்டொரு கேள்விகள் நீங்கள் கேட்கலாம். புதுக் கருத்தைச் சொல்லி, விவாதத்திற்குரியதாக ஆக்கக் கூடாது.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** அரசாங்கம் செய்ய இருக்கும் புதிய ஏற்பாடுகள் அமலுக்கு வரும்வரை இப்போதுள்ள உத்தரவைத் தளர்த்தி, எங்கெங்கு கூட்டுறவு ஸ்டோர்ஸ் இல்லையோ அங்காவது வியாபாரிகள்மூலமாக வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவர் அவர்களே, சர்க்கார் போட்ட உத்தரவை நிச்சயமாகத் தளர்த்து வதாக இல்லை. கூட்டுறவு முறை என்றால், எல்லா மக்களும் சேர்ந்து தங்களுக்குள்ளாகவே நியாய விலையில் பொருள்களைப் பகிர்ந்துகொள்ள ஏற்பாடு செய்துகொள்வதுதான். ஆகவே, தனிப்பட்டவர்களைச் சேர்க்கும் முறையில்மட்டும் உறுப்பினர் அவர்கள் கவனத்தைச் செலுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்படி சர்க்கார் எடுத்துக்கொண்டிருக்கிற இந்த

[மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி] [1973 ஆகஸ்ட் 13

முயற்சியில் உறுப்பினர்களெல்லாம் எந்த அளவுக்கு ஒத்துழைக்க முடியுமோ அந்த அளவுக்கு ஒத்துழைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதிலே கொஞ்சம் கஷ்டம் முதலில் இருந்தாலும் பொருட்படுத்தக் கூடாது என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சர்க்கரைப் பிரச்சினைப்பற்றி உறுப்பினர் சொல்லும் போது, 'உயிர்ப் பிரச்சினை' என்று சொன்னார். எனக்கும் உயிர்ப் பிரச்சினைதான். நான் சர்க்கரை சாப்பிடுவதில்லை. திரு. மணலி கந்தசாமி அவர்கள்கூட சர்க்கரை சாப்பிடமாட்டார். எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், இன்னும் அதிகமாக சர்க்கரை விநியோகிக்கப்படுவதற்கு சர்க்கார் முயற்சி எடுத்துக்கொண்டிருக் கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

THIRU J. JAMES: Under Rule 64 of the Assembly Rules, I would like to raise an important matter.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாயின்ட் ஆப் ஆர்டரா எழுப்புகிறீர்கள்?

THIRU J. JAMES: It is not a point of order. With your permission, I would like to raise a matter. If it is not relevant, the Hon. Speaker can overrule it. It is an important matter. தலைவர் அவர்களே, அங்கு செகண்டரி ஸ்கூல் டீச்சர்ஸ், பிரைவேட் ஸ்கூல் டீச்சர்ஸ்

MR. SPEAKER: No. No. Rule 64 says—

'Any member who desires to speak on any matter before the House shall rise in his seat and on being called by the Speaker address his remarks to him from his place. Whenever the Speaker rises, no member shall speak or continue his speech but immediately resume his seat.'

பேரவையின் முன்னுள்ள பொருள் குறித்துத் தம் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிற உறுப்பினர் தமது இருக்கையைவிட்டு எழுந்து நிற்கவேண்டும், எப்பொழுது கருத்துக்களைக் கூற வேண்டும், எப்பொழுது உட்காரவேண்டும் என்பதை விதி 64 குறிப்பிடுகிறது. அவையில் ஓர் உறுப்பினர் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று கூறுகிறது.



1973 ஆகஸ்ட் 13]

THIRU J. JAMES: The rules are clear. Any member.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். பேரவைத் தலைவர் அவர்களே, அவையில் உறுப்பினர் எந்த முறையில் எப்பொழுது பேசவேண்டும் என்பதெல்லாம் பொது விதிகளிலே வரக்கூடியது. எனவே, உறுப்பினர் எப்பொழுது பேசலாம் என்பதற்குத் தனியாக விதிமுறை களெல்லாம் இருக்கின்றன. அப்படி அந்த விதிமுறைகளின்கீழ் ஓர் உறுப்பினர் பேசவேண்டுமென்றால், எப்பொழுது எழுந்திருக்க வேண்டும், எப்படிப் பேரவைத் தலைவர் அனுமதிப்பெற்றுப் பேச வேண்டும் என்று இருக்கிறதே தவிர, 64-வது விதியின்கீழ் எல்லா விஷயங்களையும் கொண்டுவருவதென்பது முடியாத காரியம்.. எனவே, அவைத் தலைவர் இதற்கு ஒரு தீர்ப்பு வழங்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சௌடி எஸ். சுந்தர பாரதி சொன்னதுதான் சரி. அவைமுன் ஒரு விவாதம் இருக்கும் போது, அந்த விவாதத்திலே கருத்துத் தெரிவிக்க விரும்புகிற உறுப்பினர் எப்படி எழுந்திருக்க வேண்டும் என்பதைப்பற்றி விதி 64 கூறுகிறது. புதுக் கருத்துக்களை விவாதத்திற்குக் கொண்டுவரக் கூடாது.

THIRU J. JAMES: I will try to clarify whether I am within my limits. Rule 63 says 'how a member should conduct himself while in the House'. Rule 64 says, 'Any member who desires to speak on any matter before the House shall rise in his seat .........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Before the House 'அதைப் பார்த்துக்கொள்ளுங்கள். ஹவுசுக்கு முன்னால் விவாதத்தில் இருக்கிற பிரச்சினையைப்பற்றிப் பேசுவதற்குத்தான் அந்த விதி முறை இடம் கொடுக்கிறது.

THIRU J. JAMES: With your permission, I would like to raise a matter. If it is not relevant, you can over-rule it. It is an important matter. Of course, "any matter before the House." A member can make observations on any matter before the House. The member must get the permission of the Speaker. That is why I sought the permission of the Speaker.

[1973 ஆகஸ்ட் 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 'Any matter' என்பதற்குள் நிற்கிறீர்கள். 'Any matter before the House' அவை முன் விவாதத்தில் இருப்பதைப் பற்றிப் பேசுவதற்கே தவிர, அவையின் இல்லாததைப் பற்றிப் பேச முடியாது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் முன் இல்லாத பொருள் குறித்து விளக்கம் பெற வேண்டுமென்று சொன்னால் குறுகிய காலக் கேள்வி மூலம் பெறலாம் அல்லது 41-வது விதியின் மூலம் பெறலாம். இந்த இரண்டு வகைகளிலே ஒன்றின் மூலந்தான் கேட்க முடியும்.

THIRU J. JAMES : Under rule 41, I have given notice.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது வேறு விஷயம். 41-வது விதியின்படி கொடுக்கப்பட்ட தீர்மானத்திற்குப் பேரவைத் தலைவர் அனுமதி கொடுத்திருக்கிறாரா இல்லையா என்பது வேறு விஷயம்.

### (6) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி

### (ஆ) கூட்டாய்வுக் குழுவிற்குச் சென்று வந்த தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவை எடுத்துக் கொள்ளாததைக்குறித்து

**திரு. ஜே. ஜேம்ஸ் :** No. No. பாயின்ட் ஆப் ஆர்டர் சார். இந்த அவையில் ஓராண்டுக் காலத்திற்கு முன்னதாக தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு .... (மணி அடிக்கப்பட்டது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பாயின்ட் ஆப் ஆர்டர் என்றால் விதிமுறைகளில் ஏதாவது மாறியிருந்தால் இந்த அவையில் விதிமுறைகளுக்கு மாறாக நடக்கின்ற நிலை இருந்தால் அதைக் குறிப்பதற்குத்தான் பயன்படுத்த வேண்டும்.

THIRU J. JAMES : I will explain. I think I am within my limits. If I am not within my limits, the Hon. Speaker can overrule it. எப்போது



1973 ஆகஸ்ட் 13] [திரு. ஜே. ஜேம்ஸ்]

செலக்ட் கமிட்டி அரசாங்கத்திற்கு அறிக்கையைச் சமர்ப்பித்து விட்டதோ உடனடியாக அது இந்த மன்றத்தில் வைக்கப்பட வேண்டும், அதுகுறித்து விவாதிக்கப்பட வேண்டுமென்று விதி இருக்கிறது. தனியார் பள்ளி பாதுகாப்பு மசோதா மீது ஜாயின்ட் செலக்ட் கமிட்டி அரசாங்கத்திற்கு ரிப்போர்ட் கொடுத்திருக்கிறது. அந்த பில் இதுவரை இந்த மன்றத்தில் வைக்கப்படவில்லை. அதற்கான காரண காரியங்கள் யாவை என்பதைக் கல்வியமைச்சர் அவர்களிடத்தில் இருந்து அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இந்த அவையில் நடக்கின்ற நடைமுறையைப் பற்றித்தான் ஒழுங்குப் பிரச்சினையாக எழுப்ப முடியும். உறுப்பினர் அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு என்றால் பதில் அளிக்க முடியும் என்றாலும் அது முறை அல்லாத காரணத்தால் நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல் அவர்கள் இரண்டு முறைகளிலே அதாவது குறுகிய காலக் கேள்வி மூலமோ அல்லது 41-வது விதியின் மூலமோதான் விவரங்களைக் கோர முடியும். இது பாயின்ட் ஆப் ஆர்டரின் கீழ் வராது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** செலக்ட் கமிட்டியிலிருந்து அறிக்கை வரவில்லை. அந்தக் கமிட்டி அறிக்கையை இந்த நேரத்திற்குள் கொடுத்துவிட வேண்டுமென்று சொல்ல முடியாது. அந்த அறிக்கை கொடுத்த பிறகுதான் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள முடியும். திரு. ஜேம்ஸ் அவர்கள் எழுப்பியது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல.

### (இ) அவை உரிமைக் குழு, நாத்திகம் நாளிதழ்குறித்து கொடுத்த அறிக்கையின்மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காதது குறித்து

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். கடந்த ஓராண்டுக்கு முன்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌடி சுந்தரபாரதி அவர்கள் 'நாத்திகம்' நாளிதழ் மீது உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்து இந்தச் சட்டமன்றத்தின் மூலம் உரிமைக் குழுவுக்கு அனுப்பப்பட்டது. உரிமைக் குழுவும்

[திரு. வா. மை. அப்துல் ஜப்பார்] [1973 ஆகஸ்ட் 13

அறிக்கையைச் சமர்ப்பித்து அவைக்கு அனுப்பிவிட்டது. அது குறித்து எந்தவிதமான நடவடிக்கையும் இந்த இரண்டு, மூன்று கூட்டத் தொடரில் எடுக்கப்படவில்லை. இது சட்டவிதிகளுக்கு மாறானது அல்லவா ?

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, on a point of order. As per rule 83 (6) of the Assembly Rules, a point of order is not a point of privilege. Also, according to the same rule 83, a Member shall not raise a point of order to ask for information. So, the point of order raised by the Hon. Member to ask for more information, is not permissible under the rules. x

THIRU V. M. ABDUL JABBAR : I am not asking for information. My point is that the matter has not been taken up in the last two sessions .........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த அவையில் அறிக்கை வந்து விட்டால் அந்த அறிக்கையின்மீது விவாதம் நடத்த வேண்டுமென்று எந்த உறுப்பினரும் தீர்மானம் கொடுக்கலாம். எந்த உறுப்பினரும் அந்த அறிக்கையின் மீது விவாதம் நடத்த வேண்டுமென்ற தீர்மானத்தை கொண்டு வந்து அவை ஏற்றுக் கொண்டால் அதை எடுத்துக் கொள்ளலாம்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, this matter has to be decided in the Privileges Committee .........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பிரிவிலேஜ் கமிட்டி அறிக்கையை அவை முன் வைத்திருக்கிறது. அதிலே விவாதம் நடத்த வேண்டுமென்று பிரிவிலேஜ் கமிட்டி டைரக்ஷன் கொடுக்க முடியாது.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** பிரிவிலேஜ் கமிட்டி குறிப்பிட்ட ஆசிரியருக்கு என்ன விதமான தண்டனை வழங்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறது ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கமிட்டியின் அறிக்கைப்படி அது இந்த அவைக்கு வந்து அவை ஏற்றுக் கொண்ட பிறகுதான் மற்ற நிகழ்ச்சிகள் எல்லாம்.



1973 ஆகஸ்ட் 13]

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** அதிலே என்ன தாமதம் ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் யார் வேண்டுமென்றாலும் தீர்மானம் கொடுக்கலாம்.

## (7) தீர்மானம்.

### உறுப்பினர் திரு. மு. சி. ஆ. இரத்தினசாமித் தேவர் வருகையின்மைக்கு அனுமதி அளித்தல்குறித்து.

**திரு. கே. கந்தசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதிகளில் 15-வது விதியின்கீழ் திரு. மு. சி. ஆ. இரத்தின சாமித் தேவர், எம்.எல்.ஏ. அவர்கள் வருகையின்மைக்கு 1—4—1973-ல் இருந்து ஆறு மாத காலத்திற்கு பேரவை அனுமதி அளிக்குமாறு கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

## (6) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி

### (அ) கவன ஈர்ப்பு, ஒத்திவைப்புத் தீர்மானங்களைப் பலர் கொடுத்திருந்தும், ஒரு சிலருக்கே அவற்றைக் கொண்டுவர அனுமதி அளிக்கப்படுவது குறித்து—(தொடர்ச்சி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் நெசவாளர் பிரச்சினை பற்றிக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். பல்வேறு பொருள் பற்றி உறுப்பினர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். சில, சில காரணங்களால் தள்ளப் பட்டிருக்கின்றன. ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் இருக்கிறது. அது இந்தப் பொருள் பற்றியது அல்ல. நெசவாளர் பிரச்சினைபற்றி எந்தவிதமான கவன ஈர்ப்புத் தீர்மானத்தையும் திருமதி அனந்த நாயகி அம்மையார் அவர்கள் கொடுக்கவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## (8) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/73).

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, 1973-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/73) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : Mr. Speaker, Sir, the moment I speak on motor vehicles, people think that I am championing the cause of rich people. I am really nervous to speak even about the right things.

Sir, I think this Bill is a very uncommon Bill brought forward by the Government. First of all, this Bill has been brought forward for the purpose of taxing vehicles like cars that are in the garage for repairs. They say that there is a lot of evasion. In this connection, I want to point out that there is a list of vehicles with the police and also the list of vehicles for which taxes are in arrears. They can call for the owners of such vehicles and collect the arrears from them and so how can there be evasion of tax ? Only if they are careless in demanding the tax from those people who have not paid the taxes, can there be evasion of tax ? Before the 6th of the first month of the quarterly period, the tax has to be paid and such of those people who are not paying the tax are not rich people. They are generally middle class people who are not able to pay the amount at that time or somehow escape from paying it. According to the original Act, the vehicles which are in the garage and are not used would not be taxed. But according to the present Bill, if they are in the garage for repairs, they are to be taxed. If the Government have got any suspicion about it, any policeman can go and find out whether they are actually in garage.

Then, I wish to refer to another matter. Many bus-owners, due to flood and other natural conditions, are not able to ply their vehicles and that also is not difficult to find out, and in such cases there is no need to give concession and I do not know why they are given concession.

---

* 3—8—1973-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



I again say that it is very wrong to collect the tax from a vehicle which is kept in a garage and is not used on the road. After all, tax has to be paid only on vehicles which are using the road. Why a new method is introduced in this Bill, I do not know. Why a vehicle which does not ply on the road, should pay the tax ? It is a most atrocious thing.

Now, Sir, about the penalty clause, I am very much surprised to note that there are two penalties. மு. ப. 11-00

One is penalty and the other is punishment. Provision in 'A' relates to penalty and the provision in 'B' relates to punishment. This is what I understand with my limited knowledge. I would like to know the difference between penalty and punishment. I am sure the Hon. Minister for Transport will explain on this point. The penalty under this Bill is so severe that one has to pay twice the tax amount. If I have to pay Rs. 52 as tax, I have to pay another sum of Rs. 52 as penalty. Without being satisfied with that penalty, under clause (*b*) they say they can levy another sum of Rs. 50 as punishment. The penalty is already double the tax. In addition to that the fine is Rs. 50. On the whole a person has to pay double the amount of the tax plus a fine of Rs. 50. The levying of penalty, double the tax amount is unheard of. I have heard many penalties being levied, but I have not heard of this. It is just making the people to pay the amount through their nose which they cannot pay. That is called penalty. Additional amount of Rs. 50 which is sought to be levied is called fine. I think the drafters of this Bill are very clever. They have made provisions both for penalty and fine. There is provision for penalty for failure to pay tax and also provision for punishment with fine which may extend to fifty rupees.

I am not able to understand the provisions that have been made in the Bill. Always the rich persons are able to pay the tax. Only the poor or middle class people are not able to pay the tax. If the car is kept in a garage for repair, the Police can ascertain the details. On every quarter before 6th or 7th, the amount has to be paid at the Office of the Police Commissioner. The Deputy Commissioner of Police maintains the list of persons who have not paid their arrears. They can penalise the persons who have not paid the arrears; but it is not proper to ask the persons to pay the

tax for the vehicle which is in a garage for repair. With the list in the Police Commissioner's Office, they can prosecute the defaulters.

The tax has been increased abnormally. Bangladesh war tax was imposed recently. I can understand if the penalty is 10 per cent, 25 per cent. Now the Government is levying 100 per cent. I am sure our Hon. Minister will realise these difficulties and withdraw this Bill. I have already given notice of an amendment and I shall speak on the amendment later. The Bill is an obnoxious and unwanted one. It will lead to further difficulties. I am sure the Hon. Minister will withdraw this Bill.

* **திருமதி த. ந. அனந்தநாயகி:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சட்டம் வரி வருமானத்தைப் பெருக்குவதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிற சட்டம். ஏற்கெனவே 465 கோடி ரூபாய் வசூல் செய்ய திட்டம் போட்டிருக்கிறீர்கள். அப்படியிருந்தும் கூட இன்னும் வரிப் பசி தீரவில்லை. எங்கெங்கே வாங்க முடியுமோ அங்கெல்லாம் வாங்கிவிட வேண்டுமென்று இந்த வரி உயர்வு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள்.

ஏற்கெனவே விதிக்கப்பட்டிருக்கின்ற வரிச் சுமையினால் லாரிக்காரர்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் இப்படி வரியை உயர்த்திக்கொண்டே போனால் இங்கே அந்தத் தொழிலே நடைபெறமுடியாமல் போய்விடும். மற்ற மாநிலங்களை எல்லாம்விட இன்றைக்கு தமிழ்நாட்டிலேதான் லாரிகளுக்கு அதிகமாக வரி விதிக்கப்பட்டிருக்கிறது. நமக்கு பக்கத்திலே இருக்கிற மைசூர், ஆந்திரா மாநிலங்களிலேகூட தமிழ்நாட்டைவிட குறைவாகத்தான் வரி போட்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல. இந்த லாரிக்காரர்கள் போலீஸ்காரர்களுக்கு கொடுக்கவேண்டிய மாமூல் வேறு இருக்கிறது. போலீஸ்காரர்களுக்கு மாமூல் கொடுக்காவிட்டால் அவர்கள் ஒழுங்காக லாரி ஓட்ட முடியாது. இவ்வளவு கஷ்டங்களுக்கிடையில் அவர்கள் தொழில் நடத்துகிறார்கள். இனிமேல் வண்டி ரோட்டிலே போகிறதோ இல்லையோ, ஷெட்டிலே இருக்கிறதோ இல்லையோ எனக்கு கொடுக்கவேண்டியதை கொடுத்துவிடுங்கள் என்று



கட்டிக்காரன்போல் நடந்துகொள்கிற ஒரு நிலையைத்தான் இந்த சட்டம் ஏற்படுத்தியிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஏற்கெனவே சார்ஜ், சர்சார்ஜ், டாக்ஸ் எல்லாம் சேர்த்து ஒரு குவார்ட்டருக்கு 1,200 ரூபாய்க்குமேல் வந்துவிட்டது. எப்போதாவது ரிப்பேர் இருக்குமானால், இந்த வண்டி இத்தனை நாள் ஓடவில்லை; பழுதடைந்திருந்தது; வர்க் ஷாப்பில் இத்தனை நாள் நின்றது; அதற்கு ரிபேட் கொடுக்கவேண்டுமென்று ரீஜினல் ட்ரான்ஸ்போர்ட் ஆபீசரிடம் கேட்பார்கள். அதிலும் சில சிக்கல்கள் உண்டு. சாதாரணமாக வர்க் ஷாப்பிலே நின்றாலும், சில போலீஸ்காரர்கள் ரொம்ப சாமர்த்தியமாக மாட்டிவிட்டுவிடுவார்கள்.

I saw a lorry on the road on 2nd August 1972 என்று டைரியிலே அனுப்பிவிடுவார்கள். லாரிக்காரர் இல்லை என்று சொன்னாலும் விடமாட்டார்கள். அவர் பாடாத பாடுபடவேண்டும். போலீஸ்காரர் டையரியிலே எழுதியிருக்கிறார். அவர் ரோட்டிலே ஓடியதைப் பார்க்காமல் எழுதமாட்டார் என்று சொல்லிவிடுவார்கள். மேஜர் ரிப்பேர், கிராங்க் ஷாப்ட், இத்தனை நாள் வர்க் ஷாப்பிலே நின்றது என்று சர்ட்டிபிக்கேட் வாங்கிக் கொடுத்தாலும் விடமாட்டார்கள். வக்கீல் வைத்து வாதாடினால் கூட விடமாட்டார்கள். சில அதிகாரிகள் நிலைமையைப் புரிந்து கொண்டு மூன்று மாத டாக்ஸ் என்றால் ஒரு மாதத்திற்கு வேண்டுமென்றால் குறைத்துக்கொள்ளட்டும் என்று சொல்லிவிடுவார்கள். வண்டி ரிப்பேராக இருந்தால், ஸ்டாப்பேஜ் இருந்தால் ஆர்.டி.ஓ.-க்கு தெரிவிக்க வேண்டுமென்று இருக்கிறது. அப்படி இருக்கும்போது நீங்கள் இந்தச் சட்டத்தை நிறைவேற்றினால் இந்தச் சட்டம் அந்தச் சட்டத்தை 'நல்லிஃபை' செய்துவிடுகிறது. ஆகவே, இந்தச் சட்டம் தேவையில்லாத சட்டம்.

இந்தச் சட்டத்தின் மூலம் வண்டி ஓடினாலும் சரி, ஓடாவிட்டாலும் சரி Either it is used or kept to be used எங்களுக்கு வரியைக் கொடுத்துவிட்டால் போதும் என்று சுலபமாகச் சொல்லிவிடுகிறீர்கள். இந்த முறையினால் தமிழகத்தில் இருந்து இந்தத் தொழில் பிரிந்துபோவதற்கான வாய்ப்பு ஏற்பட்டு

விடும். இங்கேயிருந்து கிளப்பிக்கொண்டுபோய், பக்கத்திலே இருக்கிற மைசூரில் அல்லது ஆந்திராவில் வைத்துக்கொண்டு, இன்டர்ஸ்டேட் பெர்மிட் வைத்து ஓட்டிக்கொள்வார்கள். ஏற்கெனவே இந்த லாரித் தொழிலில் லாபம் இல்லை. கடனுக்கு லாரியை வாங்கிவிட்டு அதற்கு வட்டிக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். பலர் 'ஹையர் பர்ச்சேஸில்' வாங்கிக்கொள்கிறார்கள். அதற்கெல்லாம் வட்டி மிகவும் அதிகம். போலீஸ்காரர்களுக்கு வேறு மாமூல் கொடுக்கவேண்டும். இல்லை என்றால் மாதத்திற்கு ஒரு கேசாவது போடவேண்டுமென்று சொல்லி கண்ணில்பட்ட லாரிகளை நிறுத்தி, எதையாவது எழுதிவிட்டு ஃபைன் போட்டுவிடுவார்கள்.

இப்படிப்பட்ட நெருக்கடியில், வண்டி ரோட்டில் ஓடுகிறதோ இல்லையோ, ரிப்பேராக இருக்கிறதோ இல்லையோ அதைப்பற்றி எங்களுக்கு கவலை இல்லை; எங்களுக்கு கட்டவேண்டிய வரியை மட்டும் கட்டிவிடுங்கள் என்று சொன்னால் எப்படிக் கட்ட முடியும்? ஆகவே, போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் வரியிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கக்கூடாது. வரி செலுத்தக்கூடியவர்களுக்குத் தேவையான வசதிகளையும் செய்துகொடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, இந்தச் சட்டத்தின் மூலம் டபிள் பனிஷ்மென்ட் விதிக்கப்படுகிறது.

For one offence only one punishment can be given. Under the present amending Bill, there are two punishments. இந்த இரண்டு எதற்கு? ஒரு குவார்ட்டருக்கு கிட்டத்தட்ட 1,200 ரூபாய் கட்டவேண்டியிருக்கிறது. அதை உரிய காலத்தில் கட்டத்தவறிவிட்டால் பனிஷ்மென்டாக அதற்கு இரண்டு மடங்கு கட்டச்சொல்கிறார்கள். அதற்குமேல் ஃபைன் என்று 50 ரூபாய் கட்ட வேண்டும் என்கிறார்கள். இதைவிட நீங்கள் ஆங்காங்கே உண்டி வைத்து பிரிக்கலாமே. வண்டிக்கு இவ்வளவு என்று வைத்து பிரித்துக்கொண்டிருக்கலாம். வரிக்காரர்களை ஏன் தொந்தரவு படுத்தவேண்டும்? அதிகபட்சம் 100 சதவிகிதம் பெனல்டி போடலாம் என்பது ரொம்ப கடுமையானது. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் திருத்தத்தில் சொல்லியிருப்பது போல



வேண்டுமானால் 25 சதவிகிதம் போடலாம். 10 நாளில் கட்ட வேண்டியதைக் கூட 5 நாள் தள்ளிக்கட்டினால் என்ன கெட்டு விடபோகிறது?

After all for a lapse. அதற்கு போய் Maximum penalty 100 per cent is too bad. இப்படி அவர்களைப் பயமுறுத்திக்கொண்டிருந்தால் அவர்கள் என்ன செய்வார்கள்? வரி கட்டுவதற்குக் கூட அவர்கள் வட்டிக்கு வாங்கவேண்டிய சூழ்நிலைதான் ஏற்படும். அப்படி ஆகும்போது ஏற்கெனவே கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பவர்கள் அப்படியே நசித்துப்போய்விடுவார்கள். ஆகவே, அவர்களை நசுக்கி, நசுக்கி விடாதீர்கள்.

அதைவிட நீங்கள் இன்னொன்றை செய்யலாமே. பல தொழிலை தேசியமயமாக்கியதைப்போல, பஸ் தொழிலை தேசியமயமாக்கியதைப்போல லாரிகளையும் தேசியமயமாக்கிவிடுங்கள். லாரிகளையும் தேசியமயமாக்கிவிட்டீர்களானால், லாரியை நீங்கள் எவ்வளவு வேகமாக வேண்டுமானாலும் ஓட்டலாம்; மரத்திலே கொண்டு மோதலாம்; பள்ளத்திலே கொண்டு இறக்கலாம்; கார் மீது மோதலாம்; காங்கிரீட் பாதையில் ஓட்டலாம்; சாக்கடையிலும் ஓட்டலாம். எங்கே வேண்டுமானாலும் ஓட்டலாம். அதைவிட்டு விட்டு இங்கே வந்து தொழில் நடத்தவிடாமல் அவர்களை நசுக்குவதற்கான ஒவ்வொரு தந்திரத்தை வைத்து இந்த சட்டத்தைக் கொண்டு வருவது வருந்தத்தக்கது. வட்டிக்கு வட்டி, தம்படிக்கு தம்படி வட்டி வாங்கும் வட்டிக்காரர்களைப் போல் வாங்குவது சரியல்ல. வேண்டுமானால் 25 சதவிகிதம் வரி கூட வாங்கிக் கொள்ளலாமே தவிர, பெனல்டியும் கொடுத்துவிட்டு, டபிள் டாக்சையும் கட்ட வேண்டும் என்று சொல்வது ரொம்ப அசிங்கமான அமெண்டுமென்டாகும். கூடுதல் வரி என்பது 25 சதவிகிதம் வைத்தால் போதும்.

அதற்கு மேலே இன்னும் என்னைக் கேட்டால் வண்டி வொர்க் ஷாப்பில் இருக்கிறது என்றால் மேஜர் ரிப்பேராக இருந்தால்தான் வொர்க்ஷாப்புக்குப் போகும். ஒரு மாதம், 2 மாதம் கூட வொர்க் ஷாப்பில் இருக்கலாம். இப்பொழுதெல்லாம் ஸ்பேர் பார்ட்ஸ் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. வொர்க்ஷாப்பில் இருந்தால்,

வொர்க்ஷாப்பில் இருந்ததற்கு சர்டிபிகேட் வாங்கிக்கொடுத்து விட்டால், அதற்கு வேண்டிய சான்றிதழ் வாங்கிக்கொடுத்து விட்டால் அதற்கு வரி கட்ட வேண்டியதில்லை. அந்தக் காலத்திற்கு, அந்த மாதிரி நிலை சென்றால் மோட்டார் வெஹிகில்ஸ் சட்டத்தில் இருக்கிறது. அதை நீங்கள் நீக்கிவிடுகிற மாதிரி திருத்தம் கொண்டுவருவது வருந்தத்தக்கது. பணத்தையே குறிக்கோளாக வைத்துக்கொண்டிருக்கிறீர்களே தவிர, நாட்டில் தொழில் வளர வேண்டும், தமிழர்கள் வாழவேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு இருக்கிறதா என்பது கேள்விக்குறியாகத் தான் இருக்கிறது. ஆகவே, தயவு செய்து இந்தத் தீர்மானத்தை மோட்டார் அமைச்சர் அவர்கள் வாபஸ் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதா சிறு திருத்தங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு மசோதாவாகும். ஆனால் இதில் இவ்வளவு பெரிய விவாதம் நடைபெறும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. மாண்புமிகு உறுப்பினர்கள், இங்கே விவாதத்தில் கலந்து கொண்ட இரண்டு உறுப்பினர்களும் இது ஏதோ கட்டிக்காரர் போல் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். பொறுமை கட்டுவதும் நல்ல அரசாங்கத்தினுடைய கடமை என்பதை நாம் புறக்கணிப்பதற்கு இல்லை. நான் முதலில் இந்த இரண்டு திருத்தங்களைப்பற்றி விளக்கத்தை மட்டும் கூறிவிடலாம் என்று கருதுகிறேன்.

ஒரு திருத்தம் பேருந்து உரிமையாளர்களோ அல்லது லாரி அதிபர்களோ 15 நாட்களுக்குள் சர்க்காருக்கு வாகன வரியைக் கட்டவேண்டும் என்ற நியதியை நாம் இப்பொழுது வைத்துள்ளோம். இயற்கை காரணமாக அல்லது வெள்ளம் அல்லது வேறு காரணமாக அவர்கள் அப்படி வரி கட்ட இயலாது போகின்ற நிலை ஏற்படுமானால் இப்பொழுதிருக்கிற விதிகளின்படி அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்குத் தான் வழி இருக்கிறதே தவிர, அவர்கள் மறுபடியும் ஒரு காலத்திற்குள் 10 நாட்களுக்குள் அந்தத் தவணை கழிந்து நாங்கள் வரி கட்டுகிறோம் என்று வருவார்களேயானால் அதை ஒரு குறிப்பிட்ட அபராதத் தொகை வசூலித்து





நாம் அதைப் பெற்றுக்கொள்வதற்கு இயலவில்லை. ஆகையினால் இந்த ஒரு திருத்தம் குறிப்பிட்ட காலத்தில் சர்க்கார் வாகன வரியை அவர்கள் செலுத்தத் தவறுவார்களேயானால், அதற்குப் பின்னாலே ஒரு வாரத்தில் வந்தால் இவ்வளவு அபராதம், 15 நாட்கள் கழித்து வந்தால் இவ்வளவு என்றும் அதை ஒரு முறையாக வைத்து, அந்தப் பெனல்டியை அபராதத்தை வசூலிப்பதற்கு ஏற்ற வழி வகை வகுக்கப்பட்டிருக்கிறது. அதைத் தான் இந்தச் சட்டத் திருத்தம் இங்கே சொல்கிறது. ஆகையினாலே அவர்கள் சொன்னதுபோல 100 மடங்கு அதிகமாக அபராதத் தொகை வாங்கவேண்டுமென்ற நிலை இல்லை. இரண்டு மாதங்களுக்கு மேலே அவர்கள் வரியைக் கட்டத் தவறுவார்களேயானால், அதிகப்பட்சமாக That is the maximum limit என்ற அளவிலே சட்டத் திருத்தம் கொண்டுவந்திருக்கிறோம். அவர்கள் எந்தக் காலத்தின் அடிப்படையில் கட்டுகிறார்கள் என்பதைப் பொறுத்து, அதற்கான தொகையின் அளவு அவர்கள் காலம் தாழ்த்திக் கட்டுகிற காலத்தின் அளவைப் பொறுத்தது என்கின்ற விதத்தில் விதிகள் ஏற்பாடு செய்கிறபொழுது அந்த முறை வகுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, எந்த விதத்திலும் இந்தத் திருத்தம் வரி கட்டுவோர்களுக்கு வசதியாக இருக்குமே தவிர நிச்சயம் இடைஞ்சலாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இரண்டாவது, இப்பொழுது வண்டிகளுடைய தொகை வளர்ந்து கொண்டு வருகிறது என்பது மறுக்க இயலாத உண்மை. நாகரிகத்தைப் பற்றிச் சொன்னார்கள். நாகரிகம் வளர வளர மோட்டார் வண்டிகளும் வளர்ந்து கொண்டே தான் இருக்கின்றன. ஆகையினால் வண்டிகளை அவர்கள் வைத்திருக்கிறபொழுது வண்டிகள் நல்ல முறையில் இருக்கிறது என்கின்ற காரணத்தினால் முதலில் வரியைக் கட்டுகிறார்கள். ஏதோ அதற்குப் பின்னால் வொர்க்ஷாப்பில் இருக்கும் வண்டிகளுக்கும் கூட நாம் வரி வாங்க வேண்டும் என்ற நிலையில் இல்லை. வொர்க்ஷாப்பில் வண்டிகள் இருந்தால், அதை அவர்கள் நிரூபிப்பார்களேயானால், அந்தத் தொகையை அவர்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1973 ஆகஸ்ட் 13

(திரு. நா. வீராசாமி தலைமை.)

ஆகையினால் இந்தத் திருத்தத்தைப் பொறுத்தவரையிலே எங்கெங்கு வண்டிகள் பயன்படுகின்றனவோ அந்த வண்டிகளுக்குத் தான் வரியே தவிர பணிமனைகளில் இருக்கும் வண்டிகளுக்கு நிச்சயம் வரி இல்லை. பணிமனைகளில் இருந்தது என்பதற்கான சான்றிதழ் அந்தப் பணிமனைகளில் வண்டிகளை விட்டு வைத்தவர்கள் தருவார்களேயானால், அதற்கான வரியை திரும்பப் பெற்றுக்கொள்வதற்கு இந்தச் சட்டத்தில் இடம் இருக்கிறது. ஆகையினால் இந்த இரண்டு அடிப்படையிலே பார்க்கும்பொழுது இது ஏற்கெனவே இருந்த சில சங்கடங்களை இலகுவாக ஆக்கி, நல்ல சீர்திருத்தம் என்ற முறையிலே நான் இந்தத் திருத்தச் சட்டம் வந்திருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு அனந்தநாயகி அவர்கள் பேசும்பொழுது தமிழ் நாட்டில் தொழில் நசிந்து, இங்கிருந்து ஆந்திரத்திற்கு, மைசூருக்கு ஓடிவிடும் என்று சொன்னார்கள். ஆந்திரத்துக்கோ, அல்லது மைசூருக்கோ அப்படி ஒன்றும் ஓடிவிடமாட்டார்கள். தமிழ் நாடு தமிழருக்கே என்ற அடிப்படையிலே அவர்கள் தங்களுடைய கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். உண்மை நிலை என்னவென்றால் இந்தச் சட்டத் திருத்தம் ஏற்கெனவே ஆந்திரத்திலும், கேரளத்திலும், கர்நாடகத்திலும் அமுலில் இருக்கிறது. அண்மையில் நடைபெற்ற தென் மாநில போக்குவரத்து அமைச்சர்கள் மகாநாட்டில் கூட நாங்கள் பேசி முடிவு செய்யும் பொழுது, பொதுவாக தென் இந்தியாவில் தென் மாநிலங்களில் போக்குவரத்து விதிகள், சட்டங்கள் கூடுமானவரையில் வரி விதிப்பு ஒரு ஒழுங்கான முறையிலே நாம் வகுத்துக்கொள்ள வேண்டும் என்று தென் மாநில அமைச்சர்கள் சேர்ந்து கொள்கை ரீதியில் ஒப்புக்கொண்டிருக்கிறோம். ஆகையினால் ஏற்கெனவே ஆந்திரத்தில் இதே போல சட்டம் அமுலில் இருக்கிறது. கேரளா, கர்நாடகத்திலும் கூட வண்டிகளை யார் வைத்திருந்தாலும் முன் பணமாக வரியினைக் கட்டவேண்டும். அதற்குப் பின்னால் பணி மனையில் இருந்தது என்று சொன்னால், அதற்குச் சான்றிதழ் பெற்றுத்தருவார்களேயானால், அதற்குத் தகுந்த மாதிரி எந்த



1973 ஆகஸ்ட் 13] [திரு. ச. இராமச்சந்திரன்]

அளவுக்குத் தொகை திரும்பப் பெற்றுக்கொள்ளவேண்டுமோ அந்த அளவுக்குப் பெற்றுக்கொள்ள முடியும். இந்தச் சட்டத் திருத்தம் தென் மாநிலங்களிலே ஏற்கெனவே கையாளப்பட்டு வருகிறது. இந்தத் திருத்தம் அதை ஒட்டியது தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகையினால் தமிழ் நாட்டிலிருக்கிற தொழில் பாதிக்கப்பட்டுவிடும் என்று யாரும் அஞ்சத் தேவையில்லை. இன்னும் சொல்லப்போனால், தென் மாநிலங்களில் சீரான போக்குவரத்தினைக் கொண்டு, அதிலும் குறிப்பாக தென் மாநிலங்களில் வணிக நிலையிலே பார்த்தாலும், வளர்ச்சி நிலையிலே பார்த்தாலும் சென்னை மாநகரம் தலைநகரமாக விளங்குகிறது என்ற சூழ்நிலையிலே போக்குவரத்து, பொருளாதார வளர்ச்சி அவை அனைத்தும் சென்னையை நோக்கி வருகிறது என்ற சூழ்நிலையைப் பார்க்கும்பொழுது தமிழகத்தில் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது என்பதை நாம் மறுக்க முடியாது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சார், ஆன் எ பாயின்டு ஆப் கிளாரிபிகேஷன், இதற்கு முன்னால் உள்ள பிரிவில் 4 (1)-ல் இருக்கும் வாசகங்களை 'கெப்ட் ஆர் யூஸ்டு' என்று திருத்தியிருக்கிறார்கள். வொர்க்ஷாப்பில் வண்டி இருந்தால் யூஸ் பண்ணாமலே தான் இருக்கும். கனம் அமைச்சர் அவர்கள் சொல்வது சரியாகப் புரியவில்லை. வொர்க்ஷாப்பில் இருந்தால் வரி திருப்பிக்கொடுக்கப் படும் என்று சொல்கிறார்.

முன்னால் இருந்த சட்டப்படி
If it is kept off the road for repairs no tax will be collected.
உங்கள் திருத்தம் 'கெப்ட் ஆர் யூஸ்டு' என்று இருக்கிறது. கெப்ட் என்பது வொர்க்ஷாப்பில் இருந்தால் கூட தான். இல்லாவிட்டால் ஒரு ப்ரொவிசோ போட்டு விளக்கம் கொடுத்துவிடுங்கள். இல்லாவிட்டால் அதிகாரிகள் விடமாட்டார்கள்.
If it is kept at the workshop no tax will be collected
என்று ஒரு ப்ரொவிசோ போட்டுவிடுங்கள். அவ்வளவு முதலீடு போட்டுவிட்டு, ரிப்பேர் செய்வதற்கு அல்லாமல் சும்மா விளையாட்டுக்காக லாரியை வொர்க்ஷாப்பில் போட்டுவைப்பார்களா? இல்லாவிட்டால் ஹயர்பர்ச்சேசுக்குக் கொடுத்தவன் வந்து பிடித்து விடுவான். ஆகவே,

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1973 ஆகஸ்ட் 13

If it is kept off the road, it means the lorry is kept at workshop for carrying out repairs.

என்று ஒரு ப்ரொவிசோ போட்டுவிட்டால், ஒரு விளக்கம் தந்துவிட்டால் சட்டம் உபயோகமாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** செக்ஷன் 4 (1)-ல் வரி விதிப்பைப் பற்றி விவரம் இருக்கிறது. செக்ஷன் 5-ல் வண்டி ஓடாத காலத்தில் தொகையைத் திரும்பப் பெறுவதற்கான கான்சிகுவென்ஷியல் அமெண்டுமெண்ட்ஸ், தொடர்பான திருத்தங்கள் ஏற்கெனவே இருக்கின்றன.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 21/73) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

*Clause 2.*

MR. CHAIRMAN (THIRU N. VEERASAMI) : The question is—

"That Clause 2 do stand part of the Bill".

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I move the following amendment :—In Clause 2 Omit the word 'kept'.

DR. H. V. HANDE : Sir, I second the amendment.

THIRU K. M. SUBRAMANIAM : While I have moved the amendment, I have also to get a clarification on the amendment. The difference between the past and present is, if there was advance collection of tax for vehicles kept in the garage, the tax would be refunded if it was proved that it was in the garage in the former case. In the latter case, even if it is kept off the road, the



1973 ஆகஸ்ட் 13] [Thiru K. M. Subramaniam]

tax has to be paid in advance. That is how I understand. I have given my amendment that the word 'kept' be removed. Otherwise you would be taxing the poor owners whose vehicles do not ply. That is very harsh and so I press my amendment, unless it is proved that I am wrong.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** 'கெப்ட்' என்ற வார்த்தைக்கு அமைச்சர் அவர்களின் அகராதியில் என்ன அர்த்தம்? 'கெப்ட்' ஆர் 'யூஸ்ட்' என்றிருக்கிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** அமைச்சருக்கு என்று தனியாக எப்போது ஒரு அகராதி இருந்திருக்கிறது?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** 'கெப்ட்' என்றால் என்ன வகையில் 'கெப்ட்', எந்தெந்தச் சூழ்நிலையில் 'கெப்ட்' என்பதைப் பற்றி விளக்கினால் இந்தத் திருத்தத்திற்கு உயிர் இருக்கிறதா, இல்லையா என்பதைப் புரிந்துகொள்ள முடியும். ஆகவே, எந்த வகையில் 'கெப்ட்' என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் விளக்கினால், எந்த வகையில் 'கெப்ட்' என்பதை 'யூஸ்' சொல்கிறார் என்பதற்கு விளக்கம் சொன்னால் என்லைட்டென் ஆவோம்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** ஏற்கெனவே இதைப் பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறேன். மோட்டார் வாகன வரியைப் பொறுத்தவரையில் முன்பணமாகத்தான் அது வசூலிக்கப்படுகிறது. இதில் எப்படி நிலைமை என்றால் வண்டி ஓடவில்லையென்றால் ஓடவில்லை என்று ஒரு மனு அளித்துவிடுவார்கள். அதற்குப் பிறகு இலாகாவில் இருக்கிறவர்கள் அந்த வண்டிகள் எல்லாம் எங்கிருக்கின்றன என்பதைச் சென்று பார்த்து உண்மையில் ஓடினதா ஓடவில்லையா என்பதைப் பற்றிய தகவல்களை எல்லாம் அளிக்கவேண்டும். அதற்குப் பிறகுதான் அவர்கள் எந்த அளவிற்கு வரி கட்ட வேண்டுமோ அதைக் கட்டவேண்டும். ஆனால் இத்திருத்தத்தின்மூலம் நாங்கள் என்ன அடிப்படையை மேற்கொள்கிறோம் என்றால் இப்போது நிரூபிக்கிற அந்த பர்டன் ஆப் ப்ரூப் ஏற்கெனவே இலாகாவிற்கு இருந்தது. இப்போது வரி கட்டுகிறவர்கள் தங்களுடைய வண்டி ஓடவில்லை என்பதை

[திரு. ச. இராமச்சந்திரன்] [1973 ஆகஸ்ட் 13

அவர்கள் நிரூபித்துவிடுவார்களானால் அந்த அடிப்படையில் அவர்களுக்கு அந்தப் பணம் திரும்பக் கிடைக்கும். ஏற்கெனவே ஏன் burden of proof is made to rest on operators என்றில்லை என்று கேட்கிறார். வண்டிகளின் எண்ணிக்கை இப்போது வளர்ந்துகொண்டு வருகிறது. கிட்டத்தட்ட ஒன்றரை லட்சம் மோட்டார் வண்டிகள் இப்போது நாட்டில் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகையால் வண்டிகளை யார் யார் வைத்திருக்கிறார்கள் என்ற அடிப்படையில் kept for use as well as used என்று இரண்டும் வருகிறது. ஓட்டுவதற்காக வைத்துக்கொண்டிருக்கிற வண்டிகள் என்ற அடிப்படையில் வரும் வண்டிகளுக்கு வரி கட்டவேண்டும். ஓட்டாமல் வொர்க்ஷாப்பில் இருக்கிறது என்று சான்றிதழ் கொடுத்தால் அந்த அடிப்படையில் அவர்கள் கட்டிய பணத்திலிருந்து திரும்பக் கொடுக்கப்படும். ஆகவே பணிமனையில் இருந்து சான்றிதழ் பெற்று வரியைத் திரும்பப் பெறுவதற்காக வேண்டிய அந்தக் கடமையை இப்போது வண்டி வைத்திருப்பவர்கள் செய்யவேண்டும் என்ற திருத்தம்தான் இங்கு வந்திருக்கிறது. இந்த அரசுக்கு வரி செலுத்தவேண்டும் என்ற பொது நலனோடு இணைந்திருக்கிற யாரும் இதைப் புறக்கணிக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவுகள் 3, 4 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

### பிரிவு 5.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 5 இந்தச் சட்ட முன்வடிவுக்கு உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."



1973 ஆகஸ்ட் 13]

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I move—

(1) In sub-section (a) of the proposed new Section 7 of the Principal Act, for the word 'twice', substitute the words 'twenty five per cent';

(2) Omit sub-section (b) of the proposed new Section 7 of the Principal Act.

The amendments were duly seconded.

*THIRU K. M. SUBRAMANIAM: Sir, I again press this amendment, particularly because the Hon. Minister has pointed out his position. It is in the City of Madras that the maximum number of vehicles are running and the burden of maintaining the road lies with the City Corporation and also the City Corporation has been asking the Government that they should collect the tax from the City residents and pay the entire amount to the Corporation minus the collection charges. It is their burden to maintain the roads. Even that is not granted and the roads are so bad without any finance. மு.ப. 11-30

Finance Commissions are appointed to augment finances. It is the property-owner that pays for maintenance of road. This penalty of cent per cent is not fair. Whether it will be graded is not mentioned here. It may be in the rules and we do not know what will be in the rules. It is a fabulous penalty that is being thought of. As mentioned by the Hon. lady Member Thirumathi Anandanayaki, there cannot be two punishments for the same offence. Cent per cent increase and another Rs. 50 is too much. I request a clarification from the hon. Minister whether such a penalty is there in the neighbouring States. The penalty is only a serious punishment to small car owners and others. I do not know much about the lorry people. I request the Hon. Minister to withdraw this amendment and be satisfied with Sub-clause (a) and remove Sub-clause (b) completely.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I would like to support the arguments of Thiru Subramaniam. As already pointed out by the Hon. Minister, all these lorry operators and motor vehicle operators pay taxes in advance, before they use the vehicles. When such a class of persons are there, should they not be sympathetic to them ? Just because they pay in advance we should not

[Thirumathi T. N. Anandanayaki] [1973 ஆகஸ்ட் 13

be very very strict. They are the persons who pay taxes in thousands in advance. When that is the case you cannot give the discretion to the authorities to tax and enhance as they please. Of course, you may give them some guide lines. This is unsympathetic of the Government and I hope the Hon. Minister will give a second thought to this maximum limit limiting it to 25 per cent and not cent per cent. This will be Rs. 2,200 for a lorry for a quarter which will be too much. Sub-Clause (*b*) is superfluous. When they are taxed, why should they be again subjected to a fine of Rs. 50? There cannot be double punishment. They only ask for time. You give time to capitalists and industrialists to pay arrears. Why not to lorry operators and bus operators? I would appeal to the Government to again think over this and remove sub-clause (*b*).

THE HON. THIRU S. RAMACHANDRAN: As far as operators are concerned I think by this amendment we are giving the most sympathetic treatment to the owners of vehicles because now they have got the opportunity to pay the tax without undergoing prosecution or some such thing; This is because of the provision of penalty clause, which we now seek by an amendment. The hon. Member Thiru K. M. Subramaniam asked whether such a provision is there in common in other States. I would like to say that in the neighbouring States of Kerala, Mysore and Maharashtra, all vehicle—owners are liable to pay the Motor Vehicles Tax as a matter of routine and they get the refund on production of proof that the vehicle was off the road. It is in line with those cases that in the first amendment the word 'kept' is used. In respect of intensity of penalty which some hon. Members felt as too high, I may say that we are still to frame rules. Meanwhile we have got information in respect of Andhra Pradesh wherein they have similar penalty clause in which they have fixed penalty rate as follows:—

| *Period.* | *amount of penalty.* |
|---|---|
| 1 Within one month from the beginning of the quarter, half year or year, as the case may be | Not exceeding one half of the quarterly tax. |
| 2 Within two months from the beginning of the quarter, half year, or year, as the case may be | Not exceeding that amount of quarterly tax. |



1973 ஆகஸ்ட் 13] [Thiru S. Ramachandran]

For exceeding such and such period, they have fixed the penalties. As I said previously, we have not yet framed the rules. When we frame the rules, we shall take this into consideration and amend the schedule of rates suitably.

In cases of penalty and fine, penalty rises if the tax is not paid within the time limit. Suppose one operator without paying the tax and penalty happens to ply the vehicle, then he could be prosecuted and levied fine up to Rs. 50. So, as such, it is not double payment but punishment for faults committed. When he commits such faults, he deserves punishment with fine.

I feel that by these amendments we are really benefiting the fleet as well as little operators. They are now in a position to pay freely the tax and claim refund later in certain cases.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, in sub-clause (*a*) it is said that he shall pay, in addition to tax, penalty not exceeding, etc., etc. In sub-clause (*b*) there is also fine up to Rs. 50. The Hon. Minister says that this Rs. 50 is by way of fine when he is prosecuted. But a careful reading of sub-clauses (*a*) and (*b*) shows that there are both penalty and fine. The Hon. Minister may kindly see that the fine is withdrawn.

THE HON. THIRU S. RAMACHANDRAN: Supposing an operator without paying the tax in due time is running the vehicle, he has not paid the tax nor the penalty. If we go in for prosecution he has not only to pay tax but also penalty for the period of default and if necessary fine up to Rs. 50 by way of prosecution. We have considered this question clearly and that is why we have brought forward the amendment, for Section 7.

திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

பிரிவு—5 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவுகள் 6, 7 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறை வேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, "தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/73)" சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும் என முன்மொழிகிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, இந்த மசோதாவை வரவேற்பதோடு இந்தச் சட்டத்தின் கீழ் டிராக்டர்களுக்கு—விவசாயிகள் சொந்த உபயோகத்திற்காக வைத்திருந்தால் வரி இல்லை, பஞ்சாயத்து யூனியன்கள் வைத்திருந்தால் வரியில்லை என்று விலக்கு அளித்திருக்கிறார்கள்—ஆனால் கூட்டுறவு சங்கங்கள் அல்லது மார்க்கெட்டிங் சொசைட்டிகள் சிறு விவசாயிகளுக்கு வாடகைக்கு அளிப்பதற்காக வாங்கி வைத்திருந்தால் 3 மாதங்களுக்கு 750 ரூபாய் வரி, ஆக ஆண்டுக்கு ரூ. 3,000 வரி என்று வைத்திருப்பது சரியல்ல. கூட்டுறவு ஸ்தாபனங்கள் வைத்திருக்கிற டிராக்டர்களுக்கும் விலக்கு அளிக்கவேண்டும் . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** திரு. அழகர்சாமிக்குத் தெரியாதது அல்ல. மூன்றாவது வாசிப்பில் புதியதாக ஏற்கெனவே திருத்தம் கொடுக்கப்படாத கருத்தை எடுத்துச் சொல்ல அனுமதிப்பதில்லை . . .

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். ஏற்கெனவே இந்த மன்றத்தில் விவசாயிகள் வருமான வரி திருத்த மசோதா வந்த நேரத்தில் தேர்டு ரீடிங்கில் நானும், திரு. தங்கமணி அவர்களும் புதியதாக சில கருத்துக்களைச் சொல்லி வலியுறுத்த, நமது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் அந்த விவாதத்தைத் தொடர்ந்து அந்த மசோதாவைப் பொறுக்குக் குழுவுக்கே விட்டிருக்கிறார்கள். ஆகவே, தாங்கள் தீர்ப்பளிப்பதற்கு முன்பாக மூன்றாவது வாசிப்பில் புதிய கருத்துக்கள் எதுவுமே சொல்லக்கூடாது என்று கருதாமல், முன்பு இதே மன்றத்தில் அந்த மசோதா மீது நடந்ததை முன்மாதிரியாகவும் கொள்ளலாம். காரணம், நானும் கூட இன்றைக்கு ஒன்றிரண்டு



கருத்துக்கள் இந்த மசோதாவின்மேல் சொல்ல இருக்கிறேன். பழைய சம்பிரதாயம் என்று சொல்லாமல் நமக்கு முதலமைச்சர் அவர்கள் இங்கே நடந்துகொண்ட மாதிரியை வைத்து அனுமதிப்பது நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** விவசாயிகள் சம்பந்தப்பட்ட பிரச்சினையில் நிறைய திருத்தங்கள் இருந்தன. எல்லா பாயின்டுகளையும் கவர் பண்ண முடியவில்லை. எக்சம்ஷன் கொடுத்தார். ஆனால் இங்கே

It is inappropriate to refer during the third reading stage to policies and details except to amendments or changes made during the clause-by-clause consideration.

என்பதாகக் கொடுக்கப்பட்ட தீர்ப்புகள்தான் இருக்கின்றன.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** இந்த ரீடிங்கிலேயே மிகத் தெளிவாக இருக்கிறது. கனம் சுப்பிரமணியம் அவர்கள் கொடுத்த திருத்தத்தை ஒட்டியே தான் அவர்கள் பேசுகிறார்கள். அப்படிப் பேசலாம் என்று சொல்லியிருக்கிறீர்கள்.

**திரு. சோ. அழகர்சாமி :** சார், இது மிக மிக முக்கியமான விஷயம். சாதாரணமாக எல்லா விவசாயிகளாலும் டிராக்டர் வாங்கி வைத்துக்கொள்ள முடியாது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** இதை நான் அனுமதிக்கப்போவதில்லை. நீங்களோ, டாக்டர் ஹாண்டே அவர்களோ அவையில் இல்லாது இப்போதுதான் வந்தீர்கள் என்று இல்லை. இந்த மசோதாவின் முதல் வாசிப்பின்போதும் நீங்கள் இங்கேதான் இருந்தீர்கள். அப்போது இந்தக் கருத்துக்களைச் சொல்லியிருக்கலாம். மூன்றாவது வாசிப்பில் புதிய கருத்துக்கள் எதையும் சொல்லக்கூடாது.

பேரவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/73) சட்டமாக நிறைவேற்றப்படவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(ஆ) தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, தனியார் மின்விசை வழங்கும் திறுவனங்கள் (கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/73) கூட்டாய்வுக் குழு திருத்தியமைத்தவாறு.

THE HON. THIRU O. P. RAMAN : Sir, I beg to move 'That the Tamil Nadu Private Electricity Supply Undertakings (Acquisition) Bill,* 1973, [L.A. Bill No. 15 of 1973) as amended by the Joint Select Committee be taken into consideration'.

Sir, in moving this Bill I would like to state briefly the necessity for this measure. The need for the legislation has been explained in the Statement of Objects and Reasons published along with the Bill. In the Budget speech, the Hon. Chief Minister indicated that Legislation for taking over the Private Electrical Undertakings would be introduced in the Budget session. Accordingly, the Tamil Nadu Private Electricity Supply Undertakings (Acquisition) Bill, 1973 (L.A. Bill No. 15 of 1973) was introduced.

In the Bill as introduced only profit basis for payment of amount was provided. Now the Joint Select Committee has suggested an additional alternative basis to determine the amount payable. Under the first basis the amount to be given will be equal to twelve times the average net annual profit of the undertaking during a period of any five account years, at the option of the licensee, within a period of seven consecutive account years immediately preceding the vesting date. According to the second basis the amount to be given will be the aggregate of the book value of all completed works in beneficial use pertaining to the undertaking, stores including spare parts, works in progress all tangible assets to the extent not written off in the books of the licensee with an additional sum by way of solatium. Option is given to the licensee to choose either of the two basis, failing which discretion is left to the Government to declare the basis under which the amount would be paid. Provision has been made for the manner of payment of the amount payable to the licensee. A new clause has also been inserted in the Bill providing for the application of the Act to undertakings voluntarily handed over to Government.

---

* Published in the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated 9th August 1973.



I am to add that the Bill provides for the continuance of the employees of the undertakings taken over on the same terms and conditions and with the same rights to pension, gratuity and other matters.

Sir, I commend the motion for the acceptance of the House.

THIRU N. K. PALANISWAMI : Sir, I move—

"That the Tamil Nadu Private Electricity Supply Undertakings (Acquisition) Bill, 1973 (L.A. Bill No. 15 of 1973) as amended by the Joint Select Committee be recommitted as a whole to a Joint Select Committee".

The amendment was duly seconded.

**திரு. என். கே. பழனிசாமி :** சார், இந்த மசோதாவானது, சர்க்கார் தனியார் நிறுவனங்களை எடுக்கிறேன் என்ற பெயரால், அதிகமான நஷ்ட ஈடு கொடுக்க வகை செய்திருக்கிறது.

அது மட்டுமல்ல, ஒரு சட்டம் பாஸ் ஆனவுடன் அந்த சட்டத்தின் பிரகாரம் எல்லாக் கம்பெனிகளையும் எடுப்பதற்குப் பதிலாக அவர்கள் இஷ்டப்பட்டால், இன்னும் கொஞ்ச நாட்களுக்குப்பிறகு அவர்கள் எடுத்துக்கொள்ள வழிவகைகளும் செய்யப்பட்டிருக்கின்றன.

அது மட்டுமல்ல, அவர்கள் இந்த அண்டர்டேக்கிங்கை எடுக்கக் கூடிய காலத்தில், முதல் மசோதா வரக்கூடிய காலத்தில், அதில் நெட் பிராஃபிட்டில் 10 தடவை என்று இருந்ததை இப்பொழுது 12 தடவையாக அதிக நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. முதலிலே 5 வருஷக் கணக்கை எடுத்து, அதில் எவ்வளவு லாபம் வருகின்றதோ அதைக் கணக்கெடுத்திருந்தார்கள். ஆனால், இன்றையதினம் 7 வருஷக் கணக்கெடுத்து, அதில் 5 வருஷக் கணக்கில் எவ்வளவு லாபம் வருகின்றதோ அதைப் போல் 12 மடங்கு என்று மாற்றியிருக்கிறார்கள்.

இன்றையதினம் 100 பங்கு மின்சாரம் உற்பத்தி ஆகிறது என்று சொன்னால், 55 பங்கு தொழிற்சாலைகளுக்குப் போகிறது, 25 பங்கு விவசாயிகளுக்கும் 25 பங்கு டொமஸ்டிக் சர்வீசுக்கும்

[திரு. என். கே. பழனிசாமி] [1973 ஆகஸ்ட் 13

போகிறது. நாம், பொமன்றுக் சர்விசுக்கு மின்சாரம் கொடுப்பதன் மூலமாக, அதிலிருந்து வருகிற வருமானத்தை வைத்துத்தான் போர்டுக்கு வருகிற நஷ்டத்தை சரிக்கட்டுகிறோம். ஆனால், இன்றையதினம் தனியார் நிறுவனங்கள் மின்சாரத்தை உற்பத்தி செய்வதில்லை. ஆனால், அவர்கள் இந்த மின்சாரத்தை வாங்கி விநியோகம் செய்கிறார்கள். அப்படிச் செய்யக்கூடிய காலத்திலே அவர்கள் 25 பைசா, 27 பைசாவுக்குப்போய் வாங்குவதில்லை. அப்படியிருந்தும் கூட வருஷம் ஒன்றுக்கு 10 சதவிகிதம், 12 சதவிகிதம் என்று லாபம் அடைகிறார்கள். 1940-ம் வருஷம் ஆரம்பித்தது என்று சொன்னால், கிட்டத்தட்ட ரூ. 100 மூலதனம் போடப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது என்று சொன்னால், இன்றையதினம் ரூ. 2,000 வரையிலும் வருமானம் வந்திருக்கிறது. அவைகளுக்கு டெப்ரிசியேஷன் வால்யூ போடப்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்ல, இந்த மசோதா வருவதற்கு முன்னால் பல கம்பெனிகள் காப்பர் ஒயரை வைத்திருந்தன. அவற்றை மாற்றியிருக்கிறார்கள். காப்பர் ஒயர் அதிக விலை. அலுமினியம் குறைந்த விலை. காப்பர் ஒயரை அலுமினியம் ஒயராக மாற்றி, அதற்கும் நஷ்ட ஈடு கேட்கிறார்கள். எதை நாம் வாங்கவேண்டுமென்று விற்கிறார்களோ, அதை மாற்றி நஷ்ட ஈடு கேட்கக்கூடிய முறையிலே இது இருக்கிறது. இப்பொழுது நஷ்ட ஈட்டுக்கு டெப்ரிசியேஷன் வால்யூ போக 90 சதவிகிதம். அதிலே 1/3 பங்கு என்று சொன்னால், ரூ. 100-க்கு ரூ. 3 வருகிறது. அடுத்த வருஷம் ரூ. 87 என்று வைத்துக்கொண்டால், அதிலே மீதமுள்ளதில் 1/3 பங்கு ஏறத்தாழ ரூ. 4½. இப்படி டெப்ரிசியேஷன் போடப்படுகிற காலத்திலே ஏறத்தாழ 1954-ம் வருஷ சட்டப்பிரகாரம் நஷ்ட ஈடு கால்குலேட் பண்ண வேண்டியிருக்கிறது. 1954-வது வருட சட்டம் என்று சொன்னால் கிட்டத்தட்ட 20 வருடத்திற்கு முன்னாலே வந்த சட்டம். அந்தச் சட்டத்தின் அடிப்படையிலே ஏ, பி, சி என்ற மூன்று இருக்கிறது; அதிலே 'பி'யை மட்டும் ஒமிட் பண்ணிவிட்டு, அதில் எந்த அளவுக்கு மார்க்கெட் விலை இருக்கிறதோ, அந்த அளவிற்குக் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. ஆகவே, அதை நீக்கிவிட்டு—மற்ற ஏ, சி அளவிலே நஷ்ட ஈடு போடப்பட்டிருக்கிறது. இது 20 வருடத்திற்கு முன்னாலே போடப்பட்டது. இன்றைக்கு இருக்கக்கூடிய ஜனங்களுடைய மனோ



1973 ஆகஸ்ட் 13] [திரு. என். கே. பழனிசாமி]

பாவம், நிலைமை வேறு. 1956-ம் வருஷத்தில்தான் சோஷலிசம் என்றும், பொதுத் துறை என்பதும் வந்தது. அதற்குப் பின்னாலே பெரிய மாற்றம் வந்திருக்கிறது. அதிகப்படியான நஷ்ட ஈடு கொடுக்கவேண்டுமென்ற கொடுக்கக் கூடாது, குறைந்த நஷ்ட ஈடு நிலை வந்தது.

அது மட்டுமல்ல, இன்றையதினம் 'அர்பன் சீலிங்' என்று சொல்கிறோம். 10 வருஷங்களுக்கு முன்னாலே யாரும் நினைக்கவே இல்லை. ஆனால், இன்றைக்கும் 30 வருஷங்களுக்கு முன்னாலே மார்க்கெட் வால்யூ எப்படிக் கொடுக்கவேண்டுமென்று இருந்ததோ, அதே முறையிலே கொடுக்கவேண்டுமென்று அதையே கொண்டு வருவதற்கு என்ன காரணம்? டெப்ரிசியேஷன் வால்யூ போட்டால், 1940-ம் வருஷம் ரூ. 100 மூலதனம் என்றால், இன்றைக்கு ரூ. 2,000-க்கு மேற்கொண்டு சம்பாதித்துவிட்டு, மேற்கொண்டு ரூ. 100-க்கு ரூ. 25 என்று சொன்னால், 12 மடங்கு என்று சொன்னால் கிட்டத்தட்ட ரூ. 300-க்கு வருகிறது. ரூ. 100 போட்டு ஏராளமான லாபம் சம்பாதித்ததற்குப் பிறகு ரூ. 100-க்கு மேலும் ரூ. 200 கொடுக்கிறோம். இந்த மாதிரி நஷ்ட ஈடு கொடுப்பது சரியா என்றுதான் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, புக் வால்யூ என்று சொல்கிறார்கள். புக் வால்யூ என்றால், அவ்வப்போது வால்யூ பொருள்களை வாங்குகிறார்கள். பிறகு அவர்கள் என்ன விலை போடுகிறார்களோ அந்த விலையை வைத்து விற்கலாம். ஒயரை எடுத்துக்கொள்ளுங்கள். மாற்றுவதற்கு ஒரு விலை போடுகிறார்கள். பிரைவேட் கம்பெனி என்றால், மாற்ற ரூ. 10 என்று சொன்னால், அதைக் கழட்டுவதற்கு ரூ. 10, போடுவதற்கு ரூ. 10, சூப்பர்வைசிங் சார்ஜஸ் ரூ. 10 என்று போடுகிறார்கள். இதெல்லாம் சேர்ந்து புக் வால்யூ வருகிறது. ஆகவே, புக் வால்யூ என்பது சரியல்ல. அதை ஆக்சுவல் சார்ஜஸ், பில்படி, டெப்ரிசியேஷன் கொடுக்கவேண்டுமே தவிர, ஒரேயடியாகக் கொடுக்கமுடியாது.

அதுமட்டுமல்ல, அண்டர்டேக்கிங்ஸ் எல்லாம் எடுக்கப்படுகிறது என்று சொல்லி, எடுத்தால் மூலதனம் ரூ. 4 கோடி தான் வரும். ரூ. 550 கோடியிலிருந்து ரூ. 700 கோடிவரை போர்டுக்கு

DR. H. V. HANDE: Mr. Chairman, I strongly support the amendment brought forward to recommit the entire Bill to Joint Select Committee; because, I personally feel that several detailed aspects have to be gone into. In the basic Act of 1954, Section 4 empowers the Government to take over any undertaking but subject to the following conditions:

Section 4. The Government may in respect of any undertaking not taken over by them before the commencement of this Act, by order in writing, declare that it shall vest in them on the date specified therein, such date not being earlier than four months from the date of the declaration.

There is also a proviso which reads as follows:—

Provided that the Government may from time to time postpone such date, so however that the postponed date shall not be later than one year from the date originally fixed.

This is what is contained in the 1954 Act. The period is fixed there. But in this Bill, now brought forward, that "period clause" has been removed. So freedom is given to operate. It can be 2 months, 6 months, 8 months, 1 year, 2 years or 4 years. There is possibility of abuse. Scope for abuse is abundant. But in the parent Bill, the period 2 months to 1 year is there. That restriction is there. The maximum is 1 year in the parent Act. But here no such thing is there. I would have been happy if like the original Bill, the "period clause" is put restricting the maximum period to one year.

Secondly, I think this Bill may be declared *ultra vires* of the Constitution because of the following reasons. In the original Act, 1954 Act, there is the repeal clause. Usually when a new Bill is brought forward, the previous law with which the new Bill has a bearing, is repealed. But in this Bill, there is no such repeal clause. So, there is reason for the Centre refusing assent to this Bill.

The previous speaker has brought forward an eloquent argument. Previously after budget session, in the next session, we used to have discussion on the electricity board's budget. But this



time, due to lack of efficiency on the part of the concerned officers or something, the Electricity board budget discussion has not taken place so far. If along with that electricity budget session this Bill had also come in, we could have discussed threadbare the entire policy of power cut. But that has not happened. We have only this Bill and not the discussion on electricity budget. Normally during June or July that discussion would come. But now we are in August. Discussion on electricity budget has not come. I think next year at least such a mistake would not occur and the present mistake would be rectified.

Moreover, information is not given in full in this Bill. How much quantum of power we would be getting by taking over these undertakings is not known. What is it they are going to get and what is the total thermal power they are going to distribute is not clear. They are going to take over Vellore, Tiruchirappalli schemes, etc., 8 schemes are there. But what is the quantum of power they would get for distribution? That is not mentioned. All these are commercial transactions. We must know the power we would be distributing. The power that would be available from each scheme and how much would come to our grid—all these things should have been streamlined. How much would be given for pumpsets, how much for domestic consumption, how much for small consumer, how much for bulk consumer—all these details should have been given. I am unhappy the Hon. Minister has not given us the details and taken the House into confidence.

In Clause 4, sub-clause (5), in line 5, it is said 'deriving such benefit'. Now what is the compensation on profits and dividends? What is the method of calculating compensation, whether it is the total assets ? Nothing is seen here. Not even a note is circulated to us. What is the quantum of assets that is going to be compensated? This is not an empty Bill. What is the quantum of assets ? No effort has been made to find out the book value.

With regard to the point raised by my distinguished friend about employees, we should know whether they will get the benefits as other employees of the Board and all the benefits they were getting in the private firm. I have earlier raised objection and my point was that these workers should get all the benefits as the workers of the Electricity Board.

நிறைய செலுத்த இருக்கிறது. 3 வருஷங்களிலே கொடுத்தால் 6 சதவிகிதம்; புரோ நோட்டுக்குக் கொடுத்தால் 6½ சதவிகிதம்; 30 வருஷம் கழித்தால் அதற்கு 7½ சதவிகிதம் என்று 'டெக்'காக, சரியான முறையிலே இல்லாமல் இருக்கிறது. ரூ. 4 கோடி கொடுக்க முடியாதா? ரூ. 4 கோடி தந்து சுமார் 10 தவணைகளிலே கொடுக்கவேண்டுமென்று போட்டிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல. இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட் ஆக்ட், 1947 இருக்கிறது. அதன் பிரகாரம் ஒரு தொழிலாளி டிரான்ஸ்பர் ஆனால், நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்று சென்ட்ரல் ஆக்டிலே இருக்கிறது. ஆனால், சர்க்கார் கொண்டு வந்திருக்கக்கூடிய மசோதாவில் ஒரு தொழிலாளி மாற்றம் அடைந்தால் அதற்கு நஷ்டஈடு கொடுக்கக் கூடாது, அதற்கு கோர்ட்டுக்குப் போகக் கூடாது என்று இருக்கிறது. இது சென்ட்ரல் ஆக்டை ஓவர்ரூல் பண்ணுவதுபோல் ஆகும். கோர்ட்டுக்குப் போனால்கூட இது நல் அன்ட் வாய்ட் ஆகும்.

அது மட்டுமல்ல. மின்சாரத்தைப் பொறுத்தவரையில் தென் மாநிலங்களையெல்லாம் ஒரே கிரிட் ஆக வைத்துக்கொள்ளலாம் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதன் அடிப்படையிலே எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? இதைப்பற்றிப் பரிசீலனைசெய்த நடராஜன் அவர்கள்கூட, கிரேட் ஸ்கேலில், ஸ்லாப் சிஸ்டத்தில்—ஆயிரம் யூனிட்டுகள் இருந்தால் அவர்களுக்கு ஒரு கன்செஷன் அதற்கு மேலே இருந்தால் ஒரு கன்செஷன் என்று இருப்பதையெல்லாம்—எடுத்துவிட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது நாம் அவர்களிடமிருந்து சிமின்ட் வாங்குகிறோம், இரும்பு வாங்குகிறோம். அதிகப்படியாக வாங்கினால் அவர்கள் நமக்கு கன்செஷன் கொடுப்பார்களா? கொடுக்கிறார்களா? இல்லை. அப்படியிருக்கும்பொழுது நாம் மட்டும் ஏன் கன்செஷன் அவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று தெரியவில்லை. வாங்கிய கடனிலே பாதிக்குமேலாக ஷேர் காபிடலிலே ஈக்குவிடி கடன் ஆக டிரீட் பண்ணவேண்டுமென்று சொன்னார்கள். அப்படிச் செய்தால் நமக்கு நிறையப் பணம் மிச்சமாகும். ஏன் அப்படிச் செய்யவில்லை?



கிட்டத்தட்ட 3 லட்சம் சர்வீஸ்களுக்கு பில் கொடுக்கப்படாமல் இருக்கிறது. காரணம், போதுமான ஆட்கள் இல்லை. 350 பேர்களுக்கு ஒரு கிளார்க் என்றுதான் இப்பொழுது இருக்கிறது. ஆட்களை எடுப்பதற்கு இரண்டு வருஷங்களுக்கு முன்பாகவே கூப்பிட்டிருந்தோம். இன்னும் போடவில்லை. 3 லட்சம் சர்வீஸ்களுக்கு ஏன் இன்னும் பில் போடவில்லை? இதனால் மாதா மாதம் 7 கோடி ரூபாய் வருமானம் வந்தது. இப்பொழுது 2 கோடி, 3 கோடி குறைந்துகொண்டே வருகிறது. ஏற்கெனவே இருந்த ஒரு சங்கத்தை விட்டு, இன்னொரு சங்கத்தோடு பேசி, ஓவர்டைம் வேலை செய்தால் ஓவர்டைம் கொடுக்கிறேன் என்று சொல்லி அதற்குப் பிறகு ஓவர்டைம் செய்தாலும்சரி, செய்யாவிட்டாலும்சரி, அட்ஹாக் பேசிஸில் தருகிறோம் என்று சொன்னார்கள். இப்பொழுது ஆயிரக்கணக்கானவர்கள் டெம்பரரியாக வேலை பார்த்துக்கொண்டு 3½ ரூபாய் தினக்கூலி பெற்றுவருகிறார்கள். நமக்குத் தேவை 3,000 பேர்கள். ஏற்கெனவே வேலைசெய்யக்கூடியவர்களுக்கு ஏன் புரமோஷன் கொடுக்கக்கூடாது? ஒரு கிளார்க் என்றால் 250 ரூபாய் சம்பளம் கொடுக்க வேண்டும். 3½ ரூபாய் என்று வாங்கக்கூடியவர்களை புரமோட் செய்தால் அவர்களுக்கு மாதம் 150 ரூபாய் கொடுத்தால்கூடப் போதும். இதன்மூலம் நமக்கு 36 லட்சம் ரூபாய் மீதம் ஆகும்.

இந்த கரண்ட் கட் மறுபடியும் அக்டோபர் மாதத்திலே வரும் என்று எதிர்பார்க்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது, அது சரியா என்று சொல்லவேண்டும்.

ஹொகனக்கல் போன்ற திட்டங்களைப் பொறுத்த வரையிலும் மைசூர் சர்க்கார் தயாராக இருந்தாலும், நம்முடைய சர்க்கார் இன்வெஸ்டிகேஷனுக்குத் தயாராக இல்லை என்று சொல்லப்படுகிறதே, நம்முடைய அபிப்பிராயம் என்ன என்பதைச் சொல்லவேண்டும். இப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்றினால் தமிழ்நாட்டிற்குச் சாதகம் ஏற்படும். இப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்றினால் வருஷா வருஷம் மின்சார வெட்டைத் தவிர்க்கலாம். ஆகவே அந்தத் திட்டத்தை ஏன் செய்யக்கூடாது என்பதைக் கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

[Dr. H. V. Hande] [1973 ஆகஸ்ட் 13

Another point is with regard to employment of persons who were interviewed and whose appointments are pending. What has happened to those persons who were called for interview? What is the exact reason for the delay?

Therefore, in the consideration of this Bill, the power policy of the Government has to be mentioned. The responsibility of the Government with regard to take over should be made known. Thirdly, the quantum of electricity that is to be offered. Fourthly, what are the steps taken by Government to prevent further power crisis? Fifthly, what is the guarantee that will be given to employees? Sixthly, why the 1951 Act has not been repealed? On these grounds, I plead that the Bill be recommitted to another Select Committee.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவரவர்களே, இந்த மின் சாரம் விநியோகம் செய்யக்கூடிய கம்பெனிகளை தேசிய மயமாக்க வேண்டும், தேசிய மயமாக்க வேண்டும் என்று பல்லாண்டு காலமாக நான் சொல்லி வந்தேன். கடைசியாக இப்பொழுது மிஞ்சியிருக்கும் ஏழெட்டு கம்பெனிகளை தேசியமயமாக்குவதற்கான சட்டத்தை இந்த அரசு கொண்டு வந்திருப்பதற்காக மிகவும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இப்பொழுதும்கூட அவர்கள் எப்பொழுது செய்யப்போகிறார்கள் என்று தெரியவில்லை. அதற்குக் காரணம் முழு அதிகாரமும் அரசாங்கத்தின் கையில் இருக்கிறது. எப்பொழுது டெக்லேர் செய்யப் போகிறார்கள், எப்பொழுது கம்பெனிகளை எடுக்கப் போகிறார்கள் என்று தெரியவில்லை. அதிலே தள்ளிப்போடும் அதிகாரத்தைக் கையிலே வைத்திருக்கிறார்கள். இதனால் மீண்டும் துஷ்பிரயோகத்திற்கு இந்தச் சட்டம் கருவியாக இருக்கிறது என்ற கருத்து எதிர்க் கட்சிகளிடம் இருக்கிறது. எல்லாக் கம்பெனிகளையும் ஒரே நாளில் டெக்லேர் செய்து எடுக்கப்போகிறோம் என்று சொன்னால் பரவாயில்லை. கிளாஸ் 4-லே

Provided that the Government may—(*a*) modify, by advancing or postponing,—

(i) the date originally fixed in such order; or

(ii) the date fixed in the order as so modified; or

(*b*) cancel such order;



1973 ஆகஸ்ட் 13] [திருமதி த. ந. அனந்தநாயகி]

என்று இருப்பதால் போஸ்ட்போன் பண்ணலாம், தள்ளிப் போடலாம், அட்வான்ஸ் பண்ணலாம். ஆகவே, இந்த கிளாஸ் 4 அரசாங்கத்தின் விருப்பு வெறுப்புக்கு ஒரு கருவியாக ஆகக்கூடிய கிளாஸாக இருக்கும் என்பதால் அதை மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னதைப்போல், 1954-ஆம் ஆண்டுச் சட்டத்திலே 4 மாதங்கள் தவணை கொடுத்தார்கள். அதேபோல் 1910 சட்டத்திலே ஒரு வருஷம் கொடுத்தார்கள். ஏன் இவர்களும் அதுமாதிரி நோட்டீஸ் கொடுத்து எடுக்கக்கூடாது? அம்மாதிரி நோட்டீஸ் கொடுத்து எடுப்பதில் என்ன கஷ்டம் இருக்கிறது என்று கேட்க ஆசைப்படுகிறேன். நான்கு மாதத்திலே செய்வது என்றால் அவர்களுக்கும் நிலைமை தெரியும், அவர்கள் உங்களுக்குக் கொடுப்பதற்கும் வசதியாக இருக்கும். டாகுமெண்டுகள் போன்றவைகளைத் தயாராகக் கொடுக்க வேண்டும். நீங்களே சொல்லியிருக்கிறீர்கள், ரெப்ரசெண்டேட்டிவ் அனுப்பலாம் என்று. ரெப்ரெசெண்டேட்டிவ் அனுப்ப க்ளாஸ் கொடுத்து இருக்கும்பொழுது, 4 மாதம் கொடுப்பது என்று முன்னால் இருந்ததை இப்பொழுது மாற்றுவதற்குக் காரணம் என்ன? இதில் என்ன நன்மை தீமை இருக்கிறது என்பதை விளக்கவில்லை. இவர்கள் போஸ்ட்போன் செய்யலாம், மாற்றலாம். கிளாஸ் 4-லே என் நோட்டீஸ் கொடுக்கவில்லை? அதில் உள்ள சங்கடம் என்ன? எல்லாவற்றையும் அரசாங்கம் ஒரே நாளில் எடுப்பதற்கு முன் வருமா? இவர்கள் விருப்பப்படுபவர்களுக்கு முதல் நாளும், மற்றவர்களுக்குப் பல மாதங்கள் கழித்தும் செய்யக்கூடிய நிலை இருக்கிறது. மேக்ஸிமம் தேதியும் நிர்ணயிக்கப்படவில்லை. 1954-ம் ஆண்டு சட்டத்திலே ஒரு வருஷம் மேக்ஸிமம் என்று இருக்கிறது. இப்பொழுது நீங்கள் இஷ்டப்படி செய்யலாம். தனக்கு வேண்டிய கம்பெனி என்றால் தான் ஆட்சியிலே இருந்து போகும்வரையில் எடுக்கவில்லை என்று சொன்னால் இந்தச் சட்டத்திலே அரசாங்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான வழி இல்லை. எனவே இப்படிப் பட்ட நீண்ட பெரிய அதிகாரத்தைக் கொடுத்திருப்பது தவறு.

கிளாஸ் 4 சப் கிளாஸ் 5-லே ரொம்ப நுட்பமாக சட்ட அமைச்சரவர்கள் போட்டிருக்கிறார்கள், யாரும் கோர்ட்டுக்குப் போகக் கூடாது என்று. ஒருவேளை எதிர்த்து வழக்குப் போட்டால்

வெயிட்டிங் பீரியடுக்கும் வழக்கு முடிந்து அபராதங்கட்டிற்கு வரும் பீரியடுக்கும் எல்லா பெனிஃபிட்டுகளும் கொடுக்க வேண்டும். இது நியாயமா என்று கேட்கிறேன். அதேபோல் கையிலே பொசஷன் இருக்கும் வரை சரி, பொசஷன் தப்பு என்றால் 'மீன் ப்ராபிட்ஸ்' கொடுக்கிறோம். இப்பொழுது அப்படி இல்லை. பெனிஃபிட் என்றால் என்னவென்று சொல்லவில்லை. அதுமல்லாமல் ஷெடூல் 5-லே profits or dividends that the owner might have distributed to shareholders என்ற அளவில் விட்டு செய்தால், வழக்கிற்குப் போகின்றவர்கள் நியாயத்தைப் பார்த்து கடைசியிலே சேர வேண்டிய லாபத்தைக் கொடுக்கலாம், ஆனால் அவர்கள் வழக்கிற்கே போகக்கூடாது, போனால் இதுதான் என்று அவர்களைப் பயமுறுத்துவது நியாயமாக இல்லை.

குறிப்பாக, இந்த அண்டர்டேக்கிங்கை எடுத்துக்கொள்ளும் பொழுது, நாம் நடத்தும் மின்சார போர்டு எவ்வளவு நஷ்டத்தில் இருக்கிறது? ஆனால் இப்படி நடத்துபவர்களில் ஒரேவொரு கம்பெனியைத் தவிர மற்றவர்கள் லாபம் காட்டுகிறார்கள். இப்படி லாபம் காட்டும் கம்பெனிகளை ஒன்றுசேர்த்து மீண்டும் நஷ்டம் ஏற்படுத்துவதற்காக வாரியம் நடத்தப் போகிறார்களா அல்லது— திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் ஒரு அறிக்கையில் தனியாகக் கார்ப்பரேஷன் போட்டு குறைகள் இல்லாமல் தொடர்ந்து லாபத்தைப் பெறப்போகிறார்களா என்று கேட்டிருக்கிறார்கள்— அதைப்போல் செய்யப் போகிறார்களா என்று தெரியவில்லை. ஏனென்றால் இந்தக் கம்பெனிகள் லாபம் காட்டுகிறார்கள். நாம் தொடர்ந்து நஷ்டத்தைக் காட்டுகிறோம். நிர்வாகத்திலே எக்கச்சக்கமான கோளாறு.

இரண்டு நாட்களுக்கு முன்னால் பத்திரிகையிலே ஒரு பயங்கரமான செய்தியைப் பார்த்தோம், கணக்காயர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் விஷயமாகப் பார்த்தோம். போர்டு என்று பார்த்தோம். அந்தப் போர்டு இல்லை என்றால் மின்சாரம் கிடைக்காமல் மிகவும் கஷ்டத்தில் போகும் நிலை ஏற்படும். இப்படிப் பல பிரச்னைகள் இருக்கின்றன.



இன்னும் சில குறைகள் என்னவென்றால், ஓவர்டைம் சில பேர்களுக்குக் கொடுக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக யூனியன் ரெகமண்டேஷன் செய்தால் ஓவர்டைம் கொடுக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறோம். மற்றவர்களுக்குக் கிடையாது. புதிதாக கிளார்க்குகளை எடுக்கிறோம் என்று அப்ளிகேஷன் கேட்டார்கள். இரண்டு மூன்று வருஷங்களாக அப்படியே இருக்கிறது. மேலும் பல லட்சக் கணக்கான ரூபாய் இதிலே நஷ்டமாகி இருக்கிறது. (மணி அடிக்கப்பட்டது). இப்போது எடுக்கப் போகின்ற கம்பெனிகளைத் தனி கார்ப்பரேஷனாக அமைக்க வேண்டுமென்ற காரணத்தால் இப்போது மின்சார வாரியத்தில் இருக்கக்கூடிய குறைகளைச் சுட்டிக்காட்டினேன். இப்போது 1,500 பேருக்கு ஒருவருக்குக் கூட உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

டெம்பரரியாக வருஷக் கணக்காக இருப்பவர்கள் பர்மனெண்ட் வேகன்சி வரும்போதும் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள். இதெல்லாம் என்ன நியாயத்தில் இருக்கிறது என்று தெரியவில்லை. மின்சார வாரியத்தில் இப்படிப்பட்ட ஊழல்கள் இருக்கின்றன. பில்களைப் போடக் கஷ்டப்படுகிறார்கள். ஒன்றும் சரியாக வருவதில்லை. இப்படிப்பட்ட நிலையில் எடுக்கப்படக்கூடிய கம்பெனிகளில் இருக்கக்கூடிய தொழிலாளர்கள் எல்லாம் நன்றாக அனுபவம் பெற்றவர்கள். அவர்களை நீங்கள் எஜுகேஷனல் குவாலிபிகேஷன் இல்லையென்று சொல்லி வீட்டுக்கு அனுப்பக் கூடாது. வீட்டுக்கு அனுப்பினால் தொழிலாளர்கள் மத்தியில் சிக்கலை ஏற்படுத்தும். அவர்களுக்குச் சில தகுதிகள் குறைவாக இருந்தாலும் எடுத்துக் கொள்ள வேண்டும். இதுவரை அவர்கள் பெற்றுவந்த சலுகைகளைக் குறைக்காமல், இனிமேல் மின்சார வாரியத்தில் இருக்கும் சலுகைகளையும் கொடுத்து அவர்களை ஏற்றுக் கொள்ளக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும்.

இன்னொரு சந்தேகம் வருகிறது. 1954-ஆம் ஆண்டு ஆக்ட் கமிட்டிக்குப் போவதற்கு முன்னால் ரிப்பீல் ஆகியிருக்க வேண்டும். செலக்ட் கமிட்டிக்குப் போவதற்கு முன்னால் ரிப்பீல் ஆகவில்லை. அதற்கு என்ன காரணம்? 1954-ம் ஆண்டு ஆக்ட் படி

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1973 ஆகஸ்ட் 13

எல்லோருக்கும் நஷ்ட ஈடு எல்லாம் கொடுத்தாகிவிட்டது. அப்படி இருக்கும்போது அதையும் வைத்துக் கொண்டிருப்பதன் உட்பொருள் என்ன? ரிப்பீல் ஆக வேண்டியதுதானே.
This is the latter Act taking over all the electricity undertakings.
ரிப்பீல் ஆகாமல் இருக்கக் காரணம் என்ன என்று திட்டவட்டமாக அரசாங்கம் விளக்கம் கூறுவது சாலச் சிறந்ததாக இருக்கும்.

இந்த வகையில் இன்றைக்கு இருக்கக்கூடிய தனியார் மின் நிறுவனங்கள் அனைத்தையும் ஒரேயடியாக, ஒரே நாளில் எடுப்பதற்கு இந்த அரசாங்கம் வாக்குறுதி தரவேண்டுமென்று கேட்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. மணலி சி. கந்தசாமி:** தலைவர் அவர்களே, இந்த மசோதாவை ஆதரித்து அதே நேரத்தில் இதில் இருக்கக்கூடிய பலவீனங்களையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பொதுவாக, தனியார் தரப்பில் இன்றைக்கு இருக்கக்கூடிய மின்சார விநியோகப் பொறுப்புகள் பூராவையும் அரசே ஏற்றுக் கொள்ளக்கூடிய அளவுக்கு வந்திருக்கின்ற மசோதா நல்லதுதான். எல்லாவற்றையும் தேசிய மயமாக்க வேண்டுமென்ற காலகட்டத்தில் போய்க் கொண்டிருக்கும்போது இதை இப்போதாவது செய்ய முன்வந்ததைப் பாராட்டுகிறேன். தேசிய மயமாக்குவது என்று சொன்னால் இப்படி ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து சட்டசபையில் விவாதித்து அதை இன்றையதினமே அமல் படுத்துவதாக இருக்க வேண்டும். பின்னால் படிப்படியாக எடுத்துக் கொள்கிறோம் என்பது தேசியமாக்குவது என்ற கொள்கையையே நாசப்படுத்தக் கூடியதாகும். சமீபத்தில்கூட மத்திய சர்க்கார் சுரங்கங்களைத் தேசியமாக்கியபோது அவசரச் சட்டமாகப் பிறப்பித்து அதற்குப் பிறகுதான் பாராளுமன்றத்தில் விவாதிக்க எடுத்துக் கொண்டார்களே தவிர, இப்படிச் செய்யவில்லை.

இப்போது இப்படிச் செய்வதன் மூலம் நமக்குச் சந்தேகம் உண்டாகிறது. நாட்டில் இருக்கக்கூடிய முதலாளித்துவத்தின் யோக்கியப் பொறுப்பை நாம் நன்றாக அறிவோம். ஆகவே, இப்படி எடுத்துக் கொள்வதன் மூலம் பல



1973 ஆகஸ்ட் 13] [திரு. மணலி சி. கந்தசாமி]

விதமான ஊழல்களுக்கு வழி ஏற்படுத்தும். கம்பெனிக்காரர்கள் தங்களுடைய நலன்களுக்காக எதையும் செய்யக்கூடிய அளவுக்கு அவகாசம் கொடுப்பது போல் இது இருக்கிறது என்ற நிலைமை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆகவே, ஏற்கெனவே அம்மையார் அவர்கள் குறிப்பிட்டது போல் எல்லாவற்றையும் ஒரேயடியாக எடுத்துக் கொள்வது நன்றாக இருக்கும். படிப்படியாக எடுத்துக் கொள்வது என்பது பலவிதமான சந்தேகங்களுக்கு இடம் கொடுக்கும் என்பது அம்மையார் பேச்சில் பிரதிபலித்தது. ஆகவே, இந்த நிலைமையை மாற்றும் வகையில் திருத்த வேண்டுமென்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

தொழிலாளர்களைப் பொறுத்தவரை சர்க்கார் சர்விசில் இருக்கக்கூடிய சவுகரியங்களை அளிப்பதோடு பாதுகாப்பும் கொடுக்க சட்டத்தில் விதி இருக்கிறது. அப்படி வருகிறபோது அதில் இருந்து வருகிறவர்களுக்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுப்பதோடு சில பேர் வயதானதன் காரணமாகவோ, வேறு காரணங்களுக்காகவோ ஓய்வு பெற முன்வந்தால் அந்த வகையிலும் ஆப்ஷன் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படி எடுக்கக்கூடிய கம்பெனிகளை ஒரேயடியாக எடுப்பதோடு கூட அவற்றைத் தனி வாரியமாகவும் அமைக்கவேண்டும். ஏற்கெனவே இருக்கக்கூடிய மின்சார வாரியம் எப்படிச் செயல்பட்டு வருகிறது, இந்தப் புதிய வாரியம் எப்படிச் செயல்படுகிறது என்று ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ள முடியும். தனியார் துறையிலிருந்து எடுக்கப்பட்ட ஊழியர்களைக் கொண்டு நடத்தப்படக்கூடிய வாரியம் எப்படிச் செயல்படுகிறது என்று பார்க்க முடியும்.

குறிப்பாக தேசியமயமாக்கப்பட்ட தொழில்கள் சர்க்கார் கைக்கு வந்தவுடன் தரம் குறைகிறது என்ற குற்றச்சாட்டு பரவலாக இருக்கிறது. தஞ்சை ஜில்லாவில் எங்கள் ஊரில் கம்பெனியிடமிருந்து சர்க்கார் கைக்கு வந்தவுடன் கன்ஸ்யூமர்களுக்குப் பல அசவுகரியங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே, கம்பெனியில் கலெக்டர்கள் வீடுகளுக்கு வந்து பணத்தை வசூல் செய்து கொண்டிருந்தார்கள். இப்போது மின்சாரம் உபயோகிக்கக் கூடியவர்கள் நேரடியாகக் கொண்டு போய் 7 மைல், 8 மைல் தூரம் போய்க் கட்ட வேண்டியிருக்கிறது. இதனால் அங்குள்ள மக்கள்

சர்க்காருக்குப் போனாலே உபத்திரவந்தான் என்று எண்ணக்கூடிய அளவுக்கு நிலைமை உருவாகி இருக்கிறது. இதற்கெல்லாம் இடம் கொடுக்கக் கூடாது. ஏற்கெனவே இருப்பதைவிட நல்ல முறையில் இங்கு நாம் சவுகரியங்களைச் செய்து கொடுக்க வேண்டும். பில் அனுப்புவதில் தகராறு, பல்வேறு இடைஞ்சல்கள் கன்ஸ்யூமர்களுக்கு ஏற்படாமல் பாதுகாப்புக் கொடுக்கக்கூடிய விதத்தில் செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

THIRU B. VENKATASWAMY : Sir, on behalf of the Swatantra Party, I wish to offer my remarks with regard to this Bill.

I oppose this Bill because we have already seen that after nationalisation, people are suffering. Also due to heavy loss incurred on account of nationalisation ultimately people will have to bear it by way of heavy taxation.

As my hon. friend, Thiru Manali Kandaswami, has pointed out just now, after the nationalisation of coal mines, what has happened ? We all know that a large number of trains have been cancelled because of coal shortage. Such a state of affairs is prevailing in our country. So, I request the Hon. Minister to reconsider the matter and see whether it is advisable to take over the private electricity Undertakings.

Coming to the other point, as Thiru Manali Kandaswami has stated, after the nationalisation of some private electricity undertakings, consumers are suffering. So, there are many aspects to be considered in regard to this Bill.

Finally, we are in deficit so far as electricity is concerned and the entire nation is facing the deficit. We have to generate more electricity. But the Government are not in a position to generate more power. At the same time they are not encouraging private electricity undertakings to generate power. According to the present Bill, no private electricity undertaking can undertake generation of power. So, there is no place for further generation of power. Then what is the alternative scheme that the Government have for producing more electricity. As it is, there is no such scheme. So, I request the Hon. Minister to drop this Bill which seeks to nationalise the private electricity undertakings.



**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, நாம் இப்போது எடுப்பதற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிற சட்டம் மின்சார உற்பத்தி செய்வதல்ல, மின்சாரத்தை உற்பத்தி செய்து அதை விநியோகம் செய்கிற நிறுவனங்களை நாம் எடுப்பதற்குத்தான் முடிவு செய்திருக்கிறோம். இந்தக் கருத்தைக் கொள்கை அளவில் வரவேற்றார்கள். சட்டத்தில் உள்ள சில பகுதிகள் பற்றி மட்டும் அவர்கள் கருத்துச் சொல்லியிருக்கிறார்கள். 1954-ம் ஆண்டுச் சட்டத்தை விட, சில பகுதிகள் மாற்றப்பட்டு இன்று இதை ஒழுங்கான முறையில் விரைவாக எடுக்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. நான்காவது பிரிவில் ஏற்கெனவே இந்தச் சட்டத்தில் நான்கு மாத காலம் கொடுக்கவேண்டும் என்ற பிரிவு இருந்தது ஏன் நீக்கப்பட்டது என்று கேட்டார்கள். அதே சமயத்தில் உடனடியாக எடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. ஆக இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பாடான கருத்துக்களாகும். கொள்கை அளவில் எல்லா நிறுவனங்களையும் உடனடியாக எடுக்க வேண்டும் என்ற திட்டந்தான் பரிசீலனையில் உள்ளது.

இதற்குக் கொடுக்கப்படுகிற நஷ்டயீட்டுத்தொகை இது ஒன்றின் அடிப்படையில்தான், இதில் ஒரேயடியாக எடுக்கலாமா மாறுபட்ட கால அளவில் எடுக்கலாமா என்பதுபற்றிப் பரிசீலிக்க வேண்டும். இப்போது அரசாங்கத்தின் கொள்கை எல்லாவற்றையும் வெகு விரையில் எடுக்கவேண்டும் என்பதுதான். சட்டம் போடும்போது நாம் எப்போது வேண்டுமானாலும் எடுக்கலாம் என்று போடுவதுதான் நமக்கு நல்லது. ஒரு காலவரையறை போட்டால் பின்னால் அதனால் சங்கடம் ஏற்படுகிறது. நான்கு மாதம் என்றார்கள். நான்கு மாதம் நோட்டீஸ் கொடுத்ததற்குப் பின்னால்—மணலி கந்தசாமி அவர்கள் சொன்னதுபோல்—நோட்டீஸ் கொடுத்துவிட்டால் அதற்கிடையில் தவறுகள் நடக்க வாய்ப்பிருக்கிறது. ஆகவே நான்கு மாதம் என்பதை எடுத்துவிட்டோம். ஒரு ஆண்டு என்று மாக்ஸிமம் டைம் போட்டிருந்தோம். நீதிமன்றத்திற்குச் சென்றால் ஒரு ஆண்டுக்குள் பல நீதிமன்றங்கள் செல்கிறார்கள். காலம் முடிந்துவிட்டால் என்னவாகும்? நோட்டிபிக்கேஷன் என்ற தெளிவு இல்லாமலிருந்தது. அதையும் எடுத்துவிட்டு, நீதிமன்றத்திற்குப் போனால் கூட எந்த

[திரு. செ. மாதவன்] [1973 ஆகஸ்ட் 13

நிமிடத்திலும் நாம் எடுக்க அதிகாரம் வேண்டுமென்று, ஒரு ஆண்டு கழிந்துவிட்டால் நோட்டிபிக்கேஷன் செல்லாமல் போகும் சூழ்நிலையில், இன்றைக்கு சட்டம் மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு பிரிவுகளும் அரசுக்குச் சாதகமாகும்.

இடையில் நீதிமன்றம் சென்றால் பின்னால் எடுக்கும்போது நஷ்டயீட்டைப் பற்றி சொல்லியிருக்கிறோம். உடனடியாக எடுக்க வேண்டும் என்றும் சொல்கிறார்கள். தனியாருக்கு லாபம் போகக் கூடாது என்றும் சொல்கிறார்கள். அதேசமயத்தில் நஷ்டயீடு கொடுப்பது எப்படி நியாயம் என்றும் கேட்டார்கள். அதைப் பொருத்தமான வாதமாகக் கருதவில்லை. ஜமீன் ஒழிப்புச் சட்டம், இனாம் ஒழிப்புச் சட்டம் இவை வந்தன. எந்த நாட்டுடைமையாக்குகிற சட்டம் வந்தாலும் நீதிமன்றத்திற்குச் சென்று அதன் பயனைப் பெறுகிற ஒரு வாய்ப்பை அனுபவத்தில் நாம் கண்டிருக்கிறோம். ஆகவே, அதை மாற்றவேண்டும் என்றுதான் இந்தச் சட்டத்தில் இந்தப் பிரிவைப் போட்டிருக்கிறோம். வேறு ஒரு நிலச் சீர்திருத்தச் சட்டத்தில் இதே கொள்கைதான் இருக்கிறது. மேற்கு வங்கத்தில் இந்தக் கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது, அதே கொள்கையை இங்கு கொண்டு வந்திருக்கிறோம்.

உதாரணமாக, இனாம் ஒழிப்புச் சட்டத்தில் ஒரு இனாமை அல்லது ஜமீந்தாரி ஒழிப்புச் சட்டத்தில் ஒரு கிராமத்தை எடுக்கும்போது ரூ. 100 செலவழித்து ஸ்டே வாங்கிவிட்டால் மூன்று ஆண்டுகள் அந்த இனாம்தார் உழைப்பவனிடம் வாரம் பெற முடிகிறது. சட்டத்தால் பலன் கிடைக்கவில்லை. அப்படிக் கஷ்டப்படுகிற ஒரு சூழ்நிலையைப் பார்த்தோம். ஸ்டே வாங்கி அதன் அடிப்படையில் அனுபவிக்கும் வாய்ப்பு ஏற்கெனவே உள்ள சட்டத்தில் இருக்கிறது. அதை மாற்றி, இடைக் காலத்தில் அவர்கள் அனுபவிக்கும் வாய்ப்பு இருந்தாலும் பின்னால் அனுபவத்திற்கு ஏற்ற நஷ்டயீட்டைப் பெற வாய்ப்பினை உருவாக்கியிருக்கிறோம்.

எப்படிக் கணக்கு போடுவது என்பதைப் பற்றிச் சொல்லியிருக்கிறோம். சில கொள்கைகள் வரையறுக்கப்பட்டு, விதிகள் கொண்டு வரவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அது நியாயமான



1973 ஆகஸ்ட் 13] [திரு. செ. மாதவன்]

கொள்கையாகும். அது அரசுக்குத் சாதகமான கொள்கையாகும். தனியார் கோர்ட்டுக்குச் சென்றால் பயன்பெறும் சூழ்நிலையைத் தடுக்கும் வாய்ப்பை இது தருகிறது.

அதில் பணியாற்றுகிறவர்கள் பற்றிச் சொன்னார்கள். ஏற்கெனவே திருத்தம் சட்டத்தில் கொண்டு வந்திருக்கிறோம். என்னென்ன சலுகைகளை இன்று அனுபவித்துக்கொண்டிருக்கிறார்களோ அத்தனையும், சர்வீஸ் கண்டிஷன்ஸ் ஆனாலும் சரி அல்லது பே ப்ரொடெக்ஷன் எல்லாவற்றையும் பாதுகாப்பதற்கு 15-வது பிரிவில் வகை செய்யப்பட்டிருக்கிறது.

ரிப்பீல் க்ளாஸ் பற்றிச் சொன்னார்கள். அதுபற்றி அவர்கள் திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். சில டிஸ்ட்ரிப்யூட்டிங் ஏஜென்ஸீஸ் இன்று உள்ளாட்சித் துறையில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. அதை எடுக்கவில்லை. மொத்தமாக ரிப்பீல் செய்துவிட்டால் மதுரை கார்ப்பரேஷன் போன்றவர்கள் நடத்துகிற அண்டர்டேக்கிங்ஸ் இந்தச் சட்டத்தின்கீழ் எடுபட்டுப் போகும். ஆகவே முழுவதும் ரிப்பீல் செய்யாமல் மூன்று பகுதிகளாகப் பிரித்துப் போட்டிருக்கிறோம். அதை நம் நன்மைக்காகத்தான் போட்டிருக்கிறோம்.

எடுக்கிற எல்லா நிறுவனங்களையும் ஒன்றாக ஒரு கார்ப்பரேஷனை வைக்கலாமே என்று சொன்னார்கள். அது ஆபத்தைத் தரும். பல இடங்களில் பிரிந்து இருக்கின்றன. ஒன்லி டிஸ்ட்ரிப்யூட்டிங் மெஷினரி. ஜெனரேஷன் வேறு. உதாரணத்திற்கு வேலூரை எடுத்துக்கொண்டால் வட ஆர்க்காடு முழுவதும் வைத்திருக்கிறோம். ஒரு இடத்தில் மட்டும் வேலூர் எலக்ட்ரிஸிட்டி சப்ளை கார்ப்பரேஷன் இருக்கிறது. அதையும் ஒரு கார்ப்பரேஷனை வைத்து, திருச்சியில் ஒன்று வைத்து, தஞ்சாவூரில் இருப்பதையும் ஒன்றாக இணைத்தால் சரிவர நடைபெறாது. தொழிலாளர்கள் சார்பில் கேட்கப்பட்டது. காரணம், அவர்களுக்கு அதிகச் சலுகைகள் இதில் இருப்பதாகச் சொன்னார்கள். இன்று லாபம் வந்துகொண்டிருக்கிறது, மின்சார வாரியத்திற்குச் சென்றால் நஷ்டமாகிப் போய்விடுமே என்றார்கள். நமக்கும், தனியார் துறையில் நடத்துபவர்களுக்கும் உள்ள வித்தியாசம் நாம் விவசாயிகளுக்கு

[திரு. செ. மாதவன்] [1973 ஆகஸ்ட் 13

எவ்வளவோ செய்கிறோம், ஆனால் அப்படி அவர்கள் கொடுப்பதில்லை. புதிய தொழில்களுக்கு உற்சாகமளிக்கிறோம். பின் தங்கிய பகுதிகள் என்று சொல்லி நாம் தனிச் சலுகைகள் கொடுக்கிறோம். ஆனால் அவர்கள் அப்படிக் கொடுப்பதில்லை. இந்தச் சலுகைகளை அவர்கள் கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது என்று விளக்கிக் கூறியிருக்கிறோம். அதுபற்றி மறு பரிசீலனை செய்ய முடியாது.

சட்டத்தில் வேறு மாற்றங்கள் தேவை இல்லை என்று நான் கருதுகிறேன். கொள்கை அளவில் இந்தச் சட்டத்தின் அடிப்படையில் எல்லா நிறுவனங்களையும் ஒருசமயத்தில் எடுக்க வேண்டும் என்று திட்டமிட்டு வலியுறுத்தி வருகிறோம். அதில் மாறுதல் இருக்குமானால் பணம் இல்லை என்ற மாறுதல்தானே தவிர வேறு எந்த மாறுதலும் இல்லை. இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். இலாகாவின் மீது எந்தக் குறையும் சொல்லவேண்டியதில்லை. ஏற்கெனவே சில நாட்களுக்கு முன்பே மின்சார வாரியம் பற்றிய அறிக்கையை அளித்து விட்டார்கள். நாம்தான் அதுபற்றி விவாதிக்க வேண்டிய காலத்தை நிர்ணயிக்கவேண்டுமே தவிர இலாகாவினர் அறிக்கையைச் சமர்ப்பித்தாகிவிட்டது.

என்னென்ன எடுக்கிறோம், நஷ்ட ஈடு எவ்வளவு என்பதுபற்றி சட்டத்தில் போடவேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு சட்டத்தில் இனி இடமில்லை. ஒரு பிரின்ஸிபில், இந்த பிரின்ஸிபில்படி நஷ்டஈடு கொடுக்கிறோம் என்று சொல்ல முடியுமே தவிர வேறு விளக்கங்கள், என்னென்ன எடுக்கப்போகிறோம் என்பதெல்லாம் சட்டத்தில் வராது. 'ஆக்சுவல் வால்யூ' என்றால் அது 'மார்க்கெட் வால்யூ' வாகிவிடும். எவ்வளவு கம்பி வாங்கியிருக்கிறோம், எவ்வளவு கம்பி இருந்தது, எப்படி வாங்கியிருக்கிறோம், அந்த வால்யூவைப்போட வேண்டுமென்று சொன்னால் அப்படிப் போட முடியாது. அஸெட்ஸை டிப்ரிஸியேஷன் கழித்துப் போடலாம், வேறு எதுவும் இல்லை என்று நினைக்கிறேன். இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1973 ஆகஸ்ட் 13]

திரு. என். கே. பழனிசாமி அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1973-ம் ஆண்டு, தனியார் மின்விசை வழங்கும் நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/73) கூட்டாய்வுக்குழு திருத்தியமைத்தவாறு" ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

### பிரிவு 3.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** :

"பிரிவு 3 இந்தச் சட்ட முன்வடிவுக்கு உரிய பகுதியாக ஆகப்பட வேண்டும்."

THE HON THIRU O. P. RAMAN : Sir, I move the following amendments :—

"In sub-clause (3) of Clause 3, *for* the expression "by a certified auditor" *substitute* the expression "by a chartered accountant in practice within the meaning of the Chartered Accountants Act, 1949 (Central Act XXXVIII of 1949);"

The amendment was put and carried.

பிரிவு 3, திருத்தப்பட்டபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

### பிரிவு 4.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 4 இந்த சட்ட முன்வடிவுக்கு உரிய பகுதியாக ஆகப்படவேண்டும்."

[1973 ஆகஸ்ட் 13

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, I move the following amendment :—

(i) In sub-clause (1) of Clause 4, after the words "in such order" add the words "such date not being earlier than four months from the date of declaration".

(ii) In sub-clause (5), in line 5, for the words "or deriving such benefit" substitute the words "or profit or invidends that he might have distributed to the shareholders."

இந்தத் திருத்தத்தின்படி டெக்லரேஷனுக்கும் வெஸ்டிங்குக்கும் இடையில் நான்கு மாதங்கள் அவகாசம் தேவை என்று சொல்லியிருக்கிறேன். அரசாங்கம் என்ன சொல்கிறது என்றால் டெக்லரேஷன் செய்தவுடனேயே அந்த அண்டர்டேகிங் வெஸ்ட் ஆகும் வித் தி கவர்ன்மெண்ட். அதில் ப்ரொவிஸோவில் ஒரு அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார்கள்—

They can modify, by advancing or postponing—

(i) the date orginally fixed in such order, or

(ii) the date fixed in the order as so modified, or

(iii) cancel such order

so however, that ................. no such order shall be modified or cancelled after the undertaking has ..........vested in the Government.

என்று சொல்லியிருக்கிறார்கள். டெக்லரேஷன் பண்ணிய அன்றைக்கே வெஸ்ட் பண்ணுகிறது. அதை எப்படி கான்ஸல் பண்ண முடியும்? நடுவிலே டயம் இருந்தால் தானே கான்ஸல் பண்ணலாம்? கான்ஸலேஷனுக்கு எங்கிருந்து டயம் இருக்கிறது? டெக்லரேஷன் பண்ணியவுடனே வெஸ்ட் பண்ணிவிடுவதால் you cannot cancel. Your proviso becomes almost powerless. இதற்கான விளக்கத்தை அமைச்சர் அவர்கள் கொடுத்தால் நன்றாக இருக்கும். எல்லாக் கம்பெனிகளையும் ஒரே நாளில் டெக்ளேர் பண்ணிவிடலாம். ஏழு கம்பெனிகள் தான் இருக்கின்றன. அவைகளுக்குக் கொடுக்கக் கூடிய நஷ்ட ஈடு எட்டு எட்டுப் போனால் எவ்வளவு ஆகிவிடப் போகிறது? நான்கு கோடி ரூபாயாகும். ரூ. 400 கோடிக்கு மேல்



1973 ஆகஸ்ட் 13]

வருவாய் வந்துகொண்டிருக்கிறது அரசாங்கத்திற்கு. எலக்டிரிஸிடி பட்ஜெட்டில் வேறு வருமானம் வருகிறது. ஆகையினால் 4 கோடி ரூபாய் தான் தேவை. ஒரே நாளில் ஏழு கம்பெனிகளையும் டெக்லேர் செய்து, நான்கு மாதம் அவகாசம் கொடுத்து அவைகள் கவர்ன்மெண்டில் வெஸ்டு செய்தால், மற்றைய நடவடிக்கைகளை அவர்கள் ஒழுங்காக எடுத்து, எல்லாவற்றையும் செய்து ஒப்படைப்பதற்கு வழி பிறக்கும். ஆகையினால் எல்லாக் கம்பெனிகளையும் ஒரே நாளில் டெக்லேர் செய்யுங்கள். வெஸ்டிங்க்குக் மாத்திரம் நான்கு மாதம் கொடுங்கள். டெக்லரேஷன் செய்த அன்றைக்கே வெஸ்டிங் ஆனால் கான்ஸ்லேஷனுக்கு அதிகாரம் கிடையாது. you cannot do the cancellation in between; your proviso becomes powerless. 1954-ம் சட்டத்தில் நான்கு மாதம், 1910-ம் சட்டத்தில் ஒரு வருஷம் கொடுத்திருக்கிறார்கள். ஒரு வேளை கனம் அமைச்சர் அவர்கள் சொல்லலாம். ஒரு வருஷத்திற்குள் எடுக்கவில்லையென்றால் வழக்கு மன்றத்திற்குப் போய் அது செல்லாமல் போகலாம் என்று சொல்லலாம். இன்னொரு ஃப்ரெஷ் நோடிபிகேஷன் போடவேண்டியது தானே? After a lapse of one year, you can issue a fresh notification. அதில் என்ன பெரிய கஷ்டம் இருக்கிறது? அது என்ன தலைச் சுமையா என்ன? இன்னொரு நோடிபிகேஷன் போட்டு அடித்துத் தள்ளி விடவேண்டியது தானே? ஆகவே, இதற்கு ஏதாவது செய்ய வேண்டும். இதை எப்படிச் செய்வது என்பதற்கு வழி செய்யுங்கள்.

இன்றைக்கு கிளாஸ் நான்குக்கு ப்ரொவிஸோவை யோசித்துக் கொண்டுவந்தார்களா என்பது தெரியவில்லை. அந்தத் தீர்மானத்தை எப்படிக் கொண்டு வந்தார்கள் என்பது புரியவில்லை. அந்த சிக்கலைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இந்தப் பிரிவிலே "shall vest in them on the date specified in such order" என்று இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் எந்தத் தேதி போடுகிறதோ அந்தத் தேதி. அந்தத் தேதியை மாற்றுவதற்கு, அதிகாரம் எடுத்துக்கொண்டிருக்கிறோம். அவ்வளவுதான்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அந்தத் தேதி போடுகிறீர்களே, ஸ்பெஸிபைடு டேட் என்று சொல்கிறீர்களே, நான்கு மாதம் கொடுங்கள். at least four month's gap or எவ்வளவு காலம் என்று சொல்லுங்கள், ஒரு மாதம், 15 நாட்கள் என்று சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** காலம் கொடுக்கப்படும். ஆனால், தனியாருடைய லாபத்திற்கு இடம் வராது காலம் கொடுக்கப்படும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** எந்தக் காலத்திற்குள் லாபம் வரும், எந்தக் காலத்திற்குள் கொடுப்பதாக இருந்தால் லாபம் வராது என்று பார்த்து காலத்தைக் கொடுத்துவிடுங்கள்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தேதியை இப்பொழுதே தெரிந்து கொண்டு, தனியார் நிறுவனங்களுக்கு லாபம் தேடித் தருவதை நாங்கள் விரும்பவில்லை.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I am pressing my amendment, Sir.

திருமதி த. ந. அனந்தநாயகி அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

பிரிவு 4 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 5.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 5 இந்தச் சட்ட முன்வடிவுக்கு உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

THE HON. THIRU O. P. RAMAN : Sir, I move—

In item (ix) (*a*) of sub-clause (2) of clause 5, *after* the expression "licensed under Part II of the Electricity Act", *insert* of expression "or under the Travancore Electricity Act, 1097 (Travancore Act I of 1097), and deemed to be licensed under the Electricity Act".





THIRU N. K. PALANISAMY : Sir, I move—

'In sub-clause (1), Basis A, for the word, "twelve", occurring *after* the words "equal to", *substitute* the word "five" and for the word "five" occurring before the words "of any" substitute the word 'three' and delete the words 'at option........... vesting date'.

'In sub-clause (2), Basis B,—for the expression "book value", wherever it occurs, substitute the expression "actual value".

The amendments were duly seconded.

**திரு. என். கே. பழனிசாமி :** ஸார், இந்த மசோதா இந்தச் சபையில் வரக்கூடிய காலத்தில் 10 மடங்கு நஷ்ட ஈடு கொடுப்பதாகக் கொண்டு வரப்பட்டது. இப்பொழுது அதை 12 மடங்காக உயர்த்தியிருக்கிறார்கள். ஏற்கெனவே குறைந்தது ஒரு கம்பெனி 40 வருஷமாக இருந்திருக்குமானால், அந்த 40 வருஷ காலத்தில் எந்தக் கம்பெனியை எடுத்துக்கொண்டாலும் 10 சதவிகிதம் அல்லது 12 சதவிகிதம் டிவிடெண்டு கொடுத்திருக்கிறது. அதற்குக் குறைவாகக் கொடுத்ததில்லை. பத்து சதவிகிதம், 12 சதவிகிதம் டிவிடெண்டு கொடுக்கவேண்டுமென்றால் அதனுடைய லாபம் எவ்வளவு இருக்கும் என்று நன்றாகத் தெரியும். அவர்கள் பவரை நம்மிடமிருந்து வாங்கி டிஸ்டிரிபியூட் செய்கிறார்கள். அவர்கள் ரூ. 100 இன்வெஸ்டு செய்திருந்தால் கிட்டத்தட்ட 40 வருஷ காலத்தில் ரூ. 2,000 வாங்கியிருப்பார்கள். கொடுக்கும்பொழுது ப்ரோநோட்டாகக் கொடுக்கலாம். அதற்கு இன்டரெஸ்டு 6 சதவிகிதம், 6½ சதவிகிதம், 7 சதவிகிதம். டிப்ரிஸியேஷன் வால்யூ போட்டு நஷ்டஈடு கொடுக்கக்கூடிய சமயத்தில் அந்த டிப்ரிஸியேஷன் வால்யூ, கொடுத்த ரூ. 100-ல் கிட்டத்தட்ட 25 ரூ. போட்டு, 12 மடங்கு என்றால், ரூ. 300 ஆயிற்று. ரூ. 100 போட்டவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கும்பொழுது டிப்ரிஸியேஷன் ரூ. 300 போடுவது சரியா என்பது என்னுடைய கேள்வி.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இது போன்ற நாட்டுடைமையாக்குகின்ற சட்டங்களில் நாம் நஷ்ட ஈடு நிர்ணயிக்கும்பொழுது ஒரு கொள்கையைப் பின்பற்றவேண்டிய நிலையில் இருக்கிறோம்.

[திரு. செ. மாதவன்] [1973 ஆகஸ்ட் 13

எவ்வளவு அதிகமாகக் குறைத்துக் கொடுக்கவேண்டுமோ அவ்வளவு குறைத்துக் கொடுக்கவேண்டும் என்பதில் நம்மிடையே கருத்து வேறுபாடு கிடையாது. நீதிமன்றத்தில் நாம் போடுகின்ற சட்டம் நிற்கவேண்டும். அவசரப்பட்டு மிகுந்த அளவுக்கு குறைத்துக் கொடுத்தால் அதனால் சட்டம் செல்லாது போய்விடக் கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிடக்கூடாது என்பதெல்லாம் ஜாயிண்டு செலக்ட் கமிட்டியில் பரிசீலிக்கப்பட்டு, ஏகமனதாக இந்தச் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. 1954-ம் ஆண்டு சட்டத்திலே மூன்று முறைகளிலே நஷ்டஈடு கணக்கிடப்படலாம். அந்த மூன்று முறைகளிலும் எந்த முறையில் அதிகப் பணத்தை அந்த நிறுவனச் சொந்தக்காரர் பெறுகிருரோ அதை அவர் தேர்ந்தெடுக்கலாம் என்று இருக்கிறது. நாம் அதை இன்றைக்கு மாற்றிக் கொடுத்திருக்கிறோம். அந்த அளவுக்கு ஒரு படி நஷ்டஈடு குறைகிறது என்பதிலே நாம் அந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.

அடுத்து, அவர்கள் மூன்று கணக்கிடப்படுகின்ற முறைகளில் ஒரு முறையிலே 20 மடங்கு லாபத்தைப்போல கொடுக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். நாம் கொண்டு வந்திருப்பது இந்த மசோதாவில் முதலில் 10 மடங்கு என்று குறைத்திருந்தோம். இப்பொழுது இரண்டு மடங்கு ஏகமனதாக ஜாயிண்டு செலக்ட் கமிட்டியில் கூட்டிக் கொடுத்திருக்கிறோம், 12 மடங்கு ஆக்கப்பட்டிருக்கிறது. இருக்கிற சட்டத்தைவிட 8 மடங்கு குறைவாக இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த அளவுக்கு நஷ்ட ஈட்டைக் குறைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

" ஆக்சுவல் வால்யூ " என்று அவர்கள் திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். நாம் இன்றைக்குப் போட்டிருப்பது ஆல்டெர்நேடிவ். ஒன்று லாப அடிப்படையில் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறோம். லாபம் இல்லாத நிறுவனமாக இருக்குமானால், எத்தனை மடங்கு என்று சொல்ல முடியாது. ஆகவே, சட்டம் செல்லாது போகக் கூடிய சூழ்நிலை ஏற்படக் கூடாது என்று கணக்கிட்டு, ஆல்டெர்னேடிவ் கொடுத்து புக் வால்யூ என்று போட்டிருக்கிறோம். புக்



1973 ஆகஸ்ட் 13] [திரு. செ. மாதவன்]

வால்யூ என்பது ஆக்சுவல் வால்யூவைவிடக் குறைவாக இருக்கும். ஆக்சுவல் வால்யூ என்று போட்டால் அதைவிட அதிகம் வரும் அதைவிட ஆபத்து . . .

**திரு. என். கே. பழனிசாமி :** Actual value on the date of purchase.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** புக் வால்யூ என்று போடாமல், ஆக்சுவல் வால்யூ என்று போட்டால் அன்றைக்கு வாங்கின விலை என்ற நிலை ஏற்பட்டு டிப்ரிஸியேஷன் இல்லாமல் போய்விடும். அந்த ஆபத்து வருகிறது. ஆகவே, ஆக்சுவல் வால்யூ என்று போடுவது சரியாக வராது என்று கருதுகிறேன். ஆக்சுவல் வால்யூ என்று போட்டால் தகராறு வரும். இன்றைக்கு இருக்கக்கூடிய மார்க்கெட் வால்யூவா அல்லது ஆக்சுவல் வால்யூ என்றால் அன்றைக்கு வாங்கினார்களே அன்றுள்ள மார்க்கெட் வால்யூவா என்ற பிரச்னை வந்துவிடும். நாம் கொடுத்திருப்பது புக் வால்யூ குறைவாக இருக்கும். ஆல்டர்னேடிவ் கொடுத்திருக்கிறோமே தவிர, நிரந்தரமாக இதை ஒன்றையே கொடுக்கவில்லை.

The Government amendment was put and carried.

The amendments of Thiru N. K. Palanisamy were put and lost.

பிரிவு 5 திருத்தப்பட்டபடி பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 6, 7, 8, 9 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 10.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி, " பிரிவு 10 இந்த சட்ட முன்வடிவுக்கு உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும் ".

THE HON. THIRU O. P. RAMAN : Sir, I move—

To sub-clause (*e*) of clause 10, *add* the following proviso :—

Provided that instalments of such loans and arrears of interest, if any, thereon which have accrued due during any period prior to one month immediately preceding the vesting date and outstanding on the date shall be deducted. "

The Government amendment was put and carried.

Clause 10, as amended was put and carried.

### பிரிவு 11.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி: "பிரிவு 11 இந்த சட்ட முன்வடிவுக்கு உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

THIRU N. K. PALANISWAMY: Sir, I move—

(i) For sub-clause (3), *substitute* the following :—

'(3) The amount determined under sub-section (1) or sub-section (2), shall, after deducting therefrom the sums referred to, under section 10, be given by the Government to the licensee in ten equal instalments without interest.'

(ii) *Delete* sub-clauses (4) to (9) and re-number sub-clause (10) as sub-clause (4)".

The amendments were duly seconded.

**திரு. என். கே. பழனிசாமி:** சார், இந்த தனியார் நிறுவனங்களை எடுத்த பிறகு அதற்கு நஷ்டஈடு மூன்று வருஷத்திலோ அல்லது ப்ரோநோட் எழுதிக் கொடுத்து, அதற்கு 10 ஆண்டு காலமானால் 6½ சதவிகிதம் வட்டி என்றும் 30 ஆண்டு காலமானால் 7½ சதவிகிதம் வட்டி என்றும் சொல்வது சரியல்ல. ஏற்கெனவே இந்த 8 கம்பெனிகளுக்கு நஷ்டஈடு 4 கோடி ரூபாய் ஆகிவிட்டது. நமது போர்டுக்கு 550 கோடி ரூபாய், முதல் 700 கோடி ரூபாய் வரை கடன் இருக்கிறது. அப்படி இருக்கும்போது 20 அல்லது 30 வருஷத் தவணை வேண்டுமா என்பதை நாம் யோசிக்கவேண்டும். ஏற்கெனவே கொடுக்க வேண்டிய நஷ்டஈடு 200, 300 கோடி ரூபாய்க்குப் போகும். இன்னும் வட்டி வேறு கொடுக்கவேண்டுமென்றால் மேலும் நஷ்டஈடு அதிகமாகும். ஆகவே, 10 தவணைகள் என்று இருந்தாலும் வட்டி இல்லாமல் கொடுக்க வேண்டும்.



**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இது நஷ்டஈடு கொடுப்பதற்கான பிரிவு. நான் ஏற்கெனவே தெரிவித்தது போல் இது போன்ற பிரிவு நீதி மன்றத்திலே செல்லுபடி ஆகியிருக்கிறது. இப்போது இதை மாற்றுவதன் காரணமாக செல்லுபடி ஆகாது என்றாகிவிடக்கூடாது. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளும் இந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கின்றன. ஆகவே, இதில் சிக்கல் ஒன்றும் இல்லை.

THIRU N. K. PALANISAMY: Sir, I press my amendments.

The amendments were put and lost.

Clause 11 was put and carried.

Clauses 12, 13 and 14 were put and carried.

### *Clause* 15

MR. SPEAKER: The question is—

'That clause 15 do stand part of the Bill'.

THIRU N. K. PALANISAMY: Sir, I move the following amendment :—

'*Delete* sub-clause (3).

The amendment was duly seconded.

**திரு. என். கே. பழனிசாமி:** சார், இந்தத் தொழிலாளர்கள் ட்ரான்ஸ்பர்—மாற்றமானால் அவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்று ஏற்கெனவே இன்டஸ்டிரியல் டிஸ்பியூட்ஸ் ஆக்ட், 1947-ல் இருக்கிறது. இது ஸ்டேட் சப்ஜெக்ட் அல்ல. இந்தப் பிரிவை நிறைவேற்றுவதன் மூலம் அந்தச் சட்டத்தை 'ஓவர் ரூல்' பண்ணுவதாகிவிடும். அதற்கு மாறுபட்டதாகிவிடும். ஆகவே, கோர்ட்டுக்குப் போனால் நிற்காது; நல் அண்டு வாய்டு ஆகிவிடும். அதனால் இந்தப் பிரிவை நீக்கிவிட வேண்டும்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இந்தப் பிரிவின் அடிப்படையிலே ஏற்கெனவே பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அது சட்டப்படி வருவதற்காகத்தான் இந்தப் பிரிவில் வகை செய்திருக்

கிறோம். இண்டஸ்ட்ரியல் டிஸ்பியூட்ஸ் ஆக்ட் படி நஷ்டஈடு தொடர்முடியும் என்ற நிலை ஏற்படக் கூடாது என்பதற்காகத்தான் இந்தப் பிரிவு இருக்கிறது. இதில் தவறு இல்லை.

திரு. என். கே. பழனிசாமி அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிராகரிக்கப்பட்டது.

பிரிவு 15 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவுகள் 16, 17, 18, 19, 20, 21, 22 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

## பிரிவு 23

பிரிவு 23-க்குத் திருத்தம் கொடுத்திருந்த திருமதி த. ந. அனந்த நாயகி அவர்கள் இருக்கையில் இல்லாததால் திருத்தம் முன் மொழியப்படவில்லை.

பிரிவு 23 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 24 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

## Schedule I.

Mr. SPEAKER : The question is—

'That Schedule I do stand part of the Bill.'

The Hon. Thiru O. P. RAMAN : Sir, I move the following amendment :—

'In Schedule I,—

(i) in paragraph 3, *for* item (x), *substitute* the following item, namely :—

'(x) depreciation calculated on a flat rate basis as specified in Schedule II :

Provided that no depreciation shall be calculated on the portion of the service lines paid for by the consumers ;"

(ii) *Omit* paragraph 6 ;"





அரசினர் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டது.

அட்டவணை 1, திருத்தப்பட்டபடி, பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## Schedule II.

Mr. SPEAKER : The question is—

'That Schedule II do stand part of the Bill'.

The Hon. Thiru O. P. RAMAN : Sir, I move the following amendments :—

'In Schedule II, *for* the words "after the last account year to the date of taking over", *substitute* the words "after the last completed account year till the vesting date".

'In Schedule II, in the Table, in item C, for the words "Assets purchased now" occurring in the three places, *substitute* the words "Assets purchased new'.

அரசினர் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறை வேற்றப்பட்டது.

அட்டவணை 2, திருத்தப்பட்டபடி, பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, 'தமிழ் நாடு 1973-ம் ஆண்டு தனியார் மின்விசை வழங்கும் நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/73) திருத்தப்பட்டபடி, நிறைவேற்றப்பட வேண்டும்' என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்டமுன்வடிவு திருத்தப்பட்டபடி, சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

## 9. அரசினர் தனித் தீர்மானங்கள்

### 1972-ம் ஆண்டு வனவிலங்கு (பாதுகாப்புச்) சட்டம் (மத்திய சட்டம் 53/1972) தமிழ்நாட்டிலும் பின்பற்றப்பட வேண்டும் என்பது குறித்து.

THE HON. THIRU O. P. RAMAN : Sir, I move—

" WHEREAS this Assembly considers that it is desirable to have a uniform law throughout India for the protection of wild animals and birds and for all matters connected therewith or ancillary and incidental thereto;

AND WHEREAS the subject-matter of such a law is relatable mainly to entry 20 (Protection of wild animals and birds) of List 11 of Seventh Schedule to the Constitution of India;

AND WHEREAS in pursuance of resolutions passed under clause (1) of Article 252 of the Constitution of India by all the Houses of the Legislatures of the States of Andhra Pradesh, Bihar, Gujarat, Haryana, Himachal Pradesh, Madhya Pradesh, Manipur, Rajasthan, Uttar Pradesh and West Bengal to the effect that the matters aforesaid should be regulated in those States by Parliament by law, the Parliament has enacted the Wild Life (Protection) Act, 1972 (Central Act 53 of 1972) :

AND WHEREAS it appears to this Assembly to be desirable that the aforesaid Wild Life (Protection) Act, 1972 should be adopted in the State of Tamil Nadu;

Now THEREFORE, in exercise of the powers conferred by clause (1) of Article 252 of the Constitution of India, this Assembly hereby resolves that the Wild Life (Protection) Act, 1972 (Central Act 53 of 1972) should be adopted in the State of Tamil Nadu. "

***திரு. எம். ஏ. லத்தீப் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானம் வன விலங்குகளின் பாதுகாப்புத் தொடர்பாக, இந்தியா பூராவிலும் ஒரே முறை, ஒரே நிலை இருக்கவேண்டுமென்பதற்காக அரசியல் சட்டவிதிகளை உரிய முறையில் திருத்தம் செய்கின்ற வகையிலும், மற்ற மாநிலங்கள் ஏற்றுக்கொண்டிருப்பதைப் போன்று நமது அவையிலும் அதனை நிறைவேற்றக் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தத் தீர்மானத்தை நான் வரவேற்கிறேன்.



நம்முடைய தமிழ்நாட்டிலே வனவிலங்குகள் வேகமாகக் குறைந்து வருகின்றன. இப்படி வேகமாகக் குறைந்து வருகிற வனவிலங்குகளுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்றால் ஒரு குறிப்பிட்ட இடத்தை வனவிலங்கு சரணாலயம் என்று அறிவிப்பது மட்டுமல்ல, வனவிலங்கு சரணாலயங்களுக்கு என்று அமைந்துள்ள விதிகளை, சட்ட முறைகளை மாநிலத்தில் எங்கெங்கே வனவிலங்குகள் உறைகின்றனவோ அங்கெல்லாம் பயன்படுத்துகிற வகையில் நடைமுறையில் செய்தால்தான் அவை நல்ல முறையில் பாதுகாக்கப்படும். வனவிலங்குகள் நல்லமுறையில் பாதுகாக்கப்பட வேண்டுமென்றால் காடுகள் தேவை. காடுகளைப் பாதுகாக்கும் முயற்சியில் இன்றைக்கு நாம் இருக்கிற நிலை கண்டு மெத்த வேதனையோடு சொல்வேன்.

அகில இந்திய அளவில் இன்றைக்கு மாநிலத்தின் மொத்த நிலப்பரப்பில் 33 சதவிகிதம் குறைந்தபட்சம் காடுகள் இருக்க வேண்டுமென்பது ஒப்புக்கொள்ளப்பட்ட நிலையாக இருக்கிறது. ஆனால் இன்றைக்கு நம் மாநிலத்தில் பல ஆண்டுகளுக்கு முந்தி எடுக்கப்பட்ட கணக்கின்படி 16 சதவிகிதம் அளவுக்குத்தான் தமிழ்நாட்டின் மொத்த நிலப்பரப்பில் காடுகள் இருக்கின்றன. இருக்கின்ற காடுகளை நாம் காப்பாற்றிக்கொள்ள என்ன முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம் என்கிற கேள்விகளை எழுப்பினால் நாம் வருத்தப்படக்கூடிய பதிலாக, விடையாகத்தான் கிடைக்கிறது. இந்த நிலையை நாம் மாற்ற வேண்டும்.

இன்றைக்கு இருக்கக்கூடிய காடுகள் எல்லாம் வெகுவேகமாக அழிக்கப்பட்டு வருகின்றன. இதற்குக் காரணம் காட்டின் ஒரு பகுதியை ரெவின்யூ பாரஸ்ட் என்றும் இன்னொரு பகுதியை ரிசர்வ் பாரஸ்ட் என்றும் வைத்திருக்கிறோம். ரெவின்யூ பாரஸ்ட்டுகளுக்குள்ள விதிகள் ரிசர்வ் பாரஸ்டில் பயன்படுத்துவதில்லை. அங்கிருக்கிற மக்கள் காடுகளை அழிக்கிறார்கள். அழித்துக்கொண்டு வருகிறார்கள். என்னுடைய தொகுதியை எடுத்துக்கொண்டால் ஜவ்வாது மலை வடாற்காடு மாவட்டத்திற்கே மழையைக் கொடுக்கின்ற சாதனமாக இருக்கிறது. ஜவ்வாது மலையை இன்றையதினம் பார்க்கிறவர்கள் எல்லார் கண்ணீர் வடிக்கிறார்கள். ஜவ்வாது மலையின் பெரும் பகுதி அழிக்கப்பட்டுவிட்டது. வன மகோத்சவம் என்று கொண்டாடுகிறோம். படாடோபமாக ஒரு மரத்தை நடுகிற

[1973 ஆகஸ்ட் 13

(இ) 1973-ம் ஆண்டு நிலவுடைமைகள் (நிறைவேற்று நடவடிக்கைகளை நிறுத்திவைத்தல்) (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 22/73)

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா:** பேரவைத் தலைவர்களே—

"1973-ம் ஆண்டு நில உடைமைகள் (நிறைவேற்று நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல்) (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1973) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று நான் முன்மொழிகிறேன்.

முன்னாள் திருவாங்கூர்-கொச்சி மாநிலத்திலிருந்து கன்னியாகுமரி மாவட்டமும் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டை வட்டமும் 1956-ம் ஆண்டில் இம்மாநிலத்திற்கு மாற்றப்பட்டபோது, 1950-ம் ஆண்டு நில உடைமைகள் (நிறைவேற்று நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல்) சட்டம் (திருவாங்கூர்-கொச்சி சட்டம் 8/1950) அங்கு செயலில் இருந்தது. இச்சட்டம் இப்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டுமே செயலில் உள்ளது.

ஒரு நில உடைமையின் சுவாதீனத்தை மீண்டும் பெறுவதற்கான ஒரு வழக்கில் பிறப்பித்த டிக்ரியை நிறைவேற்றுவது குறித்த நடவடிக்கைகள், அந்த நிலத்தின் சுவாதீனத்தை ஒப்படை செய்வதற்குச் சம்பந்தப்படுகிற, வரையில் அந்த நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க இச்சட்டம் வகை செய்கிறது.

1950-ம் ஆண்டு நில உடைமைகள் (நிறைவேற்று நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல்) சட்டம் கன்னியாகுமரி மாவட்டத்திற்குப் பொருந்துகிற வரையில், அச்சட்டத்தின் செல்திறன் கால அளவு

* 1973-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1973 ஆகஸ்ட் 13] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

1973 செப்டம்பர் 24-ம் நாளன்று முடிவடையவிருக்கிறது. தமிழ்நாடு 1955-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைக்காரர்கள் பாதுகாப்புச் சட்டத்தையும், தமிழ்நாடு 1956-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைக்காரர்கள் (நியாய வாரம் செலுத்துதல்) சட்டத்தையும் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டிக்க விழையும் தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பயிரிடு குத்தகைக்காரர்கள் பாதுகாப்பு, நியாய வாரம் செலுத்துதல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டித்தல்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 26/1972) மாநிலச் சட்ட மன்றத்திலும் நிறைவேற்றப்பட்டு, அச்சட்ட வரைவிற்குக் குடியரசுத் தலைவரின் இசைவு எதிர்பார்க்கப்படுகிறது. இச்சட்ட முன்வடிவு 24—9—1973-க்குள் சட்டமாக இயற்றப்படுமென்று தோன்றவில்லை. எனவே, 1950-ம் ஆண்டு நில உடைமைகள் (நிறைவேற்று நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல்) சட்டத்தின் செல்திறனை 25—9—1973 முதல் மேலும் இரண்டாண்டுகளுக்கு நீட்டிக்கச் சட்டம் இயற்றவும், சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு 26/1972) சட்டமாக இயற்றப்பட்ட பின்னர் மேற்குறிப்பிட்ட சட்டத்தை ரத்து செய்வது பற்றித் தனியாகப் பரிசீலிக்கவும் அரசு முடிவு செய்துள்ளது. இதனை ஏற்று நிறைவேற்றித் தருமாறு இப்பேரவையைக் கேட்டுக் கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** 1973-ம் ஆண்டு நிலவுடைமைகள் (நிறைவேற்று நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல்) (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 22/73) சட்டமாக நிறைவேற்றப்படவேண்டும் என முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்டமுன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

விழாவை நாம் நடத்துகிறோமே தவிர வனத்திலுள்ள மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டு, அழிக்கப்படுவதை நாம் கவனிக்காமலே இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் தெரிந்திருக்கும். சிங்காரபேட்டை, ஆலங்காயம், காவலூர் வரை 36 மைல்களுக்கு இருந்த காடுகள் அப்படியே அழிக்கப்பட்டு வருகின்றன. ரெவின்யூ அமைச்சரும், மின்சாரத்துறை அமைச்சரும் பார்த்தார்கள். அப்படியே மரங்களை எரித்து விடுகிறார்கள். எரிந்த மரங்கள் சாம்பலாகி விடுகின்றன. அங்கே முதல் வருஷம் சாகுபடி செய்கிறார்கள். அடுத்த மழையில் மண் அடித்துக்கொண்டு போனவுடன் அப்படியே பொட்டலாகிவிடுகிறது. பலமுறை இந்த அவையில் நான் சொல்லியிருக்கிறேன்.

தயவு செய்து எங்கள் மாவட்டத்திலுள்ள ஜவ்வாது மலையைக் காப்பாற்றித் தாருங்கள். கூப்பு கூப்பு என்று கொடுக்கிறீர்கள். எங்கே மரம் இருக்கிறது? காடுகளே இல்லாமல் இருக்கும்போது காண்டிராக்டருக்கு கூப்புவிடுவதனால், இல்லாததை எல்லாம் சொந்தமாகக் கருதி பச்சை மரங்களை—பச்சைப் பிள்ளைகளைப்போல வெட்டிக்கொண்டு போவதைப் பார்த்து வேதனைப்படுகிறோம். இதனால் வருகிற வருமானம் பெரியது அல்ல. ஜவ்வாது மலையில் சந்தன மரங்களினால் கிடைக்கிற வருமானம் தான் வருமானம். அதிலும் இன்றைக்கு அரசுக்கு ஒரு பங்கு வருமானம் வந்தால் அதைப்போல நூறு மடங்கு வேறு இடங்களுக்குப் போகிறது. அவ்வளவு திருட்டுப் போகிறது. இந்தக் காடுகளைக் காப்பாற்றுங்கள். காடுகளைக் காப்பாற்றினால்தான் வன விலங்குகளைக் காப்பாற்ற முடியும்.

ஆகவே உடனடியாக அந்தப் பகுதியை வனவிலங்கு சரணாலயமாக அறிவித்து அங்குள்ள வனவிலங்குகளையும் சரி, மரங்களையும் சரி காப்பாற்றியாகவேண்டும். சில அபூர்வமான மிருகங்கள் அங்கே இருக்கின்றன. இங்குள்ள காட்டு எருமை இந்தியாவிலேயே தனி இனமாக இருக்கின்றது. அவற்றை தோலுக்காக சுட்டு வீழ்த்துகிறார்கள்; 40 ரூபாய், 50 ரூபாய் கிடைக்கும். அப்படி மிருகங்கள் சுடப்படுவதை உடனடியாகத் தடுக்க வேண்டும்.



தடுப்பதற்கு சட்டம் இல்லை வகையில்லை. காரணம்என்னவென்றால், அதிகாரிகள் இருக்கிறார்கள். அதை நான் குறை சொல்லவில்லை. அதிகாரிகள் ஆலங்காயத்திலே இருக்கிறார்கள், திருப்பத்தூரிலே இருக்கிறார்கள். ஆனால் காரியமாற்ற வேண்டும். அந்த வகையிலே இன்றிருக்கிற சட்டத்திலே இடமில்லை. ஆகையினாலே உடனடியாக ஜவ்வாது மலையை வன சரணாலயமாக மாற்ற வேண்டும். எங்கோ இருப்பதை எல்லாம் மாற்றுகிறோம். தமிழகத்திலே முக்கியமாக இருக்கிற ஜவ்வாது மலையைப்பற்றி நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

வட ஆர்காடு மாவட்ட வேலூர் முரசிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. சென்ற வாரம் நான் வேலூருக்குச் சென்றபொழுது ஒரு குறிப்பைப் பார்த்தேன். என்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் பார்த்திருக்கலாம். மரங்கள் இல்லாத காரணத்தால் ஒரு மான் தன்னுடைய குட்டியுடன் ஊருக்கு வந்துவிட்டதாம். பிள்ளைகள் எல்லாம் அதை வேடிக்கைப் பார்த்திருக்கிறார்கள். அந்த மானுக்கு மறைவதற்கு இடம் இல்லை. அந்த மானைப் பிள்ளைகள் எல்லாம் துரத்தியிருக்கிறார்கள். அந்த மான் தங்கியிருந்த காட்டில் மரங்களில்லை, வேறு வழியில்லை; அது ஊர்ப் பக்கம் வந்திருக்கிறது. ஒரு வீட்டினுள் நுழைந்திருக்கிறது. அந்த வீட்டின் கதவை சாத்தி அதைப் பிடித்துவிட்டார்கள். கடைசியிலே—எப்படியோ, அங்கே ஒரு அதிகாரி இருந்ததாகச் சொல்லப்படுகிறது—அந்த அதிகாரி, எங்களுடைய காட்டு மானைப் பிடித்து, அமிர்தி வன சரணாலயத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள் என்றால் இது என்ன கொடுமை? அந்த மலையைப் பொறுத்த அளவிலே, அங்கே நல்ல மான்கள், புள்ளிமான்கள் காட்டெருமைகள், சிறுத்தைகள், கடம்பை மான்கள் எல்லாம் உள்ளன. There are rare species of wild animals in the Javvadu Hills இதை நீங்கள் காப்பாற்றித் தரவேண்டும். இந்த மாதிரி சட்டத்தை வைத்துக்கொண்டிருப்பதால் பிரயோஜனம் இல்லை. நான் அதை மிகவும் வற்புறுத்தி, மிக வேதனையுடன் சொல்லுகிறேன். எங்களுடைய ஜவ்வாது மலையை நீங்கள் காப்பாற்றித் தராவிட்டால், எங்களுடைய காடுகளை நீங்கள் காப்பாற்றித் தராவிட்டால், வனவிலங்குகள் இருக்காது. காடுகள்

இல்லாவிட்டால், மழை பெய்யாது. மழை இல்லாவிட்டால், வட ஆற்காடு மாவட்டமே நிச்சயமாகத் தன்னுடைய செழுமையை இழந்துவிடும்.

Let the entire Javvadu Hills be declared an Animal Sanctuary and all the Revenue forest areas be transferred to the Forest Department. இந்த வேண்டுகோளை விடுத்து நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இதைத் துரிதமாகக் கவனித்து, முற்போக்கான திட்டங்களை வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சினை முடித்துக்கொள்கிறேன்.

**திரு கு. அ. பொம்மன் :** பேரவைத் தலைவரவர்களே, கனம் அங்கத்தினர் லத்தீப் அவர்கள் சொன்ன மாதிரி, நம் நாட்டில் 33 சதவிகிதம் காடுகள் இருக்கவேண்டும்; ஆனால், இப்பொழுது நமக்கு இருப்பது 16 சதவிகிதம் தான். இதைக் கடந்த சட்ட சபையிலேயே நாங்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். வன விலங்குகளை நல்ல முறையில் பாதுகாக்க வேண்டும். ஆனால், பாது காப்பது எப்படியென்றால் இன்றைக்கு வனங்களைச் சுற்றியுள்ள கிராமங்களில் இருக்கக்கூடிய ஜனங்களே அந்த மிருகங்களைக் கொன்றுவிடுகிறார்கள். அதற்கும் லைசன்ஸ் கொடுக்கப்படுகிறது. அந்த மாதிரி வனங்களைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கு லைசன்ஸ் கொடுக்காமல் இருப்பதுதான் மிக நல்லது. அப்பொழுதுதான் வனவிலங்குகளைக் காப்பாற்ற வசதி ஏற்படும்.

அதே மாதிரிதான் காடுகளின் நிலையும். நாச்சுரல் பாரஸ்ட்ஸ் என்று சொல்லக்கூடிய காடுகளை எல்லாம் அழித்து, செயற்கை முறையிலே வனங்களை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அந்தச் செயற்கை வனங்கள் எதற்காகப் பிரயோஜனம்? அவை கமர்ஷியல் பர்ப்பஸுக்காகத்தான் பிரயோஜனம். ஆகவே, அவற்றை வனம் என்பதில் அர்த்தமே இல்லை. நீலகிரி மாவட்டம் மலைகள் நிறைந்த மாவட்டம். அந்த மாவட்டத்தில் மழை பெய்யாததனால் தான் நமக்கு மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டது. ஆகவே, மரங்கள் இருப்பது மழையைக் கொண்டு வருவதற்கே அறிகுறி என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான். யூக்கலிப்டஸ்



மரங்களைப் போட்டு அவற்றைக் கூப்பு விட்டு வியாபார நோக்குடன் செய்கிறார்கள். அது ரொம்பத் தவறு. ஆகவே, நாச்சுரல் பாரஸ்ட்ஸ் இருக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, வனங்களிலே நெருப்பை வைத்துவிடுகிறார்கள். அதைச் சரியான முறையிலே கண்காணிக்காததாலே, ஒரு மரம் எரிந்தால் கூட, எல்லா மரங்களும் எரிந்துவிடுகின்றன. அது மாதிரி முக்குறுத்தி என்ற இடத்திலே மரங்கள் அழிந்துவிட்டன. நமக்கு வனம் மிக முக்கியம்.

அதேபோல் வனவிலங்குகளை நாம் பாதுகாக்கவேண்டியிருக்கிறது. நீலகிரி மாவட்டத்தில் மரங்கள் நிறைய இருக்கின்றன. ஆகவே, அவற்றைக் காப்பாற்ற முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, before the Hon. Minister replies I want to ask one thing. There is a sort of current idea in public that all wild animals are evacuating from Tamil Nadu to Mysore and Kerala because of want of forests here, particularly from the Nilgiris to Mysore State and they are elephants. Is it true? I do not know; the Hon. Minister may be able to give us correct information.

**மாண்புமிகு திரு ஓ. பி. இராமன் :** தலைவர் அவர்களே, பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் வன விலங்குகள் பாதுகாக்கப்பட வேண்டும், அதற்கு மலை வளம் அழிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்று நல்ல ஆர்வத்தோடு பேசினார்கள். நான் உள்ளபடியே, அதை வரவேற்கிறேன். பொதுவாக, சட்டங்கள் தவறுகள் இழைக்கக் கூடாது என்று இருந்தாலும் தவறுகள் நடந்துகொண்டிருப்பதை நாம் உணர்கிறோம். உதாரணமாக, திருடக் கூடாது என்று சட்டம் இருந்தால்கூட, திருடுகள் எப்படியோ நாட்டிலே நடைபெறத்தான் செய்கின்றன. ஆனால், காடுகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசிடம் இருப்பதால் கூடுமான அளவு, சட்டத்தை வைத்து, எந்த அளவுக்குப் பாதுகாக்க வேண்டுமோ, அதைச் செய்ய வேண்டிய அளவுக்குச் செய்து

[திரு. ஓ. பி. இராமன்] [1973 ஆகஸ்ட் 13

வருகிறோம். இருந்தாலும் மலைப்பகுதி அழிவதைத் தடுக்க வேண்டுமென்று சொன்னால், ஆக்க பூர்வ உணர்வோடு, அந்த வளத்தைப் பாதுகாக்கவேண்டும். அங்கங்கே மலையிலே நடக்கிற காரியம்பற்றி அதிகாரிகள் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லையென்று கேட்டால், அங்கே யாராவது மரத்தை வெட்டினால், அதைக் கண்டு பிடித்து விடமுடியாது. வனாந்திரத்திலே நடப்பதெல்லாம் அவர்களுக்குத் தெரிவதில்லை. ஆனால், எப்பொழுதாவது, போகின்ற பொழுது, வெட்டப்பட்டிருக்கிறது என்று கண்டு பிடிக்கிறார்களே தவிர, அப்பொழுதைக்கப்பொழுது தவறுகள் நடக்கின்றபொழுது கண்டுபிடிப்பதிலே சற்று சிரமம் இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியிலே மாண்புமிகு திரு. பொம்மன் போன்றவர்கள் எல்லாம் கூட இருக்கிறார்கள். அங்கே இருக்கின்றவர்கள் எல்லோரும் சேர்ந்து, ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். அதிகாரிகளைப் போன்று பாதுகாக்க வேண்டுமென்ற எண்ணத்தை வளர்த்துக் கொண்டு, அழிவைத் தடுப்பதற்கு எல்லோரும் ஒத்துழைத்தால் மலை வளத்தைப் பாதுகாக்க முடியும்.

இப்பொழுது கொண்டு வந்திருக்கிற தீர்மானம் வன விலங்குகளைப் பாதுகாப்பதற்கு மத்திய சர்க்காரிலே ஒரு தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். நாடு முழுவதும் ஒரே சீராக இருக்கவேண்டுமென்ற காரணத்தால், ஷெடியூல் 1-ல் கூறப்பட்டுள்ள 1-வது, 2-வது, 3-வது பாகங்களில் கூறப்பட்டுள்ள அந்த விலங்குகள் பாதுகாக்கப்படவேண்டும். சட்டப் பேரவையினுடைய ஒப்புதலைப் பெறவேண்டுமென்பதற்காக இந்தத் தீர்மானத்தைச் சட்டமன்றத்திலே கொண்டு வந்திருக்கிறோம். இப்பொழுதே பல சட்டங்கள் இருக்கின்றன, விலங்குகளை சுடக் கூடாது; சரணாலயங்களில் சுடக் கூடாது, அல்லது சுடுவதற்கு லைசன்ஸ் பெறவேண்டுமென்று பல சட்டங்கள் இருக்கின்றன. ஆனால், இந்தத் தீர்மானத்தைப் பொறுத்தவரையிலே, ஷெடியூல் 1-ல், 1-வது, 2-வது, 3-வது பாகங்களிலே இருக்கிற மிருகங்களுக்கு, இந்தியா முழுவதிலும் பாதுகாப்பு கொடுக்கவேண்டுமென்ற தீர்மானம் நாடு முழுவதிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே, நமது மாநிலத்திலும் ஏற்றுக்கொள்ளலாம் என்ற காரணத்தில் இது கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆகவே, இதை ஏற்று நிறைவேற்றித் தரவேண்டுமென்று கோருகிறேன்.



1973 ஆகஸ்ட் 13]

**திரு எம். ஏ. லத்தீப் :** தலைவர் அவர்களே, ஒரு ஆலோசனையை நான் நல்ல எண்ணத்தோடு சொன்னேன். ஜவ்வாது முழுவதையும் Wild Life Sanatuary ஆக ஏற்றுக்கொள்ள வேண்டும், மாற்ற வேண்டுமென்ற கருத்தினை நான் சொன்னேன். இந்த ஆலோசனையை அரசு ஏற்றுக்கொள்கின்றதா, அல்லது ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதற்கு என்ன காரணங்கள், ஏற்றுக் கொள்வதில் என்ன சிரமங்கள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னால் நன்றாக இருக்கும். மரங்களை வெட்டிவிட்டால் நடவடிக்கைகள் எடுக்கிறார்கள் என்று சொன்னார். பாரஸ்ட் டிபார்ட்மெண்டிலே இருக்கிறவர்கள்பற்றி சரி. ரெவின்யூ பாரஸ்டில் இருப்பவைகளை வெட்டுகிறார்கள். உடனே பாரஸ்டு டிபார்ட்மெண்ட் அதிகாரிகளிடம் கூறினால், அதற்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்கிறார்கள். சுமார் 34 மைல் தூரத்திற்கு இன்றைக்குக் காடுகள் வெட்டப்பட்டிருக்கின்றன. காட்டிலாகா அமைச்சர் அவர்களும் ரெவினியூ இலாகா அமைச்சர் அவர்களும் வந்தால் அவைகளைப் பார்க்கலாம். இப்பொழுது ரெவினியூ அமைச்சராக உள்ளவர், பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தபொழுது, காடுகளது இரம்மியத்தை, எழிலைக் கண்டு ரசித்தார்கள். . .

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அந்த இரம்மியத்தை இரசிப்பதற்கு உதவி செய்தவர் நமது மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள்.

**திரு எம். ஏ. லத்தீப் :** ஆகவே, தயவு செய்து விளக்கம் கொடுத்தால் நன்றாக இருக்கும். ஜவ்வாது மலையை சரணாலயமாக்கி விட்டால் நாட்டுக்கு நல்லது. அப்பொழுதுதான் வன விலங்குகள் காப்பாற்றப்படும், காடுகள் காப்பாற்றப்படும். அப்பொழுதுதான் வட ஆற்காடு மாவட்டமும் பிழைக்கும். எங்களுக்குத் தண்ணீர் அளிப்பது கிணறுகள்தான். வேறு விதமான தண்ணீர் கிடையாது. அங்கு நதிகளே கிடையாது. இருப்பதோ பாலாறு ஒன்றுதான். அதிலே தண்ணீரே கிடையாது. ஆகவே, அப்பகுதிகளைக் காப்பாற்றவேண்டுமானால் ஜவ்வாது மலையை வன சரணாலயமாக அறிவிக்கவேண்டும். அப்படி ஏற்றுக்கொள்ளாவிட்டால் குறைந்தபட்சம் பரிசீலனையாவது செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்** : தலைவர் அவர்களே, சரணாலயமாக்குவதுபற்றி சென்ற ஆண்டுதான் யோசித்து, யானைமலைப் பகுதியை ஒரு பெரிய சரணாலயமாக ஏற்றுக்கொண்டிருக்கிறோம். இப்பொழுது பல பகுதிகளைச் சரணாலயமாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அந்த அந்தப் பகுதிகளிலிருந்து கோரிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் ஆண்டாண்டுதோறும் ஏலகிரி மலையை சரணாலயம் ஆக்கவேண்டும், ஜவ்வாது மலையை சரணாலயம் ஆக்கவேண்டுமென்று எல்லாம் பேசிக்கொண்டு வந்திருக்கிறார்கள். அடுத்த சரணாலயம் எடுத்துக் கொள்ளக்கூடிய சூழ்நிலை வருமானால் அதைப்பற்றி யோசிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி :

"WHEREAS this Assembly considers that it is desirable to have a uniform law throughout India for the protection of wild animals and birds and for all matters connected therewith or ancillary and incidental thereto;

AND WHEREAS the subject matter of such a law is relatable mainly to entry 20 (Protection of wild animals and birds) of List II of the Seventh Schedule to the Constitution of India;

AND WHEREAS in pursuance of resolutions passed under clause (1) of Article 252 of the Constitution of India, by all the Houses of the Legislatures of States of Andhra Pradesh, Bihar, Gujarat, Haryana, Himachal Pradesh, Madya Pradesh, Manipur, Punjab, Rajasthan, Uttar Pradesh and West Bengal to the effect that the matters aforesaid should be regulated in those States by Parliament by law, the Parliament has enacted the Wild Life (Protection) Act, 1972 (Central Act 53 of 1972);

AND WHEREAS it appears to this Assembly to be desirably that the aforesaid Wild Life (Protection) Act, 1972 should be adopted in the State of Tamil Nadu;



NOW, THEREFORE, in exercise of the powers conferred by clause (1) of Article 252 of the Constitution of India; this Assembly hereby reserves that the Wild Life (Protection) Act, 1972 (Central Act 53 of 1972) should be adopted in the State of Tamil Nadu."

தனித் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

### 4. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

### (ஆ) நிலச் சீர்திருத்தச் சட்டங்களின்கீழ், உபரி நிலங்களை ஒப்படை பெறுவதற்கான தகுதியும், முன்னுரிமை பெறுபவர்களின் வரிசை முறையும் குறித்து.

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா** : பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுதல்) (தமிழ்நாடு சட்டம் 58/1961) சட்டத்தின் 94-வது பிரிவிலுள்ள (1) உட்பிரிவின்கீழ், தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (உபரி நிலங்களை முடிவு செய்தல்) விதிகளில் செய்யக் கருதியுள்ள கீழ்க்கண்ட வரைவுத் திருத்தங்கள் சிலவற்றிற்கு மேற்சொன்ன உட்பிரிவில் கண்டவாறு நிபந்தனையின்படி ஒப்பளிப்பு வழங்கப்படவேண்டும்".

### வரைவுத் திருத்தங்கள்

மேற்சொன்ன விதிகளில்—

(1) 2-வது விதியில் (e) பகுதி விட்டுவிடப்படவேண்டும்.

(2) 5-வது விதிக்குப் பதிலாகக் கீழ்க்கண்ட விதி அமைத்துக் கொள்ளப்படவேண்டும்; அதாவது—

"5. **உபரி நிலங்களை ஒப்படை பெறுவதற்கான தகுதியும் ஒப்படை செய்யப்படவேண்டிய நிலத்தின் உயரளவு பரப்பும்.**—

(1) கீழ்க்கண்ட நபர்களும், சங்கங்களும் உபரி நிலத்தை ஒப்படை பெறத் தகுதி பெற்றிருப்பதோடு பின்வரும் வரிசை முறைப்படி முன்னுரிமை பெறவும் தகுதியுடையவராவர்.

(i) நிலத்தைப் பயிரிட்டுக்கொண்டிருந்து, இச்சட்டத்தின் விதித் துறைகளின் காரணமாக அந்நிலம் உபரி நிலம் என்று அறிவிக்கப்பட்டு அந்நிலத்தை முழுவதுமாக இழந்துவிட்ட ஒரு நபர் ;

(ii) இச்சட்டத்தின் விதித் துறைகள் காரணமாக, தம்முடைய நிலம் முழுவதையும் இழந்துவிட்ட ஒரு நபர் ;

(iii) இச்சட்டத்தின் விதித்துறைகள் காரணமாக, பயிரிடும் குத்தகைதாரர் என்ற முறையில் ஓரளவும், சொந்தக் காரர் என்ற முறையில் ஓரளவும், அல்லது பயிரிடும் குத்தகைதாரர் என்ற முறையில் முழுவதாகவும் ஒருவர் நிலம் வைத்திருந்து, அந்த நிலம் மூன்று ஸ்டாண்டர்டு ஏக்கருக்கும் கீழே குறைக்கப் பட்டிருந்தால், அந்த நபர் ;

(iv) தம்முடைய சொந்த உடலுழைப்பைக் கொண்டோ தம்முடைய குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரின் உடலுழைப்பைக் கொண்டோ நிலத்தைப் பயிரிட்டுவரும் அரிசன வகுப்பைச் சார்ந்த அல்லது பழங்குடியினராயுள்ள நிலமற்ற உழவுத் தொழி லாளர் ஒருவர் ;

(v) இந்திய தேசீய ராணுவத்தில் பணியாற்றியுள்ளவர் உட்பட ராணுவப் படைகளில் பணியாற்றி வருகின்ற அல்லது பணி யாற்றியுள்ள ஒருவர் ; 1950-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 26-ஆம் தேதிக்கு முன்னர் ராணுவத்திலிருந்து ஓய்வுபெற்ற அல்லது ராணுவம் கலைக்கப்பட்டதினால் வீடு திரும்பிய ராணுவப்படை வீரர்கள் ;

(vi), (iv) பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள நிலமற்ற உழவுத் தொழிலாளரைத் தவிர, தம்முடைய சொந்த உடலுழைப்பைக் கொண்டு அல்லது தம்முடைய குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரின் உடலுழைப்பைக் கொண்டு நிலத்தைப் பயிர் செய்யும் ஏனைய உழவுத் தொழிலாளர் ;

(vii) மூன்று ஸ்டாண்டர்டு ஏக்கருக்கும் குறைந்த பரப் பளவில் நிலம் வைத்துப் பயிரிடும் குத்தகைதாரர் ஒருவர் ;





(viii) தம்முடைய சொந்த உடலுழைப்பை அல்லது தம்முடைய குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருடைய உடலுழைப்பைக் கொண்டு பயிர் செய்யக் கூடியவரும், ரூ. 10,000/-க்கு மேற்படாத மதிப்புள்ள சொத்துக்களை இந்தியா வுக்குக் கொண்டு வந்துள்ளவருமான பர்மா அல்லது ஸ்ரீலங்கா அகதியொருவர் ;

(ix) நிலமற்ற உழவுத் தொழிலாளர்களை உறுப்பினர் களாகக் கொண்டுள்ள கூட்டுறவுப் பண்ணைச் சங்கம் ஒன்று. ஆனால் இச்சங்கத்திற்கு ஒப்படையாக வழங்கப்படும் நிலமும், இச் சங்கத்திற்குச் சொந்தமாக ஏற்கெனவே நிலம் ஏதேனுமிருந்தால் அதுவும் சேர்ந்து உச்சவரம்புப் பரப்பளவுக்கு மேற்படக்கூடாது ;

(2) (1) துணை விதியில் (i) முதல் (viii) வரையிலுள்ள பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஒருவருக்கு ஒப்படை செய்யப் படக்கூடிய மொத்த நிலப்பரப்பும், அவருக்கு ஏற்கெனவே நிலம் ஏதேனும் சொந்தமாயிருந்தால், அந்த நிலப்பரப்பும் அல்லது அவர் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவராயிருந்தால் ஏற்கெனவே அக் குடும்பம் வைத்துள்ள நிலமும் சேர்ந்து மொத்தம் ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேற்படக்கூடாது."

என்கிற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

2. தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 58/1961 கீழ் உபரி நிலங்களென அறிவிக்கப்பட்டு அரசால் எடுத்துக் கொள்ளப்பட்ட நிலங்கள், தமிழ்நாடு 1965 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (உபரி நிலத்தை முடிவு செய்தல்) விதிகளின் 5(1) விதியில் கொடுத்துள்ள முன்னுரிமை வரிசையின்படி தகுதியுள்ள நபர்களுக்கு ஒப்படை செய்யப்படுகின்றன. தற்போதுள்ள முன்னுரிமை வரிசை பின்வருமாறு :—

(i) இச்சட்டத்தின் விதித்துறைகள் மூலம் அல்லது ஒரு பாசனத் திட்டத்தின் அல்லது புனல் மின்திட்டத்தின் விளைவாகத் தமது உடைமையிலுள்ள நிலம் அனைத்தையும் இழந்துவிட்ட ஒருவர் ;

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]        [1973 ஆகஸ்ட் 13

(ii) ஒரு பகுதி பயிரிடும் குத்தகைக்காரராகவும் மற்றொரு பகுதி நில உரிமையாளராகவும் அல்லது முழுவதுமே பயிரிடும் குத்தகைக்காரராகத் தாம் நிலம் வைத்திருந்து, இச்சட்டத்தின் விதித்துறைகளின் மூலம் அவரது உடைமையிலுள்ள நிலத்தின் பரப்பு மூன்று ஸ்டாண்டர்டு ஏக்கருக்கும் குறைவாகி விட்டுள்ள ஒருவர்;

(iii) இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியுள்ளவர்கள் 26—1—50-க்கு முன்பே பணியிலிருந்து ஓய்வு பெற்ற அல்லது கலைக்கப்பட்ட இராணுவத்தினர் ஆகியோர் உட்பட இராணுவத்தில் பணியாற்றி வருகிற அல்லது பணியாற்றி வந்துள்ள ஒருவர்;

(iv) நிலமற்ற உழவுத் தொழிலாளர்கள் அல்லது நிலமற்றவர்கள் அல்லது இவ்விரு வகைப்பாட்டினர்களும் உறுப்பினர்களாக உள்ள விவசாயிகள் கூட்டுறவுச் சங்கம்; ஆனால், சங்கம் ஏற்கெனவே நிலம் ஏதேனும் வைத்திருப்பின் அவையும் சங்கத்திற்கு ஒப்படை செய்யப்படும் நிலமும் சேர்ந்து அச்சங்கத்தின் உச்சவரம்புப் பரப்புக்கு மேற்படலாகாது;

(v) தாமே நேரடியாக உழவுத் தொழிலில் ஈடுபடுவாரெனத் தோன்றும் நிலமற்ற உழவுத் தொழிலாளர் ஒருவர்;

(vi) தாமே நேரடியாக உழவுத் தொழிலில் ஈடுபடுவாரெனத் தோன்றும் நிலமற்ற ஒருவர்;

(vii) பரப்பில் ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்திருக்கும் பயிரிடும் குத்தகைக்காரர் ஒருவர்.

உபரி நிலத்தை ஒப்படை செய்வதைப் பொறுத்தமட்டில், இச்சட்டத்தின்கீழ் உபரி நிலமெனக் கையகப்படுத்தப்படும் நிலத்தைப் பயிரிட்டு வந்துள்ளவரும், அதனால் நிலத்தின் உடைமையை இழந்துவிட்டவருமான ஒருவருக்கு முதல் முன்னுரிமை அளிக்கவும், அரிசனங்களுக்கும், பழங்குடியினருக்கும், பர்மா, ஸ்ரீலங்கா அகதிகளுக்கும் முன்னுரிமை அளிக்கவும் தற்போதுள்ள முன்னுரிமை வரிசையைத் திருத்தியமைப்பது பற்றி அரசு பரிசீலித்து வந்துள்ளது.



1973 ஆகஸ்ட் 13]  [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

3. விரிவான பரிசிலனைக்குப் பின்னர், இச்சட்டத்தின்கீழ் கையகப்படுத்தப்பட்ட உபரி நிலங்களை ஒப்படை செய்வதற்காகத் தற்போதுள்ள முன்னுரிமை வரிசையில் கீழ்க்காணும் மாற்றங்களைச் செய்வதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது :—

(1) ஒரு பாசனத் திட்டம் அல்லது புனல் மின் திட்டத்தின் விளைவாக நிலம் இழந்தவர்களுக்கு முன்னுரிமை அளிப்பது அவசியமில்லையெனக் கருதப்படுவதால் அதனை நீக்கிவிடுதல்.

(2) நிலத்தில் தமது சொந்த உழைப்பின் மூலம் பயிரிட்டு வரும் அவரது குடும்பத்தினரைச் சேர்ந்த ஒருவரது உழைப்பில் பயிரிட்டு வருபவரும் இச்சட்டத்தின்கீழ் அந்த நிலம் உபரி நிலமாக அறிவிக்கப்பட்டு அதனால் அந்த நிலத்தின் உடைமையை இழந்து விட்டவருமான ஒருவருக்கு முதல் முன்னுரிமை அளித்தல்.

(3) அரிசனங்கள், பழங்குடியினர் வகுப்பினரைச் சேர்ந்த நிலமற்ற உழவுத் தொழிலாளர்களுக்கு நான்காவது முன்னுரிமை அளித்தல்.

(4) பர்மா, ஸ்ரீலங்கா அகதிகளுக்கு எட்டாவது முன்னுரிமை அளித்தல்.

(5) தற்போது நான்காவது முன்னுரிமை பெற்றுள்ள பண்ணைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒன்பதாவது முன்னுரிமை அளித்தல்.

(6) நிலமற்ற ஏனையோரைவிட நிலமற்ற உழவுத் தொழிலாளர்களுக்கே உபரி நிலங்கள் ஒப்படை செய்வது நோக்கமாயிருப்பதால், தாமே உழவுத் தொழிலில் நேரடியாக ஈடுபடுவாரெனத் தோன்றும் நிலமற்ற ஒருவருக்குத் தற்போது அளிக்கப்படும் முன்னுரிமையை நீக்கிவிடுதல்.

திருத்தியமைக்கப்பட்டுள்ள இந்த முன்னுரிமை வரிசையானது பேரவையில் நான் முன்மொழிந்த தீர்மானத்தில் கண்டுள்ளவாறு இருக்கும்.

தீர்மானத்தை இம்மாமன்றம் ஏற்று நிறைவேற்றித்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சோ. அழகர்சாமி] [1973 ஆகஸ்ட் 13

**திரு. சோ. அழகர்சாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நில உச்ச வரம்புச் சட்டத்தின்கீழ் வரக்கூடிய உபரி நிலங்களை யாருக்குக் கொடுக்கலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்ற இந்த விதிகளுக்கு அமைச்சர் அவர்கள் சில திருத்தங்களைப் பிரேரேபித்தார்கள். இந்த நில உச்ச வரம்புச் சட்டம் வந்ததற்குப் பின்னால் பல இடங்களிலே, எங்கள் பகுதியிலேகூட சில இடங்களிலே பத்து ஆயிரம் ஏக்கருக்கு, இருபதாயிரம் ஏக்கருக்குச் சொந்தமாக இருக்கின்ற ஜமீன்தார்களுடைய நிலத்தையெல்லாம் எடுத்து யாருக்கும் பிரித்துக்கொடுக்கக்கூடிய ஏற்பாடு இன்னும் நடைபெறவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போன்று ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களை வைத்துக்கொண்டிருந்தவர்கள் எல்லாம், உச்ச வரம்புச் சட்டத்தின்படி மிச்ச நிலம் இவ்வளவு என்று அறிவிக்காமல், அவர்களுடைய சொந்தக்காரர்கள், வேண்டியவர்கள் இவர்களுடைய உதவியோடு, இந்த சொத்துக்களைப் பயன்படுத்தி நிலங்களைக் கையைவிட்டுக் கொடுக்காமலே பண்ணை என்று வைத்து அவர்களே நிலத்தைப் பயன்படுத்திக்கொண்டு வருகிறார்கள்.

உச்ச வரம்புச் சட்டத்தின்படி அனுமதிக்கப்படுகிற அளவு போக மீதியிருக்கிற நிலம் என்ன இருக்கிறது என்பதை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அரசாங்கத்திற்கு அறிவிக்க வேண்டும், அப்படி அறிவிக்காவிட்டால் அதற்குரிய தண்டனையைப் பெறுவார்கள் என்ற சட்டத்தை நாம் கொண்டு வரவேண்டும். கேரளாவிலே அப்படிப்பட்ட ஒரு சட்டம் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களும் அறிவார்கள் என்று நினைக்கிறேன். அங்கே மக்கள் கமிட்டி என்ற கமிட்டி போட்டு தாசில்தார் தலைமையிலே---மற்றும் உச்ச வரம்புச் சட்டத்தின்படி எவ்வளவு அறிவித்திருக்கிறதோ அதற்கு மேலே இருக்கக்கூடிய நிலம் எவ்வளவு என்று அறிவிக்க வேண்டும்—அப்படி அறிவிக்கவில்லையென்றால் தண்டனையளிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நிலத்தை (அதாவது மிச்ச நிலத்தை) 5 ஏக்கர் நிலத்திற்கு மேல் வைத்துக் கொள்ளாமல் இருக்கின்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும்.



1973 ஆகஸ்ட் 13] [திரு. சோ. அழகர்சாமி]

அப்படிப்பட்ட மிச்ச நிலத்தைக் கொடுக்கும்பொழுது முதலிடம் யாருக்குக் கொடுக்கவேண்டுமென்றால், பரம்பரையாக நிலத்திலே சாகுபடி செய்துகொண்டிருந்த நிலமற்ற ஏழைக்குக் கொடுக்கவேண்டும்.

இரண்டாவது முன் உரிமை யாருக்கு என்றால், இதிலே நான்காவது இனமாகப் போடப்பட்டிருக்கிறதே, தம்முடைய சொந்த உடலுழைப்பைக்கொண்டோ தம்முடைய குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரின் உடலுழைப்பைக்கொண்டோ நிலத்தைப் பயிரிட்டுவரும் அரிசன வகுப்பைச் சார்ந்த அல்லது பழங்குடியினராயுள்ள நிலமற்ற உழவுத் தொழிலாளர் ஒருவர், அவருக்கு இரண்டாவது உரிமை கொடுக்கப்பட வேண்டும்.

மூன்றாவதாக, இதிலே நீங்கள் ஆறாவதாகப் போட்டிருக்கிறீர்களே அவருக்குக் கொடுக்கவேண்டும்.

நான்காவதாகக் கொடுக்கவேண்டியது இதிலே நீங்கள் ஒன்பதாவதாகப் போட்டிருக்கிறீர்களே, அதாவது நிலமற்ற உழவுத் தொழிலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டுள்ள கூட்டுறவுப் பண்ணைச் சங்கம் ஒன்று என்று போடப்பட்டிருக்கிறதே அவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டும்.

இந்த அடிப்படையிலே தான் நிலத்தை விநியோகம் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் விவசாயிகள் உண்மையிலேயே பயனடைவார்கள். இப்பொழுதுகூட, சட்டம் வந்த பிறகும்கூட, பல பண்ணைகள் அப்படியே இருக்கின்றன, காரணம் இதற்கு முன்னாலே—யாரோ ஒருவரைப் போட்டு--அவர்தான் சாகுபடி செய்துகொண்டிருந்தார் என்று பொய்யாக எழுதி அவரும் அதற்கு ஒப்புக்கொண்டு விடுவதால் அப்படியேதான் நடந்து வருகிறது.

நாம் போட்டிருக்கின்ற சட்டம் இதிலே போடப்பட்டுள்ளவர்களுக்கு சரியான முறையிலே கொடுக்கப்படவேண்டுமென்றால் ஒரு மக்கள் கமிட்டியை, எல்லா கட்சிகளையும் சேர்ந்த பொதுஜன சங்கங்களின் உறுப்பினர்களைக் கொண்ட ஒரு கமிட்டியை அமைத்து அதற்கு சர்க்கார் அதிகாரிகளைத் தலைவராகப் போட்டு--கேரளாவிலே இருப்பதைப்போன்று—மிச்ச நிலத்தை பரம்பரையாக

உழவுத் தொழிலைச் செய்துவரக்கூடியவர்களுக்கு, பாடுபடக்கூடியவர்களுக்கு, அரிசன ஏழைகளுக்கு, விவசாயத் தொழிலாளர்களுக்கு விநியோகம் செய்யவேண்டும்.

ஆகவே, அந்த முறையிலே இதிலே உள்ள இரண்டாவது ஷரத்தை 1-வதாகவும், 4-வது ஷரத்தை 2-ஆகவும், 6-வது ஷரத்தை 3-ஆகவும், 9-வது ஷரத்தை 4-ஆகவும் போட்டு இந்தத் திருத்தங்களைச் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மிகப் பிரதானமாக மக்கள் கமிட்டி என்று ஒரு கமிட்டி இருந்தால் ஒழிய சரியாக வராது. அதிகாரிகளை நம்பி மிச்ச பூமி இருக்கிறதா என்று பார்த்தால் சாகுபடி செய்வது தொடர்ந்து நிலச்சுவான்தார்களாகத்தான் இருக்கும். அதை நான் கண் முன்னாலேயே பார்க்கிறேன். ஏனென்றால் ஜமீன்தார்கள் 10,000 ஏக்கர்கள் வைத்திருந்தால் அதிலிருந்து ஒரு செண்டு கூடக் கிடைக்கவில்லை. பல நிலப் பிரபுக்கள் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தை வைத்திருக்கிறார்கள். அவர்கள் சொந்தக்காரர்களின் பெயரில் எழுதிவைத்து, அவர்கள் விட்டுக் கொடுத்ததாக பொய் ரிக்கார்டுகளைச் செய்கிறார்கள். ஆகவே அந்தக் கிராமத்திலேயிருக்கின்ற உற்பத்தியைப் பெருக்கி வருகின்ற அரிசனங்களாக இருந்தாலும் சரி, மற்றும் ஏழை நிலமற்றவர்களாக இருந்தாலும் சரி அவர்கள் பிச்சையெடுக்கும் நிலைமை இருக்கிறதே தவிர அவர்களுக்கு நிலம் கிடைக்கும் வகையில் இல்லை. நாம் எந்த நோக்கத்திற்காக இதைக் கொண்டு வருகிறோமோ அந்த நோக்கம் நிறைவேறும் வகையில் இதைக் கண்டிப்பாக அமல் நடத்த வேண்டும். எனவே உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் மிச்சம் வரும் நிலங்களை இந்தக் கமிட்டிக்கு அறிவிக்க வேண்டும். அப்படி அறிவிக்கத் தவறினால் தண்டனை தர வேண்டும் என்ற திருத்தத்தைச் செய்ய வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. மணலி சி. கந்தசாமி:** தலைவரவர்களே, இன்றைய தினம் ரெவின்யூ அமைச்சரவர்கள் கொண்டு வந்துள்ள விதிகள் திருத்தம் சரியானது என்பது என்னுடைய கருத்து.

ஆனால் எங்கள் காரியாலயத்திற்கு, பல நூற்றுக்கணக்கான மனுக்கள், விதிகளின்படி நடக்கவில்லை, நிலச்சுவான்தார்களும், அங்குள்ள கிராம உத்தியோகஸ்தர்களும் சேர்ந்து பல தில்லு





முல்லுகளைச் செய்கிறார்கள் என்ற புகார்கள் வருகின்றன என்பதைச் சொல்லித்தான் ஆக வேண்டும். இதை நிவர்த்தி செய்வதற்கு கிராம உத்தியோகஸ்தர்கள் மட்டுமல்ல, அதிகார வர்க்கம் மட்டுமல்ல, வேறு ஏதாவது ஒரு முறையிலே விதிகளின்படி கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று பரிசீலித்து அதற்கான வழிவகைகளைக் கண்டு, நாடு அமைச்சரவர்கள் பரிகாரம் ஏற்படுத்தும் விதத்தில் ஏதாவது கண்டுபிடித்து புதிதாகச் சொன்னால் அல்லது அதை அமலுக்குக் கொண்டு வந்தால் நல்லது என்று கருதுகிறேன். ஏனென்றால் அப்பாவி விவசாயிகள் பல சந்தர்ப்பங்களிலே பல விதமாக ஏமாற்றப்படுகிறார்கள் என்பது தெரிந்த விஷயம்தான்.

நான் ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த நிலத்தை உழுபவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்வது சரியல்ல. ஏனென்றால் ஏற்கனவே ஒரு சட்டம் வந்திருக்கிறது. அது இன்னும் கையெழுத்தாகவில்லை என்று வேண்டுமானால் சொல்லலாம். உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்ற சட்டம் வந்ததற்குப் பிறகு குடியானவர்களுக்கு அந்தச் சட்டத்தின் அடிப்படையிலே சொத்துரிமை வருகிறது. அந்த வகையிலே இருப்பவர்களுக்கு உபரி நிலத்திலே குத்தகை சாகுபடி செய்கின்றவர்களுக்குத் தானாகவே அவர்கள் கைக்கு விலைக்கு வாங்கிவிடும் உரிமை வந்துவிடும் அல்லவா? எனவே அவர்கள் இந்த இனத்திலே சேர்க்கப்பட வேண்டுமா என்பது என்னுடைய கேள்வி. அந்தச் சட்டத்தை விட்டுவிடப் போகிறீர்களோ என்னவோ தெரியவில்லை. அல்லது அது கைவிடப்படவில்லை, கையெழுத்தானதும் அமலுக்குக் கொண்டுவரப்படும் என்றால் குத்தகை சாகுபடி செய்பவர்கள் அந்தச் சட்டத்திற்கு உட்பட்டுத் தாங்களாகவே பெற்றுக்கொள்ளும் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட சட்டத்தில் இருக்கிறது என்ற அடிப்படையில் இதை விட்டுவிடலாம் என்று கருதுகிறேன்.

உபரி நிலத்தைக் கொடுக்கும்பொழுது பெரும்பாலானவர்களாக இருக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கு அதைக் கொடுப்பது தான் முறையாக இருக்கும். பிறகு மற்றவர்களைப் போட்டுக் கொள்ளலாம். விவசாயிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது. அதைக் குறைக்கும் விதத்தில் பாக்கி

யிருக்கும் விவசாயிகளுக்கு உரிமை கொடுக்க வேண்டும். உபரி லேபரர்கள் நியாயக் கூலி பெற மோதிக்கொண்டு வருகிறார்கள். தஞ்சை ஜில்லாவிலே அப்படிப்பட்ட விவகாரங்கள் எல்லாம் நடக்கின்றன. ஒரு கிராமத்திலே வேலை செய்ய அதிகத் தொழிலாளர்கள் வர வர, கூலி குறைகிறது, அந்தச் சட்டத்தை அமலுக்குக் கொண்டுவருவது கஷ்டமாக இருக்கிறது. விவசாயத் தொழிலாளர்களுக்கு நிச்சயமாக உரிமை கொடுக்க வேண்டும். விவசாயத் தொழிலாளர்கள் அல்லது குத்தகைதாரக் குடியானவர்களுக்கு ஏற்கெனவே இயற்றப்பட்ட சட்டத்தின்படி அந்த நிலம் வரும் நிலையில் இதைச் சேர்க்க வேண்டிய அவசியமில்லை என்றே கருதுகிறேன். இதைப்பற்றி யோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நான் சொன்னதைப்போல, அந்த விதிகள் சரியாக அமல் ஆக்கப்படுகின்றனவா என்று பார்க்க—நாங்கள் கமிட்டி போட வேண்டுமென்று கூட சொல்லவில்லை—நீங்களே யோசனை செய்து ஒரு கமிட்டியைப் போட்டு பரிசீலனை செய்து, இயற்றப்படக் கூடிய சட்டத்தை ஒழுங்காக அமலுக்குக் கொண்டுவரக்கூடிய உத்தரவாதத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, இதைப்பற்றி யோசிக்க வேண்டிய கடமையை நீங்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இதோடு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. என். கே. பழனிசாமி :** தலைவரவர்களே, 1961-வது வருஷ சட்டத்திற்கு வரக்கூடிய விதிகளை மாற்றும் முறையிலே இந்தத் திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த நிலச் சீர்திருத்தத்தின் அடிப்படையில் பெருவாரியான நிலமில்லாத விவசாயிகளுக்கு நிலம் கொடுக்கப்பட வேண்டுமென்ற கருத்து இருக்கிறது. மாளவியா கமிட்டியின் சிபார்சுகளை எடுத்துக் கொண்டாலும், அல்லது பட்டாபிராமையா சிபார்சுகளை எடுத்துக் கொண்டாலும் அல்லது சமீபத்தில் மத்திய அரசால் ஏற்படுத்தப் பட்ட சென்ட்ரல் லேண்ட் ஃபார்ம் கமிட்டியை எடுத்துக் கொண்டாலும் அவைகளில் 'மாக்சிமம் லிமிட்' தான் சொல்லப் பட்டிருக்கிறதே தவிர மினிமம் சொல்லப்படவில்லை. அதற்குக் காரணம் அரை ஏக்கர் கொடுத்தாலும், தலையிலே குப்பையை



ஏற்றி வெள்ளாமை செய்யும் பெரும்பாலான விவசாயிகளுக்குக் கொஞ்சம் நிலம் கிடைத்தாலும் போதும். ஆகவே, 75 பங்கு விவசாயத் தொழிலாளர்கள் இருக்கும் நாட்டில் கொஞ்சம் கொடுத்தாலும் போதும் என்று 'மினிமம்' வேண்டாம் என்ற நிலைமை இருக்கிறது. ஐந்து ஏக்கர் மட்டும் கொடுக்கலாம் என்பது கூடாது.

இந்த அடிப்படையிலே, உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்ற நிலையிலே, 'ஆர்ம்ட் ஃபோர்சஸ்'-இலிருந்து வருபவர்களுக்கு நிலம் கொடுக்க வேண்டுமென்றால் அவர்கள் நேரடியாக உழக் கூடியவர்களாக இருக்க வேண்டும். அப்படி இல்லாமல் 'ஆர்மி'-யில் இருந்தார்கள் என்பதற்காக மட்டும் கொடுத்தால் உடனே அவர்கள் அதை விற்றுவிடுவார்கள். பெருவாரியான கூலி விவசாயிகள் அரிசனங்கள்தான். எனவே, அரிசனங்களாக இருந்தாலும் மற்றவர்களாக இருந்தாலும் உழக்கூடியவர்களாக இல்லாதிருந்தால் நிச்சயமாக அவர்கள் விற்றுவிடுவார்கள். நிலமில்லாத விவசாயிகள் அல்லது பூமியிலிருந்து வெளியேற்றப்படுபவர்களுக்கு மினிமம் 1 ஏக்கர் அல்லது $1\frac{1}{2}$ ஏக்கர் என்று வையுங்கள். 3 ஏக்கர் என்பது அவசியமில்லை. நிலமில்லாத அரிசனங்களாக இருந்தாலும் சரி, மற்றவர்களாக இருந்தாலும் சரி அதைக் குறிப்பிட வேண்டிய அவசியமில்லை.

கோவாப்பரேட்டிவ் ஃபார்மிங் சொசைட்டி 30, 40 இருக்கின்றன. ஐந்து, ஆறு நடக்கிறதா என்று சொல்ல முடியாது. அந்த சொசைட்டிகளை பூமியிலிருப்பவர்கள் சேர்ந்துதான் ஏற்படுத்தியிருக்கிறார்கள். நிலமில்லாத விவசாயிகளெல்லாம் ஒன்று சேர்ந்து அந்த கோவாப்பரேட்டிவ் ஃபார்மிங் சொசைட்டி ஏற்பட்டால், அதைச் சர்க்கார் கொண்டு வந்திருந்தால் ரூல்ஸ் சரியாக இருக்கும். இல்லாதவர்கள் பூமி கேட்பது மாதிரி, ஏற்கெனவே சொசைட்டி பெயரால், ஏற்கெனவே இருக்கும் பூமி போதாது என்று சர்ப்ளஸ் பூமி கேட்பது சரியல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவரவர்களே, இங்கே உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் மிச்சமாகும் நிலங்களை எப்படி விநியோகம் செய்வது என்பதுதான் இதிலே பார்க்கும் செய்தியாகும். உச்ச

[திரு. எம். சுரேந்திரன்] [1973 ஆகஸ்டு 13

வரம்புச் சட்டம் பல நேரங்களிலே பல்வேறு வருஷங்களிலே நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இருந்தாலும் அது சரியாகச் செயலுக்கு வந்திருக்கிறதா என்றால் அது சரியாகச் செயலுக்கு வரவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். பல இடங்களில் உச்சவரம்பு இல்லை என்று நினைக்கும்படி நிலம் எவ்வளவு இருக்கிறது என்பது நினைக்கும்படி இல்லை. அந்த நிலையிலேதான் இப்பொழுது மிஞ்சும் மிச்ச வரம் நிலங்களை யாருக்குத் தருவது என்ற விதிமுறை வகுக்கப்பட்டிருக்கிறது. உழுபவனுக்குத்தான் நிலம் சொந்தம் என்பதை இந்த அரசாங்கமும் சரி, மற்றவர்களானாலும் சரி ஒப்புக்கொண்டிருக்கிறார்கள், அதில் சந்தேகமில்லை. அப்படியென்றால் உழுபவர்கள் அல்லாத வேறு பலருக்கு நிலத்தை வழங்குவது, வேறு காரணங்களுக்காக வழங்குவது, இப்படிப்பட்ட காரியங்களுக்கு வழங்குவது கூடாது. மிச்ச வரம்பில் இல்லாத வேறு நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலங்களைப் பெற்று யாருக்கு வேண்டுமானாலும் தரலாமே தவிர, இந்த மிச்ச வரம்பில் வரும் நிலங்களை இன்னின்னாருக்குத் தருவது என்று வரும்பொழுது உழுபவனுக்குத்தான் அது இருக்க வேண்டுமே தவிர வேறு யாருக்கும் தரக்கூடாது. இந்தச் சட்டத்தை நல்லெண்ணத்துடன், நல்ல கோட்பாட்டுடன் விதிக்கிறோம். ஆனால், இது சரியாகச் செயல்படுகிறதா என்று சரிபார்க்கக்கூடிய இயந்திரம் இப்பொழுது கூட இல்லை என்பதுதான் என்னுடைய கருத்து.

அது எங்கும் சரியாகச் செயல்படவில்லை. விதிகளை வைத்துக் கொண்டால் கூட கீழ் இருக்கும் அதிகாரிகள் செயல்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அப்படிச் செயல்படுத்த வேண்டியவர்கள் இந்தச் சித்தாந்தங்கள், கொள்கைகளின் உண்மைகளைப் புரிந்து கொள்ளாதவர்களாகவோ அல்லது புரிந்து கொள்வதன் மூலம் அவர்களுக்கு வரக்கூடிய சில சவுகரியங்கள் கிடைக்காது என்ற காரணத்தாலோ இதிலே அக்கறை இல்லாதவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, இதைச் செயல்படுத்த சரியான இயந்திரம் வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி ஒன்றரை ஆகிறது. மேலும், சிறிது அவகாசம் எடுத்துக்கொண்டு இதை முடிக்கலாம். அவையின் அனுமதியுடன் பேரவை நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடக்கும்.



1973 ஆகஸ்ட் 13]

**திரு. எம். சுரேந்திரன்:** நிலச் சீர்திருத்தம் என்று சொல்லுவது அடிப்படையான ஒன்று. நாட்டில் இருக்கக்கூடிய பெருவாரியான மக்களைச் சம்பந்தப்படுத்துகின்ற ஒன்று. ஆகவே, அடிப்படை ஏற்பாட்டைச் சரியாகச் செய்தால்தான் மேலும் எழுகின்ற கட்டடங்களைச் சரியாகக் கட்ட முடியும். மிகப் பழமையான, இந்தச் சீர்திருத்தங்களை எல்லாம் ஜீரணிக்க முடியாத அதிகாரிகளையும், அமைப்புகளையும் செக்காரிகளையும் வைத்துக்கொண்டு நாம் இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டியிருக்கிறது என்பதை இந்த அமைச்சரவை முக்கியமாகக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். ஆகவே, திரு. அழகர்சாமி அவர்கள் கூறியது போல் இந்த நிலச் சீர்திருத்தத்தை நல்லபடி நிறைவேற்ற சரியான அமைப்பாக மக்கள் கமிட்டியோ அல்லது வேறு இயந்திரமோ அவசியமாகும்.

இப்போது அரசாங்கத்திற்கு வருகிற ரிப்போர்ட் எல்லாம் கீழ் இருக்கும் அதிகாரிகள் தரும் ரிப்போர்ட்தான். அவர்கள் இப்படி ரிப்போர்ட் அனுப்பிப் பழக்கப்பட்டவர்களே தவிர, மாற்றத்தை ஜீரணிக்க முடியாத அளவுக்கு முற்போக்கான கருத்துக்களை அமைச்சர்களுக்கோ, அரசாங்கத்திற்கோ தரத் தயாராக இல்லை. ஆகவே, வேறு இயந்திரத்தை வைத்து முக்கியமான அரசியல் கட்சிகளும், மற்றவர்களும் சொல்லுகின்ற உண்மையான நிலையை ஆராய்ந்து பார்த்து இதைச் செயலுக்குக் கொண்டுவர முயற்சித்தால் இன்னும் சிறப்பாக இருக்கும்.

(திரு. நா. வீராசாமி தலைமை)

இந்தச் சட்டத்திலே உள்ளபடியே திருத்தம் வருவது நல்லது. உண்மையில் நிலத்தில் யார் பாடுபடுகிறார்களோ அவர்களுக்குத் தான் நிலம் இருக்க வேண்டுமென்ற முறையில் திருத்தி மாற்றியமைப்பது நல்லது. நாம் ஒவ்வொரு காரியத்தையும் நிறைவேற்றுகின்ற நிலையில் பல சிக்கல்கள், சங்கடங்கள் நம் அனுபவத்தில் ஏற்பட்டிருக்கின்றன.

நியாயமாகக் கிடைக்கவேண்டியவர்களுக்குக் கிடைக்கவில்லை. நியாயம் இல்லாத பல பேர்களுக்குச் சலுகைகள், சவுகரியங்கள் கிடைக்கின்றன. நாம் சாமான்யர்களின் பக்கத்தில் இருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அப்படிச் சாமானியர்களுக்கான சட்டங்

[திரு. எம். சுரேந்திரன்] [1973 ஆகஸ்ட் 13

களையும் செய்கிறார்கள். ஆனால், அந்தச் சாமானிய மக்களுக்கு சரியாகப் போய்ச் சேர்ந்ததா என்றால் இதுவரை இல்லை. சாமானிய மக்கள் பேரில் வேறு யாருக்கோ போய்க் கொண்டிருக்கும் நிலைமை நம்முடைய மாநிலத்தில் இருக்கிறது. இதை அமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்துக் கொண்டு, வரும் காலத்தில் சிரத்தையுடன் புது எண்ணங்களை ஜீரணிக்கக்கூடிய அமைப்புகளை ஏற்படுத்துவதற்கான காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, சபை முன் உள்ள பிரச்சினை முன்னுரிமை வழங்குவதில் சில மாற்றங்கள் செய்ய வேண்டுமென்று சட்டத்தின் அனுமதி கோரப் பட்டுச் சட்டத்தை நிறைவேற்றுகின்ற வகையில் உள்ள நிலைமை களைப்பற்றி உறுப்பினர்கள் பேசினார்கள்.

பொதுவாக, இந்த நில உச்ச வரம்புச் சட்டத்தில் அதிகபட்ச பூமிகளின் விநியோகத்தில் தவறுகள் இருப்பதாகக் குற்றச் சாட்டுகள் சொன்னார்கள். குறிப்பாகக் குறிப்பிட்டு எந்தக் குற்றச் சாட்டையும் சொல்லவில்லை. அதிகாரிகள் விதிமுறைகளுக்கு உட் பட்டுத்தான் நடக்கிறார்கள். சட்டத்தைப் பின்பற்றித்தான் நடவ டிக்கை எடுக்கிறார்கள்.

இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் விவசாயிகள் பயன் அடைகிறார்கள். உழுபவர்கள் பயன் அடைகிறார்கள். ஏற்கெனவே ரெக்கார்டு ஆப் டெனன்சி ஆக்ட் என்று போட்டு குத்தகை பாக்கியை ரிஜிஸ்டர் செய்து கொள்ளவேண்டுமென்று இருக்கிறது. அப்படிச் செய்து கொண்டவர்களுக்கு உரிமை இருக்கிறது. அவர்களாகவே முன்வந்து செய்யாவிட்டாலும் சட்டத்தில் சில மாறுதல்கள் மூலம் " சுவோ மோட்டோ "-வாகச் செய்ய முடியும். ஆகவே, பாதகம் ஏற்பட முடியாது. இந்தச் சட்டத்தில் கூடப் பாதகம் ஏற்படுமானால் மேலதிகாரிகளிடம் முறையீடு செய்யலாம். டி. ஆர். ஓ. இருக்கிறார், லாண்ட் கமிஷனர் இருக்கிறார். விதிமுறைகள் இருக்கின்றன. எந்தவிதமான தவறும் ஏற்பட வாய்ப்பு இல்லை. இந்தச் சட்டத்தைச் சரியான முறையில் நிறைவேற்ற குழு அமைக்க வேண்டுமென்று சொன்னார்கள். இப்போது அதிகாரிகள் சட்டத்தை நல்ல முறையில் அமல்படுத்துகிறார்கள். நிலப் பிரபுக்



1973 ஆகஸ்ட் 13] [திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா]

களுக்குச் சாதகமாகச் செய்கிறார்கள் என்று சொல்ல முடியாது. இந்த மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தை அனுசரித்து, விதி முறைகளை அனுசரித்துத்தான் நடவடிக்கை எடுத்துக் கொள்கிறார்கள். ஆகவே, இதிலே தவறுகளுக்கு எந்தவிதமான வாய்ப்பும் இல்லை என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மதிப்பிற்குரிய மணலி அவர்கள் உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற சட்டம் வந்திருப்பதால் இந்தச் சட்டத்தால் ஏற்படக்கூடிய அதிகபட்ச பூமிகளைப் பொறுத்து பாதகம் ஏற்படக்கூடாது என்று சொன்னார்கள். இப்போதே கூட இருக்கிறது—

Dispossessed tenant has no right to purchase the ownership rights from the Government even under the latest Bill pending with the Government of India.

மத்திய அரசாங்கத்தால் அனுமதிக்க இருக்கும் அந்தச் சட்டத்தில் கூட இந்தச் சட்டத்தின் மூலம் டிஸ்-பொஸஸ் செய்யப் பட்டு உரிமையைப் பெறமுடியாது. நிலத்தில் இருக்கும் குத்தகை தாரர்கள் அல்லது டெனன்ட்ஸ் அரசாங்கத்தினுடைய பூமிகளைப் பெறுவது என்ற நிலைமையில் சட்டத்தில் எந்தவிதமான பாதகமான நிலைமையும் ஏற்படவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். முன்னுரிமைகளை மாற்றுவதற்கான திருத்தமாகத் தான் இது கொண்டு வரப்பட்டிருக்கிறதே தவிர வேறு அல்ல. அரிசனங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற முன்னுரிமை நிலை இங்கு விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது என்ற முறையில் இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** இந்த முன்னுரிமைகளிலே 1, 2, 3 என்பதை நீக்கினால்தான் அரிசனத் தொழிலாளர்களுக்கு நிலம் கிடைக்கக் கூடிய நிலைமை ஏற்படும். இந்த மூன்றும் இருந்தால் நான்காவது வரக்கூடிய அரிசனத் தொழிலாளர்களுக்கு ஒரு செண்ட் நிலம் கூடக் கிடைக்காது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்த விதிகளை அமல் நடத்தும்போது சில சிக்கல்கள் வந்தன. சாதாரணமாக, நிலப் பிரபுக்களிடந்தான் நிலங்கள் இருக்கின்றன. அவர்கள் நிலத்தில்

உழுவதில்லை. சில நேரங்களில் சிலர் அப்படி நிலத்தில் உழுது கொண்டிருக்கிறார்கள். அப்படி உழுது கொண்டிருப்பவர்களை நிலத்திலிருந்து வெளியேற்றிவிட்டு இன்னொருவருக்கு அந்த நிலத்தைக் கொடுக்க வேண்டுமென்று வரும்போது சங்கடம் ஏற்படுகிறது. முதல் பகுதி, அவரே உழுது கொண்டிருந்தால் அவருக்கு அதில் உழுவதற்கு எலிஜிபிலிடி இருக்க வேண்டுமென்பதுதான். பத்தாண்டு இருபதாண்டு உழுதவனுக்கு நிலம் இல்லையென்று சொல்லி வெளியேற்றக் கூடாது என்பதற்காகத்தான் முதல் பிரிவு.

**திரு. சோ. அழகர்சாமி :** நான் சொன்னது தவறு. உபவிதிகளில் 1-வது பிரிவு இருக்கவேண்டும். சாகுபடி செய்து கொண்டிருப்பவர்களுக்கு முதல் உரிமை இருக்கவேண்டும். 4-வதாகப் போடப்பட்டிருக்கும் பிரிவை 2-வதாக மாற்ற வேண்டும். 5-வதை நீக்கிவிட்டு 6-வதாக இருப்பதை 3-வதாக ஆக்க வேண்டுமென்று சொன்னேன். முதலுரிமை சாகுபடி செய்யக்கூடியவர்களுக்குக் கொடுக்கவேண்டும். இரண்டாவது உரிமையை வேறு யாருக்கும் கொடுக்காமல் அரிசனத் தொழிலாளிக்குக் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** திரும்பவும் நன்றாகப் படித்துப் பாருங்கள். முதல் விதியும், இரண்டாவது, மூன்றாவது விதியும் கிட்டத்தட்ட ஒன்று.

'Any other person who is completely disposscessed of his holding..............'

இந்த விதிகளினால் சட்டத்தில் அவர்கள் அனுபவத்தில் 'டிஸ்பொஸஸ்' செய்யப்பட்டிருக்கிறது. அதைப் போல் 2-வது விதியில்—

'A person whose extent of holding is reduced below three standard acres held by him partly as cultivating tenant and partly as owner or wholly as cultivating tenant by virtue of the provisions of the Act.'

இந்த மூன்றும் கிட்டத்தட்ட ஒன்றுதான்.

அரசினர் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் முடிவுற்று பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணி அளவில் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.40 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.

## (10) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. *Statutory Rules and Orders*

**Nil.**

### B. *Reports, Notifications and other papers.*

50. Return of Assets submitted to the House by the Hon. Members of the Legislative Assembly (*vide* names below) :—

As on 31st March 1971—

*Members.*

1. Thiru Aladi Aruna.
2. Thiru K. M. Subramaniam.
3. Thiru A. Thyagarajan.
4. Thiru S. Perumal.
5. Thiru Tazhai M. Karunanidhi.

51. Return of Assets submitted to the House by the Hon. Members of the Legislative Assembly (*Vide* names below) :—

As on 31st March 1972—

*Members.*

1. Thiru Aladi Aruna.
2. Thiru K. P. Kandaswamy.
3. Thiru A. P. Shanmugasundaram.

4. Thiru K. M. Subramaniam.
5. Thiru M. Surendran.
6. Thiru A. Thyagarajan.
7. Thiru V. Balasundaram.
8. Thiru S. Perumal.
9. Thiru M. Meenakshisundaram.
10. Thiru Tazhai M. Karunanidhi.

52. Return of Assets as on 31st March 1968, 1969, 1970, 1971, 1972 and 1973 submitted to the House by Thiru D. V. Narayanaswamy, M.L.C.

53. Return of Assets submitted to the House by the Hon. Speaker, Hon. Minister for Public Health, Hon. Minister for Public Works, Hon. Minister for Industries, Hon. Minister for Religious Endowments and Members of the Legislative Assembly (*Vide* names below).

As on 31st March 1973—

1. Hon. Pulavar K. Govindan—Speaker.
2. Hon. Thiru K. Anbazhagan—Minister for Public Health.
3. Hon Thiru P. U. Shanmugam—Minister for Public Works
4. Hon. Thiru S. Madhavan—Minister for Industries.
5. Hon. Thiru M. Kannappan—Minister for Religious Endowments.

*Members*

1. Thiru C. V. M. Annamalai.
2. Thiru Andi alias Guruswamy
3. Thiru Aladi Aruna.
4. Thirumathi Alda M. Fowler
5. Thiru A. Arumugam.
6. Thiru C. Arumugam.
7. Thiru S. Arumugam.



8. Thiru M. Raman.
9. Thiru M. S. Radhakrishnan.
10. Thiru T. Ganapathy.
11. Thiru M. Kandasamy.
12. Thiru Tazhai M. Karunanidhi.
13. Thiru K. S. Kothandaramiah.
14. Thiru Kovai Chezhian.
15. Thiru Sangumuthu Thevar.
16. Thiru A. P. Shanmugasundaram.
17. Thiru S. Sadasivam.
18. Thiru M. S. K. Sathiyendran.
19. Thiru O. N. Sundaram.
20. Thiru K. M. Subramaniam.
21. Thiru P. Soundrapandian.
22. Thiru N. Dharmalingam.
23. Thiru A. Thyagarajan.
24. Thiru E. K. Duraisami.
25. Thiru A. M. T. Nachiappan.
26. Thiru N. Nachiappan.
27. Dr. R. Nainamalai.
28. Pulavar C. Palanisamy.
29. Dr. S. M. Palaniappan.
30. Thiru S. Perumal.
31. Thiru R. Ponnappa Nadar.
32. Thiru K. A. Mathialagan.
33. Thiru P. S. Manian.
34. Thiru A. R. Marimuthu.
35. Thiru M. Meenakshisundaram.
36. Thiru P. S. Muthuselvan.
37. Thiru M. Muthaiah.
38. Thiru K. Vezhavendan.
39. Thirumathi Jothi Venkatachellum.

இணைப்பு

[148-ம் பக்கத்திலுள்ள 112-ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

(அ) & (இ) மின்சார வாரியத்தின்கீழ் ஓர் பல்பு உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது ஆய்வில் இல்லை. அதற்கான மதிப்பீடு தயாரிக்கப் படவில்லை.

(உ) வருடத்திற்குத் தேவைப்படும் இழை விளக்குகள், ஒளி உமிழ் விளக்குகளின் எண்ணிக்கையும் அதன் மதிப்பும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | எண்ணிக்கை. | | மதிப்பு ரூபாய் இலட்சத்தில். |
|---|---|---|---|
| 1. 40" பி.சி. இழை விளக்குகள். | 3,00,000 | .. | 3·90 |
| 2. 40 வாட்ஸ் இ. எஸ். சி. இழை விளக்குகள். | 7,00,000 | .. | 9·80 |
| 3. 2'×20 வாட் ஒளி உமிழ் குழல் விளக்குகள். | 4,00,000 | .. | 32·00 |
| 4. 4'×40 வாட் ஒளி உமிழ் குழல் விளக்குகள். | 70,000 | .. | 6·30 |

(*a*) & (*b*) There is no proposal for setting up a filament lamp factory under the Tamil Nadu Electricity Board at present and no estimates have been prepared.

(*c*) The annual requirements of bulbs and their value are as follows :—

| | *Value.* (RUPEES IN LAKHS.) |
|---|---|
| 1. 40" B. C. Filament lampst —3,00,000 Nos. .. .. .. | 3·90 |
| 2. 40 W. ESC filament lamps—7,00,000 Nos. .. .. | 9·80 |
| 3. 2'×20 W. fluorescent tubular lamps—4,00,000 Nos. .. | 32·00 |
| 4. 4'×40 W. fluorescent tubular lamps—70,000 Nos. .. | 6·30 |



## இணைப்பு II

[169-ம் பக்கத்தில் 123-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

The Tamil Nadu Khadi and Village Industries Board has provided the following assistance to the individual bee keepers as per the approved pattern of assistance by the Khadi and Village Industries Commission with a view to increase the production of honey during 1971-72 and 1972-73.

| | Number of persons benefited. | Amount spent during 1971-72. | | Number of persons benfited | Amount spent during 1972-73. | |
|---|---|---|---|---|---|---|
| | | *Grant.* | *Loan.* | | *Grant.* | *Loan.* |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | RS. | RS. | | RS. | RS. |
| 1 Assistance to individuals to set up apiaries to maintain about 50 hives | 25 | 12,500 | 6,250 | 25 | 12,500 | 6,250 |
| 2 Summer course to impart scientific training in beekeeping to the beekeepers. | 80 | 2,000 | .. | 120 | 3,000 | .. |
| 3 Migration grant to migrate colonies to the spots rich in nector and pollen where honey can be extracted abundantly in special seasons. | 500 | 15,000 | .. | 500 | 15,000 | .. |
| 4 Supply of bee boxes at half cost to the beekeepers. | 300 | 45,000 | .. | 300 | 45,000 | .. |
| 5 Supply of honey extractor at half cost to the bee-keepers. | 100 | 2,000 | .. | 100 | 4,000 | .. |
| Total .. | 1,005 | 76,500 | 6,250 | 1,045 | 79,500 | 6,250 |

The above funds are made available by the Khadi and Village Industries Commission, Bombay.

The Khadi Board is implementing the following schemes financed out of Harijan Welfare funds which provide incentive to increase production of honey.

| | Staff Employed. | | Allotement. | | Target of Production of honey in Kilograms. | | Achievement Production of honey in Kilograms up to December 1972 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1971-72 | 1972-73 | 1971-72 | 1972-73 | 1971-72 | 1972-73 |
| (1) | (2) | | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1 Beekeeping Unit at Kalrayan Hills, South Arcot district. | Junior Bee Fieldman— | 1 | 2,900 | 13,158 (3 Bee Filedmen) | 500 | 1,750 | 520 | 1,390 |
| 2 Beekeeping Unit at Pillam Dam Area, Coimbatore, | Do. | 1 | 5,267 | 5,279 | 500 | 750 | 560 | 485 |
| 3 Beekeeping Unit at Javadhi Hills, North Arcot district. | Do. | 1 | 2,560 | 3,000 | 500 | 750 | 965 | 867 |
| 4 Beekeeping Unit at Elagiri Hills, North Arcot district. | Do. | 1 | 2,988 | 3,500 | 500 | 750 | 640 | 598 |
| 5 Beekeeping Unit at Narasingapuram, Madurai district. | Do. | 1 | 2,680 | 2,800 | 500 | 750 | 539 | 370 |
| Total .. | | 5 | 16,395 | 27,737 | 2,500 | 4,750 | 3,224 | 3,710 |



தேன் உற்பத்தியைப் பெருக்க நிதியுதவி அளிப்பது குறித்து கதர்-கிராமத் தொழில் ஆணைக்குழு ஏற்பளித்துள்ள முறையின்படி, 1971-72, 1972-73ஆம் ஆண்டுகளில், தேனீ வளர்க்கும் தனிப்பட்டோர்க்குத் தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியம் கீழ்க்காணும் உதவியை அளித்துள்ளது:—

| | பயனடைந்தவர்களின் எண்ணிக்கை. | 1971-72-ல் செலவான தொகை. | | பயனடைந்தவர்களின் எண்ணிக்கை. | 1972-73-ல் செலவான தொகை. | |
|---|---|---|---|---|---|---|
| | | கடன். | மானியம். | | கடன். | மானியம். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | ரூ. | ரூ. | | ரூ. | ரூ. |
| 1 சுமார் 50 தேன் அடைகளை வைத்து வரும் பொருட்டு தேனீ வளர்ப்புப் பெட்டிகளை அமைக்கத் தனிப்பட்டோர்க்கு உதவி. | 25 | 12,500 | 6,250 | 25 | 12,500 | 6,250 |
| 2 கோடை காலங்களில் தேனீ வளர்ப்பவர்களுக்குத்தேனீ வளர்ப்பில் அறிவியல் பயிற்சியளித்தல். | 80 | 2,000 | .. | 120 | 3,000 | .. |
| 3 சிறப்புக் காலங்களில், தேன் அதிகம் எடுக்கப்படக்கூடிய இடங்களுக்குத் தேனீ கூட்டங்களைக் குடியேறச் செய்வதற்கான மானியம். | 500 | 15,000 | .. | 500 | 15,000 | .. |
| 4 தேனீ வளர்ப்போர்க்குத் தேனீ வளர்ப்புப் பெட்டிகளைப் பாதி விலைக்கு வழங்குதல். | 300 | 45,000 | .. | 300 | 45,000 | .. |
| 5 தேனீ வளர்ப்போர்க்குத் தேன் எடுக்கும் சாதனத்தைப் பாதி விலைக்கு வழங்குதல். | 100 | 2,000 | .. | 100 | 4,000 | .. |
| மொத்தம் .. | 1,005 | 76,500 | 6,250 | 1,045 | 79,500 | 6,250 |

மேற்கண்ட நிதியினை, பம்பாய், கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு வழங்குகின்றது.

அரிசன நலநிதியிலிருந்து நிதியுதவி பெறும் கீழ்க்காணும் திட்டங்களையும் கதர் வாரியம் செயல்படுத்துகிறது. இத்திட்டங்கள், தேன் உற்பத்தியைப் பெருக்கும் பொருட்டு ஊக்கமளிக்க வகை செய்கின்றன.

| | வேலைக்கமர்த்தப் பட்டுள்ள பணியாளர்கள். | ஒதுக்கீடு. | | தேன் உற்பத்தி இலக்கு (கிலோ கிராமில்). | | தேன் உற்பத்தியில் சாதனை (கிலோ கிராமில்). (1972 டிசம்பர் வரை). | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 1971–72 | 1972–73 | 1971–72 | 1972–73 | 1971–72 | 1972–73 |
| (1) | (2) | (3) ரூ. | (4) ரூ. | (5) | (6) ரூ. | (7) | (8) ரூ. |
| 1 தென் ஆர்க்காடு மாவட்டம், கல்ராயன் மலையில் தேனீ வளர்ப்புப் பிரிவு. | தேனீ வளர்ப்பு இளநிலைப் பணியாளர்— 1 | 2,900 | 13,158 (தேனீ வளர்ப்பவர் மூவர்) | 500 | 1,750 | 520 | 1,390 |
| 2 கோயம்புத்தூர் பில்லம் அணைப் பகுதியில் தேனீ வளர்ப்புப் பிரிவு. | ஷை 1 | 5,267 | 5,279 | 500 | 750 | 560 | 485 |
| 3 வட ஆர்க்காடு மாவட்டம், ஜவ்வாது மலையில் தேனீ வளர்ப்புப் பிரிவு. | ஷை 1 | 2,560 | 3,000 | 500 | 750 | 965 | 867 |
| 4 வட ஆர்க்காடு மாவட்டம், ஏலகிரி மலையில் தேனீ வளர்ப்புப் பிரிவு. | ஷை 1 | 2,988 | 3,500 | 500 | 750 | 640 | 598 |
| 5 மதுரை மாவட்டம், நரசிங்க புரத்தில் தேனீ வளர்ப்புப் பிரிவு. | ஷை 1 | 2,680 | 2,800 | 500 | 750 | 539 | 370 |
| மொத்தம் .. | 5 | 16,395 | 27,737 | 2,500 | 4,750 | 3,224 | 3,710 |

# தமிழ்நாடு சட்டப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1973 ஆகஸ்ட் 14.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

*Attack on Thiru Chinthan*

*1 S.N. Q.—THIRU B. VENKATASWAMY :
THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether Thiru V. P. Chinthan was attacked on 18th July 1973; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) திரு. வி. பி. சிந்தன் 18—7—1973-ல் அரசு பேருந்து ஒன்றில் பிரயாணம் செய்து கொண்டிருந்தபோது, மூலக்கடை பேருந்து நிலையத்தில் ஒரு கூட்டத்தினரால் தடிகளாலும், இரும்புக் குழாய்களாலும் தாக்கப்பட்டார். அவர் ஸ்டான்லி மருத்துவமனையில் உள்-நோயாளியாக சேர்க்கப்பட்டார். இது சம்பந்தமாக, 11 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

THIRU B. VENKATASWAMY : We came to understand that with political motive this trade union leader Mr. Chinthan had been brutally attacked. May I know from the Hon. Chief Minister whether he is going to assure us not to allow such things to happen to trade union leaders and those engaged in public life?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாகவோ அல்லது தொழிலாளர்களிடையே ஏற்படுகின்ற கசப்பு உணர்ச்சியின் காரணமாகவோ இதுபோன்ற

முறைச் சம்பவங்கள் நடைபெறக் கூடாது என்பதுதான் அரசினுடைய நோக்கமாகும், கொள்கையுமாகும். அதற்கேற்றவாறு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

திரு. என். கே. பழனிசாமி: ஏற்கெனவே, 18 வட்டங்களிலிருந்து நோட்டீஸ் போட்டு, மிரட்டல் கடிதம் வந்ததை வைத்து முதலமைச்சர் அவர்களுக்கு, அவர்களுடைய காரியதரிசி மூலமாகவும், மற்றும் ஐ. ஜி. அவர்களுக்கு ஃபோன் மூலமாகவும், நேரடியாக மாண்புமிகு தொழில் அமைச்சரவர்களிடமும் சென்று பாதுகாப்பு கொடுக்கவேண்டும் என்று கேட்டும், அந்த சாயந்திரம் போலீஸ் ஸ்டேஷனுக்கு முன்பே 100 பேர் பட்டாக் கத்திகளோடும் சைக்கிள் செயினோடும் போக்குவரத்தைத் தடுத்து....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேட்கவேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, எனக்குக் கடிதம் எழுதப்பட்டதாகச் சொன்னார்கள். கடிதம் எழுதப்பட்டது உண்மை. ஆனால், அவர்கள் 17-ந் தேதியிட்டு எழுதிய கடிதத்தில் 'இன்றைக்கு நடைபெறுகிற கூட்டம்' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். 17-ந் தேதியிட்ட கடிதம் 18-ந் தேதிதான் போஸ்ட் செய்யப்பட்டிருக்கிறது. 18-ந் தேதி தான் கடிதத்தை எழுதியிருக்கிறார்கள். 19-ந் தேதிதான் கடிதம் எனக்குக் கிடைத்தது. ஆனால், சம்பவம் 18-ந் தேதி இரவு நடைபெற்றது என்பது அனைவருக்கும் நன்றாகத் தெரியும். முன்கூட்டி நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்று சொன்னார்கள்.

சிந்தன் அவர்களைத் தாக்குவதாக எந்த நோட்டீசும் எனக்கோ ஆட்சியினருக்கோ காட்டப்படவில்லை. அங்கே குசேலர் வருகிறார், அனைவரும் ஜாக்கிரதையாக இருங்கள் என்று தலைப்பிட்ட ஒரு நோட்டீஸ் போடப்பட்டு, அந்த நோட்டீஸ்தான் எனக்கு அனுப்பப்பட்ட கடிதத்துடன் இணைக்கப்பட்டிருந்தது. முன்கூட்டி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்ற சூழ் நிலைக்கு ஏற்றவாறு எதுவும் அங்கு இல்லை.

பொதுக்கூட்டத்தைப் பொருத்தவரையில் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருந்தது. நிகழ்ச்சிகளுக்குச் செல்லும்போது, டாக்ஸி பழுதானவுடனே பஸ்ஸிலே ஏறிப்போகும்போது, எதிர்பாராதவிதமாக இப்படிப்பட்ட சம்பவம் நடைபெற்றிருக்கின்றது. ஆனால், இந்தச் சம்பவம் நடைபெற்றவுடன் உடனடியாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகளெல்லாம் எடுக்கப்பட்டு குற்றம் சாட்டப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, கைது செய்யப்பட்டவர்கள் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்களா? இதை விசாரணை செய்வதற்குத் தனி போலீஸ் அதிகாரி நியமனம் செய்யப்பெற்றிருக்கிறாரா? அவர் இது சம்பந்தமாக ஏதாவது நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறாரா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அவர்கள் இப்பொழுது காஞ்சீபுரத்தில் தங்கியிருக்கவேண்டுமென்ற நிபந்தனையுடன் ஜாமீனில் விடப்பட்டிருக்கிறார்கள். மாநிலக் குற்றப் புலனாய்வுத் துறையினரால் இந்தச் சம்பவம் குறித்து புலனாய்வு நடைபெற்று வருகிறது.



திரு. கே. டி. கே. தங்கமணி: இப்பொழுது தனி போலீஸ் அதிகாரிக்கு இதை ஆய்வு செய்யவேண்டுமென்று ஒதுக்கப்பட்டிருக்கிறதே அவருக்கு அந்த ஸ்தலத்திலே இருக்கக்கூடிய போலீஸ் அதிகாரிகள் போதுமான உதவி செய்கின்றார்களா? அப்படிச் செய்யவில்லை என்ற தகவல் இருக்கிறதே. அப்படியானால், அவருக்குப் போதுமான ஒத்தாசை செய்யக்கூடிய டைரக்டிவ் சர்க்காரால் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: போதுமான உதவிகளை அங்குள்ள காவல் துறையினர் செய்துவருகிறார்கள். அப்படிச் செய்யப்படுகிற காரணத்தினாலேதான் இதுவரை 11 பேர்கள் இது சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

DR. H. V. HANDE: The Hon. Chief Minister in his reply said that he got the letter on 19th and that the incident took place on 18th itself. Is it not a fact that one Parameswaran telephoned to P.A. to Chief Minister and the message was conveyed to the Chief Minister? May I know whether the Hon. Chief Minister will accept the failure of Government in this? Will the Hon. Chief Minister also assure us that the persons who are responsible for failure to communicate the message to the Hon. Chief Miniser will be properly dealt with and responsibility fixed on the persons concerned for this failure and will he also assure us that proper action would be taken on these people? Will the Governmsnt accept its failure to take immediate action to prevent this catastrophe?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் எனக்கு வந்த கடிதத்தைப்பற்றிச் சொன்னேன். அவர் அந்தரங்கச் செயலாளருக்குத் தொலைபேசி மூலமாகச் சொன்னதான தகவலைச் சொன்னார்கள். கலவரச் சூழ்நிலை இருக்கிறது என்ற செய்திதான் கூறப்பட்டதே அல்லாமல் வேறு எந்தக் குறிப்பிட்ட செய்தியும் கூறப்படவில்லை. ஆகவே, அந்தச் சூழ்நிலையைக் கண்காணிப்பதற்கேற்ற வகையில் காவல் துறையினர் பயன்படுத்தப்பட்டிருக்கின்றார்கள்.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, திரு. சிந்தன் தாக்கப்பட்டது குறித்து நாம் அனைவரும் வருத்தம் தெரிவிக்கிறோம் என்றாலும் தாக்கப்பட்ட நிகழ்ச்சிக்குப் பின்னால், திராவிட முன்னேற்றக் கழகத் தொழிற்சங்கத் தலைவர்கள், தொழிற்சங்க இயக்கத்திலேயே இல்லாதவர்கள் பெயர்களெல்லாம் பட்டியலில் சேர்க்கப்பட்டிருப்பதும், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தொழிற்சங்க இயக்கத்திலேயே ஈடுபடக் கூடாது என்ற எண்ணத்தோடு மாற்றுக் கட்சிக்காரர்கள் இப்படிப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள் என்பதும் அரசுக்குத் தெரியுமா? அதுபற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : என்பதைச் சம்பவங்கள் நடைபெற்றால் அதிலே எந்தவிதமான அரசியல் வேறுபாடும் இல்லாமல், கட்சி மாச்சரியங்களுக்கு இடமில்லாமல், யாருக்கும் தாட்சண்யத்திற்கு இடம் தராமல் நடவடிக்கை எடுப்பது என்பது இந்த அரசினுடைய கொள்கையாக இருந்து வருகிறது. அந்த வகையிலே அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன் : சார், திரு. சிந்தன் தாக்கப்படுவதற்கு முன்னால், 'குசேலர் வருகிறார், ஜாக்கிரதையாக இருங்கள்' என்று நோட்டீஸ் போட்டிருப்பதாக முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியென்றால், எப்படி திட்டமிட்ட ஒரு காரியமாக இது நடந்திருக்கிறது என்பதுதான் பொருள். ஆகவே, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதிலே சதியாலோசனை செய்ததான குற்றம் சாட்டப்பட்டிருக்கிறதா, அந்த முறையில் வழக்குத் தொடரப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வழக்கினுடைய விவரங்களுக்குள் நான் செல்ல விரும்பவில்லை. நோட்டீசிலே குறிப்பிட்டிருந்த விஷயம் —"பிரதாபசந்திரனைக் கொலை செய்த கொலைகார குசேலர் வருகிறார்; பொது மக்களே ஜாக்கிரதையாக இருங்கள்" என்று தலைப்பிட்டு போடப்பட்ட அந்த நோட்டீஸ் எனக்கு வந்த கடிதத்தோடு இணைக்கப்பட்டிருந்தது.

திரு. என். கே. பழனிசாமி : இந்தக் கொலைக்குக் காரணமாக இருந்த தலைவர் வேதாசலம் என்பவர் கைது செய்யப்படாமலிருக்கிறாரே, அதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வேதாசலம் என்ற பெயருள்ள நபர் சம்பந்தப்பட்டிருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

திரு. செ. கந்தப்பன் : தலைவர் அவர்களே, சிந்தனுடைய விவகாரம் புலன் விசாரணையில் இருப்பதாக முதல்வர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், இதைவிட மிகக் கொடுமையான முறையில் நடந்த பிரதாபசந்திரன் கொலை விஷயம் எந்த நிலையில் இருக்கிறது என்கிற விஷயம்பற்றி நாட்டுக்கு எதுவும் தெரியவில்லை. அது சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டதாகப் பத்திரிகையில் பார்த்தேன். பின்னால் விசாரணை நடத்தப்பட்டதா? அந்த விசாரணையின் பேரில் புலன் விசாரணை செய்யப்பட்டதா? அரசுத் தரப்பில் என்ன முயற்சி எடுக்கப்பட்டது? முதல்வர் அவர்கள் எல்லாத் தரப்பிலும் விசாரணை செய்யப்படுகிறது என்று சொன்னார்கள். ஒரு வேளை ஆளுங்கட்சித் தரப்பில் உள்ளவர் பாதிக்கப்பட்டிருக்கிறார் என்பதற்காக அவர்கள் நிதானமாக இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பிரதாபசந்திரன் கொலை வழக்கிலே சில பேர் உடனடியாகக் கைது செய்யப்பட்டார்கள். சில பேர் கொஞ்ச காலம் கடந்து கைது செய்யப்பட்டார்கள். பிரதாபசந்திரன் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் சுப்ரீம் கோர்ட்டிலே மனு தாக்கல் செய்திருக்கிறார்கள். அதில், அந்த வழக்கை



வேறு மாநிலத்திற்கு மாற்ற வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அது இன்னும் சுப்ரீம் கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஆகவே, தாமதம் அது தாமதமாகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : தாக்கப்பட்ட திரு. வி. பி. சிந்தன் அவர்கள் மார்க்ஸிஸ கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கியமான தலைவரும், தொழிற்சங்கத் தலைவரும் ஆவார். அப்படி சிந்தன் அவர்கள் தாக்கப்பட்டது சம்பந்தமாக விசேஷ போலீஸ் அதிகாரிகளால் இதுவரை கைது செய்யப்பட்டிருப்பவர்கள் ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள். ஆகவே இந்தமாதிரி ஆளும் கட்சி அல்லது வேறு எந்தக் கட்சியானாலும்சரி, குறிப்பிட்ட கட்சியைச் சார்ந்தவர்கள் மாற்றுக் கட்சியைச் சார்ந்தவர்களைத் தாக்கும் ஒரு போக்கு இங்கு இருக்கிறது. இதைத் தடுப்பதற்கு அரசாங்கம் விசேஷ நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நாட்டில் சில இடங்களில் மாறி மாறி வருகிற சம்பவங்களாக இருக்கின்றன. திரு. கந்தப்பன் அவர்கள் கேட்ட கேள்வியில் ஆளும் கட்சி சார்புடைய பிரதாபசந்திரன் அவர்கள் கொலை செய்யப்பட்டதைப்பற்றிக் கேட்டார்கள். அப்போது இன்னொரு கட்சியைப்பற்றி குறை சொல்லப்பட்டது. இப்போது சிந்தன் அவர்கள் தாக்கப்பட்டதுபற்றிச் சொல்லும் நோக்கில் இன்னொரு கட்சி பற்றி குறை சொல்லப்படுகிறது. ஆனால் ஆட்சியைப் பொறுத்தவரையில் இப்படிப்பட்ட சம்பவங்களில் கட்சிசார்பற்ற முறையில்தான் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்பதற்கு உதாரணமாக எங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் என்று கூறப்படுகிறவர்களும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

DR. H. V. HANDE : Sir, the Hon. Chief Minister said that he only got the information about Kuchelar and not about Chinthan; what are the details he got about Kuchelar? Was it that he would be destroyed physically and whether any anticipatory measures were taken by the Government as far as Kuchelar was concerned and in the process was there any other details obtained about Chinthan also ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : குசேலரைப் பொறுத்தவரையில் குசேலர் வருகிறார், ஜாக்கிரதையாக இருங்கள் என்றுதான் நோட்டீஸ் போடப்பட்டது என்று சொன்னேனே தவிர, குசேலருக்கு இப்படிப்பட்ட ஆபத்து இருப்பதாக நோட்டீஸில் இருந்ததாக நான் சொல்லவில்லை. எதைப்பற்றியும் முன் அறிவிப்பு வந்தால் பொதுவாக காவல் துறையினர் முன் ஜாக்கிரதையாக இருக்கிறார்கள். அதையும் கடந்து சில நேரங்களில் சில காரியங்கள் நடைபெற்று விடுகின்றன. இந்தச் சட்டசபையைச் சுற்றி காவல் துறையினர் இங்கு இருக்கிறார்கள். மற்ற சிப்பந்திகள் எல்லாம் மிகவும் முன்னெச்சரிக்கையாக இருந்தும்கூட திடீரென்று இங்கு துண்டு அறிக்கைகள் போடப்பட்ட விஷயம்போல் சில காரியங்கள் மின்னல் வேகத்தில் நடைபெற்றுவிடுகின்றன.

திரு. ஜே. எ. வகாப் : தொழிற்சங்கத் தலைவராக விளங்கிய பிரதாப சந்திரன், சிந்தன் போன்றவர்கள்—கட்சிகளின் சார்பில் இருக்கிற காரணத்தால் கட்சி அடிப்படையில் இதுபற்றி இங்கு எடுத்துச் சொல்லப் படுகிறது. ஆகவே தொழிற்சங்கத் தலைவர்களாக வருபவர்கள் கட்சி சார்பற்றவர்களாக இருக்க வேண்டும் என்று அரசாங்கம் ஒரு பூர்வாங்க உத்தரவைப் பிறப்பிக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தக் காரணத்தால் இப்படிப் பட்டதொரு சம்பவம் நடைபெற்றுவிட்டதாகச் சொல்ல முடியாது. ஆனாலும் ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் இருக்க வேண்டும் என்பதையும் வெளியார் தலையீடு இல்லாமல் இருக்க வேண்டும் என்பதையும் அனைவரும் ஏற்றுக்கொண்டால் அதை அரசாங்கம் நிறைவேற்றும் என்பதை —அந்த யோசனையை—அரசு முன்கூட்டியே இந்த அவையில் சொல்லி யிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறி வார்கள்.

திரு. எம். சுரேந்திரன் : உண்மையைத் தெரிந்து கொள்வதற்காகக் கேட்டுக்கொள்கிறேன். இங்கு ஆளும் கட்சிப் பக்கத்திலிருந்து பிரதாப சந்திரன் கொலை சம்பந்தமாகக் கேள்வி கேட்கப்பட்டது. ஆகவே சிந்தனைத் தாக்கியதற்கும் பிரதாபசந்திரன் கொலைக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா என்பதைப்பற்றி அரசாங்கம் ஆராய்ந்ததா? அப்படி ஆராய்ந்திருந்தால் அதுபற்றிய முடிவு என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதையெல்லாம் ஆராயவேண் டியது நீதிமன்றம்.

திரு. செ. கந்தப்பன் : முதல் அமைச்சர் அவர்கள் என் துணைக் கேள்விக்குப் பதில் சொல்லும்போது வேறு மாநில வழக்குமன்றத் திற்கு மாற்றப்பட்டுவிட்டதாகச் சொன்னார்கள். இத்தகைய நடைமுறை தமிழகத்தில் இப்போது அடிக்கடி ஏற்படுவதைப் பார்க்கிறோம். பொது வாக நீதிபரிபாலனம் அரசுத் துறைக்கு அப்பாற்பட்டதாக இருக்கும் நிலையில் இதுபோன்ற முக்கியமான வழக்குகள் இம்மாநிலத்தில் நடப்பதைத் தடுக்கும் நோக்கத்தோடு வேறு மாநிலத்திற்கு மாற்றப்படு வதாக இருக்கிறது. அதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டி ருக்கின்றன? அப்படி மாற்றப்படுவதைத் தடுத்து நிறுத்தி இங்கேயே விசாரித்து நீதி கிடைக்கும் வகையில் விரைவுபடுத்த ஏதாவது ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வேறு மாநிலத்திற்கு பிரதாப சந்திரன் கொலை வழக்கு சம்பந்தமான நிலைமை மாற்றப்பட்டிருப்பதாக நான் சொல்லவில்லை. வேறு மாநில நீதிமன்றத்திற்கு இதை மாற்ற வேண்டுமென்று சுப்ரீம் கோர்ட்டில் ஒரு மனு தாக்கல் செய்திருக் கிறார்கள் என்றுதான் சொன்னேன். அதுபற்றி அங்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு விசாரணைக்குப் பிறகுதான் முடிவு தெரியும்.



இதற்கிடையில் சுப்ரீம் கோர்ட்டில் அரசு சார்பில் வேறு மாநிலத்திற்கு மாற்றுவதற்குத் தேவை இல்லை என்ற கருத்தும் நிச்சயமாக அறிவிக் கப்படும்.

THIRU B. VENKATASWAMY : Sir, may I know from the Hon. Minister when the proposal to have 'one union for one industry' would be implemented?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எல்லோரும் ஒத்துக்கொண்ட பிறகு.

திரு. என். கே. பழனிசாமி : 18-ம் தேதி சாயங்காலம் தாக்கப்பட்ட தினத்தில் நூறு பேர்கள் சைக்கிள் செயின்ஸ், பட்டாக் கத்திகளுடன் வந்து பஸ்களை நிறுத்தி, சைக்கிள்களை நிறுத்தி சிந்தன் வந்தாரா, குசேலர் வந்தாரா என்றெல்லாம் விசாரித்திருக்கிறார்கள். அருகே போலீஸ் ஸ்டேஷன் இருந்தும் கூட அந்தக் கூட்டம் ஏன் வந்தது என்பது பற்றி ஏன் விசாரிக்கவில்லை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மூலக்கடை பேருந்து நிற்கு மிடத்தில் 20 முதல் 25 பேர்கள் மேற்படி பேருந்திற்குள் ஏறி தடிக ளாலும், இரும்புக் குழாய்களாலும், கத்தியாலும் சிந்தனைத் தாக்கியிருக் கிறார்கள். அதில் ஒருவர் திரு. சிந்தனின் முதுகில் குத்தியிருக்கிறார். மேற்படி கூட்டத்தினர் மூலக்கடை பேருந்து நிற்குமிடத்தில் பேருந்தில் நுழைவதைக் கண்டவுடன் பேருந்தை ஓட்டிச் சென்ற ஓட்டுநர், நடத்துநர் உள்பட எல்லாப் பிரயாணிகளும் பேருந்திலிருந்து இறங்கி ஓடியிருக் கிறார்கள். பிறகு, காயம் அடைந்து சிந்தன் விழுந்ததற்குப் பிறகு அந்தப் பேருந்து போலீஸ் ஸ்டேஷனுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக் கிறது.

## *Shifting of Madras Zoo*

*2 S.N. Q.—THIRU A. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether sanction has been accorded to the Madras Corporation, to sell the site where the zoo is situated at present to the Railways; and

(b) if so, the place to which the zoo is proposed to be shifted?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :

(அ) இல்லை.

(இ) மிருகக் காட்சிச் சாலையை சென்னை நகரத்துக்கு வெளியே மாற்றும் செயற் குறிப்பு ஒன்று இருக்கிறது. மத்திய ரயில் நிலையத்தை

விஸ்தரிப்பதற்காக மிருகக் காட்சிச்சாலை இருக்கும் இடமும் அதன் பக்கத்தில் உள்ள சில நிலங்களும் தென் பிராந்திய ரயில்வேக்கு தேவைப் படுகிறது. இது அனைத்தும் பரிசீலனையில் உள்ளது.

திரு. எம். சுரேந்திரன் : இந்த மிருகக் காட்சிச்சாலை அமைந்துள்ள இடத்தை தென் இந்திய ரெயில்வேக்குத் தருவது என்று அரசாங்கம் ஒப்புக்கொண்டிருக்கிறதா? அதற்கான ஏற்பாடுகள் எவ்வளவு தூரத்தில் இருக்கின்றன? எப்போது முடியும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : முடிவு செய்யவில்லை என்று சொன்னேன். கேட்டிருக்கிறார்கள். பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. இதை மாற்றுவது சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. கே. ஏ. வகாப் : இப்போது மிருகக்காட்சிச்சாலை இருக்கிற இடத்தில், சென்னையில் உள்ள பிராட்வே பஸ் நிலையம் மிகவும் நெருக்கடியாக இருக்கிறது, எனவே அந்த இடத்திற்கு பஸ் நிலையத்தினை மாற்றுவதற்கு ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அப்படி ஒன்றும் இல்லை.

திரு. வை. பாலசுந்தரம் : மிருகக் காட்சிச்சாலை ஜன நடமாட்டம் உள்ள இடத்தில் இருந்தால்தான் அது ஜனங்களுக்கு வசதியாக இருக்கும். அதை ஜன நடமாட்டம் இல்லாத இடத்தில் அமைத்தால் வசதியாக இருக்காது. எனவே ஜன நடமாட்டம் அதிகமாக உள்ள இடத்தில் மிருகக் காட்சிச்சாலையை அமைத்தால் நன்றாக இருக்கும். ஆகவே, அமைச்சர் அவர்கள் அதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : மிருகக்காட்சிச்சாலை நன்றாக அமையுமானால் மக்கள் கட்டாயம் அங்கு சென்று பார்ப்பார்கள்.

திரு. கே. கந்தசாமி : ஏதாவது குறிப்பிட்ட இடம் இப்போது அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : சென்னையில் உள்ள மிருகக் காட்சிச்சாலையை அமைக்க கிண்டி பூங்கா ஒதுக்கக் காடு, வண்டலூர் ஒதுக்கக் காடு ஆகிய இரண்டு மாற்று இடங்களை இப்போது அரசு பரிசீலனை செய்து வருகிறது.

திரு. நா. வீராசாமி : இரண்டாண்டுகளுக்கு முன்னால் இந்த மன்றத்தில் இந்தக் கேள்வி வந்த நேரத்தில் மிருகக்காட்சிச்சாலையை வேறு ஒரு இடத்திற்கு மாற்றிவிட்டு நெருக்கடியான இடத்தில் இருக்கிற கொத்தவால்சாவடி மார்க்கட்டை இங்கே கொண்டுவரப் போகிறோம் என்று அப்போதிருந்த அமைச்சர் அவர்கள் சொன்னார்களே, அந்த யோசனை இருக்கிறதா?



மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அப்படி ஒன்றும் குறிப்பு இல்லை.

திரு. கோவை செழியன் : தலைவர் அவர்களே, நம்முடைய சென்னை மாநகரத்தில் இருக்கிற மிருகக்காட்சிச்சாலையில் இருக்கிற மிருகங்களைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது. எந்த நேரத்தில் உயிர் போய் விடுமோ என்ற நிலையில்தான் அவை இருக்கின்றன. இங்கிலாந்து நாட்டில் தன்னிச்சையாக இயங்கக்கூடிய முறையில் பெரிய காடுகளில் கார்களுக்குள்ளே அல்லது வாகனங்களுக்குள்ளே இருந்துகொண்டு சென்று பார்க்கிற அளவில் ஒரு மிருகக் காட்சிச்சாலையை அமைத்திருக்கிறார்கள். அதேபோல் சென்னையிலும் இயங்கக்கூடிய அளவிற்கு ஒரு காட்டில் இப்படி ஒரு மிருகக்காட்சிச்சாலையை அமைத்தால் மிக நன்றாக இருக்கும். அதற்கு ஏதாவது செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதுபோன்ற திட்டம்தான் அரசுக்கு இருக்கிறது. குறிப்பாக இப்போது ஹைதராபாத்தில் இருக்கிற மிருகக்காட்சிசாலையைப் போல்—அது நண்பர் செழியன் அவர்கள் குறிப்பிட்டதுபோல்தான் அமைக்கப்பட்டிருக்கிறது—அமைக்கவேண்டுமென்றுதான் அரசு விரும்புகிறது.

## திருச்சிராப்பள்ளியில் பெண்கள் பாலிடெக்னிக்

* 124 வினா—திருமதி த. ந. அனந்தநாயகி : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளியில் பெண்களுக்கென்று ஒரு தனி பாலிடெக்னிக் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, எஸ். எஸ். எல். சி. வரையில் இப்போது 'கோ-எடுகேஷன்' முறை அனுசரிக்கப்பட்டு வருகிறது. அதே போல் பாலிடெக்னிக், ஐ. டி. ஐ. போன்றவற்றிலும் அந்த முறை அனுசரிக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போது பெண்களுக்கு என்று தனி பாலிடெக்னிக்குகள் மூன்று இடங்களில் இருந்து, பெண்களுக்கு ஏற்ப, அவர்களுக்குத் தகுந்த பாடப் பகுதிகளில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில் இப்போது ஆண்களுக்கு என்று அனுமதிக்கப்படுகிற பாலிடெக்னிக்குகளில் பெண்கள் சேர்க்கப்படுவது இல்லை. அது கொள்கை சம்பந்தமான ஒன்று.

## New Buildings for Arts College at Tiruttani

*125 Q.—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether it is a fact that tenders have been called for, for the construction of new buildings for Sri Subramanyaswami Arts College, Tiruttani; and

(b) if so, when the work will be commenced?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ பரந்தாமன் : தலைவரவர்களே, திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கலைக் கல்லூரி கடந்த இரண்டு ஆண்டுகளாக அங்கே நடந்து கொண்டு வருகிறது. ஆனால் அதற்குப் போதிய கட்டடங்கள் இல்லை. அதற்கு தேவஸ்தானம் போதிய பணம் இன்னும் கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, உடனடியாக அந்த தேவஸ்தான அதிகாரிகளோடு தொடர்புகொண்டு போதிய பணத்தைப் பெற்று, புதிய கட்டடங்களை உருவாக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, திருத்தணியில் கல்லூரி வேண்டுமென்று கேட்கிறபோது 5 லட்ச ரூபாயும் 40 ஏக்கர் நிலமும் தரவேண்டுமென்று நிபந்தனை விதிக்கப்பட்டது. அந்த 5 லட்ச ரூபாயை குழுவினரோ அல்லது தேவஸ்தானமோ தருவது என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. இப்போது 2 லட்சம் ரூபாய் தந்து இருக்கிறார்கள். இன்னும் 3 லட்ச ரூபாய் தரவேண்டியிருக்கிறது.

நிலத்தைப் பொறுத்தவரையில் அங்கேயிருக்கின்ற ஆர்.டி.ஓ. அவர்கள் 23.94 ஏக்கர் பரப்பளவை 2—4—73 அன்று கல்லூரி முதல்வரிடத்தில் ஒப்படைத்து இருக்கிறார்கள். ஆனால் கட்டடங்கள் எழுப்புவதற்கும், இன்னும் மற்ற வேலைகள் செய்வதற்கும் அந்த 3 லட்சம் ரூபாய் வரவேண்டும். அதை அரசு வற்புறுத்திக்கொண்டு இருக்கிறது. விரைவில் அந்தப் பணம் வந்து சேர்ந்தால் திட்டங்கள் தீட்டி, கட்டடங்கள் கட்டும் முயற்சி எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. இ. எஸ். தியாகராசன் : தலைவரவர்களே, கட்டடங்கள் கட்டும் வரையில் டிகிரி கோர்ஸ் வராது என்று சொல்கிறார்கள் ஆகவே, விரைவில் கட்டடங்கள் கட்ட அரசு முயற்சி எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கோரியபடி முதல் ஆண்டே 5 லட்ச ரூபாய் கொடுத்திருந்தால், இரண்டு ஆண்டுகளில் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கும். டிகிரி கோர்சும்



வந்திருக்கும். முழுப் பணம் கட்டினாலொழிய டிகிரி கோர்ஸ் வராது. அந்த 5 லட்ச ரூபாயையும் பெற்றுத் தருவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் உதவி செய்து, சிபார்சு செய்து பெற்றுத்தந்தால், அதற்குப் பிறகு டிகிரி கோர்ஸ் பற்றி எண்ணலாம். முழுத் தொகை வராத வரையில் டிகிரி கோர்ஸ் தரக்கூடாது என்று கொள்கை வைத்திருக்கிறோம்.

### கூறைநாடு பகுதியில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி.

*126 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம், கூறைநாடு பகுதியில் பெண்களுக்கு தனியே ஒரு உயர்நிலைப்பள்ளி அமைத்திட அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

### நாகூர் போன்ற இடங்களில் சுற்றுலா மாளிகைகள்.

*127 வினா—திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

நாகூர், ஏற்வாடி போன்ற இடங்களில் சுற்றுலா மாளிகைகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, நாகூருக்கு நிறைய முஸ்லீம்கள் வருகிற காரணத்தால், இனிமேலாவது சுற்றுலா மாளிகை கட்டுவதற்கு அரசு உத்தேசிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்போது செயற்குறிப்பு இல்லை என்று சொன்னேன். ஏராளமான மக்கள் கூடுகிற எல்லா இடங்களிலும் சுற்றுலா மாளிகை வேண்டுமென்ற பேரவா இருந்தாலும் அதை நிறைவேற்றிக்கொள்ளத்தக்க அளவிற்கு நிதி வசதி, மற்ற வசதிகள் இல்லை. இருக்கிற நிதி வசதியை வைத்துக் கொண்டு, மற்ற நாட்டவர், வெளி மாநிலங்களிலிருந்து அடிக்கடி வந்து போகும் கொடைக்கானல், குன்னூர், ஊட்டி, குற்றாலம் போன்ற இடங்களில் சுற்றுலா மாளிகை கட்டவேண்டியிருக்கிறது. இவற்றையெல்லாம் படிப்படியாகத்தான் எடுத்துக்கொள்ள முடியும். இப்போது சுற்றுலா மாளிகை கட்டும் முயற்சி இல்லையென்றாலும், நாளடைவில் வரலாம்.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, நாகூர், ஏற்வாடி, முத்துப்பேட்டை போன்ற இடங்களுக்கு முஸ்லீம்கள் மட்டும் வரவில்லை, இந்துக்களும் வருகிறார்கள். எல்லோருக்கும் தங்குவதற்கு வசதி இல்லாமக்

சுகாதாரக்கேடும், மற்றும் பலவிதமான வியாதிகளும் பரவுகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, சுற்றுலா விடுதிகளை அங்கே அரசாங்கமே கட்டவில்லையென்றாலும், அங்கே வருகிற வருமானத்தை வைத்துக்கொண்டு, அரசாங்கம் அந்தந்த தர்மகர்த்தாக்களுக்கு ஒதுக்கி, சுற்றுலா மாளிகை கட்ட இனியாவது ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அப்படிப்பட்ட வருமானம் வருகிறது என்ற விவரக்குறிப்பு எண்ணிடத்தில் இல்லை. வெளிநாட்டிலிருந்து அதிகமான பேர்கள் வந்து தங்குகிற இடங்களில் சுற்றுலா மாளிகைகளைக் கட்ட சுற்றுலா வாரியம் மேற்கொண்டிருக்கிறது. அந்தந்த இடங்களின் முக்கியத்துவத்தைப் பொறுத்து ஏற்பாடுகள் நிறைவேற்றப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதுபோல், அரசாங்கமே சுற்றுலாத் துறை மூலம் கட்டாமல், வேறு பல வாய்ப்புகளிலிருந்து பணம் வருமேயானால் சுற்றுலா விடுதிகளைக் கட்டலாம். குறிப்பாக, அறநிலைய பாதுகாப்புத் துறை மூலமாக பல கோவில்களில், பல இடங்களில் சுற்றுலா மாளிகை எழுப்பப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட வசதிகள் இருந்தால் அந்த முயற்சி ஆராயப்படலாம்.

## *Seats in Medical Colleges.*

* 128 Q.—THIRU N. DENNIS: }
THIRU N. K. PALANISAMY: } Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to reduce the number of seats in the Medical Colleges in the State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) இல்லை.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, இப்போது இருக்கும் எண்ணிக்கையால், 'ஓவர்-கிரௌடிங்' மூலமாக, மாணவர்களுக்கு வசதிக் குறைவு ஏற்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, குறைப்பதற்கு அரசாங்கம் ஆலோசனை நடத்துகிறதா என்ற கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. இப்போது குறைக்க வேண்டிய நிலை இல்லை என்ற ஒரு கருத்து காரணமாக, இப்போது இந்த ஆண்டு குறைக்கப்படவில்லை. ஆனால் பொதுவாக, பயிற்சி பெறுகிற மாணவர்களுக்குக் கிடைக்கவேண்டிய எல்லா விதமான வாய்ப்புகளும் நல்ல முறையில் கிடைக்கவேண்டுமானால் மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தால்தான் சிறப்பான பயிற்சி கொடுக்க முடியும் என்று மருத்துவ நிபுணர்கள்



தெரிவிக்கிறார்கள். அப்படிப்பட்ட அடிப்படையில் வாய்ப்பு ஏற்படுமானால், அந்த எண்ணிக்கை குறைக்கப்படும், அது மறுபரிசீலனைக்கு உரிய ஒன்றுதான் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி: தலைவரவர்களே, இந்தக் காலேஜில் படித்துவிட்டு 'ஹவுஸ்-சர்ஜன்களாக' இருந்த பிறகு 8 மாதம், 1 வருஷம் ஆன பிறகு கூட அவர்களுக்கு வேலை கிடைக்காமல் இருக்கிற காரணத்தால், போதுமான டாக்டர்கள் இல்லாத இடங்களில், அவர்களுக்கு வேலைவாய்ப்பு போட்டுக் கொடுக்கும் முறையில், அதிகமான ஹாஸ்பிடல்ஸ் திறக்க வழி வகுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, நலத்துறைக்கு ஆகிற அவ்வளவு செலவையும், அரசாங்கத்தினுடைய வேறு துறையிலிருந்து வருகிற வருமானத்திலிருந்து பெற்று செலவழிக்கப்படுகிறது. ஏறத்தாழ 100-க்கு 9 விழுக்காடு தமிழக அரசு இப்போது செலவிட்டுக்கொண்டிருக்கிறது. இந்த அளவு பங்கீடு கூட வேறு பல மாநிலங்களில் இல்லை. ஒவ்வொரு ஆண்டும் ஹாஸ்பிடல்களில் 100 டாக்டர்கள் புதிதாக வேலைக்குச் சேர்க்கப்படுகிறார்கள். இதை அதிகப்படியாகச் செய்வதற்கு அரசாங்கத்திடம் நிதி வசதி இல்லை. ஆனால் டாக்டர்களாகப் பயிற்சி பெற்றவர்கள் அரசாங்க வேலையை எதிர்பார்த்துத்தான் பயிற்சி பெறுவது என்பது நல்லதல்ல, நாட்டுக்கும் உகந்தது அல்ல.

## *Rural Medical Centre at Tiruverkadu.*

* 129 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether the Rotary Club has come forward to run a Rural Medical Centre at Thiruverkadu near Madras City; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) ரோட்டரி கிளப் இது பற்றி அரசினரை அணுகவில்லை, ஆனால், அண்மையில் ரோட்டரி கிளப் திருவேற்காட்டில் கிராம மருத்துவ நிலையம் ஒன்றைத் தொடங்கி உள்ளது.

THIRU N. DENNIS: May I know, Sir, whether the Government will approach other Organisations like the Lion's Club in similar matters?

THE HON. THIRU K. ANBAZHAGAN: Any private Organisation or any Benevolent Society may come forward to start any type of dispensary either in rural areas or in urban areas, because necessary expenditure is met by such an Association.

பெரியம்மை ஒழிப்புத் திட்டத்தின்கீழ் பணிபுரியும் அம்மை குத்துபவர்கள்.

* 130 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1—3—1963-ல் ஆரம்பமாகிய தேசிய பெரியம்மை ஒழிப்புத் திட்டத்தில் பணிபுரியும் அம்மை குத்துபவர்களின் எண்ணிக்கை மொத்தம் எவ்வளவு?

(இ) இதுநாள்வரை அவர்களின் வேலை நிரந்தரமாக்கப்படவில்லை என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) விவர அறிக்கை ஒன்று @ அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்த பெரியம்மை தடுப்புத் திட்டம் மத்திய அரசின் திட்டமாகும். இதே போன்று முன்பு மலேரியா ஒழிப்புத் திட்டம் இருந்ததை மத்திய அரசு நிரந்தரமாக்கியுள்ளது. ஆகவே, நம்முடைய மாநில அரசு இந்த பெரியம்மை தடுப்பு திட்டத்தையும் நிரந்தரமாக்கி, அங்கே பணிசெய்பவர்களின் வேலையையும் நிரந்தரமாக்க ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, மத்திய அரசு அதை ஒவ்வொரு ஆண்டாகத்தான் ஏற்படுத்திக்கொடுக்கிறது. அப்படிக் கொடுக்கிற காரணத்தால் இடைமுறிவு ஏற்படுகிறது. ஆகவே, அவர்கள் பணியில் ஒவ்வொரு ஆண்டும் புதிதாக சேர்க்கப்படும் சூழ்நிலை இருக்கிறது. தமிழ்நாடு அரசு இப்படி இடைமுறிவு இல்லாமல் இருப்பதற்கும், அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் ஊதிய உயர்வு பெறுவதற்கும், சில விதிமுறைகளைத் தளர்த்தவேண்டுமென்று, நிர்வாகத் துறையையும், நிதித் துறையையும், நலத் துறை கேட்டுக்கொண்டிருக்கிறது. அதன் மூலமாக அவர்கள் இப்போது தற்காலிகமாக ஆற்றும் பணி ஓரளவு நிரந்தரம் செய்யப்படுவதற்கும் வழி செய்யும். அந்த வகையில் அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, விவர அறிக்கையில் குடும்ப நல இயக்குநர் நிரந்தரமாக்கவேண்டுமென்று கருதுவாரானால், அவர்களை நிரந்தரமாக்கலாம் என்று கருத்து கூறியிருக்கிறார்கள். ஆகவே, அந்த இயக்குநரிடத்தில் தொடர்புகொண்டு அவர்களின் பணியை நிரந்தரமாக்க அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அந்தக் கருத்தை அவ்வாறு எடுத்துக்கொண்டது அவ்வளவு சரியானதாக எனக்குத் தோன்றவில்லை. குடும்ப நலத் துறை, நல்வாழ்வுத் துறை இயக்குநர், அவர்களுடைய பணி இடைமுறிவு ஆகிவிடுகிற அந்தப் பணிக்காலத்தை 'கண்டோன்'

@ 388–389-ம் பக்கங்களில் இணைப்பு I-ஆக அச்சிடப்பட்டுள்ளது.



செய்யவேண்டுமென்று பரிந்துரையாகத்தான் நிதித்துறை காட்டியிருக்கிறார்கள். இடைமுறிவு ஏற்பட்டுவிட்டால் அவர்களுடைய பணியை நிரந்தரமாக்கத் தடையாகிறது. ஆகவே, விதிவிலக்கு அளித்து, அதற்குப் பிறகு நிரந்தரம் செய்யவேண்டுமென்று இருக்கிறது. இப்போது இருக்கும் விதிமுறையைத் தளர்த்தி, பணி உறுதி செய்யவேண்டுமென்பதற்குத் தான் இப்போது பொது (சர்வீஸ்) இலாகா, நிதி இலாகா ஆகியவற்றின் ஆலோசனை கேட்கப்படுகிறது.

மருத்துவ மனைகளில் சேர்க்கப்பட்ட மன நோயாளிகள்.

*131 வினா—திரு. அ. தேவேந்திரன் : மாண்புமிகு மக்கள் நல் முற்பகல் 9-30
வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடந்த ஐந்தாண்டுகளில் தமிழ்நாட்டில் மன நோயினால் பாதிக்கப்பட்டு அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர், ஆண்டு வாரியாக?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஒரு விவரப்பட்டியல் @ அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திருப்பூர் நகருக்கு வடிகால் திட்டம்.

*132 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், வினா எண். 82-க்கு 8–12–72 அன்று பேரவையில் அளித்த விடையையொட்டி, தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகராட்சி மன்றம் வடிகால் திட்டத்திற்காக ரூபாய் 50,000 குடிநீர் வாரியத்திற்குச் செலுத்தியுள்ளதா?

(இ) ஆம் எனில், மேற்படி வேலைகள் எப்போது எடுத்துக்கொள்ளப்படும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :

(அ) ஆம். ஆய்வு வேலைக்கான செலவுத் தொகையைப் பின்வருமாறு திருப்பூர் நகரசபை செலுத்தியிருக்கிறது.

7–9–72-ல் ரூ. 10,000
31–1–73-ல் ரூ. 40,000

(இ) ஆய்வுப் பணி 12–2–72-ல் மேற்கொள்ளப்பட்டது. டிசம்பர் 73-ல் அந்தப் பணி முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

@ 389-ம் பக்கத்தில் இணைப்பு II-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. வா. மை அப்துல் ஜப்பார்: தலைவர் அவர்களே, திருப்பூர் நகர சபை செலக்ஷன் கிரேடு முனிசிபாலிட்டியாக இருந்துகொண்டிருக்கிறது. ஒரு லட்சத்திற்கு அதிகமாக மக்கள் அங்கே வாழ்கிறார்கள். அங்கே சுகாதார வசதிகள் மிகவும் குறைவாக இருப்பதினால், கொசுத் தொல்லைகள் போன்றவை மிகவும் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, இந்த வடிகால் திட்டத்தை உடனடியாக அரசு எடுத்துக்கொண்டு நிறைவேற்றிவைக்க தக்க ஏற்பாடுகளைச் செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, திட்டங்களை நிறைவேற்றுகின்றபொழுது அதற்கான பரிசீலனையுடன் நடைபெற்றால்தான் அவை ஒழுங்காக நடைபெறும். இது பரிசீலனையில் இருக்கிறது. நோயாளிக்கு டாக்டர் நாடியை ஆராய்வதற்கு முன்பு மருந்து கொடுக்கக் கூடாது. பரிசீலனை செய்யவேண்டும். அதற்கு ஏறத்தாழ 8, 9 மாத காலம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. அந்தப் பரிசீலனை முடிந்ததும் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நிதி ஆதாரங்கள் தேடப்படும். நிதி ஆதாரங்கள் கிடைத்தவுடனே அந்தத் திட்டம் செயல் முறைக்கு வரும்.

*Regional Public Relations Offices*

* 133 Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether a number of Public Relations Offices have been opened recently at various centres in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) புதிதாக நான்கு மண்டல மக்கள் தொடர்பு அலுவலகங்கள் அண்மையில் இம்மாநிலத்தில் துவக்கப் பட்டுள்ளன.

(இ) (1) கன்னியாகுமரி,
(2) இராமநாதபுரம்,
(3) செங்கல்பட்டு, மற்றும்
(4) தர்மபுரி மாவட்டங்கள்

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, இந்த பப்ளிஸிடி டிபார்ட்மெண்ட் சென்ட்ரல் கவர்ன்மெண்ட் ஸ்கீம்களையும் பப்ளிஸிடி செய்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தமிழ்நாடு சம்பந்தப்பட்ட அளவுக்குத்தான் செய்கிறது.

Thiru K. S. KOTHANDARAMIAH: Sir, may I know from the Hon. Minister for Backward Classes whether the Public Relations Officer is also the Information and Publicity Officer and also what is the nature of work expected of him?



மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: அவர்களுடைய பணி, அரசாங்கத்தினுடைய முன்னேற்றப் பணிகளையும், திட்டங்களையும் மக்களிடையே படக்காட்சிகள், பொதுக் கூட்டங்கள், நாடகங்கள் மற்றும் பொருள் காட்சிகள் ஆகியவற்றின் மூலமாக விளம்பரப்படுத்துவதாகும்.

திரு. ஆண்டி என்ற குருசாமி: இந்த மண்டல மக்கள் தொடர்பு அலுவலகங்கள் ஏற்படுத்தியது, முக்கியமாக அரசாங்கத்தின் தேர்தல் பிரசார நேரங்களில் முழுக்க முழுக்கப் பயன்படுகிறது என்பது உண்மையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: அதற்குச் சிறிது கூட ஆதாரம் இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இவைகளுக்கு அலுவலர்களை நியமிக்கும்பொழுது எந்த அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்கள்? இது எம்ப்ளாய்மெண்டு எக்ஸ்சேஞ்ச் மூலமாக நடைபெறுகிறதா, நேரடியாக நடைபெறுகிறதா அல்லது பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாக நடைபெறுகிறதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: நேரடியாகவும், இலாக்காக்களிலிருந்தும் சேர்க்கப்படுகிறார்கள்.

திரு. கே. கந்தசாமி: மக்கள் தொடர்பு அதிகாரிகள் மாவட்ட ரீதியாக அரசினுடைய சாதனைகளையும் எதிர்காலத் திட்டங்களையும் எடுத்து உரைக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். சில அரசாங்க அலுவலகங்களில் குறைபாடுகள் இருக்கின்றன. அவற்றை அவர்களே நேரில் காணக் கூடும். அவர்கள் அப்படிக் காண்கின்றபொழுது, அரசியல்வாதிகள் அதைப் பற்றி மேடையில் பேசுவதற்கு வாய்ப்பு இல்லாமல் அவர்கள் அமைச்சர்களுக்கோ அல்லது அரசுக்கோ நேரடியாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ தெரிவிக்கவேண்டும் என்ற குறிப்புகள் அனுப்பப்பட்டிருக்கின்றனவா? இல்லையென்றால், அம்மாதிரி குறிப்புகள் அனுப்ப அரசாங்கம் ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தை நினைவில் கொண்டு ஆவன செய்யப்படும்.

ஆசியா '72 கண்காட்சியில் தமிழக அரங்கு

*134 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) ஆசியா '72 கண்காட்சியில் அமைக்கப்பட்ட தமிழக அரங்குக்கு அலங்காரம் செய்ய வந்தவாசி பாய் கூட்டுறவுச் சங்கத்தில் இருந்து எவ்வளவு ரூபாய்க்குப் பாய்கள் வாங்கப்பட்டன?

(இ) அந்த மொத்தத் தொகையும் வந்தவாசி பாய் கூட்டுறவு சங்கத்திற்குக் கொடுக்கப்பட்டு விட்டதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) ஆசியா '72 கண்காட்சியில் அமைக்கப்பட்ட தமிழக அரங்கிற்கு அலங்காரம் செய்ய வந்த வாசிப் பாய் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து வாங்கப்பட்ட பாய்களின் விலை ரூ. 8,651 (ரூபாய் எண்ணாயிரத்து அறுநூற்று ஐம்பத்து ஒன்று மட்டும்.)

(இ) ஆம். முழுத் தொகையும் கொடுக்கப்பட்டுவிட்டது.

திரு. கே. எ. மதாம்: இப்படி அரசாங்கத்தினால் வாங்கப்பட்ட கோரைப் பாய்கள் வெளி நாட்டினரால் பாராட்டப்பட்டனவா? அப்படிப் பாராட்டப்பட்டால், இப்படிப்பட்ட பாய்களை அப்படிப்பட்ட அரங்குகளிலும் கண்காட்சிசாலைகளிலும் பயன்படுத்துவதற்கு அரசாங்கம் பொர்சு செய்யுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: வெளிநாட்டினரால் பாராட்டப் பட்டிருக்கிறது. எனவே மேற்கொண்டு இன்னும் அதற்கு வேண்டிய ஆதரவு அளிக்கப்படும்.

நெசவுத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம்

*135 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கைத்தறித் தொழிலாளர், பட்டு நெசவுத் தொழிலாளர் ஆகியவர் களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்க அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஆம்

திரு. கே. டி.கே. தங்கமணி: இதற்காகப் போடப்பட்டிருக்கக்கூடிய குழு எப்பொழுது தன்னுடைய சிபாரிசுகளை சமர்ப்பிக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஒரு அறிக்கை கொடுத்து மீண்டும் சில விளக்கங்கள் கேட்டு அனுப்பப்பட்டிருக்கிறது. விரைவிலே தருவார்கள்.

திரு. இ. எஸ். தியாகராசன்: இதிலே கூட்டுறவுச் சங்கத்தில் சேர்க்கப் பட்ட நெசவாளர்களும் சேர்க்கப்பட்டிருக்கிறார்களா? கூட்டுறவுச் சங்கத்திற்கு அப்பால் இருக்கிற நெசவாளர்களும் இதில் சேர்த்துக்கொள்ளப்படு வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த வரையில் நாமே ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கூலியை நிர்ணயிக் கிறோம். இப்படிப்பட்ட அறிக்கை வருகின்றபொழுது, இது அவர்களுக்குச் சாதகமாக இருக்குமானால், இதையும் நாம் கணக்கில் எடுத்துக்கொண்டு கூட்டுறவுத் துறையில் உள்ள நெசவாளர்களுக்கும் கூலியை நிர்ணயிக் கலாம்.



மண்வாரி இயந்திரத் தொழிற்சாலை

*136 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை-திருவள்ளூரில் மண்வாரி இயந்திரத் தயாரிப்புத் தொழிற் சாலை ஒன்று நிறுவுவதற்கான அனுமதி ஏதேனும் வழங்கப் பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஆம்.

திரு. ஆ. பரந்தாமன்: இந்துஸ்தான் மோட்டார் என்று சொல்லப் படுகிற எர்த் மூவர்ஸ் கம்பெனி என்னுடைய தொகுதியில் இருக்கிறது. அந்தக் கம்பெனி துவக்கப்படுகிற நேரத்தில் அந்த வட்டார மக்கள் பெரும் அளவுக்கு பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை அளித்தார் கள். ஆனால் அவர்களுடைய குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்பு தந்து இங்கே எடுத்துக்கொள்வதில்லை என்று கருதுகிறார்கள். ஆகவே, அந்த அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு அந்த வட்டாரத்து மக்களுடைய குறைகளைப் போக்குவதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நிலத்தைக் கொடுத்தவர்களுடைய குடும்பத்தினர் இந்தத் தொழிற்சாலையில் பணிபுரிவதற்கு ஏற்ற தகுதி படைத்தவர்களாக இருப்பார்களேயானால், அவர்களுடைய பெயர்களை அரசுக்கு அனுப்பலாம். நிச்சயம் அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக் கும்படி அரசு கேட்டுக்கொள்ளும்.

திரு. கா. வேழவேந்தன்: இந்தத் திட்டத்தினுடைய மொத்த மதிப்பீடு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, there is the biggest Earth Movers Factory in Kolar Gold Fields area in the Mysore State which is very near the Dharmapuri district and the conditions for starting such a factory exist in that district also. Considering all the favourable conditions there, may I know from the Hon. Minister whether he will consider a proposal to establish a Earth Movers Factory in the Dharmapuri district?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: திருவள்ளூரில் ஏற்கெனவே தொடங்கி விட்டோம். ஆகவே இனிமேல் தொடங்குவதற்கு வாய்ப்பு இல்லை.

## Nirodh Factories

*137 Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any candoms factories are to be set in (i) Mettur and (ii) Madurai ; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) (இ) ஹிந்துஸ்தான் லேடக்ஸ் லிமிடெட் என்னும் இந்திய அரசுக்குச் சொந்தமான நிறுவனம் தமிழ் நாட்டில் நிரோத் உற்பத்திசெய்யும் தொழிலகம் நிறுவ யோசித்திருக் கிறது. அந்தக் கம்பெனியைச் சேர்ந்த நிபுணர் ஒருவர் அரசாங்க அதி காரி ஒருவரின் துணையுடன் அந்தத் தொழிலகத்தை நிறுவ ஏற்ற இடத்தைத் தேர்ந்தெடுப்பதற்காக மேட்டூர் உள்படச் சில இடங்களைப் பார்வையிட்டு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தார். ஆனால் நிறுவும் இடத்தைப் பற்றிய இறுதி முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட் டத்தில் ரப்பர் அதிகமாகக் கிடைக்கிறது. அங்கே அன்எம்ப்ளாய்டு லேப ரர்ஸ் அதிகம். தொழிற்சாலைகள் இல்லை. அங்கே இப்படிப்பட்ட ஒரு தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இதுபற்றி மத்திய அரசாங்கம் முடிவு எடுக்கவேண்டும்.

திரு. எம். சுரேந்திரன்: ரப்பர் உறைகள் எவ்வளவுதூரம் பயன் படுத்தப்படுகின்றன, எவ்வளவு உற்பத்தியாகிறது, வருங்காலத்தில் இது இன்னும் எவ்வளவு தேவைப்படும் என்பது பற்றி மதிப்பீடு செய்யப் பட்டிருக்கிறதா? மேட்டூரில் அந்தத் தொழிற்சாலையை அமைப்பதற்கு சிபார்சு செய்து, மேட்டூரில் ஏற்படுத்துவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்தத் தொழிற்சாலையைப்பற்றித் தான் நான் சம்பந்தப்பட்டிருக்கிறேன். மற்ற விவரங்களை வேறுதுறை யிலே கேட்கவேண்டும்.

திரு. கோவை செழியன்: தலைவரவர்களே, இந்தியாவிலே உற்பத்தி யாகின்ற இந்த நிரோத் குவாலிட்டி சரியில்லை என்றும், இந்த நிரோத்தைப் பயன்படுத்தினாலும் குழந்தை பிறந்துவிடுகிறது என்றும் சொல்கிறார்கள் நிரோத் பயன்படுத்திய பின்னாலும் குழந்தை பிறந்ததால் அந்தக் குழந் தைக்கு நிரோத்குமார் என்று பெயர் வைத்ததாகக்கூட அறிகிறோம். அதனால் சிலர் அதை பலூனாகக்கூடப் பயன்படுத்துவதாகத் தெரிகிறது. ஆகவே, குவாலிட்டியை உயர்த்தி சிறப்பாகத் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, நிரோத் உப யோகிப்பதன் நோக்கத்தை பொறுப்புள்ளவர்கள் மக்கள் மத்தியில் எடுத் துச் சொல்லி, அதற்கு ஆதரவைத் தேடவேண்டும். மக்களிடம் தவறான



எண்ணம் ஏற்படும்படிச் சொல்லக்கூடாது. எந்தத் திட்டமும் தவறே இல் லாமல் நடைபெறுவதில்லை. இத்தகைய தவறு நம் நாட்டில் மட்டுமல்ல, மற்ற நாடுகளிலும் நடைபெறுகிறது.

## திருச்சிராப்பள்ளிக்கு நூற்பாலை

*138 வினு—திரு. சீ. க. வடிவேலு: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், தாத்தையங்கார்பேட்டை, சேட்டுப்பாளையம், மணல்மேடு போன்ற பகுதிகளில் உள்ள பெரும்பான்மை மக்களான நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் அப்பகுதியில் ஒரு கூட்டுறவு நூற்பு ஆலை அமைக்கும் யோசனை ஏதேனும் ஆய் விலுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

## திருக்களம்பூர் கிராமத்தில் கிடைக்கப்பெற்ற சிலைகள்

*139 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், திருக்களம்பூர் கிராமத்தில் அண்மையில் பழங்காலத்து சிலைகள் எவையேனும் கண்டு எடுக்கப்பட்டனவா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) திருக்களம்பூர் கிராமத்தில் 8–5–73 அன்று விஸ்வநாதயேஸ்வரர் திருக்கோவிலுக்குச் சொந்தமான சர்வே எண் 75/1 உள்ள நிலத்தில் வாய்க்கால் வெட்டும்போது சுவாமி சிலைகள் [illegible] பூஜை சாமான்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் நன்னிலம் வட்டாட்சியர் அலுவலகத்தில் பாதுகாப்பாக உள்ளன. புதையல் சட்டம் பிரிவு 7-ன்படி விசாரணை முடிவுற்றபின் இறுதி நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, பழங்காலத்து சிலைகள் தமிழகத்தில் அடிக்கடி ஏராளமாகக் கிடைக்கின்றன. இவைகளை எல்லாம் ஒரே இடத்தில் சேர்த்து வைத்து, ஒரு ஆராய்ச்சி செய்து புத்தகமாகத் தயாரித்து வெளியிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, இப்போது இருக்கின்ற 'இந்தியன் ட்ரஷர் ட்ரோவ்' ஆக்ட்படி சிலைகள் பற்றிய விபரங்கள் தயாரிக்கப்பட்டு புத்தமாக வெளியிட வேண்டுமென்று விதிமுறைகள் இருக்கின்றன. இந்தக் கேள்வி மூலக் கேள்வியோடு சம்பந்தப்பட்டதல்ல.

சின்ன ஓபுளாபுரத்தில் வீட்டு மனைகள் ஒப்படை

*140 ஞ—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பின்வரும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டி துணை வட்டம், சின்ன ஓபுளாபுரம் சத்திரம் புறம்போக்கில் வீடு கட்டியுள்ளவர்களுக்கு வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டிருந்தால் காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கும்முடிப்பூண்டி துணை வட்டம், சின்ன ஓபுளாபுரம் கிராமத்தில் சர்வே புல எண்கள் 176/எ/5எ, 177/2 ஆகியவற்றில் 17 ஆக்கிரமிப்புகள் உள்ளன. அவற்றில் குடியிருப்போர் இந்த நிலங்களை "சத்திரம் புறம்போக்கு" என்றும், தங்களுக்கு மனைப்பட்டா கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுள்ளார்கள். ஆனால் இந்த நிலங்கள் புஞ்சை பட்டா நிலங்கள் எனக் கிராமக் கணக்குகளில் காணப்படுகின்றன. ஆகவே இவற்றைத் தற்போது ஒப்படை செய்வதற்கில்லை.

திரு. கா. வேழவேந்தன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தந்த குறிப்பிலிருந்து அந்தப் புஞ்சைப் புறம்போக்கு நிலங்கள் ஒப்படை செய்யப்பட இயலாது என்று தெரிகிறது. ஆனால் அங்கே இருக்கக் கூடியவர்கள் விவசாய கூலிகளாக நீண்டகாலமாக இருப்பதால் அவர்களுக்கு அந்த நிலத்தை ஒப்படை செய்வதுபற்றி மீண்டும் மறு பரிசீலனை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அந்த நிலங்கள் பட்டா நிலங்கள் என்றும், தங்களுக்கு அதிலே உரிமை உண்டு என்றும் 'சூட் நோட்டீஸ்' கொடுத்திருக்கிறார்கள். எனவே, வழக்கு முடிவடைவதற்கு முன்னால் பட்டா செய்ய இயலாது.

*World Bank assistance for agricultural development*

*141 *Q.*—THIRU N. DENNIS: THIRU P. SOUNDAARPANDIAN: } Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether any team of the World Bank had discussions with the State Government about the offer of financial assistance to the State Farm University at Coimbatore during May 1973; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) ஆம்.





(இ) வேளாண்மைக் கல்வி வளர்ச்சிக்காக மாநிலக் குழு தயாரித்த அறிக்கை, உலக வங்கியாளரிடம் கொடுக்கப்பட்டது. 8-6-1973 அன்று நேரடிப் பேச்சுவார்த்தையும் நடைபெற்றது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, எவ்வளவு நிதி கோரப்பட்டுள்ளது? இந்த நிதி எந்த எந்த வகையில் பயன்படுத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, 74·32 கோடி ரூபாய் கோரப்பட்டது. நான்கு வகைகளிலே அந்தப் பணம் செலவிடப்படும்.

(1) 8-வது வகுப்பு வரையுள்ள பொதுவான படிப்பில் வேளாண்மைக்கான கல்வியை இணைப்பது.

(2) அக்ரிகல்சரல் பாலிடெக்னிக்ஸ் (வேளாண்மைப் பயிற்சிப் பள்ளிகள்) தொடங்குவது.

(3) வேளாண்மைக் கல்லூரிகளையும் பல்கலைக்கழகத்தையும் விரிவுபடுத்துவது.

(4) விவசாயிகளுக்குத் தீவிர வேளாண்மை நடைமுறைகளில் பயிற்சி அளிப்பது. இந்தக் காரியங்களுக்கு 74·32 கோடி ரூபாய் தேவையென்று கேட்டிருக்கிறோம்.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, அந்தத் தொகை கடனாகக் கொடுக்கப்படுகிறதா அல்லது மானியமாகக் கொடுக்கப்படுகிறதா? கடனை என்றால் 'ரேட் ஆஃப் இன்டரஸ்ட்' என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: எந்த வங்கியும் மானியம் கொடுப்பதில்லை. கடனாகத்தான் கொடுப்பார்கள்.

திரு. கே. ஏ. வகாப்: வேளாண்மை நம்முடைய நாட்டை எதிர்நோக்கியுள்ள முக்கியமான வளர்ச்சிப் பணிகளுக்குக் காரணமாக இருப்பதால் அதிலே பயிற்சி பெறுகின்ற கல்லூரி மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: கல்லூரிகள் என்றால், ஏற்கெனவே பி.எஸ்ஸி. (அக்ரிகல்சர்) வேளாண்மைக் கல்லூரி நடத்தப்பட்டு வருகிறது. ஆனால் B.Sc. (Agricultural Engineering) கல்லூரி ஒன்று புதிதாகத் தொடங்கப்பட்டிருக்கிறது. அதில் 40 இடங்களே உள்ளன. ஆனால் அதிலே சேருவதற்கான மாணவர்களின் தொகை பெருவாரியாக இருந்ததால் மத்திய ஆராய்ச்சி நிறுவனத்திற்குத் தெரிவித்து மேற்கொண்டும் 20 பேரைச் சேர்த்துக்கொள்ள அனுமதி கேட்டோம். அவர்களும் அனுமதி தந்திருக்கிறார்கள். இப்போது 60 பேர்களைச் சேர்க்க வகை செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கோவை செழியன் : இந்த உலக வங்கி கோவையில் இருக்கிற பல்கலைக் கழகத்திற்கு நிதி உதவி அளிப்பதற்காக ஒத்துக்கொண்டபோது எந்தவிதமான கண்டிஷனும் போடவில்லை. கால்நடைக் கல்லூரியோ அல்லது வேறு பயிற்சி நிறுவனங்களோ இருக்க வேண்டுமென்று கண்டிஷன் எதுவும் போடவில்லை. ஆனல் ஐ.சி.ஏ.ஆர். தான் கோவை பல்கலைக் கழகத்தில் வெட்டரினெரி காலேஜ், ரீசர்ச் சென்டர்ஸ், ஹோம் சைன்ஸ் ஆகியவை இருக்கவேண்டும்; அப்படியானல்தான் இந்த பல் கலைக் கழகத்திற்கு ஒதுக்கியிருக்கும் பணத்தை எல்லாம் செலவு செய்ய முடியும் என்று ஒரு கண்டிஷனைப் போட்டிருக்கிறது.

தலைவரவர்களே, நான் போடும் கேள்வி கொஞ்சம் பெரிதாக இருந்தாலும்—முழு விபரம் தெரியவேண்டியிருப்பதால், பெரிய கேள்வியாக இரண்டு மூன்று கேள்விகளைச் சேர்த்துக் கேட்கிறேன். முழு கேள்வியும் போடுவதற்கு அனுமதிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. கோவை செழியன் : அப்படிப் புதிதாக ஏதாவது சேர்க்கவேண்டும் என்றல் சென்னையில் இருக்கிற வெட்டரினெரி கல்லூரியைக் கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத்துடன் 'அஃபிலியேட்' செய்துவிட்டால் போதும். புதிதாக எதையும் தொடங்கவேண்டியதில்லை. புதிதாகத் தொடங்கினல் அன்–எம்பிளாய்மென்ட் பிராபிளம் எல்லாம் ஏற்படும். ஆகவே, ஐ.சி.ஏ.ஆர். கண்டிஷன்கள் தேவையில்லை என்று தெரிவிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல கேள்விகளை ஒன்றகச் சேர்த்து குழப்பமாகக் கேட்டிருக்கிறர்கள். முதலிலே உலக வங்கி கடன் உதவி அளிக்க சம்மதம் தெரிவிப்பதாகச் சொன்னர்கள். உலக வங்கி இன்னும் கடன் கொடுக்கச் சம்மதிக்கவில்லை. பல கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறர்கள். நாம் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறேம். கேள்வி கேட்பது அவர்கள் வேலை; பதில் சொல்ல வேண்டியது நம்முடைய கடமை.

முன்னல் 62 கோடி ரூபாய் கடன் கேட்டபோது 26 கோடிதான் கொடுத்திருக்கிறர்கள். அதற்கும் 1½ ஆண்டு ஆகிவிட்டது. 8–2–72-ல் தான் தெரிவித்திருக்கிறர்கள்.

விவசாயக் கல்லூரியை அல்லது கால்நடைக் கல்லூரியைப் புதிதாக ஏற்படுத்தினல் அதிலே பட்டம் பெறுகின்றவர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் வரும் என்று சொன்னர்கள். வேலையில்லாத் திண்டாட்டம் வராது என்று நான் உறுதியாக நம்புகிறேன். ஏனென்றல் இப்போது வேளாண்மைப் பொறியியல் கல்லூரியில் 40 மாணவர்களைச் சேர்த்திருப்பதற்குப்பதிலாக 60 பேரைச் சேர்ப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறர்கள். அதுமட்டுமல்ல, 300 இடங்கள் இப்போதே காலியாக இருக்கின்றன. அதனல் வேலையில்லாத் திண்டாட்டம் நிச்சயமாக வராது என்று நம்புகிறேன்.





அடுத்து, ஐ.சி.ஏ.ஆர். உதவி என்பது வேறு. உலக வங்கி உதவி என்பது வேறு.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, நான் கேட்ட கேள்விக்கு சரியான பதில் கிடைக்கவில்லை.

திரு. அ. தேவேந்திரன் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின் கீழ் மற்றெரு கால்நடைக் கல்லூரியை ஆரம்பிக்கும் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : ஏற்கெனவே இருப்பதைத் தவிர புதிதாக நாம் கேட்டிருப்பது facilities for reinforcing existing colleges and research stations and starting new ones. அனிமல் ஹஸ்பண்டரி–கால்நடைக் கல்லூரி தனியாகத் தொடங்கவேண்டுமென்று நாம் கேட்கவில்லை. கல்லூரி தொடங்கவேண்டுமென்பது உலக வங்கியின் திட்டம் அல்ல. அது ஐ.சி.ஏ.ஆர். திட்டம்தான்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, நாம் வேளாண்மைத் துறையிலே முன்னேற்றம அடைந்திருந்தாலும், அன்னியச் செலவாணியை ஈட்டித் தருகின்ற மஞ்சள் போன்ற பயிர்களுக்கு என்ன உரம் போட வேண்டும்; எந்த மாதத்தில் பயிரிட வேண்டும்; நோய் வந்தால் என்ன மருந்து தெளிக்க வேண்டும் என்பவற்றிற்கு இன்னும் சரியான ஆராய்ச்சி நடைபெறவில்லை. ஆகவே, உலக வங்கி அளிக்கும் நிதி உதவியிலிருந்து இப்படிப்பட்ட கார்யங்களுக்கும் செலவு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : இந்த மஞ்சள் பயிர் மட்டுமல்ல. வேறு பல பயிர்களும் இருக்கின்றன. இஞ்சி இருக்கிறது; டாப்பியாக்கோ இருக்கிறது. இவைகளை ஏற்றுமதி செய்ய முடியும். அவைகளுக்கான ஆராய்ச்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன. மஞ்சளைப் பற்றிய குறிப்பு என்னிடம் தற்போது இல்லை.

### *Chick Hatchery at Kappalur*

*142 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the details of the expansion schemes of the Chick Hatchery at Kappalur in Madurai district?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : பேரவைமுன் விவர அறிக்கையொன்று @ வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ் : விவர அறிக்கையில் இந்த நிலையை மேலும் விரிவுபடுத்த செயற்குறிப்பு இருக்கிறது. இந்த விரிவுபடுத்துகின்ற முறை எப்போது அமலுக்கு வரும்? செலவுத் தொகை எவ்வளவு?

---

@ 389–390ம் பக்கங்களில் இணைப்பு III-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: கோழி வளர்ச்சியில் முன்பு ஏராளமாக நட்டம் வந்தது. இனி, கோழி வளர்ச்சி என்பது லாபத்தில் நடைபெறவேண்டும் என்ற நோக்கத்தில்தான் பவுல்ட்ரி டெவெலப்மெண்டு கார்ப்பரேஷன் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: கப்பலூரில் உள்ள குஞ்சு பொரிக்கும் நிலையத்தை விரிவுபடுத்துவதாகக் கூறியிருக்கிறார்கள். நெல்லை மாவட்டத்தில் கோழி வளர்ப்புத் திட்டத்தின் கீழ் பல காரியங்கள் நடந்து வருகின்றன. இவர்களுக்குத் தனியார் பண்ணையில் இருந்து அதிக விலைக்குக் குஞ்சுகளை வாங்கித் தருகிறார்கள். 20 ரூபாய் கூட ஆகிறது. ஆகவே கப்பலூர், அபிஷேக பட்டினம், ஹோசூர் போன்ற பகுதிகளில் இருந்து குறைந்த விலைக்குக் குஞ்சுகளை அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நெல்லை மாவட்டத்தில் பவுல்ட்ரி டெவலெப்மெண்டு கார்ப்பரேஷன் இல்லை. S.F.D.A. இன் கீழ் சிறு விவசாயிகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உதவி செய்யப்படுகிறது. தனியார் பண்ணையில் குஞ்சுகள் நன்றாக இருந்தால் விலை அதிகத்தைக் கூடப் பார்க்காது வாங்கி அளிக்கப்படுகிறது. அரசு தயாரிப்பு போதுமானதாக இல்லாத காரணத்தினால் அவை வழங்கப்படுகின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி: கப்பலூர் கோழிப்பண்ணையானது ஏற்கனவே மூடப்பட்டு இப்போது திறந்திருக்கிறார்கள். அதிலே 2 இன்குபேட்டர்கள் 2,600 அளவில் இணைக்கப்பட்டிருக்கிறது. மாதந்தோறும் எத்தனை குஞ்சுகள் பொரிக்கப்படுகின்றன? இங்கே குஞ்சாக விற்கப்படுகிறதா? முட்டையாக விற்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: குஞ்சுகளும் விற்கப்படுகின்றன, முட்டைகளும் விற்கப்படுகின்றன. எத்தனை என்கிற விவரம் என் கைவசம் இல்லை. இதுவரை கப்பலூர் பண்ணையில் நட்டத்தைத் தவிர வேறு இல்லை. இனி லாபத்தோடு நடத்த முடியவில்லை என்றால், மூடுவதைத் தவிர வேறு வழியில்லை.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஏற்கனவே அந்தத் துறையோடு தொடர்பு கொண்டிருந்தவன் என்ற முறையில் ஒரு விளக்கம் கொடுக்க விரும்புகிறேன். கோழி வளர்ப்புக்கு வேண்டிய உதவிகளை அளிக்கக்கூடிய பண்ணையாக அது இருக்கும். அது லாபத்திற்காக மட்டும் நடத்தப்படுவது அல்ல. தொழில் வளர்ச்சிக்கு ஊக்கம் கொடுப்பதற்காகவும் நடைபெறுகிறது. இதுபோல தமிழ்நாட்டில் ஹோசூரில் ஒரு பண்ணையும், சென்னைக்குப் பக்கத்தில் ஓரிடத்திலும் நடைபெறுகின்றன.

MR. SPEAKER: Question 143 . . . .

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, I had been trying to catch your eye for the past ten minutes and I had been



lifting my hand. Why should you deprive us of this opportunity? . . . .

MR. SPEAKER: Next question 143.

நகராட்சிகள் திரைப்பட அரங்குகள் நிறுவுதல்.

*143 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள நகராட்சி, மாநகராட்சி மன்றங்கள், சினிமா தியேட்டர் கட்ட, எவை எவை அரசிடம் அனுமதி கேட்டுள்ளன?

(இ) அதன்மேல் எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) தஞ்சை, தர்மபுரி, மேட்டுப்பாளையம் நகர மன்றங்கள், திரைப்பட அரங்குகள் கட்டுவதற்கான அனுமதி கேட்டுள்ளன.

(இ) பயன் தரும் தொழில்களில் ஒன்றாகத் திரைப்பட அரங்குகளை மூன்று நகராட்சிகளும் கட்டிக்கொள்வதற்குத் தடையேதும் இல்லையென்றும், கட்டப்படும் திரைப்பட அரங்குகள் பயன் (ஆதாயம்) தருவதாகவும், விதி முறைகளுக்கு ஒப்பானதாகவும் இருக்க வேண்டும் என்று அரசு அறிவுரைகள் வழங்கியுள்ளது. அவற்றைக் கட்டுவதற்கு முன், அரசிடமிருந்து அனுமதி பெற்றுக் கொள்ளவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திரு. கு. காமாட்சி: திருச்சி நகர மன்றத்தின் சார்பில் இப்போதிருக்கிற தேவர் மன்றத்தை நாடக அரங்கமாகவும், சினிமா அரங்கமாகவும் மாற்றவேண்டும் என்பதற்கு அனுமதி கோரி அரசுக்கு ஏதாவது கோரிக்கை வந்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அப்படி எந்தவிதமான தகவலும் இல்லை.

திரு. எ. சி. நரசிம்மன்: சினிமாக் கொட்டகை கட்ட கடனாக உதவித்தொகை கொடுக்கப்படுகிறது என்றார்கள். ஜனத்தொகை அடிப்படையில் 10 ஆயிரம் பேருக்கு ஒரு சினிமாக் கொட்டகை என்கிற விதி இருக்கின்றது. நகராட்சி மன்றங்களைப் பொருத்த வரையிலாவது அந்த விதியைத் தளர்த்த அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: நகராட்சி மன்றங்களும், நகராட்சி மன்றத் தலைவர்களும் வருவாயைக் கருதியே பல நாட்களாக இதுபோல நகராட்சி மன்றங்களை, சினிமாக் கொட்டகைகளை நடத்த அனுமதி கோரினார்கள். அதனால் அரசாங்கம் இது பயன்தரும் தொழிலாக நடைபெறும் வகையில் அனுமதிப்பது என்கிற அளவில் சில விதிமுறைகளை ஏற்படுத்தியிருக்கிறது. அந்த விதிமுறைகளுக்குட்பட்டு வருகிற கோரிக்கைகளுக்கு அனுமதி வழங்கப்படுகிறது, சிலவற்றுக்கு அனுமதி வழங்குவதில் காலதாமதமாகிறதே என்றால்—உதாரணமாக ராஜபாளையம், கும்பகோணம், புதுக்கோட்டை, வாணியம்பாடி, கம்பம், திருவில்லிபுத்தூர், தஞ்சை போன்ற நகராட்சி மன்றங்கள் கேட்டும் அனுமதி வழங்கப்படாததற்குக் காரணம் அவர்கள் 'நோ அப்ஜக்ஷன்' சர்டிபிகேட்டை வாங்கி அனுப்பவில்லை. எந்த அளவுக்கு உதவுகிறோம் என்றால் ஒரு திரை அரங்கு கட்ட பேட்டூர் நகரியத்திற்கு 75 ஆயிரம் ரூபாய் கடன் வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. க. உரொ. எட்மண்ட்: இப்படி சினிமாக் கொட்டகை கட்ட அனுமதிக்கப்படுகிற நகரசபைகள், அதனை அவர்களே நடத்த வேண்டுமா? லீசுக்கு விட்டுவிடலாமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அதனால்தான் பயன்தரும் தொழிலாக இருக்குமா என்பதை ஆராய்ந்து முதலிலேயே அவர்களுக்கு தினசரி மார்க்கெட், அங்காடிகளுக்கு அனுமதி வழங்குவது போல வழங்குகிறோம். இதைக் கட்டிய பிறகு லீசுக்குக் கொடுக்கிற பிரச்சினை இல்லை.

திரு. வ. எம். இராஜா: நகராட்சி மன்றங்கள், மாநகராட்சி மன்றங்கள் சினிமாக் கொட்டகை கட்ட நாம் கடன் உதவி செய்கிறோம். ஏற்கனவே அந்த நகரங்களில் வேறுபல கொட்டகைகள் இருப்பதனால் இவற்றுக்கு லாபம் அதிகம் ஏற்படும் என்று சொல்ல முடியாது. ஆகவே, இன்றைக்கு நகராட்சி, மாநகராட்சி எல்லைக்குள் இருக்கிற சினிமாக் கொட்டகைகளை எல்லாம் அரசாங்கமே எடுத்துக்கொண்டு—அவற்றை நகராட்சி, மாநகராட்சி வசம் ஒப்படைக்குமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: சினிமாக் கொட்டகைகளை அரசு தேசியமாக்குவது என்றால் அதைத் தனியே பரிசீலித்து முடிவு எடுக்கும். இப்போது அப்படிப்பட்ட யோசனை இல்லை.

திரு. எம். எ. லத்தீப்: வளர்ந்து வருகிற தேவைகளைப் பூர்த்தி செய்ய அதிகமாக நிதியைப் பெறவேண்டுமென்ற நோக்கத்தில்தான் இதுபோன்ற நகர மன்றங்கள் சினிமாக் கொட்டகைகளை நடத்த விரும்புகின்றன. வாணியம்பாடி நகரசபை இதற்கு வேண்டுகோள் விடுத்துப் பல ஆண்டுகள் ஆகியும் நிறைவேற்றப்படவில்லை. ஆகவே, அவற்றுக்காவது 'நோ அப்ஜெக்ஷன்' சர்டிபிகேட் வழங்குவதில் உள்ள காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டுமென்று அரசு சுற்றறிக்கை அனுப்புமா?



மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: நான் முன்பே வாணியம்பாடியைப் பற்றியும் சொன்னேன். இது பயன்தரும் லாபகரமான தொழிலாக அவர்களுக்கு இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் சில விதிகள் இருக்கின்றன. அந்த விதிகளுக்குட்பட்டு வரும் மனுக்கள் உடனடியாகக் காலதாமதமின்றி அனுமதிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரத்தை நீட்டிக்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களால் வழங்கப்பட்ட ஸ்பிரேயர்கள்.

*144 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

உழவர்களுக்கு ஒன்றிய அலுவலகங்களிலிருந்து அளிக்கப்படும் 'ஸ்பிரேயர்கள்' பழுதடைவதை உடனுக்குடன் பழுதுபார்க்கும் சிறப்புத் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தற்போது ஸ்பிரேயர்களைப் பழுதுபார்ப்பதற்குப் போதுமான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

திரு. கா. வேழவேந்தன்: ஒவ்வொரு ஒன்றியத்திலும் இருபது, இருபத்தைந்து பவர் ஸ்ப்ரேயர்கள் இருக்கின்றன. அவை பழுதுபட்டுக் கிடக்கின்றன. அவற்றை உடனுக்குடன் பழுது பார்க்க அங்கங்கே மெக்கானிக்குகள் நியமிக்கப்படுவார்களா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: வேளாண்மைத் துறை அமைச்சராக நான் இருந்தபோது—375 ஊராட்சி ஒன்றியங்களில் பவர் ஸ்ப்ரேயர்கள் இருந்தன 374 ஒன்றியங்களில் மெக்கானிக்குகளும் இருந்தார்கள். மேலும், 374 பேர்களுக்குப் பயிற்சியும் கொடுக்கப்பட்டிருக்கிறது. தவிர, 3 நடமாடும் பழுதுபார்க்கும் கூடங்களும் இயங்கிவருகின்றன. அதைப் போல பக்கத்தில் இருக்கிற சிறுதொழில் பட்டறைகளில் அவற்றைப் பழுது பார்க்கும் பணியும் நடைபெற வசதி செய்யப்பட்டது. நான் மற்றொரு யோசனை கூடச் சொன்னேன், நகரங்களுக்குக் கொண்டுவந்துதான் பழுது பார்க்கவேண்டும் என்கிற நிலை இல்லாது கிராமங்களிலேயே சைக்கிள் ஷாப்புகளில் பழுது பார்க்கத் தேவையான பயிற்சி அங்கங்கே அளிக்கப்பட்டுவிடவேண்டும் என்பதாக. முன்போல இன்றி இப்போது அந்த நிலைமை சீராக இருக்கிறது. மேலும், பழுது பார்க்க உதிரி பாகங்கள் வாங்க 500 ரூபாய் வரை செலவு செய்துகொள்ள அவர்களுக்கே முற்பகல்
அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. 10·00

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், நீங்கள் கொடுத்திருப்பது போதவில்லையென்றால் அந்தந்த கிராமப்புறங்களிலே தனியார் இப்படிப்பட்ட ஸ்பிரேயர்களைப் பழுதுபார்க்கக் கூடங்கள் ஆரம்பித்தால், அவர்களுக்கு ஒத்தாசை செய்ய இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஸ்பிரேயர்களைப் பழுது பார்க்க உதவி செய்யவேண்டுமென்று சைக்கிள் ஷாப் வைத்திருக்கிறவர்களுக்கும் இந்தப் பயிற்சியைக் கொடுக்கலாம் என்ற யோசனை பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன். தனியாக இதற்கென்று ஆட்களைப் பார்க்காமல், இப்பொழுது ஆகாயத்திலிருந்து பூச்சி மருந்து தெளிப்பது நிறுத்தப்பட்டிருக்கிற காரணத்தாலே, அங்கங்கே ஊராட்சி மன்றங்களிலேயே, படித்து வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு, ஸ்பியேரர்களால் தெளிப்பது, அவற்றைப் பழுதுபார்ப்பது ஆகியவற்றைக் கற்றுக்கொடுத்து அவர்கள் கிராமங்களுக்கும் 2, 3 ஸ்பிரேயர்களையும் கொடுத்து, அவர்கள் மூலமாகவும் பழுதுபார்ப்பதற்கும் தெளிப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களால் வாங்கப்படுகிற ஸ்பிரேயர்கள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறபொழுது அவை மீண்டும் பழுதடைந்துவிடுகின்றன. அவற்றை ரிப்பேர் செய்ய 374 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் மெக்கானிக்ஸ் போன்றவர்களை நியமித்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். குறிப்பாக, செஞ்சி வட்டத்திலே உள்ள ஊராட்சி ஒன்றியங்களுக்கு எந்த மெக்கானிக்ஸும் கிடையாது. விவசாயிகளுடைய ஸ்பிரேயர்ஸ் அடிக்கடி பழுதடைந்துவிடுகின்றன. பூச்சிகளால் விவசாயம் எந்த அளவு பாதிக்கப்படுகிறது என்பதை அமைச்சர் அவர்களே அறிவார்கள். ஆகவே, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒவ்வொரு மெக்கானிக்கை, இந்த ஸ்பிரேயர்களை ரிப்பேர் செய்ய, ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: மெக்கானிக் என்று நான் சொல்லவில்லை. அங்கிருக்கிற வேளாண்மைத் துறை சம்பந்தப்பட்ட ஒவ்வொரு மேஸ்திரிக்கும் இதில் பயிற்சி அளிக்கப்பட்டு அவர் ஒழுங்காக இந்த வேலையைச் செய்து வருகிறார். பல ஊராட்சி ஒன்றியங்களிலே செய்து இருக்கிறார்கள், நான் பார்த்திருக்கிறேன். விரைவிலே செஞ்சிக்கு வர இருக்கிறேன். அவர் யார் என்பதை உறுப்பினருக்குக் காண்பிக்கிறேன்.

திரு சோ. அழகர்சாமி: ஸ்பிரேயர் போன்ற கருவிகளைப் பழுது பார்ப்பதற்கு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலேயும் அக்ரோ—இண்டஸ்ட்ரீஸ் கோவாப்பரேடிவ் சொஸைட்டீஸ் ஆரம்பிக்க வேண்டுமென்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதே, அது இப்பொழுது எந்த நிலையில் இருக்கிறது? அந்தமாதிரி ஆரம்பித்து வேலை செய்தால் இந்த மாதிரி ரிப்பேர்கள் செய்ய வசதியாக இருக்குமல்லவா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அவர்கள் சொல்வது அக்ரோ சர்வீஸ் கார்ப்பரேஷன் என்று கருதுகிறேன். அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷனுக்கும், அக்ரோ சர்வீஸ் கார்ப்பரேஷனுக்கும் வேறுபாடு இருக்கிறது. அக்ரோ சர்வீஸ் கார்ப்பரேஷன் மூலமாக இப்பொழுது சில தொழில்களை ஆரம்பிக்க நடவடிக்கைகள்



எடுக்கப்படுகின்றன. அதையும் அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷனோடு இணைத்து செயலாக்கலாமா என்ற யோசனையையும் கவனிப்பதால் தாமதமாகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: தலைவர் அவர்களே, பழுதுபட்ட இந்த தெளிப்பான் கருவிகளைப் பழுதுபார்ப்பதற்காக எத்தனையோ முறையிலே ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று சொல்லியும்கூட, இன்னும் பல இடங்களிலே பழுதுபட்ட நிலையிலே இக்கருவிகள் இருக்கிற காரணத்தாலே ஒரு யூனியனுக்கு 5 ஸ்பிரேயர்ஸ் என்று சொன்னால், மேலும் 5 ஸ்பிரேயர்களை, ஸ்பேராகக் கொடுப்பதற்கு அத்தகைய ஏற்பாட்டையும் செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இப்பொழுதே, அதற்காக வேளாண்மைத் துறை மூலமாக, வாங்கப்பட்டு அதிகமாக ஒவ்வொரு யூனியனுக்கும் 4 அல்லது 5 தூவிகளும்—தெளிப்பான்களும்—கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவைகளும் வாங்கப்பட்டிருக்கின்றன. இதுவரையிலே வினியோகம் செய்யப்பட்டிருக்கும் என்று நான் கருதுகிறேன். அப்படி இல்லாமல் இருக்குமானால், என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்களானால், அதுபற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: இந்தத் தெளிப்பான்களை எல்லாம் யாரிடத்தில் நீங்கள் வாங்குகிறீர்கள்? அவர்கள் ஏதாவது காரண்டி பீரியட் கொடுக்கிறார்களா? இத்தனை ஆண்டுக்காலத்திற்குள் ரிப்பேர் ஆனால் நாங்களே ரிப்பேர் செய்து தருகிறோம் என்று அவர்கள் சொல்கிறார்களா? அல்லது அப்படி ரிப்பேர் ஆனால் நம் தலையிலேயே கட்டுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, முறையான வகையில், அவைகளுக்கெல்லாம் டெண்டர் கேட்கப்பட்டு, அவை சரியாக இருக்கின்றனவா என்று பார்ப்பதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டு அந்தக் குழுவில் நான்—அபிஷியல் மெம்பர்களும் இருக்கிறார்கள்—அவர்கள் எல்லாம் பரிசீலனை செய்தபிறகு, வாங்கப்படுகிறது. கூட்டுறவுத்துறைகள் மூலமாக இவை செய்யப்படுகின்றன. அவைகளெல்லாம் பரிசீலனை செய்யப்பட்டு, அதற்குப் பிறகுதான் வாங்கப்படுகின்றன. வாங்கப்பட்ட உடனே பழுதுபட்டதாக நாம் பார்க்கவில்லை. பழுதுபட்ட உடனே, அவற்றைச் சரிப்படுத்த எல்லா முயற்சிகளையும் நாங்கள் செய்து வருகிறோம்.

*Raising of oil plants in Kolli Hills*

*145 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether there are proposals under the consideration of

the Government to grow essential oil plants at Kolli Hills in this State : and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) சேலம் மாவட்ட ஆட்சியாளருடன் கலந்தாலோசிக்கப்பட்டு சின்கோனாத் துறையின் இயக்குநருடைய ஆய்வில் உள்ளது.

திரு. என். டென்னிஸ் : 'ஆயில் எக்ஸ்டிராக்ஷன்' செய்ய செயற் குறிப்பு அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, உதகையில் அரசுத்துறையின் சார்பாக இந்த நறுமணத் தைலங்கள் தயாரிக்கிற ஒரு தொழிற்சாலை இருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன் : சார், இதுபோன்ற தொழிற்சாலை ஏற்காட்டிலே இருக்கிறது. கொல்லிமலையிலும் ஆரம்பிக்கமுடியும். அதேபோல் பாலமலையிலும் ஆரம்பிக்க வாய்ப்பு இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, சீரிய திட்டங்கள் இருக்கின்றன. நிதியைப் பொறுத்துதான் அங்கங்கே ஆரம்பிக்க இயலும்.

THIRU B. VENKATASWAMY : We find that more foreign exchange is earned by producing more essential oils. May I know from the Hon. Minister whether any concrete plan has been proposed so as to expand the extraction of essential oils?

மாண்புமிகு திரு. ஓ. பி இராமன் : தலைவர் அவர்களே, இப்பொழுது தரமான தைலம் அளிக்கக்கூடிய தொழிற்சாலை இருக்கிறது. அதை விரிவுபடுத்தவேண்டியதுதான். விரிவுபடுத்தும்போது அதற்கு வேண்டிய நிதிப்பற்றாக்குறையின் காரணமாக அது அப்படியே இருக்கிறது. விரிவுபடுத்தவேண்டிய பரிசீலனைகள் இருக்கின்றன.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவர் அவர்களே, இந்த சின்கோனா அரசுத் துறையாக இருக்கிறது. அதை ஒரு கார்ப்பரேஷனாக மாற்றினால், நிறைய அதற்கு வேண்டிய நிதியும் கிடைக்கும். ஆகவே, விரைவிலே சின்கோனா காப்பரேஷன் ஆரம்பிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : சின்கோனா கார்பரேஷன் ஆரம்பிக்க கொள்கை அளவில் ஏற்கப்பட்டு மாதங்கள் 2 ஆகின்றன.

திரு. கு. அ. பொம்மன் : பேரவைத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் லத்தீப் அவர்கள் அடிக்கடி சொல்வது, ஜவ்வாது மலையில் மூலப்பொருள்கள் அதிகமாகக் கிடைக்கின்றன என்பது. ஆகவே, உதகையிலே இருப்பதைப் போல் ஜவ்வாது மலையிலும் செய்வதற்கு அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, ஜவ்வாது என்றாலே வாசனைத் திரவியம்தான். கலெக்டரிடத்திலே ஆலோசனை பெறப்பட்டு இயக்குநருடைய ஆலோசனையில் இருக்கிறது. இப்பொழுது பரிசீலனை செய்யலாம் என்று சொல்லியிருக்கிறேன்.

## மேட்டூர் நகருக்கு மின் சக்தி வழங்கல்

*146 வினா—திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் நகரத்தில் மாலை வேளைகளில் வோல்டேஜ் குறைவு காரணமாக டியூப் லைட்டுகள் எரியாமலும் மற்ற பல்புகள் மங்கலாகவும் எரிவது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) & (இ) மேட்டூர் அணை—மருத்துவமனைக் குடியிருப்பில் ஒரே மின்னோட்ட நிலையில் வழங்கும் முறை மாறி இப்போது 3 மின்னோட்ட நிலையில் 4 கம்பித் தொடர்களில் மின்சாரம் வழங்கப்பட்டு மின் சுமைகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. இப்போது 'வோல்டேஜ்' நிலை திருப்திகரமாயுள்ளது.

திரு. எம். சுரேந்திரன் : மின்சார உற்பத்தி மேட்டூரிலே இருந்தும்கூட, இதுபோன்று அவ்வப்போது ஏற்படுவது அங்கே வாழ்கின்ற மக்கள் அவ்வளவு பேருக்கும் மிகவும் வேதனை அளிக்கிறது. இன்னும் அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, வேறு சில இடங்களிலே இதேபோல் நிலை இருக்கிறது. அம்மாதிரி நிலையை மாற்ற அரசு உடனே நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, வோல்டேஜ்ஜை இம்ப்ரூவ் செய்வதற்காக 'High tension capacitors'. சப்-ஸ்டேஷன்களிலே நிறுவவேண்டுமென்ற விரிவான திட்டத்தின் அடிப்படையில் எல்லாப் பகுதிகளிலும் இந்தத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### Assistance to victims involved in accidents

* 147 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR :
Thiru P. SOUNDARAPANDIAN : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether any Common Fund has been created for payment to the victims involved in accidents by the State Transport buses; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ அவையின்முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, வைக்கப்பட்டுள்ள விவர அறிக்கையில் பாதிக்கப்பட்டவருக்கு உதவித் தொகை வழங்க வேண்டுமென்று நெறியாளர் கருதினால் என்றுதான் இருக்கிறது. மரணம் அடைந்தவர்களுடைய குடும்பத்தினருக்காவது இனிமேல் உதவித் தொகை வழங்குவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இரண்டு வகையான நிதி அரசாங்கப் போக்குவரத்துத் துறையிலே அமைக்கப்பட்டிருக்கிறது. ஒன்று, விபத்திலே அடிபட்டு, அதனால் உயிரிழந்தவருக்கோ அல்லது பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் தருகின்ற உதவி. இன்னொன்று, விபத்தினால் யாரேனும் மூன்றாவது நபர் பாதிக்கப்பட்டால் அவருக்குத் தருகின்ற உதவி. ஆகையினாலே, இதிலே இறந்தவர்கள் என்றோ அல்லது காயம் அடைந்தவர்கள் என்றோ வேறுபாடு இல்லாமல் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் சேர்ந்து நிவாரண நிதி அமைந்திருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, அண்மையிலே நம்முடைய ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ்ஸும் ஒரு பிளஷர் காரும் மோதியதன் காரணமாக 4 பேர்கள் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்கள். அவர்கள் சார்பாக உதவி கோரி அரசாங்கத்திற்கு மனுச் செய்திருக்கிறார்கள். இது சம்பந்தமாக ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா? அவர்களுக்கு தேர்ட் பார்டி இன்ஷூரன்ஸ் என்ற முறையிலே பணம் கொடுக்க ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால் தேர்ட் பார்டி இன்ஷூரன்ஸிலே இதுவும் செய்யலாம்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, விமான விபத்தில் இறக்கிறவர்களுடைய குடும்பத்தாருக்கு 1 லட்சம் ரூபாய் தரப்படுகிறது. அதேபோல் ரயில்விபத்தில் இறக்கிறவர்களுடைய குடும்பத்தினருக்கு 50

@390–391-ம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.



ஆயிரம் ரூபாய் காம்பன்சேஷன் தரப்படுகிறது, பேருந்துகளில் செல்லும் பொழுது இறந்துவிட்டால் குறைந்தபட்சம் 25 ஆயிரம் ரூபாயாவது கொடுக்கக்கூடிய அளவிற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இதற்கு எல்லாம் விதிமுறைகள் இருக்கின்றன. ஒருவேளை, விமானத்திலே, ரயிலிலே செல்கின்றவர்கள் அந்தஸ்திலே உள்ளவர்கள் என்ற காரணத்தினால் அவ்வளவு தொகையை அளிக்கலாம். ஆனால் நம்மைப் பொறுத்தவரையில் விபத்திலே உயிரிழந்தவர்களுக்குக் கூடுமான வரையில் சட்ட விதிகளின்படி எந்த அளவிற்கு உதவி செய்யமுடியுமோ அந்த அளவிற்குச் செய்கிறோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : விபத்துக்களில் இறந்தவர்களுக்கு டிரான்ஸ்போர்ட் இலாகாவே ஒரு நஷ்ட ஈடு தொகையைக் கொடுக்கிறதா அல்லது ஆக்ஸிடெண்ட் க்ளெய்ம்ஸ் ட்ரிப்யூனல் மூலமாக வழக்காடி அவர்கள் இவ்வளவு பணம் கொடு என்று உத்திரவிட்டதற்குப் பிறகு கொடுக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இரண்டு முறைகளும் கையாளப்படுகின்றன.

### மாப்படுகை—கோடங்குடி பேருந்து வழித்தடம்

*148 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் மாப்படுகையிலிருந்து பஸ் ஸ்டாண்டு வழியாக கோடங்குடிக்கு பேருந்து விடும் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : ஆம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அரசினர் தீர்மானம்

### விதி 41 (3)-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 244-ன்கீழ் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"விதி 41 (3)-ன்படி, ஒரே கூட்டத்தில் இரண்டிற்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டுவர தடை இருப்பதை இன்று தளர்த்தவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

## 3. கவன ஈர்ப்பு

**(அ) 1973, ஜூன் திங்களில் ஏற்பட்ட கடலரிப்பு காரணமாக கன்னியாகுமரி மாவட்டத்தின் கடற்கரையோர கிராமங்கள் பாதிக்கப் பட்டிருப்பது குறித்து.**

THIRU N. DENNIS: Sir, I call the attention of the Hon. Minister for Public Works to a matter of urgent public importance, namely, the sea erosion near Thengapattinam in Kanyakumari District during Junt 1973 causing damage to the dwelling houses.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, 1973 ஜூன் ஜூலைத் திங்களில் ஏற்பட்ட கடலரிப்பு காரணமாக கன்னியாகுமரி மாவட்டத்தின் சில கடற்கரையோரக் கிராமங்கள் மோசமாகப் பாதிக்கப் பட்டன என்றும், இராமன்துறை, முள்ளூர்துறை, தேங்காபட்டினம், எரமாந்துறை, பூத்துறை, புத்தந்துறை ஆகிய கிராமங்களில் 22 வீடு களும் 39 குடிசைகளும் கடலரிப்பு காரணமாக சேதமடைந்தன என்றும் அரசுக்கு அறிக்கைகள் வந்துள்ளன. சேதத்தின் மதிப்பு ரூ. 59,650 ஆகும். மேற்சொன்னவற்றைத் தவிர தேங்காப்பட்டினம் கிராமத்தில் காய்க்கும் 50 தென்னை மரங்கள் வேரோடு சாய்ந்தன. இருப்பினும், கடலரிப்பு காரணமாக உயிர்ச்சேதமோ, கால்நடைச் சேதமோ ஏற்படவில்லை.

கடலரிப்பைத் தடுப்பதற்காக, மணல் மூட்டைகளை அடுக்கி வைக்கத் தேவையான காலி சாக்குப் பைகளை பொதுப்பணித்துறை வழங்குகிறது என்றும், பாதிக்கப்பட்ட கிராமங்களின் கடல் அரிப்பைத் தடுக்க தற்காலிகப் பாதுகாப்பு நடவடிக்கைகளைச் செய்து கொடுப்பதற்காக வருவாய்த்துறைக்குத் தேவையான தொழில் நுட்ப உதவிகளையும் அத்துறை வழங்குகிறது என்றும் தலைமைப் பொறியாளர் (கட்டிடங்கள்) தெரிவித் துள்ளார். கடலரிப்பு ஏற்படும் காலங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கல், அவர்களை அண்டையிலுள்ள பகுதிகளில் குடியமர்த்துதல் போன்ற நடவடிக்கைகளை வருவாய்த் துறை மேற்கொள்கிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தின் கடற்கரையோரப் பகுதிகளில் கடலரிப்புப் பிரச்சினை தொடர்ந்து நடக்கும் ஒரு நிகழ்ச்சியாகும். மே முதல் ஜூலை வரையுள்ள கால அளவில் வழக்கமாகக் கடலரிப்பு ஏற்படுகிறது. அக்காலங்களில் கடல் அலைகளின் உயரம் 20 அடிக்கும் அதிகமாகிறது. கடல் கொந்தளிப்புக் காலங்களில் கடலுக்கு அருகில் உள்ள நிலங்கள் கடல் நீரால் சூழப்படுகின்றன. கடலரிப்பு ஏற்படும்பொழுது, கடற்கரைக்கு



அருகில் உள்ள வீடுகள், குடிசைகள், மரங்கள் முதலியன உயர்ந்துவரும் கடல் அலைகளினால் அடித்துச் செல்லப்படுகின்றன. தமிழ்நாட்டின் அரபிக் கடல் கடற்கரை நெடுகவும் அமைந்துள்ள கன்னியாகுமரி மாவட்ட கிராமங்கள், கடலரிப்பு காரணமாக அதிகமாகப் பாதிக்கப்படுகின்றன.

அரசு 1970–71 ஆம் ஆண்டில் ரூ. 4·60 லட்சம் மொத்தச் செலவில் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த மிடலாந்துறை, பள்ளத்துறை, மேலமணக்குடி மற்றும் எரமாந்துறை ஆகிய கிராமங்களில் பாதுகாப்புப் பணிகள் நிறைவேற்றியுள்ளது. மிடலாந்துறையில் நிறைவேற்றப்பட்ட பாதுகாப்புப் பணிகள் பின்னர் அலை எழுச்சி ஏற்பட்டதன் காரணமாக இரு முறை சேதமடைந்துவிட்டன. சேதமடைந்த பாதுகாப்புச் சுவர்களைப் பழுது பார்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடர்ந்து ஏற்பட்டு வரும் கடலரிப்புக்கு நிலையானதொரு தீர்வு காணும் பொருட்டு, இம்மாவட்டத்தின் அரபிக் கடற்கரை நெடுகவும் நிலையாகவே கடற்சுவர் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணிக்காக பொதுப்பணித் துறை தயாரித்த தொடக்க மதிப்பீடு, ரூ. 3·51 கோடி மொத்தச் செலவில், தமிழ்நாட்டில் அரபிக் கடற்கரை நெடுகவும் 14·5 கிலோ மீட்டர் நீளத்திற்கு நிலையாகவே கடற்சுவர் கட்ட வகை செய்கிறது. இம்மாவட்டத்தில் ஏற்படும் கடலரிப்பின் கடுமையையும், ஏற்படும் செலவின் அளவையும் கருத்திற்கொண்டு, அரசு, இந்த மதிப்பீட்டை இந்திய அரசின் பாசன மின்சக்தி அமைச்சகத்தின் ஏற்பளிப்புக்காக அனுப்பியுள்ளது. மேற்சொன்ன திட்டத்திற்கு இந்திய அரசின் ஏற்பளிப்பு எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, எப்பொழுது இது நடைமுறையில் வரும்? ஆண்டுதோறும் அங்கே கடல் அரிப்பினால் பல வீடுகள், சில கிராமங்களே பலியாகிவிடுகின்றன. ஆகவே, துரிதமான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அதைத் தான் நான் படிக்கும்பொழுதே சொன்னேன். இந்திய அரசின் ஒப்பளிப்புக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. அது வந்தவுடன் கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(ஆ) நிலக்கரிப் பற்றாக்குறை காரணமாக சிமெண்ட் உற்பத்தி பாதிக்கப்பட்டிருப்பதும், பலர் வேலையிழந்திருப்பதும் குறித்து**

DR. H. V. HANDE: Sir, I wish to call the attention of the Hon. Minister for Industries to a matter of urgent publio importance, namely, the acute coal shortage resulting in the steep fall in production of cement which in turn has thrown out of employment a number of persons.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நிலக்கரி பற்றுக்குறை காரணமாக இம்மாநிலத்தில் சிமிட்டித் தொழில் கடும் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளது. பல்வேறு தொழிற்சாலைகளிடம் உள்ள நிலக்கரி இருப்புகள் ஏற்கெனவே வெகுவாகக் குறைந்து விட்டதுடன், ஒரு சில நாட்களின் தேவைக்கே அவை போதுமானதாக இருக்கும். நிலக்கரி உற்பத்தி குறைந்துள்ளதாலும், சரக்கு ரயில் பெட்டிகள் போதுமான அளவுக்குக் கிடைக்காததாலும் இந்த நிலைமை ஏற்பட்டது. ரயில்வேக்களில் 'லோகோ' பணியாளர்களின் வேலை நிறுத்தம், சரக்கு ரயில் போக்குவரத்தைக் கடுமையாகப் பாதித்துள்ளதோடு, கடுமையான நிலக்கரிப் பற்றுக்குறைக்கும் வழிகோலியுள்ளது. ரயில்வே துறையினரும் நிலக்கரிச் சுரங்க அதிகாரிகளும் இணைந்து செயல்படவில்லையென்று சிமிட்டி தயாரிப்பாளர்கள் அரசுக்கு முறையீடு செய்துள்ளனர். சிமிட்டித் தொழிற்சாலைகளை எதிர் நோக்கியுள்ள நிலையற்ற இச்சூழ்நிலை குறித்து இந்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போதைய நிலவரம் நீடித்தால், இம் மாநிலத்தில் சிமிட்டி உற்பத்தி முற்றிலும் நின்றுவிடும். அதன் விளைவாக வேலைவாய்ப்பின்மை பெருகி, கடுமையான மின்வெட்டின் விளைவாக ஏற்பட்ட சிமிட்டிப் பற்றுக்குறையால் அண்மைக்காலம் வரையில் பாதிக்கப் பட்டிருந்த பொதுமக்கள் மேலும் அவதியுறுவர் என்றும் இந்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Dr. H. V. HANDE : Sir, may I know whether the Government also have made some assessment of the quantum of coal that is required for the entire cement industry and whether it is not possible for the Government to transfer some coal if they have some surplus stock, because during the rainy season we may not require so much of coal for the thermal stations. For instance, the Electricity Board can transfer their surplus stock to the cement factories and later on the cement factories can re-transfer them to the Electricity Board. If such an understanding between the two organisations is brought about, the crisis can be solved now.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நிலக்கரிப் பிரச்னை தொடர்ந்து கஷ்டமாக இருக்கிற இப்படிப்பட்ட நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையை ஏற்றுக்கொண்டால் மின்சார உற்பத்தி பாதிக்கப் படலாம். ஆகவே இடைக்காலமாக அந்த ஏற்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Dr. H. V. HANDE : What is the exact quantity that is in shortage, what is the loss of production, how many tonnes ought to have been produced and how many tonnes had been actually produced, what is the fall in production, whether all these factors had been properly assessed, whether the Government has got in



touch with the Director-General of Shipping, whether just as we did in the case of coal crisis during the recent power-cut time when the Chief Minister and concerned Minister approached the Director-General of Shipping directly—whether such a thing has been done in this case also giving it top priority—all these things I want to know.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, நிலக்கரி ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் அதனுடைய திறனுக்கேற்றவாறு தேவைப் படுகிறது. மொத்தம் பற்றுக்குறை இவ்வளவு என்று இல்லை. சில தொழிற்சாலைகளில் இன்னும் மூன்று மாதங்களுக்குக்கூட இருக்கிறது, சில தொழிற்சாலைகளுக்கு உடனடியாகத் தேவைப்படுகிறது. இந்த நிலக்கரிச் சுரங்கங்களை நாட்டுடைமையாக்கும் காரணத்தால், உடனடியாகக் கொடுக்கும் பொறுப்பை மத்திய அரசு ஏற்க வேண்டும். மாநில அரசின் சார்பாக சிபார்சு செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுள்ளோம்.

(இ) தோல் பதனிடும் பெரும்பான்மையான சிறு வியாபாரிகளுக்கு, ஏற்றுமதிப் பங்கை ஒதுக்காமல், ஒரு சிலருக்கே ஒதுக்கப்பட்டிருப்பதன் விளைவாக தமிழகத்தில் பல தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மூடப்பட்டதும் அதனால் ஏற்பட்டுள்ள பெரும் வேலையிழப்பும் குறித்து

Thiru M. A. LATHEEF : Sir, I call the attenion of the Hon. Minister for Industries to a matter of urgent public importance, namely, the large scale unemployment due to closure of a number of tanneries in Tamil Nadu as a result of the recent fixation of export quotas to a few merchant exporters and the denial of such quotas to the majority of small tanners in Tamil Nadu.

The Hon. Thiru S. MADHAVAN : Sir, a number of representations were received by this Government about the quota system proposed to be introduced by the Government of India in respect of the export of semi-tanned leather and the need for protecting the interests of small tanners who have hitherto been exporting E.I. tanned leather through merchant exporters. This Government have had the matter examined. The position is as follows :

Following a spurt in the export of wet blue hides or semi finished leather from India during the year 1972, consequent on the restrictions imposed by Brazil and Argentina on export of hides and in pursuance of the recommendations of Dr. Seetharamiah's

Committee, the Government of India considered it necessary to discourage the export of semi-finished leather and encourage the export of finished leather to earn more foreign exchange and at the same time to make finished leather available in adequate quantities, for indigenous footwear industry. Accordingly the Govermnent of India decided to canalise the export of leather from 15th December 1972 through the State Trading Corporation. As a result of subsequent discussions between the Industry and the Government of India, the latter decided to set up an independent agency for the development of leather industry and export of leather and leather products in lieu of the canalisation through the State Trading Corporation Limited.

The Government of India have announced in June, 1973 the basis on which exports of E.I. Tanned and Wet Blue Hides and skins will be exported.

The calendar year 1972 has been taken as the basis for regulating exports. To the exports in 1972, the cut of 20 per cent will be made in respect of E.I. and Chrome tanned cow and buffalo hides and 10 per csnt in respect of E.I. and Chrome tanned cow calf, buffalo calf, sheep and goat skins. The quantity thus arrived at will be the average quota ceiling for 1973–74. Of the quota figure for 1973–74, 10 per cent will be reserved for non-exporting tanners. They will be allotted quotas on pro-rata basis depending upon their average production during the last three years as supported by documentary evidence. The balance quantity will be distributed between manufacturers and merchant exporters on the basis of their best year's performance during any of the 5 calendar years 1968–1972. Certain weightage will be given to the smaller exporters.

For the period 1st August 1973 to 31st March 1974, the export quota has been fixed at 50 per cent of the best year's performance.

However, a number of telegrams have been received by this Government from Ambur, Tiruchirappalli, Madras City, Vellore, Peranampet and Madurai expressing grave concern over the quota system and requesting withdrawal of the system in order to provide employment to Harijan Labourers without any break. The representations have been examined. The Government of



India have been requested to cause the fixation of quotas to non-exporting and small units on pro-rata basis or on the basis of labour strength employed whichever is higher in order to enable the tanning units to keep the labourers employed.

* THIRU M. A. LATHEEF: This Government, as I know, is not directly involved. But in so far as it has affected the basis upon which the stability of the industry is based as a result of this fixation of new quota system by the Government of India all of a sudden, without allowing the tanners of Tamil Nadu even a breathing time, most of the tanneries situated in North Arcot and Madurai Districts have been closed resulting in a crisis in the industry and large scale unemployment of the workmen employed in the tanneries, and since I have also received representations from my constituency that nothing tangible seems to have been done by the Government in this direction to impress on the Government of India to desist from such a move which has basically affected one of the premier industries of our State on which the economy of our State depends to a large extent, may I submit whether this Government have made proper representation to the Government of India to at least postpone this for some time so that concerned people may have time to adjust themselves for an alternative situation. Some breathing time ought to have been allowed ...........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுது அமைச்சரவர்கள் கொடுத்திருக்கின்ற அறிக்கையின்மேல் இரண்டொரு கேள்விகளைப் போடலாமே தவிர, யோசனை சொல்லவோ மற்றவற்றிற்கோ விதிகள் இடம் கொடுக்கவில்லை. நீங்கள் சொல்வது பெரிய பேச்சாகவே வருகிறது, கேள்வி அவ்வளவு நீளமாக இருக்கிறது. இதற்காக வேண்டுமானால் ஒரு 'டிஸ்கஷன்' தேவை என்று கேளுங்கள்.

* THIRU M. A. LATHEEF: That is why I raised this question under Rule 42 so that we could have fuller discussion. It is a very important matter. I would like to know whether the Hon. Chief Minister and the Minister for Industries have met the Central Minister for Commerce, Mr. Chatopadhyaya and made representation on behalf fo Tamil Nadu. I think our Chief Minister and Industries Minister met the Central Minister for Commerce the other day. Did they impress on the Minister that the economy

 தோல் பதனிடும் பெரும்பான்மையான சிறு வியாபாரிகளுக்கு ஏற்று மதிப் பங்கை ஒதுக்காமல், ஒருசிலருக்கே ஒதுக்கப்பட்டிருப்பதன் விளைவாக தமிழகத்தில் பல தோல்பதனிடும் தொழிற்சாலைகள் மூடப்பட்டதும் அதனால் ஏற்பட்டுள்ள பெரும் வேலையிழப்பும் குறித்து.



of our State is greatly involved in this and this has also resulted in large-scale unemployment? As the responsibility of this Government is also involved, I would like to know whethsr effective representation had been made to the Centre. If so, what is the content of the representation, what is the reaction of the Central Minister and what is the remedy suggested by this Government?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் எழுப்பிய பிரச்சினை முக்கியமான பிரச்சினை, இந்த நாட்டிலே உள்ள பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களைப் பாதிக்கும் பிரச்சினை, இந்த நாட்டிலே உள்ள தொழில்களைப் பாதிக்கும் பிரச்சினை. ஆகவே, இதன் முக்கியத்துவத்தைக் கருதி முதலமைச்சரவர்களும் நானும் டெல்லிக்குச் சென்றிருந்தபொழுது பிரதம அமைச்சரிடத்தில் இதைப்பற்றிக் கூறினோம். நேற்று முன்தினம், மத்திய அமைச்சர் திரு. சட்டோபாத்யாயா அவர்களிடம் இதைப்பற்றி விரிவாகப் பேசப்பட்டது. பதனிடப்பட்ட தோல் ஏற்றுமதியைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைக்க வேண்டும், அந்த மூலப்பொருட்களைக்கொண்டு பொருள்களை உற்பத்தி செய்து 'ஃபினிஷ்ட் குட்ஸ்' ஏற்றுமதி செய்ய முயற்சி எடுக்கவேண்டுமென்று இரண்டு கொள்கைகளை மத்திய அரசு எடுத்திருக்கிறது. நாம் அதை ஆட்சேபிக்க முடியாது, அந்தக் கொள்கை ஏற்புடையதுதான். ஆனால் அதை நிறைவேற்றும்பொழுது அங்கத்தினர் அவர்கள் கூறியதைப் போன்று திடீரென்று முன்னறிவிப்பு இல்லாமல் இந்த ஏற்பாட்டைச் செய்தால் வேலையில்லாத் திண்டாட்டம், இந்தத் தொழிற்சாலைகளை மூடும் சூழ்நிலை ஏற்படும் என்பதை அவர்களிடத்தில் வற்புறுத்தினோம். அவர்களும் அந்தக் கருத்தையேற்று, 'கோ ஸ்லோ பாலிசி' என்ற வகையில் இதைப்பொறுத்து சிறிய உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படாத அளவிற்கும், தொழிலாளர்களுக்கு வேலையிழப்பு ஏற்படாத அளவிற்குமான முயற்சிகளிலே இந்தக் கொள்கையை நிறைவேற்றுவோம் என்ற உறுதியைத் தந்திருக்கிறார்கள்.

இன்னொரு யோசனையையும் பரிசீலிக்கச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் ஏற்படுத்தியிருக்கும் கொள்கையால், பெரிய அளவிற்கு ஏற்று மதி செய்யும் வியாபாரிகளுக்குச் சாதகமாகவும், சிறிய அளவில் ஏற்றுமதி செய்யும் தொழிற்சாலை அதிபர்களுக்குக் கொஞ்சம் பாதகமாகவும் இருப்பதாகக் கருத்து நிலவுகிறது. அதைப் பரிசீலித்து சிறிய அளவிற்கு உற்பத்தி செய்யும் தொழிற்சாலை அதிபர்களை ஒன்றுகூட்டி அவர்களிடத் திலே கலந்து உரையாடி சரியான திட்டத்தை மாநில அரசு கொடுத்தால், வழிமுறைகளைச் சொன்னால் அதையும் பரிசீலிப்பதாகச் சொல்லியிருக் கிறார்கள். ஆகவே, இந்த அளவிற்கு இந்த தொழிற்சாலைகள் எதிர் காலத்திலே பாதிக்காத அளவில் மத்திய அரசு நம்முடன் ஒத்துழைக்கும் என்று கருதுகிறேன்.

*திரு. எம். ஏ. லத்தீப் : குறியீடுகள், அளவீடுகள் குறிப்பிட்டு இன்றைக்கு இந்த அளவில்தான் ஏற்றுமதிகள் செய்யப்படவேண்டுமென்று மத்திய அரசு குறித்திருக்கிறது. எப்படி நடத்திக்கொள்ளவேண்டுமென்பது

தோல் பதனிடும் பெரும்பான்மையான சிறு வியாபாரிகளுக்கு ஏற்று மதிப் பங்கை ஒதுக்காமல், ஒருசிலருக்கே ஒதுக்கப்பட்டிருப்பதன் விளைவாக தமிழகத்தில் பல தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மூடப்பட்டதும் அதனால் ஏற்பட்டுள்ள பெரும் வேலையிழப்பும் குறித்து. 



அவர்களுடைய பிரச்சினை. குறைந்த பட்சம் ஒத்திவைப்பதற்கு இந்த அரசு முயற்சி எடுத்துக்கொள்ளும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இதை ஒத்திவைத்து கொஞ்சம் காலம் கொடுத்து பிறகு எப்படி நடத்தவேண்டு மென்பதைப் பற்றி நம்முடைய அரசு மத்திய அரசோடு பேசி முயற்சி எடுத்துக்கொள்ளலாம். ஒத்திவைத்தால்தான் தொழிற்சாலைகள் பிழைக்கும், இல்லாவிட்டால் பயங்கரமான சூழ்நிலை ஏற்படும் என்ற அளவில் நம்முடைய அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முழுமையாக ஒத்திவைப்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று நான் நினைக்கவில்லை. இந்தத் திட்டத்தின் அடிப்படையில் யாருக்கும் பாதகம் இல்லாமல் அமல் நடத்துகிறோம் என்ற உறுதியைத்தான் தந்திருக்கிறார்கள்.

(ஈ) பரம்பிக்குளம்—ஆழியார் பாசனத்தைச் சேர்ந்த காங்கேயம், பொங்கலூர் தொகுதிகளில் சென்ற ஆண்டு தண்ணீர் விடப்படாததால், தண்ணீர்த் தீர்வையை நிறுத்தி வைக்கவேண்டும் என்பது குறித்து.

திரு. கோவை செழியன் : தலைவர் அவர்களே, பரம்பிக்குளம்—ஆழியார் பாசனத்தைச் சேர்ந்த காங்கேயம், பொங்கலூர் தொகுதிகளில் சென்ற ஆண்டு, நான்கு மாதங்களுக்குப் பதிலாக பதினான்கு நாட்கள் தான் தண்ணீர் விடப்பட்டு வேளாண்மை கெட்டுவிட்டதால் உடனடியாகத் தண்ணீர்த் தீர்வையை நிறுத்தி வைக்கவேண்டுமென்பது பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

The Hon. Thiru S. J. SADIQ PASHA : Sir, water was allowed in the Parambikulam Aliyar Project Canal to irrigate an extent of 77,800 acres in the reach from mile 14/6 to 78/3 of the Parambikulam Aliyar Project Main Canal from 1st July 1973 to 15th November 1973. The supply of water was extended for a further period from 19th January 1972 to 2nd December 1972 as a special case to save the standing crops.

During the above period, due to some repairs in the syphon across the main canal at Sultanpet, the release of water had to be stopped for ten days from 30th July 1972. But at the time of above closure, there was good rain in the ayacut area and there was no need for any release of water for all the standing crops.

At the meeting of the Panchayat Presidents, and Karnams of Pongalur Panchayat Union conducted by the Special Deputy Collector (Localisation), Parambikulam Aliyar Project, Pollachi,

on 23th July 1973, the participants were reported to be fully convinced that there was no failure of crops. In the above circumstances, it is evident that there was no failure of crops on account of stoppage of water during the period of ten days from 30th July 1972.

The request for stay of collection of water charge was made by the Chairman of Pongalur Panchayat Union on 16th July 1973 to the Collector of Coimbatore. With reference to the above request, the Collector of Coimbatore has already ordered the stay of collection of water charge, pending disposal of the request.

The only request made by my hon. Friend was stay of collection of water charges and that has been already ordered by the Collector.

திரு. கோவை செழியன் : அமைச்சர் அவர்கள் கூறிய செய்திக்கு நன்றி. ஆனால், அந்த கலெக்‌ஷன் எல்லா இடங்களிலும் நிறுத்தப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தண்ணீர் எல்லாப் பகுதிக்கும் விட்டதாகச் சொன்னார்கள். தண்ணீர் விடுகிறபோது குறைந்த தண்ணீராக இருக்கிற காரணத்தால் மேல் பகுதியில் இருக்கிறவர்கள் கல்லை வைத்தோ அல்லது ஆளைப் படுக்க வைத்தோ தண்ணீரைத் தடுத்துவிடுவதால் கீழ்ப் பகுதிக்கு, டெயில் எண்டுக்குத் தண்ணீர் வருவதில்லை. அப்படிப் பாதிக்கப்பட்டவர்களில் நானும் ஒருவன். வெள்ளாமை காய்ந்து விட்டது. மழை பெய்தது என்று சொன்னார்கள். எல்லாம் காய்ந்த பிறகுதான் மழை பெய்தது என்பதைக் கவனத்தில் வைத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தப் பிரச்சினை குறித்து பொங்கலூர் ஊராட்சி மன்றக் கூட்டத்தில் பொள்ளாச்சி தனித் துணை ஆட்சித் தலைவர், பொள்ளாச்சி நிர்வாகப் பொறியாளர் ஆகியவர்களுடன் பேசி முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த முடிவுகளின்படி ஏற்கனவே சொன்னதுபோல் தண்ணீர்த் தீர்வையை, தண்டத் தீர்வையை நீக்கவேண்டிய அளவுக்கு விவரம் இல்லையென்றாலும் அதுபற்றி விண்ணப்பங்கள் வரும்போது அதிகாரிகள் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அறுவடை முடிந்தவுடன் தனிப்பட்ட குறைபாடு இருக்கும்போது அதிகாரிகள் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இதுபோன்ற குறைபாடுகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் நடவடிக்கை எடுக்க சாத்தியமாக இருக்கும்.



## 4. அறிவிப்பு.

### ஓய்வுபெற்ற பேரவைச் செயலாளர் திரு. கா. து. நடராசன் அவர்களது கடிதங்கள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இப் பேரவையின் முன்னாள் செயலாளர், திரு. கா. து. நடராசன் அவர்களது பணியைப் பாராட்டி இம்மன்றம் நிறைவேற்றிய தீர்மானத்திற்கு நன்றி தெரிவித்து அவர் கடிதம் எழுதியுள்ளார். இக்கடிதமும், அவர் தாம் பதவியிலிருந்து ஓய்வு பெற்றதாக முதலில் எழுதிய கடிதமும் பேரவையின் நடவடிக்கைக் குறிப்பு இணைப்பில் சேர்க்கப்படும்.*

## 5. அறிக்கை அளித்தல்.

### 1969-70-ம் ஆண்டுக்கான பொதுக்கணக்காய்வுக் குழுவின் ஒன்பதாம் அறிக்கை.

திரு. செவடி எஸ். சுந்தரபாரதி : தலைவர் அவர்களே, 1969-70-ம் ஆண்டின் தமிழ்நாட்டிற்கான கணக்குகளின்மீது மேற்படி குழுவின் ஒன்பதாம் அறிக்கையை (பகுதி 2) அளிக்கிறேன்.

## 6. தனியார் அலுவல்கள்

### சட்ட முன்வடிவு—

### (i) தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு வரதட்சணைத் தடுப்புச் சட்ட முன்வடிவு.

THIRU N. K. PALANISAMY : Sir, I move—

"That leave be granted to introduce the Tamil Nadu Dowry Prohibition Bill, 1973."

The motion was put and carried and leave was granted.

THIRU N. K. PALANISAMY : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

### (ii) தனித் தீர்மானம்.

### அரசியலமைப்புக்கு முரணாக, அமைச்சரவைக்குக் களங்கம் ஏற்படுத்தும் முயற்சிகளைக் கண்டித்தல்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 5—4—1973-ம் நாள் அன்று திரு. எம். ஏ. லத்தீப் அவர்களால் முன்னுரைக்கப்பட்ட தீர்மானத்தின்மீது மேலும் விவாதம் தொடரும்.

*392-395-ஆம் பக்கங்களில் இணைப்புகள் V, VI-ஆக சேர்க்கப்பட்டுள்ளன.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சபாநாயகர் அவர்களே, இந்தத் தீர்மானம் சென்ற கூட்டத் தொடருடைய கடைசி நாள் அன்று எடுத்துக் கொள்ளப்பட்டு அந்தத் தீர்மானமே முறையானதுதானா என்ற அளவுக்கு ஒரு ஒழுங்குப் பிரச்சினை எழுப்பப்பட்டது என்பதைத் தாங்கள் அறிவீர்கள். அந்த ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பியவன் நான்தான். அந்த ஒழுங்குப் பிரச்சினையை ஆதரித்துப் பல உறுப்பினர்களும், சில உறுப்பினர்கள் அதை மறுத்தும் பேசினார்கள். அந்த ஒழுங்குப் பிரச்சினையின் அஸ்திவாரமே நம்முடைய விதி 144-ன்படி பார்த்தால் இது ஒரு தீர்மானமாக வரமுடியாது. ஏனென்றால், இந்தத் தீர்மானத்தில் ஒரு குறிப்பிட்ட விஷயம் இருக்கிறது என்பதைவிட பல விஷயங்கள் இருக்கின்றன என்று நான் குறிப்பிட்டேன். அதற்கு உதவி சபாநாயகர் அவர்கள் கொடுத்த தீர்ப்பு இந்தச் சபையைக் கட்டுப்படுத்தும் என்ற முறையில் அந்தத் தீர்ப்பின் பேரில் நான் எதுவும் சொல்வதற்கில்லை.

(திரு. என். டென்னிஸ்—தலைமை)

ஆனால் உதவி சபாநாயகர் அவர்கள் அந்தத் தீர்ப்பைக் கொடுக்கிற போதே தெளிவாகச் சொன்னார்கள். நம்முடைய விதிகள் 143-பி உட்பிரிவின்படி

" ' It shall not contain arguments, infersnces, ironical expressions or defamatory statements, nor shall it refer to the conduct or character of persons except in their official or public capacity. ' Something has been mentioned about some persons or the act of some persons. Hon. Member has said in his resolution—

' Whereas irresponsible attempts are being made to bring the Council of Ministers of Tamil Nadu into disrepute by bringing in the Central Government in the form of an Enquiry Commission............... '

This wording of course seems to be somewhat strong. But I do not think it refers to any particular person. It does not refer to any particular person or any group of persons. "

என்று சொல்லிவிட்டு கடைசியிலே, பேசக்கூடிய உறுப்பினர்கள் மனத்திலே கொள்ளவேண்டுமென்ற முறையில், அரசியல் சட்டத்திற்குப் புறம்பாக இல்லாமலும், கடுமையான பதங்களை உபயோகப்படுத்தாமலும் இருக்க வேண்டுமென்று அவர் சபையைக் கேட்டுக் கொண்டார். நான் உதவி சபாநாயகருடைய தீர்ப்பை இப்போது சொல்வதற்குக் காரணம் என்னவென்றால், இது ஒரு அசாதாரணமான தீர்மானம்



என்பதால்தான். இந்த அசாதாரணமான தீர்மானத்திற்குச் சாதாரணமான தீர்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலையிலே இந்தத் தீர்மானத்தின் பேரில் நான் ஏற்கனவே சொன்ன சில விஷயங்களைத் திருப்பிச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தத் தீர்மானம் நமக்கு முரணாக இருக்கிறது. இந்தத் தீர்மானத்தினுடைய முதல் பகுதியில் அரசியல் சட்டத்தின் 164 (2)-வது பிரிவின்படி இந்தச் சட்டமன்றத்தில் இருக்கக்கூடிய உறுப்பினர்களுக்கும், அமைச்சர்களுக்கும் உறவு என்ன என்று சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு இருக்கக்கூடிய அமைச்சர்கள் இந்தச் சட்டமன்றத்திற்குக் கட்டுப்பட்டவர்கள் என்ற அளவுக்கு அரசியல் சட்டம் சொல்லுகிறது. அந்த விதியை வைத்துக்கொண்டு அதற்கு அப்பாலும், இந்தத் தீர்மானத்திலே போவதற்கான ஏற்பாடுகள் இருக்கின்றன என்பதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதில் முதலில் ஒரு விஷயத்தைச் சொல்கிறார்கள். ஒரு அமைச்சரவைக்கு இங்கிருக்கக்கூடிய சட்டசபைதான் பொறுப்பு என்று இருக்கிற போது அதற்கப்பால் எந்தக் காரியத்தையும் செய்யக்கூடாது என்று தொனிக்கக்கூடிய முறையில் இரண்டாவது பகுதி அமைந்திருக்கிறது. அதில் விசாரணைக்குழு என்ற பெயரால் மத்திய அரசின் தலையீட்டைக் கொண்டுவந்து தமிழ்நாடு அமைச்சரவைக்கு களங்கம் கற்பிக்க பொறுப்பற்ற முயற்சிகள் நடப்பதாலும்......பொதுவாக இந்தமாதிரியான பதப் பிரயோகங்கள் ஒரு தீர்மானத்தில் இல்லாமல் இருந்தால் நன்றாகயிருக்கும். ஆனால் அது தீர்மானமாக வந்துவிட்டது. அது தீர்மானமாக வந்துவிட்ட பிறகு அதைத் திருத்த வேண்டுமென்று அன்றைக்கு நம் ஜோதி அம்மாள் அவர்கள் சொன்னதைக்கூட அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இன்று சபை ரிக்கார்டில் இதெல்லாம்தான் இருக்கிறது. பிற்காலத்தில் அதைப் படிக்கிறவர்கள் இதுபற்றி என்ன கருதுவார்கள் என்று எதுவும் சொல்லமுடியாது. இதிலுள்ள தவறான பார்வையைச் சுட்டிகாட்டவேண்டிய அவசியம் இருக்கிறது.

ஒன்று என்ன சொல்லப்படுகிறது என்றால், விசாரணைக்குழு என்ற பெயரால் மத்திய அரசின் தலையீட்டைக் கொண்டு வருகிறது. விசாரணைக்குழு வேண்டுமென்று ஏற்கெனவே மத்திய அரசிடம் விண்ணப்பித்திருக்கிறோம். தங்களுக்குத் தெரியும். சென்ற ஆண்டு நவம்பர் மாதம் 6-ம் தேதி இந்த அமைச்சரவை பேரில் சில குற்றச்சாட்டுக்கள் தயாரித்து அண்ணா தி.மு.க. தலைவர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. கல்யாணசுந்தரம் அவர்களும்—திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் தயாரித்த மகஜரில் சட்ட சபை உறுப்பினர் என்ற முறையில் நானும் கையெழுத்து போட்டிருக்கிறேன். கல்யாணசுந்தரம் அவர்களும், இன்னொரு மகஜர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களும் இந்தக் குற்றச்சாட்டுகள் குறித்து மத்திய அரசு தலையிடவேண்டுமென்ற நோக்கத்தோடு ஜனாதிபதி அவர்களிடம் கொடுத்திருக்கிறோம். இன்றைக்கு 1952-ம் ஆண்டு கமிஷன் ஆக்

என்கொயரி ஆக்ட் என்ற ஒரு சட்டத்தை மத்திய அரசாங்கம் நிறைவேற்றியிருக்கிறார்கள். அந்தச் சட்டத்தின் மூன்றாவது பிரிவில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் அதிக நேரத்தை எடுக்கக்கூடாது என்பதால் அதைத் திரும்பக் கோட் செய்யவில்லை. என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், மத்திய சர்க்காரோ அல்லது மாநில சர்க்காரோ கமிஷன் ஆப் என்கொயரி போடலாம். நாம் பல என்கொயரி கமிஷன்கள் போடுகிறோம். குறிப்பாக பாளையங்கோட்டையில் ஒரு சம்பவம் ஏற்பட்டது. அந்த சம்பவத்தில் ஜம்புநாதன் என்ற ஒரு மாணவன் இறந்துவிட்டான். மக்கள் சொல்கிறார்கள், போலீஸாரால் அடித்துக் கொல்லப்பட்டான் என்று. போலீஸார் சொல்கிறார்கள், ஆற்றில் விழுந்து இறந்து போய் விட்டான் என்று. மக்கள் மத்தியில் பலவிதமான கருத்தோட்டங்கள் ஏற்படுகின்றன. அப்போது ஜனங்களிடையே ஒரு திருப்தியை ஏற்படுத்த வேண்டுமென்ற முறையில் தமிழ்நாடு அரசு ஒரு என்கொயரி கமிஷன் போட்டிருக்கிறார்கள். சாதாரணமாக நாம் எல்லோரும் தெரிந்தோ தெரியாமலோ ஜுடிஷியல் என்கொயரி என்று சொல்கிறோம்.

It is not a Judicial Inquiry. It is only One-man Commission under the Inquiry Commission Act.

அந்த முறையில்தான் இப்போது கிளைவ் ஹாஸ்டல் சம்பவத்தைப் பற்றியும் ஒரு கமிஷன் ஆப் என்கொயரி போட்டிருக்கிறோம்.

It may be a One-man Commission of Inquiry or it may be Three-men Commission of Inquiry.

கமிஷன் ஆப் என்கொயரி ஆக்டில் சில முக்கியமான விஷயங்கள் என்று கருதப்பட்டால் மாநில அரசு அல்லது மத்திய அரசு கமிஷன் போடலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மாநில அரசின் பேரில் குற்றச்சாட்டு இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அமைச்சரவையில் உள்ள சில அமைச்சர்களின் பேரில் குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன என்றால் மாநில அரசுக்கே மகஜர் கொடுக்கலாம். மகஜர் கொடுத்து குறிப்பிட்ட அமைச்சர் அல்லது அமைச்சர்கள் இந்தக் குற்றங்களைச் செய்திருக்கிறார்கள். ஆகவே, அதற்கு ஒரு கமிஷன் ஆப் என்கொயரி போடவேண்டும் என்று கேட்கலாம்.

We are perfectly within our rights to ask for appointment of such a Commission of Inquiry.

அதே நேரத்தில் முதல் அமைச்சர் அவர்கள் உட்பட சில அமைச்சர்கள் பேரில் குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன என்று சொன்னால் அதைப்பற்றி மத்திய சர்க்காரிடம் கொடுத்து நீங்கள் ஒரு கமிஷன் ஆப் என்கொயரி போடவேண்டும் என்று கேட்பது முறைதான். முறைதான் என்று சொல்லும்போது இதற்கு ஏற்கனவே பல சான்றுகள் இருக்கின்றன.

**There are many precedents for this.**





ஏற்கனவே ஒரிஸாவில் இருந்த அமைச்சரவையின் பேரில் அந்த முறையில் கொடுத்து மத்திய சர்க்கார் ஒரு கமிஷன் ஆப் என்கொயரி போட்டார்கள். அதேமாதிரி பீஹாரில் உள்ள அமைச்சர்கள் பேரில், அங்குள்ள முதல் அமைச்சர் கே. பி. சகாய் உட்பட அவர்கள் மேல் ஒரு என்கொயரி போடப்பட்டது. சகாய் அவர்கள் அப்படி ஒரு கமிஷன் ஆப் என்கொயரி போட, மத்திய அரசு அப்படி ஒரு முதல் அமைச்சர் அவர்களின் பேரில் ஒரு கமிஷன் போட அதிகாரம் இல்லை என்றும் அதே நேரத்தில் அப்படி ஒரு கமிஷன் ஆப் என்கொயரி போடும்போது எங்கள் மாநிலத்தில் உள்ள ஒரு ஜட்ஜைத்தான் போட வேண்டும் என்றும் சுப்ரீம் கோர்ட்டில் வாதாடினார்கள். தங்களுக்குத் தெரியும், அந்தக் குறிப்பிட்ட கமிஷன் ஆப் என்கொயரிக்கு தலைமை வகித்தது, ஒன் மான் கமிஷனாக இருந்தவர் திரு. டி. எல். வெங்கட்டராம ஐயர் அவர்களாவார்கள். முன்னாள் சுப்ரீம் கோர்ட் நீதிபதியாக இருந்தவர்கள். முன்னாள் சுப்ரீம் கோர்ட் ஜட்ஜை போடக்கூடாது. இப்போதிருக்கும் ஹைகோர்ட் ஜட்ஜை போடவேண்டும் என்றெல்லாம் வாதித்தார்கள். சுப்ரீம் கோர்ட் தெளிவாக தன் தீர்ப்பைச் சொல்லியிருக்கிறது.

It is too late in the day to question the power of the Central Government.

என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். முன்பொரு தடவை இந்த சபையில் அந்த சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை நான் வாசித்திருக்கிறேன். இப்போதும் அந்தத் தீர்ப்பை வாசிக்க வேண்டிய அவசியமில்லை என்று நினைக்கிறேன்.

It is also a salutary practice to see that the Judge of the High Court of that particular State is not appointed.

நல்லதொரு முறை என்னவென்றால், அந்த மாநிலத்திலுள்ள ஹைகோர்ட் ஜட்ஜைப் போட்டால் எவ்வளவுதான் நம் ஜுடிஷியரிக்கு ஒரு சுதந்திரம் இருக்கிறது என்று சொன்னாலும் அந்த மாநிலத்தில் போடுகிற காலத்தில் சற்று தடுமாறுவார்கள் என்ற காரணத்தால் வேறு மாநிலத்தில் இருக்கக்கூடிய ஜட்ஜை அல்லது சுப்ரீம் கோர்ட் ஜட்ஜைப் போடுவது சரி என்று சொல்லப்படுகிறது. இப்படி ஏற்கனவே ஏற்பாடுகள் எல்லாம் இருக்கின்றபோது இத்தீர்மானத்தில் இப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்காருக்கு இந்தமாதிரி மகஜர் கொடுப்பதை பொறுப்பற்ற முயற்சி என்று சொல்வது—நாங்களும் கொடுத்திருக்கிறோம்—நான் ஒரு பொறுப்பற்றவன் என்ற முறையில் இருக்கிறது. ஆகவேதான் அன்று உதவி சபாநாயகர் அவர்கள் வார்த்தைகளில் கடுமை இருக்கிறது, இப்படிப்பட்ட கடுமையான வார்த்தைகள் இருந்தாலும்கூட இந்தக் கருத்தோட்டத்தின் பேரில் விவாதிக்கலாம் என்று தெரிவித்தார்கள். ஆகவே, இந்தப் பகுதியைப் பொறுத்தவரையில் இத்துடன் நிறுத்திக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணான முயற்சிகள் என்றால் இதில் என்ன அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணாக இருக்கிறது என்று தெரியவில்லை. அரசியலமைப்புச் சட்டம் பற்றி சென்ற

கூட்டத்தில் சொன்னேன். அரசியலமைப்புச் சட்டம் எப்படி ஏற்பட்டிருக்
கிறது? நமது அரசியலமைப்புச் சட்டம் பெடரலாகவும் இருக்கிறது,
யூனிட்டரியாகவும் இருக்கிறது. அரசியலமைப்புச் சட்டத்தின் அஸ்தி
வாரம் என்ன? சட்டம் படித்த மாணவர்கள் எல்லாம், இதுபற்றி
சொல்லியிருக்கிறார்கள். அதைப் பார்க்கிறபோது It is a peculiar
Constitution. காரணம், நம் நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்தமுறை
அப்படி. நாடு சுதந்திரம் அடைகிறபோது நாட்டின் ஒற்றுமையைத்தான்
மக்கள் மதித்தார்கள். குறிப்பாக, குஜராத்தில் பிறந்த மகாத்மா காந்தி
அடிகளைத்தான் நாம் எல்லோரும் தலைவராக ஏற்றுக்கொண்டோம்.
அதேமாதிரி உத்திரபிரதேசத்தில் பிறந்த ஜவஹர்லால் நேரு அவர்களைத்
தான் முடிசூடா மன்னனாக நாம் ஏற்றுக்கொண்டோம். அதேமாதிரி
வங்காளத்தில் பிறந்த சுபாஷ் சந்திரபோஸ் அவர்களை தமிழ்நாட்டில்
உள்ள நாம் தலைவராக ஏற்றுக்கொண்டோம், வீரராக ஏற்றுக்கொண்
டோம். அதேமாதிரி 1927-ல் அகில இந்திய காங்கிரஸ் மாநாடு கௌஹாத்தி
யில் நடந்தபோது நம் தமிழ் நாட்டில் பிறந்த எஸ். ஸ்ரீநிவாஸ ஐயங்கார்
அவர்களைத்தான் இந்தியத் தலைவராக ஏற்றுக்கொண்டோம், அஸாம்
மக்கள் எல்லாம் எங்கள் மாபெரும் தலைவன் என்று அவர்
களுக்கு வீர வரவேற்பு கொடுத்தார்கள். இவையெல்லாம் சென்ற
காலம். ஆகவே, இந்தியாவைப் பொறுத்தவரையில் இருக்கக்கூடிய அரசு
ஒரு அன்னிய அரசு, இந்த அந்நிய ஆட்சியில் இருந்து இந்தியா சுதந்
திரம் அடையவேண்டுமென்றால் இந்தியா நாடு பூராவிற்கும் சுதந்திரம்
கிடைக்க வேண்டுமென்ற முறையில்தான் இயக்கம் நடந்து 1947-ல்
சுதந்திரம் கிடைத்தவுடன் 'இன்ஸ்டருமெண்ட் ஆப் இண்டிபெண்டன்ஸ்'-ல்
தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் என்ன சொல்லப்பட்டிருக்
கிறது? இன்று இதுவரையில் அரசியல் அதிகாரம் பிரிட்டிஷார் கையில்
இருந்தது, இன்று இந்திய மக்கள் பூராவிற்கும் டிரான்ஸ்பர் செய்கிறோம்.
The power was transferred to the entire Indian people. பவர் தமிழ்
நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல, அல்லது ஒரு ஜில்லா மக்களுக்கு மட்டு
மல்ல, அல்லது ஆந்திராவிற்கு மட்டுமல்ல. எல்லோருக்கும் பிரிக்கப்
பட்டிருக்கிறது, இந்தியா பூராவிற்கும், ஓரளவிற்கு மக்களுடைய பிரதிநிதி
கள் என்று சொல்லக்கூடிய முறையில் கான்ஸ்டிட்யூயெண்ட் அசெம்பளியில்
உட்கார்ந்து எந்தவிதமான அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்க
வேண்டுமென்று சொல்லி அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கினார்கள்.
அப்படி அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியதில் மிகப் பெரிய பங்கு
இதே தமிழ் நாட்டில் இருந்து சென்ற அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர்
அவர்களைப் போன்றவர்களுக்கு உண்டு. இதே தமிழ்நாட்டில் இருந்து
சென்ற டி. டி. கிருஷ்ணமாச்சாரியவர்களைப் போன்றவர்களுக்கு உண்டு.
அதேமாதிரி அதில் டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்கும் மிகப் பெரிய
பங்கு உண்டு. அப்படித்தான் நமது அரசியலமைப்புச் சட்டம் உருவாகி
யிருக்கிறது,

அந்த அரசியல் சட்டத்திலே 5 ஆண்டுகளுக்கு ஒரு தடவை தேர்தல்
நடக்க வேண்டுமென்றும் இருக்கிறது. அதிலே மாநிலங்களை எப்படி
பிரிக்கலாம், ஏற்கனவே இருக்கிற மாநிலங்களின் எல்லைகளை எப்படி
மாற்றலாம் என்பதற்கான அம்சங்களும் இருக்கின்றன. ஆகவே,
இந்த தேர்தல் நடக்கவேண்டுமென்பது அரசியல் சட்டத்தின் அடிப்



படையில்தான், இந்த மாகாண சர்க்காருக்கு அதிகாரம் வருகிறது என்பதும் அரசியல் சட்டத்தின் அடிப்படையில் தான், எனவே, இந்த மாகாண சர்க்காருக்கு அதிகாரம் இல்லாமல் செய்வதற்கும், இந்த மாகாணத்தின் எல்லைகளை மாற்றுவதற்கும் அரசியல் சட்டத்தில் அதிகாரம் இருக்கிறது. நாம் அதற்குக் கட்டுப்பட்டவர்களாகத்தான் இருக்கிறோம். அரசியல் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவர்கள் என்ற நிலை மாறி, There is a negation of the Constitution itself.

அப்படியில்லாமல், இந்தத் தமிழ் நாட்டில் இருக்கும் சட்டமன்றத்திற்கு முழு அதிகாரம் இருக்கிறது மாதிரியும், இந்தச் சட்டமன்றத்தின் அதிகாரத்தில் வேறு யாரும் தலையிடக்கூடாது என்பதும், சட்டமன்றத்தில் அரசியல் சட்டத்தை விமர்சனம் செய்வதும், அரசியல் சட்டத்தை எதிர்ப்பதும் சரியல்ல, நாளைக்கு ஒரு தீர்மானம் போட்டு—மெஜாரிட்டி இருக்கிறது என்று சொல்லி—தமிழ்நாடு தனியாகப் போய்விடும் என்றும் தீர்மானம் போடலாம், போடுவதற்கு அதிகாரம் இருக்கிறது, மெஜாரிட்டி இருக்கிறது என்று சொல்லலாம்.. அப்படிச் செய்வது அரசியல் சட்டத்திற்கு விரோதமானது என்பதை நான் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். அது இந்த நாட்டில் பல ஆண்டுகாலமாக நாம் கட்டிக் காத்து வந்த பாரம்பரியத்திற்கு விரோதமானது. ஆகவே, அப்படிப்பட்ட தீர்மானத்தைப் போட முடியாது. அப்படிப் போடுவதற்கு உரிய வாய்ப்பைக் கொடுக்கும் முறையில் இந்தத் தீர்மானம் அமைந்து இருக்கிறது. There is a re-statement. இந்தத் தீர்மானத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால் "அரசியலமைப்பின்படி இப்பேரவைக்குள்ள இந்த அதிகாரம், பொறுப்பு ஆகியவற்றில் தலையிடுவது, அரசியலமைப்பிற்கு முரணான செயலானது மட்டுமல்லாமல், நமது அரசியலமைப்பில் கட்டிக்காத்துப் பேணிவரப்படும் மக்கள் கூட்டாட்சி முறையில் ஆணிவேரையே அறுத்தெறியும் ஜனநாயகப் பண்பற்றச் செயலாகும் என்று தெரிவித்துக்கொள்கிறது". மக்கள் கூட்டாட்சி என்று சொன்னால் ஆங்கிலத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை, 'பெடரல் டெமாக்ரஸி' என்று சொல்லப்பட்டிருக்கிறது. 'பெடரல் டெமாக்ரசி, என்பது ஒரு புதிதான காய்னேஜ். பெடரல் டெமாக்ரசி என்பதை இப்போது தான் நான் புதிதாகத் தெரிந்து கொண்டு இருக்கிறேன். சென்ற தடவை அது குறித்து நான் விளக்கமாகப் பேசியிருக்கிறேன் நான் மீண்டும் அதை ரிபீட் செய்ய விரும்பவில்லை. பெடரல் அமைப்பு என்ற முறையில் இருந்தால், மத்திய அரசுக்கு அதிகமாக அதிகாரம் இருக்கும். சட்டசபை சரியாக நடக்கவில்லை என்றால் சட்டசபையைக் கலைக்க அதிகாரம் உண்டு. அரசியல் சட்டத்திற்கு விரோதமாகப் போனால் கலைக்க அதிகாரம் உண்டு. அந்த அரசியல் சட்டத்தை 'இன்டர்பிரட்' செய்கிறேன், அதை வியாக்கியானம் செய்கிறேன், அதன் மேல் அபிப்பிராயம் சொல்கிறேன் என்ற முறையில் அரசியல் சட்டத்தை சந்தேகிக்கும் அம்சம் இதில் இருக்கிறது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தத் தீர்மானம் is beset with dangerous potentialities என்ற அளவிற்கு நான் சொல்கிறேன். ஏனென்றால், இதில் பல ஆபத்துக்கள் இருக்கின்றன.

[திரு கே. டி. கே. தங்கமணி] [1973 ஆகஸ்ட் 14

நாளைக்கு தமிழ் நாடு தமிழருக்கே, தனித் தமிழ் நாடு வேண்டும் என்ற கோஷம் வந்தாலும் அச்சப்படுவதற்கில்லை. அதற்கு அச்சாரமாகத்தான் இந்தத் தீர்மானம் இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன். இன்று தமிழ்நாடு சட்டசபைக்குத்தான் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் அதிகாரம் என்றால், மகாராஷ்டிரத்தைப் பொறுத்தவரையில் மகாராஷ்டிரத்திற்கும், ஆந்திராவைப் பொறுத்தவரையில் ஆந்திராவிற்கும் கேரளாவைப் பொறுத்தவரையில் கேரளாவிற்கும் என்று ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒவ்வொரு சட்டம், நாங்கள் தான் இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில் அதிகாரம் படைத்தவர்கள் என்று சொன்னால், அது அரசியல் சட்டத்திற்கு முரண்பாடானது ஆகும். தமிழ்நாட்டில் கேரளாவைச் சேர்ந்தவனும், மகாராஷ்டிரத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவனும் வசிப்பதற்கு அரசியல் சட்டம் இடமளிக்கிறது. அவர்களையெல்லாம் பாதிக்குமவகையில் அரசியல் அமைப்புச் சட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் உரிமைகளைப் பறிக்கும் வகையில் இந்தத் தீர்மானம் இருக்கிறது என்று சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். இத்தகைய அபாயங்களும், ஆபத்துகளும் இந்தத் தீர்மானத்தின் பின்னணியில் இருப்பதால், இந்தத் தீர்மானம் நிராகரிக்கப்படவேண்டும்.

நான் ஆரம்பத்தில் சொன்ன மாதிரி இந்தத் தீர்மானத்தையே அனுமதித்து இருக்கக்கூடாது. 144-வது விதியைப் பார்த்தாலும் இப்படி 4, 5 விஷயங்களைச் சேகரித்து ஒரு தீர்மானத்தில் புகுத்த முடியுமா என்று பார்க்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட விஷயம்தான் ஒரு தீர்மானத்தில் இருக்கவேண்டும். அப்படித்தான் நம்முடைய விதிமுறையில் இருக்கிறது. முறைக்கு விலக்காக ஏன் இது கொண்டுவரப்பட்டது என்று எனக்குத் தெரியவில்லை. சபாநாயகர் அனுமதித்து இருக்கிறார். சபாநாயகரைக் குறை சொல்லக்கூடாது என்ற பண்பாட்டின் காரணமாக, அதைப்பற்றி நான் கூறவில்லை. இது மாதிரியான தீர்மானங்கள் இனிமேலாவது வரக்கூடாது. ஒரு தீர்மானம் குறிப்பிட்ட ஒரு விஷயத்தைக்குறித்து அபிப்பிராயம் சொல்கிற மாதிரி இருக்கலாம். ஏதோ இன்று அரசுக்கு குறிப்பிட்ட கொள்கையை நிர்ணயிப்பதற்கும், இந்த அரசுக்கு எதிராக இருக்கக்கூடிய எதிர்க்கட்சிகளை, தலைவர்களை மறைமுகமாகத் தாக்குவதற்குமான அம்சங்கள் இருப்பதால் இப்படிப்பட்ட தீர்மானம் சரியல்ல. இந்தத் தீர்மானத்தின் அடிப்படையையே நான் எதிர்க்கிறேன் என்று சொல்லி, இந்தத் தீர்மானத்தின் 'வெரி பார்ம் அன்டு கன்டென்ட் ஆப் தி ரெசல்யூஷன் ஆர் போத் அப்ஜெக்‌ஷனபிள்' என்று சொல்லி, இது நிராகரிக்கப்படவேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, திரு. லத்தீப் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்தத் தீர்மானத்தின் மீது கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் நண்பர் தங்கமணி அவர்கள் கூறிய கருத்துக்களை ஒட்டி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நானும் சில கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன்.



1973 ஆகஸ்ட் 14] [திரு. கே. ஏ. மதியழகன்]

இந்தத் தீர்மானமே அவசியம் இல்லாத ஒன்று. அவசியம் இல்லாதது மாத்திரமல்லாமல், ஒரு திசை திருப்புவதற்காக, அதனுடைய பொருளிலே வார்த்தைகள் கையாளப்பட்டுத் தீர்மானமாக அமைந்து இருக்கிறது. இந்தத் தீர்மானத்தின் வார்த்தைகளின் அடிப்படையில் இந்தத் தீர்மானத்தை இந்த மாமன்றம் அனுமதித்து இருக்கக்கூடாது. இந்தத் தீர்மானத்தின்மூலமாக இந்த மாநிலத்தில் இன்றைக்கு எழுந்துள்ள ஒரு கடுமையான பிரச்சினையை அடிப்படையாகக்கொண்டு, அதை மழுப்புவதற்கும், அதிலே ஏதோ ஒரு தெளிவான நிலையை இந்த மாமன்றம் எடுத்து இருக்கிறது என்று சொல்வதற்கும் ஒரு முயற்சிதான் இந்தத் தீர்மானம்.

நம் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர், இங்கே சொன்னதுபோல், இந்த மாமன்றத்தின் அதிகாரத்தில் யாருக்கும் கொஞ்சம்கூட இரண்டு விதமான அபிப்பிராயங்கள் கிடையாது. இந்தச் சட்ட மன்றம் அதனுடைய அதிகார வரம்பிலே முழு "சாவரினிடி" பெற்றது. அதிலே யாருக்கும் ஆட்சேபணையில்லை. திரு. லத்தீப் அவர்களிடத்தில் ஆட்சேபணை செய்யப் போவதும் இல்லை. அதனுடைய "ஸ்பியரிலே" (Sphere) அது முழு உரிமை பெற்றதே ஒழிய "கான்ஸ்டிட்யூஷனுக்கு" உட்பட்டதுதான். அரசியல் சட்டத்தின்கீழ் சட்ட மன்றம் இருக்கிறது. பாராளுமன்றம் இருக்கிறது. அரசும்கூட நடைபெறுகிறது. ஆகவே, என்னவோ ஒரு சூனியத்திலிருந்து இந்தச் சட்ட மன்றம் பிறந்து விட்டது என்பது அல்ல.

மந்திரிமார்கள் அரசியலமைப்புச் சட்டம் 164-வது பிரிவின்படி கூட்டுப்பொறுப்பானவர்கள் என்று சொல்கிறார்கள். அதிலேயும் யாருக்கும் எந்த விதமான தகராறும் இல்லை. ஆனால் அதற்குச் சம்பந்தம் இல்லாத பிரச்சினைகளை "என்கொயரி கமிஷன்" என்பதைப் போடுவதற்கு வேறு அவையில் இருப்பவர்களுக்கு அதிகாரம் கிடையாது என்று சொல்வது "அன்-கான்ஸ்டிட்யூஷனல்" அது ஜனநாயகத்திற்கு விரோதமானது என்ற ஒரு கருத்தை அடிப்படையாகக் கொண்டு இங்கே ஒரு தீர்மானம் கொண்டுவந்திருப்பது ரொம்ப வேடிக்கையாக இருக்கிறது. விசித்திரமாக இருக்கிறது. இதை வெளியில் இருப்பவர்கள் பார்த்தால், இப்படிப்பட்ட ஒரு பரபரப்பான ஒரு அவசியமில்லாத நிலையில் ஒரு சட்டம் வருகிறது, மெஜாரிட்டி இருக்கிறது என்ற காரணத்திற்காக அப்படிச் செய்தார்களோ என்று கூடக் கருதுவார்கள். ஏன் இந்தத் தீர்மானம் வந்தது, இந்தத் தீர்மானத்தின் நோக்கங்கள் என்ன? எல்லோருக்கும் தெரியும்.

இந்த மாநில ஆட்சிமீது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கருணாநிதி அவர்கள்மீது ஊழல் குற்றச்சாட்டுப் பட்டியல் ஒன்றை— பொறுப்பற்றவர்கள் அல்ல, ஏனோ தானோக்கள் அல்ல, இந்த மாமன்றத்திலே அங்கம் வகிக்கிற இரண்டு மிகவும் பிரதான எதிர்க்கட்சிகளின் தலைவர்கள், எங்கள் கட்சியின் தலைவர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களும், கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. கல்யாணசுந்தரம் அவர்களும், மிகப் பொறுப்பானவர்கள், அவர்கள் இந்த அரசு பலமாதிரியான முறைகேடுகளைச் செய்துஇருக்கின்றது, அதிகாரத்துஷ்பிரயோகங்களைச் செய்து இருக்கிறது, பல மாதிரியான பேவர்டிசம் நடைபெற்று

இருக்கிறது. "மிஸ்யூஸ் ஆப் பவர்" நடைபெற்று இருக்கிறது, "அப்யூஸ் ஆப் பவர்" நடைபெற்று இருக்கிறது. பல மாதிரியான "கரப்ஷனுக்கான" காரியங்கள் நடைபெற்று இருக்கிறது என்ற பட்டியலை மத்திய அரசிடத்தில் ஜனாதிபதி அவர்கள் மூலமாகக் கொடுத்து இருக்கிறார்கள்.

முற்பகல் 11-00

அதைக் கொடுத்ததைத் தொடர்ந்து நம்முடைய மாநில முதல் அமைச்சர் அவர்களுடைய குறிப்புகளுக்கு அவர்களுடைய ரிமார்க்ஸுக்கு அனுப்பிவைக்கப்பட்டன. இவர்களும் அதற்கான பதிலை அங்கே அனுப்பினார்கள். இரண்டாவது பட்டியல் ஒன்றும் கொடுக்கப்பட்டு, அந்தப் பட்டியலுக்கும் இங்கேயிருந்து பதில் அனுப்பப்பட்டிருக்கிறது. இங்கே நம்முடைய நண்பர் சத்தீப் அவர்களுடைய தீர்மானத்தை நாம் ஏற்றுக்கொள்வோமானால், அதற்கு மாங்களிடமிருந்து நம்முடைய ஆட்சி பொறுப்பில் இருக்கிற கட்சி முன் வருமானால், அதற்குப் பதிலைகூட அனுப்பியிருக்கக் கூடாது. அவர்கள் பொறுப்பற்றவர்களாக இருக்கலாம். இப்படியெல்லாம் ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டிருக்கக்கூடாது. இதை அனுமதித்த சட்டத்துறை இலாகாவையே நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

மிகப் பொறுப்பானவர்கள், ஒரு மாமன்றத்தில் அங்கம் வகிப்பவர்கள் நாட்டு மக்களிடத்தில் பல கோடி மக்களுடைய நம்பிக்கையைக் கொண்டவர்கள், அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு நாங்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கிறோம். எந்தத் தண்டனை வேண்டுமானாலும் நாங்கள் பெறுவதற்குத் தயாராக இருக்கிறோம். கொடுத்திருக்கிற குற்றச்சாட்டுகளைப்பற்றி இப்படி "இர்ரெஸ்பான்ஸிபிள் அட்டெம்ப்ட்ஸ் ஆர் மேட்" என்ற ஒரு வாசகம் ஒரு மாமன்றத்தில் சட்டமன்றத்தில் இடம் பெறுகிறது என்றால் சட்ட மன்றத்தின் நிலைமை எவ்வளவு இறங்கிக்கொண்டு வருகிறது என்பது குறித்து உண்மையிலே நான் வருத்தப்படுகிறேன்.

இன்றைக்கு இந்தத் தீர்மானத்தை நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஆதரிக்கிறார்கள் என்ற நிலைமை வருமேயானால்—அது தான் நிலை இந்த மாமன்றத்திற்குத்தான் கட்டுப்பட்டவன், இந்த மாமன்றத்திற்கு வெளியிலே நாங்கள் யாருக்கும் கட்டுப்படவில்லை என்று சொன்னால், ஏன் பதிலை அனுப்பினார்கள்? மரியாதைக்காக என்று சொல்வார்கள், பண்புக்காக என்று சொல்லிக்கொள்வார்கள். அப்படி ஒரு நிலையை நாம் எடுக்கக்கூடாது. இல்லையென்றால், இந்த அதிகாரம் மத்திய சர்க்காருக்குக் கிடையாது என்று இருக்கிற நிலைமை இருக்குமானால் அவர்கள் பதில் அனுப்பியிருக்கக்கூடாது. அனுப்பலாம், அனுப்பவில்லை என்று சொன்னாலும் இந்த அரசு மத்திய அரசுக்குக் கட்டுப்பட்டதுதான் என்பதை யாரும் மறுப்பதற்கு இல்லை. எதற்கு சட்டோபாத்தியா அவர்களோடு மாண்புமிகு சட்ட அமைச்சர் மாதவன் அவர்கள் பேசுகிறார்கள்? ஆகா, இந்த 235 பேர், வீற்றிருக்கும் சபையின் நான்கு சுவர்களுக்கு அப்பால் உலகமே கிடையாது என்று ஏன் சொல்லக்கூடாது?

இவர்கள் கவர்னருக்குக் கட்டுப்பட்டவர்கள் இல்லையா? கவர்னர் சம்மன் பண்ணினால் இந்தச் சட்டசபையைக் கூட்டமாட்டார்களா? கவர்னரைப் பொறுத்தவரையில் "ட்யூரிங் தி ப்லெஷர்" என்று இருக்கிறது. 5 வருஷங்



களுக்குச் குத்தகை கொடுத்திருக்கிறார்கள் மக்கள். ஆனால் இதே கவர்னர் ஒரு கால் கடுதாசியில் இந்த மந்திரிசபையை நான் டிஸ்மிஸ் செய்கிறேன் என்று சொன்னால் நாங்கள் கேட்க முடியாது என்று சொல்ல முடியுமா? சட்டசபைத் தீர்மானம் நிறைவேற்றவேண்டும் என்று சொல்ல முடியுமா? நீங்கள் அரசியல் சட்டம் படித்தவர்கள். கவர்னர் என்ற ஒரு அமைப்பு இருக்கிறது. அது கான்ஸ்டிடியூஷனல் அமைப்புதான். மத்திய அரசு என்ற ஒரு அமைப்பு இருக்கிறது. மாநில அரசு என்று ஒரு அமைப்பு இருக்கிறது மத்திய சட்டசபை மாநில சட்டசபை என்ற அமைப்புகள் இருக்கின்றன. ஒவ்வொரு ஒன்று ஒருங்கிணைந்தவை. அவை அவைகளுக்குப் பொறுப்புகள் இருக்கின்றன. நிலைமையைக் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

மத்திய அரசுக்குப்பொறுப்பு இருக்கிறது. மாநில அரசுக்கும் பொறுப்பு இருக்கிறது. மாநில அரசுக்குத் தானே பொறுப்பு இந்த அமைச்சரவை, இந்த மன்றத்திற்குத்தானே பொறுப்பு என்றால் இதனுடைய ஸ்ஃபியரில் பொறுப்பு. நம்முடைய அரசியல் சட்டத்தின்கீழ் மத்திய அரசுக்கு அவர்கள் பதில் சொல்லவேண்டிய கடமை இருக்கிறதே? கவர்னர் அவர்களுக்குப் பதில் சொல்லவேண்டிய கடமை இருக்கிறதே? கவர்னருக்குப் பொறுப்பு கிடையாது என்றால் கவர்னர் எதற்கு சம்மன் பண்ணுகிறார்கள்? நாமே கடுதாசி எழுதி கூப்பிட்டுச் சட்ட மன்றத்தைக் கூப்பிடலாமே? கவர்னர் அவர்கள் கான்ஸ்டிடியூஷன் ப்ரேக்டவுன் ஆகிவிட்டது. நிதி நெருக்கடி ஏற்பட்டுவிட்டது அல்லது சட்டம், ஆர்டர் இவைகளெல்லாம் ஒழுங்காக இல்லை என்பதற்குப்போதிய காரணங்கள் இருந்தால் இன்றைக்குக் கூட மத்தியானம் இந்தச் சட்டசபை எழுந்திருப்பதற்கு முன்னாலேகூட கலைத்துவிட முடியாதா? இல்லை, அப்படிச் செய்வது அனநாயகத்திற்கு கான்ஸ்டிடியூஷனல் என்று சொல்லிவிட முடியுமா? ஜனநாயகத்திற்கு விரோதம் என்று சொல்வார்களா?

மந்திரியார்கள் இன்றுகூட கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குப் பதில் அளிக்கும்பொழுது மத்திய அரசைப்பற்றிச் சொன்னார்கள். இவர்கள் ஏன் அங்கே போகவேண்டும்?. அரசியல் சாசனத்தின் அடிப்படையில் எழுந்த ஒரு அங்கம்தான் இந்தச் சபையும். இந்த மாமன்றத்தின் அதிகாரங்கள் குறையக்கூடாது என்பதில் மாண்புமிகு லத்தீப் அவர்களைவிட எங்களுக்குக் குறைவான எண்ணம் கிடையாது. இதற்குச் சில பொறுப்புகள் உண்டு. இந்த அமைச்சரவை இந்த மன்றத்திற்குக் கட்டுப்பட்டதுபோல அரசியல் சாசனத்திற்கும் கட்டுப்பட்டது, மத்திய அரசுக்கும் கட்டுப்பட்டது. அதைவிட அதிகமாக நம்முடைய எஜமானர்களாகிய மக்களுக்குக் கட்டுப்பட்டவர்கள்.

இங்கே ஒரு பிரச்னை எழுந்தது. நான் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களை ரொம்பப் பணிவோடு கேட்டுக்கொண்டேன். நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதிக்கப்பட்டபொழுது நான் ரொம்பவும் உதய சுத்தியோடு கேட்டுக்கொண்டேன். இந்தப் பிரச்னையை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். இது ஒன்றும் கேவலமானது அல்ல. குற்றச்சாட்டு என்பதும், குற்றச்சாட்டுக்குப் பதில் இருப்பது என்பதும், பொது வாழ்வுக்கு வந்தவர்களுக்கு சகஜமானது, மிகச் சாதாரணமானது. அவைகளை நாம் சந்திக்க

வேண்டுமேதவிர, எங்கேயோ ஓடி ஒளிந்துகொண்டு, வளைந்து நழுவி சந்து பொந்துகளில் புகுந்துகொள்வது உண்மையான பரிகாரம் ஆகாது. இம்மாதிரியான குற்றச்சாட்டுகள், முறையீடுகள் அதிகார துஷ்பிரயோகம், லஞ்சம் லாவண்யம் இருக்கிறது என்றால், அவர்கள் இதைச் சந்திக்க வேண்டும். என்குயரி கமிஷன் போடவேண்டியதில்லை என்று சொன்னால், உங்களிடம் தவறு இருக்கிறது என்றால் சட்ட சபையில் பேசிக்கொள்ளலாம் என்று வாதிப்பதற்குக் கூப்பிடுகிறார்கள். இது வாதம் அல்ல. வாதிக்க வேண்டிய பிரச்சினை அல்ல. விசாரணைக்குரிய பிரச்சினை. அவர்களைகூட ஒரு சுப்ரீம் கோர்ட் ஜட்ஜையிட்டு ஏன் விசாரணை வைக்கக் கூடாது?

நான் அன்றைக்கே கேட்டேன். மத்திய அரசு இன்றைக்குக் காலம் கடத்துகிறார்கள். பொறுப்புள்ள எதிர்க்கட்சியான நாங்கள், இந்தக் குற்றச் சாட்டுகளைக் கொடுத்திருக்கின்றோம், இந்த அமைச்சரவையின்மீது. ஸ்தாபன காங்கிரஸ் கட்சியும் அந்தக் கோரிக்கையை எழுப்பியிருக்கிறது. இந்திராகாந்தி அம்மையார் அவர்களுடைய கட்சியும், தமிழ்நாட்டிலே உள்ள கட்சியே அதை எழுப்பியிருக்கிறது. எல்லாக்கட்சிகளுமே பொதுவாக ஒரு விசாரணைக் கமிஷனை நியமிக்கவேண்டுமென்று ஒரு கோரிக்கையை எழுப்பியிருக்கிறது. 7 மாதம், 8 மாதம் ஆகிறது. மத்தியஅரசில் இருக்கும் இந்திராகாந்தி அம்மையாருக்குவேலைகள் இருக்கலாம். ஆயிரம் வேலைகள் இருக்கலாம், கவனிக்க வேண்டிய வேலை இருக்கலாம், ஆந்திரப் பிரச்சினைக்குப் பரிகாரம் தேடவேண்டிய வேலை இருக்கலாம். ஆனால் இந்த மாநிலத்திற்கு ஆற்ற வேண்டிய சில பொறுப்புகளும் அவர்களுக்கு உண்டு. இந்த மாநிலத்தில் முறைகேடுகள் இருக்கின்றன, அதிகார துஷ்பிரயோகம நடைபெறுகிறது, பொறுப்பில் இருக்கிறார்கள் என்று இந்த ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள் இந்த நாட்டினுடைய பொருளாதாரத்தைக் கெடுக்கும் முறையில், பொதுவாழ்வு நேர்மைக்கு விரோதமாக நடந்து கொண்டிருக்கிறார்கள் என்று பொறுப்புள்ள எதிர்க்கட்சிக்காரர்கள் கூறுகிறார்கள். அவர்களுடைய சொந்தக் கட்சியிலிருந்தேகூட கோரிக்கை விட்டதற்குப் பின் 8 மாத காலம் ஆகியும் பிரைமா ஃபாஸி கேஸ் இருக்கிறதா என்று பரிசீலித்துக் கொண்டிருப்பார்களேயானால், மத்திய சர்க்கார் இதிலிருந்து விசாரணைக் கமிஷன் நியமிக்கவேண்டும் என்ற பொறுப்பிலிருந்து நழுவிக்கொண்டிருக்கிறார்கள், தட்டிக் கழிக்கிறார்கள் என்று நான் வன்மையாகக் குற்றம் சாட்டுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மத்திய சர்க்காரைச் சேர்ந்த மந்திரிகள் திரு. மோகன் குமாரமங்கலம், திரு. சி. சுப்பிரமணியம், திரு. கணேசன் என்று ஒரு அமைச்சர், இந்த மாநிலத்தோடு, தமிழ் நாட்டோடு உறவு கொண்டவர்கள் இவ்வளவு பேர்களும் இதனுடைய நியாயத்தை எடுத்துச் சொன்னதற்குப் பிறகும் மத்திய சர்க்கார் நடவடிக்கை எடுக்காதது குறித்து வருத்தப்படுகிறேன், ஒன்று, இல்லை என்று சொல்லி விடட்டும், ரொம்ப சந்தோஷம். பிரைமா ஃபாஸி கேஸ் கிடையாது, திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களும், திரு. எம். கல்யாணசுந்தரம் அவர்களும் கொடுத்த குற்றச்சாட்டுகள்



அற்பத்தனமானவை, ஆதாரமற்றவை என்று சொல்லட்டும். அதாவது தைரியமாகச் சொல்லட்டும். அப்படியில்லாமல் இன்னமும் காலம் கடத்திக்கொண்டிருக்கிறது. இந்த மாநில மக்கள், 4 கோடி மக்கள், மத்திய அரசு தங்களுக்குச் செலுத்தவேண்டிய கவனத்தைச் செலுத்தாமல் ஏதோ காலம் கடத்துகிறது என்ற முடிவுக்கு வரவேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்வேன். இந்தப் பிரச்சினையை நேராகச் சந்தியுங்கள். இது உங்களுக்கு ஒரு வாய்ப்பு என்றுகூட சொல்லுவேன். குற்றச்சாட்டுகளில் ஒன்றுமில்லை, ஆதாரம் இல்லை என்று சொன்னால் அதற்கு ஒரு வழி இருக்கிறதே, ஒரு விசாரணை கமிஷனை நீங்களே வைத்துவிடலாமே? என்குயரி சட்டத்தின்கீழ் மாநில சர்க்காரும் விசாரணைக் கமிஷன் நியமிக்கலாம். ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு மாநில அரசே ஒரு விசாரணைக் கமிஷனை நியமிக்கலாம். எதற்கு வேறு எதுவும் ஒரு விசாரணைக் கமிஷனை நியமிக்கிறீர்களே? கிளைவ் ஹாஸ்டல் சம்பவத்துக்கு ஒரு விசாரணைக் கமிஷன் நியமிக்கவில்லையா? அதற்கு ஒரு என்குயரி கமிஷன் போடுகிறீர்கள். கரிவலம்வந்த நல்லூரில் இருந்தகூடிய நிலைமைகளெல்லாம் தெரியாதா? அதற்கு ஒரு விசாரணைக் கமிஷன் வைக்கவில்லையா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தமிழக அமைச்சரவையில் இருக்கின்ற அத்தனை பேர்களும், உறுப்பினர்களும் ஊழல் குற்றத்தில், லஞ்ச லாவண்யத்தில் ஈடுபட்டவர்கள் என்று எம். ஜி. இராமச்சந்திரன் சொன்னபோது சில எதிர்க்கட்சிகள் எம். ஜி. இராமச்சந்திரனைப் பார்த்து, அங்கிருந்து சில எம்.எல்.ஏ-க்கள் உங்கள் கட்சிக்கு வந்திருக்கிறார்களே; அவர்களை எப்படிச் சேர்த்துக் கொண்டீர்கள் என்று கேட்டார்கள். அப்போது எம்.ஜி. இராமச்சந்திரன் சொன்னார், நாங்கள் ஒரு நீதிபதியை வைத்து விசாரித்துத்தான் சேர்த்துக் கொண்டோம் என்று. யார் யார் நீதிபதியாக இருந்தார்கள்? யார் யார்மீது விசாரணை செய்தார்கள்? என்ன முடிவு செய்தார்கள்?

திரு. கே. ஏ. மதியழகன் : நான் பொறுப்போடு, நிதானத்தோடு மிகவும் சிரத்தையோடு, அக்கறையோடு பேசிக்கொண்டிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் என்னை......

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நானும் அக்கறையோடுதான் கேட்கிறேன். இங்கிருந்து 7, 8 பேர் அங்கே வந்திருக்கிறார்கள். எந்த நீதிபதியை வைத்து விசாரித்து அவர்களைச் சேர்த்துக்கொண்டீர்கள்?

திரு. கே. ஏ. மதியழகன் : அவர்கள் முதலமைச்சரும் அல்ல அங்கே இருந்து இங்கே வந்தவர்கள் எல்லாம் ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு ஆட்பட்டவர்களுமல்ல. (சிரிப்பு). சிரிப்பதற்காக நான் சொல்லவில்லை. தவறு செய்திருந்தால் நடவடிக்கை எடுக்கட்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சங்கத்தில் இருக்கிற எம்.எல். ஏ-க்களில் ஒருவர் 'கார் நிதி திரட்டித் தாருங்கள், டாக்டர் பதவி கொடுக்கிறேன்' என்று கடிதம் எழுதியிருக்கிறார். அந்தக் கடிதத்தின் நகலை வேண்டுமென்றால் தருகிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : தவறு செய்திருக்கிறார்கள் என்றால் விசாரணை செய்யுங்கள். விசாரணைக் கமிஷனைப் போடுங்கள்; விசாரியுங்கள். வேண்டாமென்று நான் சொல்லவில்லையே. அந்த எம். எல். ஏ-வை விசாரியுங்கள். என்மீது குற்றச்சாட்டுகள் இருந்தால் என்னை விசாரியுங்கள்; மற்றவர்களையும் விசாரியுங்கள். நான் இங்கே என்னுடைய பொறுப்பை உணர்ந்து பொறுப்போடு பேசிக்கொண்டிருக்கிறேன் நாங்கள் ஊழல் செய்தோம் என்று தெரிந்தால் விசாரித்து நடவடிக்கை எடுங்கள். நாங்கள் லஞ்சம் வாங்கினோம் என்று தெரிந்தால் நடவடிக்கை எடுங்கள். எம்.ஜி.ஆர். தவறு செய்தார் என்றால் அவர் மீது நடவடிக்கை எடுங்கள் அதற்கு என்குயரி கமிஷனைப் போடுங்கள். அதிலே விவாதிப் போம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போதுதான் சட்டம் நிறை வேற்றியிருக்கிறோம். அதை மத்திய அரசின் சம்மதத்திற்காக அனுப்பி இருக்கிறோம் மத்திய அரசின் சம்மதம் கிடைத்தவுடன் விசாரணைக் கமிஷன் வைக்கப்படும்.

திரு. கே. ஏ. மதியழகன் : உண்மையிலேயே நான் ஊழல் குற்றம் செய்தேன் என்றால் என்குயரி கமிஷனை வையுங்கள். அதிலே என்னை விசாரியுங்கள். எம்.ஜி.ஆர். லஞ்சம் வாங்கினார் என்றால் அவரை விசாரி யுங்கள்; நடவடிக்கை எடுங்கள். டெல்லிக்குப் போய்விட்டு வரவேண்டும் என்று ஏன் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்? நீங்களே ஒரு என்குயரி கமிஷனைப் போட வேண்டியதுதானே. அந்தக் கமிஷனிலே ஹை கோர்ட் நீதிபதியையாவது போடுங்கள்; சுப்ரீம் கோர்ட் நீதிபதியையாவது போடுங்கள் அல்லது உங்கள் அதிகாரிகளிலே யாரையாவது போடுங்கள். அதைப்பற்றி எங்களுக்குக் கவலை இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : கனம் முதலமைச்சரவர்கள் என்குயரி கமிஷன் வைப்பதற்கு ஒரு சட்டத்தை நிறைவேற்றி மத்திய சர்க்காரின் அனுமதிக்காக அனுப்பியிருக்கிறோம் என்று சொன்னார்கள். அது வரவேண்டும் என்று அவசியமில்லை. ஏற்கெனவே இருக்கக்கூடிய சட்டத் திலேயே மாநில சர்க்கார் விசாரணைக் கமிஷன் போடலாம் என்ற அதிகாரம் இருக்கிறது. அந்த அதிகாரத்தையே பயன்படுத்திக் கொள் ளலாமே

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த கமிஷன் ஆஃப் என்குயரி சட்டம் எவ்வளவு பயனற்ற சட்டம் என்பதை இந்த மன்றத்திலேயே விளக்கியிருக்கிறோம். ஆகவேதான் நாம் புதிதாக ஒரு சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறோம். அவர்கள் சட்டத்தின்படி அந்தக் கமிஷன்



விசாரிக்கலாம்; அறிக்கை கொடுக்கலாம். அவ்வளவுதான். ஆனால் நாம் நிறைவேற்றியிருக்கிற சட்டப்படி விசாரணை செய்தால், யார் யாருக்கு என்னென்ன கிடைக்கும் என்றும் முடிவு செய்யலாம்.

திரு. கே. ஏ. மதியழகன் : நம்முடைய சட்டத்துறை அமைச்சரவர்கள் எங்கெங்கேயோ போகிறார்கள். நான் அடக்கமாகச் சொல்கிறேன்; பொறுப் போடு சொல்கிறேன். எங்களுக்கு ஒன்றும் பயமில்லை. நீங்கள் சட்டம் நிறைவேற்றியிருக்கிறோம், சட்டம் நிறைவேற்றியிருக்கிறோம் என்று எங்களைப் பயமுறுத்தத் தேவையில்லை நீங்கள்தான் பயப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள் ஏதோ கிடைக்கும் என்றீர்கள். எது வேண்டுமானாலும் கிடைக்கட்டும். I take up the Challeinge விசாரணைக் கமிஷனை வையுங்கள் அதிலே விசாரிக்கட்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : என்ன குற்றம் என்று எடுத்துச் சொல்வதற்கு இங்கே வருகின்ற தகுதி இல்லாமல், வீரம் இல்லாமல், இருப்பவர் உங்கள் கட்சித் தலைவரே அல்லாமல் இங்கே இருப்பவர்கள் அல்ல. ஆண்மை இருந்தால், தைரியம் இருந்தால், துணிவு இருந்தால் இங்கே வந்து சொல்லட்டும்;ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். அதல் லாமல், விஷயங்கள் சொல்லப்படுகின்றன; நம்பப்படுகிறது; பேசப்படுகிறது, பத்திரிகையிலே வந்தது என்று சொல்லிக்கொண்டிருப்பது நியாயமான குற்றச்சாட்டா? பதிலுக்குப் பதில் கொடுத்திருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இது என்ன வேடிக்கை? ஆண்மை இருந்தால், துணிவு இருந்தால், தைரியம் இருந்தால், திராணி இருந்தால், வீரம் இருந்தால் இங்கே சொல்லட்டுமே. குற்றச்சாட்டு என்று சொல்லி எதை எதையோ சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். என்ன வேடிக்கையான குற்றச்சாட்டுகள்.

அண்ணா சாலையிலே இருக்கிற ஒரு தியேட்டரை முரசொலி மாறனும் செல்வமும் வாங்கியிருக்கிறார்கள் என்பது ஒரு குற்றச்சாட்டு. அவர்கள் சொல்லக்கூடிய தியேட்டர் யாருக்குச் சொந்தம் என்று விசாரித்துப் பார்த்ததில் ஜக்கிரியா சேட் என்பவருக்கு அது சொந்தமாக இருக்கிறது. அதை எங்கள் பதிலிலே சொல்லியிருக்கிறோம். அதைப்பற்றிய விளக் கத்தைக் கொடுத்திருக்கிறோம். அந்தப் பதிலுக்குப் பதில் என்று வேடிக்கையாக இன்னொன்றைச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது ஜக்கிரியா சேட்டுக்கு சொந்தமாக இருந்தால் வருங்காலத்தில் அதை கருணாநிதி வாங்கமாட்டார் என்பது என்ன நிச்சயம் என்று சொல்லி யிருக்கிறார்கள். இப்படிப்பட்ட அபத்தமான குற்றச்சாட்டுகளுக்கு என்ன பதில் என்று கேட்கிறார்கள். திராணி இருந்தால் இங்கே வந்து சொல் வதுதானே.

திரு. கே. ஏ. மதியழகன் : ஆண்மை இருந்தால், தைரியம் இருந்தால் என்று அடுக்கடுக்காகச் சொல்கிறார்கள். என்றால் அப்படிச் சொல்ல முடியவில்லை. இங்கே உள்ளவர்கள் . . . . .

டாக்டர் எச். வி. ஹண்டே : சார், பாயிண்ட் ஆஃப் ஆர்டர், மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். எம். ஜி. ஆருக்கு இங்கே வருவதற்கு தைரியம் இல்லை என்று சொன்னார்கள். இப்போது

இருக்கக்கூடிய பிரச்னை, தைரியம் இருந்தால் இந்த மன்றத்திலே குற்றச்சாட்டைச் சொல்லுங்கள்; நாங்கள் பதில் சொல்கிறோம் என்று சொன்னார்கள். குற்றச்சாட்டுக்கான ஆதாரத்தைக் கேட்டார்கள். நான் அந்தப் பதிலை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. எங்களால் ஆதாரம் காட்ட முடியும் என்பது எங்கள் வாதம். ஆகவே, ஒரு என்குயரி கமிஷனை வையுங்கள். விசாரணை நடைபெறட்டும். அதிலே வாதாடத் தயாராக இருக்கிறோம். அதற்கு முதலமைச்சர் சொல்லும் பதிலை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம். யார்மீது குற்றச்சாட்டுச் சொல்லப் படுகிறதோ அவர்களே நீதிபதியாக இருக்கிறார்கள். அது கூடாது. குற்றஞ் சாட்டப்படுபவர்கள் அரசாங்கத்தார். நீதிபதியாக இருப்பவர்களும் அவர்கள்தான் என்றால் அந்த விசாரணை எப்படி நடக்கும் என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும். என்மீது குற்றச்சாட்டு என்றால் என்னிடம் அதற்கான ஆதாரத்தைத் தாருங்கள்; நானே விசாரிக்கிறேன் என்ற நிலை கூடாது என்பதுதான் எங்களுடைய வாதம். தனியாக ஒரு விசாரணைக் கமிஷனைப் போடுங்கள். அதிலே விசாரிக்கட்டும். ஆதாரங்களைக் கொடுக்கிறோம்.

திண்டுக்கல் தேர்தலிலே 2 லட்சத்து 60 ஆயிரம் வாக்குகளைப்பெற்று வெற்றிபெற்றிருக்கிறோம். நீங்கள் 174 பேர் இங்கே இருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டிருந்தால் போதாது. 4½ கோடி மக்களின் தீர்ப்புக்கு நீங்கள் தயாராக இருக்க வேண்டும். திண்டுக்கல் தேர்தலிலே நாங்கள் வெற்றிபெற்றோம் என்றால் அது உங்கள் மீதுள்ள குற்றச்சாட்டுகளுக்கு ஆதரவாகக் கிடைத்த வாக்குகள். உங்களுடைய ஊழலுக்கு ஆதாரமாகக் கிடைத்த ஓட்டுகள். கருணாநிதி ஆட்சி மீது நம்பிக்கை இல்லை என்று எம். ஜி. ஆருக்கு அளித்த ஓட்டுகள். உங்கள்மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் உண்மையில்லை என்றால் நீங்கள் மக்களை சந்தியுங்கள். தேர்தலிலே நின்று பாருங்கள் தெரியும் (பல உறுப்பினர்கள் ஒரே நேரத்தில் எழுந்து நின்றார்கள்.)

திரு. எ. பி. நரசிம்மன்: சார், பாயிண்ட் ஆஃப் ஆர்டர். ஹாண்டே அவர்கள் ஜனநாயகத்திலே நம்பிக்கை இல்லாமல், இந்த ஆட்சி மீது நம்பிக்கை இல்லாமல் குற்றச்சாட்டுப் பட்டியலை அங்கே கொண்டு போய்க் கொடுத்துவிட்டு இங்கே வந்து பதில் கொடு, பதில் கொடு என்று கேட்டால் எப்படிப் பதில் கிடைக்கும்? திரு. மதியழகன் அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது ஹாண்டே இடைமறித்து பேசினார்கள். ஏதோ விளக்கம் சொல்கிறேன் என்று சொல்லி ஒரு சொற்பொழிவே ஆற்றிவிட்டார்கள். இப்படி ஒருவர் பேசிக்கொண்டிருக்கும் போது இன்னொருவர் இடைமறித்து சொற்பொழிவாற்றுவது சரியா?

திரு. கே. ஏ. மதியழகன்: தலைவரவர்களே, இங்கே வந்து குற்றச் சாட்டைச் சொல்வதற்கு உங்கள் கட்சித் தலைவருக்குத் தைரியம் இல்லை என்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். எங்கள்



தலைவர் வந்தால் என்ன? வராவிட்டால் என்ன? அந்தக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் நாங்கள் இருக்கிறோம். முதலமைச்சரவர்கள் சொல்வதைப்போல நாங்களும் திருப்பிச் சொல்ல முடியும். உங்களுக்கு ஆண்மை இருந்தால், தைரியம் இருந்தால் திராணி இருந்தால் நீங்கள் ஏன் விசாரணைக் கமிஷன் வைக்கவில்லை என்று நாங்களும் கேட்கலாம். அதோடு புதிதாக அதற்கு சட்டம் நிறைவேற்றி இருக்கிறோம் என்று சொல்லி பயமுறுத்திக் கொண்டிருக்காதீர்கள். என்குயரி கமிஷன் என்றால் ஜெயிலில் பிடித்துப் போட்டுவிடப்போகிறார்கள். குற்றச்சாட்டில் உண்மை இருக்கிறதா, இல்லையா என்று பார்ப்பார்கள். பிரைமா ஃபேசி கேஸ் இருக்கிறதா இல்லையா என்று பார்ப்பார்கள். கமிஷனிலே விசாரிக்கட்டும், ஆதாரங்களைக் காட்டுகிறோம். குற்றம் இல்லை என்றால் அவர்கள் சொல்லட்டும். அவர்கள் பொறுப்போடுதான் நடந்து கொள்வார்கள். அதை யாரும் மறுக்க முடியாது. ஆகவே, நீங்களே என்குயரி கமிஷனை அமைப்பதில் பெரிய விஷயம் ஒன்றும் இல்லை. குற்றச் சாட்டுகள் மேலெழுந்தவாரியாக இருந்தாலும்; பிரைமா ஃபேசி கேஸ் இருக்கிறது என்றால்......

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எந்தத் தீர்மானத்தை இங்கே கொண்டுவரவேண்டுமென்று இரண்டு முறை நீங்களும், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரும் எழுதிக் கொடுத்தீர்களோ அந்தத் தீர்மானத்தையே தவறு என்று குற்றச்சாட்டிலே சொல்லியிருக்கிறீர்களே. அது எந்த விதத்தில் நியாயமானது?

திரு. கே. ஏ. மதியழகன்: திரும்பத் திரும்ப குற்றச்சாட்டைப் பற்றிச் சொல்கிறார்கள். நான் அதற்குள் போகவில்லை. நான் அந்த குற்றச் சாட்டுப் பட்டியலுக்குள்ளே போகவில்லை. குற்றச்சாட்டுகளே இருக்கக்கூடாதென்பது என் ஆசை. அரசாங்கத்திற்காகப் பேசவில்லை. முதலமைச்சரைத் திருப்திபடுத்துவதற்காக பேசவில்லை. அவர்கள்மீது எவ்வித குற்றமும் இல்லை என்றால் என்னைவிட மகிழ்ச்சி அடையக்கூடியவர்கள் யாரும் இருக்க முடியாது. நானும் முதலமைச்சருக்கு சகாவாக இருந்து அவர்களது கஷ்டநஷ்டங் களில் பங்கு கொண்டவன். இந்த விசாரணையை நடத்த உங்களுக்கே ஒரு வாய்ப்பு இருக்கிறதே, நீங்கள் மாநில சுயாட்சி என்கிறீர்கள். அதன் தளகர்த்தர் நீங்கள். என்றாலும் இன்றைக்கு ஒரு நிலைமை வந்து விட்டதே 'Caesar's wife must be above suspicion' என்பதாகச் சொல்வார்களே, அவர்கள் தவறாக இருக்கவேண்டுமென்பது அல்ல. நீங்கள் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள். 4½ கோடி மக்களின் பொறுப்பு 450 கோடி ரூபாயை உங்களிடத்தில் ஒப்படைத்திருக்கிறார்கள். விசாரணை என்று வந்தால் என்ன? நீங்களே சொன்னீர்களே, பட்நாயக் மீது வரவில்லையா? கெய்ரான் மீது வரவில்லையா? சகாய் மீது வரவில்லையா? அதை நீங்கள் சந்திப்பதற்குப் பதிலாக ஏன் இப்படித் தட்டிக்கழிக்கிறீர்கள்? வேண்டுமென்றால் என்குயரி கமிஷன் இப்போது மதியழகன் மீது போடுங்கள். உங்களுக்குச் சட்டம் இருக்கிறதே, 2 மாதம் கழித்துத்தான் சட்டம் வருகிறதே என்றால் அது மந்திரிகள் லஞ்சம் வாங்கினார்கள் என்று பேசினால் சிறையில் போடக்கூடிய சட்டம் ஒரு வருஷம் தாண்டி ஏமாற்றிவிட்டால் அது காலாவதியாகிவிடுகிறது என்று

ரெகுலரைஸ் செய்துவிடுகிற சட்டம். நீங்கள் ஒரு நாட்டின் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் ஒழுங்கானவர்களாக, நேர்மையானவர்களாக இருந்தால் போதாது. இவ்வாறுக்கு நிர்வாகத்தில் பேவரிடசம் இருக்கிறது என்கிறார்கள். நெபாடிசம் இருக்கிறது என்கிறார்கள். அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது என்கிறார்கள். இல்லை என்று நிரூபித்துக்கொள்ள ஒரு விசாரணைக் கமிஷனைப் போட்டால் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : குற்றச்சாட்டுகளுக்குள்ளேயே நுழைய விரும்பவில்லை என்று சொல்கிறார்கள். இப்போது பேவரிடிசம் இருக்கிறது, அதிகார துஷ்பிரயோகம் இருக்கிறது என்கிறார்கள். இப்போதாவது சொல்லுங்கள் குற்றச்சாட்டுக்ள் என்ன ? சொல்லலாம் இல்லையா ?

திரு. கே. ஏ. மதியழகன் : இவைகள் எல்லாம் இந்த மன்றத்தில் விவாதத்திற்குரியவை அல்ல. விசாரணைக்குரியவை. இப்போது துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெறுகின்றன. கீழ்வெண்மணி சம்பந்தமாக விசாரணை போடவில்லையா? பாளையங்கோட்டை சம்பந்தமாக விசாரணைக் கமிஷன் நியமிக்கவில்லையா ? நாமே விவாதித்து ஒன்றும் இல்லை என்று சொல்லிவிடலாமா, பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களை விவாதத்தின் மூலம் தீர்க்க முடியுமா ? ஏன் ஒரு விசாரணைக் கமிஷன் போடுவதைத் தட்டிக் கழிக்கிறார்கள் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பாளையங்கோட்டை, மற்ற விஷயங்களைச் சொன்னார்கள். அங்கே இரண்டு மூன்று பேர்கள் செத்திருக்கிறார்கள் தெரிகிறது. இங்கே சாட்டப்படுகிற குற்றச்சாட்டுகள் என்ன என்பது எங்களுக்குத் தெரியவில்லை. உங்களுக்குமே தெரியவில்லை என்கிறீர்கள். தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் கேட்டேன், குற்றச் சாட்டுகள் என்ன?

திரு. கே. ஏ. மதியழகன் : அங்கே 2 பேர்கள் செத்தார்கள் என்றால் இன்றைக்கு 4½ கோடி மக்கள் சாகிறார்கள். நாட்டின் பொருளாதாரம் சின்னாபின்னப்பட்டிருக்கிறது. இந்த மந்திரி சபையின் காரணமாக ஏழை எளியவர்களுடைய நல்வாழ்வு சிதைக்கப்பட்டிருக்கிறது. இப்படிப் பட்ட அரசின் மீதுள்ள குற்றச்சாட்டுகளை தைரியமாக முன்வந்து, சந்திப் பதற்கு இல்லாமல் ஏன் தட்டிக் கழிக்கிறீர்கள்? இந்த தீர்மானம் இங்கே ஏன் வந்திருக்கிறது என்பதைத் தெளிவாகச் சொல்வேன்.....

மாண்புமிகு திரு செ. மாதவன் : விசாரணைக் கமிஷன் வேண்டும் விசாரணைக் கமிஷன் வேண்டும் என்று முன்னாள் தலைவர் கேட்கிறார் கள் / நாங்கள் விசாரணைக்குப் பயப்படமாட்டோம். ஆனால் எதை விசா ரிக்கச் சொல்கிறீர்கள் ? அதை முன்னால் சொல்லக் கூடாதா ? யார் யாரிடமோ சென்று சொல்கிறீர்கள். ஒரு பர்லாங் தூரத்தில்தான் மவுண்டு ரோடு இருக்கிறது. அங்கே ஒரு தியேட்டர் இருக்கிறது. அந்தத் தியேட்டர்யாருக்குச்சொந்தம் என்பது ஒரு குற்றச்சாட்டு.போலீஸ் கமிஷனர் ஆபீசில் ரெக்கார்டு இருக்கிறது, மாநகராட்சியில் அது சம்பந்தப்பட்ட ரெக்கார்டு இருக்கிறது. போய்ப் பார்த்தால் நிமிடத்தில் தெரிந்து



விடும். இதற்குப்போய் டெல்லியில் இருந்து ஒரு நீதிபதி வந்து விசாரிக்க வேண்டும் என்கிறீர்களா ? மாறனுடைய மச்சான் மகனுக்கு வேலை என்பது ஒரு குற்றச்சாட்டு. அவனுக்கு வயசு நான்கைந்து இருக்கும். இதை இங்கே சென்று பார்த்து தீர்ப்புச் சொல்லிவிடலாமே. இதற்காக டெல்லியில் இருந்து ஒரு நீதிபதி வந்து விசாரிக்கவேண்டும் என்கிறீர்களா ? குற்றச்சாட்டுகள் என்ன என்று உங்களைக் கெஞ்சிக் கெஞ்சிக் கேட்கிறோம். உங்கள் வாயால் வரவேண்டும். அதற்குப் பதில் சொல்லவும் நாங்கள் காத்து இருக்கிறோம். அவற்றைச் சொல்லக் கூடாதா ?

திரு. கே. ஏ. மதியழகன் : ரொம்ப அழகாகப் பேசுகிறார்கள். முன்னாள் தலைவர் என்றாவது இன்றைக்கு ஒத்துக்கொண்டாரே, அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வளவு ரொம்ப சாதாரண விஷயங்களைப் பற்றித்தான் என்கிறபோது நீங்கள் ஏன் விசாரணைக் கமிஷனைத் தட்டிக் கழிக்கவேண்டும் ? இந்த மாமன்றத்திற்கு முழு அதிகாரம் உண்டு. மன்றத்திற்குள்ள உரிமைகளில் இரண்டுவிதமான கருத்து இல்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் அதைத்தான் சொல்கிறேன். தங்கமணி அவர்கள் குடியரசுத் தலைவருக்குக் கொடுத்த குற்றச்சாட்டில் மெட்ராஸ் டெனன்ட்ஸ் ப்ரொடெக்ஷன் ஆக்ட் கொண்டுவரப்பட்டது குறித்து குற்றம் சுமத்தியிருக்கிறார்கள். அந்தச் சட்டம் கொண்டுவரப்படவேண்டும் என்று அரசிடம் கோரியதில் அவரும் இங்கே கையெழுத்திட்டிருக்கிறார். ஒரேமாதிரியாக எழுதப்பட்ட கோரிக்கை—அதிலே திரு. வேலப்பன் அவர்களும் கையெழுத்திட்டு அனுப்பியிருக்கிறார். இந்தத் திருத்தம் கொண்டுவரப்படவேண்டும் என்று இங்கே சொல்லிவிட்டு, கொண்டுவந்ததுபற்றி குடியரசுத் தலைவரிடம் தவறு என்பதாக வாதிடுவது என்ன நியாயம் ?

திரு கே. டி. கே. தங்கமணி: முதலமைச்சர் அவர்களுடைய திறமையைப் போற்றுகிறேன். அங்கே 42 குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இதுபோன்ற திறமையினால் இருபது இருபத்திரண்டு குற்றச்சாட்டுகள் அடிபட்டுப்போய்விடுகின்றன என்றாலும் கூட பாக்கியுள்ள குற்றச்சாட்டுகளுக்கு என்ன பதில் ? நான் சமயநல்லூர் விஷயத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன்.....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பர்சனல் எக்ஸ்ப்ளனேஷன் என்கிறபோது நான் குறிப்பிட்ட ஒன்றுக்கு பதில் சொல்வதே பொருத்தமாக இருக்கும். மெட்ராஸ் டெனன்ட்ஸ் ப்ரொடெக்ஷன் ஆக்டில் திருத்தம் வேண்டுமென்று திரு தங்கமணி அவர்கள் எழுதிக் கொடுத்தார்கள். ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் கையெழுத்திட்டிருக்கிறார்கள். பழைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் கையெழுத்திட்டிருக்கிறார்கள். சுதந்திராக் கட்சியைச் சேர்ந்தவர்கள் கையெழுத்திட்டிருக்கிறார்கள். அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்த வேலப்பன் கையெழுத்திட்டிருக்கிறார்கள். லஞ்ச லாவண்யத்திற்கு எடுத்துக்காட்டாக,

என்னுடைய உருக்கமான வேண்டுகோள் முதலமைச்சர் அவர்களுக்கு இதுதான். அவர்களே கூடச் சொன்னார்கள், திண்டுக்கல் தேர்தலிலே திராவிட முன்னேற்றக் கழகம் தோற்ற உடனே சொன்னார், ஆதாரமற்ற ஊழல் குற்றச்சாட்டுகளை மக்கள் நம்பிவிட்டார்களென்று. அப்படியே இருக்கட்டும். மக்கள் நம்புகிறார்கள் அல்லவா? நாங்கள் போகட்டும், பொறுப்பற்றவர்கள். அந்த மக்களுடைய நம்பிக்கையைப் பெற வேண்டியது, நாட்டு நம்பிக்கையைப் பெறவேண்டியது பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பவர்கள் கடமை. அந்தக் காரணத்திற்காகவாவது அவர்கள் முன்வரவேண்டுமென்று கேட்கிறேன். நீங்கள் ஒவ்வொன்றாகச் சொன்னாலும், துணைக்காகத்தான் விவாதிக்க முடியும்.

சட்டசபையிலே விவாதிப்பதற்கு சில விவகாரங்கள் இருக்கின்றன; பாராளுமன்றத்திலே விவாதிப்பதற்கு சில விவகாரங்கள் இருக்கின்றன; பத்திரிகைகளிலே விவாதிப்பதற்கு சில விவகாரங்கள் இருக்கின்றன; வேறு நாடகங்களிலே விவாதிப்பதற்கு சில விவகாரங்கள் இருக்கின்றன. நீங்கள் பொறுப்பானவர்கள். நாட்டவர்களுக்கு, 4½ கோடி மக்களுக்கு முதலமைச்சர் பொறுப்பானவர் என்ற முறையிலே இந்த நிலைமைகளை விளக்குவதற்கு நீங்கள் அந்த அதிகாரத்தை ஒத்துக்கொள்ளவேண்டாம்— நீங்களாக முன்வருவதுதான் அந்தப் பிரச்னைக்குப் பரிகாரம் தருமே தவிர, இந்தப் பிரச்னையை இன்னும் முற்றவிடுகிற நிலைதான் இன்று இருக்கிறது என்று நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நீங்களெல்லாம் பதவியிலிருந்து நாளைக்கே போய் விட வேண்டுமென்று சொல்வதற்கு நாங்களில்லை. நீங்கள் இருப்பதாலே என்ன பொறாமை எங்களுக்கு வந்து விடப்போகிறது? என்ன நிலைமை வந்து விடப் போகிறது? யார்மீது, என்ன மாதிரியான தனியான விரோதம் எங்களுக்கு? நான் மக்களை சந்தித்து வருகிறேன், கடந்த சட்டசபைக்குப் பிறகு, எல்லா மாவட்டங்களிலும் ஏறக்குறைய 40 இலட்சம் மக்களை சந்தித்துவிட்டபிறகு சொல்கிறேன், தமிழ்நாட்டு மக்களுடைய மனநிலைமை இன்றைக்கு உங்கள் பக்கம் இல்லை......

மாண்புமிகு திரு செ. மாதவன்: மத்திய சர்க்காருடைய அதிகாரத்தைப்பற்றி நீங்கள் சொன்னீர்கள். இந்த சர்க்கார் மத்திய சர்க்காருக்குத்தான் கட்டுப்படவேண்டும், விசாரிப்பதற்கு உரிமையிருக்கிறது, சகல வலிவும் இருக்கிறது என்று சொன்னீர்கள். நீங்கள் இந்த அமைச்சரவையிலே இருக்கிறபொழுது, முதலமைச்சர் அண்ணா தலைமையிலே இருக்கிறபொழுது, இப்படிப்பட்ட அதிகாரத்தைக் கொண்டு ஒரு குழு நீதி விசாரணை நடத்த வேண்டுமென்ற கருத்தை மத்திய அரசாங்கம் தெரிவித்தபொழுது அந்தக் கருத்தை இந்த அரசு, திராவிட முன்னேற்றக் கழக அரசு, அண்ணாவின் தலைமையிலே உள்ள அரசு, எதிர்த்து, அந்தக் கருத்து ஏற்கத் தகாதது என்று தீர்மானித்திருக்கிறதே, அந்தத் தீர்மானத்திலே நீங்களும் கையெழுத்து போட்டிருக்கிறீர்களே, அது என்னவாயிற்று?



திரு கே. ஏ. மதியழகன்: அதையேதான் நீங்கள் செய்யுங்கள் என்று சொல்கிறேன். மதியழகன் கையெழுத்துப் போட்டார் என்பதனாலே என்ன சொல்கிறீர்கள்? அது என்னவாயிற்று என்கிறீர்கள்? மதியழகன் கையெழுத்து போட்டாரா, இல்லையா என்பதல்ல பிரச்னை. மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலே உள்ள மந்திரிசபை குற்றச்சாட்டுகளைச் சந்திக்கத் தயாரா, இல்லையா என்பதுதான் கேள்வி. இன்றைக்குக் கூட அதைத்தான் நான் கேட்கிறேன். இவர் என்னுடைய வாதங்களைக் கவனிக்கவில்லை. அந்த அமைச்சரவை வேண்டாம், நீங்களாகவே ஒரு சுப்ரீம் கோர்ட் நீதிபதியைப் போட்டு, விசாரணைக் குழு அமையுங்களேன். இந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை அழிப்பதற்கு ஒரு அருமையான வாய்ப்பு. தவறான குற்றம் சாட்டுகிறார்கள் என்று கூறுகிறீர்களே, இதை நீங்கள் செய்தீர்களானாலும், உங்களைப்பற்றி நிரூபித்தீர்களானால், இந்த ஆட்சியை விட்டுக்கூட நீங்கள் போக வேண்டியதில்லை என்பதுதான் என்னுடைய வாதத்தினுடைய சாராம்சம்.

திரு. ஏ. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, நம்முடைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மதி அவர்கள்.....

திரு கே. ஏ. மதியழகன்: அதுதான் என்னுடைய வாதமே தவிர, நான் இன்னும் தெளிவாகச் சொல்கிறேன், நீங்கள்தான் போடுங்களேன்......

மாண்புமிகு திரு செ. மாதவன்: இந்தத் தீர்மானம் ஒரு அருமையான வாய்ப்பு. முதலிலே உங்களுடைய பேச்சுத் தொடக்கம், இந்த சட்டமன்றம், அமைச்சரவை, மத்திய சர்க்காருக்குக் கட்டுப்பட்டிருக்கிறது, என்பது. இப்பொழுது அந்த அமைச்சரவையை விட்டு விடுங்கள், நீங்களாவது நீதி விசாரணைக்கு உட்படுங்கள், என்பது. அதற்கு இதுவே பொருத்தமான தீர்மானம். இப்பொழுதே, ஏற்றுக்கொண்டு, இந்த சபைதான் உரிமை பெற்றிருக்கிறது என்று நீங்கள் சொன்னால், பிறகு, வேண்டுமானால், விசாரணைக் குழுவை அமைப்பதைப்பற்றி யோசிக்கலாம்.

திரு கே. ஏ. மதியழகன்: தலைவர் அவர்களே, அதிகாரங்கள் குறித்து உங்களுடைய ஆசனத்திலே இருந்துகூட, இந்த சபைதான் 'சாவரின்' என்று டிக்ளேர் பண்ணியிருக்கிறேன். இந்த சட்டமன்றத்திற்குள், அதிகார வரம்புக்குள் 'சாவரின்'. It is sovereign. But it is under the Constitution. அதைப் பற்றி இவர்களைவிட அதிகமாக வாதாடுபவன் நான்.

மத்திய அரசினுடைய கொள்கைகள், இன்றைக்கும் முரணானவை, ரொம்பவும் ஆதிக்கம் செலுத்தக் கூடியவை என்பதிலே எங்களுக்கெல்லாம் இரண்டுவிதமான அபிப்பிராயம் கிடையாது. நீங்களாவது செய்யுங்கள் என்று சொன்னால் கையெழுத்து போட்டிருக்கிறீர்களே என்று சொல்லுகிறார்கள். எனக்கு உடன்பாடாக இருந்திருக்கலாம்- கையெழுத்து போட்டிருக்கலாம். நீங்களே செய்யலாமே. என்னுடைய கேள்வி நீங்கள் ஏன் 'பேஸ்' பண்ணவில்லை என்பது.

என்னுடைய உருக்கமான வேண்டுகோள் முதலமைச்சர் அவர்களுக்கு இதுதான். அவர்களே கூடச் சொன்னார்கள், திண்டுக்கல் தேர்தலிலே திராவிட முன்னேற்றக் கழகம் தோற்ற உடனே சொன்னார், ஆதார மற்ற ஊழல் குற்றச்சாட்டுகளை மக்கள் நம்பிவிட்டார்களென்று. அப்படியே இருக்கட்டும். மக்கள் நம்புகிறார்கள் அல்லவா? நாங்கள் போகட்டும், பொறுப்பற்றவர்கள். அந்த மக்களுடைய நம்பிக்கையைப் பெற வேண்டியது, நாட்டு நம்பிக்கையைப் பெறவேண்டியது பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பவர்கள் கடமை. அந்தக் காரணத்திற்காகவாவது அவர்கள் முன்வரவேண்டுமென்று கேட்கிறேன். நீங்கள் ஒவ்வொன்றாகச் சொன்னாலும், துணைக்காகத்தான் விவாதிக்க முடியும்.

சட்டசபையிலே விவாதிப்பதற்கு சில விவகாரங்கள் இருக்கின்றன; பாராளுமன்றத்திலே விவாதிப்பதற்கு சில விவகாரங்கள் இருக்கின்றன; பத்திரிகைகளிலே விவாதிப்பதற்கு சில விவகாரங்கள் இருக்கின்றன; நாடகங்களிலே விவாதிப்பதற்கு சில விவகாரங்கள் இருக்கின்றன; வேறு பொறுப்பானவர்கள். நாட்டவர்களுக்கு, 4½ கோடி மக்களுக்கு முதலமைச்சர் பொறுப்பானவர் என்ற முறையிலே இந்த நிலைமைகளை விளக்குவதற்கு நீங்கள் அந்த அதிகாரத்தை ஒத்துக்கொள்ளவேண்டாம்— நீங்களாக முன்வருவதுதான் அந்தப் பிரச்னைக்குப் பரிகாரம் தருமே தவிர, இந்தப் பிரச்னையை இன்னும் முற்றவிடுகிற நிலைதான் இன்று இருக்கிறது என்று நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நீங்களெல்லாம் பதவியிலிருந்து நாளைக்கே போய் விட வேண்டுமென்று சொல்வதற்கு நாங்களில்லை. நீங்கள் இருப்பதாலே என்ன பொருமை எங்களுக்கு வந்து விடப்போகிறது? என்ன நிலைமை வந்துவிடப் போகிறது? யார்மீது, என்ன மாதிரியான தனியான விரோதம் எங்களுக்கு? நான் மக்களை சந்தித்து வருகிறேன், கடந்த சட்டசபைக்குப் பிறகு, எல்லா மாவட்டங்களிலும் ஏறக்குறைய 40 இலட்சம் மக்களை சந்தித்துவிட்டபிறகு சொல்கிறேன், தமிழ்நாட்டு மக்களுடைய மனநிலைமை இன்றைக்கு உங்கள் பக்கம் இல்லை......

<u>மாண்புமிகு திரு செ. மாதவன்</u>: மத்திய சர்க்காருடைய அதிகாரத்தைப்பற்றி நீங்கள் சொன்னீர்கள். இந்த சர்க்கார் மத்திய சர்க்காருக்குத்தான் கட்டுப்படவேண்டும், விசாரிப்பதற்கு உரிமையிருக்கிறது என்று சொன்னீர்கள். சகல வலிவும் இருக்கிறது, நீங்கள் இந்த அமைச்சரவையிலே இருக்கிறபொழுது, முதலமைச்சர் அண்ணா தலைமையிலே இருக்கிறபொழுது, இப்படிப்பட்ட அதிகாரத்தைக் கொண்டு ஒரு குழு நீதி விசாரணை நடத்த வேண்டுமென்ற கருத்தை மத்திய அரசாங்கம் தெரிவித்தபொழுது அந்தக் கருத்தை இந்த அரசு, திராவிட முன்னேற்றக் கழக அரசு, அண்ணாவின் தலைமையிலே உள்ள அரசு, எதிர்த்து, அந்தக் கருத்து ஏற்கத் தகாதது என்று தீர்மானித்திருக்கிறதே, அந்தத் தீர்மானத்திலே நீங்களும் கையெழுத்து போட்டிருக்கிறீர்களே, அது என்னவாயிற்று?





<u>திரு கே. ஏ. மதியழகன்</u>: அதையேதான் நீங்கள் செய்யுங்கள் என்று சொல்கிறேன். மதியழகன் கையெழுத்துப் போட்டார் என்பதனாலே என்ன சொல்கிறீர்கள்? அது என்னவாயிற்று என்கிறீர்கள்? மதியழகன் கையெழுத்து போட்டாரா, இல்லையா என்பதல்ல பிரச்னை. மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலே உள்ள மந்திரிசபை குற்றச்சாட்டுகளைச் சந்திக்கத் தயாரா, இல்லையா என்பதுதான் கேள்வி. இன்றைக்குக் கூட அதைத்தான் நான் கேட்கிறேன். இவர் என்னுடைய வாதங்களைக் கவனிக்கவில்லை. அந்த அம்மாதிரி வேண்டாம், நீங்களாகவே ஒரு சுப்ரீம் கோர்ட் நீதிபதியைப் போட்டு, விசாரணைக் குழு அமையுங்களேன். இந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை அழிப்பதற்கு ஒரு அருமையான வாய்ப்பு. தவறான குற்றம் சாட்டுகிறார்கள் என்று கூறுகிறீர்களே, இதை நீங்கள் செய்தீர்களானால், உங்களைப்பற்றி நிரூபித்தீர்களானால், இந்த ஆட்சியை விட்டுக்கூட நீங்கள் போக வேண்டியதில்லை என்பதுதான் என்னுடைய வாதத்தினுடைய சாராம்சம்.

<u>திரு. ஏ. ஆறுமுகம்</u>: தலைவர் அவர்களே, நம்முடைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மதி அவர்கள்......

<u>திரு கே. ஏ. மதியழகன்</u>: அதுதான் என்னுடைய வாதமே தவிர, நான் இன்னும் தெளிவாகச் சொல்கிறேன், நீங்கள்தான் போடுங்களேன்......

<u>மாண்புமிகு திரு செ. மாதவன்</u>: இந்தத் தீர்மானம் ஒரு அருமையான வாய்ப்பு. முதலிலே உங்களுடைய பேச்சுத் தொடக்கம், இந்த சட்டமன்றம், அமைச்சரவை, மத்திய சர்க்காருக்குக் கட்டுப்பட்டிருக்கிறது, என்பது. இப்பொழுது அந்த அமைச்சரவையை விட்டுவிடுங்கள், நீங்களாவது நீதி விசாரணைக்கு உட்படுங்கள், என்பது. அதற்கு இதுவே பொருத்தமான தீர்மானம். இப்பொழுதே ஏற்றுக்கொண்டு, இந்த சபைதான் உரிமை பெற்றிருக்கிறது என்று நீங்கள் சொன்னால், பிறகு, வேண்டுமானால், விசாரணைக் குழுவை அமைப்பதைப்பற்றி யோசிக்கலாம்.

<u>திரு கே. ஏ. மதியழகன்</u>; தலைவர் அவர்களே, அதிகாரங்கள் குறித்து உங்களுடைய ஆசனத்திலே இருந்துகூட, இந்த சபைதான் 'சாவரின்' என்று புக்ளோர் பண்ணியிருக்கிறேன். இந்த சட்டமன்றத்திற்குள், அதிகார வாய்புக்குள் 'சாவரின்'. It is sovereign. But it is under the Constitution. அதைப் பற்றி இவர்களைவிட அதிகமாக வாதாடுபவன் நான்.

மத்திய அரசினுடைய கொள்கைகள், இன்றைக்கும் முரணானவை, ரொம்பவும் ஆதிக்கம் செலுத்தக் கூடியவை என்பதிலே எங்களுக்கெல்லாம் இரண்டுவிதமான அபிப்பிராயம் கிடையாது. நீங்களாவது செய்யுங்கள் என்று சொன்னால் கையெழுத்து போட்டிருக்கிறீர்களே என்று சொல்லுகிறார்கள். எனக்கு உடன்பாடாக இருந்திருக்கலாம்- கையெழுத்து போட்டிருக்கலாம். நீங்களே செய்யலாமே. என்னுடைய கேள்வி நீங்கள் ஏன் 'மேஸ்' பண்ணவில்லை என்பது.

நான் முடித்துவிடுகிறேன், மாண்புமிகு முதலமைச்சருக்கு உங்கள் மூலமாகச் சொல்லிவிடுகிறேன். மக்களுக்கு இவர்களிடம் நம்பிக்கை வேண்டும். நம்பிக்கை இல்லாத அரசு இருக்கக்கூடாது. எங்களுக்கு 5 வருடம் குத்தகை எழுதிக் கொடுத்திருக்கிறார்கள் என்று யாரும் சொல்ல முடி யாது. இதை நிறைவேற்றுவதற்கு நீங்கள் முன்வரவில்லையென்றால், அது பெரிய மாறுதலை ஏற்படுத்தும். அது எப்படி வரும் என்று யாரும் சொல்ல முடியாது. சொன்னால், அவர் சொல்கிறார் என்று கருதக்கூடாது. மக்கள்தான் எஜமானர்கள், அவர்களுடைய சிருஷ்டிதான் சட்டசபை. பிரளயங்களை, புரட்சிகளை, அடையாளம் கண்டுகொள்ள முடியாது. அது அறிவிப்பு கொடுத்துவிட்டு வராது. அழைப்பு கொடுத்து, அறிவிப்பு கொடுத்துவிட்டு, பத்திரிகையிலே அழைப்பு கொடுத்துவிட்டு, எப்பொழுது வரும், யார் மூலமாக வரும், எப்படி வரும் என்று சொல்ல முடியாது. தெளிவாக, திடீரென்று, தலைகீழான மாறுதல், நிலைமைகள், வேகமாக எங்கிருந்தோ வரும். அப்படிப்பட்ட ஒரு நிலைமைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னை விரட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்று மட்டும் சொல்லிக்கொண்டு, இந்தத் தீர்மானம் வாபஸ்பெற வேண்டிய ஒன்று. இத்தீர்மானத்தினால் இம்மாமன்றத்திற்குகூட பெருமை அல்ல. இத் தீர்மானத்தினை நிறைவேற்றுகின்ற தன்மைகளைப் பெற்றுக் கொள்வதுகூட, வெளிஉலகம் நம்மை விமர்சிக்க வேண்டிய ஒரு நிலைக்கு வழி ஏற்படுத்தும் என்று தெரிவித்துக் கொண்டு, இந்தத் தீர்மானத்தைக் முழு வலுவோடு கண்டிக்கிறேன் என்று கூறி என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ஏதோ தலைகீழாக வரும், புரட்சி வரும் என்று ஏதேதோ சொன்னார்கள். தலை கீழாக வந்தாலும் சரி, தலை நிமிர்ந்து வந்தாலும் சரி, அதையெல்லாம் சந்திக்கத் தமிழ்நாட்டு மக்கள் தயாராக இருக்கிறார்கள் என்பதைத் தெரி வித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. எ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய உறுப் பினர் லத்தீப் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்தத் தீர்மானத்தை நான் வன்மையாக எதிர்க்கின்றேன்.

இன்றைக்கு அவையின் முன்னாலே இருக்கிற இந்தத் தீர்மானம் தனியாக தமிழ்நாடு என்று இயங்குகிற ஒரு அங்கமாக இருக்கிறது என்ற எண்ணத்தோடு கொண்டு வரப்பட்டிருப்பதாக நான் அஞ்சுகிறேன். தமிழ்நாடு என்பது இந்தியாவின் ஒரு பகுதியே அல்லாமல் தனியாக இயங்கக்கூடிய ஒரு அங்கம் அல்ல. இந்திய அரசியல் சட்டத்தில் உள்ள விதிமுறைகளின்படி அமைக்கப்பட்டு இயங்குவதுதான் தமிழ்நாடு அரசாங்க மும் சரி, இந்தச் சட்டப்பேரவையும் சரி. ஆகவே, இந்திய அரசியல் சட்டத் திற்கு உட்பட்டு இந்த அவையும் இந்த அமைச்சரவையும் இயங்க வேண்டு மென்பது முறையானது.

ஆனால் மதிப்பிற்குரிய உறுப்பினர் லத்தீப் அவர்கள் அரசியல் சட்டத்தின் உள்ளே புகுந்து, அரசியல் சட்டப்படியே தமிழ்நாட்டிற்கு, இந்தச் சட்டப்பேரவைக்கு முழு சுதந்திரம் உண்டு என்று குறிப்பிட்டிருக்



கிறார்கள். மாநில அரசாங்கத்தினுடைய காரியங்களை செயல்படுத்துவதற்கு. மாநில அரசுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற பொறுப்புக்களை நிறைவேற்றுவ தற்கு இந்த மாநில அரசுக்கு முழு சுதந்திரம் உண்டு என்பதிலே யாருக்கும் அபிப்பிராயபேதம் இடையாது. இந்தச் சட்டப் பேரவையும், அரசியல் சட்டத்திற்கு உட்பட்டு நமக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கான உரிமையும் பொறுப்பும் இந்தச் சட்டப் பேரவைக்கு உண்டு.

ஆனால், இந்தச் சட்டப் பேரவை அரசியல் சட்டமே சரியானதல்ல என்று சொல்வதற்கோ அல்லது திருத்தம் நிறைவேற்றுவதற்கோ அதிகாரம் படைத்ததல்ல. இந்தச் சந்தர்ப்பத்திலே தலைவர் அவர்களே, நான் ஒரு கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பாராளு மன்றம் என்பதும் மத்திய அரசு என்பதும் தமிழகத்தை விட்டு தனியாக இயங்குகின்ற ஒன்று என்ற கருத்து இன்றைக்கு ஆட்சி நடத்தக்கூடிய வர்கள் மனதிலே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாராளுமன்றத்திலே இருக்கிற உறுப்பினர்கள் யாவரும் நாடு பூராவிலும் பரவலாக எல்லா மக்களாலும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், அப்படிப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட அவைதான் பாராளுமன்றம் ஆகும். இந்த அவையிலே தமிழ்நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அங்கம் வகிக்கிறார்கள். ஆகவே பாராளுமன்றம் என்பது தமிழகம் அல்லாத தனியாக உள்ள ஒரு அங்கம் என்று சொல்வது தவறானதாகும்.

அரசியல் சட்ட கர்த்தாக்கள் இதைப் பற்றி பூராவாக ஆராய்ந்து அரசியல் சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். ஆனால் அதிலே பல பேர்கள் இரு முறையும் பெடரல் ஸ்ட்ரக்சரா அல்லது யூனிட்டரி ஸ்ட்ரக் சரா என்ற கேள்வியை எழுப்பினார்கள். மாநில அரசுகள் தனியாக இயங்குவதற்கான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருந்தாலும் மத்திய அரசு தேவைப்பட்டபோது அதிகாரங்களை எடுத்துக்கொள்கிற அதிகாரம் மத்திய அரசுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. ஆக மத்தியிலே இருக்கிற அரசாங்கம் பலமானதாக இருக்கவேண்டுமென்ற முறையிலே, நாடு சுதந்திரம் பெற்றபொழுது இருக்கிற நிலையிலும், பின்னாலே வரக்கூடிய நிலை களையும் கருத்தில்கொண்டும், முழுவதும் பெடரல் ஸ்ட்ரக்ச்சராக வைத்தால் அதனுடைய பின்விளைவுகள் எப்படியிருக்குமோ என்று அஞ்சி அதைப் பின்னால் வருகின்ற தலைமுறையினருக்கு விட்டுவிட்டு மத்திய சர்க்கார் பலம் மிக்கதாக இருக்க வேண்டுமென்ற கருத்திலே தான் அரசியல் சட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள்.

இன்றைக்கு நம் முன்னாலே இருக்கிற பிரச்னை, மாநில அரசு செய்கிற தவறுகளை மத்திய அரசு தலையிட்டு விசாரிக்கமுடியுமா, அதிலே தலையிட முடியுமா என்பதுதான் பிரச்னை. இதற்கு முடிவு சொல்வதற்கு முன்னாலே, ஒவ்வொருவருக்கும் பல்வேறு கருத்துக்கள் இருக்கலாம். இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிற உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் மத்திய அரசாங்கத்திற்கு அந்த அதிகாரம் இடையாது என்று வாதிட்டு இருக்கிறார்கள். நான் சொல்லிக்கொள்கிறேன். இன் றைக்கு இருக்கிற ஆளுங்கட்சிக்காரர்கள் கிளப்பிவிட்ட வாதம்தான் அது

கமிஷன் ஆப் என்குயரி ஆக்ட் நிறைவேற்றப்பட்டபோது, நிறைவேற்றிய பிறகு என்ன நடைமுறையிலே இருந்து வந்திருக்கிறது என்று பார்த்தால் மாநிலங்களிலே இருக்கின்ற அரசுகள் தவறு செய்தால் அதை விசாரிப்பதற்கு மத்திய அரசுக்கு அதிகாரம் இருக்கிறது என்பதுதான். இதற்கு முன்னாலே பல மாநிலங்களிலே அப்படிப்பட்ட விசாரணை செய்யப்பட்டிருப்பது ஒரு முன் உதாரணமாக இருக்கிறது.

நம் முன்னாலே இருக்கின்ற பிரச்னை என்னவென்றால் மாநில அரசு மீது குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டால் அவற்றை விசாரிப்பதற்கு மத்திய அரசுக்கு அதிகாரம் உண்டா என்பதுதான். அப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் சொல்லப்படுகிறபோது மாநில அரசே விசாரணைக் கமிஷன் நியமித்திருக்குமானால் மத்திய அரசாங்கம் தலையிட அதிகாரம் கிடையாது. மாநில அரசாங்கம் அப்படிச் செய்யாத நிலையில் மத்திய அரசாங்கத்திற்கு அதிகாரம் உண்டா என்பதுதான் பிரச்னை. பொதுவாக எடுத்துக்கொள்ளலாம். மாநில அரசுகள் தங்கள் மீது குற்றச்சாட்டுகள் வந்தால், விசாரணை வேண்டியதில்லை என்று சொல்லிக்கொண்டிருந்தால் இந்தப் பிரச்னைக்கு முடிவு காண்பது எப்படி? மாநில அரசு குற்றச்சாட்டுகளைப் பொறுத்தவரையில் அவற்றில் உண்மை இருக்கிறதா இல்லையா என்பதை விசாரிப்பதற்கு கமிஷன் ஆப் என்குயரி ஆக்டின் கீழ் ஏற்பாடு செய்யாமல் அது தேவையில்லை என்று சொல்லி குற்றச்சாட்டுகளை உதாசீனம் செய்கிறபோது இருக்கிற ஒரே வழி மத்திய அரசிடத்திலே முறையீடு செய்வதுதான்.

இந்த நிலையில் குற்றச்சாட்டுகளிலே உண்மை இருக்கும், பிரைமா பேஸி கேஸ் இருக்கும் என்று மத்திய அரசு கருதினால் விசாரணைக் கமிஷன் போடுவதற்கு அதற்கு உரிமை உண்டு. அதுதான் பழக்கத்திலும் வந்திருக்கிறது. அவர்களுக்கு அந்த உரிமை இருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை கான்ஸ்டிட்யூஷன்படி. ஆகவே, தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானம் ஒரு மாநிலத்தை ஆளுகின்ற அரசு என்ன செய்தாலும் இந்தச் சபைதான் தீர்மானிக்கவேண்டுமென்று சொல்லப்படுகின்ற நிலைமை இருக்குமானால், மெஜாரிட்டி, அதிகப்படியான உறுப்பினர்களை வைத்துக்கொண்டு ஆண்டுகொண்டிருக்கின்ற கட்சி, எதிர்க்கட்சிகள் என்ன சொன்னாலும் கவலைப்படாமல் நடத்திக்கொண்டுபோகக்கூடிய நிலைமைதான் ஏற்படும். அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டால் நாட்டிலே அமைதியான நிலைமை இருக்குமா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

மத்திய அரசுக்கு அதிகாரம் இல்லை என்ற கருத்தை ஏற்றுக்கொண்டால் எதிர்க்கட்சிகளுக்கு இருக்கிற ஒரே வழி அரசாங்கத்தை எதிர்த்து பெரும் கிளர்ச்சிசெய்து மக்களின் எண்ணத்தைத் திரட்டுவதுதான். அப்படிச் செய்து அரசாங்கத்தைப் பணியவைக்கக்கூடிய நிலைமையை இந்த நாட்டிலே ஏற்படுத்தினால், அரசியல்வாதிகள் கன்ஸ்ட்ராக்டிவ் ஆக காரியங்களைச் செய்யமுடியாத நிலைமை ஏற்பட்டு இந்தப் பிரச்னையைப் பற்றியே ஒருவருக்கொருவர் வாதிட்டுக்கொண்டு பெரும் கிளர்ச்சிகளையும் போராட்டங்களையும் நடத்தி அரசாங்கத்தைக் கவிழ்க்க வேண்டுமென்ற முறையிலே நாட்டிலே ஒரு கொந்தளிப்பான நிலையும், நிம்



மதியற்ற நிலையும், கிளர்ச்சிகளும் ஏற்பட்டுக்கொண்டு . இருக்கக்கூடிய நிலைமைகள் வரும். அதைக் கருத்திற்கொண்டு, அரசியல் சட்டத்திலே இம்மாதிரி மத்திய சர்க்கார் கமிஷன் நியமிக்கக்கூடாது என்ற தடை விதிக்கப்படவில்லை. அந்தத் தடை விதிக்கப்படாமல் இருக்கின்ற நிலையில்— மத்திய சர்க்காருக்கு அதிகாரம் இல்லை என்று அரசியல் சட்ட நிபுணர்கள் கருதியிருப்பார்களானால் மாநில அரசு மீது குற்றச்சாட்டுகள் வந்தால் அதைக் கவனிப்பதற்கு மாநில அரசுக்குத்தான் முழு உரிமை உண்டு என்றும், மத்திய அரசுக்கு அந்த உரிமை இல்லை என்றும் தெளிவாகக் குறிப்பிட்டிருப்பார்கள். அப்படி தெளிவாகக் குறிப்பிடப்படாத நிலைமையிலே மத்திய அரசாங்கத்திற்கு அதிகாரம் உண்டு என்றுதான் விட்டுச்சென்றிருக்கிறார்கள். நாட்டிலே குற்றச்சாட்டுகள் சொல்லப்படுகிறபோது அதை விசாரிக்க ஏற்பாடு மாநில அரசும் செய்யலாம், மத்திய அரசும் செய்யலாம் என்று இப்பொழுது இருக்கின்ற நிலைமையை அப்படியே இருக்கவிடுவதுதான் சரியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்திலே எழுப்பப்பட்ட புகார்களைப்பற்றிப் பேசியபொழுது பல சட்ட நிபுணர்கள் எல்லாம் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். மத்திய அரசைச் சேர்ந்த வல்லுநர்களாக இருந்தாலும்சரி, தனியார்களாக இருந்தாலும்சரி பொதுவாக அவர்களுடைய கருத்து மத்திய அரசாங்கத்திற்கு அதிகாரம் உண்டு என்பதுதான்....

மாண்புமிகு திரு. செ. மாதவன்: உரிமை கிடையாது என்ற கருத்தையும் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: இரண்டு விதமான கருத்துக்களும் இருக்கின்றன. ஆகவே இந்த நிலையில் அரசியல் சட்டத்தை வைத்து முடிவுசெய்வதுதான் பொருத்தமாகும். முதலமைச்சர் அவர்கள் இங்கே ஒரு தடவை குறிப்பிடுகிறபொழுது சொன்னார்கள், மாநில அரசு தவறு செய்தால் மத்திய சர்க்காருக்கு உரிமை இருக்கிறது என்றால் மத்திய சர்க்கார் தவறு செய்தால் யார் விசாரிப்பது? அவர்களை மட்டும் விசாரிக்க ஆள் இல்லையே என்று சொன்னார்கள்.

மாநில அரசு தவறு செய்யும்பொழுது அதில் மத்திய அரசு தலையிடலாம் என்று சொல்லும்பொழுது மத்திய அரசு தவறு செய்தால் என்ன செய்வது, அங்கே உள்ளவர்கள் தவறே செய்யாதவர்களா என்று கேள்வி கேட்கும் ஒரு நிலை உள்ளது. அதற்கு நாம் பதில் சொல்லியாக வேண்டும். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் இம்மாதிரி ஒரு சுப்ரீம் பாடி இருந்தால் அந்த நிலைக்கு மேல் நாம் போக முடியாது. உதாரணமாக, ஹைகோர்ட்டில் தீர்ப்பு சொல்லப்பட்டால் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகிறோம், அப்பொழுது சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்புதான் முடிவானதே தவிர வேறு எந்தக் கோர்ட்டுக்கும் போய்க்கொண்டிருக்க முடியாது. ஆகவே, மத்திய அரசு என்றால் அதற்குமேல் இன்னொரு சுப்ரீம் பாடி இருக்க முடியாது, கிடையாது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சுப்ரீம் கோர்ட் தீர்ப்புக்குப் பிறகுதான் பிரதம அமைச்சர்கள் பாராளுமன்றத்தையே கலைத்து விட்டு மக்களுடைய அபிப்பிராயத்தைப் பெறுகிறார்கள்.

திரு. எ. ஆர். மாரிமுத்து : அதுதான் மக்கள் மன்றம், கடைசியிலே மக்கள் மன்றம்தான். இப்பொழுதுள்ள இதே வழி பாராளுமன்றம் தவறு செய்தால் அதற்குத் தீர்ப்புக் கொடுக்க வேண்டியது மக்கள் மன்றம். ஆகவே, இந்த விசாரணை கமிஷன் தேவையில்லை என்று இந்த அரசு கருதுமேயானால் மக்கள் மன்றத்திற்குப் போவதைத் தவிர வேறு வழியே கிடையாது. ஆகவே, இருக்கும் நிலைமைகளின் படி, அரசு செவ்வனே நடைபெற வேண்டுமானால் இம்மாதிரி அமைப்பு, இம்மாதிரி அதிகாரம் மத்திய அரசுக்கு இருக்க வேண்டியதுதான் என்று நான் கருதுகிறேன். ஆகவே, இந்தத் தீர்மானம் தேவையற்றது, தனியான ஒரு நாடாக தமிழகத்தைக் கருதிக்கொண்டு, எந்த விதமான பிடிப்பும் அற்ற நிலையில் தனி அரசாக இருப்பதாகக் கருதிக் கொண்டு கொண்டுவரப்பட்டிருக்கும் இந்தத் தீர்மானத்தை நான் வன்மையாகக் கண்டித்து எதிர்க்கின்றேன் என்று கூறி அமர்கிறேன், வணக்கம்.

திரு. எம். சுரேந்திரன் : சபாநாயகர் அவர்களே, இங்கே கொண்டு வந்த தீர்மானம்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு மாரிமுத்து அவர்கள் பேசி விட்டார்கள். உங்கள் தலைவர் பேசியதற்குப்பிறகு நீங்கள் பேசுவது அவ்வளவு முறையாக இருக்காது. அதுதான் உங்கள் தலைவருக்கு நீங்கள் கொடுக்க வேண்டிய மரியாதை என்பதற்காகச் சொல்கிறேன்.

THIRU B. VENKATASWAMY : Mr. Speaker, Sir, on behalf of the Swatantra Party I oppose this Resolution. It is against the Constitution. In the preamble to the resolution it is stated " whereas irresponsible attempts are being made to bring the Council of Ministers of Tamil Nadu into disrepute by bringing in the Central Government in the form of an Enquiry Commission.........etc. ". If that is the case, if you do not want Central Enquiry Commission, why should you send your reply? That is also necessary. According to the 1952 Act, I mean, the Commission of Enquiry Act, the Centre can appoint a Commission of Enquiry if it is found that there is a *prima favis* case. Why should this Government fear to face such a Commission? According to Mr. Mathialagan he is prepared to face the Commission. Why should you not face it? I do not think I can support this resolution because it is unconstitutional. There is a proverb in Telugu which says that if somebody were to say that you are so and so, why should you go on saying that you are not that so and so. Why should you bother about it?......



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மாநில
அரசின் மீது கூறப்படுகிற புகார்களை விசாரிப்பதற்கு மத்திய அரசு
விசாரணைக் குழுக்களை அமைக்கலாம் என்ற ஒரு கருத்து 1968-ஆம்
ஆண்டு உள்துறை அமைச்சர் திரு. சவான் அவர்களால் எல்லா
மாநிலங்களுக்கும் அனுப்பப்பட்டபொழுது, அமைச்சர் திரு. மாதவன்
அவர்கள் குறிப்பிட்டதைப்போல், இங்கு முதலமைச்சராக இருந்த
அண்ணா அவர்கள் அப்படிப்பட்ட உரிமை நிச்சயமாக மத்திய அரசுக்கு
இருக்கக்கூடாது, அது சுயாட்சித் தத்துவத்தையே பாதிக்கும் என்கின்ற
கருத்தை வெளியிட்டார்கள். அதே நேரத்தில் அதே கருத்தை ஒரிசா
சுதந்திராக்கட்சி முதலமைச்சர் திரு. சிங்தேவ் அவர்கள் வெளியிட்
டார்கள். அதேமாதிரி கடிதத்தை மத்திய அரசுக்கு எழுதினார்கள்.
அதைப்பற்றி சுதந்திராக் கட்சித் தலைவரின் அபிப்பிராயம் என்ன?

THIRU B. VENKATASWAMY : He has given his own opinion. According to the Constitution, the Central Government is all-powerful and it has the duty to protect all the States, including Ttmil Nadu. On behalf of the Swatantra party, let me say that we oppose this resolution.

THIRU M. A. LATHEEF : The hon. Member was saying that this resolution was unconstitutional and so he was opposing it. But when his own party was in power in Orissa previously, the then Chief Minister had refused, under the same Constitution, to have Central Enquiry Commission. If the hon. Member Thiru Venkatasami were to say that it was the personal opinion of Orissa Chief Minister, does he msan to say that the Orissa Chief Minister has also acted unconstitutionally?

THIRU B. VENKATASWAMY : I think he has not told it.

திரு. எ. ஆர். பெருமாள் : தலைவரவர்களே, பார்வார்ட் பிளாக்
கட்சியின் சார்பில் இந்தத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்
துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய ஆளும் காங்கிரஸ் கட்சியின் தலைவர்
திரு. மாரிமுத்து அவர்கள் மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கும்
உள்ள அதிகாரங்களைப்பற்றி விளக்கமாகச் சொன்னார்கள். அவர்கள்
கூறும்பொழுது ஒரு கருத்தை மையமாக வலியுறுத்தினார்கள். சட்டமன்றத்
திலே பெரும்பான்மை இருக்கிறது என்ற ஒரே காரணத்திற்காக
மாநில அரசு எதையும் செய்துகொண்டே போய்க்கொண்டிருந்தால்,
எதிர்க்கட்சிகளின் பேச்சுக்கள் எதையும் கேட்காமல் செய்துகொண்டே
இருந்தால் நாட்டில் பெருங்கிளர்ச்சி ஏற்படும் நிலைமை வரும் என்று

சொன்னார்கள். அந்தப் பேச்சிலிருந்து ஒன்று தெளிவாகப் புலனாகிறது. நம்முடைய அரசியல் சட்டத்தின்படி அங்கீகரிக்கப்பட்ட ஜனநாயகத்தின் அடித்தளத்தையே அவர் தகர்த்திருக்கிறார். சட்டமன்றத்தின் பெரும்பான்மை கருத்தை ஏற்க முடியாது என்று சொல்லும் அவர் பல்வேறு மாநிலங்களில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் என்பது மட்டுமல்ல, பாராளுமன்றத்திலும் ஆளும் பெரும்பான்மை கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்கக்கூடியவர். அவர் இப்படிப்பட்ட பிரச்சினைகளில் பேசும்பொழுது, நாம் இன்று பேசும் பிரச்சினையானது நீண்ட நெடுங்காலத்திற்கு, சந்ததி சந்ததியாக, இந்தத் தமிழ்ச் சமுதாயத்திலும், மற்ற பகுதி மக்களுக்கும் நிலைநிறுத்தக்கூடிய பேச்சாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பேச வேண்டும். இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருக்கிறது என்ற ஒரே காரணத்திற்காக இந்த ஆட்சிக்கு இடையூறுகளைச் செய்வதற்கு எந்தெந்த முறையில் சட்ட நுணுக்கத்தில் விளையாடலாம் என்று பேசப்படும் பேச்சாக இருந்தால் அது எதிர்காலத்தைப்பற்றி சிந்திக்காத, எதிர்காலச் சந்ததியைப் பற்றி சிந்திக்காத, நாட்டின் நன்மையைப் பற்றி சிந்திக்காத, தமிழ்ச் சமுதாயத்தின் மீது அக்கறை இல்லாத பேச்சாகத்தான் இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் சட்டம் படித்தவன் அல்ல, சட்ட நிபுணனும் அல்ல. மாநில அரசுக்கு உள்ள அதிகாரங்களும், மத்திய அரசுக்கு உள்ள அதிகாரங்களும் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இருந்தாலும் சில புதிய நிலைகள் ஏற்படும்பொழுது அந்தச் சட்டமன்றத்திற்குரிய அதிகாரங்கள் தெளிவாக்கப்பட வேண்டும். புதிது புதிதாக அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்பதில் தவறு இல்லை. மாநில சுயாட்சி என்று கேட்பதே மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்பதற்காகத்தான். இந்த மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்பதை திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னால் தான் பேசப்படும் பேச்சு என்பது அல்ல, அதற்கு முன்னாலேயே பேசப்பட்ட பேச்சாகும் இது. நேதாஜி சுபாஷ் பாபு அவர்கள் இந்தக் கருத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள். 'இம்பார்ட்டண்ட் ஸ்பீச்சஸ் அண்ட் ரைட்டிங்ஸ்' என்ற புத்தகத்தை வாங்கிப்படித்தால் தெரியும். இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி எப்படிப்பட்ட அதிகாரங்கள் மாநிலங்களுக்கு கொடுக்கப்பட வேண்டுமென்று மத்திய சர்க்காரோடு போராடிக் கொண்டிருக்கிறதோ அந்த அதிகாரங்கள் மாநிலங்களுக்கு இருக்க வேண்டுமென்ற கருத்தை நேதாஜி சுபாஷ் பாபு அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதை அடிப்படையாகக் கொண்டு இந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகிறேன். இந்தத் தமிழக மாநிலத்தில் எந்த நிகழ்ச்சிகளுக்கும் இந்த சட்டமன்றம்தான் பொறுப்பாக இருக்க முடியுமே தவிர வேறு யாருக்கும் இருக்க முடியாது.

நண்பகல் 12-00

மத்திய அரசு இந்தச் சட்டமன்றத்திலே தலையிட்டு இந்தத் தீர்மானத்திற்குப் புறம்பாகச் செயல்படக்கூடிய அமைப்பாக இருக்குமானால் இந்தச் சட்டமன்றமே தேவையில்லை என்பதுதான் என்னுடைய கருத்தாகும். சட்டமன்றம் என்பது வானத்தில் இருந்து விழுந்தது அல்ல. தமிழ்



மக்களால், பெரும்பான்மையான மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டது சட்டமன்றம். நம்மால், பெரும்பான்மையான தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட, சட்டமன்றம் கூறுகின்ற கருத்தை ஏற்றுக் கொள்ளாமல் எங்கோ இருந்து யாரோ கடிதம் எழுதுவதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும் ?

இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருக்கலாம். வரப்போகிற 50 ஆண்டுகள், 100 ஆண்டுகள் யார் ஆட்சியில் இருக்கப் போகிறார்கள் என்பது யாருக்கும் தெரியாது. இன்றைக்குச் சொல்லக் கூடிய கருத்து அன்றைக்குச் சரியாக இருக்குமா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். எப்படியாவது திராவிட முன்னேற்றக் கழக அரசை, ஒப்புக்கொள்ளப்பட்ட அரசை, மக்களால் தேர்ந்தெடுத்து அனுப்பி வைக்கப்பட்ட அரசை அந்த ஐந்தாண்டுக் காலத்திற்குள்ளாகவே, அதற்கு முன்னதாகவே கவிழ்க்க வேண்டுமென்ற எண்ணம் கொண்டவர்கள்தான் இந்தத் தீர்மானத்தை எதிர்த்துப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

(திரு. நா. வீராசாமி—தலைமை)

விசாரணைக் கமிஷனை மத்திய அரசுதான் போடவில்லை. நீங்களாவது போடக்கூடாதா என்று பேசினார்கள். யாரோ இரண்டொருவர் போய் எதையாவது எழுதிக் கொடுத்து விசாரணைக் கமிஷன் போடுவது என்றால் மற்றவர்கள் மீது புகார்கள் வரும்போது யார் விசாரணைக் கமிஷன் போடுவது ? பாராளுமன்றத்தில் தவறு நடக்குமானால், மத்திய அரசில் தவறு நடக்குமானால் அதைக் கண்டிக்க, அதை அகற்ற, அதை மாற்ற எந்த இடத்தில் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது ? யார் விசாரணைக் கமிஷன் போடுவது ?

விசாரணைக் கமிஷன் போடவேண்டுமென்று மத்திய அரசிடம் கொடுக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு இந்தச் சட்டமன்றத்திலே முதலமைச்சர் அவர்கள் பதிலைத் தந்திருக்கிறார்கள். எழுத்து மூலமாகத் தந்திருக்கிறார்கள். குற்றச்சாட்டுப் பட்டியலுக்கான பதிலை இவ்வளவு விளக்கமாகச் சட்டமன்றத்தில் வைத்தது போல் இதுவரை எந்த முதலமைச்சரும் செய்ததில்லை. அப்படி எழுத்து மூலமாகப் பதிலைக் கொடுத்ததன் மூலம் இந்திய சரித்திரத்திலேயே ஒரு சரித்திரத்தை ஏற்படுத்திய ஒரே முதலமைச்சர் தமிழ்நாட்டு முதலமைச்சர்தான்.

புகார்களை யார்மீதும் எவர் வேண்டுமானாலும் சொல்லலாம். புகார் கூறினால் அது நியாயமான புகார்களாக இருந்து அந்தப் புகார்களுக்கு எந்தவிதமான பதிலையும் சொல்ல முடியாத நிலைமை இருக்குமானால் நீங்கள் சொல்லுவதெல்லாம் சரியாக இருக்குமென்று சொல்லலாம். புரட்சிகள் கிளம்பும், பூகம்பம் வெடிக்கும் என்றெல்லாம் சொல்லுகிறார்கள். எதற்காக வெடிக்கப் போகிறது ? இந்த மாநிலத்திற்கு அதிக அதிகாரங்களைத் தரவேண்டும் என்பது பற்றி வரையறுத்துக்

கோருகிற திராவிட முன்னேற்றக் கழக அரசு தமிழ் மாநிலத்தின்
நலனை வைத்துக் கேட்கின்ற நிலையில், எதிர்காலச் சந்ததியின் நலனை
அடிப்படையில் வைத்துக் கேட்கின்ற நிலையில் இந்தத் தீர்மானத்தை
ஃபார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் ஆதரித்து அமர்கிறேன்.

திரு. மணலி சி. கந்தசாமி : தலைவர் அவர்களே, மன்றத்தின்
முன்பாக இருக்கக்கூடிய தீர்மானத்தைப் பற்றி ஒருசில கருத்துக்கள்
சொல்ல முன்வந்திருக்கிறேன்.

ஏற்கனவே, டில்லியில் கொண்டு போய் ஊழல் பட்டியலைக் கொடுத்து,
மத்திய சர்க்கார் தலையிட்டு விசாரணை செய்ய வேண்டுமென்று கோரிய
பிரச்சினையின்மீது இந்தத் தீர்மானம் எழுகிறது. இந்தத் தீர்மானத்தை
விவாதிப்பதன் மூலமாக மாநில அரசுகளுக்கும், மத்திய அரசுக்கும்
இருக்கக்கூடிய அதிகாரம் எந்த அளவுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்,
அல்லது எந்த அளவுக்குப் பொருத்தம் இல்லாமல் இருக்கிறது அல்லது
எந்த அளவுக்குப் பொருந்தி இருக்கிறது என்பதை இந்தச் சபையில்
விவாதிக்கக்கூடிய சந்தர்ப்பத்தை இந்தத் தீர்மானம் ஏற்படுத்தியிருக்கிறது.

இந்திய ஒருமைப்பாடு வேண்டாமென்று சொல்லக்கூடியவர்கள்
எந்தத் தரப்பிலும் இருக்கமாட்டார்கள். இந்திய ஒருமைப்பாட்டைக் கண்
எனப் பாதுகாக்க வேண்டும். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டு
மென்றோ, பரிபூரண சுயேச்சை வேண்டுமென்றோ கோருபவர்கள்கூட
இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஊனம் விளைவிக்க வேண்டுமென்ற நோக்கத்தில்
கேட்கிறார்கள் என்று நோக்கம் கற்பிக்க முடியாது.

அன்றைக்கு பிரிட்டிஷ் சர்க்கார் சுதந்திரப் போராட்ட வீரர்களின்
கையில் அதிகாரத்தைப் பரிமாற்றம் செய்து கொடுத்துவிட்ட பிறகு
அரசியல் நிர்ணய சபையை ஏற்படுத்தி வருங்கால இந்தியா எந்த
அளவுக்கு இருக்கும், உரிமைகள் எப்படிப் பாதுகாக்கப்பட வேண்டும்,
மாநில, மத்திய அரசு அதிகாரங்கள் எந்த அளவுக்கு இருக்க வேண்டும்
என்றெல்லாம் கற்பனை செய்து பார்த்துத்தான் அரசியல் சட்டத்தைத்
தயாரித்தார்கள். இப்போது மாறுபாடான சூழ்நிலைகள் ஏற்பட்டால், எந்த
அளவுக்கு மாற்ற வேண்டுமென்பதைப் பற்றி யோசிக்க மக்களுக்கு
உரிமை உண்டு, இந்த நாட்டில் இருக்கக்கூடிய அரசியல் கட்சிகளுக்கு
உரிமை உண்டு என்பதை மறந்து விடக்கூடாது. நான் இதைச்
சொல்லும்போது இதுவரை 25 அரசியல் சட்டத் திருத்தங்கள்
வந்திருப்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தத் திருத்தங்கள்
வந்த காரணத்தாலேயே அதை இயற்றியவர்கள் முட்டாள்கள் என்று
கூற முடியாது. மிகச் சிறந்தவர்கள் அதை இயற்றியிருக்கிறார்கள்.
நாட்டு மக்கள் நன்மையைக் கருதி சில மாற்றங்களைச் செய்துதான்
தீரவேண்டும்.

இதையெல்லாம் மனத்திலே வைத்துக் கொண்டு அன்றைக்கே நான்
குற்றச்சாட்டுப் பட்டியலை டில்லிக்குக் கொண்டு சென்றது 'ராங் டாக்டிக்ஸ்'



என்று சொன்னேன். இன்றைக்கு அதை வலியுறுத்திக் கூற விரும்பு
கிறேன். இந்த மன்றத்தின் முன் குற்றப் பட்டியலை வைத்து இந்தச்
சட்ட மன்றத்திலும், மக்கள் மன்றத்திலும் விவாதித்திருந்தால், ஏற்படக்
கூடிய பலன் நல்ல பலனாக இருக்கும். இப்போது வெறும் குழப்பந்தான்
மிச்சம். ஆகவே, அது ராங் டாக்டிக்ஸ்—தவறான நடைமுறை என்று
சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஒற்றுமையைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்துவிட்டால் மாத்திரம்
போதாது. ஒற்றுமையைக் காப்பாற்றிட பிரச்சினை ஆரம்பமாகி விட்டால்
அதற்கு முடிவு காண முயற்சி செய்யவேண்டும். மாநிலங்களுக்கும்
மத்திய சர்க்காருக்கும் இடையே இருக்கக்கூடிய அதிகாரங்களிலே எந்த
அளவுக்கு மாநில சர்க்காருடைய பூரண வளர்ச்சியைப் பாதிக்கிறது
என்ற விஷயங்கள் எழுந்து கொண்டிருப்பது இந்த அரசில் மாத்திரமல்ல,
தமிழகத்தில் மாத்திரமல்ல, பல்வேறு ராஜ்யங்களிலும் இந்தப் பிரச்சினை
ஒவ்வொரு வடிவில் பகிரங்கமாக, பல்வேறு உருவங்களில் எழுந்து
கொண்டிருக்கின்றன என்பதை மத்திய சர்க்கார் உணரவேண்டும்.
இந்தப் பிரச்சினையை எடுத்துக் கொண்டால்கூட சட்டப்படி போகலாம்.
ஆனால், எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து பயன் இல்லாமல்
போகக்கூடாது.

கம்யூனிஸ்டுகளைப் பொருத்தவரையில் சட்டமன்றத்தை ஒரு அரங்க
மாகத்தான், சில பிரச்சினைகளைக் கோடிட்டுக் காட்டுவதற்காகத்தான்,
பிரசாரம் செய்வதற்காகத்தான் பயன்படுத்துகிறார்கள். மக்கள் மத்தியிலும்
பேசுகிறார்கள். எங்கே நியாயமாகக் குற்றம் இருக்கிறது என்று பார்க்கக்
கூடிய கண்ணோட்டம் உடையவர்கள்தான் கம்யூனிஸ்டுகளாக இருப்பார்கள்.
மக்கள் மத்தியிலும், சட்ட மன்றத்திலும் இரண்டிலும் எடுத்துச்
சொல்லவேண்டும். அப்படி இறங்குவதன் மூலம் மாற்றத்தைக் கொண்டு
வரமுடியும் என்றால், அப்படி இறங்குவதில் தவறு இல்லை.

அந்தப் புகார்ப் பட்டியலைப் பற்றி அனுவசியமான வாதங்கள்,
வேதனைக்குரிய வாதங்கள் எல்லாம் வரும்போது எந்த அளவுக்குச் சட்ட
சபையின் கவுரவம், மந்திரி சபையின் கவுரவம், எதிர்க் கட்சிகளின்
கவுரவம் பாதிக்கக்கூடிய அளவுக்குப் போய்க் கொண்டிருக்கிறது என்பதை
உணர்ந்து அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்றால், சரியான
முறையில் இன்றைக்கு சட்டமன்றத்தில் குற்றச்சாட்டுகளை வைத்து
விவாதிக்கவேண்டும். இதிலே என்ன ரகசியம்? ஃபைல்கள் இருக்கின்றன,
சாட்சியங்கள் இருக்கின்றன, எல்லாவற்றுக்கும் மேலாக மக்கள்
இருக்கிறார்கள்.

மத்திய சர்க்கார் தலையிட வேண்டும், தலையிடக்கூடாது என்ற
சர்ச்சையும், மாநில—மத்திய சர்க்கார் அதிகாரங்களைப் பற்றிய சர்ச்சையும்
வளர்ந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு கான்ஸ்டிடியூஷன்படி இந்திய
ஒருமைப்பாட்டை கண் எனப் பாதுகாக்க வேண்டுமென்பதிலே இருவேறு

கருத்துக்கள் இல்லை. இந்தியப் பிரதமர் அவர்கள் இந்தச் சர்ச்சைகளைப் பற்றியெல்லாம் உன்னிப்பாகக் கவனித்து சரியான முறையில் இதைக் கையாளவேண்டும். இது மிக நுட்பமான பிரச்சினை. மத்திய சர்க்காரும் இந்திய ஒற்றுமையை உடைக்க முடியும், மாநில சர்க்காரும் உடைக்க முடியும். இருவருக்கும் பொறுப்பு இருக்கிறது.

மாநில அரசுகள் பரிபூர்ண அரசுகளாக வளர்வதற்கு எந்தெந்த அங்கங்கள் தேவை என்று ஆழ்ந்து பரிசீலிக்கவேண்டும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில், வேண்டுமென்றால் மாற்றங்களைக் கொண்டு வந்து இந்நிலையைத் தீர்க்க ஒரு ஆரம்பமாக இந்தச் சர்ச்சை எழுப்பப் பட்டிருக்கிறது என்று கூறுகிறேன்.

சட்டப்படி அரசுகளுக்கு ஒரு பொறுப்பு இருக்கிறது. அவர்கள் செய்கிறார்களா இல்லையா என்பது வேறு பிரச்சினை. இந்தத் தீர்மானம் அவ்வளவு தூரம் அவசியம் என்று நான் கருதவில்லை. பலவித அபிப்பிராயங்கள் இருக்கின்றன. மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்ற கோரிக்கையைக் கூட தட்டிவிடக்கூடிய ஒரு போக்கை இதில் பார்க்க முடிகிறது. மத்திய அரசு–மாநில அரசு அதிகாரங்கள் சம்பந்தப்பட்ட வரையில் அது குறித்து புனர்பரிசீலனை செய்யவேண்டிய ஒரு கட்டம் வந்துவிட்டது என்பதை யாரும் மறுக்கமுடியாது.

மிகுந்த அளவிற்கு நாசூக்காக, இந்திய நாட்டின் ஒன்றுமைக்கு ஊறு விளைவிக்காத விதத்தில் காரியங்களைச் செய்யும் கடமையில் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் பொறுப்புண்டு. மத்திய அரசு எதேச்சாதிகாரமான முறையில் போனால், ஏகபோகமாக எல்லா அரசுகளையும் ஆளுகிறோம் என்ற போக்கில் எதேச்சாதிகாரமாகப் போனால் ஆபத்தை அவர்களே ஏற்படுத்திக் கொள்கிறார்கள். ஜனநாயகம் நல்லமுறையில் செயல்பட, எல்லா அரசுகளின் குறைகளையும் கேட்கக்கூடிய அளவில் எந்தெந்த அளவிற்கு மாற்றங்களைச் செய்வது என்பது பற்றி சிந்தித்து, எப்படி ஒருமைப்பாட்டை யதார்த்தத்தில் ஆக்கமுடியும் என்று பார்க்க வேண்டும்.

சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்த நிலையும் இப்போதிருக்கிற நிலையும் வேறு. இன்று பட்டினி, பஞ்சம், வேலையில்லாத் திண்டாட்டம் இவை எல்லாம் கோர ரூபத்தில் இருக்கின்றன. அதோடு ஒருமைப்பாடும் சம்பந்தப்பட்டதாகும். இவை வக்கீல்கள் கூடித் தீர்க்கும் பிரச்சினைகள் அல்ல. இது ஒரு யதார்த்தமான பிரச்சினை. இப்போதுள்ள சூழ்நிலைகளுக்கு அடிப்படைக் காரணங்கள் யாவை என்பதுபற்றி சிந்திக்க வேண்டும்.

இத்தீர்மானத்தின்மீது பேசும்போது அல்லது ஒற்றுமை பற்றிப் பேசும்போது அல்லது அரசியலமைப்புச் சட்டம் பற்றிப் பேசும்போது வெறும் வக்கீல்களின் வாதமாக இல்லாமல் யதார்த்த நிலையைப் பார்க்க வேண்டும். இப்போது நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம், கள்ளப் பணம் போன்ற பல விஷயங்கள் இருக்கின்றன. ஊழல்களுக்குக் காரணமே இன்று நாட்டிலுள்ள நிலைமைதான் காரணம். யோக்கியர்கள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்பது சந்தேகமாக இருக்கிறது. நானே எவ்வளவு தூரம் யோக்கியன் என்று பார்த்துக் கொண்டிருக்கிறேன். மனிதத் தன்மையற்ற நிலை வளர்ந்துகொண்டு வருகிறது. நம் நாட்டின் தார்மீகத்திற்கே ஒரு சோதனை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலை நீடித்தால் நம் ஒருமைப்பாட்டிற்கு மட்டுமல்ல, நம் நாட்டின் சுதந்திரத்திற்கே ஆபத்தாகும்.



தேச ஒருமைப்பாடுபற்றி, மத்திய அரசு–மாநில அரசுகள் உறவுபற்றி பேசுவதே பாவம் என்று நினைக்கிறார்கள், அது தவறு. எல்லா அதிகாரங்களையும் மத்திய அரசுதான் வைத்துக் கொண்டிருக்க வேண்டும், அதில் தலையிடக்கூடாது என்று சொல்வது ஆபத்து. பொதுவாக, பிரச்சினை அம்பலத்திற்கு வந்து விட்டது. அதை யாரும் மறுக்க முடியாது. இன்று சபைக்கு வந்திருக்கிறது, நாளை மக்கள் மன்றத்திற்கு வரப்போகிறது. இந்திய நாட்டின் ஒற்றுமையைப் பாதுகாக்கும் கண்ணோட்டத்துடன் பிரச்சினையைப் பார்க்க வேண்டியிருக்கிறது என்று தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை நான் எதிர்க்கிறேன். இந்தத் தீர்மானத்தின் வடிவத்தைப் பற்றி எங்கள் கட்சி சார்பில் முன்பு பல்வேறு ஆட்சேபணைகளைத் தெரிவித்திருக்கிறோம். இதில், அரசியல் அமைப்புச் சட்டத்தில் இருக்கிற நுணுக்கங்களைப் பற்றி ஆராய்வது பொருத்தமல்ல என்றிருந்தாலும் ஒரு சில ஷரத்துக்களைப் பற்றிக் கூறுவது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

பொதுவாக, இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்துள்ள மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் அரசியலமைப்புச் சட்டத்தின் 164 (2)-ன் கீழ் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். கவுன்ஸில் ஆப் மினிஸ்டர்ஸ் எப்படி இருக்கவேண்டும் என்ற தலைப்பில் நம் அரசியலமைப்புச் சட்டத்தில் இருக்கிற ஒரு சில பகுதிகளை இந்த மன்றத்தில் கூறுவதற்கு நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். 163-வது ஷரத்து கவுன்ஸில் ஆப் மினிஸ்டர்ஸ் எப்படி இருக்கவேண்டும் என்று விளக்கிக் கூறுகிறது.

163 (1) : There shall be a Council of Ministers with the Chief Minister at the head to aid and advise the Governor in the exercise of his functions except in so far as he is by or under this Constitution required to exercise his functions or any of them in his discretion.

டிஸ்க்ரீஷனரி பவர்ஸ் தவிர மற்றபடி முதல் அமைச்சர் அவர்கள் கவர்னரோடு ஒத்துழைக்க வேண்டுமென்ற கருத்தை இந்த ஷரத்தில் கூறியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல. மந்திரிசபை எப்படி இருக்கவேண்டும். அவர்களுடைய பொறுப்பு என்ன என்பதைப் பற்றி 164 (2)-ல் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. இதை வைத்துக்கொண்டு ஒரு விசாரணைக் குழு நிறுவுவதற்கு அரசியலமைப்புச் சட்டத்தில் இடமில்லை. சட்டம் அதற்கு அனுமதிக்கவில்லை என்று வாதிடுவது பொருத்தமல்ல என்று நான் கருதுகிறேன்.

பொதுவாக இன்றிருக்கிற கமிஷன் ஆப் என்கொயரி ஆக்டைப் பொறுத்தவரையில் அது செல்லுபடியாகுமா, ஆகாதா என்று கூட இதுபற்றி கோர்ட்களில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இந்தச் சட்டம் மத்திய ஆட்சியின் சட்ட வரம்பிற்கு உட்பட்டது என்று தீர்ப்பு வழங்கப்பெற்று அந்தச் சட்டம் இன்று அமல் நடத்தப்பட்டு விசாரணைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பது பற்றி இந்த மன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

என்னைப் பொறுத்தவரையில், எங்கள் கட்சி சார்பாக நான் கூறுகிறேன். மத்திய அரசுக்கு கமிஷன் ஆப் என்கொயரி ஆக்ட்டின்படி விசாரணை நடத்துவதற்கு அதிகாரம் இருக்கிறது என்று நான் பரிபூர்ணமாக நம்புகிறேன். அதற்கு ஒருவேளை அரசிலமைப்புச் சட்ட வல்லுனர்கள் மாறுபட்ட கருத்து கூறக்கூடும். நான் இன்னும் கூறுவேன். நம் அரசிலமைப்புச் சட்டத்தில் என்னென்ன முக்கியமான ஷரத்துக்கள் இருக்கின்றன என்பதைப் பற்றி நாம் இந்தச் சந்தர்ப்பத்தில் கணித்துப் பார்ப்பது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அரசிலமைப்புச் சட்டத்தில் இருக்கிற ஒரு சில ஷரத்துக்கள் எப்படி அமைந்திருக்கின்றன என்பதைப் பார்க்கவேண்டும்.

சாதாரணமாக, 152, 156 ஷரத்துக்களைப் படித்துப் பார்ப்பது பொருத்தமாகயிருக்கும் என்றே நான் கருதுகிறேன். 352-வது ஷரத்தில் எமர்ஜன்ஸி வந்தால் என்ன முறையில் நடக்கவேண்டும் என்பதைப் பற்றி எடுத்துக் கூறியிருக்கிறார்கள். 352-ல் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது:—

352. (1) If the President is satisfied that a grave emergency exists whereby the security of India or of any part of the territory thereof is threatened by war or external aggression or internal disturbance, he may, by Proclamation, make a declaration to that effect.

அது எமர்ஜன்ஸி பவர்ஸ். உள்நாட்டுக் கலகமோ அல்லது வெளிநாட்டிலிருந்து படை எடுத்தாலோ பிரசிடெண்ட்டுக்கு விசேஷ அதிகாரங்கள் வழங்கப் பெற்றிருக்கின்றன. உள்நாட்டுக் கலகம் ஏற்பட்டால் மத்திய அரசு மாநில அரசுக்கு உதவி புரியவேண்டும் என்று 355-வது ஷரத்தில் இருக்கிறது.

355. It shall be the duty of the Union to protect every State against aggression.........என்று ஒரு ஷரத்து அரசிலமைப்புச் சட்டத்தில் இருக்கிறது.



அரசியல் அமைப்புச் சட்டப்படி இந்த நாட்டின் நிர்வாகம் ஆபத்தான நிலையில் இருந்தால், ஜனாதிபதிக்கு அந்த அதிகாரங்களை ஏற்று நடத்துவதற்கு உரிமை 356 பிரிவிலே வழங்கப்பட்டு இருக்கிறது. அதையும் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு விரும்புகிறேன்.

(1): If the President on receipt of a Report from the Governor * * * of a State or otherwise, is satisfied that a situation has arisen in which the Government of the State cannot be carried on in accordance with the provisions of this Constitution, the President may by Proclamation —

(a) assume to himself all or any of the functions of the Government of the State and all or any of the powers vested in or exercisable by the Governor * * * or any body or authority in the State other than the Legislature of the State..............

என்று அந்த அதிகாரத்தைக் கொடுத்துக் காட்டியிருக்கிறது. இந்த அதிகாரங்கள் எல்லாம் இருந்தாலும்கூட, சட்டத்திற்கு உட்பட்டு, அதிலும் சமஷ்டி சர்க்காருக்கு உட்பட்டுத்தான் இருக்கிறது என்பதை நாம் எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டும். நாம் தெளிவான எண்ணத்தோடு இருக்கவேண்டும். நான் அரசியல் சட்டம் முக்கியமா, அல்லது மக்களின் கையில் சாவர்னிடி இருக்கிறதா என்ற பிரச்சினைக்குச் செல்லாமல், என்னைக் கேட்டால் அரசியல் அமைப்புச் சட்டம் தான் இப்போது சுப்ரீம் என்று சொல்லக்கூடிய அளவில் இருக்கிறது. சுப்ரீம் என்று சொன்னால், அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கும் பாராளுமன்றத்திற்கு அதிகாரம் இல்லை. மக்களுக்கு அதிகாரம் இல்லை என்று வாதிட விரும்பவில்லை. இதையெல்லாம் பார்க்கிறபோது, இந்தத் தீர்மானமானது இந்தச் சூழ்நிலையில் தேவையற்றது என்ற கருத்தைக் கூற விரும்புகிறேன்.

பொதுவாக இங்கே ஊழல் புகார் பற்றி பல விவாதங்கள் நடைபெற்றது. ஊழல் பட்டியலையும், அதற்கான ரிப்ளை பட்டியலையும் வைத்தார்கள். ஆனால் அதற்கு பிற்பட்டு இரண்டாவது பட்டியலைக் கொடுத்தது. அதற்கும் மாநில அரசாங்கத்திலிருந்து ரிப்ளை கொடுத்ததாகவும் கேள்விப்பட்டோம். அதை வைக்கவேண்டுமென்று நாங்கள் இந்த மன்றத்தில் கிளப்பினோம். ஆனால் இதுகாறும் அந்த இரண்டாவது ரிப்ளை கிடைக்கவில்லை. இந்த மன்றம் சுப்ரீம் என்று கருதினால், நிச்சயமாக இதிலே சொல்லியிருக்கும் கருத்துக்களை, இந்த மன்றத்தில் அங்கத்தினர்களாக இருக்கும் எங்களுக்கும் கிடைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டுமென்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, முதலில் ஒரு குற்றச்சாட்டுப் பட்டியலை குடியரசுத் தலைவரிடத்தில் கொடுத்தார்கள். கொடுத்தபிறகு அதற்கான விளக்கத்தை அரசாங்கத்தின் சார்பாக நாங்கள் பிரதமருக்கு அனுப்பியிருந்தோம். அவைகளை இந்த அவையில் வைக்க முடியுமா என்று எதிர்க்கட்சித் தரப்பில் உள்ள திரு. பொன்னப்ப நாடார் போன்றவர்கள் கேட்டார்கள். அப்போது பிரதமர் அவர்களிடத்தில் கொடுத்து இருப்பதை இங்கே வைக்க இயலுமா என்று சந்தேகம் வந்தது. அதற்கிடையில் அந்தக் குற்றச்சாட்டைக் கொண்டுபோய் கொடுத்தவர்கள், பத்திரிகைக்கு அந்தக் குற்றச்சாட்டுக்களைக் கொடுத்து விட்டார்கள். சில பத்திரிகைகள் வெளியிட்டன. நாங்கள் பத்திரிகைகள் வெளியிட்டதால், குற்றச்சாட்டுகளை எல்லா பத்திரிகைகளும் வெளியிடாவிட்டாலும், பத்திரிகைகளுக்குப் போய் சேர்ந்துவிட்டதால், நாங்களும் பகிரங்கமாக அவர்கள் கிளப்பிய குற்றச்சாட்டுகள், அதற்கான பதில்கள் ஆகியவற்றை அரசாங்கத்தின் சார்பில் வைக்க நேர்ந்தது. இப்போது பதிலுக்குப் பதில் என்று அவர்கள் கொடுத்தார்கள். அதை அவர்கள் பத்திரிகைகளுக்கும் கொடுக்கவில்லை. இந்த மன்றத்திலும் அது குறித்துப் பேசவில்லை. இருந்தபோதிலும் எந்த நேரத்திலும் இந்தச் சட்டமன்றத்தில் வைக்கும் வகையில் அவர்கள் கிளப்பிய குற்றச்சாட்டுகளுக்கான பதிலுக்குப் பதில், அந்தப் பதிலுக்கு அரசின் சார்பில் அனுப்பியுள்ள பதிலும் ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றன. அநேகமாக டைப்பிங் வேலை முடிந்துவிடும் இன்று என்று எதிர்பார்க்கப்படுகிறது. இன்று முடிந்தால் கொடுக்கிறோம். அல்லது அடுத்த சட்டசபைக் கூட்டத்தொடரில் வைக்கப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இது மிகவும் முக்கியமான விஷயம் என்பதால் தான் அதைத் தெரிந்து கொள்ளவேண்டும், அதிலே என்ன இருக்கிறது என்று எப்படி தமிழகமே உற்று கவனித்துக் கொண்டு இருக்கிறதோ, அதேபோல் அவர்களோடு தொடர்புகொண்டிருக்கும் நாங்களும் இந்த முக்கியமான விஷயம் குறித்துத் தெரிந்து கொள்ள விரும்புகிறோம்.

இந்த விசாரணைக் கமிஷன் பொறுத்தவரையில் நிச்சயமாக மத்திய அரசாங்கம் விசாரணை நடத்த வேண்டும். இங்கே மட்டுமல்ல, எங்கே ஊழல் குற்றச்சாட்டுகள் இருக்கின்றனவோ, அங்கேயெல்லாம் விசாரணை நடத்துவதற்கு மத்திய அரசாங்கம் முன் வரவேண்டும்.

ஹரியானா மாநிலத்தில் நடைபெற்ற விசாரணை பற்றியும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன். எங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் அதைக் கொடுத்தார்கள். இதுகாறும் விசாரணை நடக்கவில்லை. ஒருவேளை அது 'கோல்ட் ஸ்டோரேஜில்' இருக்கிறதோ என்னவோ தெரியவில்லை. அதுமாதிரி குற்றம் சொன்னால் நிரூபித்து,



சொல்வதற்கு இந்த மாதிரியான விசாரணைக் கமிஷன் சாலச்சிறந்ததாக இருக்கும், பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். ஒருவேளை இதைச் சந்திப்பதில் பல கஷ்டங்கள், துன்பங்கள் இருக்கலாம். அதைச் சந்திப்பதற்கு அரசாங்கமும், கொடுத்தவர்களும் தயாராக இருப்பதால், அப்படிக் கூறியிருப்பதால், அந்த விசாரணை நடத்துவதில் எந்தவிதமான சுணக்கமும் தேவையில்லை என்ற கருத்தை நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்னும் மத்திய அரசாங்கத்திலிருந்து வேறு 'அட்மினிஸ்டிரேடிவ் டைரக்ஷன்' கொடுக்க முடியுமா என்று பார்த்தால், நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டத்தில் சில காரியங்களுக்காக 'டைரக்ஷன்' கொடுக்க முடியும் என்ற ஷரத்தும் இருக்கிறது. உதாரணத்திற்குப் பார்த்தால் 256, 257 ஷரத்துக்களில் இருக்கிறது. அதிலே என்ன கூறியிருக்கிறது என்றால்

Chapter II—Administrative Relations—General—Obligation of States and the Union.

என்று கூறி, ஜெனரல் என்ற தலைப்பில் 256-வது பிரிவில்

'The executive power of every State shall be so exercised as to ensure compliance with the laws made by Parliament and any existing laws which apply in that State, and the executive power of the Union shall extend to the giving of such directions to a State as may appear to the Government of India to be necessary for that purpose.'

என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது குறிப்பிட்ட ஒரு சில காரியங்களில் அவர்களுக்கு 'டைரக்ஷன்' கொடுக்கலாம் என்ற கருத்தும் அரசியல் அமைப்புச் சட்டத்தில் 256-வது பிரிவில் கூறப்பட்டிருக்கிறது.

அதேமாதிரி வேறு ஷரத்துக்களும் இருக்கின்றன. ஒட்டுமொத்தமாக அரசியல் அமைப்புச் சட்டத்தில் இருக்கும் பிரிவைப் பார்க்கிறபோது, இந்த மாதிரி சட்டங்கள் நிறைவேற்றி, ஏதாவது குற்றச்சாட்டுக்கள் ஏற்பட்டால் விசாரணை செய்வதற்குப் பரிபூர்ணமாக உரிமை இருக்கிறது. மத்திய அரசாங்கத்திற்கு உரிமை இல்லை என்று சொல்வது சரியல்ல. மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும் ஒரே அமைப்பாக இருக்கவேண்டும். கட்சி வேறுபாடாக இருந்தாலும், ஆட்சியில் இருக்கும் எல்லா அரசுகளும் அரசியல் அமைப்புச் சட்டத்தின் முன் சமம் என்ற சூழ்நிலையில் அந்த அரசியல் அமைப்புச் சட்டத்தைத் தழுவி ஆராய்ந்து பார்ப்பது சாலச்சிறந்ததாக இருக்கும் என்று கருதுகிறேன்.

இந்த மாதிரி குற்றச்சாட்டு வந்தபோது பக்ஷி குலாம் மொகமது பேரில் விசாரணை செய்து இருக்கிறார்கள். அது சம்பந்தமாக தீர்ப்புகளும் வந்திருக்கின்றன. அதையெல்லாம் நாம் மறுபடியும் விரிவாக எடுத்துக்கூறத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

இந்தத் தீர்மானத்தில் போட்டிருக்கிற வாசகங்கள் அவ்வளவு திருப்தி அளிக்கக்கூடிய வகையில் இல்லை. இதிலே பல விதமான வேறுபாடுகள், அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு எதிர்ப்பான வாசகங்கள் தொனிக்கிறது என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியவில்லை. இதிலே டெமாக்ரசிக்குப் புறம்பாக இருக்கிறது. பொறுப்பற்றத் தன்மை இருக்கிறது என்ற தொனி இந்தத் தீர்மானத்தில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆதலால் இந்தத் தீர்மானம் தேவையற்றது. இதைப்பற்றி இந்த மன்றத்தில் வாதிடவேண்டிய தேவையில்லை. மத்திய ஆட்சிக்கும், மாநில ஆட்சிக்கும் இருக்கும் வேற்றுமையை அது மிகைப்படுத்துவதாகும். அவர்களிடத்திலே இருக்கும் சுமுகமான உறவைத் தகர்க்கும் தீர்மானமாக இருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

அது மட்டுமல்லாமல், மத்திய அரசும் மாநில அரசும் என்ன முறையில் இருக்கவேண்டுமென்று ராஜமன்னார் கமிட்டி ரிப்போர்ட் வெளியிட்டு இருக்கிறது. அந்த அறிக்கையின் மீது விவாதம் இது காறும் நடத்தப்படவில்லை. மத்திய மாநில உறவு என்ன முறையில் இருக்கவேண்டுமென்று, எங்களைப் பொறுத்தவரையில் கேட்டால் நான் சொல்வேன். இப்போது மத்திய மாநில உறவு, மாநிலத்திற்கு அதிக அதிகாரம் என்று சொல்வது போன்றவை சர்ச்சைக்குரிய விஷயமாக இருக்கிறது. இந்தியா பூராவிலும் இருக்கிற முதலமைச்சர்கள் ஒன்று கூடி, மத்திய அரசாங்கமும் அதிலே இருந்து பிரச்சினையை விவாதித்து, என்ன சட்ட திருத்தங்கள், அரசியல் அமைப்புச் சட்டத்தில் வேண்டுமோ, அதைச் செய்வதுதான் பொருத்தமாக இருக்கும் என்று நான் வாதிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

நாம் தனித் தமிழகம் என்று வாதம் கிளப்பினால் அது ஒரு வேளை இந்திய ஒருமைப்பாட்டிற்குக் குந்தகம் விளைக்கிற சூழ்நிலை ஏற்படும். தமிழ்நாடு தமிழருக்கே என்ற வாதத்திற்கு எப்படிப் பல பிரச்சினைகள் வந்திருக்கிறதோ அதே மாதிரிப் பிரச்சினைகள் கிளம்பிவிடலாம். ஆதலால் அந்த மாதிரியான சட்டப் பிரச்சினைகள் இருக்கின்றன. அதிலே நாம் ஜாக்கிரதையாக, நிதானத்தோடு காரியம் ஆற்ற வேண்டுமென்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

பொதுவாக, இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்தவர்கள் இதை வலியுறுத்தமாட்டார்கள். இதை வாபஸ் வாங்கிவிடுவார்கள் வாபஸ் வாங்கவேண்டும். இல்லாவிட்டால் அது பெரும் இடையூறாகி விடும் என்று கூறிக்கொண்டு இந்தத் தீர்மானத்தை நான் முழுமனதோடு எதிர்க்கிறேன்.

பிற்பகல் 12·30 மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் திரு. லத்தீப் அவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய இந்தத் தீர்மானம் மிக முக்கியமான தீர்மானமாகும். இந்திய ஆட்சி முறையிலே இந்தத் தீர்மானத்திற்குப் பின்னாலே ஒரு பெரிய சரித்திரம் உருவாகி வருகிறது. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் விளக்கம் இந்தத் தீர்மானத்தில் அடங்கியிருக்கிறது. இதற்குப் பொதுவாக, நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டத்தில் இப்படி ஒரு நிலையைக்





கேட்க முடியுமா என்ற கேள்வி இங்கே எழுப்பப்பட்டது. இன்றைக்கு அரசியல் நிர்ணய சபையில் எடுத்த முடிவுகளை மாற்றி அமைக்க வேண்டும். இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை அன்றைக்கு இருந்த சூழ்நிலையில் இந்திய அரசியல் நிர்ணய சபை உருவாக்கியது. ஆனால், அதற்குப் பின்னாலே அரசியல் அமைப்புச் சட்டத்திலே இந்த நாட்டினுடைய அமைப்புக்கு ஏற்றவாறு, சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு மாநிலங்களுடைய உரிமைகளைப் பறிக்காத முறையிலே பல்வேறு மொழிகள் பேசுகின்ற சமுதாயத்திற்கு உரிமை வழங்குகிற முறையிலே அரசியல் அமைப்புச் சட்டம் மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்று ஒரு கொள்கை வலியுறுத்தப்பட்டு வருகிறது. ஆகவே, இந்தத் தீர்மானம் எந்த வகையிலும் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு முரணானது அல்ல என்பதை நான் தெளிவாகக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அரசியல் அமைப்புச் சட்டத்தில் மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கும், பாராளுமன்றத்திற்கும், சட்ட மன்றத்திற்கும் என்ன பொறுப்பு, என்ன அதிகாரம் இவைகள் தெளிவாக்கப்படவேண்டும் என்பதுதான் இந்தத் தீர்மானத்திலுள்ள உட்பொருளாகும். அண்மையில் ஏற்பட்ட சில நிகழ்ச்சிகள் காரணமாக இந்தக் கொள்கைக்கு ஒரு தனி முக்கியத்துவம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அந்த நிகழ்ச்சிகளை ஒரு பக்கம் வைத்துவிட்டு, இந்த நாட்டின் ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் இந்தத் தீர்மானத்தைச் சிந்தித்துப்பார்க்கவேண்டும். இதிலே உள்ள ஒரு முக்கியத்துவத்தை நாம் நன்றாகப் புரிந்துகொள்ளவேண்டும். இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் உருவாக்கப்பட்ட பிரச்சினை, அது கூட்டாட்சி அரசியல் அமைப்பா, பொலிடிகல் கான்ஸ்டிட்யூஷனா, பிரிந்து போகக்கூடிய உரிமை உள்ள கான்பெடரேட் கான்ஸ்டிட்யூஷனா அல்லது குவாஸி பெடரேஷனா அல்லது யூனிட்டரி கான்ஸ்டிட்யூஷனா என்று அரசியல் நிபுணர்களே பல்வேறு கருத்துக்களை இதுவரைக்கும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் முடிந்த முடிவை யாரும் சொல்லவில்லை. ஆகவே, இந்த வாதம் பொருத்தமாக இருக்கிறது என்று நாங்கள் கருதுகிறோம். இந்த நாட்டுக்குக் கூட்டாட்சித் தத்துவமுறைதான் வேண்டும் என்ற ஒரு கொள்கையை ஏற்றுக்கொண்டு, அது எப்படி அமைய வேண்டும் என்று ஆராய்ந்து ஒரு புதிய முடிவு எடுத்து, அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்துவதில் யாருக்கும் ஆட்சேபனை இருக்க முடியாது. அதற்கு வழி வகுக்கும் முறையில் இந்தத் தீர்மானம் பல்வேறு தரப்பினர் கருத்துக்களைத் தருவதற்கு வாய்ப்புத் தருகிறது என்று கருதுகிறேன்.

பாராளுமன்றம் இந்த நாட்டினுடைய ஆட்சிக்குப் பொறுப்பானதாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற மன்றம். மத்திய அமைச்சர் அவை அப்படித் தேர்ந்தெடுக்கப்படுகின்ற பாராளுமன்றஉறுப்பினர்களுக்குப் பொறுப்பு வாய்ந்த அமைச்சர் அவை. இதையும் அரசியல் அமைப்புச் சட்டத்தில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள், அதைப்போலவே, மாநிலத்தைப் பொறுத்த அளவுக்கு மாநில மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற பிரதிநிதிகள் இந்த மன்றத்திலே அமர்கிறார்கள். இந்த மன்றத்தினுடைய நம்பிக்கையைப் பெற்றவர்கள் இந்த அமைச்சரவையிலே அமர்ந்து இருக்கிறார்கள்.

ஆக, இந்த மாநிலத்தைப் பொறுத்த அளவுக்கு இந்தச் சட்ட மன்றம் தான் பொறுப்பு. இந்தச் சட்டமன்றத்திற்கு அரசியல் அமைப்புச் சட்டத்தில் என்னென்ன அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவோ, அதற்கு மேல் செல்லவில்லை. என் சட்டமன்றத்திலேயே குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று கேட்கப்பட்டது. அது அவர்களுடைய இலட்சியம், ஆகையால் சந்தித்தோம். அதில் கருத்து வேற்றுமை கிடையாது. ஆனால் இந்த மன்றத்திற்குக் கொடுக்கப்பட்ட, இந்த மாநிலத்திற்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்கள்வரை நாம்தான் சுப்ரீம். இதுதான் ஜனநாயகத்தில் நாங்கள் மாநில அரசின் சார்பில் விரும்புவது. அது சரியா, தவறா என்று விவாதிப்பதற்கு இந்தத் தீர்மானம் வழிவகுக்கிறது.

இந்தச் சட்ட மன்றத்திலே எதையும் பேசவேண்டும், இந்தச் சட்ட மன்றத்திலே அதற்கு விளக்கம் தரவேண்டும், இந்தச் சட்ட மன்றத்தில் நடைபெறுகின்ற விவாதங்களின் அடிப்படையில் இந்த மாநில மக்கள் இந்த மாநில அரசை எப்படித் தேர்ந்தெடுப்பது அல்லது எப்படி மாற்றுவது என்பதை முடிவுகட்டவேண்டும். இதுதான் ஜனநாயகத்தின் அம்சம் என்று நான் கருதுகிறேன். இந்த அடிப்படையில் இந்தத் தீர்மானம் வந்திருக்கிறது.

அதைப்போல, மத்திய அரசுக்கு என்று ஒதுக்கப்பட்ட ஒரு பொறுப்பு இருக்கிறது. ஆனால் மத்திய அரசின்கீழ் மாநில அரசு இருக்க வேண்டும் என்ற வாதத்தைநான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. கூட்டாட்சித்தத்துவத்தை ஒத்துக்கொள்கிறோம் என்று வாதம் ஒரு புறம் ஏற்றுக்கொள்ளப் பட்டது. அரசியல அமைப்புச் சட்டத்தில் அப்படிப்பட்ட ஒரு வாதம் ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால் மாநில அரசுக்கு என்று தனியாக ஒரு அதிகார பட்டியலைக் கொடுத்து, அந்த அதிகாரப் பட்டியலில் மத்திய அரசு குறுக்கிட முடியாது என்ற தத்துவம் அரசியல் அமைப்புச் சட்டத்தில் கொண்டு வந்திருக்கமுடியாது. மத்திய அரசுக்கும் அதைப்போல ஒரு பட்டியலைக் கொடுத்து நாம் அந்தப் பட்டியலில் கூறப்பட்ட விஷயங்களைப் பற்றி சட்டம் கொண்டுவர முடியாது என்று தெளிவிக்கப்பட்டிருக்க முடியாது. அதைப்போலத்தான் கன்கரென்டு லிஸ்டு என்ற பட்டியல் கொடுக்கப்பட்டு, இரண்டு அரசுகளும் சட்டத்தைக் கொண்டு வரலாம், அதிகாரத்தைச் செலுத்தலாம், என்று கொண்டு வந்திருக்க முடியாது. ஆகவே, அரசியல் அமைப்புச் சட்டத்தால் உருவாக்கப்பட்ட மாநில அரசுக்கு இப்படிப்பட்ட பொறுப்பு சாவரினிடி சில வகைகளில் கொடுக்கின்ற தத்துவத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள், என்று நாங்கள் கருதுகிறோம். இந்த முறையிலேதான் இந்தத் தீர்மானத்தை அரசின் சார்பில் நியாயம் என்று ஒத்துக்கொள்வதற்கு நான் முன்வந்திருக்கிறேன்.

இதிலே எழுப்பப்பட்டுள்ள பிரச்னை, அப்படியென்றால் மாநில அரசு ஒரு தவறு செய்யுமானால், அமைச்சர் தவறு செய்வாரானால், அதைக் கேட்கின்ற அதிகாரம் யாருக்கு உண்டு, மத்திய அரசுக்குத்தானே என்று கேட்கப் படுகிறது? திருப்பி நாங்கள் கேட்டோம், எங்களைப்போல மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற பாராளுமன்றம், அதனுடைய நம்பிக்கையைப் பெற்ற மத்திய அமைச்சரவை அல்லது அதன் தலைவர் பிரதம அமைச்சராக இருக்கிறார்கள், அவர்கள் தவறு செய்தால் அதைக் கண்டிப்பது யார், நாங்கள் கேட்போம் என்று சொன்னோம்.



இரண்டு பேர்களில் யாராவது ஒருவர் சுப்ரீம் என்று ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்று இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் பதில் சொன்னார்கள். ஆக அவர்களே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள், இந்திய பிரதம அமைச்சர் தலைவர் என்று ஏற்றுக்கொண்டார்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம் அதை ஒத்துக்கொள்ளத் தயாராக இல்லை. கூட்டாட்சித் தத்துவத்தில் நம்பிக்கை உள்ள எந்தக் கட்சியும் டெல்லியில் இருப்பவருக்கு இணங்க, அவர்கள் தலைமையை ஏற்று நடத்திச் செல்லக் கூடிய ஒரு தத்துவத்தை ஒத்துக்கொள்வதற்குத் தயாராக இல்லை. அதுதான் தி. மு. க-வின் கொள்கை என்று சொன்னேன்.

நம்முடைய மாண்புமிகு மதியழகன் அவர்கள் அதை ஏற்றுக் கொண்டார்கள் என்று ஆதாரம் காண்பித்தேன். இப்பொழுது இரண்டு முறையிலே இந்த அரசுக்கு அனுப்பப்பட்டது. ஒரு முறை வந்தபொழுது அறிஞர் அண்ணா அவர்கள் தானே முடிவு எடுக்காமல் அமைச்சர்அவையிலே வைக்கப்பட்டு முடிவெடுக்கப்பட்டது. அமைச்சரவையில் இதைப்பற்றிப் பேசினார்கள். மாநில அமைச்சர்கள், மாநில முதலமைச்சர்கள்பற்றி விசாரணைக்கு ஒரு தனி நீதி மன்றம் அமைக்கவேண்டும் என்ற ஒரு கருத்தைப் பற்றி பரிசீலிக்கும் பொழுது நாங்கள் அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ள வில்லை என்று அமைச்சரவையின் சார்பில் முடிவு எடுக்கப்பட்டது. அறிஞர் அண்ணா அவர்கள் அந்தக் கருத்தை மத்திய அமைச்சர் அவைக்கு அனுப்பி வைத்தார்கள். ஆகவே, அப்பொழுதே மாநில அரசின்மீது மத்திய அரசு குறுக்கிடுவதை நாங்கள் முழுமையாகக் கண்டிக்கிறோம் என்று எழுதியிருக்கிறோம் என்று தெளிவுபடுத்த ஆசைப்படுகிறேன்.

இன்னொரு முறை அப்பொழுது உள்துறை அமைச்சராக இருந்த சவான் அவர்கள் ஒரு கடிதம் எழுதியிருந்தார்கள். மாநில முதலமைச்சர்களுக்கென்று ஒரு கோட் ஆஃப் காண்டக்ட் வேண்டும், கோட் ஆஃப் காண்டக்டை நாங்கள் நிர்ணயித்திருக்கிறோம், அந்தக் கோட் ஆஃப் காண்டக்டின்படி மாநிலத்திலுள்ள முதல் அமைச்சர்களைக் கட்டுப்படுத்துவதற்கு மத்திய அமைச்சரவையில் உள்ள உள்துறை அமைச்சருக்கு அதிகாரம் உண்டு என்று கடிதத்தில் எழுதினார்கள். அந்தக் கடிதத்தை அறிஞர் அண்ணா அவர்கள் பரிசீலித்தார்கள். அன்றைய ஒரிஸா மாநிலத்து முதல் அமைச்சர் சுதந்திராக் கட்சித் தலைவர் அண்ணா அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார். அந்தத் தீர்மானத்தைப்பற்றி மத்திய அரசின் உள்துறை அமைச்சருக்கு ஒரிஸா மாநில முதல் அமைச்சர் அவர்கள் அரசாங்கத்தின் சார்பில் என்ன எழுதினார் என்பதற்கான நகலை அனுப்பியிருக்கிறார்கள். அந்த நகலில் சொல்கிறார்கள்:

"In order to develop proper democratic practices, the State Legislature should be the authority for enforcing observance of Code of Conduct by the Chief Minister in the same way as the Parliament is the authority for ensuring observance of the Code by the Prime Minister."

என்ற கருத்தை நாங்கள் வைத்திருக்கிறோம் என்று எங்களுக்கு அந்தக் கடிதத்தின் நகலை அனுப்பியிருக்கிறார்கள். அதற்குப் பின்னால் கடிதம் பரிசீலிக்கப்பட்டு, அறிஞர் அண்ணா அவர்கள் அந்தக் கடிதத்திற்குப் பதில் தயாரிக்கச் சொல்லி, அந்தப் பதிலும் இங்கே வாசிக்கப்பட்டது. அந்தப் பதிலிலுண்டான அடிப்படை மத்திய ஆட்சியும், மாநில ஆட்சியும் எப்படி கூட்டாட்சி முறையிலே நடைபெறும் என்பதை அவர்கள் விளக்கினார்கள். அந்தக் குறிப்பிலே எழுதப்பட்டிருக்கிறது.—

"Constitutionally the Central Ministers and the State Ministers are under the control of the Prime Minister and the Chief Minister respectively. But the Chief Minister is independent of the Prime Minister and the Home Minister. So he need not be under the control of either the Prime Minister or Home Minister. Hence we must suggest that in the amended rule the words 'Prime Minister and the Union Home Minister' in the case of Chief Ministers should be deleted."

முதலமைச்சர்மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு அதிகாரம் தரப்பட்ட ஒரு பிரிவை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை, கோட் ஆஃப் காண்டக்ட் அகற்றப்படவேண்டும் என்ற நிலையிலே அன்றைய முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துரைத்தார்கள். அறிஞர் அண்ணா அவர்களின் கைப்படவே இதற்கு ஒரு விளக்கம் தந்திருக்கிறார்கள்.

'Complications are likely to arise if the Prime Minister belonging to one particular party is asked to sit in judgement over the conduct of a Chief Minister belonging entirely to a different political party. This is stated as a general possibility and not at all as a reflection on any one's attitude. Hence the suggestion that the Prime Minister should be in charge of supervisory power over Chief Minister as far as code of conduct is concerned may land us in curious difficulties.'

என்று அவர்களுடைய குறிப்பிலே அவர்களுடைய கையினாலேயே எழுதியிருக்கிறார்கள். இது எவ்வளவு தவறான சூழ்நிலைக்கு இழுத்துச் செல்லும் என்பதை எழுதினார்கள். ஆகவே, மத்திய அரசும் பாராளுமன்றமும் நம்முடைய மாநிலச் சட்ட மன்றத்தின் மீது ஆதிக்கமோ அதிகாரமோ செலுத்துகின்ற முறை தவறு என்று நான் இந்த விவாதத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆக, சட்ட அமைப்பு என்ற முறையிலே இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தப்பட்டாகிலும் இந்த நிலையைத் தெளிவுபடுத்தி ஆகவேண்டும். நம்முடைய கூட்டாட்சி முறையிலே மாநில அரசுகள் பொறுப்பைத் தட்டிக் கேட்க அந்தந்த மாநிலச் சட்டமன்றத்திற்குத்தான் உரிமை உண்டு. தவறு நடக்குமானால் யார் தட்டிக் கேட்பது என்பதற்கு ஏற்கெனவே விளக்கம் தரப்பட்டிருக்கிறது. மத்திய அரசும் அதைப் பரிசீலித்தது. அதன் பிறகு



தான் ஒரு சட்டம் கொண்டுவரவேண்டுமென்று முடிவுசெய்து 1952-ம் ஆண்டு கமிஷன் ஆஃப் என்குயரி சட்டம் போட்டார்கள். அந்தச் சட்டத்தைப்பற்றிய விளக்கங்கள் எல்லாம் இங்கே விவாதத்தின் போது தரப்பட்டன. அந்தச் சட்டத்திலேயே மாநில அமைச்சர்களை விசாரிப்பதற்கு அதிகாரம் இருக்குமானால் புதிதாக ஒரு சட்டத்தைக் கொண்டுவர அவர்கள் எண்ணியிருக்க மாட்டார்கள். அதிகாரம் இல்லாததால்தான் புதிதாக ஒரு சட்டத்தைக் கொண்டுவர நினைக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மத்திய அரசானாலும் சரி, மாநில அரசுகள் ஆனாலும் சரி, அவர்கள்மீது சாட்டப்படுகின்ற குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு சுதந்திரமான ஒரு நீதி மன்றம் இருக்கவேண்டும். அரசாங்கத்திற்குக் கட்டுப்பட்ட யாரோ ஒருவர் விசாரிப்பது என்பது ஒரு சிறந்த பரிகாரமாக இருக்காது. அதற்காகத்தான் இந்தப் புதியச் சட்டத்தை நாங்கள் உருவாக்கிறோம். 1952-ம் ஆண்டு அப்படி ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டு, இப்படிப்பட்ட ஒரு விசாரணைநடத்தலாம் என்று இருந்தால் எதற்காக மாநில அரசுகளைக் கேட்கவேண்டும் 1952-ம் ஆண்டுசட்டத்திலே ஒருகாலும் இப்படிப்பட்ட எண்ணத்தோடு சொல்லியிருக்க மாட்டார்கள். அதற்காகத்தான் லோக்பால், லோக் அயூக் வேண்டுமென்று கருத்துத் தெரிவித்தார்கள். அந்த அடிப்படையிலே அவர்கள் சட்டம் அமைக்கவேண்டுமென்று கேட்டார்கள். 1952-ம் ஆண்டுச் சட்டத்திலேயே அதற்கு இடம் இருந்தால் மீண்டும் கருத்தறிவதற்கு அவசியமே ஏற்பட்டிருக்காது. அது பொருத்தமாகவும் இல்லை. சில இடங்களில் விசாரணைக் கமிஷன் நியமித்திருந்தால் அது தவறு. அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி எங்காவது சில இடங்களில் குழப்பம், தகராறு, வன்முறை, ஷூட்டிங் நடைபெற்றால் அவைகளை விசாரிப்பதற்காகத்தான் அந்தச் சட்டம் பயன்படுத்தப்பட்டது. அந்தச்சட்டப்படி நியமிக்கப்படும் விசாரணைக் கமிஷனுக்கு விசாரணை செய்வதற்கும், அறிக்கை அனுப்புவதற்கும் தான் அதிகாரம் இருக்கிறது. ஆனால் நடவடிக்கை எடுக்கமுடியாது. அந்த அதிகாரம் அவர்களுக்குக் கிடையாது. ஆனால்நாம் கொண்டுவந்திருக்கிற சட்டப்படி அந்த கமிஷன் சுதந்திரமாகச் செயல்படும். அது ஒரு சுதந்திரமான நீதிமன்றமாக இருக்கும். குற்றம் சாட்டப்பட்டவர்களை விசாரிப்பதோடு குற்றத்திற்கு உரிய தண்டனையையும் வழங்கும் அதிகாரம் அந்தக் கமிஷனுக்கு உண்டு. அந்தக் கமிஷன் சுதந்திரமாகச் செயல்பட்டால்தான் குற்றச்சாட்டுக்களைப்பற்றி முடிவு செய்வதற்கான ஒரு நிரந்தர பரிகாரம் ஏற்படும். அது அல்லாமல் மத்திய அரசு தலையீடு என்பது ஒரு நிரந்தரமான பரிகாரம் ஆகாது. மத்திய அரசு சொல்கின்ற சட்டப்படி நியமிக்கப்படும் கமிஷனுக்குத் தன்னிச்சையாக முடிவு செய்யும் அதிகாரம் இல்லாததால் அது ஒரு சுதந்திர நீதிமன்றமாக இயங்க முடியாது.

குற்றச்சாட்டுக்கள்பற்றி பிரமாதமாகச் சொன்னார்கள். குற்றச்சாட்டுகளைச் சொல்வதானால் அதற்கான ஆதாரங்களோடு சொல்லவேண்டும். அதையும் சொல்லவேண்டிய இடத்தில் சொல்லவேண்டும். இந்த மன்றத்திலே உள்ளவர்கள் செய்கிற தவறுகளை இந்த மன்றத்திலே சொல்லலாம். இந்த மன்றத்திலே அதைப்பற்றி விசாரிக்கலாம். அதுதான் பரிகாரமே தவிர வெளியிலேபோய் அவதூறு சொல்வதோ, புழுதி வாரித் தூற்றுவதோ அதற்குப் பரிகாரம் அல்ல. இந்த மன்றத்திலே குற்றச்சாட்டுகள்

சொல்லப்படுமானால் இந்த நாட்டு மக்களும் அதைப்பற்றி நன்றாக அறிந்து கொள்வார்கள். அதற்கான ஒரு வாய்ப்பு ஏற்படும்.

ஆகவேதான் இந்திய நாட்டிலே, உலக ஜனநாயக நாடுகளிலே இல்லாத அளவுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் இன்றைக்கு ஒரு வழிகாட்டியாக இந்த மன்றத்திலே மன்ற உறுப்பினர்கள் சொத்து விபரங்களை வைக்கவேண்டும்; நாட்டு மக்கள் அதைப் பரிசீலிக்க வேண்டும்; இந்த மன்றத்தினுடைய உறுப்பினர்கள் எல்லாம் அதிலே விவாதம் நடத்தவேண்டும்; விபரங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும்; அதுதான் ஜனநாயகம், நியாயம்; அதற்கு ஒரு வாய்ப்பை உருவாக்கவேண்டும் என்று சொல்லி, அதற்கு ஒரு தீர்மானத்தை உருவாக்கி அதன் அடிப்படையில் நம்முடைய சொத்துக் கணக்குகளை வைக்கிறோம். அதன் அடிப்படையிலே விவாதம் செய்யலாம்; குற்றச்சாட்டுகளைச் சொல்லலாம்; கொடுத்திருக்கின்ற சொத்துக் கணக்கு தவறு என்று சொல்லலாம் ஆதாரம் இருக்குமானால். அதை மக்கள் புரிந்துகொள்வார்கள். அதைச் செய்யாமல் மொத்தமாகக் குற்றச்சாட்டு என்று சொல்வதைத்தான் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

கேரளத்திலே இதைப் போன்றதொரு குற்றச்சாட்டைக் கொண்டுவர வேண்டுமென்று முயற்சி செய்தார்கள். அதற்கு அங்கே எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. கே.டி.கே. தங்கமணி அவர்கள் கட்சியினர் பொறுப்பில் உள்ள கேரளத்தில் அதை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று சொல்லிவிட்டார்கள். பாராளுமன்றத்திலே இந்தப் பிரச்சனை எழுப்பப்பட்டது. அப்போது திரு. மாரிமுத்து கட்சியைச் சேர்ந்தவர்கள் மறுத்திருக்கிறார்கள். வேறு மாநிலங்களிலும் மறுக்கப்பட்டிருக்கிறது. நாம் ஜனநாயகத்தை ஏற்றுள்ளோம். மற்றவர்களுக்கு வழிகாட்டுகிறோம். ஆனால் மற்றக் கட்சியினர் ஆட்சி செய்கின்ற மாநிலங்களிலும், பாராளுமன்றத்திலும் எதிர்க்கப்படுகிறது. ஆக, யார் பயப்படுகிறார்கள்? யார் பயந்து ஓடுகிறார்கள்? யார் ஜனநாயகத்தைச் சந்திக்கப் பயப்படுகிறார்கள் என்பதற்கு இதை ஒரு பதிலாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

ஏற்கெனவே பிரதம அமைச்சர், குடியரசுத் தலைவர் ஆகியோரிடத்திலே குற்றச்சாட்டுப் பட்டியலைக் கொடுத்தார்கள். அந்தப் பட்டியல் மாநில அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அது இந்த மன்றத்திலே வைக்கப்பட்டது. அதற்குப் பதிலும் வைக்கப்பட்டது. அதற்குப் பின்னாலே அந்தக் குற்றச்சாட்டைப் பற்றி விளக்கி, இது நியாயம்தான் என்று வாதிடும் ஒரு வாய்ப்பு கிடைக்கும் என்று துருவி துருவிப் பார்த்தோம். ஒருவர்கூட அதைப்பற்றி பேசமாட்டேன் என்கிறார்கள். அதற்குக் காரணம் என்ன? ஒரு குற்றச்சாட்டுக்கு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் விளக்கம் கொடுத்ததைப் போல, குற்றச்சாட்டை கொடுப்பதற்கு முன்னாலே அதை ஆதரித்து எழுதினார்கள். அதாவது 'மெட்ராஸ் சிட்டி டெனண்ட்ஸ் ப்ரொட்டக்ஷன் ஆக்ட்" இந்த மன்றத்திலே கொண்டுவரவேண்டுமென்று கையெழுத்துப் போட்டுக் கொடுத்தார்கள். நாங்களும் சட்டத்தைக் கொண்டு வந்தோம். சில உறுப்பினர்கள் அதிதீவிரமாக அதை



ஆதரித்துப் பேசினார்கள். விஷயம் முடிந்துவிட்டது. அதற்குப் பின்னாலே அதையே ஊழல் குற்றச்சாட்டு என்று சொல்லி, டெல்லியிலே கொண்டு போய் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் குற்றச்சாட்டு கொடுக்கப்பட்டு, அது இந்த மன்றத்திலே வைக்கப்பட்டு, அதைப்பற்றி நாடு முழுவதும் பேசப்பட்டது. குற்றச்சாட்டிலே, அவர்கள் சொந்தக்காரர் ஒருவருக்கு குத்தகை நிலத்தை சொந்தமாக்கவேண்டுமென்று இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொல்லி அந்தச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று சொன்ன கே.டி.கே. தங்கமணி அவர்கள் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள். இதைத்தான் திரு. லத்தீப் அவர்கள் பொறுப்பற்ற குற்றச்சாட்டு என்று கூறுகின்றார் என்று நான் கருதுகின்றேன். அது சரி என்றால் நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். இதைப்போன்ற பல குற்றச்சாட்டுகளைத் தெரிவித்திருக்கிறார்கள். இது எந்த அளவுக்கு நியாயமான குற்றச்சாட்டு என்பதை நாட்டு மக்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்று இந்த மன்றத்தின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

நாங்கள் கொடுத்த பதிலுக்கு ஏதோ பதில் கொடுத்ததாக நம்முடைய முன்னாள் தலைவர் திரு. மதியழகன் அவர்கள் சொன்னார்கள். நான் இரண்டு, மூன்று முறை கேட்டேன். எப்படியாவது அவர்களுடைய வாயாலே இந்த மன்றத்தில் கேட்க வேண்டும், அதற்கு பதில் சொல்ல வேண்டும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவர்கள் சொல்லவில்லை. இப்படிப்பட்ட அவதூறான குற்றச்சாட்டுகளை இங்கே சொல்லமாட்டேன் என்கிறார்கள்.

திரு. கே.டி.கே. தங்கமணி: சார், அமைச்சரவர்கள் அவதூறான குற்றச்சாட்டுக்கள் என்று சொன்னார்கள். அந்தக் குற்றச்சாட்டுக்கள் முழுவதும் அவதூறானவை என்று சொல்கிறார்களா? ஒரு குறிப்பிட்ட 4, 5 விஷயங்களை விளக்க நான் தயாராக இருக்கிறேன்; நிரூபிக்கவும் தயாராக இருக்கிறேன். என்குயரி கமிஷனை வையுங்கள். அதிலே நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நிச்சயமாக அவ்வளவுக் குற்றச்சாட்டுகளும் அவதூறானவை; ஆதாரமற்றவை (பலத்த கை தட்டல்) என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: கை தட்டலுக்காக அப்படிச் சொல்லிவிட்டார்கள். விமானம் மூலம் பூச்சி மருந்து தெளித்த வகையில் 15 லட்சம் போச்சு என்று சொன்னது ஆதாரமற்றக் குற்றச்சாட்டா? சீனி விநியோகத்தில் ஒரு கோடி ரூபாய் போச்சு என்று சொன்னது ஆதாரமற்ற குற்றச்சாட்டா? அல்லது சமயநல்லூர் அனல் மின்சார நிலையத்தை —இரண்டு கோடி ரூபாய்க்குப் பெறுமானமுள்ளதை 59 லட்சத்திற்கு விற்றிருக்கிறீர்கள் என்று சொன்னது ஆதாரமற்றக் குற்றச்சாட்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: குற்றச்சாட்டைக் கொடுத்தீர்கள். அதற்குப் பதில் சொன்னோம். அதைக் கேட்பதற்கு தைரியம் இல்லாமல் வெளியே போய்விட்டார்கள். இதேக் குற்றச்சாட்டுக்குக்கூட இந்த

மன்றத்திலே பதில் சொல்லப்பட்டிருக்கிறது. அன்றைக்கு அதைக் கேட்காமல் வெளியே போனது நாங்கள் அல்ல; திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும் மற்றவர்களும்தான்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சமயநல்லூர் மின்நிலையத்தை நாங்கள் விற்கவில்லை. டெண்டர் கோரப்பட்டது. ரூ. 59 லட்சத்திற்கும் குறைந்த டெண்டர் கேட்டிருந்த ஒருவருக்கு அதைக் கொடுக்கவேண்டும் என்று சொன்னதை நாங்கள் கேட்கவில்லை என்று கோபித்துக்கொண்டவர் அண்ணா தி.மு.க. கட்சித் தலைவர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: குஜராத் மாநிலத்தில் ஒண்ணே முக்கால் லட்சம் புக் வால்யு உள்ள மின் நிலையத்தை இரண்டே முக்கால் லட்சத்திற்குக் கொடுத்ததையே ஊழல் என்று சொல்லி, அதற்காக இப்போது தனி விசாரணைக் கமிஷன் போட்டிருக்கிறார்களே, இங்கே ரூ. 2 கோடிக்கு மேல் பெறுமானமுள்ள ஒரு நிலையத்தை ரூ. 55 லட்சம் புக் வால்யு என்று போட்டு 59 லட்சத்திற்கு விற்றிருக்கிறார்களே, இது சரியானதா? இதற்கு மட்டும் ஒரு விசாரணைக் கமிஷன் போடத் தயாராய் இருக்கிறார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ரூ. 59 லட்சத்திற்கு விற்றிருப்பதாகச் சொல்கிறார்கள். விற்கவில்லை. முன்பே சொன்னேன். டெண்டர்கள் கோரப்பட்டன. அதிகபட்சமாக வந்தது 59 லட்சம்தான். இதற்குக் குறைவாகக் கேட்டவருக்குத்தான் கொடுக்கவேண்டுமென்று சொன்னவர் திரு எம். ஜி. ஆர்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, ஒரு அரசுக்குச் சொந்தமான பொருள்களை விற்கும்போது பர்ச்சேஸ் அண்டு சேல்ஸ் என்ற அடிப்படையில் நேரடியாக விற்பனை செய்வது ஒரு முறை. பகிரங்கமாக நாடு முழுவதிலும் உள்ளவர்களுக்கு விற்கப் போகிறோம் என்று தெரிவித்து, டெண்டர் கோரி அதிகமான தொகைக்குக் கேட்டுள்ள டெண்டரை ஏற்றுக் கொள்வது ஒரு முறை. நான் பின்னாலே சொன்ன முறையைத்தான் இங்கே பயன்படுத்தியிருக்கிறார்கள். மத்திய அரசுக்குச் சொந்தமான நிறுவனத்திற்கே கொடுக்கிறோம் என்றோம். அவர்கள் வேண்டாம் என்று விட்டார்கள். பின்னர் பஞ்சாப் மாநில மின்சார வாரியத்திற்கே தருவதாகச் சொன்னோம். முதலில் அவர்கள் எடுத்துக் கொள்கிறோம் என்றார்கள். பின்னர் வேண்டாம் என்று சொல்லி விட்டார்கள். அதற்குப் பின்னர்தான் பகிரங்கமாக உலகத்தில் உள்ளவர்கள் யார் வேண்டுமானாலும் கேட்கட்டும் என்று விளம்பரம் செய்து டெண்டர் கோரினோம். யார் அதிகமாக டெண்டர் கோரியிருக்கிறாரோ அவருக்குத்தான் கொடுத்தும் இருக்கிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: குஜராத் அரசு ஒரு விசாரணைக் கமிஷனைப் போட்டதுபோல, அதில்தான் தவறு ஒன்றுமே இல்லை என்கிறீர்களே—இங்கேயும் ஒரு குழுவை அமைத்து, அதைப்பற்றி விசாரிக்கத் தயாரா? தமிழக அரசு இந்த ஒரு விஷயத்திலாவது நீதிபதியைப் போட்டோ அல்லது தனிப்பட்ட ஒருவரைப் போட்டோ, அல்லது சர்வகட்சிப் பிரதிநிதிகளைப் போட்டோ இதை விசாரணைக்கு விடத் தயாரா?



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நாங்கள் இந்த அவையில் இயற்றியிருக்கிற சட்டம் மத்திய அரசின் ஒப்புதலுக்குப் போயிருக்கிறது. அது வரட்டும். வந்தவுடன் இதே குற்றச்சாட்டைப் பகிரங்கமாக வெளியில் சொன்னால் உடனே ஒரு விசாரணைக் குழுவைப் போட்டு விசாரணை செய்யத் தயார். நாங்கள் குற்றவாளியாக இருந்தால் 7 வருஷம் தண்டனைக்குத் தயார். நீங்கள் அவதூறாகச் சொல்லியிருந்தால் 3 வருஷ தண்டனையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இது ஏற்கனவே எழுப்பப்பட்ட விஷயம். ஏற்கெனவே அனுப்பப்பட்டிருக்கிற சட்டத்திற்கு அசெண்ட் வந்துதான் ஆகவேண்டுமென்கிற தேவையில்லை. இதற்கு என்று தனியாகவே விசாரணைக் கமிஷனைப் போடலாம். தனியாக வேண்டுமானால் எப்படி அதிகாரம் இருக்கிறது என்று சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சமயநல்லூரைப்பற்றி என்ன விசாரிக்க வேண்டும்? இதுவரை யாரும் சொல்லவில்லை. பொதுவாக அவதூறான குற்றச்சாட்டு. இதே அவையில் அதைப்பற்றி விவரமாகப் பலமுறை சொல்லப்பட்டிருக்கிறது. கமிஷன் வேண்டும், என்குயரி வேண்டுமென்றால்—அப்படியே ஒரு விசாரணை என்று போட்டால் முடிவே ஒன்றும் இருக்காது. முடிவு வேண்டுமானால்—நாங்கள் சொல்வதிலே நம்பிக்கையில்லையா? வழியிருக்கிறது. இன்றைக்குச் சட்டமன்றத்தில் சொல்வதை வெளியில் சென்று—சமயநல்லூர் மின்சார நிலையத்தின் சம்பந்தமாக அமைச்சர்கள் இன்ன ஊழலைச் செய்தார்கள் என்று சொல்லட்டும். சொன்ன மறுகணமே அவர்கள்மீது வழக்குத் தொடரப்படும். விசாரணை செய்து தீர்ப்பு வழங்கவும் கோர்ட் தயாராய் இருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: வெளியில் பேசுங்கள். பிரிவு 500இன் படி கேஸ்களைச் சந்தியுங்கள் என்று சொல்கிற வாதம் சிறுபிள்ளைக்கும் தெரியும். இது பொறுப்பான சட்ட மன்றம். அரசாங்கத்தின் கொள்கைக்கே சவால்விடக்கூடிய விஷயம் இது. இங்கேயே சொல்கிறோம். இதைத் தனிப்பட்ட இரண்டு பேர்களைப் பொறுத்த அவதூறு பிரச்சினையாகக் குறைத்துவிட முடியுமா? There may be a law and order situation. Policy cannot submit itself to law and order.......... இந்த அவையிலே அரசாங்கத்தின்பேரில், குறிப்பிட்ட அமைச்சரின் பேரில் திட்டவட்டமாகக் குற்றச்சாட்டைச் சொல்லும்போது அந்தக் குற்றச்சாட்டை அரசியல் ரீதியில் சந்திக்க வேண்டுமே தவிர, வெளியில் பேசுவது, அவதூறு பண்ணிவிட்டார்கள் என்று சொல்லி 500-வது பிரிவின் கீழ்வழக்குப் போடுவது—என் பேரிலேயே போட்டிருக்கிறார்கள்—மதுரையில் ஒருவரைப்பற்றி அவரைக் கைதுசெய்யவேண்டும் என்று நான் சொன்னதாக ஒரு வழக்கும் இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: வெளியில் பேசுங்கள் இன்ன தவறு செய்திருக்கிறோம் என்று. கோர்ட்டிலே வந்து அப்படிப் பேசவில்லை என்று தப்பித்துக்கொள்ள முயற்சிக்காதீர்கள். இன்றைக்கு நீதிமன்றமே இதில் என்ன ஊழல் என்பதைப்பற்றி தீர்ப்பு வழங்கட்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இங்கே சொன்ன விஷயங்களைவிட அதிகமாக வெளியிலும் பேசியிருக்கிறேன். விமானம் மூலமாக பூச்சி மருந்து தெளித்தது, சீனி விற்பனை, இந்த சமயநல்லூர் விவகாரம் ஆகியவற்றைப்பற்றி எல்லாம் பேசியிருக்கிறேன். இதுவரை என்பேரில் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. இந்த மூன்று விஷயங்களைப் பற்றியும் நானும் சந்திக்கத் தயார். 'Truth is also a defence' என்பதாக உண்மையையே அஸ்திவாரமாக வைத்துத்தான் நாங்கள் கிளப்புகிறோம். இங்கே சொல்கிற விஷயங்களை வெளியிலும் சொல்லத் தயார். குற்றச்சாட்டுகளை வைத்து விவாதிக்கவேண்டுமென்று இந்தத் தீர்மானம் வந்தால் வேறு விஷயம். முதலாவது குற்றச்சாட்டுக்கு பதில் வைத்தீர்களே, இதற்கும் பதில் வையுங்கள் என்றுதான் அவர் சொன்னார். அது வேறு விஷயம். நீங்கள் பதிலை வைத்தாலும், அந்த பதிலை நாங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதில்லை. எங்கள் குற்றச்சாட்டுகள் உங்களுக்கு குற்றச்சாட்டுகளாகவே படாமல் இருக்கலாம். ஆகவேதான் மூன்றாவது நபருடைய விசாரணைக்கு இதை விடுங்கள் என்கிறோமே தவிர இதில் ஒன்றும் மர்மம் இல்லை.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்போதாவது அரசியல் ரீதியாகச் சந்திக்கவேண்டுமென்று சொன்னார்களே—அரசியல் ரீதியாகத்தான் விவாதம் நடந்துகொண்டிருக்கிறது. சமயநல்லூர் மின்நிலையம் இரண்டு கோடி, மூன்று கோடி பெறும் என்றார்கள். திரு தங்கமணி அவர்கள் இரண்டு கோடிக்கு டெண்டர் கேட்டார்களா? யார் 59 லட்சத்திற்குமேல் கேட்டார்கள்? 60 லட்சத்திற்கு யாராவது கேட்டு நாங்கள் 59 லட்சம் கேட்டவருக்குக் கொடுத்தோமா? நிரூபிப்பதற்குத் தங்கமணி தயாரா?

திரு கே.டி. கே. தங்கமணி: விற்பதற்கே உங்களுக்கு அதிகாரம் இல்லை என்று சொல்கிறேன். இந்த மின்சார நிலையம் நட்டத்தில் ஓடுவதால் இதை மூடவேண்டும் என்று சொன்னார்களே தவிர, எந்தக் குழுவும் அதை விற்கவேண்டுமென்று சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதத்திற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, உங்களைப் பற்றிச் சொன்னால் மட்டும் நீங்கள் விளக்கம் சொல்லலாமே தவிர தொடர்ந்து குறுக்கிட்டு இரண்டு நிமிஷம், ஐந்து நிமிஷம் பேசுகின்ற முறை சரியல்ல என்று திரு தங்கமணி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நமது விதிமுறைகளை ஒட்டி இந்த அவையை நடத்திச் செல்ல உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன்: சார், ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். தீர்மானத்தின்மீது பேசுகின்றபோது குற்றச்சாட்டுகளையே மாறிமாறிப் பேசிக்கொண்டிருப்பது நல்ல முறைதானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்தக் குற்றச்சாட்டுகள் பற்றித்தான் நீண்டநேரம் விவாதம் நடந்தது. சமயநல்லூராக இருந்தாலும் வேறு எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் இதில் தவறு இல்லை என்பது தங்கள் வாதம். வேண்டுமென்றால் இன்னார் இன்னபடி தவறு செய்



திருக்கிறார்கள் என்று வெளியில் பேசட்டும். பொதுவாக இப்படி பேசப்படுகிறது, சொல்லப்படுகிறது என்று சொல்வதில் பயன் இல்லை. குறிப்பிட்டுச் சொன்னால் நாங்கள் நீதிமன்றத்துக்குச் செல்லும்போது, "நான் அவரையா சொன்னேன்? அவதூறு சாட்டினேன்" என்பதாக தப்பித்துக்கொள்கிற முறையை எதிர்க்கட்சித் தலைவர்கள் பின்பற்றி வருகிறார்கள். அது தவறு என்பதைத்தான் நான் இங்கே எடுத்துக் காட்ட ஆசைப்படுகிறேன்.

புதிய குற்றச்சாட்டு, புதிய பதில்கள் என்று சொன்னார்கள். பதில்களை மட்டும் கொடுத்திருக்கிறார்கள் நம்முடை அ.தி.மு.க. தலைவர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள். அவர்கள் கொடுத்த பதில் எப்படிப்பட்ட பதில் என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அதிலே தெளிவாக உள்ள குற்றச்சாட்டுகளைப் பற்றி மட்டும் சொல்கிறேன். பிந் பகல் 1-00

அதிலே வருகின்ற குற்றச்சாட்டுகளிலே ஒன்று, மவுண்ட் ரோட்டிலே உள்ள அண்ணா தியேட்டர். அதற்கு பதிலுக்குப் பதில்—இங்கே மன்றத்திலே வைக்கவேண்டுமென்று சொல்கிறார்களே—எதிர்காலத்திலே இந்த அண்ணா தியேட்டரை முதலமைச்சருடைய குடும்பக்காரர்கள் வாங்கப் போவதில்லையென்று ஏன் சொல்லவில்லை, என்பது. இதுதான் பதிலுக்குப் பதில். வாதமில்லாமல் புரிந்துகொள்ளக்கூடிய குற்றச்சாட்டுகளைச் சொல்கிறேன்.

கைலாசக் கவுண்டருக்குச் சொந்தமான சாராயத் தொழிற்சாலையில் முதலமைச்சருடைய மருமகனான மாறனுடைய மைத்துனரின் மகனுக்கு ஒரு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது, ஏர்-கண்டிஷன், பங்களா எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது மற்றொரு குற்றச்சாட்டு. முதலமைச்சருடைய மருமகனான மாறனுடைய மைத்துனரின் மகன்களுக்கு வயது 5, 3. இதற்கு என்ன பதில் தெரியுமா, எங்களுடைய முன்னாள் தலைவர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் கொடுத்திருப்பது, முதலமைச்சருடைய மருமகனான மாறனுடைய மைத்துனரின் மகனுக்கு இத்தனை வயது என்று கைலாச கவுண்டருக்குத் தெரிந்திருப்பது ஒரு விளையாட்டான செயலாகும்.

இன்னொரு குற்றச்சாட்டு திருவாரூரிலே, தெற்கு வீதியிலே ஒரு வீடு இருக்கிறது. அந்த வீடு முதலமைச்சருக்குச் சொந்தமான, பழமையான வீடு. அந்தப் பழமையான வீடு, பெரும் பொருள் சேர்த்து, பங்களாவாகக் கட்டப்பட்டது. அந்தப் பணம் எப்படி வந்தது? இது முதலமைச்சருக்குச் சொந்தமான கள்ளப்பணம், ஊழல் பணம். இது அவர்களுடைய குற்றச்சாட்டு.

எங்களுடைய பதில், அந்த வீட்டுப் படத்தையே எடுத்து காண்பித்து இந்த மன்றத்திலே காண்பித்து, அந்த வீடு 1938-ம் ஆண்டு வாங்கப்பட்டபொழுது எந்த நிலையிலே இருந்ததோ, அந்தக் குடிசை எப்படி இருந்ததோ, அதே குடிசையாகத்தான் இப்பொழுது இருக்கிறது என்று படத்தைப் பிடித்துக் காண்பித்தோம்.

அதற்குப் பதில்—பதிலுக்குப் பதில். இந்தப் படத்தை மட்டும் எடுத்துப் போட்டாரே, அவருடைய சொந்தக்காரர்களுடைய வீடுகள், அவர்களுடைய வீடுகள், கட்சிக்காரர்களுடைய வீடுகள், இவற்றினுடைய படத்தையெல்லாம் ஏன் பிடித்துக் காட்டவில்லை ? இது பதிலுக்குப் பதில். இதற்கு என்ன விசாரணை ? இதை யார் விசாரிப்பது ? இதை விசாரிப்பதற்கு டெல்லியிலிருந்து எந்த நீதிபதி வரவேண்டும் ? எங்களுக்குப் புரியவில்லை.

இப்பொழுது புதிதாகக் குற்றச்சாட்டு. இந்தக் குற்றச்சாட்டுக்குப் பதில் சொல்லவேண்டுமென்றுதான் மாண்புமிகு மதியழகன் அவர்கள் கேட்டுக் கொண்டிருந்தார்கள். எப்படியாவது அவர்கள் குற்றச்சாட்டைச் சொல்ல வேண்டும், நாங்கள் அதற்குப் பதில் சொல்லவேண்டுமென்று, அவர்களைச் சொல்லும்படி கேட்டேன். அவர்கள் சொல்லமாட்டேன் என்று சொல்லி விட்டார்கள். நான் இதை சொல்லியதற்குக் காரணம் இந்தக் குற்றச் சாட்டை திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் சொல்லவில்லை ; திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் சொல்லயிருந்தார்கள். திரு. மதியழகன் அவர்களே தீர்ப்பு வழங்குவதற்கு ஒரு வாய்ப்பு இருக்கும் என்பதாலேயே அவர்களுடைய வாயாலேயே அந்தக் குற்றச்சாட்டைக் கேட்கவேண்டுமென்று நான் விரும்பினேன். அவற்றிலே உருப்படியானக் குற்றச்சாட்டைப்பற்றி மட்டும் சொல்கிறேன்.

அதில் முதல் குற்றச்சாட்டு. மாண்புமிகு கல்வி அமைச்சர் நாவலர் அவர்களுக்கு ஒரு மைத்துனர். அவருடைய பெயர் குழந்தைவேலு. அவர் இலட்சக்கணக்கான ரூபாய்களுக்கு 2 பங்களாக்களைச் சொந்தமாக வாங்கியிருக்கிறார். இதிலே என்ன குற்றச்சாட்டு ? குற்றச்சாட்டிலே இல்லை. வீடு வாங்குவது குற்றமா ? விளக்கமே இல்லை. இதை எப்படி விசாரிப்பது ? இதைத்தான் நீங்கள் சிந்திக்கவேண்டும்.

நாவலர் அவர்களுடைய மைத்துனர் திரு. குழந்தைவேலு அவர்கள் சொல்வது. குழந்தைவேலு, நாவலருடைய குடும்பத்திற்குச் சம்பந்தம் இல்லாத வேறு ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர்களுக்கு இலட்சக் கணக்கான ரூபாய்களுக்கு சொத்தும் இருக்கிறது. அந்தக் குழந்தைவேலு எந்த வீட்டையும் வாங்கவே இல்லை. இதற்கு யார் நீதி விசாரணை செய்வது ? டெல்லியிலிருந்தா வரவேண்டும் நீதிபதி ?

இந்த வீடு எப்படி வாங்கப்பட்டது ? அந்தக் குழந்தைவேலுவுக்கு பிரிந்துபோன சகோதரர், 'டிவைடட் பிரதர்', பிரிந்து வாழக்கூடிய ஒரு தம்பி இருக்கிறார். அவர் அரசாங்கத்திலே ஒரு இலாகாவிலே பேராசிரியராக இருக்கிறார். அவருக்கு தனிச் சொத்துக்கள், தனி வருமானம் உண்டு. அவர் ஒரே ஒரு வீடு, ரூ. 1 இலட்சத்துக்கு வாங்க முயற்சி செய்திருக் கிறார். அதற்காக ரூ. 5,000-க்கு முன் பணம் கொடுத்திருக்கிறார். அதற்கான பத்திரமே எங்கள் கையிலே இருக்கிறது. இதிலே என்ன குற்றச்சாட்டு ? இதை எந்த நீதிபதி விசாரிக்கவேண்டும் ? இதை விசாரிக்கவேண்டுமா வென்பதை மாண்புமிகு மதியழகன் அவர்களிடத்திலே தெரிந்துகொள்ள வேண்டுமென்றுதான் நாங்கள் விரும்புகிறோம்.



திரு. மதியழகன் அவர்களுக்கு மிக நெருங்கிய நண்பர் குழந்தைவேலு. அவருக்கு சொத்து இல்லையா ? வீடு வாங்க வசதி இல்லாதவரா ? இலாயக்கற்றவரா ? வருமானம் கிடையாதா ? அவர்களோடு இவர் இரத்தத்தோடு இரத்தம் கலந்து பழகவில்லையா ? அவருக்குத் தெரியாதா ? மாண்புமிகு மதியழகன் அவர்கள் சொல்லட்டும், இது எங்களுடைய கேள்வியாகும்.

அடுத்த குற்றச்சாட்டு என்னைப்பற்றி ; சட்ட அமைச்சருக்கு சித்தாப்ப, பெரியப்பா இருக்கிறார்கள். அதுவே மாபெரும் குற்றமாக இருக்கிறது (சிரிப்பு). அந்த சித்தப்பா, பெரியப்பா பெயர்களில் ஏராளமான சொத்து வாங்கப்பட்டிருக்கிறது, அது இலட்சக்கணக்கான ரூபாய் பெறும். இதிலே என்ன குற்றச்சாட்டு ? அதுவும் விளக்கப்படவில்லை. மந்திரிக்குச் சொந்தக்காரர்கள் சொத்து வாங்கியிருக்கிறார்கள். இதிலே என்ன குற்றச் சாட்டு ? நீதிபதி என்ன விசாரிக்கவேண்டும் ? டெல்லியிலிருந்து வந்து என்ன விசாரிக்கவேண்டும் ? நாங்களே ஊகிப்பது என்னவென்றால் இந்தச் சொத்துக்கள் மந்திரி மாதவனுக்குச் சொந்தமாக இருக்கலாம் என்று அவர்கள் சொல்கிறார்கள் என்பது. இவ்வாறு நாங்களே ஊகித்துப் பதில் சொல்கிறோமே தவிர, குற்றச்சாட்டிலே அது இல்லை, இதுதான் வேடிக்கையாக இருக்கிறது. ஆகவே இதை எந்த நீதிபதி விசாரணை செய்யவேண்டும் ? என்ன விசாரணை செய்யவேண்டும் ?

என்னுடைய தகப்பனாரோடு கூடப்பிறந்தவர்களைப்பற்றி திரு. கல்யாண சுந்தரத்திற்குத் தெரியாதா ? நம்முடைய மாஜி தலைவர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களுக்குத் தெரியாதா ? மாண்புமிகு மதியழக னுக்குத் தெரியாதா ? அவர்களுக்கு சொத்து இல்லையா ? வருமானம் இல்லையா ? அந்த சொத்து வாங்கக்கூடிய பொறுப்பு, சக்தி, பொருளாதார வசதி, அவர்களுக்கு இல்லையென்று வாதாடுகிறார்களா ? அவர்கள் எந்தப் பெயரைக் குறிப்பிட்டிருக்கிறார்களோ, அந்த உறுப்பினர் மாண்புமிகு மதியழகன் அவர்களுக்கு இந்த நாட்டிலும் பழக்கம் உள்ளவர், வெளிநாட்டிலும் பழக்கம் உள்ளவர். வெளிநாட்டிலே அவர்களுடைய சொத்துக்களை அறிந்தவர் இவர். அவருடைய வரவேற்பைப் பெற்று சொத்துக்களை அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு பெற்றவர் மாண்புமிகு மதியழகன் அவர்கள். ஆகவே, அவர்கள் சொத்து வாங்கு வதிலே என்ன தவறு ? பினாமி டிரான்சாக்‌ஷன் இருக்கிறது என்று சொல்கிறார்களா ?

அவர்கள் குடும்பமெல்லாம் 1955-லேயே பிரிந்த குடும்பம். அவர் களுடைய சொத்து என்ன, என்னுடைய சொத்து என்ன, இவர்களுக்குத் தெரியாதா ? அவர்களுடைய வீட்டிற்கும் வந்திருக்கிறார் மாண்புமிகு மதியழகன் அவர்கள். திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களும் வந்திருக்கிறார். என் வீட்டிற்கும் வந்திருக்கிறார்கள். எங்கள் சொத்தையும் பார்த்திருக்கிறார்கள். இந்த நாட்டிலும் எங்கள் சொத்தை பார்த்திருக் கிறார்கள் ; வெளிநாட்டிலும் எங்கள் சொத்துக்களைப் பார்த்திருக்கிறார்கள். இந்த சொத்துக்களிலே எவை எவை எங்களுக்குச் சொந்தம், அவர் களுக்குச் சொந்தம் என்பதெல்லாம் கொடுத்தவர்களுக்குத் தெரியாதா ? இப்படி இருக்கும்போது என்ன விசாரணை வேண்டும் ? இதுதான் எங்களுடைய பதில். இதற்கு டெல்லியிலிருந்தா நீதிபதி வரவேண்டும் ?

அடுத்த குற்றச்சாட்டு, இராமநாதபுரம் மாவட்டத்தில் 13 தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த 13 தொழிற்சாலைகளிலும் மந்திரி மாதவனுக்கு, அவருடைய சொந்தக்காரர்களுக்கு, அவருடைய கட்சிக்காரர்களுக்கு, என்ன சொந்தம் என்று விசாரிக்க வேண்டும். இது என்ன குற்றச்சாட்டு? அந்த 13 தொழிற்சாலைகள் எங்கே இருக்கின்றன என்று கண்டுபிடிக்கவேண்டும். அதுவே கஷ்டமாக இருக்கிறது. இராமநாதபுரத்திலே, அந்த 13 தொழிற்சாலைகள் எங்கே இருக்கின்றன என்று கண்டுபிடிக்கவேண்டும். அவை எங்கே இருப்பதாகக் கண்டுபிடித்துவிட்டால், அவை மந்திரி மாதவனுக்கு மறைமுகமாகச் சொந்தமாக இருக்கவேண்டுமென்று அவர்கள் கூறுவதாகத்தான் நாங்கள் ஊகிக்கவேண்டும். அவர்கள் கூறவில்லை, நாங்களாக ஊகிக்க வேண்டும். எந்த நீதிபதி இராமநாதபுரம் மாவட்டம் முழுவதையும் சுற்றிச் சுற்றி வருவார்? எந்தத் தொழிற்சாலையை அவர் பார்ப்பது? எந்தத் தொழிற்சாலையிலாவது நுழைந்து, இது மாதவனுக்குச் சொந்தம் என்றால், உதைத்து விடமாட்டான்? ஆக இப்படி ஒரு அப்பட்டமான குற்றச்சாட்டைச் சொல்லிவிட்டு விசாரணை செய்யவேண்டுமென்று கேட்பது எப்படி நியாயமானது? இதற்கு டெல்லியிலிருந்து நீதிபதி வர வேண்டும்?

அடுத்த குற்றச்சாட்டு, முதலமைச்சருடைய சொந்தக்காரரைப் பற்றியது. சொர்ணம் என்பவர், ஒரு வீட்டை வாங்கியிருக்கிறார். இது ஒரு மாபெரும் குற்றச்சாட்டு. அவருடைய சொந்தக்காரர் வீடு வாங்கியது ஒரு மாபெரும் குற்றச்சாட்டு. ஆகவே, இப்பொழுது மந்திரிகள்மீது குற்றச்சாட்டு சொல்வது போயிற்று; மந்திரிகளுக்குச் சொந்தக்காரர்கள், உறவினர்கள், உலகத்திலே எங்கே இருந்தாலும் அவர்கள் வீடு வாங்கியிருந்தால் அது ஊழல் (சிரிப்பு). இது நம்முடைய நாட்டிலேதான் இருக்கிறது. நம்முடைய நாட்டு ஜனநாயகத்திலேதான் இப்படி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எந்த சொர்ணம் வீடு வாங்கியிருக்கிறார்? எந்த சொர்ணத்தைப்பற்றி? மாண்புமிகு மதியழகன் அவர்களைவிட அதிகமாக மனு கொடுப்பதற்கு ஒத்தாசை செய்த எங்கள் முன்னாள் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களோடு தொடர்புகொண்டிருப்பவர். அவர் வீடு வாங்கியிருக்கிறார். அந்த வீட்டிற்கு யார் சொந்தம்? அவருடைய நெருங்கிய—எங்களுடைய முன்னாள் தலைவர் எம். ஜி. இராமச்சந்திரனை விட அதிகமாக வேறு யாரும் விளக்கம் கூறமுடியாது. ஆகவே, அவர்தான் இதை விசாரிக்கவேண்டும்.

திரு. சொர்ணம் கதை வசனம் எழுதக்கூடியவர். அவர் பக்கத்திலேயே இருந்து பாடுபடக்கூடியவர். அவர் கதை வசனம் எழுதிய எத்தனையோ படங்களுக்கு, எம்.ஜி.ஆர். பணம் கொடுத்திருக்கிறார். அந்தப் பணத்தைக் கொடுத்து வீடு வாங்கியிருக்கிறாரா? திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் கொடுத்த பணம் எப்படிப்பட்டது என்று எங்களுக்குத் தெரியாது. சொர்ணத்திற்குத்தான் தெரியும். அவர் பணம் கொடுத்து படம் எடுத்த ஒருவர், அவர் கூடவே, கதை வசனம் எழுதுகின்ற ஒருவர், வீடு வாங்குவது எப்படி இந்த அமைச்சரவைமீது குற்றச்சாட்டாக ஆகும்? அதுதான் எங்களுக்குப் புரியவில்லை. எதற்கு டெல்லியிலிருந்து நீதிபதி வரவேண்டும்? விசாரணை வேண்டும்?



அடுத்த குற்றச்சாட்டு, கோபாலபுரத்திலே திரு. மாறன் அவர்கள் ஒரு வீடு வாங்கியிருக்கிறார்கள். அதற்கு டெல்லியிலிருந்து என்ன நீதி விசாரணை வேண்டும்? டெல்லிக்குப் போகவேண்டுமா? கோபாலபுரத்திற்கே போய் பார்த்துவிடலாமே. இதுதான் எங்களுடைய பதில்.

அந்த வீட்டினுடைய நம்பரையே கொடுத்திருக்கிறார்கள். மாறனுக்குச் சொந்தம் என்று சொல்லியிருக்கிறார்கள். கோபாலபுரத்திலே இரண்டாவது வீதியிலே 11–வது வீடு in the name of his nephew Thiru Murasoli Maran என்று கொடுத்திருக்கிறார்கள். அதனுடைய மதிப்பு 1½ லட்சம். இதிலே குற்றச்சாட்டு என்ன? ஒன்றும் இல்லை. இதிலே என்ன விசாரிக்க இருக்கிறது? மாறனுக்கு கோபாலபுரத்திலே இரண்டாவது வீதியிலே ஒன்றரை லட்சம் ரூபாய் மதிப்புள்ள வீடு இருக்கிறது. இதிலே என்ன குற்றச்சாட்டு இருக்கிறது. அது ஊழல் பணத்திலே வாங்கப்பட்ட வீடு என்று நாங்களாக ஊகிக்கவேண்டியிருக்கிறது. நாங்கள் எப்பொழுதும் ஆதாரமில்லாமல் பேசுவதில்லை. ஆதாரங்களை வைத்து இருக்கிறோம். கோபாலபுரத்திலே இரண்டாவது வீதியிலே உள்ள 11வது வீட்டை நாங்கள் படம்பிடித்து வைத்திருக்கிறோம், அது இதுதான் (படத்தைக் காட்டினார்) இது கல்யாணசுந்தரம் அவர்களுடைய குற்றச்சாட்டு. இதை விசாரிக்க டெல்லியிலிருந்து நீதிபதி வரவேண்டுமா? நாங்களே விசாரித்துப் பார்த்தோம். சாம்பசிவ ஐயருடைய மனைவி சம்பகலட்சுமி அவர்களுடைய வீடு அது, அந்த அம்மாளும் இறந்துவிட்டார்கள். அவர்கள் இறந்துபோன பிறகு மாறன்தான் வாரிசு என்று நினைத்துவிட்டார்கள் போலிருக்கிறது. அந்த வீட்டிற்கு வாடகை 750 ரூபாய்.

முதலமைச்சர் அவர்களுடைய இன்னொரு மருமகன் அமிர்தம். கோபாலபுரத்திலே 7-வது வீதியிலே அமிர்தம் ஒரு வீட்டைக் கட்டுகிறார். இது குற்றச்சாட்டு. அதற்கு ஏற்கனவே இந்த மன்றத்திலே பதில் வந்துவிட்டது. அதே அமிர்தம் என்பவருக்கு, அதே கோபாலபுரத்திலே 5 கிரவுண்ட் நிலம் இருக்கிறது, அது அவருக்குச் சொந்தம், இது ஒரு குற்றச்சாட்டு இந்தக் குற்றச்சாட்டுக்கு நாங்கள் அந்த வீதியையே போய்ப் பார்த்தோம். படம் இதுதான் (படத்தைக் காட்டினார்) அந்த வீதியிலே காலியிடமே இல்லை. 5 கிரவுண்ட் இடம் வாங்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அந்த வீதியில் காலியிடம் கிடையாது. எதை விசாரிப்பது? இதிலே நீதிபதி எதற்காக? எதை விசாரிப்பது?

Five grounds in 7th St. Gopalapuram in the name of Sri Amritham என்று கொடுத்திருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட பதிலைத்தான் இங்கே வைக்க வேண்டுமென்று மதி அவர்கள் கேட்டார்கள். எங்களுக்கு அர்த்தமற்ற, பொருளற்ற குற்றச்சாட்டுகளுக்கு இந்த மன்றத்திலே பதில்வைப்பதைப்பற்றி ஒன்றுமில்லை, ஆனால் ஏற்கனவே மக்கள் படித்து சிரித்துக் கொண்டிருக்கிறார்கள், அதற்குப் பிறகும் வைக்கவேண்டுமா என்பதுதான். ஆனால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பதிலை வைக்கவேண்டுமென்று சொல்லிவிட்டார்கள். அந்த முறையிலே தயார் செய்து இந்த மன்றத்திலே இப்பொழுது வைத்திருக்கிறோம். பதிலுக்கு பதில் என்று சொல்லக்கூடிய முறையிலே—அதுகூட சொல்லவாவது லாயக்குள்ள குற்றச்சாட்டாக இருந்

தால் அதற்கு பதில் சொல்லியிருக்கிறோம், மற்றவையெல்லாம் குற்றச்சாட்டு என்று சொல்வதற்குக்கூட லாயக்கற்றவை—இந்த மன்றத்திலே வைத்திருக்கிறோம்.

இந்தத் தீர்மானத்திற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லையென்றாலும் குற்றச்சாட்டுகள் என்று சொல்லிக் கொண்டு அந்த அடிப்படையிலே வாதம் செய்ததால்தான் பதில் சொல்லியிருக்கிறேன். இந்தத் தீர்மானத்தினுடைய முக்கியத்துவம் மத்திய மாநில உறவு எப்படி இருக்க வேண்டும், மாநில அரசு யாருக்குப் பொறுப்பு, இந்த மாநில அரசுக்கு சாவர்னிட்டி கொடுக்கப்பட்டிருக்கிறதா இல்லையா? அப்படிக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் இந்த அமைச்சரவை மீது குற்றச்சாட்டுகள் வந்தால் அதை டெல்லி விசாரிக்க அவர்களுக்கு நாங்கள் அடிமைகள் அல்ல, சுதந்திரமான நீதிமன்றங்கள் இருக்கின்றன, அவை விசாரிப்பதுதான் பொருத்தமானதாகும், அப்படிப்பட்ட நீதிமன்றங்களைச் சந்திக்க திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை எப்பொழுதும் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் கருத்துக்களின் அடிப்படையிலே இந்தத் தீர்மானத்தை அதைக் கொண்டுவந்த உறுப்பினர் வலியுறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* THIRU M. A. LATHEEF: Sir, I have been hearing criticisms offered by the reputed leaders of the Opposition Parties with all the respect and regard to be given to them and also with the courtesy, sense of responsibility and regard for them.

Thiru Thangamani at the outset raised a point of order that this resolution as has been drafted is not proper and that it militates against Rule 144 of our Assembly Rules. Our Rule 144 states—

"A resolution may be in the form of a recommendation addressed to Government or of a declaration of opinion by the House or in the form of a motion for the appointment of a Committee of the House for any purpose or in any other form suitable to the subject-matter of the resolution."

In the resolution as has been drafted I submit that I have strictly conformed to Rule 144.

Mr. Thangamani's argument was based on the fact that the resolution seeks to bring in more than one matter and so it is against the letter and spirit of Rule 144. I submit that the resolution strictly conforms to Rule 144 because it is only confined to one matter which I have brought in for consideration of the House. That one matter is whether the Stats Ministry



is collectively responsible to this House or to another body which is not part and parcel of this House. That is the only matter which I have raised and I have based the essence of that matter under Article 164 of the Constitution. There are certain matters which could not be brought in; there is something which could be based only on inference, on some deductions, which are of logical consequence to the main matter, which are incidental, complementary, supplementary and closely connected with the main content of the resolution. Only in that way, they have been inserted in the resolution. That is the essence of Rule 144 and I submit in letter and spirit, the resolution conforms to that.

With regard to the points raised by Mr. Thangamani that the word 'irresponsible' has been used against some people, let me say that I have not referred to any particular person either in this House or anywhere else. I have only stated that irresponsible efforts or attempts are being made to bring discredit or disrepute to the duly elected Government or Ministry of this State. I have not stated that some people in this House or outside are attempting to bring disrepute. I have not specificially mentioned any members of this House or of this State or Centre. When the resolution as has been drafted does not refer to any one as irresponsible, if Mr. Thangamani says that such irresponsibility refers to him, what can I do? If he so feels, I am not here to dispute that. I will not deny him that pleasure.

What I submit is this. What do you mean by irresponsibility? What do you mean by possibility and impossibility? What do you mean by responsibility and irresponsibility? Irresponsibility is ultimately drawn and is drawn only from the word 'responsibility' and that means any responsible person whose responsibility is not discharged with all the sense of his responsibility, is irresponsible. That is his irresponsibility. That is my interpretation of the word 'irresponsibility'. Why do I use the word 'irresponsibility'? It is because, what I submit is that in so far as Art. 164, sub-clause (2) of the Constitution of India is concerned, the State Ministry is individually and collectively responsible to this House and to this House only. Their responsibility, their accountability and their answerability are fastened upon them only with reference to this House and only this House in its to to and in its entirety is entitlsd to question these Ministers for their conduct and the way in which the govern-

mental activities are carried on and these Ministers are responsible to answer to the various questions that are raised by the hon. Members of this House. Therefore, that responsibility is fastened upon them, that is the Ministry is responsible, accountable and answerable only to the members of this House. The logical conclusion is not only it is the responsibility of the Ministers, but also it is the responsibility..................

THIRU R. PONNAPPA NADAR: May I ask a question, Sir? Is it the contention of the hon. Member that the charges should be decided by majority-minority decisions or by any other process known to law?

THIRU M. A. LATHEEF: The only process known to law so far as this House is concerned is the constitutional provisions and the practices and their procedural aspects have been laid down by the leading luminaries of this House in the past over so many years and we are guided by the example set up by our predecessors. So, what I submit is that we are all creations of the Constitution and with all the sense of regard to my senior, Thiru Ponnappa Nadar, I would submit that we are all creations of the Constitution and we should function within the bounds of the Constitution, we should think only within the ambit of the Constitution and as visualised by the Constitution.

Therefore, when the Constitution of India, the relevant Article, that is, 164 (2) of that Constitution lays down and imposes a duty and casts a responsibility upon this Ministry to answer to the various questions raised by the hon. Members of this House, then it logically follows that not only the Ministers are responsible, but the members of this House are also responsible and are in duty bound to question all the lapses and mistakes committed by the Ministers in this House. Therefore, that responsibility is not an one-way traffic.

Article 164 (2) not only visualises the responsibility of the Ministry; but it has imposed a duty and responsibility upon the members of this House to be vigilant and be responsible and to raise the matter in this House; not only to raise the matter in this House, but every member of this House is in duty bound to see that the mistakes of this Government are not only raised in this House, but every member of this House is given an opportunity to know the mistakes, commissions and omissions committed by this Ministry and by raising such matters in this House, to know what the position is. You are given an opportunity; the members of this House are given that opportunity individually and collectively; you are giving an opportunity to the people of this State to know what are the ways in which this Government are acting and thereby you are discharging your duty. Therefore, under Article 164 (2) of the Constitution of India, the Ministry is collectively and individaully responsible to this House and every member of this House is in duty bound to discharge his duty with the sense of responsibility that has been visualised in the Constitution.



That is why I submit to you, Sir, and through you to the House, that the people—not the other people, not the laymen, not the ordinary member of the public belonging to this State of Tamil Nadu, but those people who have got an opportunity of speaking in this House, people who have a duty and right to speak in this House, such people go with some allegations against this Ministry to the Central Government, to the Head of the State of Indian Union, not disclosing anything to this House, not giving any facts to members of this House, not giving any facts to the people of this Tamil Nadu who have elected them and sent them here. Thereby what I submit is their responsibility has not been discharged as it should have been with reference to the people of Tamil Nadu, with reference to the members of this House and with reference to this House in its entirety.

Therefore I construe that the behaviour of such people is not an act of responsibility, but an act of irresponsibility. That is why I have submitted that it is definitely an act of irresponsibility.

The people of Tamil Nadu have immense faith in them and they must have faith in the people who have elected them as their representatives; it is their definite duty as has been visualised in the Constitution of India and as it visualised in the way in which the people who elected them do, to discharge their duty towards them.

Here is a case, a serious charge levelled against the Ministry. Whether they are upheld, whether they are accepted, whether they are supported by facts and figures is quite a different question. When I feel that serious lapses have been committed by a particular Minister or a few Ministers or by the Ministry

in its entirety, whatever I feel with all the *bona fides*—it should not be *mala fide*, it should not be malicious—I should say it in this House and should use it in a *bona fide* manner, not maliciously or with an ulterior motive only to tarnish the image of the elected Government of this State, for, that will not deliver the goods.

Therefore what I submit is, Sir, this is according to me an act of irresponsibility and that is why I have construed that it is irresponsible.

We will come to the other aspect. Serious attempts, illegal attempts, unconstitutional attempts, undesirable attempts and unprecedented attempts are being made by some people who have fortunately or unfortunately subjected themselves to a sense of irresponsibility and have gone to the Central Government to get their grievances redressed with their complaints. What I submit is that they have a chance to discuss the matter in this House, they have a chance to bring the same to the notice of this House. But then what was the reason that prompted them to go to the Central Government? After all, a public servant is prompted to bring certain facts against the people in power only to rectify the defects, only to bring the lapses on the part of the Government to the notice of the public. That should be their motive.................

பிற்பகல் 1.30. மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவில் முடிவுறுகிறது. அடுத்து வரும் தொடர்க் கூட்டத்தில். அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில்.........

திரு. கே. ஏ. மதியழகன்: அவரை வற்புறுத்த வேண்டாமென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். எனவே, அவரையே கேட்டுவிட்டு இதை முடித்து விடலாமே.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, மூன்றரை மணிக்கு மீண்டும் மேலவை இருக்கிற காரணத்தால் அமைச்சர்களுக்கு வசதியாக திரு. லத்தீப் அவர்கள் முடித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: நானும் ஒரு இடத்திற்குப் போக வேண்டியிருக்கிறது.

I am also bound to go somewhere. This is a matter of major importance—constitutional importance—So I request that I must be given some more time.



Another point that has been raised by my learned friend of the Ruling Congress Thiru A. R. Marimuthu is this. He said that it will encourage secessionists in the country. I do disagree with him on this point. How can a fair discussion on the constitutional question would lead to secession? I am not able to understand how it will encourage fissiparous tendencies. I am sure that we have the freedom to discuss the matter fairly and without any fear whatsoever. What I would like to submit is this. My hon. Friend's speech was that it would lead to secession. I would strongly refute my hon. Friend's contention and would say that it would not lead to secession. We are for united India. We are all in one India. In this connection, I would like to quote what the great Poet Iqbal said—

'SARE JAHAN SE ACCHA HINDUSTA(N) HAMARA' Poet Iqbal has said that among all the countries in the World, India is the best country. We are the Nightingales in the garden of India. [HUM BUL BULEA(N) HAI(N) ISKI YEA(H) GULSITA(N) HAMARA] Therefore, we are all the members in the United India. We are the members in the United Hindustan. The poet has said that we are fortunate enough to live in India. The other day also, I said that in the whole House. In spite of the fact there were States like Magada, Vanga, Chera, Chola, Pandia and other States, the seers visualised India as one country. The great Seers visualised India as one united country. I would like to quote a Sanskrit stanza in this connection: UTTARAM YATA SAMUDRASYA HIMADRISCHEIVA DAKSHINAM VARSHA TAVA BHARATAM NAMA BHARATIYATRA SANTATIAHA. It was said even at the beginning. The land which lies between the South of Himalayas and the North of the Sea is called the Bharat. We are all the people living within the territory of Bharat and Latheef is a citizen of Bharat. Latheef is a Tamil Indian. He is not only interested in safeguarding the sovereignity and integrity of the country, but in safeguarding the interest and integrity of his Motherland India. Latheef is also interested to see that the land of Tamil Nadu develops. Latheef is interested in seeing that the Tamil Culture and Tamil Language are also developed. It is the duty of Latheef to see that he not only safeguards the integrity of India, but also to see that the interests of the Tamil Nadu people are safeguarded. I must be able to see that the interests of the people of Tamil Nadu is

safeguarded. If Latheef is not able to safeguard the interest and integrity of his Motherland, he should die. There is no use of Latheef being alive without safeguarding the interest of his State. If at all I want to live, I must see that the Tamil Language and Tamil Culture are developed. I declare with all vehemence at my command, with due respect to the Chair, that we are for united India and for united Tamil Nadu. We must see that our Tamil Nadu develops in various fields.

Many points have been raised by my hon. Friend Thiru Mathi. I have not replied to many points that were raised by my hon. Friend Mathi.

திரு. கே. ஏ. மதியழகன்: உறுப்பினர் அவர்கள் மரத்வாடா, சேர சோழ, பாண்டியர் வரைதான் வந்திருக்கிறார். இன்னும் கருணாநிதி அவர்களிடம் வரவில்லை. அதற்கு இன்னும் நேரம் ரொம்ப ஆகும்.

THIRU R. PONNAPPA NADAR: Let the hon. Member conclude his speech. We have taken much of the valuable time of the House. I think he will conclude his speech.

THIRU M. A. LATHEEF: I am speaking only with a view to safeguard the interests and spirit of democracy. I am speaking with all the sense of responsibility to see that democracy is saved and true democracy is established. If you are not going to accept this, we will not have a good democracy in our country. If anything is said against the Ministry without any reasons, it is the duty of Latheef to point out. If any baseless allegations are made against the Ministry—elected representatives of the Ministry—it is the responsibility of Latheef to point them out. It is the privilege of the Members to point out and it is not the special privilege of Latheef to point out if baseless charges are made against the Ministry.

Really if there is anything wrong with the Ministry, it is the responsibility of not only Latheef but also the responsibility of Thiruvalargal Kandappan, Ganapathy, Kandaswamy and others. All are entitled to question the Ministry. The high-power body is the House. If we are not able to question in this supreme body, where can we point out such things? It is the responsibility of the hon. Members to point out the commissions and omissions on the part of this Government. Therefore, Mr. Speaker, Sir, I submit that this House will at least appreciate the logic behind



my Resolution. I am sure the House will at least appreciate the promptitude which compelled me to bring forward this Resolution before this House. On behalf of the Government, the Hon. Minister for Industries appreciated the importance of the Resolution and gave enough stuff and points in support of the Resolution. It was the main purpose behind this Resolution. As requested by the Hon. Law Minister, I do withdraw the Resolution that has been discussed here.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லத்தீப் அவர்களின் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இந்த அளவோடு முடிவுறுகின்றன. மீண்டும் கூடும் நாள் குறிப்பிடாமல் இந்த அவையை ஒத்தி வைக்கிறேன். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–38 மணி அளவில் மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.

## 7. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

98. Notification issued with G.O. Ms. No. 668, Rural Development and Local Administration, dated the 3rd April, 1973, in regard to certain amendments to the rules relating to the receipts and expenditure of the Municipal Councils. (Laid on the Table of the House under Section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).

### *B. Reports, Notifiations and other papers.*

54. Notification issued with G.O. Ms. No. 933, Industries, dated the 22nd June 1973, in regard to an amendment to the Tamil Nadu Cement Distribution (Licensing and Regulation) Order, 1973.

* 55. The Holdings (Stay of Execution Proceedings) (Tamil Nadu Amendment) Bill, 1973 (L.A. Bill No. 22 of 1973) with annexure.

* 56. The Code of Civil Procedure (Tamil Nadu Amendment) Bill, 1973 (L.A. Bill No. 23 of 1973.

*Despatched to members on 10th August 1973.

1973 ஆகஸ்ட் 14]

## இணைப்பு I.

294-ம் பக்கத்தில் 130-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

**விடை—**

(அ) 450 பேர்.

(இ) நாட்டின் பெரியம்மை ஒழிப்புத் திட்டம் ஐந்தாண்டுத் திட்டத்தைச் சேர்ந்த திட்டமாகச் செயல்படுத்தப்படுகிறது. எனவே, அத்திட்டத்தை ஒவ்வோர் ஆண்டும் தொடர்ந்து நடத்தவும், அதிலுள்ள பணியாளர்களைத் தொடர்ந்து வேலையில் வைத்துக்கொள்ளவும் ஒவ்வோர் ஆண்டும் அரசு ஆணை பிறப்பிக்கிறது. திட்டம் தற்காலிகமானதால், அதிலுள்ள பணியாளர்களும் தற்காலிகமானவர்கள். எனவே, ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரித் திங்கள் இறுதியில் அரசின் ஒப்பளிப்பு முடிவுற்றதும், தற்காலிக அம்மை குத்துபவர்களின் பணிகளை முடிவுறும்படியும், அரசின் ஒப்பளிப்பு கிடைத்தவுடன் மார்ச்சு திங்களில் அவர்களை மீண்டும் பணிகளில் அமர்த்தும்படியும் மக்கள் நல்வாழ்வு—குடும்ப நலத்துறை இயக்குநர் மாவட்ட உடல்நல அலுவலர்களுக்கு அறிக்கை விடுத்ததன் பேரில், தற்காலிக அம்மை குத்துபவர்கள் ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரித் திங்கள் இறுதியில் வேலையிலிருந்து நீக்கப்பட்டும், திட்டத்தை அடுத்த ஆண்டிலிருந்து தொடர்ந்து செயல்படுத்த அரசு ஒப்பளிப்பைப் பெற்றவுடன் மார்ச்சுத் திங்களில் மீண்டும் அவர்கள் பணிகளில் அமர்த்தப்பட்டும் வந்தனர்.

நாட்டின் பெரியம்மை ஒழிப்பு திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்த ஒவ்வோர் ஆண்டும் அரசு ஒப்பளித்துக் கொண்டு வருவதால், ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரித் திங்கள் இறுதியில் அம்மை குத்துபவர்களை வேலையிலிருந்து நீக்கலாகாது என மக்கள் நல்வாழ்வு, குடும்ப நலத்துறை இயக்குநருக்கு 1972-ம் ஆண்டு ஜூலைத் திங்களில் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன. அம்மை குத்துபவர்களுக்கு ஏற்கனவே அமைத்த விதிகள் (Ad hoc Rules) உள்ளன. எனவே, தற்காலிக அம்மை குத்துபவர்களின் பணியை உடனடியாக வரன்முறைப்படுத்துமாறு அண்மையில் மக்கள் நல்வாழ்வு—குடும்பநலத்துறை இயக்குநருக்குக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன.

தற்காலிக அம்மை குத்துபவர்கள் பல ஆண்டுகள் பணிபுரிந்து வந்துள்ளதாலும், அவர்களுடைய பணிகளை முன் தேதியிட்டு வரன்முறைப்படுத்தினாலன்றி அவர்களுக்கு பலன் மிகுதியாகக் கிடைக்காததலால் அவ்வாறு அவர்களுடைய பணிகளை முன் தேதியிட்டு வரன்முறைப்படுத்த அவர்களுடைய பணிகளில் ஒவ்வோர் ஆண்டும் ஏற்பட்டுள்ள பணி இடைமுறிவை (break in service) பொருத்தருள வேண்டும் (condone) என மக்கள் நல்வாழ்வு—குடும்ப நலத்துறை இயக்குநர் பரிந்துரைத்துள்ளார். இது அரசின் ஆய்வில் உள்ளது.

நாட்டின் பெரியம்மை ஒழிப்புத் திட்டத்தில் பணிபுரியும் ஊழியர்களை நிலையாக (permanent) வேலைக்கு வைத்துக்கொள்வதென்பது அத்திட்டம் என்றும் செயல்பட வேண்டுமா என்பதைப் பொறுத்திருக்கிறது. திட்டம் என்றும் தொடர்ந்து செயல்படவேண்டுமென்று மக்கள் நல்வாழ்வு—



1973 ஆகஸ்ட் 14]

குடும்ப நலத்துறை இயக்குநர் கருதுவாரேயாகில் அதற்கானச் செயற்குறிப்புகளை அவர் உரிய காலத்தில் அனுப்புவார். அவ்வாறு அவரால் செயற்குறிப்புகள் அனுப்பப்பட்டு அவை அரசால் ஏற்கப்படும்வரை திட்டமும், அதில் பணிபுரியும் பணியாளர்களும் நிலைப்படுத்தப்படார் (cannot be made permanent).

## இணைப்பு II.

[295-ம் பக்கத்தில் 131 ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

| அரசு மருத்துவமனையின் பெயர். | ஆண்டுதோறும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட மன நோயாளிகளின் எண்ணிக்கை. | | | | |
|---|---|---|---|---|---|
| | 1968. | 1969. | 1970. | 1971. | 1972. |
| 1. அரசு மனநோய் மருத்துவமனை, சென்னை-10. | 1,069 | 1,099 | 1,482 | 1,480 | 1,334 |
| 2. அரசு பொது மருத்துவமனை, சென்னை-3. | 377 | 409 | 404 | 449 | 720 |
| 3. அரசு எர்ஸ்கின் மருத்துவமனை, மதுரை. | 438 | 496 | 447 | 522 | 624 |
| 4. அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை-1. | 119 | 112 | 114 | 89 | 122 |
| 5. அரசு கீழ்ப்பாக்கம் கல்லூரி மருத்துவமனை, சென்னை-10. | 53 | 64 | 73 | 88 | 83 |
| 6. அரசு ராஜா மிராசுதார் மருத்துவமனை, தஞ்சாவூர். | 277 | 357 | 381 | 376 | 321 |
| 7. அரசு செங்கல்பட்டு மருத்துவமனை, செங்கல்பட்டு. | 15 | 22 | 16 | 2 | 9 |
| மொத்தம் .. | 2,348 | 2,559 | 2,917 | 3,006 | 3,213 |

## இணைப்பு III.

[305-ம் பக்கத்தில் 142 ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

இந்தக் குஞ்சுபொரிப்பு நிலையத்தில், திங்கள் ஒன்றுக்கு 5,000 குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவை போதுமானதாக இல்லாததால், கீழ்க்காணும் விரிவுத் திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன :—

(1) போதிய நீர் வழங்கப்படாமை குஞ்சுகள் உற்பத்தி பாதிக்கப்பட்டதற்கு ஒரு காரணமாகும். எனவே, ரூ. 15,000 செலவில் தனிக்

ணைறு ஒன்று வெட்டப்பட்டுள்ளது. தற்போது போதுமான அளவுக்கு நீர் வழங்கப்படுகிறது.

(2) ஒவ்வொன்றும் 2,660 முட்டைகள் பொரிக்கும் திறன்கொண்ட முட்டை பொரிப்புக் கருவிகள் இரண்டு இந்நிலையத்திற்கு வழங்கப் பட்டுள்ளன. பால் இனம் பிரிப்பதற்கான இயந்திரம் வாங்குவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

(3) இந்நிலையத்தில், குஞ்சு பொரிக்கும் முட்டைகளை அதிக அளவு உற்பத்தி செய்யும் பொருட்டு, குஞ்சுபொரிப்பு நிலையத்தோடு, கோழி வளர்ப்புப் பண்ணை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

(4) உற்பத்தி செய்யும் திறனுள்ள வகைக் குஞ்சுகளை வளர்ப்ப தற்கும், வழங்குவதற்கும், குஞ்சுகளைப் பால் இனம் பிரித்தல் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

(5) கீழ்க்காணும் பணியாளர்களை நியமிப்பதோடு, தற்போதுள்ள குஞ்சு பொரிப்பு அலுவலர் பதவி குஞ்சு பொரிப்பு அலுவலர்-கண்காணிப் பாளர் பதவியாக உயர்த்தப்பட்டுள்ளது :—

| | | | |
|---|---|---|---|
| (அ) | கால்நடை உதவி மருத்துவர் | .. | 2 |
| (இ) | கால்நடை வளர்ப்பு உதவியாளர்கள் (தரம் I) | .. | 3 |
| (உ) | அலுவலகக் கண்காணிப்பாளர் | .. | 1 |
| (எ) | உதவியாளர்கள் | .. | 3 |

2. மேற்கூறிய செயற்குறிப்புகளோடு, இந்நிலையத்தை மேலும் விரிவு படுத்த கீழ்க்காணும் செயற்குறிப்புகள் குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது :—

(1) தேவையான எண்ணிக்கை கொண்ட ஆழ் குப்பைக் கொட் டகைகள் தீவனக் கலவை அரைவைப் பிரிவு ஆகியவற்றிற்கு வகை செய்தல்.

(2) அதிக அளவில் குஞ்சு பொரிப்பு இயந்திரங்கள், ஏனைய கோழி வளர்ப்புக் கருவிகள் ஆகியவற்றை வாங்குதல்.

(3) இந்நிலையத்திற்கு அருகிலுள்ள கோழிவளர்ப்பு வளர்ச்சி நிலையங் களை விரிவுபடுத்துதல்.

## இணைப்பு—IV

[314-ம் பக்கத்தில் 147 ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

(அ) விபத்துக்கள் நேரிடும்போது துயர் தணிப்பு அளிக்க கீழே குறிப்பிட்டுள்ளபடி இரண்டு நிதிகள் உள்ளன :—

(1) அரசு போக்குவரத்துப் பணியாளர்கள் இடர் தணிப்பு நிதி.
(2) விபத்து சேமநிதி.



(இ) மேலே (அ) (1) பிரிவில் குறிப்பிட்டுள்ள இந்நிதியின் நோக் கங்களாவன :—

(i) உண்மையான எந்த இடர்களேனும் ஏற்பட்டு, கருணை உதவித் தொகைகள் தேவை என்று தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை இயக்குநர் கருதினால், அந்த நேர்வுகளில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறையைச் சேர்ந்த பணியாளர்கள் அல்லது பணியாளர் ஒருவரின் குடும்பத்தைச் சேர்ந்தவரது இறுதிச் சடங்குக்கான செலவுகளைச் செய்ய ;

(ii) இலவச மருத்துவ சிகிச்சைகள் உடனடியாக கிடைக்கப் பெறாத பணிமனைகளில் அல்லது பணிக்களரிகளில் அரசு போக்குவரத்து வண்டிகள் அல்லது இயந்திரம் முதலியவற்றால் கடும் விபத்தில் சிக்கிய பணியாளர்களுக்கு உடனடிச் செலவுகளைச் செய்ய ;

(iii) தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை வண்டிகளால் ஏற்பட்ட கடும் விபத்துக்களில் சிக்குண்ட அல்லது அந்த விபத்துக்களில் மரணம் அடைந்த ஏழைகளுக்கும், அனாதைகளுக்கும் அல்லது அவர்தம் குடும்பத்தினருக்கும் கருணை உதவித் தொகைகள் வழங்கப்பட வேண்டும் என்று அரசு போக்குவரத்துத் துறை இயக்குநர் கருதினால், அத்தகைய நபர்களுக்குத் தொகை வழங்க.

பேருந்துகளை இயக்கும்போது ஏற்படுகிற எதிர்பாரா நிகழ்ச்சிகளின் காரணமாக மூன்றும் நபர் செய்து கொள்ளும் உரிமைக் கோரிக்கைகளை ஏற்று, தொகை வழங்குவதற்குப் போதுமான சேமநிதி ஒன்றை ஏற் படுத்துவதே, (அ) (2) இனத்தில் குறிப்பிட்டுள்ள நோக்கமாகும்.

(a) There are two funds to provide relief in cases of accidents as indicated below :—

(1) State Transport Employees Compassionate Relief Fund;

(2) Accident Reserve Fund.

(b) The objects of the fund referred to at (a) (1) above are—

(i) to meet the funeral expenses of the employees and any member of the family of an employee of the Tamil Nadu State Transport Department in genuine cases of hardship, which, in the opinion of the Director, Tamil Nadu State Transport Department needs ex-gratia payments;

(ii) to meet immediate expenses of employees involved in any serious accident occurring to state Transport Vehicls or machinery, etc., in the Depot or Workshop in cases where free hospitalisation facilities are not readily available.

(iii) to make payments to poor and destitute persons or to their families involved in serious or fatal accidents caused by the State Transport Vehicles, which in the opinion of the Director, Tamil Nadu State Transport Department requires ex-gratia payments.

The objects of the Fund referred to at item (a) (2) above are to have a reserve sufficient to meet the expenditure relating to the claim of third parties arising on account of any unforeseen incidents arising from the operation of buses.

## இணைப்பு V.

[325-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

Place : Madras 10,
Date : July 31, 1973.

From

C. D. NATARAJAN, M.A., B.L.,
Secretary to Government (Retired),
Legislative Assembly Department.

To

THE HONOURABLE THE DEPUTY SPEAKER,
Tamil Nadu Legislative Assembly,
MADRAS.

Dear and Esteemed Sir,

I seek leave to bring to your kind notice that I retired from service on the forenoon of May 14, 1973, when I laid down my office as Secretary to the Tamil Nadu Legislative Assembly on the expiry of my extended period of service. As the Assembly was then in recess, I solicit your indulgence to address this letter to your goodself on the eve of the commencement of the next session.

It was my singular good fortune, Sir, that I had the rare opportunity and unique privilege to serve the great and glorious Tamil Nadu, whence I derived my birth and nurture, in all the three Wings of the State, namely, the Judiciary, the Executive and the Legislature, respectively. After a short spell of practice for four years as Advocate at the Bar of the High Court of Judicature, Madras, I entered service as a member of the State



Judicial Service and served as District Munsif and Presidency Magistrate for some years. Later, I was appointed as Under Secretary to Government in the Law Department of the then Government of Madras, where I gained considerable knowledge and experience, among other things, as to how a Legislation orginated and Bills were formulated and framed. Still later, to be precise, on the 1st January 1956, I was appointed as Deputy Secretary to the State Legislature and Secretary to the Legislative Council. Since then, for 17 years, nearly 8 years in the Council and well nigh 9 years in the Assembly, I had the honour and the privilege to remain in the service of the Legislature. When in 1962, I was given the option to revert to judiciary or to continue in the Legislature Secretariat, I of my own free will and accord, chose to serve the Legislature and through the Legislature, Democracy.

Inspired by the example of my distinguished predecessors, conscious of the high responsibilities and onerous duties of my office as Secretary to the Assembly, I earnestly endeavoured to equip myself with the requisite knowledge of Parliamentary Law and Procedure in order that I might discharge my duties aright. In the discharge of the duties of my office, I was ever actuated by a sense of devotion to duty. I consciously maintained correct manners and modest behaviour in the House, besides rectitude of conduct in my relations with the Honourable Members. With all sense of humility and dedication, it was my constant care and concern to support, maintain and promote the principles of Parliamentary Law as well as the high traditions and established conventions of the Legislature, which reflects as well as responds to the hopes and aspirations of the people, to ths best of my knowledge and ability. I never faltered and failed in my high regard for Parliamentary Law and strict adherence to the Procedure. Even if I lacked in ability, I did not slacken in my assiduity. I laboured and toiled to merit the confidence and deserve the goodwill and appreciation of eminent and esteemed persons who from time to time presided over the august and honourable Assembly as well as the Hon'ble Chief Ministers, Hon'ble Leaders of the House, Hon'ble Ministers, Hon'ble Leaders of Parties and all Hon'ble Members. That I was the recipient of abundant affection, great consideration and courtesy from your goodself as well as from all the hon'ble Members of the House is a reward which I value and cherish most. The

support and encouragement I received from all Members of the House in the discharge of my delicate and difficult duties will ever remain a source of supreme satisfaction and great inspiration to me in my retirement. I hereby respectfully express my deep sense of gratitude to your goodself and through you to the Hon'ble Members of the House and the benign Government for the uniform courtesy and kindness extended to me throughout my service at the Table of the Honourable Assembly.

I now wish to acknowledge the loyal and efficient services of my valued colleagues and dear companions in the Secretariat without whose responsive co-operation, able assistance and ready help, I could not have discharged my onerous duties to the satisfaction of the House.

In conclusion, I most respectfully assure you, Sir, and through you, the Hon'ble Members, one and all, that with firm and well founded faith in the efficacy of Parliamentary Democracy, I shall ever, with zeal and fidelity, strive and serve to maintain and advance, in word as well as in act, the high honour and great reputation of the Tamil Nadu Legislative Assembly, not at the Table as a Clerk, but as a humble and simple citizen.

With kind regards,

I remain,
Sir,
Ever yours faithfully,
C. D. NATARAJAN.

## இணைப்பு VI.

[325-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

Place : Madras,
Date : 14th August 1973.

From
C. D. NATARAJAN, M.A., B.L.,
Secretary to Government (Retired),
Legislative Assembly Department.

Esteemed and Hon'ble Speaker, Sir,

I am deeply touched and moved by the kind Resolution passed on August 11, 1973 by the Hon'ble Assembly in generous appreciation of the humble services I had the honour and privilege to



render at the Table of the august House, which I highly value and shall ever cherish as the greatest reward and the highest honour the Hon'ble Assembly has in its power to confer on any person, and I shall treasure it as my priceless possession for so long as I shall live.

You, Sir, in particular, had always been partial to my merit and indulgent to my faults and I am ever grateful to your good and esteemed self for many words and acts of kindness, encouragement, courtesy and consideration.

I most respectfully request you, Sir, to kindly convey to the Hon'ble Chief Minister, the Hon'ble Leader of the House, the Hon'ble Leaders of Parties and all Hon'ble Members my sincere thanks and deep gratitude for their kind thoughts, generous appreciation and goodwill towards me.

With regards,

Very sincerely, Yours, Sir,
C. D. NATARAJAN.

# Index to Tamil Nadu Legislative Assembly Debates.

EIGHTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

11th, 13th and 14th August 1973.

Volume XLII (Nos. 1 to 3).

## A


PAGES

ABDUL JABBAR, Thiru V. M.—

Privilege Committee Report about publication in the daily "Nathigam", further action (Point of order). 195–196

Sugar (levy), distribution (C.A.) .. .. .. 183, 189–190, 191

Tiruchirappalli–Erode railway line, over-bridge across. 10

Tourist Bungalows at Nagore and Ervadi, construction .. .. .. .. .. .. .. 291–292

ACCIDENT(S)—

Assistance to victims .. .. .. .. .. 314–315

AGRICULTURE—

Kangayam and Pongalur areas, stay of collection of water charges (C.A.) .. .. .. .. .. 323–324

Sprayers supplied by Unions, service facilities .. 309–311

World Bank's assistance for development .. .. 302–305

ALAGAMUTHU, Thiru T. P.—

Leave of absence to Thiru M. Palanisamy (M) .. 41

PAGES

A—*cont.*

ALAGARSAMY, THIRU S.—
Co-operative Farming Society (Thiruthangal), closure .. .. .. .. .. .. .. 161–163
Land Reforms (Disposal of Surplus Land) Rules, 1963, draft amendments (M) .. .. .. .. 262–264, 271, 272
Motor Vehicles Taxation (Amendment) Bill, 1973 .. 214

ANANDANAYAKI, THIRUMATHI T. N.—
Adjournment Motions and Calling Attention Notices, taking up (Point of Order) .. .. .. .. 181
Black money, Wanchoo Committee's recommendations, powers to States to unearth (R) .. .. .. 94–99
Motor Vehicles Taxation (Amendment) Bill, 1973 .. 200–204, 207–208, 209, 211–212, 213
Polytechnic for Women, opening at Tiruchirappalli .. 289
Private Electricity Supply Undertakings (Acquisition) Bill, 1973 .. .. .. .. .. .. 224–228, 236–237, 238
Rules Committee, approval of final Report (M) .. 51–54

ANBAZHAGAN, THIRU K.—
Cholera, outbreak in Madras City (C.A. St.) ... 175–179, 180

ARCHAEOLOGY—
Idols unearthed at Thirukalambur, details .. .. 301

B

BILL(S)—
Dowry Prohibition Bill, 1973—
Int., .. .. .. .. 325



PAGES

B—*cont.*

BILL(S)—*cont.*
Holdings (Stay of Execution Proceedings) (Tamil Nadu Amendment) Bill, 1973—
Consid., ... ... ... ... 246–247
Consid. Cl.,
Motion to Pass, .. .. .. 247
Passed 247

Motor Vehicles Taxation (Amendment) Bill, 1973—
Consid., ... ... ... ... 198–208
Consid. Cl., .. .. .. .. 208–214
Motion to pass, .. .. .. 214–215
Passed .. .. .. .. .. .. .. 215
Private Electricity Supply Undertakings (Acquisition) Bill, 1973—
Consid., ... ... ... ... 216–235
Consid. Cl., ... ... ... ... 235–245
Motion to pass, .. .. .. 245
Passed .. .. .. .. .. .. 245

BOMMAN, THIRU K. H.—
Wild Life (Protection) Act, 1972 (Central Act 53 of 1972), adoption (R) .. .. .. .. .. 252–253

BOOKS—
Publication, assistance for .. .. .. .. 30–31

BRIDGES AND CULVERTS—
Across Tiruchirappalli–Erode railway line .. .. 10
Kuzhithurai, Broadening ... ... ... ... 10–11
Near Coimbatore bus stand, construction .. .. 10–11
Works in Ambasamudram area, completion .. .. 19

C

CALLING ATTENTION—
Cement, fall in production resulting in unemployment. 317–319
Cholera, outbreak in Madras city .. .. .. .. 175–180

CALLING ATTENTION—*cont.*

Ennore Thermal Plant, outbreak of fire ... 35-41

Kangayam and Pongalur areas, stay of collection of water charges .. .. .. .. .. .. 323-324

Madras Corporation elections, indefinite postponement. 186-187

Salem Steel Plant, delay in execution .. .. .. 35

Sea erosion near Thengapattinam, damages .. .. 316-317

Sugar (levy), distribution .. .. .. .. 188-192

Tanneries, closure resulting in unemployment .. .. 319-323

Yarn, rise in price ... ... ... ... 180, 181-185

[C]EMENT—

Unemployment due to fall in production (C.A.) ... 317-319

[C]HAIR—

Announcement—

Letters from Thiru C. D. Natarajan, retired Secretary to the Legislative Assembly Department .. .. .. .. .. .. .. 325

Rulings and Observations—

Adjournment Motion—

*Press Report about missing of many teen-aged school children* :

Consent was withheld on the ground that there was no need to adjourn the House and discuss the matter after the assurance given by the Chief Minister .. .. .. 174

Bills—

*Scope of discussion during the Third reading stages*

Quoting an earlier ruling—"It is inappropriate to refer during the third reading stage to policies and details except to amendments or changes made during the clause-by-clause consideration."—the Chair held that no new ideas other than those covered by amendments given notice of would be allowed to be referred to during the third reading stage of a Bill .. 214-215



CHAIR—*cont.*

Rulings and observations—*cont.*

Calling Attention—

*Criteria for seeking clarification* :

After a Minister had made a statement in response to a call attention Motion, some questions by way of clarification may be put on the Minister's statement and no new matters should be introduced .. .. .. .. .. 38, 39, 185, 186, 191

Only one or two questions might be put on the Minister's statement but there was no provision in the Rules to make any suggestion or to refer to a call attention Motion, some questions not be so long as a speech. If desired, a discussion on the subject might be sought for..

Questions asked for clarification should be brief so as to enable the Minister to bear them in mind and reply, instead of putting too many questions at a time .. .. .. .. .. 40

Debate—

*Interruptions* :

A Member could make a personal explanation only if a Minister had made a personal reference to him in the course of his reply to the debate. It was not proper for the Member to interrupt the Minister continuously and speak for two or five minutes .. .. .. 374

Expressions used in the House—

"Brute majority" ( மிருக பலம் ) in the sentence "that the ruling party with brute majority even now makes the Speaker dance to its tunes"—Deprecated .. .. .. .. 51-52

Personal Explanation—

Should be confined to personal references and must be strictly relevant to the reference or reflection sought to be explained and should not introduce new or debatable matter. No clarification could be sought by way of personal explanation ... 345

PAGES

Rules, approval of final report (M) ... ... 42-68

C—*cont.*

CHAIR—*cont.*
Rulings and observations—*cont.*
Point of Clarification—
Should be confined to the matter under discussion and no new matter should be brought in .. .. 344
Point of Order—
*Opportunity to move certain Motions* :
A Member rose on a point of order and complained that only certain Members had been given the privilege of moving calling attention and adjournment Motions, though many of them had given notice of such Motions. At least the names of those Members who had given notice of such Motions might have been mentioned within brackets.
The Speaker ruled that it was not a point of order and observed that such matters should not be raised in the House, but only in his Chamber. If replies were ready, such Motions would have been placed before the House .. 181, 197
Could be raised only when there was deviation from from the Rules of procedure or when the proceedings of the House were not in conformity with the Rules .. .. .. .. .. 194
Privilege Matter—
*Report of Committee on "Nathigam" case, non-implementation of recommendation* :
A Member raised a point of order stating that no action had been taken on the report of the Privileges Committee in the case against a daily newspaper (Nathigam) referred to it by the House.
The Speaker observed that it was open to any Member to move that the Report of the Committee be taken into consideration when it was placed before the House and it could be discussed, if the House adopted such a Motion. The question of awarding punishment to the Editor and other matters would



PAGES

C—*cont.*

CHAIR—*cont.*
Rulings and observations—*cont.*
Privilege matter—*cont.*
*Report of Committee on "Nathigam" case, non-implementation of recommendation*—cont.
follow only after the Report of the Committee was placed before the House and the House accepted its Report. The Committee could not give a direction to the House to discuss its Report .. .. .. .. 195-196
Procedure—
According to Rule 64 any Member who desires to speak on any matter before the House shall do so with the permission of the Chair. He should not raise any new matter other than the one that is before the House of discussion .. .. .. 193
Eventhough all the Members had a right to speak, it was better to follow the established convention that the Leaders of the parties spoke after the Members and not *vice-versa* .. .. .. [illegible]
Question Hour—
During question hour, only questions should be asked and reference to other details should be avoided ... ... ... ... 31
CHEZHIYAN, THIRU KOVAI—
Kangayam and Pongalur areas, stay of collection of water charges (C.A.) .. .. .. .. .. 323, 324
CINCHONA—
Oil plants, raising in Kolli Hills .. .. .. .. 311-313
COLLEGE(S)—
Arts, Tiruttani, new building ... ... ... 290-291
B.Com. Courses, dearth of teachers .. .. .. *134-135*
Medical, Post-Graduate course in Orthopaedics .. *139-141*
Medical, reduction in seats .. .. .. .. 292-293
COMMITTEE(S)—
Assurances, Fifth Report, presentation .. .. 42
Public Accounts, Ninth Report (Part II), 1969-70, presentation .. .. .. .. .. .. 325

PAGES

C—*cont.*


CO-OPERATIVES—

Farming Society (Tiruthangal), closure .. .. 161–163
Spinning Mill at Manalmedu, particulars .. .. 12
Spinning Mill for Tiruchirappalli, opening .. .. 301


D


DAM(S)—

Cauvery Upper Anicut, construction of regulator across .. .. .. .. .. .. .. 144–145
Peruvarippallam—, water storage .. .. .. 145

DENNIS, Thiru N.—

Agricultural development, World Bank's assistance .. 302–305
B.Com. Courses, dearth of teachers .. .. .. 134–135
Caustic Soda Plant, setting up ... ... ... 13–15
Chick hatchery at Kappalur, expansion scheme .. 305–307
Cholera, outbreak in Madras City (C.A.) .. .. 175, 179
Ennore Thermal Plant, outbreak of fire (C.A.) .. 35–36, 39
Fishing boats, service centres .. .. .. .. 7–8
Flats for Film Directors .. .. .. .. 26–27
Honey, incentives for production ... ... ... 169–171
Kolli Hills, raising of oil plants .. .. .. .. 311–313
Kuzhithurai bridge, broadening ... ... ... 11
Madras Corporation elections, indefinite postponement (C.A.) .. .. .. .. .. .. 186 187
Medical colleges, reduction in seats .. .. .. 292–293
Nirodh Factory, setting up ... ... ... ... 300–301
Orthopaedics, Post-Graduate course .. .. .. 139–141
Plastic Industries, incentives .. .. .. .. 12–13
Public Relations Offices, opening .. .. .. .. 296–297
Rural landless, house-sites for .. .. .. .. 20–25
Rural Medical Centre at Tiruverkadu, running by Rotary Club .. .. .. .. .. .. 293
Salem Steel Plant, delay in execution (C.A.) ... .. 35
School at Ashok Nagar, new building .. .. .. 32–34




PAGES

D—*cont.*


DENNIS, Thiru N.—*cont.*

Scout Movement, expansion .. .. .. .. .. 31–32
Sea erosion near Thengapattinam, damages (C.A.) .. 316
Tribunal for Disciplinary Proceedings, pending cases. 129–131
Weavers, houses for .. .. .. .. .. .. 163–165

DEVENDIRAN, Thiru A.—

Chetti Urani at Sivagangai, deepening .. .. .. 19–20
Hospitals, number admitted for treatment of mental disorder .. .. .. .. .. .. .. 295
Prisoners of other States .. .. .. .. .. 150–151
Services, reservation of appointments for Harijans .. 1–5

DHARMALINGAM, Thiru A. P.—

Madras Corporation elections, indefinite postponement (C.A. St.) .. .. .. .. .. .. 186–187

DISEASES—

Cholera, outbreak in Madras City (C.A.) .. .. 175–180
National Small-pox Eradication Programme, vaccinators .. .. .. .. .. .. 294–295

DORAISAMY, Thiru S.—

Cinema theaters, construction by Municipalities and Corporations ... ... ... ... 307–309
Drainage scheme for Tiruppur .. .. .. .. 295–296
Over-bridge near Coimbatore bus-stand, construction .. 10–11
Railway lines, electrification .. .. .. .. 146–147


E


ELECTRICITY—

Ennore Thermal Plant, outbreak of fire (C.A.) .. 35–41
Mettur town, power supply .. .. .. .. 313

EXHIBITION—

Asia 72 Fair, Tamil Nadu Pavillion, purchase of mats for decoration .. .. .. .. .. 297–298

PAGES

F

FACTORIES—
Bulb factory, starting .. .. .. .. .. .. 147–149
Earth-movers factory, establishment .. .. .. 299
Nirodh, setting up .. .. .. .. .. .. 300–301
Steel wire manufacturing company, particulars .. 149

FAMILY PLANNING—
Nirodh factory, setting up in Mettur and Madurai .. 300–301

FISHERIES—
Boats, service centres .. .. .. .. .. 7–8

H

HANDE, Dr. H. V.—
Cement, fall in production resulting in unemployment (C.A.) .. .. .. .. .. .. .. 317, 318–319
Council of Ministers, condemnation of unconstitutional methods to bring into disrepute (R) ... ... 339–340
Ennore Thermal Plant, outbreak of fire (C.A.) .. 35–36, 40, 41
Private Electricity Supply Undertakings (Acquisition) Bill, 1973 .. .. .. .. .. .. 222–224
Provident Fund accumulations, disbursement .. .. 131–132
Rules Committee, final report (M) .. .. .. 42–48, 63–64, 65, 67, 67–68

HANDLOOMS—
Weavers, hardships due to yarn price rise .. .. 180, 181–185
Weavers, minimum wages .. .. .. .. .. 298

HARIJAN WELFARE—
Harijans of Gummidipoondi and Pennalurpet sub-taluks, loans .. .. .. .. .. .. .. 5–7
Services, reservation of appointments for Harijans .. 1–5

HONEY—
Production, incentives for .. .. .. .. 169–171



H—*cont.*

HOSPITALS AND DISPENSARIES—
Government Hospital, Kumbakonam, expansion .. 139
Mental disorder cases, number admitted .. .. 295
Raja Mirasdar Hospital, Thanjavur, expansion .. 138–139
Rural Medical Centre at Tiruverkadu, running by Rotary Club .. .. .. .. .. .. 293

HOSTEL—
Legislators' Hostel, playing facilities .. .. .. 135–138

HOUSING—
Chinna Obulapuram, assignment of house-sites .. 302
Flats for Film Directors .. .. .. .. .. 26–27
Sites for rural landless .. .. .. .. .. 20–25
Slum clearance, construction of tenements at Visalakshi Amman Thottam .. .. .. .. .. 165–168
Weavers, houses for .. .. .. .. .. 163–165

I

INDUSTRIES—
Caustic Soda Plant, setting-up .. .. .. .. 13–15
Plastic, incentives .. .. .. .. .. 12–13

J

JAILS—
Prisoners of other States .. .. .. .. .. 150–151

JAMES, Thiru J.—
Black money, Wanchoo Committee's recommendations, powers to States to unearth (R) .. .. .. 103–105
Private Institutions Regulation Bill (as amended by Select Committee), taking up (Point of Order) — 194–195
Rules Committee, final report (M.) .. .. .. 58–60

JOTHI VENCATACHELLUM, Thirumathi—
Black money, Wanchoo Committee's recommendations, powers to States to unearth (R.) .. .. 111–112
Teen-aged students, missing in Madurai (A.M.) .. 171–173

PAGES

J—*cont.*

JUDICIARY—
Munsiff's Court at Tiruttani, new building for .. .. 15–16
Munsiff's Court for Jayankondacholapuram .. .. 16–17

K

KANNAPPAN, THIRU S.—
Black money, Wanchoo Committee's recommendations, powers to States to unearth (R.) .. .. .. 88–94

KANDASAMI, THIRU MANALI C.—
Black money, Wanchoo Committee's recommendations, powers to States to unearth (R.) .. .. .. 86–87
Council of Ministers, condemnation of unconstitutional methods to bring into disrepute (R.) .. .. .. .. 356–359
Land Reforms (Disposal of Surplus Land) Rules, 1963, draft amendments (M.) .. .. .. .. 264–266
Private Electricity Supply Undertakings (Acquisition) Bill, 1973 .. .. .. .. .. .. 228–230

KANDASAMY, THIRU K.—
Leave of absence to Thiru M. C. A. Rathinasamy Thevar (M.) .. .. .. .. .. .. 197

KARUNANIDHI, DR. M.—
Black money, Wanchoo Committee's recommendations, powers to States to unearth (R.) .. .. .. 69–75, 95, 96, 102
Council of Ministers, condemnation of unconstitutional methods to bring into disrepute (R.) .. .. 337, 338, 339, 341, 342, 343, 344, 348, 352, 353, 362, 372, 373
Rules Committee, final report (M.) .. .. .. 68
Teen-aged students, missing in Madurai (A.M.) .. 173–174

KITTAPPA, THIRU N.—
Co-operative Spinning Mill at Manalmedu, particulars. 12
Earth-movers, factory, establishment .. .. .. 299
Edible oil and pulses, sale .. .. .. .. .. 158–161



PAGES

K—*cont.*

KITTAPPA, THIRU N.—cont. 291
Girls High School in Koranadu area, opening .. 139
Government Hospital at Kumbakonam, expansion .. 344, 348, 315
Mappadugai-Kodankudi bus route, introduction .. 138–139
Raja Mirasdar Hospital, Thanjavur, expansion .. 298
Weavers minimum wages .. .. .. .. ..

L

LANDS—
Land Reforms (Disposal of Surplus Land) Rules, 1963, draft amendments (M.) .. .. .. 257–272, 17–19
Land revenue and loans, collection in Tiruttani taluk. 158
Mentally retarded Children's Home, grant of .. .. 154–158
Poramboke, assignment .. .. .. .. .. 29
Thiruvaduthurai Atheenam, particulars .. ..

LATHEEF, THIRU M. A.—
Black money, Wanchoo Committee's recommendations, powers to States to unearth (R.) .. .. .. 77–82
Council of Ministers, condemnation of unconstitutional methods to bring into disrepute (R.) .. .. .. 353, 380–387
Rules Committee, final report (M.) .. .. .. 55–58
Tanneries, closure resulting in unemployment (C.A.). 319, 321–322, 322, 323
Teachers' Training School for Vaniyambadi .. .. 135
Wild Life (Protection) Act, 1972 (Central Act 53 of 1972), adoption (R.) .. .. .. .. .. 248–252, 255

LAW AND ORDER—
Chinthan, Thiru V. P., attack on .. .. .. 281–287

LEATHER—
Tanneries, closure resulting in unemployment (C.A.). 319–323

PAGES

L—*cont.*

LOCAL BODIES—

Madras Corporation elections, indefinite postponement (C.A.) .. .. .. .. .. .. .. 186–187

M

MADHAVAN, Thiru S.—

Black money, Wanchoo Committee's recommendations, powers to States to unearth (R.) .. .. .. 113–118

Cement, fall in production resulting in unemployment (C.A. St.) .. .. .. .. .. .. 318, 319

Council of Ministers, condemnation of unconstitutional methods to bring into disrepute (R.) .. .. 338–339, 342–343, 346, 347, 364–380

Land Reforms (Disposal of Surplus Land) Rules, 1963, draft amendments (M.) .. .. .. .. 271–272

Private Electricity Supply Undertakings (Acquisition) Bill, 1973 .. .. .. .. .. .. 231–234, 237, 238, 239–241, 242 243–244

Rules Committee, final report (M.) .. .. .. 60–63, 64–67

Salem Steel Plant, delay in execution (C.A. St.) .. 35

Tanneries, closure resulting in unemployment (C.A. St.) .. .. .. .. .. .. .. 319–321, 322, 323

Yarn price rise, hardship to handloom weavers (C.A. (St.) .. .. .. .. .. .. .. 181–183, 183–184, 185

MARIMUTHU, Thiru A. R.—

Black money, Wanchoo Committee's recommendations, powers to States to unearth (R.) .. .. .. 76–77, 118–119

Council of Ministers, Condemnations of unconstitutional methods to bring into disrepute (R.) .. .. 348–352



PAGES

M—*cont.*

MATHIALAGAN, Thiru K. A.—

Council of Ministers, Condemnation of unconstitutional methods to bring into disrepute (R.) .. .. 332–348

MINISTERS—

Council of Ministers, Condemnation of unconstitutional methods to bring into disrepute (R.) .. .. 375–387

MOTION(S)—

Ad. Motions—

Teen-aged students, missing in Madurai .. .. 171–174

Appreciation of services of Thiru C. D. Natarajan, Secretary, Tamil Nadu Legislative Assembly .. 68–69

B.O.H., change in order .. .. .. .. .. 120

Land Reforms (Disposal of Surplus Land) Rules, 1963, draft amendments .. .. .. .. 257–272

Leave of absence to Thiru M. Palanisamy ... 41

Leave of absence to Thiru M. C. A. Rathinasamy Thevar .. .. .. .. .. .. .. 197

Rules Committee, final report .. .. .. .. 42–68

Suspension of Rule 41 (3) .. .. .. .. 174, 315–316

MUNUSAMI, Thiru R. R.—

Drainage Scheme, Kancheepuram .. .. .. 141–143

Mentally retarded Children's Home, lands for .. .. 158

Slum clearance, construction of tenements at Visalakshi Amman Thottam .. .. .. .. 165–168

Tank at Vanisalampatti, formation .. .. .. 11–12

N

NARAYANASAMI, Thiru Mannai P.—

Sugar (levy), distribution (C.A. St.) .. .. .. 188–189, 190–191, 191–192

NATARAJAN, Thiru C. D.—

Laying down office as Secretary, Legislative Assembly. 68–69

NEDUNCHEZHIYAN, Dr. V. R.—

Appreciation of services of Thiru C. D. Natarajan, Secretary, Tamil Nadu Legislative Assembly (M.) .. 68–69

PAGES

N—*cont.*

NEDUNCHEZHIYAN, Dr. V. R.—*cont.*
- B.O.H., change in order (M.) .. .. .. .. 120
- Rules Committee, final report (M.) .. .. .. 42
- Suspension of Rule 41 (3) (M.) .. .. .. .. 174, 315–316

O

OBITUARY REFERENCE—
- Dayanand Balakrishna Bandodkar, Thiru, Chief Minister of Goa, Daman and Diu .. .. .. 129

OFFICES—
- Public Relations Offices, opening .. .. .. 296–297

OIL(S)—
- Edible oil and pulses, sale .. .. .. .. .. 158–161

P

PALANISAMY, Thiru M.—
- Leave of absence to (M) .. .. .. .. 41

PALANISAMY, Thiru N. K.—
- Black money, Wanchoo Committee's recommendations, powers to States to unearth (R.) .. .. .. 82–86
- Chintan, Thiru V. P., attack on .. .. .. .. 281–287
- Dowry Prohibition Bill, 1973 .. .. .. .. 325
- Elementary Schools, administration .. .. .. 133–134
- Land Reforms (Disposal of Surplus Land) Rules, 1963, draft amendments (M.) .. .. .. .. 266–267
- Medical colleges, reduction in seats .. .. .. 292–2[illegible]
- Private Electricity Supply Undertakings (Acquisition) Bill, 1973 .. .. .. .. .. .. .. 217–221, 239, 242, 24[illegible]
- Rural Engineering Survey, details .. .. .. 8–[illegible]

PAPERS LAID ON THE TABLE—
- Cement Distribution (Licence and Regulation) Order, Order, 1973, notification .. .. .. .. 38[illegible]
- Code of Civil Procedure (Tamil Nadu Amendment) Bill, 1973 .. .. .. .. .. .. .. 38[illegible]
- Committee on Government Assurances, fifth report .. 12[illegible]



PAGES

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE—*cont.*
- District Municipalities Act, 1920, notification .. .. 387
- Holdings (Stay of Execution Proceedings) (Tamil Nadu Amendment) Bill, 1973 with annexure .. .. 387
- Indian Stamp Act, 1899, notification .. .. .. 121
- M.L.As., return of assets .. .. .. .. .. 273–275
- Plantation Labour Rules, 1955, notification .. .. 121

PARANDHAMAN, Thiru A.—
- Arts College, Tiruttani, new building for .. .. 290–291
- Counterfeit notes printing, arrests ... ... 151–153
- Land revenue and loans, collection in Tiruttani taluk. 17–19
- Munsiff's Court at Tiruttani, new building for .. 15–16

PERUMAL, Thiru A. R.—
- Council of Ministers, Condemnation of unconstitutional methods to bring into disrepute (R) .. .. 353–356

POLICE—
- Counterfeit notes printing, arrests .. .. .. 151–153

POLYTECHNIC—
- Women's, opening at Tiruchirappalli .. .. .. 289

PONNAPPA NADAR, Thiru R.—
- Council of Ministers, Condemnation of unconstitutional methods to bring into disrepute (R.) .. 359–364

POULTRY—
- Chick hatchery at Kappalur, expansion scheme .. 306–307

PUBLIC HEALTH—
- Drainage Scheme, Kancheepuram .. .. .. 141–143
- Drainage scheme, Tiruppur .. .. .. .. 295–296

R

RAILWAYS—
- Lines, electrification .. .. .. .. .. 146–147

RAMACHANDRAN, Thiru S.—
- Motor Vehicles Taxation (Amendment) Bill, 1973 .. 198, 204–207, 208, 209–210, 212–213, 214

PAGES

R—*cont.*

RAMAN, THIRU O. P.—
- Ennore Thermal Plant, outbreak of fire (C.A. St.) .. 36–38, 39, 40, 41
- Private Electricity Supply Undertakings (Acquisition) Bill, 1973 .. .. .. .. .. .. .. 216–217, 235, 238, 241, 244, 245
- Wild Life (Protection) Act, 1972 (Central Act 53 of 1972), adoption (R.) .. .. .. .. .. .. 248, 253–254, 256

RATHINASAMY THEVAR, THIRU M. C. A.—
- Leave of absence to (M.) ... ... ... 197

RESOLUTION(S)—
- Black money, Wanchoo Committee's recommendations, powers to States to unearth .. .. .. .. 69–120
- Council of Ministers, Condemnation of unconstitutional methods to bring into disrepute .. 325–387
- Wild Life (Protection) Act, 1972 (Central Act 53 of 1972), adoption .. .. .. .. .. .. 248–257

S

SADASIVAM, THIRU S.—
- Munsiff's Court for Jayankondacholapuram . .. 16–17

SADIQ PASHA, THIRU S. J.—
- Holdings (Stay of Execution Proceedings) (Tamil Nadu Amendment) Bill, 1973 .. .. .. .. 246–247
- Kangayam and Pongalur areas, stay of collection of water charges (C.A. St.) .. .. .. .. 323–324
- Land Reforms (Disposal of Surplus Land) Rules, 1963, draft amendments (M.) .. .. .. .. 257–261, 270–271

SANGUMUTHU THEVAR, THIRU S.—
- Accidents, assistance to victims .. .. .. .. 314–315
- Bridge works in Ambasamudram area, completion .. 19





PAGES

S—*cont.*

SANGUMUTHU THEVAR, THIRU S.—
- Lands belonging to Thiruvavaduthurai Atheenam, particulars .. .. .. .. .. .. .. 29
- Peruvaripallam Dam, water storage .. .. .. 145
- Scout Movement, expansion .. .. .. .. 31–32
- Steel wire manufacturing company, particulars .. 149

SCHOOL(S)—
- Ashok Nagar, details re. new building .. .. .. 32–34
- Elementary—, administration .. .. .. .. 133–134
- Girls High School in Koranadu area, opening .. 291
- Teachers' Training School for Vaniyambadi .. .. 135

SCOUTS—
- Movement, expansion .. .. .. .. .. .. 31–32

SEA EROSION—
- Thengapattinam, damages caused near— in Kanyakumari district .. .. .. .. .. .. 311–317

SERVICES—
- Provident Fund accumulations, disbursement .. 131–132
- Tribunal for Disciplinary Proceedings, pending cases. 129–131

SHANMUGAM, THIRU P. U.—
- Sea erosion near Thengapattinam, damages (C.A. St.). 316–317

SIVAPRAKASAM, THIRU D. S. A.—
- Thiruppudaimaruthur temple funds, utilisation for opening a dispensary .. .. .. .. .. 29–30

SOUNDARAPANDIAN, THIRU P.—
- Accidents, assistance to victims .. .. .. 314–315
- Agricultural development, World Bank's assistance .. 302–305
- Cauvery Upper Anicut, construction of regulator across .. .. .. .. .. .. .. 144–145
- Idols unearthed in Thirukalambur, details .. .. 301
- National Smallpox Eradication Programme, vaccinators .. .. .. .. .. .. 294–295
- Poramboke lands, assignment .. .. .. .. 154–158

PAGES

S—*cont.*

SPEAKER, Mr.—

Appreciation of services of Thiru C. D. Natarajan, Secretary, Tamil Nadu Legislative Assembly (M.). 69

STEEL PLANT—

Salem, delay in execution (C.A.) .. .. .. 35

SUBRAMANIAM, Thiru A.—

Ennore Thermal Plant, outbreak of fire (C.A.) .. 35–36

Zoo, shifting .. .. .. .. .. .. 287–289

SUBRAMANIAM, Thiru K. M.—

Black money, Wanchoo Committee's recommendations, powers to States to unearth (R.) .. .. .. .. 75–76

Motor Vehicles Taxation (Amendment) Bill, 1973 .. 198–200, 208–209, 211

Wild Life (Protection) Act, 1972 (Central Act 53 of 1972), adoption (R.) .. .. .. .. .. 253

SUGAR—

Levy—, distribution (C.A.) .. .. .. .. 188–192

SUNDARABARATHI, Thiru Sowdi S.—

Public Accounts Committee, Ninth report (Part II), 1969–70, presentation .. .. .. .. .. 325

Yarn price rise, hardship to handloom weavers (C.A.) 180, 183, 184–185

SURENDRAN, Thiru M.—

Bulb factory, starting .. .. .. .. 147–149

Ennore Thermal Plant, outbreak of fire (C.A.) .. 35–36

Land Reforms (Disposal of Surplus Land) Rules, 1963, draft amendments (M.) .. .. .. .. 267–270

Mettur town, power supply .. .. .. .. 313

SURVEY—

Rural Engineering Survey, details .. .. .. 8–9

T

TANK(S)—

Chetti Urani at Sivagangai, deepening .. .. .. 19–20

Vanisalampatti, formation of .. .. .. .. 11–12



PAGES

T—*cont.*

TAXES—

Water charges, stay of collection in Kangayam and Pongalur (C.A.) ... ... ... ... 323–324

TEMPLES—

Kavi Arangams in .. .. .. .. .. 168–169

Thiruppudaimarudur, utilisation of funds for opening a dispensary ... ... ... ... 29–30

TANGAMANI, Thiru K. T. K.—

Black money, Wanchoo Committee's recommendations, powers to States to unearth (R.) .. .. .. 105–111

B.O.H., change in order (M.) .. .. .. .. 120

Council of Ministers, condemnation of unconstitutional methods to bring into disrepute (R.) .. 326–332, 342, 344, 345, 371–374

Ennore Thermal Plant, outbreak of fire (C.A.) .. 35–36, 38, 39, 41

Rules Committee, final report (M.) .. .. .. 48–51

THEATRES—

Cinema, construction by municipalities and Corporations .. .. .. .. .. .. .. 307–309

THYAGARAJAN, Thiru E. S.—

Assurances Committee, fifth report, presentation ... 42

TOURISM—

Bungalow at Nagore, Eravadi, construction ... 291–292

TRANSPORT AND COMMUNICATIONS—

Madras—Thamaraipakkam bus route, plying of more buses .. .. .. .. .. .. .. 27–28

Mappudugai-Kodankudi bus route, introduction .. 315

Mint–Phondhavakkam bus route, plying of buses .. 28

V

VADIVELU, Thiru S. K.—

Co-operative Spinning Mill for Tiruchirappalli, opening .. .. .. .. .. .. 301

PAGES

V—*cont.*

VENKATASWAMY, THIRU B.—

Black money, Wanchoo Committee's recommendations, powers to States to unearth (R) .. .. .. 88

Chinthan, Thiru V. P., attack on .. .. .. 281–287

Council of Ministers Condemnation of unconstitutional methods to bring into disrepute (R.) .. 352–353

Private Electricity Supply Undertakings (Acquisition) Bill, 1973 .. .. .. .. .. .. 230

VEZHAVENDAN, THIRU K.—

Books, assistance for publication .. .. .. 30–31

Harijans of Gummidipoondi and Pennalurpet sub-taluks, loans .. .. .. .. .. .. 5–7

House-sites, [illegible] Obulapuram, assignment .. .. 302

Kavi Arangams [illegible]mples .. .. .. .. 168–169

Madras–Thamarai[illegible] bus route, plying of more buses .. .. .. .. .. .. 27–28

Mint–Phondhavakka[illegible] route, plying of buses .. 28

Sprayers, supplied [illegible]ions, service facilities .. 309–311

W

W[illegible] A.—

Black [illegible], Wanchoo Committee's recommendations, powers to States to unearth (R.) .. .. .. 99–102

Legislator's hostel, sports facilities ... ... 135–138

Tamil Nadu Pavilion in Asia 1972 Fair, purchase of mats for decoration .. .. .. .. .. 297–298

WILD LIFE—

Protection Act, 1972, Central Act 93 of 1972, adoption (R) .. .. .. .. .. 248–257

Z

ZOO—

Shifting .. .. .. .. .. .. 287–289

61623

V211.31 N73
31N73.42

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

Messrs. Account Test Institute, Egmore, Madras-8.
The City Book Co., Mylapore, Madras-4.
Messrs. Higginbothams (Private) Limited Madras-2.
Messrs. New Century Book House (Private) Limited, Madras-2.
Messrs. P. Varadachari & Co., Madras-1.
Messrs. C. Subbiah Chetty & Sons. Madras-5.
Sri S. S. Srinivasaraghavan, Royapettah, Madras-14.
The Educational Agencies, Book-sellers, Madras-1.
The Universal Book House, Moore Market, Madras-3.
Messrs. C. Sitaraman & Co., Madras-14.
Messrs. Mohan Pathipagam and Book Depot, Madras-5.

### IN MUFASSAL OF TAMIL NADU.

Sri E. M. Gopalakrishna Kone, Madurai. Madurai district.
Sri A. Venkatasubban, Vellore, North Arcot district.
Messrs. Bharatha Matha Book Depot. Thanjavur, Thanjavur district.
Messrs. P. V. Nathan & Co., Kumbakonam, Thanjavur district.
Messrs. Appar Book Stall, Thanjavur.
Messrs. P. N. Swaminathasivam & Co., Pudukkottai, Tiruchirappalli district.
Messrs. S. Krishnaswami & Co.. Tiruchirappalli district.
Messrs. Palaniappa Brothers, Tiruchirappalli district.
Sri S. R. Subramania Pillai, Tirunelveli, Tirunelveli district.
Messrs. Nellai Puthaga Nilayam, Book-sellers, 10. Thana Muna Buildings, Tirunelveli Junction.
Sri B. Aruldoss, Villupuram Town, South Arcot district.
Sri V. B. Ganesan, Villupuram, South Arcot district.
Messrs. Vasantham Stores, Book-sellers. Cross Cut Road, Coimbatore.
Messrs. Mercury Book Company, 223, Raja Street. Coimbatore.
Sri S. M. Jagannathan, Book-sellers and Publishers, Nagercoil, Kanyakumari.
Messrs. A. K. Chandriah Chettiar and Sons, Salem-1.
Messrs, Meenakshi Pathippagam, Pudukkottai.
Messrs. K. V. Narayana Iyer and Sons, Dindigul, Madurai district.
Messrs. Balaji Book House, Vellore, North Arcot district.
Messrs. Jayakumari Stores, Nagercoil. Kanyakumari district.
Messrs. Baby Stores, Book-sellers, Villupuram, South Arcot district.
Messrs. Dinamani Stores, Coimbatore-18.
Messrs. Bharathi Puthaga Nilayam, Publishers and Book-sellers, 1-B, Town Hall Road, Madurai-1.

### IN OTHER STATES.

Messrs. Jain Book Agencies, New Delhi-1.
Messrs. International Book House, Trivandrum.
Messrs. Firma K. L. Mukhopadhyay, Calcutta-12.
Messrs. Book Links Corporation: Narayanaguda, Hyderabad-29.
Messrs. The Book Syndicate, Hyderabad-1.
Messrs. Labour Law Publications, Hyderabad.

PUBLISHED UNDER RULES 234 AND 237 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.